ஸ்ரீமஹாபாரதம்
வீராடபர்வம்

அமரம்பேடு.
ழந்தை வேல் முதலியார்.
தெய்வமகள் விலாசம் பிரஸ்
தாண்டவராயப்பிள்ளை தெரு, சென்னை.

O-, 8, M
N47
11497

ஸ்ரீமகா பாரதம்

விராட பர்வம்

பெரிய எழுத்து

ஐதிகப் படங்களுடன்

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்
தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்
சென்னை

சுத்தப் பதிப்பு] 1947 [இதன் விலை ரூபா 5

சென்-24. தாண்டவராயப்பிள்ளை வீதி.



பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செல்ல ஸ்ரீ கிருஷ்ணனிடம் ஆலோசித்தல்

ஸ்ரீராதா ருக்மணீ சமேத ஸ்ரீகிருஷ்ணாய நமஃ

ஸ்ரீமகாபாரதம்

நான்காவது
விராடபர்வம்

அஞ்ஞாதவாசம்

காந்தூரைசருக்கம்

கண்ணன் தோத்திரம்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

கருவிடை யெய்தார் நரகிடை புகுதார் காலனைக் கனவிலுங் கருதார்
வெருவிருவிழிவேன் மடந்தையர்காம வேட்கையாம்வேலையினழுந்தார்
பொருமொருதிகிரி வலக்கரத்தணிந்த புண்ணியன்விண்ணவர்பெருமான்
திருமரு மார்பன் றிருவடிக் கடிமை செயுமடி யவர்க்கடி யவரே.

இதன்பொருள்: அடியார்களை இரக்ஷிக்கும் பொருட்டாய் அம ரடி அரக்கரை யழிக்கும் சக்ராயுதத்தை வலக்கரத்தில் தரித்தரு ளிய புண்ணியன்; தேவர்க் கதிபதியாகிய தெய்வநாயகன்; மகா லட்சுமி பொருந்திய மார்பன்; இவரது திருவடிக் கடிமைசெய் யும் அடியார்கள் ஜனன வேதனையை விலக்குங் கருவிற் புகு தார்கள். மரணவேதனையில் உழன்று நரகில் நுழையார்கள். தண்டபாசச் சண்டனைக்கண்டு அஞ்சுவதைக் கனவிலு நினை

யார்கள். பயப்படச் செய்யும் வேல் போன்ற விழியை யுடைய மாதர்களின் காம விருப்பக் கருங்கடலு ளழுந்தார்கள். இத்தன் மையாகப் பக்தர்களைக் காக்கும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியையும், ஸ்ரீவேதவியாசரையும் பணிந்து, பொன்னிறச் சடைமுடியைப் பூனந்த வைசம்பாயனர் இதுவரையிலுஞ் சொல்லிவந்த பஞ் சம வேதமென்னும் பரிசுத்த அமுதத்தை கற்புடமையுடன் மனமாட்சியில் உயர்ந்த பொற்புடைய வபுஷ்டாதேவிக்குப் புருஷசிலாக்கியனை ஜனமேஜயமகாராஜன் காதென்னும் வாய் வழியருந்தி அற்புதமடைந்து மற்புயம் வளர்த்து மகிழ்ந்து, விற்பன விவேக மேலோரான வைசம்பாயனரை நோக்கி, சுவாமி! அப்பால் பாண்டவர்களுக்கு நேரிட்ட பான்மையைப் பகரவேண்டுமென்று இறைஞ்சிக் கேட்க, வேத பாராயணராகிய வைசம்பாயனர் விளம்பத் தொடங்கினர் என்பதாம்.

கதையின் வரலாறு

அரவக்கொடி படைத்த துரியோதனமகாராஜன் எவலினுல் பாண்டவர்களும் திரௌபதாதேவியும், தௌமியாசாரியரும் பன்னீராயிரம் பிராமணர்களும் களிப்புடன் திரிந்து வனவாசம் புரிந்து, பலவகைப் பழங்களும், வெகுவிதக் கிழங்குகளும், சரு காதிகளுந் தின்று, பகலும் இரவும், பனியும் மழையும் காற்றும், காடும் மேடும் கல்லும் புல்லும் கலந்த காட்டில் பன்னிரண்டு வருடமுங் கழித்தபிற்பாடு, அஞ்ஞாதவாசஞ் செய்வதற்கு ஆலோசிக்க வேண்டுமென்று தாங்கள் தங்கிய வனத்தைவிட்டு அப்பால்போயிருந்து, தருமதேவதையைத்தொழுது எந்தையே! நாங்கள் நினைத்தகாரியந் தடையில்லாமல் நிறைவேறும்படி நச் சுப்பொய்கையின்கண் வரங்கொடுத்த வண்ணம், இப்போது கை கூடவேண்டுமென்று இரந்து மகிழ்ச்சியடைந்த தருமபுத்திர மகாராஜனைவர் தங்களுடன் இருந்த வேதவேதியரை நமஸ் கரித்து, பிரமக்கியானமுள்ள மேலோர்களே! இத்தனைநாளும் எங்களுடன் பொருந்தி மெத்த வருந்தி வனவாசம் புரிந்து உப வாசம் இருந்தீர்கள். இனி நாங்கள் ஒருவருடம் மறைந்திருக்க வேண்டியகாலம் நேரிட்டிருப்பதால் நீங்கள் யாவரும் ஆசீர்வதி த்து எங்களுக்கு விடைகொடுத்தருள வேண்டுமென்று உபசரித் துக் கேட்டார். இவ்விதமாகச் சிரத்தில் கரத்தைக் குவித்துக் கேட்ட மூரசக்கொடி முதல்வனைப்பார்த்து வேதியர்கள் விளம்பு கின்றார்கள்.

ஓ பாண்டவர்களின் முதல்வனே! நீங்கள் எண்ணிய காரிய மெல்லாம் திண்ணமாய்க் கைகூடும். இனிமேல் யாதொரு தாழ்ச் சியுமில்லை. இன்னுஞ் சிலநாளையில் நீங்கள் வெளிப்பட்டுச் சத் துரு சங்காரஞ்செய்து சகல ராஜவைபவத்துடன் தரணியாளப் போகிறீர்களென்று மங்கள வாழ்த்தலுடன் ஆசீர்வதித்தார்கள். இப்படிப் பல்லாண்டு கூறிய மகாத்துமாக்களை நோக்கித் தரும ராஜன் சொல்லுகின்றார்.

ஐயன்மீர்! இப்போது எங்கட்கு நேரிட்டிருக்கிற ஆபத்து நீங்கி வெளிப்பட்டு உங்களுடன் கலந்திருந்து உசிதவசனங்கள் பேசி நேசித்து விசுவாசித்திருக்கக் கூடுமோ கூடாதோ, நான் தேடிய புண்ணியவச மெப்படியோ அறியேனென்று கண்ணீர் பெருக உள்ளமுருகச் சோர்ந்தார். அப்படிச் சோர்ந்த தர்மராஜ னைத் தம்பிமாரணைத்து உபசரித்து ஆயாசமாற்றித் தேற்றிப் போற்றினர்கள். எவ்விதத்தாலுந் தேறுமல் தியங்கிய சத்திய வானை, தௌமியாசாரியர் கண்டு, ஓ யுதிஷ்டிர மகாராஜனே! தைரிய விஜய சாந்த உதார தரும முதலிய புகழ்ப் பிரதாபங்களி லும், சத்திய விரத சவுச சம்பத்கர சாஸ்திர விசாரணைகளிலும், பிரபல நீதிநிறைந்த கருணையங்கடலாகிய நீர்தாமே விசாரப்பட் டால் மற்றியார்தான் சகிக்கக்கூடும்? நிருபனே! முத்தொழிலியற் றும் மூவர்க்கானலும், பொற்றலத்துற்ற தேவர்க்கானலும், கற் றோர் முதலிய தவத்துற்றோர்க்கானலும் ஆபத்து வராமற் போகாது. வந்தால் அது அனுபவிக்காமல் யாரையும் விடாது இதற்குத் திருஷ்டாந்தஞ் சொல்லுகிறேன் கேளும். தேவர்கட் கதிபதியாகிய தேவேந்திரன் சூட்சுமரூபமாய் ஒருதாமரைத்தண் டினுள் ஒளித்து வெகுகாலந் தவஞ்செய்திருந்து தனக்கு நல் வினைப்பயன் நேரிட்டபோது வல்லவனானன். உலகரக்ஷகனான ஸ்ரீமந்நாராயணன் அதிதியின் கருப்பத்திலடங்கி வாமனமூர்த்தி யாய்வந்து மகாபலிச்சக்கிரவர்த்தியினிடத்தில் தானமாக மூவடி மண்கொண்டு வானமளாவிச் சேவடியா லளந்து தன் சிந்தையி லெண்ணியவண்ணம் முடித்தருளினன். அக்கினிதேவன் அவு ரவமகாமுனிவன் மனையாளுடைய தொடையில் மறைந்து நெடு நாளிருந்து தவினை தீர்ந்தபிற்பாடு வெளிப்பட்டார். சூரியபகவா னனவர் பசுவின் வயிற்றில் ஒளித்துப் பலபகல் கழித்துப் பண்ணவர் முதலிய விண்ணவருங் கொண்டாடப் பாரில் உத யஞ் செய்தருளினர்.

இவ்விதமாக இன்னும் அநேகரும் இப்படியே காலத்திற் கேற்ற கோலங்கொண்டு ஞாலத்தில்வாழ்ந்து வாழ்நாளைக் கழித் தார்கள். ஆகையால் தீவினையா லெய்துகின்ற ஆபத்தானது யாவரையுந் தீங்குக்குட்படுத்தும். நீங்களு மப்படியே அஞ்ஞாத வாசந் தொலைத்து விஞ்ஞானமேலிட நிலைத்து முன்போலவே இராஜ்யபரிபாலனம் புரிய வருவீர்களென்று அன்புடனுரைத்த புரோகிதர்சொல்லை இன்பமுடன்கேட்டு மகிழ்ந்து, எங்கள்வினை இனி எப்படியோவென்று தியங்கிமயங்கித் தேறிய தர்மராஜனை, மகா பலசாலியான வீமசேனன் பார்த்து முகம்வேர்த்து, ஓஎங்க ளண்ணாவே! கதாபாணியாகியநானும், காண்டீபதரனாகிய விஜய னும், நகுலசகாதேவரும் உமது கட்டளைக்குக்கீழ்ப்படிந்து இஷ் டப்படி நடந்து வரும்போது இப்போதும் இனி எப்போதும் உமக்கென்ன குறையிருக்கின்றது. தேவர் உள்ளங்கலங்கவேண் டிய காரியமில்லையே. இப்பவும் சற்றே கடைக்கண் நோக்குவீ ராகில், இதுவரைக்கும் பற்பல துனபங்களைச்செய்துவந்த பகை யாளிகளை அடிவேரறுத்து முடிசாய வீழ்த்திப் படையாளு மன் னர் முடிவணங்க கெடிஸ்தலாதிபனெனுங் கீர்த்தி உமக்குண் டாக்கிவைப்போம். சிக்கிரத்தில் உத்தாரங் கொடுத்தருளும் முத் தாரமணிந்த முதல்வனே! தேவரீர் அரசாளும் வேலையை முன் னதாகமுடித்து, மற்றவேலைகளைப் பின்னர்ப் பார்க்கிறேமென்று துடித்தெழுந்துரைத்த தம்பியைக் கையமர்த்தி அப்பனே வீமா! சத்திய நிலைகாத்து தருமமுறை பார்த்து உத்தமகீர்த்தி சேர்த்து உண்மைக்குறுதி நிறுத்தவேண்டு மாதலால் மெத்த நாளில்லை. இன்னுஞ் சிறிதுநாள்தானிருக்கிறது. இதற்குள் நீங்கள் ஆத் திரப்படவேண்டாம். கூடாத்தரவான்களே! என்று தம்பிமார்களு டன் சாந்தமாய்ப் பேசிக்கொண்டு இரண்டுநாழிகை வழிதூரஞ் சென்று மேல் நடக்கவேண்டிய கார்யத்தைக்குறித்துத் தௌமி யாசாரியர் முதலிய பெரியோர்களுடன் ஆலோசனை செய்யத் தொடங்கினர்களென்று வைசம்பாயனர் ஜனமேஜய மகாராஜ னுக்குக் கூறி மீண்டும் சொல்லத் தொடங்கினர்.

கரந்துறையும் ஆலோசனை

சகல கலைக்கியானங்களையும் ஐயந்திரிபு அறியாமை யில்லா மற் கற்ற தர்மராஜன் வையம் புகழ் மஹா வீரர்களாகிய தம்பி மார்களை நோக்கி, எனது சகோதரர்காள்! கல்லும் புல்லும் நிறைந்த காடுமேடுஞ்செறிந்த கருங்கல்லும் மலையுயர்ந்த இடங்

கள்தோறும் நமக்கு இருப்பிடமாகப் பொருந்திப் பன்னிரண்டு ஆண்டு பலரும் அறியக்கழித்தோம். இனி ஒருவரு முணராமல் ஒருவருடம் தொலைக்கவேண்டி யிருப்பதால், நாம் மறைந்திருப் பதற்குத் தகுதியான இடம் யாதோ அதை முன்னே யோசியுங்க ளென்று விசுவாசமுள்ள தமையன் சொல்ல, இந்திரன் மைந்த னை அருச்சுனன் எழுந்து தாமரைக்கமலம்போன்ற தாள்மேற் பணிந்து, அண்ணவே! நமது குருதேசத்திற்குச் சமீபத்தில் பாஞ்சாலதேசம், மச்சதேசம், சாளவதேசம், விதர்ப்பதேசம், பாகுவிதேசம், விதேகதேசம், தாசரணதேசம், சூரசேனதேசம், கலிங்கதேசம், மகததேசம், இவைகளெல்லாம் மனோரம் மியமா யிருக்கின்றன. இத்தேசங்களில் சிறந்தது மச்சதேசம். அதேனெனில், நீதியும் நெறியும் நிறைந்து, நிலவளம் நீர்வள முயர்ந்து, நிறையும் பொறையு மிகுந்து, நிலையாய் மும்மாரி பொழிந்து, தருமமும் நற்கருமமுந் தழைந்து, சகல நிதிகளுஞ் செறிந்து, பழுதற்ற குடிகளும் படைகளும் புகழ்ந்து வணங்கச் செழித்து, மநுநீதிவழியே புரந்து, அஷ்டதிக்களவும் ஆக்ஞா சக்கரம் போக்கிச் செங்கோல்செலுத்தி, வேதவேள்வி வேதியர் பலரும், வானவர் விற்பனர் மாதவர் சிலரும் மாதுர்ஸ்தானம் போல் பொருந்தி வாழ்வைப் பெறும்படியான விராடராஜனு டைய மச்சநாடு. ஐயா! இத்தியாதி நன்மைகளுக்கிருப்பிடமான பட்டணஞ் சேர்ந்து நமதுருவ மறைந்து பயமில்லாமல் காலங் கழிப்பதே ஜயமாகும். நமக்கொருநாளுந் தீங்கில்லை. நாதனே! வேறொரு நாட்டை விரும்புவோமாகில் நம்து காரியகாரணங்கள் ஒருவேளை வெளிப்பட்டாலும் வெளிப்பட்டுவிடும். இதன்றியும், துரியோதன ராஜனுடைய தூதர்களும் காரியஸ்தர்களும் மந்திரி சாமந்தர்களும் தினந்தோறும் போக்குவரத்தா யிருப்பார்கள். அப்படிப்பட்ட நிர்ப்பந்தமான வருத்தம் நமக்கிந்த விராடநக ரத்தி லிருக்கமாட்டாது. மேலும் இந்தப்பட்டணத்து மச்ச ராஜன் நமக்கு பூர்வசம்பந்தப்பொருத்தத்தினாலும், மெத்தகுண சாலியானதினாலும், நாம் காட்டில் அநுபவித்த கஷ்டத்தை இந்த மச்சநாட்டில் ஆற்றிக்கொள்ளும் வகையிருப்பதினாலும், அஸ்தினபுரத்தைவிட்டு வனவாசஞ்செய்ய வரும்போது ஜோதி டநூலோர் உரைத்த ஆரூடத்தினாலும், நாமிந்தப் பேச்சைப் பேசும்போது நல்ல சகுனங் கிடைத்தலினாலும், அடியேனுக்கு இந்த நகரத்தின்மேல் ஆசையுண்டாகிப் பரிசுத்த பவித்திரமகத்

துவ சுகத்தைத் தருமென்று என்புத்தியில் தோற்றியதைப் புகன் றேன். உத்தமர் கற்றவர் நற்றவர்பலரும் புகழ்ந்துபேசிய பொன் னுலகமும் பின்னிடும்படியானது இந்நகரத்தின் பெருமை. தேவ ரீர் சித்தமெப்படியோ அறியேன் சிறியேனென்று வணங்கி இதைவிட வேறேரிடமில்லை யென்றான்.

இந்தப்பிரகாரம் அர்ச்சுனன் சொன்ன மொழியை அரு ளுக்காதாரமான தருமராஜன் கேட்டுத் தீர்க்காலோசனை செய்து தங்களைக் காணும்படிக்கு வனத்தில் வந்திருந்த அரசர்களுக்கு இச்சங்கதி தெரியாமலடக்கி அவர்களைநோக்கி, ஓ அரசர்களே! இன்னமும் எங்களைப் பீடிக்காநின்ற திவினை திரும்வழியைப் பார்க்கின்றேம்; நீங்கள் உங்கள் பட்டணம்போய்ச் சேருங்கள் என்று கூறி, பரதேசிகளான வனவாசிகளென்னும் பிராமணர் களைப் பார்த்து, ஓ சுவாமிகளே! இனி யெக்காலம் உங்களை நாங் கள்காணப்போகிறோமென்று இன்பவார்த்தைகளன்புடன்பேசி, அவர்கள் மனங்கனிந்துரைத்த வார்த்தையையும் ஆசீர்வாதத் தையும் பெற்றுக்கொண்டு முக்காலும் வலம்வந்து முடியுறவண ங்கி, எக்காலும் உங்கள் கிருபை என்மேலிருக்கட்டுமென்று உப சரித்துப் பிரியப்படாத பிரியத்துடன் விடைகொடுத் தனுப்பி விட்டு அன்றிரவுமுழுதும் நடந்து சூரியோதயத்திற்கு முன்ன தாய்ச் செல்வச்சிறப்போங்கிய விராடபுரஞ் சேர்வோமென்று, திரௌபதாதேவியும், பாண்டவர் ஐவரும், கலைக்கியான முணர் ந்த தௌமியாசாரியரும் தொலையாவழியடர்ந்த கொடிபடர்ந்த மலைக்காடு கடந்து, பருக்கைக்கற்களும் பாலைவனமும், வருக்கை மாதேக்குமலர்ச்சாலை சோலையும், அருவிபெருகிய ஆறும், குருவி மருவிய கூடும், வரி யெதுவாய் நாடும், பள்ளர்வாழும் வீடும், பரந்த மணல் மேடுங் கடந்து பற்பல பாஷாமன்னரும் விற்பன விவேகரும் வந்து ஒதுங்குகின்ற சந்திரவட்டக் குடையினை யுடைய விராடராஜனது மச்சநாட்டெல்லையிற் சென்றார்கள். அப்போது பச்சைப்புரவி பூட்டி ஓராழியச்சுத்தேரினை யோட்டி வருகின்ற சூரியனுங் கிழக்குத்திக்கில் எழுந்தான்.

அன்றிரவு முழுதும் நடந்த பாண்டவரும் பாஞ்சாலியும் புரோகிதரும் இனிமேல் தங்களெண்ணம்பலித்ததெனக்களித்து மிதமற்ற மீன்கள் முதலையினங்கள் நீராளைகள் நீர்க்குதிரைகள் பொருந்திய மடுக்களும், பசுக்கள் பட்சிகளுலவாநின்ற முல்லைக் காட்டையும், பயிர்ப்புலங்கள்சூழ்ந்த நல்ல நாட்டையும், காவல

னிருக்குங் கோட்டையையும், கால்நடை நடக்கும் பாட்டையையும், மாடமாளிகை வீட்டையையும், மகரதோரண வாசற்பேட்டையையும், மேகமளாவிய கோபுரங்களையுங் கண்டு களிகூர்ந்து, பாதாளம் வரைக்கும் ஆழ்ந்து நிறைந்த ஒரு தாமரை தடாகத்தில் இறங்கி, நித்தியவிதி முடித்து அருக்கியங் கொடுத்துச் சூரிய நமஸ்காரஞ் செய்து வழிநடந்த வருத்தந்தீர ஓர் மரத்தினிழலில் தங்கி அருள்குடிகொண்ட தௌமியரை நோக்கி இருகரங் குவித்து இறைஞ்சி வாழ்த்தி, இதுவரையிலும் நிகரற்ற வாழ்வைப்பெற்ற தாங்கள் இனி நடக்கவேண்டிய முறைமையைக் கட்டளையிட்டருளுமென்று மேலான நூலாய்ந்த தருமராஜன் கேட்க, நாலாகிய வேதமுணர்ந்த தௌமியாசாரியர் சொல்லலுற்றார்.

சந்திரகுலத்திந்திரனை தருமநந்தனே! நீங்கள் அறியாத காரியம் நானென்ன சொல்லப்போகிறேன்? ஆகிலும், காட்டில் காலங்கழித்தது பெரிதல்ல; நாட்டில் ஒருவருடம் மறைந்திருந்து ஒழிப்பதே பெரியகாரியம். கருங்கல்போன்ற தோளினையுடைய காவலர்களே! நீங்கள் உருவம் மறைந்து உறையும் நாளில் உங்கள் சொரூபத்திலாவது பேச்சிலாவது செய்கையிலாவது கொஞ்சமேனுந் தெரியுமாகில் மறுபடியும் பன்னிரண்டுவருடம் வனவாசஞ்செய்ய நேரிடும். ஆனதால் உங்களை ஒருவரும் அறியாதிருக்கும்படி மாறுவேடந்தாங்கிப் பெயர்வேறு கொண்டு, குலச்சிறப்புற்ற விராடராஜனிடஞ்சென்று, உங்கட்குரிய தொழில் செய்து, அத்தொழிலுக்கிணங்க நடந்து காலங்கழிப்பதைவிட வேறு உறுதியில்லையென்று வைதிகருத்தரான தௌமியர்சொல்ல, அவருடைய வார்த்தையைக்கேட்ட தருமராஜன் மகிழ்ந்து, இவ்வாறு நடத்துகிறதைவிட இன்பம் வேறில்லையென்று ஒப்புக்கொண்டார். அவ்வாறு ஒப்பிய தமையன் பாதத்தில் தம்பியர் வீழ்ந்து, மதிமருண்டுமயங்கி, அண்ணே! நமது குலமுதலிய சந்திரனும் நம்மைப்பெற்ற பாண்டுபூபதியென்னுமிந்திரனும் உம்மையல்லாது வேறில்லையென்று நாங்கள் வணங்கி வாழ்த்துகின்றோம். எங்கட்கு ஜ்ஞஷ்டபிராத்ருவாய் விளங்கிய சுதந்தரரும், களங்கமில்லா மனத்தினரும், ராஜபூஜாதுரந்தரரும், கெடிஷ்தலாதிபரும், நிரந்தரகாருண்யரும், காமக்குரோதாதிகளற்றவரும், தாமப்புயமேருவையொத்தவருமாகிய தேவரீருக்குக் கீழ்ப்பட்ட ஓரரசனிடத்திற் போயிணங்கி, அவன்

மனதின்படி வணங்கி வேலைசெய்யத் தக்கதோ? ஐயா! பொய்யா மொழிப் புநிதராகிய கௌமியரே! ஐயையோ! இவ்வநியாயத் திற்கு என்செய்வோம். இவ்வுலகத்தைப் பணமுடியால் தாங்கும் ஆதிசேடன்போலும் சப்தமேகம் வருஷிக்குந் தாரைபோலும் பொருளமுதம் பொழிந்து கலைக்கியானமுதலிய வேதக்கருத்துங் கடந்து, சத்துருஜயம் புரிந்து, வெற்றிமாலைபுனைந்து, எத்திசையிலுமுள்ள கொற்றவர் பலரும் பணிந்துகொள்ள மூற்றும் பெருமைபெற்று அருமையுற்றுத் திருமுக முடித்துச் சகல சிறப்பும் படைத்து ஜகத்ரகூடகனுகத் தனியரசு நடாத்திய தருமசொரூபியோ எழையரிடத்திலடங்கியிளைத்தொதுங்கியிருப்பது. ஆஹா! வினையேயென்று வாடி வாய்விட்டரற்றினர்கள்.

இவ்விதத்துயரால் துன்பக்கடலிலாழ்ந்த தம்பிமார்களைத் தருமராஜன் அன்பாய் நோக்கி, சகோதரர்களே! என்னுள்ளத் திற்கு ஒப்பான நீங்கள் என்னைக்குறித்து விசாரப்படவேண்டாம். பின்பு இப்படி வருமென்று நான் முன் ஜாக்கிரதையாய் இருக்கின்றேன். அது என்னவெனில், திக்குப்பாலரில் ஒருவனகிய தென்றிசைக்கடவுள் பக்குவமாக அநுக்கிரகித்தருளியமந்திரவசத்தால் வேதவேதாங்கமுணர்ந்த வேதியனகிய மச்சராஜனது உச்சிதசபைக்குட்புகுந்து அவ்வரசன் முதலியயாவரும் எனக்கு எதிர்வந்திறைஞ்சவும், நான் அவர்கட்கு ஆசீர்வசனஞ் சொல்லவும் பெற்றிருக்கின்றேன். இதல்லாமலும், உமக்கிருப்பிடம் யாது? உமது பெயரென்ன? நீர் இவ்விடம் வந்ததற்குக் காரணம் யாதெனக் கேட்பாரெனில், நான் தருமராஜனைவிட்டுப் பிரியாத நண்பன். அவர் பன்னிரண்டுவருடம் வனவாசஞ் செய்யப் போனபோது நானுங்கூடப்போயிருந்தேன். அவரின்னுமொரு வருடங் கழிக்கச்செல்ல, நான் இவ்விடம் வந்தேன், என்பெயர் கங்கபட்டர் என்பேன். இதன்றியும் பெரியோர்களால் இயற்றிய அக்ஷரவிலக்ஷணம் கணிதம்-சங்கிராமலக்ஷணம்-எழுத்தியலக்ஷணம் வேதம்-வேதாங்கம்-புராணம்-வியாகரணம்-நீதிசாஸ்திரம்-ஜோதிடசாஸ்திரம் - தருமசாஸ்திரம் - யோகசாஸ்திரம் - போக சாஸ்திரம் - மந்திரசாஸ்திரம்-சகுனசாஸ்திரம்-சிற்பசாஸ்திரம்-வைத்தியசாஸ்திரம்-சொரூபசாஸ்திரம் இதிகாசகாவியம், அலங்கார மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அஸ்திரபரீட்சை, சஸ்திரபரீட்சை, இரத்தினபரீட்சை, கனகபரீட்சை, இரதபரீட்சை, கஜபரீட்சை,

அஸ்வபரீட்சை, ஆயுதபரீட்சை, பூமிபரீட்சை, மல்யுத்தம், ஆக்ருஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், ஜாலாதிஜாலம், மோகனம், வசியம், இரசவாதம், மந்திரவாதம், காந்தருவ வாதம், பைபீலவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப் பிரவேசம், பரகாயப்பிரவேசம், வானகமனம், அதிரிசியம், இந்திரஜாலம், மஹேந்திரஜாலம், அக்கினிஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம், வாயுஸ்தம்பனம், திருஷ்டித் தம்பனம், வாக்குஸ்தம்பனம், சுக்கிலஸ்தம்பனம், சுவாச ஸ்தம்பனம், கடகஸ்தம்பனம், அவஸ்தைப்பிரயோக முதலிய அறுபத்துநான்கு கலைக்கியானமு மறிவேன். திக்கெட்டுங் கொண்டாடுஞ் சொக்கட்டானுடும் பக்குவமும் எனக்குண்டு. ஓ விராடராஜனே! நீர் தயவு செய்து நான் உம்மிடத்திலிருக்கச் செலவு கொடுப்பீராகில், ஒரு நாளைப்போல் ஒருவருஷம் இவ்விடம்விட்டு நீங்காமல் இன்புற் றிருப்பேன் என்றுரைத்து அந்த ராஜன் பக்கத்திலிருந்து, அவன் கருத்துக்கிசைந்த தேசவர்த்தமான காரியகாரணங்களைக் காலாகால மறிந்துபேசி, விநோதமான விந்தைகளை நிந்தையில்லாமற் சொல்லி, விதரணையான அரசாக்ஷியைப் பெருமையுடன் நடத்தி, வேந்தன் உள்ளங் களிக்கச்செய்து சுற்றிலுஞ் சூழ்ந்த வெற்றிவீரர்களும், கற்றவர் முதலிய சுற்றத்தவர்களும், தந்திரி மந்திரி சாமந்தர்களும் உத்தமரிவரென்று கொண்டாடும்படிக்கு மெத்தவும் மேன்மையாக நான் அங்கு காலங்கழிப்பேன். சித்த சுத்திபெற்ற தம்பிமார்களே என்று ஏழுலகத்திற்கோராழிசெலுத்துங் குருகுலக் கோமகனுகிய தருமராஜ னுரைத்தருளினர். அவருடைய பெருமித வாக்கியத்தை வீமார்ச்சுனர்முதலிய தம்பிமார்கள் கேட்டு நமது தமையனுருக்கு இந்தத் தொழில் தகும் தகும் என்று சந்தோஷமடைந்தார்கள்.

அந்தவேளையில், பொறுமையைப் பூஷணமாகப் பூண்ட தருமராஜன் வீமசேனனுடைய முகத்தைப் பார்த்து, கருணை வெள்ளங் கவிந்து கனிந்துள்ள முவந்து, கருத்தினற் பரிந்து கண்ணீர் சொரிந்து நினைத்தற்கரிய பலத்தையுடைய வாயுபுத்திரனே! நீ அரக்குமாளிகை விட்டெழுந்தபோது உரக்கக்கூவிக் கொடும்பகைகொண்டு எதிர்த்த இடும்பனைக்கொன்றும், வேத்திரகீயத்திலிருந்த வேதியர்களின் துன்பமாற்றும்படிக்குப் பகாசுரனைவென்றும், நிம்மிராசுரனைக் கெடுத்தும், குபேரலோகம் புகுந்து மணிமாலனுயிரும் பொற்குமரை மலரும் பறித்துவந்

தும், சடாசுரனைத் தாக்கியும், போருக்கு எதிர்த்த பேர்களைப் போக்கியும், இரக்கமில்லாக் கொடியோனாகிய துரியோதனன் அன்னத்தில் விஷங்கலந்தூட்டி அநேக கொடிகளாற் கட்டி ஆற்றுப் பெருக்கத்தில் போட்டகாலையில் நாகலோகம்போய் விஷாமிர்த முண்டிருந்த உன்னை நாங்கள் ஏழுநாள் வரையிலுந் தேடிப் பக்ஷிபோற் பறந்து பரதவித் தலைந்த துக்கத்தை எட்டா நாள் வந்து போக்கியும், வணங்காமுடியோன் செய்த வஞ்சனையினின்றும் நீங்கியும், பெற்ற தாயான குந்திதேவியாருடன் எங்களையுங் காத்து இரக்ஷித்த தாஷ்டீக வண்ணலே! நீ ஒருவனுடைய நகரஞ்சேர்ந்து, அவனைத்தாழ்ந்து அவனுக்கிசைவாகிய தொழில்புரிந்து, காலமறிந்து நாம் கடத்தவேண்டிய நாளைக் கழிக்கவறிவையோ? நீ ஒருவரிடத்தி லடங்கி ஏவற்பணி செய்திருக்கும்படியாய்ப் பாவியான என்னிருகண் பார்க்கத்தக்கதோ? படுவினையேயென்று பரதவித்துப்பெருமூச்சுவிட்டு, தம்பி! நமது காலபலன் அறிந்து வேளைக்குத் தகுந்த வேடம் பூனைந்து நாளைப்போக்கத் துணிந்தபோதிலும் ஒருவரை வணங்கி இதம் பேச அறியாயே. இராஜசமயந் தெரிந்து, நலம்பெற உறவாடி தேச விசுவாசமுற நினைக்கமாட்டாயே. எந்தவேளையில் எத் தொழில் செய்யவேண்டியதோ அந்தவேளையில் அவ்வேலையை முடித்து அரசனை மனமகிழ்ச்சி செய்யு மார்க்கங் கற்றிலையே. ஐயோ! பரிசுத்த குலத்தாகிய விராடன் புகழவும், அவனைச் சேர்ந்த சபையார் மகிழவும், நாம் இவ்விடத்தில் மறைந்திருப்பதை மற்றவர்கள் அறியாதிருக்கவும், அஞ்ஞாதவாசமகற்றவும் வேண்டுமே. நீ எவ்விதமிருக்கப்போகிறாய்? என்னிளவலே யென்று தளர்ந்து இமைகொட்டாமல் ஏக்கமுற்றிருந்தார்.

இவ்வண்ணம் தம்பியைக் குறித்து வெம்பிய அண்ணனை பிரதாபபூஷணமணிந்த திண்புயவீமன் வணங்கி, தந்தையிறந்த தளர்ச்சிதோன்றுமற் கார்த்திட்ட தமையனே! தித்திப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு கைப்பு இவ்வாறுவகை ருசியுடன் ஐந்துவித கச்சாயங்களும் பச்சடிகளும், நான்குவகைக் கறி, மூன்றுவித ரசம், இரண்டுவகைக் குழம்பு, ஒருவித பாயசம், புளியோதனம் எள்ளோதனம் மிளகோதனம் ததியோதனம் பாலோதனம் சர்க்கரைப்பொங்கல் அக்காரவடிசில் முதலிய வகைவகை அன்னங்களும், பலகாரவிதங்களும் திருத்தமாகச் செய்யக் கற்றிருக்கின்றேன். இந்தச் சுயம்பாகத் தொழிலால்

இரத்தந்தோய்ந்துள்ள வேலாயுதந்தாங்கிய விராடனும் மற்றவர்களும் திருப்தியடைந்து, அமுதத்தை யிகழ்ந்து, நான் செய்யும் பாகத்தைப் புகழ்ந்து, பாகசாஸ்திரங் கற்ற பக்குவனென்றென்னை மகிழ்ந்து உபசரிக்கும்படியா யிருந்து, விருந்து முதலியதும் பரிந்து எந்தச்சமயத்தில் எது வேண்டியதோ அந்தச் சமயத்தில் ஆயிற்றென்றளித்து, அடுப்புக்கு விறகு வேண்டிய போது ஆகாயமளாவியவிருகூஷங்களைக் கோடாலிகொண்டுபிளக்காமல் என்னிரு கையாலு முரித்து ஏற்படுத்திக்கொள்வேன். ஒருவேளை மலையொத்த திண்புயனுகிய மச்சராஜன், மல்லர்களுடன் சண்டைசெய்ய விடுப்பானுகில் மற்போர் வல்லரைச் சொற்பமா யழித்துப் பற்பலவித பரிசும்பெற்று விற்பனவிவேகிகள் மெச்சப் பேரெடுப்பேன். இன்னும், யாளி சிங்கம் புலி கரடி யானை முதலிய மிருகங்களைப் பிடித்து, இராஜனுக்கு முன்னேவிடுத்து, மாச்சரியமூட்டி ஆச்சரியங் காட்டுவேன். உன் பெயர் என்னவெனில் பலாயனனென்பேன். உன் நகரேதென்றால் தருமராஜன் கீர்த்தியைப் புகழ்ந்துபேசுகின்ற புண்ணிய நகரமென்பேன். உன் குலகோத்திரம் என்னவென்றால், அறப்பெருங்கடவுள் மைந்தனுகிய முரசகேதனருக்கு அடிமைசெய்யுமடியேன் அறிவில்லாச் சூத்திரனென்பேனென்று வாயுசேயான வீமன் சொன்னன். அவன் சொன்ன சொல்லைச் சாந்தகுணத் தருமராஜன் கேட்டு, இருபுயமும் பெருமலைபோ லோங்கி, பசுவானது கன்றின்மேல் வைக்கும் பட்சத்தில் லட்சம் பங்கதிகமாய்க் கருணைகூர்ந்து, தம்பி! இந்தத் தொழில் உனக்குரியதுதான். என்றென்றைக்கும் அன்னத்திற்குக் கருப்பில்லை, அஞ்ஞாதவாசத்தை வெறுப்பில்லாமல் நிறைவேற்றலாம் என்று வியந்து, இப்பால் தன்பக்கத்தில் பயந்து நிற்கின்ற பார்த்தனுடைய முகத்தைப்பார்த்து, நயந்து சொல்லுதற்கரிய துயரங் கொண்டு அப்பனே! குழந்தாய்! அர்ச்சுன! தேவர்களாலுஞ் ஜயிக்கப்படாத காண்டவ வனத்தையழித்து, அக்கினிதேவனுக்கு அவிசாயளித்துப் பரிதணித்தருளினை. மகமேருவுக்கப்பாலுஞ் சென்று விஜயம்பெற்று, விஜயனென்று புகழ்வ்ஸதம்பம் நாட்டி அரசர்கள் அளித்த திறைகளியாவற்றுங் கொண்டு அடங்கா மறுமன்னரையும் வென்று ஜயத்துடன் மீண்டாய். இதல்லாமலும், நான்கு வேதமும், நானமுகனும், நாரணனும் நாகலோகத்தார் முதலியபேரும் அறிதற்கரிதாகிய தேவாதி

தேவன், ஆதிபாண்டரங்கள் சேற்கண்டைபோன்ற தடங்கண் வாய்ந்த ஜகதீஸ்வரியுடனே ரிஷபவாகனரூடரா யெழுந்தருளிய போது, உன்னிருவிழியும் உள்ளமுங்களித்து, ஆனந்தபாஷ்பத் துடன்தொழுது பழுதுபடாத இன்பம்படைத்தனை. மூலகாரண னை கண்ணுதலளித்த பாசுபதமும் பெற்றாய். பிரம்மாவினாலும் அஷ்ட வசுக்களினாலும், அஷ்டதிக்குப் பாலகராலும், துளப மாலைதரித்த நாரணனாலும், இந்திரனாலும், தேவர்களாலும்,மந் திரக் கணைகளும் பெற்றாய். கற்பகநாட்டாருக்கு நெடுநாட் பகை வராகிய காலகேயநிவாதகவசர்களை நொடியில் பொடியாகமுடித் தாய். மானுபரணமும், ஞானுபரணமுமணிந்த மகா பதிவிரதை யான இந்திராணி உன்திராணியறிந்து சாவாமருந்தான தேவா மிர்தத்தை ஊட்டுவிக்க, இன்பமா யுண்டு தேவேந்திரனுடன் சிங்காசனமேறிச் சிறப்புற்றிருந்தாய். அரவக்கொடி படைத்த துரியோதனனையும், அவன்தம்பிமாரையும்,அவர்கட்குரிய தரும பத்தினிகளையும் தாம்பிற் கட்டிக்கொண்டுபோன சித்திரசேன னைக்கைப்பிடியாகக்கொண்டுவாவென்று நான்சொல்லி வாய்மூடு முன்னே சென்று அவனைத் திருப்பிக்கொண்டு வந்து என்முன் நிறுத்திக் கட்டுப்பட்ட காவலனைக் கட்டவிழ்த்துவிட்டாய். மேலும், தேசுடையவரில் அக்கினிதேவன்போலும்,திசையா னைகளில் சுப்பிரதீபம்போலும் ஜயகிருத்தியத்தில் விடையோன் போலு மிருக்கின்றாய். அநுமத்துவஜமும், அழியாவில்லும், அட்சயதூணியும், அழகியதேரும், சுவேதப்புரவியும் படைத்த சுந்தரனே! விசித்திர வில்லாளியென்னும் விராடராஜனுடைய பதியிற் புகுந்து, உன்வேடமாறி, வித்வத்திலுயர்ந்த உன்னு ள்ளமடங்கி, ஒருவருட மொடுங்கி எத்தன்மையான சிற்றேவல் செய்வையோ? என்று மதிமருண்டு,கண்ணீர்வெதும்பக் கரைந்து வருந்தினர். அவ்வாறுவருந்திய தருமராஜனதுஉள்ளத்தளர்ச் சியும், பெருமிதமான தன் மனக்கிளர்ச்சியுஞ் சற்றுநிதானித்து ஆராய்ந்தெண்ணிய சவ்வியசாசி, அண்ணாவே!என்னைக்குறித்து எண்ணமுறுதிருக்கும்படி அடியேன் ஒருவாசகஞ் சொல்லு கிறேன். தேவரீர் திருவுளமகிழ்வீர்களாகவென்று சுபத்திரை மணாளன் சொல்லத் தொடங்கினன்.

தருமகுணாலயமே! கேட்டருளும். பூர்வம் யான் தெய்வ லோகம் போயிருந்தபோது வண்ணப்பெண்ணனை ஊர்வசியின் எண்ணத்திற் கிசையாத என்னைப் பெண்தன்மையிலும் ஆண்

தன்மையிலும் இழிவான பேடித்தன்மையாகச் சபித்தாள். அச் சாபத்தால் தளர்ந்து வருந்திய வாட்டத்தை ஆயிர நாட்ட முள்ள ஐராவதன் அறிந்து, அவ்வூர்வசியினிடம் சென்று அடி பாவி! தேவர்க்கனுகூலஞ் செய்த செஞ்சிலைவீரச் சேவகனுகிய விஜயனையும் நீ இப்படிச் சபிக்கலாமா? அடி ஊர்வசியே! இப் போது நீயிட்ட சாபத்தை விலக்கி என் சஞ்சலத்தை துலக்கி விடடியென்று வருந்திச் சொன்னர். அவ்வார்த்தை கேட்ட ஊர்வசியானவள் நானிட்ட சாபம் பழுதுபடாமல் இவர் வேண் டும்போது வந்து ஒருவருடமிருக்கவும் வேண்டாமென்றபோது அகன்று போகவுங் கடவதென்று பிரதிசாபங் கொடுத்திருக்கின் றனள். அந்நாளையில் வந்த சாபம் தந்தையான இந்திரனது உபகாரமென் றெண்ணிவந்தேன். இப்போதந்த ஊர்வசியிட்ட சாபமானது நாம் நாடிய வழிக்கு உபயோகப்பட்டு நன்மைசெய் வதுபோலாயிற்று.

செங்குருதி தோய்ந்தோங்கிய வேல்தாங்கிய காவலனே! நானப்படியே பேடியுருவமெடுத்து இம்மச்சராஜனிடத்தி லடுத் துப் பெண்களுக்குப் பரதம் கற்பிக்க வல்லவனென்று பகர்ந்து அவனருள்பெற்று ஆடரங்கச்சாலையி லிருப்பேன். உன் பெயர் என்னவென்றால், பிருஹன்னளை என்றுரைப்பேன். நீ யிருந்த பட்டணமெதுவென்றால் தியிற்பிறந்த திரௌபதாதேவிக்கு நட னத்தொழில் செலுத்தினனென்பேன். நீயேதிப்படி வந்தா யெனில் பாண்டவர்களுடன் பாஞ்சாலியும் வனவாசம் செய்யப் போன நாளில் நானுங் கூடப் போயிருந்து அவர்கள் ஒரு வரு ஷம் அஜ்ஞாதவாசஞ் செய்யச்செல்ல உன்னிடத்தில் அடைந் தேன் என்றிசைத்து அரசனைச் சந்தோஷப் படுத்துவதற்கு என்மனங் குவித்திருக்கிறதென்று பற்குனன் பகர்ந்தான். அவ னது கருத்தையறிந்த தருமராஜர் இஃதுனக்குத் தக்கதுதான் எனமகிழ்ந்து பக்கத்தில்நின்ற நகுலனைப்பார்த்துப் பரதவிக்கத் தொடங்கினர். எந்நாளும் என்னைவிட்டு நீங்காத இளஞ்சிங் கமே! நான் சொன்னபடி கேட்டு நடக்கத்தக்கவனை யல்லாது உன் சுயபுத்தியாய் ஒன்றைத் தொடங்கிச் செய்ய வல்லவ னல் லவே. மெய்வருந்தும் வேலையிற் பிரவேசிக்க மாட்டாயே. வியர் வையுண்டாக மேனி கசங்காயே. முன்பின்னென்று முணராயே. அறியாச் சிறியவனை நீ சத்துருவின் கண்ணுக் ககப்படாமல் மச்சராஜன் தேசத்தில் உருமாறி, ஒருவருடமிருந்து எவ்வாறு

காலங்கழிப்பாய். அப்பனே! அஸ்வாரூடராஜனேயென்று தருமராஜன் கேட்க, சிவபெருமானுடன் விற்போரும் மற்போரும் புரிந்த சிலேவிஜயன் தம்பியான நகுலராஜன், அமலனை அண்ணலேப்பணிந்து கமலமலர்போல் முகமலர்ந்து கருணைக்கண்ணு அண்ணுவென்று கழறத்தொடங்கினன்.

தருமப்பிரபுவாகிய தயாநிதியே! தேவரீர் அடியேனுக்குப் படிப்பித்த சாஸ்திரங்களில் அஸ்வசாஸ்திரத்தை முக்கியமாய் அறிந்தேன். பரிகூடியுந் தெரிந்தேன். அதனுல் குதிரைகளின் குலமும் குணமும் குரலும் நலமும் பலமும் நன்மையும் வண்மையும் திறலும் தீதும் தேசமும் வாசமும் சீரும் சிறப்பும் சித்தமும் உன்மத்தமும் பேதமும் அபேதமும் முகமும் கண்களும் சுழியும் சுத்தமும் துலக்கமும் விலக்கமும் வருணமும் ஆரோகணமும் அவரோகணமும், வட்டம் கோணம் வளவு வையாளி சிறுநடை பெருநடை சிம்புட்கதிகளும், குதிரைப் பிணிகளும், அவைகட்குக் கொடுக்கு மருந்தும் செவ்வையாகத் தெரிந்திருக்கிறேன். ஆகையால் அஸ்வசாஸ்திர அதிபதியென்ன வேடம் பூண்டு, மச்சகுலாதிபனிடஞ் சென்று, அவனுக்கிச்சை யுண்டாகும்படிக்கிசைந்து பச்சைப்புரவி தூண்டும் பாகனிலும் மேலாயிருப்பேன். அவர் என்னூரையும், என்பேரையும், என்சீரையும் நான் வந்த வரலாறையுங் கேட்பாராகில், குருமரபிலுயர்ந்த தருமராஜனுடைய நாட்டில் குதிரை நடாத்திய குமரன் யான். என்பெயர் தாமக்கிரந்தி யென்றிசைத்து, அராபிக் குதிரைகளையும் சராகமாய்த் திருப்பி விடுத்துச், சமயத்திற்குத் தகுந்தபடி சவாரியுஞ்செய்து, எஜமானனைச் சந்தோஷப்படுத்தி, ஆடையாபரண முதலிய பரிசுகளும்பெற்றுக் குதிரைத்தலைவர்கள் கொண்டாடும்படிக்கு காலங்கழிப்பேனென்றுன். தமது தம்பியின் வசனத்தைக் கேட்ட தருமராஜன் மனக்களிப்படைந்து காலத்திற்குத் தக்கபடி நீ கொள்ளப்போகிற கோலம் மெத்தவும் நன்றென்றுரைத்து மன்மதனிலு முயர்ந்த வடிவமைந்த சகாதேவனை நோக்கிச் சொல்லத் தொடங்கினர்.

ஓகோ அதிபாலியனே! தந்தையான பாண்டுமகாராஜன் மார்பிலும், தாயான குந்திதேவி மடியிலும், விந்தகிரிபோன்ற என் தோளிலும், வெற்றரசர்களின் தலையிலும் விளையாடி மிதித்து, நடைபழகி யுலாவிய உன்மெல்லடிகள், செம்பருக்கைக் கற்களுடன் சிவந்த தீப்பொறி கலந்த மலைச்சாரலிலும், வனங்களி

லும் திரிந்து பன்னிரண்டு வருஷந் தொலைத்தும், இன்னும் நமது தீவினை தீரவில்லையே யென்றேங்கிக் கன்னெஞ்சனை அன்னவாகனனே! கார்செறிந்து நீர்சொரிந்த பார்புரந்து தார் புனைந்த பாண்டுராஜனுக்குப் பிள்ளையாகப் பிறந்தும், சிறிதும் அருளற்ற எனக்குத் தம்பியாகச் சிறந்தும், சாஸ்திர கலைக்கியானங்களை யுணர்ந்தும், சாதுசங்கப்பழக்கம் புணர்ந்தும், பழவினையொழியாது அநுபவித்தனையே.பாலனே! என்னிருகண்மணியே! புத்தியிற் பிரகஸ்பதியையும் - சுக்கிராசாரியையும் நிகர்த்தவனென்றுசொல்ல, மந்திரசாஸ்திரமுற்றும், நீதிநூல்முதலியமற்றுங் கற்றுணர்ந்த வல்லோனே! நீ எத்தொழில்செய்வாய்? எவ்வாறு சிற்றேவல் புரிவாய்? எவர்க்குந்தெரியாதிருக்க எந்தவேடமெடுப்பாய்? எப்படி நாளைக்கழிப்பாய்? என்னிளவலே! என்று கண்ணீர் சொரிந்து ஏங்கியிறைந்த தர்மராஜனை, திரிகாலமுந் தெரிந்த சகாதேவன் வணங்கிப் பேசத்தொடங்கினன். வையகநாடுஞ்செய்ய கோலாடும் ஐயனே! கேளும் தருமதேவதைக்கு ஒப்பாகிய பசுவினங்களைச் சவரகுடிணைசெய்யுங் கோபாலவேடங் கொண்டு விராடராஜனிடத்தில் சென்று பசுக்கள் மேய்ப்போனுகவும், அப்பசுக்களுக்கு நேரிடும் கோமாரி - அடைப்பன்-தெறிப்பன் - வெக்கை-தொம்மை - சூலை - இசிவு-வயிறுப்பல்-பொருமல்-செருமல் - இருமல் வாயசைவு போடாதிருத்தல் முதலிய நோய்களைப்போக்கவும், புல்லுள்ளபள்ளத்தில் மேயவோட்டி, நீருள்ளயிடத்தில் தண்ணீர்காட்டி நிழலுள்ள தோப்பில் மந்தையைக் கூட்டி மடக்கவும், கறக்காப்பசுக்களைக் கறக்கவும், கன்றை மறக்காப் பசுக்களை மறக்கச் செய்யவும், ஆடிக்கறக்கும்பசு, அதட்டிக் கறக்கும்பசு, அணைத்துக் கறக்கும்பசு, பாடிக்கறக்கும்பசு, பழிச்சிக் கறக்கும்பசு, இவைகளைத் தெரிந்து கொள்ளவும், இப்பசுக்களின் தேசம் வாசம் குணம் மணம் இவை முதலியவைகளையுணர்ந்து நடத்தவும் அறிவேன். உன்பெயர் என்னவெனில் தந்திரபாலனென்பேன். உன் நகர்தனிலே பாண்டவர்களிடத்தில் பசுமேய்த்துக் காலங்கழித்தேன். (நந்தகோபாலன்) என்றன் மைத்துனனென் றுரைத்து அவ்வரசன் சிந்தைகளிகூறச் செல்வமொடு இருப்பேனென்பதாய்ச் சகாதேவன் சாற்றினன். அந்த வார்த்தையைக் கேட்ட தருமராஜன் மகாதேவா! சம்போவென்று பெருமூச்சுவிட்டு நம்மெல்லோரினுஞ் சிறந்த தொழில் இவன் பெற்றனென் றிசைந்து, கற்புக்கணியான பாஞ்சாலியின்

மதிமுகத்தை நோக்கி, விதிர்விதிர்த்து விளம்பத் தொடங்கினர்.

அழகுக்காலயமான அன்னமே! பிறவிச் செல்வமுள்ள பேதையே! உனக்கு அனேகந்தாதியர் ஏவற்பணிசெய்யத் துன்பமில்லாமல் இன்பமடைந்த தோகைமயிலான நீ எத்தொழிலியற்றிக் காலங் கழிப்பையோ? இளம்பிடியே! என்றேங்கிச் சுவாசமேலிட்டிருந்த ஞான சம்பன்னனுகிய தருமராஜனது மனக்குறிப்பறிந்து, பெண்ணிற் சிறந்த பெருந்தகையாளாகிய பாஞ்சாலியானவள் கண்ணீர் உகுத்து கழறத் தொடங்கினுள்.

புண்ணிய மனமும் திண்ணியபுயமுமுள்ள வள்ளலே! நான் வண்ணப்பெண்ணென் னும் வடிவங்கொண்டு,மச்சராஜனுடைய மனைவியிடஞ் சென்று ஆபரணம் அலங்காரஞ் செய்யவும், கண்ணுக்கு மைதீட்டவும், ஸ்தனத்திற்குத் தொய்யிலெழுதவும், பல வகை மலரெடுத்துத் தொடுக்கவும், இடையில் சேலையுடுக்கவும், நெற்றியில் விபூதிரேகையிடவும், செந்தூரத் திலதம்வைக்கவும், சாந்து சந்தனம் சவ்வாது கூட்டவும், கதம்பப்பொடிகலக்கவும், இன்னும் பலவிதமான சின்னங்களுஞ் செய்ய அறிவேன். உன்னிடத்தில் ஒருவருடமிருந்து காலங்கழிக்க வந்தேன். என்னைக் காதலித்த ஐந்து கந்தருவர் கணவராய்க் காவலிருக்கிறார்கள். அவர்களைப் பகைத்துப் போராடும் வல்லவர்களில்லை. எப்பேர்ப்பட்டவர்களும் என்னைப் பார்த்து தப்பான எண்ணங் கொள்ளலாகாது. ஒருக்கால் தாறுமாறுன நினைப்புக்கொண்டால், நூறு நூறு கூறுகி வேறுவேறுய் மாய்வார்கள். இப்பேர்ப்பட்ட வல்லவர்கட்கு இல்லாளான நீ வேலைசெய்ய வெளிப்படுவானேனென் றுகேட்டால்,என்குலத்திற்குரிய,நல்லொழுக்கமும்,நாணம் மடம் அச்சமும் பயிர்ப்பும் குறைவுபடாமல் பிரதாபம் பெற்ற பாஞ்சாலிக்குப் பணிவிடை செய்து மாஞ்சோலைக் குயில்போல் விசுவாசத்துடன் வாழ்ந்தேன். அவ்விடம் விட்டு இவ்விடம் வரும்படியான அவசியம் என்னவெனில்,நல்வினைப்பயன்பெற்ற அம்மாதுசிரோமணி வல்வினைவசத்தால் வனவாசம் போன போது நானுங் கூடப்போயிருந்தேன். அவர்கள் அஞ்ஞாதவாசஞ் செய்யப்போனர்கள். நான் அந்தக்காட்டில் அலைந்து, விசனமடைந்து, உன்னுட்டிற் சிலபகல் கழித்து அவர்கள் வெளிப்படும்போது நாம் போய்க் கூடிக்கொள்ளலாமென்று யோசித்தேன். என்னைச் சேர்த்து ஆதரிக்க இஷ்டமுளதோ

வென்று இம்மொழி புகல்வன். அவள் அன்புடனி நுவெனில் ஆசையோடிருந்து சமயோசித வசனங்கள் பேசி, முன்னிருந்த தாதியரெல்லாம் நாணப்பட என் வல்லமையைக்காட்டி, அந்தச் சீமாட்டி இச்சையுரும்படி அணிமலர் சூட்டி நாளுக்குநாள் பக்ஷமுண்டாக நடந்து அஞ்ஞாதவாசங் கழிப்பேனென்று கற்புக்கொரு பொக்கிஷம்போன்ற காதலிசொல்ல, அற்புதக் கருங்கடலாகிய தருமராஜன் கேட்டு வெற்புக்கிணையான சொர்க் கந்தங்கிய மின்னே! நீசொன்ன நன்னயமொழியால் நற்பயனைப் பெறுவை என்றுரைத்து இன்னுஞ்சிலசொல்லத்தொடங்கினர்.

அன்னநடையும் மின்னலிடையும் பின்னுசடையும் வன்ன வுடையுமுடையமடமானே! என்வார்த்தையைக் கொஞ்சங்கேள். செந்தேனே! வேதியரொழுக்கமும், வேந்தர் நீதியும், மாதர்கள் கற்பும் பொருந்தில், மாதமும்மாரி பொழியுமென்றும், அம்மழை யினல் கற்காடுகள் திருந்திப் புற்பூடுகள் பொருந்தி, செந் நெற் பயிற் புகன்றிருக்கின்ற நீதியைக் கேட்டு நெறிமுறை வழுவாமல் நடக்கும் நிலையினை யுடையவள் நீயாகையாலும், ஒரு கற்புள்ள மனையாளைக் கலியாணஞ் செய்துகொண்ட கணவனுக்கு விற்பனவிவேக வேதசாஸ்திரங்களும் பற்பல சுரு திப்பயனும், அன்பும் இன்பமும் அழகும் புகழும் வெற்றியும் மெய்மையும் பொறுமையும் செல்வமும் சீரும் திடமும் தீரமும் குறைவரப் பெருகுமென்றும் மஹாவாக்கிகள் குறித்திருக்கிறார் கள். (பாதியாளென்பது) பாரியாளென மருவிய மனைவியான வள், (கற்பெனப்படுவது சொற்றிரம்பாமை) என்னும் கருத்திற் கிணங்க நடக்கவேண்டியது. கணவன் கருத்திற்கு மாறுபடுவா ளாகில், அவட்குரிய புருஷனுடைய மெய்த்தவத்தையும், செல் வத்தையும், ஆயுள்முதலிய யாவற்றையும் அழித்து மீளாநரகத் திற் காளாக்கிவிடுமென்று ருக்வேதத்தில் சொல்லியிருக்கின்றது. பதிவிரதையுடன்கூடி இல்லற தருமமியற்றி நல்ல மனதுடன் வாழ்வடைந்த பேருக்குக் கீர்த்தியும், பொருளுங் கிடைக்கு மென்று உண்மைஞான முணர்ந்தார் உரைத்திருக்கின்றார்கள். அதற்குத் திருஷ்டாந்தம் என்னவென்றால் (மாதாவாகிய சீதா தேவியின் பதிவிரதா மகத்துவத்தால் இராவண கும்பகர்ணாதி யரை யழித்துத் தேவர் முதலிய தண்டகாரணிய ரிஷிகளுக்கு அபயங் கொடுத்தருளிய ஸ்ரீராமனுடைய பட்டாபிஷேகக் கீர்த் தியை பலதரமுங் கேட்டிருக்கின்றனை.)

நிதமும் அருந்ததி துதிக்கும் அன்னமே! இப்படிக்கெல்லாம் இருந்தபோதிலும், (காவல்தானே பாவையர்க் கழகு) என்னுங் கருத்தின்படி முதற்காவல் தந்தை; இரண்டாவது காவல் புருஷன்; மூன்றுவது காவல் புத்திரன். இம்மூன்று காவலுக்கு உட்பட்டிருப்பவள் மகாபதிவிரதையாம். நாம் அஞ்ஞாதவாசம் பண்ணவேண்டிய இத்தருணத்தில் உனக்கு யாதொரு காவலுமில்லை. ஆனதால், உன் புத்தியை பெருங் காவலாகக்கொண்டு இஷ்டதெய்வத் துணையை யிடைவிடாமல் நம்பி, நிறையாகிய அழிவின்மையை முறையாய் நிறுவி இக்காலத்தைக் கழிக்க வேண்டும். உன்னிட்டத்தைத் துட்டர்கள் கருதிக் கிட்டவந்தாலும், அவர்கள் கண்ணுக்கெட்டாமல் அகன்று அந்தக்கொடுமையாளருடைய துற்புத்திக்கும், உனது சத்துருவின் பார்வைக்கும் அகப்படாதிருந்து, இராஜஸ்திரீக்கு விரோதம் வராமல் நடந்து, நமக்கு நல்லகாலம் வருகின்றவரைக்கும் இந்தத் துற்காலத்தைத் தொலைத்துவிடவேண்டும். பாஞ்சால கன்னிகையே! என்று பகர்ந்த தருமராஜனுடைய சத்தியமொழியான தருமநீதிகளை உத்தமகுணசாலியாகிய பாஞ்சாலி வணங்கிப் புத்தி புத்தியென்று பேசத் தொடங்கினாள்.

ஐயா! பொய்யா விரத புனிதமூர்த்தியே! தேவரீருரைத்த சிலாக்கிய வாக்கியத்தை ஜன்மாந்திர பாக்கியமென்றும், வேத மொழியென்றும் என்தலைமேற்கொண்டேன். தேவரீர் மொழிந்த தெவ்வண்ணமோ அவ்வண்ணமே நடக்க அடியாளிருக்கின்றேன்; எனக்காகச் சிந்தனை யடையவேண்டாம். சத்திய வித்துவின் தத்துவநிலையே! என்று சரணமேற் முழ்ந்தாள். அப்பாஞ்சாவி சொல்லிய பாரமார்த்திய மொழியைப் பாண்டுமைந்தன் உணர்ந்து, பக்ஷமாக நகைத்துத் தெளமியரை நோக்கிச் சுவாமி! அடியேங்களிழைத்தவினை இப்படியாயிற்று. தம்மைப் பணிவாரைத் தாம்பணியக்காலம்வாய்த்தது. இனி எப்படி கட்டளையோ அக்கட்டளைக்குக் கீழ்ப்பட்டிருந்து தமது கிருபையின்படி நடக்கக் காத்திருக்கின்றோம். பரமரகசிய பதிதபாவனனேயென்று தருமராஜன் சாற்ற, தெளமியாசாரியார் சந்தோஷித்து நீங்கள் ஆறுபேறும் விராடபூபனை யடுத்து, இச்சையின்படித் திரியாமல், ஒருவர்க்கும் தெரியாமல் ஒருவரையொருவர் பிரியாமல் இப்போது இவ்விடத்தில் நிச்சயித்துக்கொண்டபடிவெவ்வேறு வேடம்பூண்டு அவரவர்க்குரிய தொழில்களை அலுப்

பில்லாமலும், அவசரப்படாமலும் செய்யவேண்டும். அப்படிச் செய்கிற விஷயத்தில் களங்கமறக்கற்ற கனவானுலும், தனக்கு மேற்பட்ட புத்தியுடையோரிடத்தில் ஆலோசித்து நடக்கத்தக்க தென்று நீதிநூலினர் பேசியிருக்கின்றனர். நீங்களுணராத நீதி யில்லை. அப்படிக்குத் தெரிந்தபோதிலும், நான் அறிந்திருப் பதையுங் கொஞ்சஞ் சொல்லுகிறேன் வெறுப்பின்றி விருப்ப மாய்க் கேட்டருளுங்களென்று விரத சிலாக்கிய வேதபுரோகி தன் விளம்பலுற்றனன்.

ஓ பாண்டவர்களே! ஜகமுழுதும் ஒருகுடையிலாளுந் தீர னுலும், திகாந்தம் வரையிலும் ஒருநொடியில் ஜயிக்கும் வீர னுலும், ஒருவரிடத்தில் சேவகஞ் செய்யப் புகுந்தால், தீரமும் வீரமு மொடுங்கிச் சேவகஞ் செய்யவேண்டுமென்று பாவக நீதி சாஸ்திரத்திற் பகுத்து இருக்கின்றது. ஆனதால் நீங்களிவரும் மாறுருகொண்டு விராடனிடம் சென்று தொழில்புரியுநாளையில், உங்கள் பெருமையையும் புகழையும் பேசாமல் மறந்துவிடவேண் டும், பூர்வகாலத்தில் (துளவணிபூண்ட ஆண்டவன் ஒவ்வொரு காரியங்களை நிறைவேற்றுதற்காக எவ்வளவோ பாடுபட்டு அவ தரித்துக் காரியசித்திகண்டு கமலசம்பவன் முதலிய தேவர்களு க்கு அருள் செய்திருக்கிறார்.) அதுபோல் நீங்களும் காலங்கருதி, உங்கள் சிறப்பை மறந்து, மச்சராஜனிடமருவி, எவலாளரினும் எளியவராயிருந்து நாளைக்கழிப்பது நலமாகும். ஒருவனிடத்தில் ஊழியஞ் செய்வதும், அரசருக் கடிமையாவதும், வேறுவேஷங் கொண்டு வேலைக்கமர்வதும் கொடுமை கொடுமை!. இம்மூன்றில் அரசனிடத்தில் உத்தியோகஞ் செய்கின்ற முறைமையும், எவற் றிலில் கேட்குந் திறமையும், அரசன் தயவைச் சம்பாதிக்க வேண்டிய நன்மையும், கீர்த்திதேடுந் தன்மையும், உச்சிதவார் த்தை சபைமெச்சப் பேசுமுசிதமும், நான் உணர்ந்தபடிக்குவிளம் புகிறேன்; திங்கள்குலந் தழைக்கவந்த செல்வராகிய நீங்கள் கேளுங்கள்.

பகைவருடலிற் பரவி உதிர மாமிசத்தை மூனைத்தலையிற் சுமந்த வேலாயுதந்தரித்த ராஜனனவன் சபைக்குவருமுன்னே, தனக்குத் தகுந்த ஸ்தானத்தில் நான் வந்திருந்து, அரசன் வாக்கிலிருந்துவருஞ் சொல்லினுடைய பொருள் நுட்பமறிந்து, அந்தச் சொல்லின் பயனுக்குத் தகுதியாகப் பதிலுத்தரங் கொடு த்து, மரியாதையா யடித்து மனமகிழச்செய்தால், அவ்வரசனது

பாக்கியங்க ளெல்லாம் அவனே பெறத்தக்க யோக்கியன் ஆவான்.

உலககாவலனுகிய வேந்தனிடத்தில் நாம் வந்தடுத்த அந் நாள்முத லிந்நாள்வரையிலும் வீணுய்த் துன்பப்பட்டோம். இவனுல் என்ன பலன் கண்டோமென்று பலருமறியத் தூற்றி மனவெறுப்போடு பொருத்துக்கொள்ளுகின்ற அவசரபுத்தி யுடையவர்கள், இனிமேல் இராஜனுல் கிடைக்கப் போகிற பெருமை புகழ் ஐசுவரிய முதலிய சன்மானத்தைப் போக்கடித் துக்கொண்டவர்களென்று சொல்லலாம்.

மன்னன் மாளிகைக்கு மேற்பட்ட வீடும், அவன் சிறப்புக் கதிகமான சிறப்பும், அவன் நாகரீகத்திற் கதிகமாகிய நாகரீகமும், அவன் அலங்காரத்திற்கு அதிகமான அலங்காரமும், அவன் ஆபரணத்திற்கு உயர்ந்த ஆபரணமும், அவனது சுகந்த பரிம ளத்திற்கு மிகுந்த வாசனையும், அவன் வஸ்திரத்திற்கு உயர்ந்த வஸ்திரமும், அவன் சொல்லிய நீதி பேதிக்கப்பேசுகின்ற துட்ட வார்த்தையும், மதிப்பில்லா மரியாதையும், வணக்கமற்ற இணக் கமும் கூடாது. இவைகள் ஒருவேளை அதிகப்பட்டிருந்தால், நல்லபாம்பின் விஷத்தை நாள்தோறும் அருந்துவதுபோல் நன்மையைக் களைந்து உயிரழிக்குந் தீமையை விளைக்கும்.

பூபதிக்குரிய புத்திரராலுலும், அவர்களாசைக்கரிய மித்திர ராலுலும், அவர்களன்பு மேற்கொண்ட பௌத்திரராலுலும், இனவருக்கமாலுலும், ஜனபெருக்கமாலுலும், வெட்டிச் ஜெயிக் கும் வீரமுள்ள சகோதரராலுலும், அரசனது ஆணைமீறி நீதி வழுவி நடக்கலாகாது. அப்படி நடப்பார்களாகில், மிகுதியான கோபங்கொண்டு மநுநெறி முறைமைக்கு மாருக உயிர்வதை செய்துவிடுவார்கள்.

மன்னவர்களுக்கு மகிழ்ச்சியைத்தரு மைந்தர்களும், யுத்த முனையில் வெற்றிபெறுஞ் சத்தியையுடைய சுத்தவீரர்களும், செய்யத் துணிந்து பிரவேசித்த யாதொரு காரியங்களில் ஏதாகி லுங் காரியத்தாழ்ச்சி நேரிட்டு அந்தச் சங்கதி அவ்விடத்தி லிருக்கின்ற மற்றையோருக்குத் தெரியுமாகில், அதை வெளியிற் பிரசித்தப் படுத்தப்படாது.

திக்கஜங்களையொத்த திறம் பெற்றவர்களாலுலும் வேந்த னுல் முடியாத காரியத்தை நானே முடிக்கிறேன் என்று வீரியம் பேசப்படாது.

அரசன் நமக்கு மிகுநேச விசுவாசியாய் இருக்கிறானென்று அவனிடத்தில் தனிமையான காரியங்களைச் சொல்லி முடித்துக் கொள்ளுகிற பக்ஷமானது அந்தராஜனை அடுத்திருக்கிற சிலருக்குத் துன்பத்தை விளைக்குமாகில் அது மகாகொடுமையென்றறிந்து புத்திமான்கள் ஒருபோதும் பிரஸ்தாபத்திற்குக் கொண்டு வரலாகாது.

தாங்கள் நினைத்த காரியங்களில் யாதொரு பயனுமில்லாதிருக்குமாகில், வித்வச்சிரேஷ்ட மகத்துக்கள் கூட்டத்தில் அந்தப் பயனிலாச் சொல்லைப் பகர்ந்து பழிப்புக்கிடமாகிய இழிவடையலாகாது.

ஆலோசனையிலுயர்ந்த பேரரிவாளர்கள் ஏழை எளியோர் முதலிய யாவரானாலும் அவர்களைக் கடிந்து, கறுவி வெட்டனப் பேசுதல் விட்டிடென்று மேலோருரைத்த நீதியை நினைத்துக் கோபங்கொள்ளக்கூடாது.

வீரமுடைய வேந்தனிடத்தில் உரிமையா யிருப்பவர்களைப் பகைத்துத் தன்னருமை பெருமை கொடுமை முதலிய ஆணவப் பேச்சால் விரோதமாகத் தூறிக் கடின வார்த்தைகள் சொல்லப் படாது. அப்படி விரோதிப்பார்களாகில் எவராலு மாற்றப் படாத கூற்றுவனுர் கொல்லுங் கொலைத்தொழிலை நாளுக்குநாள் விளைக்குமென்று நன்றுயுணர்ந்து, யாவருக்கும் நல்லவர்களாய் நடந்துகொள்ளவேண்டியது.

தராதிபன் கொலுவீற்றிருக்குஞ் சபையில் தாராளமாய் எதிரில் நிற்கக்கூடாது. அரசனுக்குபின்புறத்திலும் நிற்கக்கூடாது.

சிங்காசனத்திலிருக்கும் வேந்தனுக்கு இருபக்கத்திலும் நெருங்கிநின்று, அவனுடைய கண்கள் யாரைப் பார்க்குமோ என்றும், அக்கண்ணேக்கானது கருணை நோக்கோ, கலகநோக்கோவென்றுங் கண்டறிந்து, காலமுமிடமுங்கருதி நடக்க வேண்டும்.

அவ்வரசனுடைய வாக்கிலிருந்து வருகிற வசனத்தைக் காதுகொடுத்துக்கேட்டு கண்சிமிட்டாமற் பார்த்து எவர்களுக்கென்ன சிலாக்கியமோ ஏழைகளுக்கென்ன பாக்கியமோ எதிரிகளுக்கென்ன அபாக்கியமோ என்று யோசித்துக்கொள்ளவேண்டியது.

அரசன் அரண்மனையிலுள்ள நன்மைதீமைகளைத் தானறிந்தாலும், ஒருவரால் கேள்விப்பட்டாலும், இராஜகாரியங்களைது

வானலும் மற்றொருவருடன் சொல்லாமல் மறைக்கவும் வேண்டும். உடனே அதை மறக்கவும் வேண்டும்.

அந்நியர் முதலிய மன்னவர்களால் சண்டை சச்சரவு பொல்லாங்காகிய கட்டுவார்த்தைகள் நேரிட்டுக் கேள்விப்பட்டால் அதை கெட்டியாய் விசாரித்துத் தீர்க்காலோசனை செய்து உடனே தன் எஜமானனுக்குத் தெரியப்படுத்தி மேன்மைபெற்று, அவ்வரசனுக்கு மெய்ப்பட பொருந்தி யிருப்பது பேரழகாகும்.

ஐம்புலாதிகளை அடியோடறுத்து, ஆசை மூன்றையும் வேர்களைந்து ஆரண்யத்தில் வாசஞ்செய்கின்ற அருந்தவத்தோர்களையும், கலவை திமிர்ந்த சலவையணிந்த கலசமூலையார்களின் கடைக்கண் மருட்டுமாகில், பஞ்சேந்திரியங்களுடன் நாட்டில் வாழுகிற நம்மை விட்டுவிடத்தக்கதோ? ஆதலால், இராஜஸ்திரீகளிருக்குமிடத்தில் தனித்துப் போகப்படாது. அவர்களுடன் சரசவார்த்தைகள் பேசலாகாது.

நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் இந்நான்கு மமைந்த ஸ்திரீகளிடத்திலும், குள்ளனிடத்திலும், சிறுபிள்ளையினிடத்திலும், ஈனஜாதியானிடத்திலும், சிநேகஞ் செய்யலாகாது, சிநேகம் பண்ணினால் உடனே கலகம் நேர்ந்து அவமரியாதைக்குள்ளாக்கி உயிர்த்தண்டனை வரையினுங்கொண்டுபோய் விட்டுவிடும்.

உலகமெல்லாந் தொழுதற்குரிய உயர்ந்தோராயினும், சிங்காசனக் கொலுமுகநோக்கிச்சென்றால் அவ்வரசன் தனக்கு மரியாதை செய்திலனென்றும், வாகனங்கொடுத்திலனென்றும் வசனத்திலனென்றும், ஆசனமளித்திலனென்றும், போஜனமளித்திலனென்றும், வரிசை வண்மை மணியணிப்பணி தந்திலனென்றும் விசனமேற்கொண்டு குரூரப்படலாகாது. ஒருவேளை அக்கொற்றவனால் சகல வெகுமானமும் பெற்றால் உடல் பூரித்துத் தன்னைத்தானே மறந்து மனமகிழ்ந்து கர்வங்கொள்ளப்படாது. அதிகசந்தோஷம் அதிகதுக்கந் தருமென்று சாஸ்திரஞ்சொல்லுகின்றமையால், அவ்வரசனாலப்போதே அவமானம் நேரிட்டாலும்நேரிடும். அதைக்குறித்துச் சிந்தைநோகலாகாது.

அரசனால்வந்த நன்மை தீமையிரண்டுஞ் சமமாகக்கொண்டு சஞ்சலமில்லா திருந்தவர்கள் எல்லாமுணர்ந்த வல்லவர்களென்று இயம்பத்தக்கவராம்.

இராஜன் ஒருவர்மீது கோபங்கொண்டு அவன் செல்வங்களைக் கைக்கொள்ளக்கருதிய காரணத்தைத் தாங்களறிந்ததுண்டாகில், அந்தப் பேச்சை யாரிடத்தும் பேசலாகாது; அதைக் குறித் தரசனையுமேசலாகாது.

கார்மேகங் கலந்துபொழிகின்ற மழையிலும், ஊர்வெந்து உலர்ந்து கரிந்துபோகக் காயும்வெயிலிலும், பைசாசு நித்திரை செய்யும் பாதிராத்திரியிலும், கைசாய வீசிமோதுங் கடுங்காற்றிலும் வேந்தன் ஒருவேலையாக அனுப்புவானுகில், தன்னிடத்தில் சொல்லிய காரியத்தையே கண்ணுகக்கொண்டு, தான்போன அந்தக் காரியத்தை முடித்துவரவேண்டுமல்லது வேறொன்றும் நினைக்கப்படாது.

இராஜகாரியம் நிறைவேறுகிறவரையிலும் சோகம், சோம்பல், தேகவருத்தம், பசி, இளைப்பு, ஆயாசம், தாகம், மனஸ்தாபம், நித்திரை, பெருமை, அருமை, சிறுமை, இவை முதலிய ஒன்றையும் பொருளாய்க் கொள்ளாமல் மானத்தையும்மன்னன் சொன்ன தியானத்தையும் முக்கியமாய்க்கருதி முடிவுபெற நடத்திவரல்வேண்டும்.

கொலுமுகத்தினின்ற வொருவனையழைத்துப் பகைவர்மேலனுப்பினுல், அபபகைவர்குடி கெடும்படிவென்று தங்களரசாக்ஷியைக்காக்கவேண்டும். அவ்வரசனைத் தங்கள் தங்கள் கண்மணிபோற் பார்க்கவேண்டும். எந்தவேளையும் அரசனைப் புகழ்ந்து பேசவேண்டுமல்லது எப்போது மிகழ்ந்து பேசலாகாது.

உற்றதுணையாய்க் கொற்றவனேசம் பெற்றிருந்தாலும், அரசனவனை உயிர்போல்வைத்திருந்தாலும், அவனது பொன்னைப் பொருளைப் பூமியை நேமியைக் கன்னக்கோற் கள்வரைப்போல் கைப்பற்றக் கருதலாகாது. கணக்கு முதலிய காரியங்களிலும் மறந்து வழுவலாகாது.

ஒருவேளை இராஜன் சந்தோஷமடைந்து பொன்னை பூமியை மாளிகையை மனையைக் கொடுப்பானுகில், மிக்க அன்புடன் அவைகளைப் பெறவேண்டும். மற்றொருபாய தந்திரங்களால் கிரகிக்க நினைப்பது ஆலகால விடத்தை அமுதென்று நினைத்த ஆசைபோலாகுமென்று அறிவிலுயர்ந்தோர் மோசம் போகாமல், கிடைத்தவரையிலும் திருப்தியடைந்து சத்தியந் தவறுமலிருப்பார்கள்.

இதன்றியும், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்; கரும் புள்ளபோதே நாற்றிக்கொள்' என்னும் பழமொழியை நினைந்து, இந்தக்காலத்திற் சம்பாதிக்காமல் இனி எந்தக் காலத்திற் சம்பாதிக்கப் போகிறோமென்று கைகொண்ட வரைக்குங் கொள்ளையடிப்பதற் குடன்படுவோரைக் கசடர், அசடர், கயவர், குயவரென்றுரைக்கப்படுமன்றி முன்பின்னுள்ள முதலுமிழந்து முனையுமழிந்து தேசப்பிரஷ்டத்துவ மாவார்கள்.

கொலுக்கொண்டிருக்கும் வேந்தன் சபையில், பொய் புரட்டு பெருமோசம் டம்பம் தும்பல் விக்கல் கக்கல் நெட்டை சோம்பல் கொட்டாவி குறுகுறுத்தல் திமிர்விடுதல் இவை முதலாகிய துற்குணங்கள் வரக்கூடாது. ஒருவேளை வருமாகில், அந்த இடத்தைவிட்டு அப்பாலே போய்த் தீர்த்துக்கொண்டு வரவேண்டும்.

களிப்பாகச் செய்யுங் கசப்பாகிய வஸ்துக்களைக் கனவிலும் கருதப்படாது அதை யுட்கொண்டு காவலன் கழுகமேறப் படாது.

"கண்ணாரக்கண்டதும் பொய், காதாரக்கேட்டதும் பொய், தீரவிசாரிப்பதே மெய்" இது முதியோர் மொழியாதலால், யாதொரு காரியத்தையும் நாவடக்காமற் பதறிச்சொல்லப் படாது. அப்படிச் சொன்னவர்களுக்குப் பெருந்துன்பத்தையும் மனுஷப் பதரென்னும் பெயரையும் வருவிக்கும்.

அரசனுல் நியமித்த குற்றவாளி முதலிய கொலையாளருடன் கூடிக்கலந்து குலாவலாகாது. கூடினுல், இவனும் அந்தக் குற்றங்களுக் குரியவனுவான்.

அரசன் கையெடுத்தழைத்தால் ஆனந்தப்படாமல், அந்தகன் அழைக்க வந்தபோது அவனைக் கண்டு நொந்தழுகின்ற அறிவில்லாருயிர்போ லொடுங்கி யடங்கி வாய்பொத்தி வணங்கி வரவேண்டும்.

இராஜனுலழைக்கப்பட்டு வரும்போது, பூமியதிரத் திடுதிடு என்று நடந்து அலட்சியமாய்ப் பதறி வரலாகாது. 'அடக்கம் அமரருளுய்க்கு'மென்னும் வாக்கியத்திற் கிணங்க மருவிச் சுகம் பெறவேண்டும்.

வெற்றி வேலேந்திய வேந்தனிடத்தில் கட்டிக்காத்துப் பொருந்தி யிருப்பவர்கள் கொசுப்போன்ற சிற்றறிவுடையவரானுலும், அவர்களோடெதிர்த்துப் பகைத்துக்கொள்ளப்படாது.

அவர்கள் பகையானது நல்லதருணத்தில் கழுத்துக்குக் கத்தி யாய் வந்துநேரும்.

இவ்வரசனிடத்தில் வெகுவாகிய செல்வமும் சுபமாகிய இன்பமும் பெறுகிறதற்காக வல்லவோ எந்நேரமுங் கோள் குண்டுணிசொல்லி நயிச்சிகமாக நடந்துகொண்டானென்று அர சனைச் சூழ்ந்திருப்பவர்க ளியாவரும் இகழ்ச்சியாய்ப் பேசிக் கொள்ளும்படி இடங்கொடுத்துப் பலவித வளங்கள் சுலபமாய்க் கிடைப்பதானாலும் அறிவினையுடையோர் அவ்விதப் பழிச்சொல் லுக் காசைவையார்கள்.

இராஜன் கொண்டாடிப் புகழ்ந்தபோதிலும், பேரறிவு டைய பெருஞ்செல்வப் பெரியோர்கள் வெகுபேர் நம்மை மெச்ச வேண்டுமென் றிச்சைகொண்டு, தன்னைத்தான் மறந்து ஆண வத்தாற் சிறந்து அகந்தைகொள்ள மாட்டார்கள்.

பரிசுத்தவான்களாகிய உத்தமர்கள் உலக காவலனாகிய அர சனையும், உபதேசஞ் செய்தருளிய குருவையும், வித்தியாப்பியா சம் பண்ணிய உபாத்தியாயரையும், முத்திபெறுவதற்குப் பெற்ற தந்தையையும், பத்திசெலுத்துந் தெய்வத்தையும், தந்தை என சிந்தித்து தினமேத்தித் தொழுது வாழ்த்திப் போற்றுவார்கள்.

ஆதலால், நீங்களுவரும் இவ்வகையான உலகவியற்கை களை மனதுட்கொண்டு, விராடராஜனையடுத்து, நாள்தோறுங் குற்றமற்ற ஏவற்றொழிலை முடித்து, அகந்தையற்ற மனத்தின ராய்ப் பெருமை பொருந்தி, இன்சொல் விளைத்து அஞ்ஞாத வாசம் ஒருவருஷமுங் கழிப்பீர்களாகில், இது உங்களிடத்தி லுண்டாகிய நல்லநினைப்புக்குத் துணைக்காரணமா யிருக்குமென் று தௌமியாசாரியர் சொன்னார். அப்போது பர்வதாகிருதி யாகக் குவிந்த தோளினையுடைய பாண்டவர்கள் ஐயங்கொண்ட தைப்பார்க்கிலும் மேலான விருப்பமுடையவர்களாய் பௌரோ கிதருடைய மனமகிழச் சொல்லலுற்றார்கள்.

ஓ வேதியர்பெருமானே! காவலனிடத்தில் ஏவல்செய்யும் முறைமைகளை எங்களுக்கின்று கற்பித்தருளினீர். குறைவற்ற தவ ராஜதந்தையே! நீருரைத்த திவ்யமொழிகளை வேதபாடங்கற்குஞ் சந்தைபோலுஞ் சிந்தைகொண்டோம். இனி நாங்கள் மறைந் துறைந்து ஒருவருடத்தைத் தொலைக்கிறவரையில் தேவரீர் தவ வேடம்பூண்டு மாதவர்கள் வாழும் வனமடைந்து மருவத்தக்க தென்று செந்தாமரைப்போன்ற அவரதுதிருவடியைத்தொழுது

போற்றி, இதுவரையிலும் பத்தியுடன் பூசைபண்ணிக்கொண்டு வந்த தம் நித்தியாக்கினியை நெறியோடவரிடமளித்தார்கள்.

விசுவாசமாய்ப் பூசித்துவந்த ஔபாசாக்கினியைத் தௌமியாசாரியர் கைப்பற்றிக்கொண்டவர் ஐவரையும்பட்சமாய்நோக்கி, அருள்மலரு முகத்தோடு ஆசீர்வதித்து, அவ்விடம் விட்டெழுந்து,மாசற்றமாதவர் நிறைந்துறைகின்றவனம்புகுந்து தேசுற்ற தவத்திற் சீர்பெற்றிருந்தார்.

இப்பால் பாண்டவர்களுக்கும் திரௌபதாதேவிக்கும் பணிவிடைசெய்துவந்த பாங்கியர்களைப்பார்த்து நாங்கள் ஒருவருடம் ஒளித்திருக்குங்காலம் நேரிட்டபடியால், அதுவரையிலும் நீங்கள் யாவரும் விசனப்படாமல் மான்களுலாவும் வனஞ்சூழ்ந்த பாஞ்சாலதேசஞ் சேர்ந்திருங்களென்று அவர்கட் குத்தாரஞ் சொல்வி யனுப்பிவிட்டு பெருமையிற்சிறந்த பாண்டவர்கள் மகாலட்சுமிபோன்ற பாஞ்சாலியுடன் சிறிதுதூரம் போகையில், தருமர் தன் தம்பியர்களை நோக்கிச் சொல்லுகின்றார். ஓ என்னருமைச் சகோதரர்களே! நாம் இந்த இராஜனிடம் சென்று சேர்ந்து வேலைசெய்து ஒருவருடம் கழியும்வரையில் நமது கரத்திலிருக்கும் ஆயுதங்களை ஒருவருமறியாமல் ஒளித்துவைப்போமாகில், நம்மைச் சத்துருக்கள் முதலாகிய யாவருங் கண்டுகொள்ளமாட்டார்களென்றார்.

அந்தச்சொல்லைக்கேட்ட அருச்சுனன்வணங்கி அண்ணாவே! தேவரீர் சொன்னது நியாயந்தானென்று வாய்விட்டிறைந்தேங்கிப் பெற்றதாயைப் பிரியுங் கன்றுபோலேங்கிப் பதைபதைத்து, வெற்றிகொண்ட காண்டீபத்தையும், அக்ஷ்திரநிறைந்த அக்ஷய தூணியையும், சஸ்திரமாகிய மற்ற ஆயுதங்களையுங் கஸ்தியுடன் கழற்றிக்கொடுத்தான்.

வாயுமைந்தனுகிய வீமசேனனும் வாரிதிபோற் பொங்கி மாறுதற்கரிய கோபங்கொண்டுசிந்தை சோர்வடைந்து,துன்பந்தாங்கி நைந்து, மேகங்கள் வெளுக்கச் சிதைக்கும் வில்லையும், நாகங்கள் பதைக்க வதைக்குங் கதையையும், மோகமும் மானமுமுடைய படையையும் சோபத்துடன் மனமுருகி வைத்தான்.

நகுல சகாதேவரென்னுந் தம்பியரிருவரும் தலைவனுகிய தருமராஜனுரை தவறுதவர்களாய்ப் பல்லோருங் கவலைகொள்ளும் வில்லாயுதமும், வேலாயுதமும், தோமராயுதமும், சூலாயுதமும் கேடகமும்,அம்புறுத்தூணியும்அவிழ்த்துக்கொடுத்தார்கள்.

ஒப்பில்லாச் சித்தசுத்தமுள்ள தருமராஜன் தன்னுடைய ஆயுதங்களையுங் கூடவைத்து, மொத்தமாகச்சேர்த்து அவைகளை யொருவரும் உணராதிருக்கும் இடந்தேடிவைக்க வேண்டுமென்று யோசித்து செழுமையுடன் வளர்ந்து இருளுக்கிருப்பிடமாக உயர்ந்து தழைத்து கவிந்திருந்த ஒரு வன்னிமரத்தோப்பின் வளப்பத்தைக் கண்டு, மஹா சந்தோஷங்கொண்டு அதில் ஓர் மரப்பொந்தில் இவ்வாயுதங்களை வைத்துப் பகைவர் முதலாகிய பலருக்குந் தோன்றும மிருக்கவேண்டுமென்று மான் தோலால் மறைத்து மூடிக் கட்டும்படி வீமசேனனுக்கு உத்தரவு செய்து தருமசொரூபியாகிய தார்வேந்தன், தந்தையாகிய யம தருமராஜன் திருவடியைச் சிந்தித்து வந்திந்து, சுவாமி! எங்களுக்கு வெற்றியையும் வீரத்தையுங் கொடாநின்ற ஆயுதங்களனைத்தையும் இந்த வன்னிவிருட்சத்தில் வைத்திருக்கின்றோம். இவைகளை நானுவது நரனுவது எடுக்கத்தக்கதேயன்றி மற்றியாவர் வந்தெடுத்தாலும், இம்மரத்தின் கிளையை யடுத்தாலும், பெரும்பாம்புருவாய், ஆலாலவிடத்தைச் சுவாலாமாலிகையாய் வீசி வெகுண்டு மேல்விழக்கடவதென்று பேசிக் கட்டுரையாகிய உறுதிமொழியால் திடத்த வரத்தைப் பெற்று அவ்வரத்தைப் பரீட்சிக்கவேண்டி, வீமசேனனையழைத்து நீபத்திரப்படுத்திய படைகளைப் பாரென்றுரைத்தார். அப்போதே வீமசேனன் அந்த மரத்தின் கிளைமேற் சார்ந்து எட்டியெடுக்கக் கிட்டிய போது மிதமற்ற கொடுவிடத்தைக் குபீரென்றுகக்கி அழலால் தடுத்துப் பெரும்பாம்பு உருவாகித் துரத்துவதைக்கண்டு,பேச்சு மூச்சடங்கிப் பொறிபுலன் கலங்கிப் புலம்பிப் பொன்போன்ற முகந்திரிந்து, பேரிறைச்சலிட்டிறங்கினதைக்கண்டு தருமராஜன் முதலிய யாவரும் துதிக்கைபெற்ற யானைபோல் துயர்நீங்கி மகிழ்ந்து, தர்க்கையின் திருவடிதொழுது, அவ்விடம்விட்டு நீங்கிச் சிறிது தூரத்திலிருக்குஞ் சென்தாமரைப் பொய்கையைச் சேர்ந்து, ஸ்நானம்பண்ணி, நீர்துவட்டி, நெடுமயிராற்றி, வேத விதிப்பிரகாரம் மத்தியானக்கடன் முடித்துத் திருத்தந்தையின் பாதத்துணையைச் சிரமேற்கொண்டு, திக்குநோக்கித் தெண்டனிட்டுத் தென்றிசைக் கடவுளாகிய தெய்வமே! நாங்களெடுக்க வேண்டிய வேடத்திற்கு தகுந்த உபகரணப் பொருள்களெல்லாம் உதவிசெய்து, சுஜாதிப் பிரகாசமும் தந்தருளவேண்டுமென்று வருந்திக்கேட்க, தன் மகனுகிய தருமராஜனிஷ்டப்படி எமதருமராஜன் அநுக்கிரகஞ் செய்தருளினர்.

செங்கோற் கடவுளது திருவருட்பயனல் தருமபுத்திர மகா ராஜன் ஒளிவிடும் கிரணவுதய சூரியன்போல் சதுர்வேத சம் பன்ன னுருவாய்த் தழைத்த பின்குடுமியும், செழித்த முப்புரி நூலும், கவித்த வெண்குடையும், பிடித்த தண்டு கமண்டலமும், விபுலபட்டஞ்சு வேஷ்டி யுத்தரீயமும், காதிற் குண்டலமும், கையிற் பவித்திரமும், கண்டவர் மதிக்கும் புண்டரநுதலும், கடாட்ச வீட்சண்யமும், கரஜபமாலையும், முனிவரிற் சிறந்த முக விலாசமு முடையவரானர்.

மற்போர் வல்லவனுகிய வீமன் மடைத்தொழிலாள ருருவ மமைந்து நுதற்கிசைந்த திலதவகையும், செவிக்கிசைந்த திரு மணிநகையும், பாகசாஸ்திரபேச்சும், சந்தன பாளிதப்பூச்சும், தாழ்ந்த கைவீச்சும், சரிகைத் தாப்தா ஷால்வைப் போர்வையு முடையவனுகிச் சிருஷ்டிகர்த்தாவினலுஞ் செய்தற்கரிய நூதன வேடங்கொண்டான்.

மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் போற்றி விரும் பும் பவளமலைபோன்ற பரமசிவமும், அப்பவளமலைமேற் படர் ந்த பச்சைபசுங்கொடிப் பார்வதியாரும், ஆசைப்பெருக்கோ டடுத்து முன்னின்று அருட்பார்வை யளிக்கத் தன்னிலதவ ருத் தவத்திலிருந்து, உன்னியவகைக ளொருங்குடன் பெற்றுக் காட்சிகண்டருளிய காண்டீப அருச்சுனன் கண்ணுதலுடன் கலந்துவிளையாடிய தன் திருமேனிப் பிரகாசத்தை நீக்கி, வாசனை தங்கு மலர்க்குழலும், கலகலவென்னுங் கைவளையும், உடலை மறைக்கும் அரைச்சட்டையும், கருங்குவளைபோன்ற கண்களும் உடுக்கைக்கிணையாஞ் சிற்றிடையும், உயர்ந்த சரிகைப் பட்டுடை யும், உலவுஞ் சொகுசாகிய நடையும், செந்தூரப் பொட்டணி நுதலும், தாளக்கோல் முதலிய சதங்கையும் உடையவனுகிப் பேடியரிலுயர்ந்த பேருருவமைந்தான்.

பின்னவரிருவரில் முன்னவனுகிய நகுலராஜன், தலைப்புறத் துங் காதின்புறத்துஞ் சுருள்செய்து கத்தரித்துவிட்ட மயிர்க்குச் சும், வன்னப்பிச்சமும், முறுக்குமீசையும், கனகமயச்சுருளை கலந்துகட்டிய வண்டற்பாகையும், நெற்றிக்கோபியும், கஞ்சுக கவசமும், கலகலவென்னுங் குதிரைச்சம்மட்டியும், கதிநடை பழக்குங் கயிறுகொண்டு குணமும் குற்றமும் கோணமும் வட்ட மும் வளவுமாறலும் பிணிவருவிதமும் பிணிதீர்க்கு மவுஷதமு முணர்ந்த குதிரைப்பாகனைப்போல்குறைவில்லாவடிவெடுத்தான்.

மகாவிற்பன விவேக சகாதேவன், சிரசில் நிறைந்துபறந்த கொண்டையும், வளர்ந்ததாடியும், நிளர்த்தமீசையும், செம்மண் வெண்மண் திலகக்காப்பும், கருங்கம்பளமும், கச்சப்பையும் கயிறுங் கோலும், கன்றின் வாய்பூட்டும், காதணிக்குழையும், தாதுகுதழையும், கந்தவேஷ்டியும், பெருங்குரல் தாட்டியு முடையவனுய்ப் பலகோடிப் பசுக்களைப் பாதுகாக்குங் கோபாலனைப்போல் உருவெடுத்தான்.

வேலாயுதம்போன்ற கண்ணினளாகிய பாஞ்சாலி தலைவிரிகர்ந்து, கூந்தல்விட்டு முடிந்து, நெற்றிக்குச் சுட்டிகட்டி, நீலவிழிக்கு மைதீட்டி, இரத்தினப்பணிகள் பூட்டி, வாசக்கலவைப்பொடிகூட்டி அண்ணல் முதலிய ஐவருங்கண்டு வண்ணமகளுருவாமெனச் சமைந்தாள். இவர்களறுவரும் தாங்கள் நிச்சயித்துக் கொண்டவண்ணம் வெவ்வேறு வேடந்தாங்கி ஒருவரையொருவர் பார்த்து, உற்சாகமடைந்து, மச்சராஜனிடத்திலொருவருடம் வாழலாமென்று இச்சைமேற்கொண்டு, அச்சமில்லாதவர்களா யிருந்தபோது மருவகன்ற தருமராஜன் மனமகிழ்ந்து, பலவித வுபாய வளப்பமும்பேசித் திறமுடையவர்களே! ஊன்நாறும் வேலோங்கிய விராடனிடத்தில் நான்போய்ச் சேர்ந்தபிறகு நீங்களைவரும் முறையே தனித்தனிவந்து சேருங்கள். நானவ்விடத்தில் இருப்பதால், என்னைநோக்கிவணங்கி யிணங்கிப் போற்றுதற்கெளிதாயிருக்குமென்று விளம்பிக் கிளம்பிய அறக்கடமை நீங்காத அண்ணலை வாழ்த்தித், தம்பிமாரும் பாஞ்சாலியும் பரதவித்துவாடத், தேவர்முதலிய யாவருங்கொண்டாட, மாதவவேதியர் வடிவங்கொண்ட தருமராஜன் கங்கபட்டரென்னுந் திருநாமமும் இளஞ்சூரியன்போற் பிரகாசமும் பாற்கடலலைபோல் முப்புரிநூலும் பரந்தமார்பும் உயர்ந்த தோளும் வெகுவுலாச முகவிலாச மந்தகாச சுகந்தவாச மாலையையுமுடையவராய் விகடதட கடகரட வாரணம்போற் சென்று மராட கர்ஞடகன்ஞன கிராட மலைநாடர் வந்திறைஞ்சு மணிக்கதவமைந்த வாசலிற்போய் நின்று வெண்குடை நீழலில் நன்குடன் பொருந்திய விராட்ராஜனுக் கறிவிக்கச்சொன்னர். அவ்விடத்திற் காவலிருந்த தூதுவர்சென்று வாய்மூடிக் கைகட்டிச் சுவாமி! பராக்கு. யாரோ வொரு பெரியவர் நமது கொலுமுக வாசலில் வந்திருக்கிரு ரென்றார்கள். அவர்கள்பேச்சைக்கேட்ட மச்சராஜன் உடனே எதிரோடிச் சென்று ஐம்புலனுடுங்கப்

பணிந்து ,முகமலர்ந்து, அகங்கனிந்து, கரமிரண்டுங் குவித்துச் சிரத்திற் பொருந்திக் கருத்தில் துதித்துச் சேவித்து நின்றான். உடனே கங்கபட்டர், 'மங்களானிபவந்து' என்று உபசாரஞ் சொல்லி, இடதுகையை வலதுகையுட னெடுத்து ருக்வேத சாகையினுல் ஆசீர்வசன முரைத்தருளினர். அந்த விராடன் சபையிலிருந்த யாவரும், வந்த வேதியர்பெருமானைக் கண்டு, விந்தையென்றுட்கொண்டு தொழுதார்கள். அந்தவேளையில், சந்திரபிம்ப பிரமதேஜசு ஜொலித்த சோப்பியமாயிருந்த கங்க பட்டரால் மங்களாசனம் பெற்ற மச்சராஜன் அவரை இச்சை மேலான பட்சத்துடனழைத்துப்போய்,வைதிகர்களிருக்க வமைத்த ஆசனத்தில் எழுந்தருளப்பண்ணி அவர் உபயதிருவடிக்கு அருக்கியபாத்தியம், ஆசமநியம், அபிஷேகம், வஸ்திரம், புஷ்பம், அரிச்சந்தனம், அகூதை, தூபம், தீபம், நைவேத்தியம், இவைமுதலிய உபசாரங்கள் யாவும் புரிந்து, பக்திசெலுத்திப் பரிந்தேத்திப் போற்றி, வாய்பொத்தி நின்று, சுவாமி! தேவரீர் யாவர்? எவ்விடமிருப்பதுஇவ்விடத்திற்கெழுந்தருளிய காரணம் யாது? தங்களுடைய நாமதேயமென்ன? என்று கேட்டான். அதற்குக் கங்கபட்டர் சொல்லுகிறார்: ஓ அதிதிவிரபக்குவமுள்ள அரசனே! இந்தச் சக்கிரவாளஞ்சூழ்ந்த பூமியை ஆக்கிஞசக் கரஞ் செலுத்தியாளுந் தருமராஜனுடன் பழகியிருந்தேன். அவர் வனவாசஞ் செய்தநாளையிலுங் கனதேசம் பண்ணிக் கலந்துதிரிந்தேன். அவர் என்னைவிட் டொருவருடம் பிரிந்திருக்க வேண்டி வந்ததால், நான் உம்மிடத்திற் சிலநாளொழிக்கலா மென்று வந்தேனென்று வேள்வியினுல் மிக்கோனுகியு தக்கோ னுரைக்க, மனுநீதிதவறுத மச்சராஜன் கேட்டு, மனமகிழ்ந்து துதியாற்புகழ்ந்து, பரவசமடைந்து, தெளிவாகிய அறிவும்-அன்பும் - ஆசையும்-உள்ளக்களிப்பும் - ஒளிவிட்டிலங்க, ஓ என் ஆண்டவனே! தேவரீர் இந்தப் பட்டணத்திற் கெழுந்தருளிய பிரயோசனமானது நான் எழேழு பிறப்பிலுந் தேடிக்கொண்ட நல்வினையின் நலமேயல்லது வேறல்ல. ஆதலால் நாதகீதவேத முனிவரான தேவரீர், இவ்விடத்திலெத்தனை நாளைக்கு இருக்க இஷ்டமோ அத்தனைநாளும் அதிபதியாயிருக்கலாமென்று, வித்தகவிராடன் புத்திமேற்கொண்டு சொன்னன். அவ்வாறே புனிதமாகிய சிங்காதனத்திலிருந்து வேதியர்முதலிய மாதவரும் பலஜாதியாரும் தொழப் பவளச் செபமாலையும், குவளைத்தொட



வீமசேனன் மாறுவேடந்தரித்து சமையல்செய்தல்

மாலையும் கரத்திலும் உரத்திலும் தரித்த தர்மராஜன் இருந் தருளினர்.

பின்னுஞ் சிலநாள் சென்றபிறகு விற்போருக்கும், மற்போ ருக்கும் இவன்தானென்னும் பலம்பொருந்திய கதாபாணியாகிய வீமசேனனனவன், தான் தேவாமிர்தத்திற் கொப்பாக சமையல் செய்யும் பக்குவத்தைக் குறித்தும், கல்வியின் திடத்தைக் குறித் தும், தெரிவிக்க ஏகபோகத்திற் கொருவனுகிய விராடன் சபை யுட்புகுந்து, நாகரத்தினம்போல் நலம்பெற்றிருந்த தர்மராஜன் திருவடியில் தண்டனிட்டு இம்மண்டலத்தரசே யான் மடைத் தொழிலுக்குரியவன்; கூட்டுக்கறி-குழம்புக்கறி-குழைக்கறி-பொரி க்கறி பச்சடி-கிச்சடி-முதலிய ஐந்துவகைக் கறிகளும்-உண்டல்-தின்னல்-நக்கல்-பருகலுடன் அறுசுவை நிறைவும் குறைவறச் சமைப்பேன். ஒரு சமயத்தில் மல்லுங்கொடுப்பேன். வில்லு மெடுப்பேன். அல்லும்பகலும் நல்லவனுய் நடப்பேன். பலா யனன் என்னும் பெயர்பெற்றேன். திரிபுவனத்தில் தேடிப்பார்க் கிலும் என்தொழிற்கு இணைசொல்ல எத்தொழிலுமிராது. எனக் கீடானவர் எவருமில்லை. சமயபேதத்தால் தருமராஜனுக்கிளைய வீமனென்பவனைவிட்டு உம்மிடத்தி லொருவருட மிருக்கலா மென்று வந்தேனென்றான்.

இவ்வாறியம்பிய பலாயனன்பேரில் இஷ்டங்கொண்டு முக மலர்ந்த விராடராஜன், அவன் தலைமேற் கைவைத்துப் பொன் னரமும் பூவாரமும் இரத்தினபரணமும் முத்தாரமும் வச்சிர வாகுவலயமும் மரகத மதாணியும் மெல்லிய வஸ்திரங்களும் யானை, குதிரை, பல்லக்கு முதலிய வாகனங்களும் பெருமையாகக் கொடுத்து, ஓசுயம்பாகி! அரசனிடத்திலிருக்கின்ற உத்தியோகங் களிற் சிறந்தது தாய்போ லூட்டுவிக்குஞ் சுயம்பாகித்தொழில். ஆதலினல் நீ இன்றுமுதல் எனக்கும் என் சுற்றத்தவருக்கும் இனிமையுடன் உண்பிக்குமுரிமையும், இங்குள்ள மடைத்தொழி லாள ரனைவருக்குந் தலைமையான அதிகாரமு முனக்குக் கொடுத் தோம். இந்த வேலையை உன் சொந்தவேலையாகப் பார்த்துச் சிந்தை வேறுபடாதிருக்கவேண்டுமென்றனுப்பி விந்தைதங்கும் புயத்தோனுகிய விராடன் மிகக் களித்திருந்தான்.

இப்பால், வாயுபுத்திரன் சேர்ந்து, மடைத்தொழிலில் தலைமைபூண்டிருந்தான். பின்பு மறுநாட்காலையில் அறிவா லுயர்ந்த பிருகந்நளையென்னும் பேடியானவள், வட்டவெண்



அர்ச்சுனன் பேடிவேடந் தரித்தது

குடையும், மணிமகுடமுந் தரித்த மச்சராஜனிருந்த உச்சிதச் சபையானது சிறக்கும்படிச் சென்று, மூப்புரிநூல் விப்ரரான கங்கபட்டரென்னும் முதல்வன் பாதத்தில் ஒருக்கணித்து வணங்கி ஐயா! எண்டிசை கொண்டாடுங் காண்டீபதரனை அர்ச்சுனன் அரண்மனையிலிருக்கும் பேடியர் அதிநகரில் நான் ஒரு பேடி. நாதப்பிரமம், சத்தப்பிரமம், ஒலி ஒத்து, தாள மேள முதலியவையுங் கலந்து சுர, சுதி, லயை குறையாமற் பாடவும் ஆடவும், நடனசாஸ்திரம் பிரசங்கஞ் செய்யுஞ் சபைக்கு யோக்கியமாகப் பேதைப்பருவப் பெண்களுக்குப் பரதங் கற்பிக்கவும் கற்றிருக்கின்றேன். பிருகந்நளை யென்னும் பெயரினையுடையேன்; உமது செல்வமா நகரிலிருந்து சிலநாள் கழிக்கும் பொருட்டு அடைந்தேன். என்னை நீர் ஆதரிப்பீராகில், வேதமும் வேள்வியுமுள்ள மெதினியில் உம்முடைய மரபு விருத்தியாமென்று பேடி வாழ்த்தினள். அவள் வாழ்த்தியதைச் சாஸ்திரமுணர்ந்த விராடராஜன் கேட்டு, இத்தன்மையுடையோர்கள், கடல்சூழ்ந்த காசினியிற் கிடைப்ப தருமையென்று பெருமையாய்ப் பேசி, வரிசை முதலிய வர்க்கமுங்கொடுத்து இன்னம் உனக்கு வேண்டுவனவெல்லாந் தருவேன். என் பெண்ணுக்கு உயிர் பாங்கிபோற் கண்ணுக்குக் கண்ணுயிருந்து பரதசாஸ்திரம் முற்றிலும் பயிற்றுவிப்பாயென்று உத்தரகுமாரத்தியிருக்கின்ற அந்தப்புறத்திற் கனுப்பிவித்தான்.

பின்னுஞ் சிலநாள் சென்றபின்பு அழகில் மன்மதனையும், அறிவிற் சுக்கிரனையும் பழிக்கச் செழிக்கும் நகுலராஜன் போய் விராடனுடைய குதிரைசாலைக் கெதிராக நின்றான். அன்று சாயுங்காலவேளையில் மின்னலோங்கிய வேல்தாங்கிய விராடராஜன், வன்னக் குதிரையேறி, வையாளிவிட்டு வரும்பொழுது கடிவாளமும், கம்பியும், கயிறும், கிலுகிலுக்கும், கட்டையும், ஜாட்டியும் பிடித்துப் பார்த்தபேரெல்லோரும் அஸ்வசாஸ்திரந்தெரிந்த மூர்த்தண்ணியனென்று மதிக்கும்படியாயிருந்த பரிவல்லவனை இச்சைமேற்கொண்டு உற்சாகப் பார்வையாகப் பார்த்துக் கையை நீட்டி ஓ குதிரைச் சம்மட்டிகொண்டு நிற்கின்ற குதிரைப்பாகனே! நீ எங்கிருந்து வருகிறாய்? உன்பெயரென்ன? சொல்லென்றான். இவ்விதங்கேட்க அஸ்வாரூட வரசனைக் குதிரைச் சேவகஞ்செய்யும் வேஷங்கொண்ட கோமானவன் குறுகித் தன் தொழிலுக்கேற்ற மரியாதை செய்து, அரசனே! அடி



நகுலன் மாறுடேவந் தரித்தது

யேன் விஜயனுக் கிளைய நகுலனென்று பலதிசையிலு மெழுதி வெற்றிபெற்றுக் கீர்த்திவாய்ந்த நகுலராஜனுடைய குதிரைத் தளங்களுக்குத் தலைவர்களா யுள்ளவர்களிடத்தே ஏழ்மையாய்த் தாழ்ந்து வாழ்ந்தவன். தாமக்கிரந்தியென்னும் பெயருடைய வன் ஐயா; விரைவில் நடக்கும் பரிகளும் இராஜர்களேறுங் குதிரையும், அவற்றின் மனமும், வடிவமும், சுழியும், சுத்தமும், நிறமும், திறமும், திடமும், குணமும், மணமும், குலமும், வேக மும், கதியும், உற்பவதேசமும், வீரமும், ரோஷமும், மறுவும், பிறவுமுள்ள மார்க்கமுமறிவேன். தீராக் குதிரைப் பிணிகளுந் தீர்ப்பேன். மண்டலம், கோணம், வளைவு, முன்னெட்டம், பின் னெட்டம், நேரோட்டம், நரி, கரி, அரி, வரி, வேங்கை நடை யுங் காட்டுவேன். தேருக்கு பூட்டுங் குதிரையும், போருக்கு பூட் டுங் குதிரையும், பட்டாபிஷேகப் பரிகளும், கலியாணபரிகளும் யாக புரவியும் வாயுவேக மனவேக சரவேக சர்ப்பவேக புரவி யுந் தெளிந்து வகுப்பேன். சத்துவகுணசாந்தனே! அண்டி னுரை யாதரிக்கும் பாண்டுமைந்த ரைவரும் வனவாசம்பண் ணப் போனபின்பு உண்டியுமிழந்தேன். உறுதியுமிழந்தேன். உமது கீர்த்தியைக்கேட்டு இவ்விடம்வந்தேன். என்னை யாதரித் தருளும் உத்தமனே யென்றான். அந்தப் புரவித் தலைவனது பொய்யாமொழியைக் கேட்டு, நன்னி நெருங்கிய மன்னர் யாவர்க்கும், பொன்னுலகோர்க்கும், மண்ணுலகோர்க்கும், புனித ஞானியர்க்கும், பூசுரர்க்கும், விசுவாச நேச மெய்யறிவோர்க்கும் உற்றகவலையை யொருங்குடன் தீர்க்கும் வித்தக விராடன் புள காங்கிதனுப் மந்திரிமார்முதலியயாவருங்கொண்டாடச் செந்திரு கலைமகள்சேர்ந்து நின்றுடப் பொன்னின்குடநிறைந்த வாசலில் வந்திறங்கித் தன்னைவந்தடுத்தோரும், சத்தியநெறிபெற்ற தர்ம ராஜன் தம்பிமார்க்குக் கொடுத்த வெகுமானத்திலும் மூன்றுபங் கதிகமாகச் சன்மானஞ்செய்து தன்னுடைய குதிரை வல்லவருக் கெல்லாந் தலைவனென்று முதன்மையுங் கொடுத்தான்.

அதன்பின்பு ஒருநாள் அஸ்வங்களை அபிவிர்த்தியாக அளிக் கும்படிக் கமைந்த நகுலராஜனுக்கிளைய சகாதேவன், நந்த கோபன் மைந்தன்போல் வேடங்கொண்டு, அசைந்தாடிய செவி களுக் கிசையச் சூடிய பச்சிலையுடன், புல்லாங்குழ லிசைபாடுந் தடியும், தொறட்டுக்கோலும் கன்றணைக்குங் கயிறும், மாடுகட்டுந் தும்பும், சிக்கக்கச்சமுந் தோள்மேற்கொண்டசைந்து கீர்த்தி

சகாதேவன் மாறுவேடந் தரித்தது

தழைத்து விராடராஜன் சபையை கிட்டினன். அவனைக்கண்ட அரசன் கருங்கம்பளப் போர்வையுடைய கனவானே! நீயா ரென்று கேட்டான். அப்போது தருமராஜனுடன் சமமாயிருந்த விராடராஜனைப் பணியாதவன்போற் பணிந்து, ஓ மகாராஜனே! துரியோதனனுடன் சொக்கட்டானுடி, இக்கட்டடைந்து, நாட்டைவிட்டுக் காட்டை யடுத்து வனவாசம்பண்ணிய பாண்டவர்களில் இளஞ்சிங்கமாகிய சகாதேவராஜனுடைய பசுக்களைப் பார்த்துமேய்த்துகாத்துவந்த கோபாலனையா என்பெயர் தந்திரபாலனென்றான். அவன் சொல்லைக் கேட்ட விராடராஜன் மகிழ்ந்து அவனைத் தன்னருகிலழைத்து வேண்டியவெகுமானங் கொடுத்து, நமது பசுமந்தைகளை உன்சொந்தம்போல் காப்பாற்றிக்கொண்டிருவென்று அனுப்பிச் சந்தோஷமுற்றிருந்தான்.

உடனே ஓமாக்கினியிலுற்பவித்த திரௌபதாதேவியும், வண்ணப்பெண் வடிவாகி வந்து மருமலர்மாலை வாசமேறிய திருமலர்வேலைத் தேசம்வீறிய மச்சராஜனது தோள்சேர் சுதர்க்கணை வாழும் அந்தப்புரத்தை நாடிச்சென்று அங்குக் காவலிருக்கும் பாங்கியரை நோக்கி யாரோ வொருத்தி வந்திருக்கிறாளென்று உங்கள் அரசிக்குச் சொல்லுங்களென்ன, அவர்கள் அவ்வாறே சென்று, தங்களரசியை வணங்கி எங்களை யாளும் அம்மணி! தேன் நிறைந்த செந்தாமரைமலரிற் பிறந்த செந்திருவுந் தொழுதற் கரியாளாகிய ஓர் பெண்ணணங்கு இடையசைய விசையாய் நடந்து நமது தலைவாசலைக்கடந்துவந்திருக்கின்றாள். தாயே! மாதுரியவசனி! பங்கஜாக்ஷி! கட்டளைப்படி நடக்கக் காத்திருக்கிறோமென்று உபசரித்தார்கள். அந்தப் பாங்கியருரைத்ததைக் கேட்டு பாரமார்த்தியமுள்ள சுதர்க்கணை மிகுந்த பக்ஷமுள்ளவளாய்த் தக்ஷணமே அழைக்கச்சொன்னாள். அந்நேரமே சேடியர்கூடி, பாடிடுகுயில்போலாடி வாடிய மயிலைப் போல் வாசலில் நின்ற மங்கையைநாடி நூதனமான மாதனமே! வாரும் வாருமென்று அன்போடழைத்தார்கள். அங்கிருந்த வண்ணப்பெண்ணனவள் மகாபாக்கியமென்று சென்றாள். அம்மாதின் துடியிடைப் பிடிநடைச் சுந்தரத்தைக்கண்ட சுதர்க்கணையானவள் திடீரென்றெழுந்து செழுங்கமல முகமலர்ந்து, கைகொடுத்தணைத்துப் பக்கத்திலிருத்திக் குங்குமச்சாந்து சந்தனகந்த கதம்ப தாம்பூல மஞ்சள் புஷ்ப வஸ்திராபரணங்களினூற்பூசித்து அன்னையே! உமது தேசவாசம் யாது? யாதுகாரண



திரௌபதை மாறுவேடந் தரித்தது

மிவ்வளவு தூரமெழுந்தருளியது? தமது பெயரென்ன? அடியாள் அறியச்சொல்லுமென்று நயமாய்க் கேட்டாள். அப்படிக் கேட்ட சுதர்க்கணைக்கு உபசாரவார்த்தை சொல்லி அருட்கண் ணிறைந்த ஆரணங்கே! இந்திரப்பிரஸ்த முதலிய எல்லாவற் றையும் சகுனியாடிய சூதால் தோற்றுக் காடே வீடாகவும், பக்ஷி மிருகங்களே பந்துவாகவும், பன்னிரண்டுவருடம் வனவாசம் பண்ணிய பாண்டவர்களை மருவிய மான்விழி மடந்தையைப் பிரியாதிருந்தேன்; என்பேர் விரதசாரணி. சந்தனுதி கந்த கதம் பம் பூசுவதிலும், சேலை மாலை சேர்த்துக் கட்டுவதிலும் பூணூரங் கள் பூட்டுவதிலும், கூந்தல்வகிர்ந்து முடித்துப் பின்னுவதிலும் மார்புக்குத் தொய்யிலெழுதியலங்கரிப்பதிலும் மைதீட்டுவதிலும், புகழ்பெற்ற வல்லவள். உமக்கு இச்சையானபடி அழகுண்டாக்கி மனமகிழச்செய்யவேண்டுமென்றெண்ணி வந்தேன். பெண்கள் சிந்தாமணியே! இன்னும் ஒருகாரியம் இயம்பக்கேளும்; யான் என்தாய்வீட்டிற் சஞ்சரித்துலாவுங் கன்னிப்பருவத்தில் காந்தரு வர் காவலிலடங்கிக் கற்புடையளாயினேன். மற்ற மனிதர்க ளென்னை நோக்கலாகா. மனிதர் வதன நோக்கி நான் மகிழவு மாட்டேன். நீ மாதவமுடைய வல்லவனென்று உன் மாளிகை நோக்கி வந்தேனென்றுள். இவ்வாறு கூறிய வண்ணப்பெண் வசனத்தைக்கேட்டுத் திடுக்கிட்டுப் பயந்து, திடத்துடனயந்து, மகிழ்ச்சியாய் விரும்பி, புகழ்ச்சியாய்த் திரும்பி பூதேவிபோன்ற சீதேவியே! தெய்வப்பெண்போல்வந்த உம்மைச் செவ்வை யாகப் பார்த்து சிந்தை மகிழ்ந்தேன். இன்றுமுதல் நீர் என் இருகண்ணுகவும், என்னுடலுமுயிரும் உன்காவலாய்க் காத்து, உற்ற தாயாகிய நீர் பெற்றதாயெனப்பார்த்து புகழ்ப்படவாழ்ந்து, நன்மொழிபுகன்று நலம்பெற நடத்துவது உன்கடன் அன்றி யும், எனக்கு யாதொரு குறைவு நேராதபடி இரட்சித்தருளும் என்னம்மணியென்று உபசரித்தாள். இவ்வாறு உபசரித்த சுதர்க் கணையைப் பாஞ்சாலிபார்த்து அப்படியேஆகட்டுமம்மாவென்று எந்தவேலைக்கு எப்படியெப்படி செய்யவேண்டியதோ அந்தந்த வேலைக்கான அலங்கார நன்மைகளை வெறுப்பில்லாமல் விருப் பத்துடன் விதவிதமாகச் செய்து நாளுக்குநாள் அதிக விசுவாச முண்டாகும்படி நடந்துக்கொண்டாள்.

இந்தப்பிரகாரம் மைதீட்டி வாள்போல் நீட்டிக் காட்டுங் கருங்கண்ணமைந்த திரௌபதாதேவியும், சந்திரகுல மைந்தரா

கிய பாண்டவர்களும் உருவமறைந்து, ராஜசின்னங்கள் யாவை யுந் துறந்து, உல்லாசப்பேச்சுரைகள் மறந்து, அஞ்ஞாதவாசத் தொருவருடமுங் கழிக்கச் சிறந்து வருநாளையில் மெய்ப்பயிர் விளைத்துப், பொய்க்களைந்து தீவினை தீர்த்து நல்வினை சேர்த்து இராஜ்யபரிபாலனஞ் செய்துவரா நின்ற விராடனுடைய மச்ச நாடான்து, நித்திய ஜயமங்களப் பெருஞ்செல்வமும், மாத முமும் மாரியும், நன்செய், புன்செய், இஞ்சி, மஞ்சள், ரதகஜ துரக பதாதிகளும் மிஞ்சியும், நான்கு வருணத்தவர் குலாவிக் கொஞ்சி யும், குருநாட்டுக்கொப்பாய்க் குறைவறவோங்கியும் பூவாதமரம் பூர்த்தும், காயாதமரங் காய்த்தும், பசுபாக்கியம், பால்பாக்கிய மிகுந்தும், சுபசோபனங்களுடன் சந்தோஷ சம்பிரமங்கள் நிரம் பியிருந்தது. கேளும் ஜனமேஜய மகாராஜனே என்று வைசம் பாயனர் சொல்லிவந்தார்.

கரந்துறை சருக்கம் முற்றிற்று.

மற்போர்ச் சருக்கம்

நித்திய கலியாண சுபசோபன வைபவம் நீங்காச் செல்வச் சிறப்போங்கிய விராட்புரத்தில் பாஞ்சாலியும் பாண்டவர்களும் போகபோக்கிய புநிதவினிமையிற் பூரணச்சந்திரன்போற் பிரகா சித்துத், தாங்களறுவரும் களங்கரகிதராய்க் கலந்து, பேசுங்கால மறிந்து, ஒருவர் கண்ணிற்படாமல் திரிந்து, ஒருவரையொருவர் பிரிந்துமற் பொருந்தித் தாழ்வறவாழுங் காலையில், யானை,புலி, கரடி, சிங்கம், காட்டெருமை, கலைமான் முதலிய மிருகங்களுடன் மல்லரைச் சண்டைக்குவிட்டு, விதவித வேடிக்கைகளை இச்சை யின்படி வளைத்து மச்சராஜனும் மற்றவர்களும் மகிழ்வுற்றிருந் தார்கள்.

அத்தகைய சமயத்தில், வேலாயுதத்திற்குப் பாலசுப்பிரமணி யரென்றும், சூலாயுதத்திற்கு யமதருமராஜனென்றும், வில்லுக்கு இராமனென்றும், சொல்லுக்கு அகத்தியனென்றும், மல்லுக்கு நானே மஹாதேவனென்றும், தேசசந்திரித்து சீர்பெற்ற வாசவ னென்று பெயருற்ற மல்லனொருவன் கொலுமுகவாசலில் வந் தான். அவன் எப்படிப்பட்டவனென்றால் அண்டமுகட்டை யளாவிய மெய்யன். எண்டிசைமட்டு மேந்திய கையான். வாகு

வலயம் வனைந்த தோளான். வீரகண்டை புனைந்ததாளான். வாடைக்காற்றை மறிக்கும் வலத்தான். ஓடும் யானையை யொடுக்கும் பலத்தான். சிவந்தமயிர் விரிந்த தலையான். தீரபராக்கிரமபுயமலையான். அவனிழல்போ லாயிரமல்லர்களடுத்து வரும்படி சப்தமாபூட்டிய ஒற்றையாழித் தேரினையுடைய சூரியன்போல் உன்னதத்தேரேறி விருது, டால், கொடி, குடை, ஜயபேரி, டங்கா, பாங்கா, கொம்பு, தாரை, பூரி, வீரசின்னம் எக்காள முதலிய மூரசவாத்திய மொலிக்கவும், கடல்சூழ்ந்த உலகத்தில் இவனுடனே சண்டைசெய்பவர்கள் யாருமில்லை யென்று கட்டியக்காரர் எச்சரிக்கை சொல்லவும், பட்டுவான்கள் கொண்டாடிக் கொக்கரிக்கவும், நவமணிப்பணி மகுடஞ்சொலிக்க, நாகரத்தினத் தனிப்பட்டய மிலங்க நவமோகன மன்மதனிவனென்ன, ராஜ சிங்காசனத்திற் கொலுக்கொண்டிருந்த விராடபூபதியின் சமுகத்திற்கு வந்தான்.

இவ்வித படாடம்பத்துடன் வாசவனென்னுமல்லன் தேசபூஜித ராஜனைப் பணிந்து, மஹாராஜசிங்கமே! எழுகடல் வளைந்த வட்டாரத்தில் என்னுடனெதிர்த்து மல்யுத்தம் பண்ணத்தக்க வல்லவரில்லை. நான் அநேக பட்டினங்களில் திரிந்து ராஜராஜாக்களைக் கண்டு என்சமர்த்தைக்காட்டிப் பொன்பூஷணவாகனதிவரிசைகள் பெற்றிருக்கின்றேன். இவ்விடத்திலுமது மகாசபையை நோக்கிவந்தேன். என் வல்லமையைச் சொல்லுந்தரமல்லவென்றுரைத்தான்.

அந்த மல்யுத்தத் தொழில்முறை தெரிந்த விராடராஜன், தன்னிடம் வந்து கூறிய மல்லன் வார்த்தையைக் கேட்டுத் தன் சபையிலிருந்த ஆஸ்தானமல்லர்களை நோக்கி உதட்டைப் பிதுக்கித் தலையையசைத்துப், புதிதாகவந்த மல்லனுக்குக் கொடுக்கத்தக்க பரிசுகள் கொடுத்து நமதுசபையில் நிர்வாகமுள்ள மல்லர்களில்லை யல்லவாவென்று வாய்விட்டுச் சொல்லமாட்டாமல் மனம் புழுங்கியிருந்தான்.

அந்தச் சமயத்தில், விராடனுடைய சொந்த மல்லர்கள் மனம்பொறுமல், கோபாவேசங்கொண்டு,வந்தமல்லனிவ்வளவு வரிசைபெற்றுபோகவும், நாம் வல்லமையற்றவர்களாகக் குந்தியிருக்கவும், மானக்கேடும் மரியாதைத்தாழ்வுமாயிற்றே யென்றெழுந்து, காரிடிபோற் பேரொலிகாட்டி, ஓரடியாய் நடந்து, ஆக்கிரமித்துப் பராக்கிரமம்பேசிப் பதைத்துத் துடித்து அதட்

டிப் புயந்தட்டி மீசையை முறுக்கிக் கண்கள் சிவக்க வுருக்கி விழித்துப் பற்கடித்துப் புதுமல்லனே வளைத்து, இது நல்ல சமயமென்றிறைந்து எங்களுடன் சண்டைபோட வாவென்று மறித்து அவன் பெற்ற ஆடையாபரண வெகுமானங்களைப் பறித்து மற்போர் நூலில் வகுத்தபடி விற்போர் வாட்போர் விதமெல்லாம் விளைத்து, வேந்தர் முதலிய வெகுஜனர் காணப் பாய்ந் தெதிரோடிச் சண்டைசெய்தார்கள்.

தனித்தனி யொருவன் சண்டைபண்ணும்போது தானம் விட்டகலாமல் தத்தியும், ஒருவனையொருவன் சுற்றியும்,உடலுடனுடல் மொத்தியும், தோளுடன் தோளடித்துத் தொத்தியும் தாளுடன் தாளடித்துப் பற்றியும், தலையோடு தலைமோதியும், புயமலையோடு மலைமோதியும், இடசாரிவலசாரியோடியும் இரைப் பெடுத் தொருபுறம் வாடியும், இடைந்து முன்பாய்ந்து கூத்தாடியும், இடம்விட்டிடஞ் சாய்ந்து கூடியும், வச்சிரமுஷ்டியாலிடித்தும், வைரக் கையாலடித்தும், காலுடன் கால்மாட்டியும், கதாயுதத்தை நீட்டிக் காட்டியும், கருங்கற்பாறையுடன் கருங்கற் பாறை யிடித்துக்கொள்ளுங்காட்சிபோல், மார்புமார்புங் கலங்க மோதி வாரிவாரியெடுத்துவீசி நேரோடிவாதுபுரிந்து போராடும் போது பிரிந்து, பார்ப்பவர் கண்கள் பதறிக்கலங்க வேர்க்க விதிர்க்க மல்யுத்தஞ் செய்யுங்காலையில் ஊர்திரிந்த மல்லன் கையால் விராடனூரிலிருந்த மல்லர்களெல்லாம் எமலோகஞ் சேர்ந்தார்கள்.

இவ்விதமாகத் தன்னுறுதியைச் சோரவிடாமல், யுத்தஞ் செய்து விராடபுரத்து மல்லர்களை வீரசொர்க்கத்திற் கனுப்பிய வாசவனென்னு மல்லனை நேசவிசுவாசத்துடன்மெச்சி நீ மெத்தவுநல்லவன். கைமுடக்கிக் குத்தவும் வல்லவனென்று விராட ராஜன் புகழ்ந்து, உயர்ந்த வஸ்திராபரணங்களு மீந்து விருது முடி குடை கொடியுடன் மேன்மைச்சிறப்புஞ் செய்து விடுத்து, போர்புரிந்திறந்த மல்லர்களைப் புதைக்கும்படி உத்தரவு கொடுத்துத் தானுஞ் சபையைவிட் டெழுந்து அரண்மனைக்குட்போய் அன்றிரவு விடியுமளவும் நித்திரைபிடியாமல் மெத்தவும்வருந்தி மறுநாட்காலையில் நித்தியவிதி முடித்து இராஜகொலுக் கூடத்திற்கு வந்து தனக்கு முன்னெழுந்தருளியிருந்த கங்கபட்டர் தாளில்வீழ்ந்து, அவரால் சுபமங்களாசீர்வசனம்பெற்று,மந்திரி சாமந்தர் முதலியமன்னவர்களுடன் துன்னியிருந்தான்.

அவ்வேளையில் வாசவனுகிய மல்லன் வந்து பணிந்து, ராஜபோஜமகாராஜ பூஜாதுரந்தர புனிதமூர்த்தி! அடியேனுக்குச் செலவு கொடுத்தருளுமென்று கைதொழுது நின்றுன். அவனைக்கண்ட மச்சராஜன் நேற்றிறந்த தன்சொந்த மல்லர்களின் பரிதாபத்தைப் பாராட்டி இவனைச் செயிப்பதற்குத் தகுந்த மல்லர்கள் நம்மிடத்திலில்லாமையால் இவ்விடத்திலுண்டான மல்லரையும் வாரிப் போர்கொடுத்து, ஆருக்கும் பயங்கரமுண்டாகப் பேரெடுத்து ஊருக்குப் போகப் போகிருனென்று மனந்தாங்கலாகப் பேசினுன். அந்தக்கருத்தை அண்டையிலிருந்த கங்கபட்டரறிந்து மாங்குயிற்கூவும் வளநாட்டிறையாகிய மச்சராஜனே! கேளும். அரசனிடத்தில் வரிசைபெற்று உரிசைகண்ட வாசவனுகிய மல்லனை வெல்லவாவது கொல்லவாவது வேணுமானுல், தகுந்தமல்லன் நமது மடைப்பள்ளியிலிருக்கின்றுன். அவனை மெத்தவுநல்லவன். மகாசமர்த்துள்ள வல்லவன், பூர்வத்தில் தருமராஜனுடைய தம்பி வீமசேனனிடத்திலிருக்கும்போது வெகுபேர் மல்லர்களை வென்று, பலாயனனென்று பேருங்கொண்டு, வெற்றிமாலையும் வெகுமதியும் பெற்றிருக்கிறுன். அஞ்சாநெஞ்சுர முற்றிருக்கின்றுன். அசுரகுலகாலனென்னும் பலசாலி. அவனுலிவனை யடக்கிப்போடலாமென்று நினைக்கிறேனென்று சொன்னர். அதையரசன்கேட்டு மகிழ்ந்து, அப்படியானுல் அந்த மடத்தொழிலாளியை வருவியுங்களென்றுன். உடனே தூதரையனுப்பி யழைத்துவரச் சொன்னர்கள். அவ்வாறு போயழைத்தவர்களைப் பலாயனன் கண்டு, அடா தூதர்களே! அரசன் அழைத்த காரணமென்னவென்று கேட்க, தூதர்கள் ஐயா! யாரோ ஒருமல்லன் வந்துநின்று, நமது சில்லரை மல்லரையெல்லாங் கொன்று, வெகுமானம்பெற்று நமக்கெல்லாம் அவமானங்கண்டான். ஆனதால் அவனைடு சண்டைபோடுவதற்கோ அல்லது உம்மைக்கண்டு பேசுவதற்கோ நாங்களறியோம். அன்றியும் உம்மைக் குறித்துக் கங்கபட்டர் செம்மையாய்ச் சொல்லியிருக்கிறுர். அதனுலழைப்பித்தது போலுமிருக்கிறது என்றுர்கள். அவர்கள் வார்த்தையைக்கேட்ட வீமசேனன் முகமலர்ந்து அகமகிழ்ந்து இதோ வந்தேன் வந்தேனென்று மகமேருவைச் சக்கிரவாளகிரி வளைந்ததுபோல இடுப்பிற்கு கச்சைவரிந்திறுக்கி, அண்டமுகட்டுக்கு முட்டுக்கொடுக்குந்தண்டமொன்று கையிற்கொண்டு, விஷாமிர்தம் புசித்த திட

காத்திரதீரன் ஜயசிம்மவீரன் சிக்கிரம் வந்து சிங்காசனத்திலிருந்த கங்கபட்டரைத் தொழுது ஸ்வாமி பராக்கு? என்றுநின்றான். அவ்வாறுநின்ற சுயம்பாகியை விராடராஜன் கண்டு நீயிந்த மல்லனோடு யுத்தஞ்செய்ய வல்லையோ என்றான். ஐயா! ஏதோ உமது அநுக்கிரகத்தாலும் இதோ எழுந்தருளியிருக்கும் பெரியோர்களின் ஆசீர்வசனத்தினாலும் போர்புரியமாட்டுவேன். தேவரீர் காலதாமதமில்லாமற் கட்டளையிட்டருளும். இதோ ஒரு நொடியில் இவனை ஸ்தானப் பிரஷ்டத்துவமாக்கி ஸ்நானம் பண்ணி வருகிறேனென்றான். அந்தப் பாகசாஸ்திரபலாயனன் சொல்லை விராடராஜன் கேட்டு நகைமுகங்காட்டிப் புதுமல்லனையழைத்து இவனுடன் யுத்தஞ் செய்வதற்கு இஷ்டந்தானா என்றான். ஆஹா! நீர் நல்ல புண்ணியபூபாலன் உமது சபையிலிருந்த மல்லர்களையெல்லாம் வீணாய் மடித்துவிட்டேன். இவனாகிலும் மல்லனென்னும் பேரிருக்கட்டும் இவனு மிறந்து போவானாகில் உனக்கு மெத்த மனஸ்தாபமாயிருக்கும். உம்மைப் பற்றி யிவனை மருந்துபோல்வைத்து விடுகிறேன். அந்தோ! இவனது ஊழ்வினைப்பயனால் நமனுக்கு விருந்தாக வந்திருக்கிறான்போலும் இருக்கிறது. நீங்களும் இவனுயிருக்கு உலை வைத்திருக்கிறீர்கள். என்பேரிற் குற்றஞ்சொல்லவேண்டாம். எமனுடனெதிர்த்த புயிரும், சிங்கத்தைப் பகைத்த யானையும், என்னுடன் போராடவந்தபேரும் பிழைக்கப்போகிறதேயில்லை. ஆகையால், இவனின்றைக்கு இறந்துபோவான். இவனுக்காராவது பெண், பிள்ளை, தந்தை, தாய், அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், உற்றாருறவினர்களுண்டானால் முன்னுடி சொல்லியனுப்பித் தலைமுழுகிப்போடப் பண்ணுங்கள். உங்களுக்குஞ் சம்மதமானால் என்னுடன் சண்டைக்கு வரச்சொல்லுங்களென்று அண்டை யசலைப் பார்த்துக் கண்ணுருட்டிக்கறுத்து விழித்து மீசைமுறுக்கித் திரித்துச் சிரித்து ஆர்ப்பரித்து கொக்கரித்து வீமனுக்கண்டையில் வந்தான். அவ்விடமிருந்த கங்கபட்டரொருவர்தவிர மற்றவர்கட்கெல்லாம் பயமுண்டாகிப் பலாயனன் இறந்துபோனானென்று திண்ணமா யெண்ணங்கொண்டு தியங்கி மயங்கித் தத்தளித்து நின்றுவிட்டார்கள்.

இவ்வாறிருக்க, காமதகனுக்கொப்பாகிய வீமன், தன்னண்டையிற் சண்டைக்கு வந்த வீரமல்லனைக்கிட்டி, உதயகிரி யஸ்தகிரி யிரண்டும் நெருங்கிப் போராடப் புகுந்ததைப் போற்

பொருந்தி, இருவருந் தோளடித்துப் பெருங்குரல் முழக்கி யிடித்து பிரதாபப் பேச்சுகள் படித்துக் காலாலுங் கையாலும் பின்னிப் போரிட்டுப் பிடித்தார்கள். ஒருவரையொருவரடித்தார் கள். ஒருவர் காலை யொருவர் மிதித்தார்கள். ஒருவரை ஒருவர் உதைத்தார்கள். ஒருவரை யொருவர் பற்றினர்கள். ஒருவரை யொருவர் சுற்றினர்கள். ஒருவரை யொருவ ரெறிந்தார்கள். ஒரு வரையொருவர் செறிந்தார்கள். ஒருவரைவிட்டொருவர் பிரிந் தார்கள். ஒருவருக்கொருவர் பின்பறித்தார்கள். மார்புடன்மார் பழுந்த இறுக்கிக்கட்டி யணைத்துச் சுற்றினர்கள். கையைமுடக்கி மார்புந்தோளுந் துளைபடக் குத்தினர்கள். கால்மேலாகவிழ எற்றினர்கள். புருவம், வாய், மூக்கு, காது முதலிய உறுப்புக ளழியச் சிதைத்தார்கள். பொருப்பென்னும் புயங்களொடிய இடித்துப் பதைத்தார்கள். ஒருத்தரை யொருத்தர் துரத்திப் பிடித்தார்கள். ஓடி வாடி நாடி நிலையில் மீண்டார்கள். ஒதுங்கிப் பதுங்கி யொடுங்கி யடங்கிப் பாய்ந்து பாய்ந்து சாய்ந்து மாய்ந் தாற்போல வதங்கி வாடினர்கள். இத்தன்மையாக இருவரும் போர்புரிந்ததில் புதுமல்லன் கற்ற வித்தைகளையும் சாகசங்கள யும் கைலாவகத்தையும் வீமசேனன் கண்டுகொண்டு இவ்வளவு தான் இவனிடத்திலிருக்கிற மகிமையென்று தெரிந்து எதிரிக்கு இடங்கொடுத்து ஏழைபோல்நின்ற வாயுகுமாரனை எதிரிலிருந்த புதுமல்லன் திடீரெனப் பூமியிற் குனிந்து, குபீரெனப்பாய்ந்து, தொடையிற் கைதுறுத்துத் தூக்கித் தொப்பென்று பூமியிற் குப் புறப் போட்டுத் தோண்மேலேறத் துணிந்தபோது இடும்பா சுரனைப் பகாசுரனை யெற்றிக் குத்தி யெமலோகமனுப்பி இவ்வுல கத்தில் பேருபகாரி யெனப் பெயரெடுத்த வீமன் தன்னுடைய சாகசமர்த்தினல் வீராவேசங்கொண்டு, அந்தமல்லன் கையினின் றும் நீங்கி நிலத்திற் பாய்ந்து, உதறி நிமிர்த்து குதித்து நிதா னமாய் மதித்து, நேருக்கு நேர்சென்று, ஒருகையை நீட்டி, அவன் உடலை நெருக்கிப் பிடித்து, மற்றொருகையால் கழுத்தை மடக்கி யொடித்து, நிலத்தில் மோதி, ஓரேயமுக்காக அமுக்கிப் பழுத்த பாலைப்பழம்போல், கொழுத்தகண்கள் பிதுங்கத்தக்கதாக கரசரணதிகளை யொடித்து, உயிரை மடித்து வெறுப்பில்லாமல் வீசியெறிந்து, எங்கே இவன் பின்னல்வந்த மல்லரென்று புயங் கொட்டிப்பார்த்துக் கண்கள்பொறியெழவிழித்து முகம்வியர்த்து ஆர்ப்பரித்து வீறிட்டெழுந்தான். இவ்வாறடங்காத் திடங்

கொண்டெழுந்த சுயம்பாகியை விராடன் கண்டு ஒப்பிடுவதற் கிடமில்லாமல், அப்பப்பாவென் றயர்ந்து, இப்பாலென்னமோ வென்று பயந்து, உடனே முகநயந்து, ஜகமகிழுந் திடவானே யென்று புகழ்ந்து, தன்னிருகரத்தாலு மணைத்து, பொன்னரி மாலை பூஷணங்கொடுத்து, இனிமேலென்னுடைய போர்முகங் களுக்கு உன்னையன்றி யுற்றதுணையில்லை உத்தம பராக்கிரமனே! என்றுபசரித்து, மன்னர்மதிக்க வாணர்துதிக்க மனது கதிக்க வரிசைகளளித்து, முன்னவ னென்னப்பொருந்தி கங்கபட்ட ரைப் பூசித்துச், சுவாமி! உம்மாலெனக்கிவ்வளவு பெருமை யுண்டாயிற்றென்று உவந்து வாழ்த்தி, தன் னுடல்போலும் தன் உயிர்போலும், தன் பொருள்போலும் பக்கத்திலிருத்தி இந்தச் சுயம்பாகிக்கொப்பாக ஸ்ரீராமனைச் சொன்னாலும் என் காதுக்கினிமையிராது. அவனென் செய்தான் போவென்று தினந்தினஞ் சந்தோஷமடைந்து சிறப்புற்றிருந்தான்.

இப்பால் பாண்டவர்கள் தந்தந் தொழில்களில் குறை வின்றி அதி ஜாக்கிரதையாயிருந்து விராடராஜன் நடத்தும் மரியாதைகளினால் அந்நியதேசத்திலிருக்கின்றோ மென்னும் வெறுப்பின்றி, விசனமற்றசுஜனங்களுடன் இந்திரப்பிரஸ்தத்தி லிருந்து, அரசாளும் செல்வர்கள்போற் சுகமுற்றிருந்தார்கள். இப்படியிருக்கையில், இந்தப் பட்டினத்திற் கதிபதியாகிய மச்ச ராஜனுக்கு மைத்துனரும், சுதகூஷ்ணதேவிக்குத் தம்பியருமான கீசகர்கள் ஆச்சரியப்பட்டுத் தேசங்கள்தோறுஞ் சிறப்படைந்து வந்த வாசவனென்னும் பேருடைய மல்லனைத் தங்கள் வாசலி லிருந்த மடைத்தொழில் மல்லன் நாசகால நமன்போலெதிர்த் துக் கொன்றுவிட்டானென்று கேட்டுச் சந்தோஷங்கொண்டு ஆடியும் நேற்றிறந்த பழையமல்லரைக் குறித்து இரக்கமடை-ந்துயிருந்தார்கள். அன்றுமுதலாகச் சுயம்பாகியாகிய பலாயன னைப் பார்க்குந்தோறும் அவ்வூரிலுள்ளார்க்கும், மற்றவர்களுக் கும் மிக்க பீதியும் பயமும் வயிற்றிற் பெருநெருப்பு மூண்டா யிருந்தது. கேளும் ஜனமேஜய மகாராஜனே என்று வைசம் பாயனர் சொல்லலுற்றார்.

மற்போர்ச்சருக்க முற்றிற்று.

கீசகவதைச் சருக்கம்

பஞ்சபாண்டவரும் பாஞ்சாலியும் வித்தியாசமின்றிப் பத்து மாதங்கழித்து மற்றைநாளுந் தொலைக்க வேண்டுமென்று, ஒரு நாள் ஒருயுகம்போற் போக்கிச் சோர்வடையாமல் தேகசுகம் பாராமல் தங்கள் வலிமையைக் காட்டாமல் ஒருமார்க்கமாய்க் காலங்கழித்தார்கள். அப்படிவருநாளையில் ஒருநாள் சுதர்க்கணை யுடன் பிறந்த நூற்றுநால்வருக்கு மூத்தவனும், விராடராஜ னுக்கு மைத்துனனும், அவன் படைக்கதிபதியுமாகக் காமனைப் பழிக்குங் காந்தியும் அளவிடப்படாத ஆண்மையுமுடைய கீசக ராஜன் தன்சகோதரியான சுதக்ஷ்ணதேவியைப் பார்க்கவேண்டு மென்று வந்து, அந்தப்புரத்திற் புகுந்து, சிலம்பு புலம்புஞ் சீரடிபணிந்து, சிலநேரம் வரையிலும் பேசியிருந்து, தன் தமக் கையிடத்தில் செலவு பெற்றுச் சிங்காரவனத்தின் வழியாய் வந்தான். அவன் வரும்போது, பாண்டவர்களின் தேவி யாகிய விரதசாரணி யென்பவள், தேவேந்திரனுடைய நந்த வனத்திற் கொப்பாகிய அந்தப்புரத் தோட்டத்தில் சுகந்த பரி மளமிகுந்த புட்பங்கள் பறித்துச் சோடசகலைநிறைந்த மதி முகம்வேர்த்துச் சொரூபவுலாசமும், புருவவிலாசமும், செந் தாமரைபோல் திரண்ட கொங்கையும், இரண்டுமலையைச் சுமக்க மாட்டாமல் துவண்டாடும் இடையும், அன்னநடையும், வன்ன வுடையும் உடையவளாகிச் சாயல்கண்டு தோகைமயிலாடக் குரலோசை கேட்டுக் குயிலிசைபாட, அளிமொழிக் கிடைந்து கிளியினம்வாட, அடிப்புறவடிக்கு ஆமை யொள்ளிக்க, பொன் னெளிபார்த்து மின்னல் நெளிக்க, இன்னெழில்பெற்ற கன்னி கையானவள் பொன்னங் காவிற் பொலிந் தெதிர்ப்பட்டாள். செயற்கை யழகின்றி இயற்கை யழகுள்ள அப்பாவையைக் கீச கன் கண்டு ஆசைமேற்கொண்டு மோக சோக மூச்சுமேலிட்டுக் காமன் கணையாற் கலக்கப்பட்டு, ஓகோகோ! இப்படிப்பட்ட பெண்ணை இதுவரையிலுங் கண்டிலேன். இவ்வுலகமயங்கவந்த மாயையோ! சும்மா விருப்பவர்மேல் தொடுக்கு மோகனாஸ்தி ரமோ! திக்குப்பாலகருக்குச் சொக்குப்பொடியோ! பிரமா வைத்த சித்திரமோ! கம்மியன் சமைத்த சித்திரமோ! அம்மா ஈதொன்று மறிகிலேன். தெய்வப் பெண்ணை இவளாரோ எவளோ என்று

ஐயங்கொண்டு, அவளண்டையில் வந்து, கண் ணீமைத்தலால் மானிடப் பெண்ணெனத் துணிந்து, காமுகனுகிச் சிந்தை வருந்தி நைந்து மையலால் வெந்து வாடி வதங்கி மானம், மகிழ்ச்சி, பெருமை, புகழ்ச்சி யாவுமறந்து, ஐம்புலனும் புரண்டு, அறிவுமருண்டு மோகப்பயிர் விளைக்கு முதல்வி நேரிட்டும் விரக தாபந்தீராச் சங்கடமென்னே! ஆஹா! நேசப்பெண்ணரசே!உன் சரித்திரத்தைக்கேளாத தரித்திரனுயிருக்கிறேன். நீ யாரோ? எவ் விட மிருப்பது? உன் நாயகன் எங்கே? நீ என்ன காரியமாய் வந்தாயிங்கே? உன் பெயரென்ன? என்பேரில் தயைபுரிந்து சொல்லுமென்று பலவிதத்திலுங் கேட்டான்.

அதற்கோ ருத்தரமுஞ் சொல்லாமலிருந்த சித்திரப்பாவை யைப் பார்த்து, நானுனக்குப் பொருளாகத்தோன்றவில்லையோ? என்சொல் உன்செவிக்கேறவில்லையோ? நான்படுந்துயரம் நீயறி யாததோ? உன்மனமென்ன கல்லோ? கடிதோ? இரும்போ? எழுகோ? என்னுடன் வார்த்தையாடினுல் உன் வாய்முத்து சிந் துமோ? ஆபத்து நீக்காவிட்டால் பாபத்திற்கிடமல்லவோ? என் பேரில் கோபத்தை வைக்காதே. நான் கொண்ட சோபத்தைத் தீர்த்தருளும் சோலைக்கண் ணுறையும் வாலைபருவக்குயிலே! என் மனமிரங்கப் பேசிப் பக்கத்தில் தங்கிய பாங்கியரைநோக்கி அடி தாதியரே! இந்தப் .பெண்பெருமாளாரடி? இவளுக் கென்ன பேரடி? இவளெந்தவூரடி? இதுவரையிலும் நானறியேனடி? நீங்களாராவலுஞ் சொல்லுங்களடி யென்று கேட்டான். அவர்க ளவனுக்குப் பயந்து ஐயா! இந்த வண்ணமகள் உங்கள் தமக் கையாரிடத்தில் பத்துமாதமாய் வேலைக்கமர்ந்திருக்கின்றுளென் றார்கள். அந்த வாசகங்கேட்ட கீசகன் ஊழியஞ்செய்யவந்தவள் தானே யென்று இலேசாக நினைத்துக் காமத்தீப் பெருங்காற்றுற் கருகியுருகி, நாணங்கொண்டொடுங்கி முகங்கோணி முன்னின்ற விரதசாரணியின்பாதத்தில்வீழ்ந்து,என்னுவியே!என்னைக்கொல் லுவது உன் ஆசைவசனுபியே!வசந்தகாலவண்டைப்போலஉன் வாய்மலரிற் சுரக்கும் தேனையுண்டு, பிரமானந்தங்கொண்டு மேன் மைபெற விரும்புகின்றேன்.உனக்குண்டாகியவழகும்அவ்வழகுக் கேற்ற பருவமும், அப்பருவத்திற்குரிய உருவமும், அவ்வுருவத் திற்கிசைந்த காந்தியும், அக்காந்திக்குத்தக்க சாந்தியு முண்டா யிருந்தும் உனக்குத்தகுந்த சொகுசுநாயகனில்லாமையால் உன் காலம் அநியாயமாயகன்றுபோகிறதே. ஐயோ! நானுனக் குடன்

பாடாகிய கிரீடி! நீ எனக்கிசைவாகிய கண்ணுட்டி! அடிசீமாட்டி! பெண்ணாகப் பிறந்தவள் உன்னழகைக்கண்டு பின்தொடரவேண்டுமே; அலங்கார மென்பன வெல்லாம் உனக்கலங்காரமா யமைந்த அடிமையே! இவ்வளவு நிறைவுற்றிருக்கு மூனக்குமெனக்கும் என்னகுறை? நாம்பேசி மிகுந்த சந்தோஷமாக விளையாடிக் குலாவிக் கூடுவதே யுறவு. உனக்கு வேண்டிய நவரத்தினபரணங்களும், கட்டுவர்க்கங்களும், பட்டுவர்க்கங்களும், பொன் பாத்திரங்களும், பொருள்களுந் தருகிறேன். எனக்கெவ்வளவு மோகங்கொடுத்தையோ அவ்வளவு போகங்கொடுக்கிறேன். நித்தியம் உன்னுத்திரவின்படி நடக்கிறேன். மற்றொருவர் முகநோக்கிலேன். சத்தியம்பண்ணித் தருகிறேன். சற்றேனு மனமிரங்க வேண்டுந் தையலே! என்று எத்தனையோகோடி யுபசாரவார்த்தைகள் சொன்னன். அத்தனை மொழிகளுக்கும் எள்ளத்தனையும் பேசாமல், ஓர் மரத்தினேரமாய் மறைந்திருந்து ஆ கீசகா! பாபமாகிய மூட்டையும், பழிப்பாகிய கேட்டையும் பாசப் பெருங்கோட்டையும் என் கட்டித் துள்ளுகிறாய்? ஏழைப் பெண்பாவத்தைக் கொட்டிக்கொள்ளுகிறாய். இம்மைப் பயனை யொழிக்கிறாய். மறுமைப்பயனை யழிக்கிறாய். இம்மை மறுமை யிரண்டையும் யோசிக்கவில்லையோ? ஏதோ விபரீதமாய் நினைத்த வீண் நினைப்பையும் மாற்றவில்லையே. நற்குடிப் பிறப்பையும் பெற்றிலை. நாடாத காரியங்களை நாடுகிறாய். வீணாகிய சொற்களைச் சொல்லுகிறாய். அந்தோ! இந்தப் பேச்சு உன்னுடனற்றுப்போகிறதாயிருக்கவில்லையே. அநேக மன்னரும் வெகுவாகிய ஆத்மகோடிகளும் வந்தொதுங்குகின்ற சத்திரவட்டக்குடை நிழலையுடைய விராடராஜனது பெருமைக்கும், அவனது புகழுக்கும் அழிவு தேட ஏற்பட்டிருக்கின்றாய்போலும். முடிவுகாலத்தைத் தேடிக் கொண்ட மூர்க்கனே! விவேகமற்ற வெறியனே! மன்மதபாணமாகிய நெருப்புக்குப் பயந்து, மகாபதிவிரதைகளின் வயிற்றெரிச்சலாகிய வடவாமுகாக்கினியில் வீழ்ந்து வாழ்நாளழிந்து மாளப் போகிறாய். அடாபாவி! சிறந்த மரபிற் பிறந்தவர்கள் தங்களுடலழிந்தாலும், உடலிற் பொருந்திய உயிரொழிந்தாலும், பிறர் மனைவிபிறருடையபொருள் விரும்பமாட்டார்களே. வாய் புழுக்க வசைமொழி வசனிக்கார்களே. நொய்யவுரையார்கள். நொந்த கண்ணுற் பாரார்கள். அவர்களைத்தான் மிக்கோரென்று துதித்தும் தக்கோரென்று மதித்தும் சாஸ்திரங்களிற் பேசியிருக்கிறது

நீ இழிந்த பிறப்புள்ள ஈனஞகையால் துர்ப்பாஷைகளை ஏறக் குறையப் பேசினாய். அவைகளையெல்லாஞ் சுதர்க்கணையைப் பற்றி மனம் பொறுத்தேன். அந்தமட்டும் உன் துர்ப்புத்தியை விலக்கி நற்புத்தியைத் துலக்கினால், தொல்லுலகில் இன்னுஞ் சிலநாளிருந்து வாழ்வாய். இல்லாவிட்டால் எமலோகஞ் சேர்ந்து நரகத்திலாழ்வாய், என்னை நீ யாரென்று நினைத்தாய்? தேவபுருஷர்களாகிய ஐவருடைய காவலிலிருக்கிறவள். அந்தத் தேவர்களுக்கு முனக்குமிருக்கின்ற பேதத்தை யோசித்துப்பார். உனது நடத்தையை யிதுவரையிலு மவர்களறியார்கள்போலு மிருக்கிறது. அவர்களில் ஒருவனாகிய வீரபோஜனென்னு மேலோனறிந்தானாகில், கண்மூடித் திறப்பதற்குமுன் உன்னுடல் மண்மூடிப்போய்விடும். உன்னுயிரும் ஒழிவாய். அடா காலாந்தகா என்று காமவேதைகொண்ட கயவனுக்கெதிரில் நாமம் வேறுகொண்ட நாயகி பேசினாள்.

அந்த நாசகாலனாகிய கீசகனுக்கு ஆசைநோ யதிகரித்துக் கூசுதலற்று வண்ணப்பெண்ணை நோக்கி, உம்மைப்பார்த்த கண்ணுக்கு மற்றொரு பெண்ணைப்பார்க்க எனக்கெண்ண மில்லையே. என்னிருகண்மணியே! அதற்கிசைந்த மணியே! அந்தமணியி னொளியே! ஒளியிடத்தின் வெளியே! இந்திரலோகத்திற் கொப்பாய்ச் சந்திரமண்டலத்திற் கப்பாலளாவிய என் மாளிகையைத் தருகிறேன். அம்மாளிகை நிறைந்த சாளிகை தருகிறேன். சகலவனுபவ வதிகாரமுந் தருகிறேன். நானுமக்கேவல் செய்பவருகிறேன். என்னை நீ நிஷ்டூரஞ் சொல்லாமல் என்னிஷ்டதெய்வம் போலாண்டருளும். ஆரணங்கே! உமதன்புள்ளகருணைப்பார்வையால் எனக்கு விபரீதத்தைவிளைத்த காமப்பேயையோட்டிவிடும். என் கலக்கமயக்கத்தை மாற்றிவையும். நான் கடைத்தேறும்படி தேற்றிவிடும். கலவியமளியி லேற்றிவிடும். உமது சிறுநகை நிலவினால் என்புத்திமருண்டமோகவிருளைப் பிரகாசிக்கப்பண்ணும். மன்மதன் கணைதுளைத்த என்மார்பின் புண்ணுக்கு மதமேறிய ஸ்தனத்தாலொத்தவும் கரங்களிரண்டாற் கட்டியிருக்கும் என்னுள்ளுக்கு மருந்தாய் உமதிதழமுதமூட்டும். உயிர்போமெனக்கு உமதுறுதிமொழி சொல்லும். மதப்பயல் சண்டைக்குவந்து முன்னில்லும். என்னைத்தடுத்தாட்கொள்ளும் சரணஞ்சரணம். பெண்ணையகச் செல்வமே! இவ்விதமாக வணங்குகிறவென்னை இன்னனென்று அறிந்துகொள்ளும். இந்திரன்முதல் யாவரையும் தந்

திரத்தில் ஜெயிக்குஞ் சுந்திரமுடையவன். நான் திரிலோகஞ் சேர்ந்தெதிர்த்தாலும் அபஜய மடையமாட்டேன். இளமைப் பருவத்தில் மாரன்; வளமைச்செல்வத்திற் குபேரன்; கல்வியிற் சேடன்; கலவியில் விசேடன்; நன்மைக்குகந்தவன்; நானுன் தன்மைக்குத் தகுந்தவன்; இந்தமச்சதேசத்தில் நான்வைத்தது பிச்சை. இந்நாட்டரசனை விராடனை மேன்மையாயெண்ணுதேயும். அவனென் தமக்கைப் புருஷனுகையாலும், சிங்காதனத்திலேறி யிருப்பதற்கு எனக்குச்சாவகாச மில்லாமையாலும்,இவனை இவ்விடத்திற்கு முடிசூட்டி நிலைநாட்டி ஆள்காட்டிப்போல் வைத்திருக்கிறேன். அவனுல் ஒன்றுமில்லை. எல்லாமென்னுல் இருக்கின்றது. என்பெயர் சொன்னுல் மராடமுதலிய கர்ணடகமும் நடுங்கும். ஆதலால், நானவனை மதிப்பதுமில்லை; துதிப்பதுமில்லை; என் மகிமை நீ நன்றுய் விசாரிக்கவுமில்லை. உமக்கு எதுவேண்டியிருந்தாலும் நீயெப்படி நடத்தவேண்டுவதாலும், உமது சொற்படிக்கெல்லா முடிக்கயிருக்கின்றேன். என் பெண்சாதிமார்களும் உமக்கேவல்செய்யப் பார்த்திருக்கிறேன். நீர் வண்ணப்பெண்ணென்னுஞ் சின்னத்தொழிலை விடுத்து, என்னை யடுத்து மேன்மையாய் இருக்கலாம். நீரெனக்கு வசப்படுவீராகில், விருஷபத் துவஜராகிய திரிநேத்திரதாரியைப் பார்வதிபங்கரை பரமசிவத்தைப் பூசித்துப் பிரமோற்சவம் பண்ணிவைக்கிறேன். யான் இதுவரையிலும் பண்ணிய புண்ணியங்களை யுமக்கே தத்தஞ்செய்கிறேன். உடல் பொருள் ஆவி மூன்றையுமுமக்கே யொப்புவிக்கிறேன். உமதாசையால் மோசம்போகிறேன். நான்கொண்ட மோகலாகிரி தலைக்கேறிவிட்டது. இந்தக் காமமயக்கத்தைத் தணியாவிடில் என்னுடலுமுயிரு மொருங்கே போய்விடும். அதனலுமக்குப் பாவஞ் சம்பவிக்கும். ஓ பருவ ரதியே! நான் மெத்தப் பெரியமனிதன் மேன்மையுற வாழ்ந்தேன். காமக்குழியில் கால்தவறி வீழ்ந்தேன்.

மோகக்கடலி லாழ்நதேன். ஆதரவற் றலைந்தேன். ஆசை வலையா லுலைந்தேன். ஐயோ! அறிவு தொலைந்தேன். நீரென்னுயிர்க் குறுதியாகித் தெப்பம்போற் கைகொடுத்துக் கரையேற்ற வேண்டும். கலாநிதியே! நிலாமதியே! ஜீவசஞ்சீவியே! வேதப் பிரசாதமே! கருணைப்பிரவாகமே! காந்திப்பிரவாளமே! உமக்கு மேலாகிய புண்ணியமுண்டு. இனி நானென்ன சொல்லப்போகிறேன்? தனியனுகிய நானென்னசெய்வேன்? உமதுசித்த மென்

பாக்யம். தருமத்தை எண்ணித் தயவுபுண்ணி இனி என்னை ரக்ஷிக்கவேண்டும். என்மனமோ பதைபதைக்கின்றது. என் உடலோ துடிதுடித்துச் சோருகிறது. என் பொறி புலன் கலங்குகிறது. என்புத்தி தயங்குகிறது, பிராணனெடுங்குகிறது. நான் பிழைத்த பிழைப்பு வீணாய்ப் போயிற்று. பிறருக்கு நகைப்புண்டாயிற்று. உள்ள முருகுகிறது. உடல் கருகுகிறது உயிருமலைகிறது உரையுங் குழறுகிறதே. ஆஹா! பெண்தெய்வமே! உமது அரவிந்த பாதம் எனக் கடைக்கலஸ்தானம். நம்பினேன்; நம்பினேனென வெம்பி வீழ்ந்து, அந்த விரதசாரணியின் அரவிந்தவடியில் இவன் தலைமுடி படும்படித் தாழ்ந்து கண்டபடி பிதற்றினான்.

வண்டு மொய்க்கும் விரிந்த கூந்தலையுடைய மாதரசி, கை நெரித்து, முகத்திற் கடுமைகாட்டி, அடா கொலைபாதகா! அநாசாரமுடையவனே! உத்தமஜாதியிற் பிறந்தும், உயிர்வாழ்க்கையிலிருந்தும், யோசியாமற் போனையோ. பாத்திரமில்லாத சூத்திரஜாதியாகியும், ராஜஸ்திரீகளுக்குப் பணிவிடைசெய்பவளாகியும், தாழ்ந்த ஸ்திதியிலிருக்கிற என்பேரில் ஆசைப்பட்டு மோசம் போய்ப் பேசுவது உனக்கு நாசகாலமல்லவோ? அடா கீசகா! ஏழையாகிய எனக்குக் கொடுக்கிறேனென்ற செல்வங்களை உன் குலத்துக்குரிய பெண்களுக்குக் கொடுத்து, அக்கினிசாக்ஷியாகக் கல்யாணஞ் செய்துகொண்டு, கலந்துண்டு அழகாயிருக்கலாமே; அவர் சுகத்தைவிட்டுவிட்டு, வயிறுவளர்க்கவந்து மாறுவேஷங் கொண்டு, தலையும் பம்பை இடையுங் கந்தையாயுள்ள என்னை விரும்பி ஏன்கெடுகிறாய்? வீணைசெய்கொண்ட மாபாதகா! ஓமகுண்டத் தழுதென்று உண்ணுமற் கலங்குகிறாய். உயர்ந்த பொருளுக்குத் தளர்ந்தாசைப்படுகிறாய். அடா துன்மார்க்கனே! புத்திவாகிய வொருவன், தான் மணம்புரிந்த மனைவியைத் தனியேவிட்டு அந்நியஸ்திரீகளை நாடி, அவர்கள் காலடியில் வாடிக்கிடப்பது அழகல்லவே. அக்கினி சாக்ஷியாகச் செய்த சத்தியந் தப்பினவர்களுக்கு இம்மையில் வாழ்வு மாறும்; மறுமையில் நரகமீறும், எப்பிறப்பிலும் பழியும் பாவமும் அபகீர்த்தியு மேறும். ஐயோ நான் சொல்வதைக்கேள். மறுமாதர்மேல் மையல்கொள்வது அநியாயம். அம்மையலால் விளைவது அபாயம். எந்த வேளையும் அச்சமும், துன்பமும் நேரும். இதுவோ தொல்லை இன்பமோ இல்லை. அன்றியும் பரஸ்திரீகள் தங்களை விரும்பிய நாயகனுடைய சுகதுக்கத்திற்கு உரியராகமாட்டார்கள். அதே

னெனில், தங்களைச் சேர்ந்த சோரநாயகனிறந்தால், அவனுக்கு கருமக்கிரியை முதலாகிய சிரார்த்தங்கள் செய்ய அதிகாரமில்லை. அவள்கருப்பங்கொண்டு பெற்றபிள்ளையும் தந்தைவழிக்கிசைந்த கருமச்சடங்குகளுஞ் செய்யவொண்ணாது. அந்தப் பிள்ளையினல் வம்சவிருத்தியுமாகாது. ஒருவேளை வம்சவிருத்தியானல் தந்தை குலம் நசித்துப்போம். அபிமானத்தால் வந்த இந்த மைந்தன் தலையெடுத்து மேம்பாடடையான். இவன் எவ்வளவு செல்வம் பெற்றிருந்தாலும் 'எருமைச் சாணம் எக்கியத்திற் காகா' தென் பது போலாம். குலத்திற்கொண்ட குரங்காலும் குறைசொல்லு தற் கிடமிராது. வேதவிதியும் நீதிமுறையும் பிசகாது. திதி முத லிய பிதுர்க்கடனுக்கும் அதிகாரியாவான். இவைகளையெல்லாம் ஓதியுணர்ந்த கோத்திரத்தாலுகிய நீ ஜாதி யிழந்தவர்போல் அதர்மத்திற்கு உடன்படவேண்டாம். என்னை நாடுவதும்இஷ்ட மாகத் தேடுவதும், உன்குலத்திற் குரிமையல்லவே. மூடனுக்கு க் கொம்புத்தேன் எட்டுமா? மூடனுக்கென் அன்புதான் கிட் டுமா? ஓ மூர்க்கனே! நானொரு விரதம்பற்றி இவ்விடத்தில் வந் திருக்கிறேன். என்பேர் விரதசாரணி. நீ தப்புநினைப்பு கொள் ளாதே. சாகவே தலைதுள்ளாதே. பூர்வம் சீதையை எடுத்துப் போய்ச் சிறையில் வைத்து உண்ணுமல் தின்னுமல் ஊரம்பல மாய்ப் புத்திரமித்திர பௌத்திராதியுடன் நிர்மூலமாய்ப் போன இராவணன் சரித்திரத்தைக் கேட்டிலையோ? உனக்கு மதிகதி. உருளவந்ததே தலைவிதி. நீ என்ன செய்வாய்? என்னைக் கலியா ணம் பண்ணிக்கொண்ட காந்தருவர்களாகிய ஐவர் மகா பராக் கிரமசாலிகள். என்விஷயத்தில் தீங்குசெய்பவர்களின் தலைகள் பனங்காய்போல் உருண்டலைய ஓங்கிய விற்பிடித்திருக்கின்றூர் கள். இந்த இரகசியத்தை நான் உனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆயினும், விராடன் பத்தினியாகிய சுதர்க் கணையை யடுத்து அவன்னம் புசித்து வருகின்றமையால் நன்றி குன்றுமற் செய்தனேன். 'கெடுவாய் கேடு நினையாதே' என்றல், 'இன்னமுங் ஐடுவேன்; பந்தயமென்ன' வென்பது போல், என்னை விரும்பிச் சின்னவார்த்தை பேசுகிறுய். துற் புத்தியை விட்டுவிடு. வாய்க்கடங்காப் பிடிபிடித்து மண்டை யுடைந்து மடியாதே. என்னண்டை யடைந்து துடியாதே. என் னுடன் பேசுவதற்குத் தெய்வலோகத்தாரும் திடுக்கிடுவார்கள். அப்படியிருக்க, நீ பயமில்லாமற் பேசினையே பாவி! எனக்குரிய

காந்தருவர்கள் இப்பொழுது இந்நகரத்தி லிருக்கின்றார்கள். அவர்களுக்கு விரோதிகளில்லை. சிலசமயத்தில் விரோதியானவர்கள் ஆகாயத்திற் பதுங்கினாலும், அலைகடல்மூழ்கியொதுங்கினாலும், பாதாளத்தில் மறைந்தாலும், பூதலத்திலுறைந்தாலும் திக்குப்பாலகருடைய பேருதவி பெற்றாலும், நவக்கிரகங்களின் நன்மையுற்றாலும், ஹரியரபிரமாதிகளானபோதிலும் அவர்கள் உயிரை யழிக்காமல் விடார்கள். ஆகையால் நீ என்நிமித்தம் உன் இனத்தாருடன் மடியவேண்டாம்; காமபாசத்தினுற் கொழுத்து எமபாசத்தைக் கழுத்தில் மாட்டிக்கொள்ளக் கருதுவானேன். அப்பால் கண்ணீர் சொரிந்து கலங்குவானேன். எரியும் நெருப்பை யெடுத்து முடிவானேன்? கரிய விஷத்தைக் கண்டு குடிப்பானேன்? தன்பலமும் எதிரிபலமும் எண்ணமல்தவிக்கின்றனையே. அடா சண்டாளா! அப்பால் ஒதுங்கிப்போடாவென்று உரத்துக்கூவி எட்டி நடந்தாள்.

இவ்வாறு அட்டதிக்கும் ஜயஸ்தம்பநாட்டிய பட்டாபிஷேகப் பாண்டவர் தேவியானவள் ஏசக்கேட்ட கீசகன், திடுக்கிட்டுச் சோர்ந்து அவளையடுத்துப் பின்சென்று, கையால் தடுத்து முன்னின்று, ஆஹா! என்னுசைக்கனியே! உமக்குரிய காந்தருவரால் என்னுயிர் போயினும் போகட்டும். என் எண்ணங் கைகூடினாலுங் கூடட்டும். உமது கருணைப்பார்வை என்மேலிருக்கட்டும். நீர் வேண்டுமென்றுநினைத்தால் எம்மைக்காத்து உம்மையு மீட்டிக்கொள்ளலாம். அப்பால் உமது சித்தம் என் பாக்கியமென்று கீசகன் பேசினான். அக்காலையில் வடிவேற்கண்படைத்த வண்ணப்பெண்ணனவள் வாய்வறண்டு, கோபங்கொண்டு, இனியிந்தப் பாதகனுக்கெதிரில் நிற்கலாகாதென்று துதுளங்கனிவாயும், முத்துப்போன்ற பல்வரிசையுமுடைய சுதகூஷ்ணதேவிக்கு எதிரோடி, நடுங்கிய தேகமும ஓடுங்கிய உயிரும் நாணமும் மானமும் நாவரக்ஷியுங்கொண்டு, குருச்சந்திரயோகத்திற் பொழியு மழைபோல் கண்ணீர்விட்டுச் சித்திரப்பாவைபோல் அசைவற்றுத் திகைத்துத் தேம்பிநின்று கடுங்கோபக் கண்ணினையுடைய பட்டத்துயானைமேற்பவனிவரும் பார்த்திபன் பத்தினியாகியதாயே! நமதுபூந்தோட்டத்தில் புட்பம்பறித்துக்கொண்டு திரும்பிவரும்போது வீரகண்டைதரித்த உன்தம்பியானவன், சொல்லாதவார்த்தைகளைப் பலவாகச்சொல்லிப் பொல்லாத எண்ணங்கொண்டு துரத்தினான். உன்னிடத்தில் நானூழியஞ்செய்ய வரும்போது,

நான் கொண்டிருக்கும் விரதமும், காந்தருவ ரைவர் காவலும் என்னை யிச்சித்தவர்களிறப்பார்களென்றும், உனக்குறுதிசொல்லி யிருந்தேனே. இப்போது வீணுப் வாணுளழிய வழிதேடிக் கொண்ட உன் சகோதரனுக்குப் புத்திமதிகள் போதித்துச் சரச சல்லாப சுரதலீலைகளைச் செய்யும் தாசிகளை யழைத்துவந்து, அவன் தலைக்கேறிய காமத்தைத் தணித்துவையும். சத்தியந் தப்பாமற் புத்தியாயிருக்கச்செய்யும். உத்தமியாகிய நீ மூன்ஜாக் கிரதைப்படாமற்போனுல், என்ஜாக்கிரதையில் நான் மூந்தியிருப் பேன். அதனுலவனுயிர் சிந்திப்போய்விடும். இந்தச் சொல்லை உண்மையாக நம்பும். என்பேரிற் குற்றமில்லை; மூக்காலுஞ் சொன்னேன் சொன்னேனென்றுள்.

அந்தத் தையலுரைத்த சங்கதியைக் கேட்ட சுதர்க்கணை யானவள் கையைநெரித்து, வயிற்றைப் பிசைந்து, சந்திரபிம்ப முகமலர்ச்சி தளர்ந்து, கேகயபட்சிபோற் கொஞ்சிப் பேசுகின்ற சொல்லுங்குழறி, மயிலுக்கொப்பான சாயலுமாறி, அன்னம் போன்ற நடையுமசைந்து, கோடையிடியைக் கேட்ட பாம் பென்ன வொடுங்கி, வசலைக்கொடிபோல்வதங்கி வெதும்பி, வியர் த்து, வண்ணமாமகளை யணைத்துக் கண்ணீர் துடித்து அம்மா! வாரும் என்கிட்டவுட்காரும், அவன் கெட்டான் கொடியதுட் டன், உம்மைத்தொட்டானு? அதற்காக நீர்பயப்படவேண்டாம். அந்தமட்டும் பாவிகையி லகப்படாமல் தப்பி வந்துவிட்டதே நான் செய்த பாக்கியமென்று அருமைபாராட்டி, அந்த வழகிய சீமாட்டி பேசிக்கொண்டிருக்கும்போது, துரத்திக்கொண்டுவந்த காமாட்டியாகிய கீசகனுனவன் பணிப்பெண்ணுகிய அம்மாலினி யைப் பார்த்து சுதர்க்கணையைப் பணிந்து, அம்மா! உன்னிடத் திலிருக்கிற வண்ணப்பெண்ணுல் என்னுயிர்போவது திண்ணம். எனக்கு நேரிட்ட சோபத்தை நீக்கி, ஆபத்தைக்காத்து உமது கோபத்தை மாற்றவேண்டும். அன்னையே! நமது பூந்தோட்டத் தில் இவளைக் கண்டேன் மோகங்கொண்டேன். மாஞ்சோலைக் குயில்கூவ மன்மதன் கணைதாவ, அதனுல் மனம்வேக இந்தச் சீதேவி காலில் வீழ்ந்தேன். உடனே யென்னை ஆதரிக்காமல் சீச்சீ மூதேவி யென்று முகத்தாலடித்து விடவிடத்துபேசினுள். படபடத்தேசினுள். வீண யழியப்போகின்ற நான் இவளுடன் கூடி, இன்பம் அனுபவித்து இவளுக்குச் சொந்தமான கந்தரு வர் கையால் இறந்துபோனுலும் சுகிர்தமுண்டு. ஐயையோ! இவ

ளைச் சேராவிடில், எப்படியும் நான் எமலோகஞ் சேருவேன். நான் இறந்தால், உன் புருஷனுடைய இராஜாங்கமும் பறக்கும். பகைஞர் மேலிடுவார்கள். பார்த்தோருக்குக் கேலியாம். என்னுடன் பிறந்த உன் தாலிக்கு நித்தியகண்டஞ் சம்பவிக்கும். ஆகையால், நீ இவளுக்குத் தெரியப்படச்சொல்லி, என்னிடமிணங்கி வாழச்செய்வையாகில், மங்கிலியந் தீர்க்கமங்கிலியமாம். நல்ல செல்வங்களை யனுபவிக்கலாம். இந்த விராட ராஜனது அரசாக்ஷிக்குத் தாழ்ச்சியென்பது வராது. நான் இன்னுஞ் சின்னாளைக்கு இருக்கும்படியாகக் கிருபை செய்தருளும் சகோதரியே! என்று சுதர்க்கணையின் பாதத்தைத் தொழுதான்.

மிகுந்த வணக்கமாகப்பணிந்து வேண்டிக்கொண்ட கீசகன் முகத்தை நெருப்பெழப் பார்த்து, அவனுக் கிடங்கொடுக்காமல் அதட்டி, ஆமடாவென்றுகறுவி, அடாதோஷி! என்னபேச்சுச் சொன்னாய்? அடா பாவி! அரிஹரி யென்று இரண்டு காதையும் பொத்திக்கொண்டு மானம் பெரிதென்று மதித்தவருக்கு பிராணன் துரும்பென்று புத்திமான்கள் எண்ணுவார்கள். புத்தியீனர்கள் பிராணனைப் பொருளாகநினைத்து, மானங்கெட வயிறு வளர்த்து, அப்பிராணனைச் சிலநாளில் இழந்துவிட்டு, மண்ணுளவரைக்கு மிகுநரகிழிந்து, வெவ்வேறு யோனியிற் பிறந்து தாறுமாறுயலைந்து சங்கடப்படுவார்கள். ஐயோ துரோகி! இந்த சைரந்திரியானவள் என்னிடத்தில் வரும்பொழுது தனக்கு மானக்கேடு வராமல் பெற்ற தாய்போல் காப்பாற்ற வேண்டுமென்றும், தன்னை யாரேனுஞ் சிந்தித்து நிந்திப்பாராகில் தனக்கு நாயகராகிய கந்தருவரால் அனர்த்தம்விளையுமென்றும், தானொரு காரணத்தின் பொருட்டுச் சிலநாள் கழிக்கவேண்டுமென்றும், எனக்குத் தானடைக்கலமென்றும் சொன்னாள். நானும் அவ்வாறே வாக்குதத்தம்பண்ணி, விராடராஜன் முதலிய வேந்தர்களாலும் மற்ற மாந்தர்களாலும், பொல்லாங்கு வரவொட்டாமல் பெண்பழி பெண்தோஷம் பேசவொட்டாமல் என் கருப்பத்தில் வைத்துக் காப்பதுபோல் இதுவரையிலும் கண்ணுண்டாய்ப் பார்த்துவந்தேன். அடா துரோகி! நீ என் கட்டுக்காவலையு மழித்து, என் பெயரையுங் கெடுத்து, எங்களை நடுத்தெருவில் விடுத்து உனதுயிரை நமனுக்குக் கொடுத்து, விராடராஜனது செங்கோலையுங் கொடுங்கோலாக்கி, நிஷ்டூரத்தாற் கஷ்டப்படும் மார்க்கத்தை இலேசாகத் தேடிக்கொண்டாய்.

அடா தீவினையாளா! ஈதுனக்கு அழகல்லவே, அறிவல்லவே, என் சொல்லை நம்பிப் பேசாமற் போய்விடடா தம்பி! இந்தப் பெண்ணணங்குக்கு கண்ணுகி காந்தருவர்கள் கருடனுக்கும் காற்றுக்கும் மேலான வேகம் உள்ளவர்களாம். வருணனுக்கும் தேவேந்திரனுக்கும் மேற்பட்ட வல்லமையுள்ளவர்களாம். அக்கினியையும் சூரியனையும்பழிக்கும் காந்தியுடையவர்களாம். அவர்களுடைய கோபாவேசத்திற்கு மூன்றுலோகமுந் தாங்கமாட்டாவாம். இந்த விருத்தாந்தங்களை நான் முன்மே யறிந்திருக்கின்றேன். நீபிழைக்க மனதுள்ளவனுகில், இப்பெண்மேற்கொண்ட மோகத்தைக் கனவிலும் நினையாமல் மறந்துவிடு. மறவாவிடில், வீணே கெட்டழிந்து போவாய். ஆ பழிகாராவென்று சுதர்க்கணையானவள் சொன்னுள்.

அம்மொழியைக் கேட்ட கீசகன் விந்தையாகச் சிரித்துச் சிந்தைநொந் துருத்து என்தந்தைக் கொப்பாகிய தமக்கையரே! என் வல்லமை தெரிந்துந் தெரியாதவர்போற் பேசுகிறீர். அவ்வளவு பலவான்களாகிய காந்தருவர் பதினுயிரம்பேர் ஒன்முகத் திரண்டு வரினும் என்னே டெதிர்த்து என்னைப்பகைத்து வெல்வார்களோ? நானெருவருக்குப் பயந்தவனே? அவர்களைப் பஞ்சு போலடித்து எமலோகம் நோக்கிப் பறக்க விடுத்து இவளிதழைக் கடித்து இன்பரசங் குடித்து, என் னெண்ணமுடித்து உம்மெதிரில் நகைத்து உலாவி விளையாடப்போகின்ற என்னைத் துன்பப்பட்டிறப்பாயென்று நீர் சொல்லியது பேதை மதியோ? பெரியவளென்னப் பெயர் வைத்துக்கொண்டாயே? போபோவென்று நொடித்து, நல்லதம்மா! அதப்படியிருக்கட்டும்; நீர் பெண்ணுகப் பிறந்திருந்தும், எனக்குத் தமக்கையென்னப் பேர் பெற்றிருந்தும், மனைவாழ்க்கையில் நன்முய்ச் சிறந்தும், பெண்களுக்கு வேண்டிய பிரதான காரியங்கள் ஒன்முயினு முனக்குத் தெரியவில்லையே. உலகிலுள்ள பெண்களின் குணுதிசயத்தையும் அந்தரங்க இரகசியத்தையும் நீ யறியாமற் பேசினையே. ஸ்திரீகளின் சுபாவகுண மென்ன வென்னில், கைநிறைந்த பொன்னிலுங் கண்ணிறைந்த கணவனே வேண்டும் என்றெண்ணுவார்கள். அன்றியும், பெற்றவனுனலும், கூடப்பிறந்தவனுனலும், தான்பெற்ற பிள்ளையானுலும், சௌந்தரியமாயிருத்தால், முறை பாராட்டாமல் மோகங் கொள்வார்கள். அழகிலும் இனியமொழியிலும்பருவத்திலும் உருவத்திலும் சங்கீதசாஹித்

தியத்திலும் எல்லாராலும் மதிக்கத்தக்க நாயகன் வாய்த்திருந்தாலும், அம்மான் பிள்ளை அத்தைபிள்ளையாயிருந்தாலும், அப்படிப்பட்டவர்கள்மே லாசையை விட்டு அந்நிய புருஷர்கள் பேரிலிச்சைப்படுவது பெண்ணுருவாய்த் தோன்றிய பேதைமையோருக் கியற்கையென்று பெரியோர்கள் பேசியிருக்கின்றார்கள். எங்ஙனமெனின்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசியவிருத்தம்

தந்தையா யினும்விழைவிற் றன்னுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனும்
மைந்தரா யினுமிகவும் வனப்புடைய ரெனிலவர்மேன் மடநல் லார்தஞ்
சிந்தைநடந் திடுமதனுக் சாம்பன்மலர்க் கணைவேளிற் செவ்வி வாய்ந்தோன்
பைந்தொடியா ரினிதமரு முவளகத்திற் றவனிவருதன் பான்மை யன்றே.

நீதிநெறிவிளக்கம் வெண்பா

ஏந்தெழின் மிக்கா னிளையா னிசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேளெனினு மாதர்க்
கயலார்மே லாகு மனம்.

என்று இன்னும் பன்னூலுஞ் சொன்னவாற்றுன் ஸ்திரீகள் விவஸ்தையற்றவர்களென்றும், ஸ்திரீகளை நம்பப்படாதென்றுங் கூறியிருக்கின்றார்கள். ஆகையால் நீ இவளுக்குப் போதுமான புத்திமதியைப் போதித்து என்னைக்கலந்து இன்புறச் செய்வது உனக்குரிய கடமையென்று கெஞ்சினன்.

இவ்வாறு கெஞ்சிய கீசகனை சுதர்க்கணை நோக்கி பஞ்சமாபாதகா! கொஞ்சமும் நாணமில்லாமல் பக்கத்திலிருக்கும் பாங்கிப் பெண்களையும் பாராமல், என்னிடத்தில் இந்தப் பேச்சைப் பேசலாம் பேசப்படாதென்றும் யோசிக்காமல் துணிந்து பேசினையல்லவா? நீ யென்னகதி யடைவாயோ? எப்பாடு படுவாயோ? சைரந்திரிமேற்கொண்ட மோகாக்கினியில் தனக்குத்தானேவீழ்ந்திறக்கின்ற விட்டிற்பூச்சிபோலாவாயோ? நீயு முன்னைச்சார்ந்த பேரும் எவ்வாறுவீர்களோ? பசிக்குப் பனம்பழந்தின்னப் பார்க்காதே. துஷ்டகாரியங்களைத் தொடங்கிக் கெட்டுப்போவார்கள் கோடாகோடியுண்டு. அடாமட்டி! என்னுடன் பிறந்தவர்கள் நூற்றைந்துபேரென்னுங் கணக்கு இன்றைக்கொழிந்தது; குட்டாயிருந்த கட்டுத்தளர்ந்தது; காவலழிந்தது; போங்காலநேர்ந்தது; சாங்காலம்சேர்ந்தது. இப்போது உன்னையிழந்தவளாயினேன். இனியென் தலைவாசலை மிதிக்காதே. எனக்கெதிரில் நிற்

காதே. நீ செத்தாலும் நானுன்முகத்தில் விழியேன். ஆ! தப் பரைக்காரா! அப்பாற்போடா வென்று அதட்டினள். அப் பொழுது பாவபுண்ணிய மெண்ணிப்பாராத பாவியாகிய கீசகன் கோபமேலிட்டுக் கொதித்துச் சோபதாபத்துடன் தன் மாளி கைக்குப் போனன்.

போகும்போதே, சுரமும் குளிரும் சோம்பலும் தும்மலும் தேம்பலும் திகிலுமுடையவனுய் ஆஹா! பணிப்பெண்ணை பாதகி! என்னைக் கெடுத்தாயே. பாம்பின்வாய்ப்பட்ட தேரையாக் கினையே என்று பரிதாபமடைந்து மூச்சுத்திணறிப் பதைபதைத் தான். அந்தவேளையில் மன்மதன் பிரவேசித்து இது நல்ல தருணமென்று இடைக்கொள்ளைக் காரனைப்போல், பஞ்சபாணத் தையெடுத்துக் கொஞ்சமேனும் நெஞ்சிரக்கமின்றித் தொடுத் தான். அதனல் கீசகன் சிந்தையழிந்து, செயல் வேறுபட்டுத் தட்டுக்கெட்டுத்தடுமாறி மெத்தையின்மீது பொத்தென வீழ்ந்து, ஐயோவென்னும் அவச்சொல்மிகுந்து அரண்டுபுரண்டு அவஸ் தைப்படும்பொழுது, தாதிமார் கூடிச் சமித்தியோபசாரஞ் செய் தார்கள். எத்தனைவித வுபசாரம்பண்ணியும் அத்தனையும் அவ னுக்கு வெறுப்பாயிருந்ததால், ஐயோ! இந்த மலரணை வெதுப் புறுதே! வாசனைப்பன்னீர் கொதிக்குதே! சந்தனச்சேறு தணல் போல் தகிக்குதே! அடி சிரிக்கிகளா! நீங்களெல்லோரும் பெண் ணுகையால் ஒன்முய்ச் சேர்ந்துகொண்டு என்னைப் புண்ணுக் கவோ? அன்றி, மண்ணுக்கவோ? பாலநிலத்தின் நெருப்பை மெத்தையென்று பரப்பிவைத்தீர்கள். சிற்மூலவட்டம் பேரால வட்டம், பொன்னலவட்டம், பூவாலவட்டமென்று விதவித மாய்ச் சொல்லி வீசுகின்றீர்களே. இந்த ஆலவட்டக் காற்றும் சாளரத்திற் புகுந்து பெரும்புலிபோல் பாய்ந்துவருகிற தென்ற லும், வாசுகி முதலாகிய பாம்புகளின் விஷக்காற்றுபோல் என் னுடலையும் உயிரையும் வாட்டுகின்றதே. ஓசைப்பட் டொலிப் பது என்னகடலோ! அந்தக்கடலுக்கு என்மேலென்ன அடலோ இளஞ்சந்திரன் காய்கிறதே இதென்ன வடவைத்தீயின் வாதை யோ! கோடைக்காய்ச்சலின் சூரியவேதையோ! இந்த மாலைப் பொழுது வந்ததென்ன காளவிஷக் கறுப்போ! மஹாதேவன் நெற்றிக்கண்ணெருப்போ! இரவுமூடி எத்தனைகாலம் ஆயிற்று. பொழுது விடியாமலிருக்கும்படிப் பெண்கள் கூறிவிட்ட சாபம் போச்சோ! வண்ணப்பெண் முகச்சாயல் வந்து பாய்கின்றதோ!

மதிதானெழுந்து காய்கிறதோ! நித்திரைப்பிடியாதது சித்திரப் பிரமையோ! ஏகமாய் வருவது மோகவாசனையோ! அல்லது அவள் தேகவாசனையோ! நான்கொண்ட காமவேதனையோ! அவள் கடைக்கண் சோதனையோ! அம்மம்மா! அவள் குரலோ குயிற்போற் கூவி பேசுவது! அவள் மொழியோ கிளிபோலத் தூறிப்பேசுவது! என்னை மோகப்பேய்பிடித்துத் தலைசுற்றி யாட்டுகிறது. காமசோகபாசங் காலன் ஊருக்கோட்டுகிறது. அடி தோழிகளே! அங்கேபோவது ஆரடி? பஞ்சவர்ணக்கிளியோ? கொஞ்சும் பணிப்பெண்ணளியோ? அவ்விடத்திலசைந்து நடப் பது அன்னமோ? அவ்விடத்திலிசைந்த தலைவாசலைக் கடப்பது விரதசாரணியாகிய சொர்னமோ? என்று அன்றிரவு முழுதும் அவன் பட்டபாடு மற்றியார்படுவார்கள்? இவ்விதமாக விபரீதம் விளைந்த சமயத்தில், ஊழியப் பெண்கள் யாவருஞ் சேர்ந்து ஐயோ ஈதென்ன அநியாயமென்று பயந்து, சந்தனபாளித பூர குங்கும பங்கஜ பராகங்களைக் கலந்து அவன் தேகத்தில் தெளித்துத் தாமரைக்கொழுந்து முத்துச்சரம் வாழைக்குருத்து முதலிய சீதளவஸ்துக்களினுல் படுக்கைவிரித்துப் பக்குவம்பண் ணினார்கள். அத்தனையுமவனுக்கு ஒத்துக்கொள்ளாமல் மெத்த வருத்தப்பட்டு எரிகிறதே! மேனிபொரிகிறதே! கண்ணீர் சொரி கிறதே! கைகால் கரிகிறதே! கண்களிருளுகிறதே! கருத்துமருளு கிறதே! கட்டுவிட்டுப்போகுதே! நாவும்வுலர்ந்துதே! நாபி வரண் டுதே! செவியுமடைக்குதே! சிரசுமுடைக்குதே! என்று கதறிக் கொண்டிருக்கும்பொழுதே பேச்சடங்கிப் போயிற்று.

பக்கத்தில் இருந்த பத்தினிமார்களும் பாங்கியரும் பார்த்து ஆச்சுது ஆச்சுது பெருமூச்சு வாய்ச்சுது வாய்ச்சுது. பேச்சும் போச்சுதே, பிழைமோசம் ஆச்சுதேயென்று காச்சுமூச்செனக் கதறி இனிமேல் நாம் சும்மாவிருப்பது காரியமல்லவென்று பதறிப் பாவி படும்பாடு இவ்வண்ணமுடிந்ததே யென்று கண் ணீர்விட்டழுது, தெய்வத்தைத் தொழுது, இவன் நினைத்த நினைப்பு பழுது, இது சொற்பமாகத் தக்கதல்லவென்று பற் பலவாகப் பேசி, அப்பால் யாவரும் தங்கள்மேற் பழிசாராமல், எஜமானிக்கு அறிக்கையிட வேண்டுமென்று கால்பதறவோடி இராஜபத்தினியாகிய சுதர்க்கணையைப்பணிந்து, குலக்கொடியே! தேவீர் கோபித்துக்கொண்ட கடுமையினுல் கூசாமற் சென்ற கீசகராஜன் படுக்கையில் வீழ்ந்து, காமத்தீயாற் கருகி, மோகக்

காற்முல் மொத்துண்டு, பித்தலும் பிதற்றலும் உடையவனுய்ச் சிந்தைவாடித் தியங்கி வருந்தி தலையெடுக்கமாட்டாமல் தன்னை மறந்து அரட்டலும் புரட்டலுங்கொண்டு, அயர்ந்து போய் விட்டான். எங்களால் கூடிய வுபசாரமெல்லாஞ் செய்துபார்த் தோம். ஏதேதும் தேறுவதாய்க் காணேம், காமக்கடலிலழுந்திப் போனன். இனிதேறுவானென்று கனவிலும் நினைக்கவேண்டிய தில்லை. ஆனல் உடன்பிறப்பென்னுங் கருணை பெருகி அதனல் உமதுள்ளமுருகி ஜீவகாருண்யஞ் செய்ய இரங்குவீராகில், இன் னுஞ்சிலநாளைக்குக் கீசகராஜன் இருப்பானென்று ஒருவாறெண் ணலாம். அவனுயிர்பெறுவானுகில் விராடநகர்ப்புரிசையும் நமதுவாழ்க்கையும் வரிசையும் குறைவுபடாமற் கண்டுமகிழலாம். எங்களைப்போன்ற ஏழைக்குடும்பங்களுங்காலங்கழிக்கலாம். அங் ஙனஞ் செய்யாவிடில், கீசகனுக்கு நேரிட்ட கெடுதி வெளிப்பட் டவுடனே பகைவர் மேலிடுவார்கள். நானுவித விரோதங்களும் விளையும். அதனல் நமது மச்சநாட்டின் வட்டமும் பச்சைக் கொடி நாட்டிய பட்டமும்போம். அப்பால் உங்களையண்டிய நாங்கள் பிச்சையெடுத்துப் பிழைக்கநேரிடும். ஆ கொச்சை மொழிமானே! இனிமேல் வினைச்செயல் எப்படியோ அறியோம் தாயே என்று கையைநெறித்துக் கண்ணீர்விடுத்துச்.சுதர்க்கணை கால்மேற்படுத்துக் கதறிப்பதறியழுதார்கள். அப்படி கண்கலங் கிய பாங்கியரைப் பார்த்துச் சங்கதியென்னடி எனக் கேட்டாள்

அப்போது அவ்விடம் நின்ற தோழியர், அம்மா! பின்னை யொன்றுமில்லை. கருங்குவளைக்கண்ணுள் வண்ணப்பெண்ணுளா கிய நுண்ணிடையாளை வசப்படுத்தி எப்பாடுபட்டாகிலும் கீசக னிடத்தில் அனுப்புவீராகில், அவன்கொண்ட வெறியும் கடுங் காதற்குறியும் தனக்குத்தானே தணிந்துபோய்விடும். போன பிராணனும் மீளும். அவன் மனைவியர்களும் மங்கிலியத்தோ டிருப்பார்கள். இப்படிப்பட்ட ஆபத்து எப்பொழுதும் வந்த தில்லை. இப்போது அவனுக்குத் திடீரென நேரிட்ட இந்தத் தத்துக்குத் தப்பிப்பிழைக்கும்படி நீயே சாந்திசெய்யவேண்டும். ஏந்திழையே இந்தவேளை நீயிரங்காமற்போனல் இப்பவோ இன்னுஞ் சற்றுநேரத்திலேயோ பொழுதுவிடியுங் காலத்தி லேயோ கீசகனுயிர் நாசமடைந்துபோம். ஊழியராகிய எங்கள் மேல் தோஷஞ்சொல்லவேண்டாம். எங்களால் உபசரிக்க வேறு வழியுமில்லை என்பதாய் பாங்கியருரைத்த பசப்புவார்த்தையைச்

சுதர்க்கணை கேட்டுத் தோழிமாரே! ஆசைப்பட்ட பாவியாவது வேறுபெண்கள்மேல் ஆசைப்படலாகாதோ? ஐயோ மோசம் வந்ததே. காந்தருவர் காவலிலடங்கிய தெய்வப் பெண்ணை நானெப்படி வசப்படுத்தி யனுப்புவது? அப்படிச்செய்வது நன்மையல்லவே. ஒருவேளை யனுப்புவித்தால் மோகாந்தகனுகிய பாவி மேல்விழுந்து தொந்தரை செய்வானுகில், இந்நாடுநகரமும் குலமும் கோத்திரமும் குடியும் படையும் குன்றிப்போய் விடுமே. நானென்ன செய்வேன்? சகிமாரே! கெடுவழியிற் பிரவேசிக்கலாகாது. என்மனத்திற்குச் சஞ்சலமென்னுந் தணலை மூட்டினீர்களேயென்று, முகத்திலும் வயிற்றிலும் அறைந்து கொண்டு கலாபமயில்போ லசைந்து கலங்கினுள். அப்பொழுது வஞ்சகனுகிய கீசகனுடைய தாதிமார் இராஜவஞ்சியை நோக்கி, அம்மா! நீரேன் அஞ்சுகிறீர்? பெண்ணென்பதெல்லாமொன்றே. நாமெல்லாம் ஸ்திரீயினமேயன்றி வேறல்ல. மானமென்பது யாவருக்குமுண்டு. கீர்த்தி எவர்கட்குமுள்ளதே. இந்த விஷயத்தைக்குறித்து உமக்கும் உம்முடைய நாயகனுக்கும் பொல்லாங்கு நேரிடுமாகில் எங்களுக்குத் துன்பமுந் துயரமுமில்லாமற்போமோ? நீங்கள் நன்மையா யிருந்தாலல்லவோ எங்களுக்குச் சவுக்கியமுண்டு. நாங்கள் நீங்காமல் கீசகன் பக்கத்திலிருக்கும்போது வேறு வித்தியாசம் வினையுமென்று நினைக்கின்றீரா? அப்படி நினையாதீர். எங்களுயிரை விட்டாலும் விடுவோமேயொழிய அபகீர்த்திக்காளாகமாட்டோம். அவனுடைய அக்கிரமத்திற் கிடங்கொடுக்கமாட்டோம். எங்கள் பேச்சை நீர் சத்தியமாய் நம்பும். நாங்கள் செய்யப்போகிற தந்திரத்தைக் கேளும். இந்த விரத சாரணியை யழைத்துப்போய், அவன் முன்னே நிறுத்தி, இவளைச்சுற்றிலும் நாங்கள் நின்றுகொண்டு, இதோ வந்தாள் வண்ணமாதென்போம். இச்சொல் அவன்செவியில் விழுந்தவுடனே மோகினியைக் கண்ட முனிபோலெழுந்து, இவளுடைய கால் மேற்பணிந்து, கண்ணேபெண்ணேயென்றுபுலம்பிக்கதறுவான். காமவேஷ்டையால்பதறுவான். அண்டையிலிருக்கின்ற நாங்கள் அவனைத் தடுத்து, ஐயா! உம்முடம்பு கசங்கி அசங்கியப்பட்டிருப்பதனுல் ஸ்நானஞ்செய்து, சந்தனம் புனுகு சவ்வாது பனிநீர் சாந்து கதம்பக்கலவையுந் திமிர்ந்து போஜனமுண்டு தாம்பூலந்தரித்து, ஆபரணவலங்காரத்துடன் பழவர்க்கங்களும் பட்டுப்பட்டாவளியும் புட்பச்செண்டுங் கொண்டு, இந்தப்பெண்

ணுக்குக் கொடுத்து, உல்லாசப்படுத்திச் சல்லாபமாய்ப் பேசு மென்று அந்த வல்லாளன் புத்தியை மாற்றி பூமிமேலேற்றி தேற்றி உடனே இந்தச் சைரந்திரியை உம்மிடத்திற் கனுப்பி விடுகிறேரும். அம்மா பெருநெருப்பை ஈமொய்க்குமா? இரும் பைச் செல்லெரிக்குமா? எவ்வளவும் வித்தியாசமெண்ணுதீரென் றூர்கள்.

இவ்விடத்தில் ஸ்திரமாய்ப் பேசிய சேடியரைச் சுதர்க்கணை பார்த்து ஆமடி பெண்களே! நீங்கள் சொல்வது பக்குவந்தான். இவ்வாறு நடந்தால் எவருக்குந் தோஷமில்லை. அவனுயிருக் கும் நாசமில்லை. ஒருவேளை கரைபுரண்டவெள்ளம்அணைகடந்து போனுலெப்படி? நீங்கள்தா னென்ன செய்வீர்கள்? நான் பாவி யாய்ப் பழிகாரியாய்விடுவேன். அன்றியும், கட்குடியன்-காமுகன்-பொய்யன்- பொருமைக்காரன் - புறங்கூறுபவன் -கள்ளன்-ஊரா ருடைமைக் குலைவைத்திருப்பவன் - வறியன் - மூடன் முதலிய இவர்களுக்குச் சத்தியம் - சவுசம் - ஆசாரம் - சாந்தம் - தன்மை உண்மை ஆணையாக்கினை யொன்றுமிராதே. இப்படிப்பட்ட மூடர்கள் சற்றும் யோசிக்கமாட்டார்களே. மோகக் காற்றும் காமத்தீயும் மூடுகிவரும்பொழுது,கைக்கொண்டுமறிக்கப்போமோ கட்டுப்படுமோ? சொல்லுங்கள் காரிகைகளே யென்று தருமந் தவறுத சுதர்க்கணையானவள் சொல்லும்போது, அந்தக் கீசக னிடத்திலிருந்த வேறு தாதியரோடிவந்து எப்படி என் செய் வோம்? மைப்படிந்த கண்ணுளான மதனரதியே! உன்பேரி லாணைப்படிக்குக் கீசகன் முடியப்போகிறுன். காலங் கிட்டிவிட் டது, ஜாலம்பண்ணுமல் இந்தச் சைரந்தியை யனுப்புமம்மா ஆபத்திற்குப் பாவமில்லை, இத்தருணத்தில் நீரவனைக் காக்க வேண்டும். இந்தம்மாள்பேரில் அவன்கைபட வொட்டாமல் செய்து, இவள் பதிவிரதா தர்மத்தைக் காப்பாற்றி உங்கள் சத்தி யத்தையுங் கீர்த்தியையுந் தழைக்கப் பார்க்கிறேரும். கிருபை புரியு மென்று பல்லைக்காட்டி கெஞ்சினர்கள். அத்தாதியர்பட்ட பரி தாபத்தைப் பார்த்த சுதர்க்கணையானவள் காலகதியாற் கருத்து மயங்கி, ஊழ்வினைவசத்தா லுணர்வு மழிந்து அந்தோ! அடா பாபி கீசகா! பாசகாரிகளாகிய ஐம்புலாதிகளின் சேட்டையறிந்து கேட்டை யொழித்து, தேறித்தெளிந்த பாக்கியவான்களின் வாக் கியங்களைக் கற்றும், யோக்கியமாகக்கேட்டும் இன்னுந் தெளியா மற்போனையே; மன்மதவேதமார்க்க மகிமையும் பார்த்திலையே,

கேடு வரும்போது மதிகெட்டு வருமென்பதுபோல், நாசம்வரும் போது ஞானமும் உண்மையுங் கெட்டு நன்மையும் விட்டுப் போமோ? மழைக்கா லிருட்டானலும், கொம்புதவறிக் குரங்கு பாயுமா? புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா? சிங்கஞ் சிறுத் தாலும் பங்கப்படுமா? யானை மாமிசமின்றி வேருகாரந் தின் டுமோ என்றழுது 'தானடாவிட்டாலும் சதையாடும்' என்னும் பழமொழிக்கிணங்கசகோதரபாசத்தால் வியாகூலப்பட்டு நெஞ்சு புண்ணுப்க் கொட்டிய பஞ்சுபோற் படிந்து, கண்மாரி சொரிந்து தன்னருகில்வந்த பணிப்பெண் காலில் வணங்கித் திருந்திய குலத்திற்பிறந்து அருந்ததியிலுஞ் சிறந்ததேவி நீர் கண்ணருள் செய்வீராகில், எங்கள் செங்கோலும் வாழ்வும் நீதியும் நெறியும் சிருஞ்சிறப்புங் குறைவுபடாது. தேவரீர் கிருபைசெய்யாவிட் டால், எங்களரசுரிமை யாவும் அழிந்துபோய்விடும். எங்கள் தலைமேலிடி விழுவதற்கு உமது வாய்மொழியைப் பார்த்துக் கொண்டிருக்கிறது, நீர் ஆமென்றெருப்புக்கொண்டால் நாங்கள் பிழைப்பதற் கிடமுண்டாம். நீர் ஒத்துக்கொள்ளாவிடில் நாங்க ளடியோடழிந்து போகும்படியாய்நேரிடும். நான் பேசப்போகிற வசனத்தைப் பொறுமையுடன் கேட்டருளும் பூரணசெல்வியே என விராடராஜன் பத்தினி சொல்லத்துணிந்தாள்.

என்னுயிருக்கொரு துணையே! எனக்குத் தம்பியென்று பிற ந்த வம்பன் அறிவில்லாச் சிறுவனுகையால், மனவுறுதியில்லா மல் மதனவெறி யேறிப்போனனும். மதிமயங்கிப் பிணமானனும். இதுவரையில் உயிரிருக்கிறதோ இல்லையோ வென்று தாதிய ரோடிவந்து சேதிசொன்னர்கள். மூவாசையொழிந்த முதியோர் களையும் பெண்ணைசைவிடாது. பிரபஞ்சமாயை யென்பது இது தான். நான் மகா பாவியானேன். நீரென்பேரிற் கோபியாதிரும். உமது விரதங் குறையாமல் தாதியர் மெத்தப் பிரயாசைப்படுவோ மென்று எனக்குச் சத்திய வசனஞ் சொன்னர்கள். அப்படிச் சொன்னபோதிலும், படாடம்பனை கீசகன் அடாத காரியமாக உம்மைநாடி யாசைப்பட்டது அநியாயம். ஆகிலும் உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். ஆபத்துக்காலத்திற் கிரங்கி, அடி யாள் முகத்தைப் பார்த்து என் மனைசஞ்சலத்தையும் அவன் படுகிற துன்பத்தையும் போக்கும் வகையை நீர் யோசிக்கவேண் டும். உமது கற்புக்கும் பழுதுவராமல், என்னையும் புனிதவதி யாக்கி, அவனும் பிழைக்கும்படி கிருபை செய்தருளும். நீரிவ்

வளவு ஜீவகாருண்யம் வைத்து எங்களையிரட்சிப்பீராகில் உமது குலமும் கோத்திரமும் குணமும் நீர் கொண்டிருக்கின்ற நோன்பும் குறைவுறுமல் மேன்மேலும் விருத்தியாகும். உலகுள்ளமட்டும் உமது மகத்துவம் நிலைநிற்கும். எங்கள் நூற்றைந்துபேரையும் பெற்று வளர்த்த தாயென்று நாங்கள் கொண்டாடுவதுமன்றி, உலகத்தாரும் புகழ்ந்துமகிழ்ந்து வாழ்த்துவர். தினமுந் திருவிளக் கேற்றிவைத்து, எங்கள் குலதெய்வமென்று உம்மைக் கும்பிடுவேன். தீனரக்ஷகி! உன் பத்தினித் தவத்திற்குப் பங்கம் வரும்படியாகப் பார்க்கமாட்டேன். நானும்மை நம்பினேன் எனக்கொருவரும் துணையில்லை என்று சொல்லிக் கதியற்ற அடியாளுக்கு உமதிரண்டு பாதமே கதியென்று பணிந்து, அவள் காலைப் பிடித்துக்கொண்டு துணிந்து, நானொரு யுக்தி நினைத்திருக்கிறேன். அது உமது சித்தத்திற் கெப்படியிருக்குமோ தெரிகிலேன். சிறியாளாகிய என்மொழியைச் சிந்தையிற்கொண்டருளவேண்டுஞ் செல்வியே! நாசகாலவழியை நாடி மோசம் போய்க்கிடக்கின்ற கீசகனிடத்திற்கு நீர்போய், வாசப்பூமாலையுந் தேனும் உன் தமக்கை வரிசையனுப்பினாளென்று கொடுத்து வருவீராகில், என்னிஷ்டம் உம்மைவிட்டெப்பொழுது மகலாதென்று அதிக வருத்தத்தோடுரைத்தும், இந்த உத்தமியையனுப்பவதற்குச் சற்றுமனமில்லாதவளாய்க் கவலைகொண்டிருந்தாள்.

இத்தன்மையாகச் சொல்லிய விராடன் மனைவியைநோக்கிக் கற்புக்கணியாகிய பாஞ்சாலியானவள், என்னை யாதரிக்கத் துணிந்த அன்னையே! உம்முடைய தம்பியாகிய கீசகன் அற்ப விஷயத்திற் காசைப்பட்டுப் பூந்தோட்டத்திலிருந்து என்னைத் துரத்திவந்தபோது, நீர் கடுமையாகப் பேசியவார்த்தையால் கொல்லத்தக்க பகைகொண்டுபோனான். அவனுடைய கருத்து உமக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும், அந்த இடத்திற்குப் போவென் றெவ்வாறு சொல்லுகிறீர்? அவனிடத்திற்கு என்னையனுப்ப நினைப்பது உமது மேலான புத்திக்கழகல்லவே. நானும்மிடத்தில் வந்தடுத்தபோது, என்பேரிலொருவர் காதல்கொள்ளப்படாதென்றும், கொண்டால் உடனே உயிரிழக்க வேண்டுமென்றும் முன்னமே சொன்னேனே. அப்படியே குறைவுவராமற்காக்கிறேனென்று வாக்களித்து அதுமுதலிதுவரையிலுந் தளர்ச்சியின்றிக் காத்து இப்போதந்தச் சண்டாளனிடத்திற் கனுப்புவதற்கு

எப்படியுமது மனமொப்பியதோ அறியேன். அப்படியேயாகட்டு மென்று உமதுவார்த்தையைத் தள்ளாமற் போவேனுகில், அந்த வண்டன் என்னைக் கண்டவுடனே காதல்மீறிக் காமமேறிக் கைகலக்கத் துணிவானே. அப்போது நான் கண் கலக்கப்படு வேனே. அப்பால் (மறந்துசெத்தேன் பிராணனேவாவென்ரூல் வாராதே) ஆதலினுல், அவனிடத்திற் கென்னை யனுப்புவதை நிறுத்தி, வேறெந்த வேலைக்கனுப்பினுலும், உமது சொல்லுக் குத் தடைசொல்லேன். இந்தவேளையி லென்னை விலக்கிவிடும். என்னைப்போல் இன்னும் அநேக தாதியரிருக்கிறார்கள். அந்தச் சௌந்தரியவதிகளிற் சிலரை யனுப்புவது உத்தமமாயிருக்கும். என்மர்மத்தை உமக்குச்சொன்னேன்.

அப்பா லுமதிஷ்டமென்று சைரந்திரி சொல்ல, அதற் குச் சுதர்க்கணை சொல்லுகின்ரூள்: ஓ விதரணைசாலி! உம் மைக்கண்டு ஆசைப்பட்டு உயிரொழியும்படியா யுறக்கங்கொண்டு படாதபாடுபடுகிற பதிதனுக்கு மற்ரொரு பெண்ணைக் கண்டுபேச இச்சை யுண்டாமோ? அப்படி யல்லவென் றனுப்பினுலும், உம் மேற்கொண்ட மோகம் மற்ரொரு பெண்ணுல் மாறுமோ? உமது உருவங்கண்டாலும், உமது இன்சொற் கேட்டாலும், இறக்க வழிபார்க்குங்கீசகன் எழுந்திருப்பானென்றுசொல்லுகிறார்களே, என்னிஷ்டமே! நீர் பட்ட கஷ்டத்தோடு சென்று திரும்புவதே என் பாக்கியம். நீடூழி வாழ்வீர். நீர் போய்வந்து எங்களை நிலை பெறச் செய்வீரென்று போற்றினுள்.

இவ்விதமாகவணங்கிப்போகத்தகாத காரியத்திற்குப்போகச் சொல்லிய சுதர்க்கணையைப் பேரறிவாலும் பிசகா மொழியாலும் பெருமையாலு முயர்ந்த பாஞ்சாலி பார்த்து மேதினி போற்று மாதரசே! கொடியபாதகனிமித்தமாகக் குரூரவார்த்தையைக்கூசா மற்சொன்னபடியால், உமதுசொல்லைத்தள்ளக்கூடாத தாகூஷ் ணியத்தின் பொருட்டு போகின்றேன். பின்னுல் என்ன கெடுதி விளையுமோ? அன்னமே! சொன்னேன்என்னைவெறுக்காதேயும். இதுவரையும் தழைத்து விளங்கிய சுற்றத்தாருக்கும் மற்றை யோருக்கும் மெத்த வருத்தமேலிடும்போலிருக்கின்றது, 'விநாச காலே விபரீதபுத்தி' என்பதை யோசிக்காமல் காலானுகூலத்திற் குத் தகுதியாய் நீருமிப்படி கட்டளையிட்டீர். அப்படியே நான் போய் வருகிறேனென்று சொல்லி வினயின் பயனே பயனென் றெழுந்து, மூத்துப்போல் கண்ணீரை மூகஞ்சோரவிட்டு, வாசப்

பூமாலையுந் தேனுங் கைக்கொண்டு, அந்தப்புரவாசலுக்கு வெளியேவந்துநின்று தேவேந்திரன், வாயுதேவன், எமதருமராஜன் அஸ்வனி தேவர்கள் இவ்வைவரையுந் தியானித்து, நாசகாலக் கீசகன் வாசஸ்தலத்தை நாடிச்சென்றுள்.

ஓ வைசம்பாயனராகிய சுவாமிகளே! திரௌபதையாகிய விரதசாரணியென்ன வேஷங்கொண்டு, சுதர்க்கணையிடத்துக்கு வந்தபொழுது, காந்தருவரைவர் தனக்குக் கணவரென்றும், மற்றவர் தன்னைத் தீண்டப்படாதென்றும், கண்ணைறிட்டுப் பார்த்தவர்கள் வெண்ணீரூப் போவார்களென்றும் ஒருதரத்திற்குப் பத்துதரமாகச் சொன்னதாகத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளினீர். அப்படியிருக்க, ஆஜானுபாகுவாகிய மச்சராஜன் மனைவி நீதிநெறிகெட்ட கீசகனிடத்திற்கு இந்தம்மானை யனுப்பியவிதமென்னமோ? அந்த சுதக்ஷணதேவியை மெத்தவும் புத்திசாலியென்று கற்றவராகிய நீர் புகழ்ந்து பேசிவந்தீரே, அவள் புத்திசாலித்தனம் எத்தன்மையாய்ப்போயிற்று? என்றுஜனமேஜயன் வினவினன்.

அதற்கு வைசம்பாயனர் கேளும் சந்திரகுலத்தோன்றலே! ஜன்மாந்திர வினைவசத்தால் வந்த அனுபவத்தை யாருமனுபவித்தே யொழிக்கவேண்டுமன்றி, அனுபவியாமல் வெல்லவல்லவர்களியாருமில்லை. இன்னும் வீமன்கையால் கீசகன் முடியவேண்டிய காரணமிருப்பதனால், பாஞ்சாலியைப்பார்த்து அவனுசைப்படவும், இவள் அவனிடத்திற்கு அனுப்பவும் சமயத்திற்குத் தக்கபடி தாதியர் சொல்லவும் நேரிட்டது. ஆதலால் மேல் நடந்த விர்த்தாந்தத்தைக் கேளுமென்றுவிளம்பலுற்றார்.

இப்பால் புட்பமாலையுந் தேனுங்கொண்டு சென்ற திரௌபதாதேவியம்மன் முந்தி நினைத்துவந்த ஐந்து தேவருடன், சூரியன், குபேரன், வருணன், உருத்திரன், உருத்திரை, மகாவிஷ்ணு, மகாலட்சுமி, சண்முகன், பிரமன், சரஸ்வதி, இந்தியாதி தேவர்களையுந் தனக்கு வழித்துணையாக வரும்படி வருத்தித் துதித்துச் சத்துருசங்காரஞ்செய்யும்படிவந்தித்து வேடன் வீசிய வலைக்குள் அகப்படப்போகிற மான்போல் கண்களிரண்டுமிரண்டு வெருண்டு, நான்குபுறமுந் தேங்கிப்பார்த்து இருட்டிலுண்டாகிய பயத்தினாலும் நாணத்தினாலும் விதிர்விதிர்த்து, மெய்சிலிர்த்து, இராஜவீதியாகப்போய், அந்தக்கீசகனரண்மனையிற்புகுந்து, மெய்மறந்து, தூக்கமும் ஊக்கமும் விட்டு, அன்ன

பானுதி கசந்து, அவஸ்தையா லுள்ளுடைந்து விரதசாரணி யைப்போல் தனக்கெதிரில் உருவெளித் தோற்றங்கண்டு வாய் பிதற்றிக்கொண்டு நாவறண்டு, புரண்டுருண்டு கிடக்கின்ற பேய னைக் கண்டாள்.

அப்பொழுது மோகத்தாற் சிதைந்து, மோகவலையிற் புதை ந்துகிடக்கின்ற கீசகன் எப்படி யிருக்கின்றனென்றுல், தனக்கு அகால மிருத்துவாகப் பூங்காவில் நேரிட்ட மங்கையை நினைத் துப் புன்சிரிப்பாக நகைத்து, இதோ என்பேரில் பாசங் கொண்ட ஆசைப்பெண் வந்தாள். என்னுத்மாவை இரட்சிக் கும் அமுதசஞ்சீவி வந்தாள். ஜீவகாருணி வந்தாள். தேக போஷகி வந்தாள். ஜீமுதமான அஞ்ஞானகேவலத்தைப்போக் கும் ஞானசொரூபிவந்தாள். சித்தசன் தொடுங்கணையை வெற்றி கொள்ள வந்தாள். ஆசைக்கடலுளழுந்திய நான் ஆதரவாகப் பற்றி நீந்திக்கரைசேருவதற்கு அமுதகொங்கைக் குடங்கொண்டு வந்தாள். என்னை யடிமை கொண்டாளும் மங்கை வந்தாள். திருநிதிப் பொக்கிஷச் செல்வி வந்தாள். பட்டாபிஷேகத்தேவி வந்தாள். என் சீமாட்டி வந்தாள். என் கண்ணுட்டிவந்தா ளென்று சரச சந்தோஷச் சைகைகாட்டித் தலையாட்டி இன் றைக்கு நல்லகாலம். என்னுடைய சிறுகுடலில் நல்லவர்கள் திருவடி பெயர்த்தருளப்பெற்றேன். ஆ!சைரந்திரியாகியதனமே! தேவரீர் செங்கமலப் பாதஞ்சிவக்க நடந்ததோ? அடி சேடிமார் களே! ஓடி வாருங்கள்!! நான்பிறந்த பிறப்பு இன்றுதான் பயன் பட்டது. இதோ என்னெண்ணப்பெண் வந்தாள். இவள் வந் தெந்நேரமாகிறது? ஒதுங்கி நிற்கவேண்டிய காரணமென்ன? உபசாரஞ் செய்து உள்ளே யழையுங்கள். வாசங்கலந்த பனிநீர் கொண்டுவாருங்கள். ஸ்நானம் பண்ணிவையுங்கள். பத்தரை மாற்றுப் பசும்பொன்னினுற் சித்திரித்த உத்தரியப்பட்டு உடுத் துங்கள். இந்திரவன்னப்பட்டு, மேகவன்னப்பட்டு, வெண்பட்டு, செம்பட்டு, இவைகளா லமைத்திருக்கிற பாவாடை ரவிக்கை யைக் கும்பிட்டுக்கொடுங்கள். முத்துமாலை, மோகனமாலை, ஆணிப் பொன்மாலை, அலர்ந்த பூமாலை, மாணிக்கமாலை, வச்சிரமாலை, மரகதமாலை, இம்மாலைகளா லலங்கரியுங்கள். புனுகு, ஜவ்வாது, கதம்ப கஸ்தூரி, பனிநீர், அத்தர், சந்தனுதிகளைப் பூசுங்கள். மதுமாமிச பக்ஷண கச்சாயங்களும் கனிவர்க்கங்களும் இச்சை யானமட்டுந்தின்னக் கொடுங்கள். வழிநடந்துவந்த இளைப்பை

ஆற்றுங்கள். ஓகோ! விரதசாரணியென்னு மின்னே! என்பேரி லன்பு வருவதற்கு இத்தனைகாலஞ் சென்றதோ? வாரும், என் மஞ்சத்திலுட்காரும். வாடிப்போன என் முகத்தைப் பாரும். உம்மை நாடிவந்த என் மோகத்தைத் தீரும். இதனலுமக்கதிக புண்ணியஞ் சேரும். இன்பரசமே! இனியசுகமே! எனப்புலம்பி மூடிய கண்ணை விழித்துப்பாராமல், முறண்டுக்கொண்டிருக்கிற மூர்க்கனைப் பேசிக் கலங்குகிற லோபியானவன் எதிரிற் கண்டால் என்ன செய்வானேவென்று மனங்கலங்கிப் பெருமூச்செறிந்து இந்தப் பாதிராத்திரியி லிவனைப் பார்ப்பதைப் பார்க்கிலும், பொழுதுவிடிந்த பின்பு காணலாமென்று அழகிய பூஞ்சோலை நெருங்கிய தடத்திற் புகுந்தாள். அந்தவேளையில், ஒருகாலுள்ள தேரைக்கூட்டி மின்னற்கொடிநாட்டிப் பரிமாவேழம்பூட்டி இரு காலில்லாச் சாரதியோட்டி உதயகிரியி னுச்சியினீட்டிக் கதிர்க் கிரணங்களைக் காட்டி முக்காலும் அருக்கியமேற்குஞ் சூரியனை எக்காலுங் கொண்டுவருவதுபோல் வாராமல், அக்காலபி லவ சரத்துடன் கிழக்குத்திசையில் அருணன் கொண்டுவந்தான்.

முருக்கம்பூபோன்ற சூரியோதயம் கண்டவுடனே செருக்கி யெழுந்த சேவலும் பட்சிகளும் தறுதலைக் கீசகன் பிதற்றிய சங் கதிகளைச் சகிக்கமாட்டாமல் சங்கடப்பட்டு பரதவித்துத் தியங் கித் திட்டுவதுபோல், இறகுகளினுல் வயிற்றிலடித்துக்கொண்டு கூவிப்பறந்தன. தடாகமென்னும் பெண்ணனவள் துரௌபதா தேவியின் சஞ்சலத்தைப் பார்க்கமாட்டாமல், கண்ணீர் பெருக் கிக் கண்களைச் சுருக்கிக் கையை விரிப்பதுபோல், கருங்குவளை முதலிய புட்பங்கள் குவிந்து தாமரை மலர்கள் தேன் சொரிந்து விரிந்தன. மகாபாவியாகிய கீசகனை யிகழ்ந்து பாடுவதுபோல் வண்டு ஓலமிட்டது. இத்தன்மையாகிய காலத்தில் தேங்கு, மா, கோங்கு, பலா, கமுகு முதலிய மரங்களோங்கும் வனஞ் சூழ்ந்த ஒரு பொய்கையினிடத்தில் பாஞ்சாலி சேர்ந்து, கைகால் முகங் கழுவிக்கொண்டு நித்தியவிதி நிறைவேற்றிச் சூரியனுக்கு அருக் கியமிட்டு இருகரத்தையுங் கூப்பி நமஸ்காரமந்திரஞ் செப்பி வணங்கினுள்.

எங்ஙனமெனில், உலகெலாம் விளங்குமொரு பெருஞ் சோதி! சர்வசாட்சி! தனிப்பரம்பொருளே! பாவமும் - புண்ணி யமும்-பரிக்கும் பரிதியே! புத்தியுஞ் சித்தியும் பொருந்து மாத வனே! சத்துருஜயந்தரு மித்திர வெயிலோய்! உத்தமும் சுத்த

மும் வீடும் வித்தகக் கல்வியும் மேம்படு செல்வமும் பத்திசெய் வோர்கட் கித்தனேபேரும் பாலித்தருளும் பாபரகிதனே! எந் தையே போற்றி! இரவியே போற்றி! சுந்தரச் செங்கதிர்ச்சுடரே போற்றி! ஆயிரகிரணத் தலரியே போற்றி! இருவலி யொழிக்கும் இன்னே போற்றி! தினகர வெய்யோன் தினமணி போற்றி! பங்கயபதங்கப் பரிதியே போற்றி! பனிப்பகையானும் பக லோய் போற்றி! மித்திர விருச்சிக விண்மணி போற்றி! சித்திர பானு திவாகர போற்றி! அண்டயோனி அரியமாபோற்றி! சுதக்ஷிணை தேவியின் சொற்பிசகாமல், கீசகன் தன்பாற்கிட்டு மேழைக்குத் துன்பங்கெடுதி துயரமெய்தால், இன்பங் கொடுத் தாளென் றுழொளியே! உன்னைத் தொழுதோற் குறுணிகளில் லாமல், இந்நகர் மன்னற் கிடர்விளையாமல், விராடன் றேவி விசனமுறுமல், என் குலதெய்வமா யென்றுமிருந்து, தன்மங் காத்தருள் சத்தியமணியே! சரணஞ் சரணம். சவிதா சரணம். சான்றோய் சரணம். தரணி சரணம். தருணந் தருணமென்று பிரதக்ஷிணதண்டம் சமர்ப்பித்துப் பூமியைத்தொட்டு நெற்றியிற் பொட்டிட்டு சலம் புரோக்ஷித்து சங்கற்பஞ்சொல்லித் தற்சனி வைத்துச் சற்றுநேரமிருந்து, தடாகத்திலிறங்கி ஆசமன்ய முடித்துக்கொண்டு, கரையேறிக் காமவிகாரத்தாற் கன்றிவருந் திய கீசகனிருந்த கெடுமனைகிட்டி, நமனை யெதிர்த்த உயிர்போல் மெலிந்து, ஐயா! உம்முடைய தமக்கையார் தந்த பூவுந் தேனும் இத்தாருமென்று கொடுத்து அவன் மாறுத்தரஞ் சொல்லுமள வும் வேறோர்புறத்தில் ஒதுங்கியிருந்தாள்.

அப்போது,கீசகன் ஆருதமோகநெருப்பால் நீரூய்வெந்து வெதும்பித் தலைவிசிறி நிலைதவறி மதிபதறி விதிகுறுகி மேனி கருகி, மெலிந்து ஊனுமுருகி யுலர்ந்து, செந்தாமரைக் கொழுந் தும் இளவாழைக் குறுத்துக்களும், யானைதந்தப் பலகையும், அளிச்சந் தளிரும், அலந்த மலரும், அணையாகப் பரப்பி, அதன்மேற் படுத்திருந்தான். அதெப்படி யிருந்ததென்னில், கட்டையுடன் முட்டை கலந்தடுக்கி அதன்மேற் சுட்டெரிக்க நீட்டிவைத்த பிணம்போற் றுலங்கினன். இதன்றியும், சந்தன, பாளித, குங்கும பன்னீரைத் தெளிக்கின்றார்கள். அதெவ்வாறு அழிந்ததென்னில், சமயதீக்ஷை விடுவித்துக் கலசச் சலமிறைக் குங் காக்ஷிபோலிருந்தது. மேலும் அவனைச்சுற்றிலும் வாசனை வத்திகளைத் தாதிப்பெண்கள் வைக்கிறார்கள். அதெவ்வண்ணம்

இருந்ததெனில், கருமக்கிரியை செய்வதற்குப் புத்திரனில்லாதவர்கள் பெண்கள் கையில் தருப்பை யளித்துக் கொள்ளிநாட்டுங் கொள்ளைபோலிருந்தது. இவ்வாறு செய்த சயித்யோபசாரத்திலும் தணியாமல், ஐயையோவென ஓங்கி யிரைந்து எங்கிய கீசகனுக்குப் பாங்கிலிருந்த பாங்கியர்பலரும் ஆலவட்டம், தாலவட்டம், மயில்விசிறி, குயில்விசிறி, குருவேர் விசிறி, சிறுவேர் விசிறி, பட்டுவிசிறி, வெட்டிவேர்விசிறி, தந்தவிசிறி, சந்தன விசிறி, இவைகளாலுபசரித்து அவர்கள்வீசிய விசிறிகாற்றினுல் கூசி மெய்குலைந்து தோழிகளே! ஈதென்ன ஊழித்தீக்காற்றே? ஆழித்தீக்காற்றே? என்னுயிரை கொள்ளையாடவந்த கூற்றே? ஆஹா! என்னன்மா அயருகிறதேயென்று அவச்சத்தமிட்டான். அப்பொழுதே அவ்விடமிருந்த பெண்கள் ஆத்திரப்பட்டுப் பூவாரம், பொன்னரம், புனுகாரம், சந்தனரம், சந்திராரம், மோகனரம், முத்தாரங்கொண் டுத்தாரஞ்செய்தார்கள். அவைகள் அவன் சரீரத்திற் பட்டவுடனே பளபளவென்று பொரிந்து நீறு நெருப்புமாய் வெந்துபோவதனுல் தளதளவென்று தக்காலிப்பழம்போற் கொப்புள மெழும்பக் குப்புறப் படுத்தான்.

இதன்றியும், காமநோய் கலந்த கலக்கத்தால் சந்திரனைத் தூஷித்துச் சமுத்திர கோஷத்தைக் கோபித்துத் தென்றலைச் சியென்றேசி, வரிச்சிறைக்குயிலை யிருபிறப்பென்றும் பேசிக் கிள்ளைமொழியைக் கடிந்து, கடகடவென்று புரண்டு, விடை கொடுக்காமல், உடை யுடுக்காமல் உணவெடுக்காமல் கன்னியை விரும்பித் தன்னியனுப் வெதும்பி நான்கு புறமும் நன்முய்ப் பார்த்து, மெத்தைமேல்வீழ்ந்து தத்தளிக்கும் பாதகனுக்கு ஜன்மாந்திரத்திற் செய்ததவங் கைகூடியதுபோல், தாழ்ச்சியில்லாத வண்ணமடந்தை காட்சியாய் முன்னிற்கக் கண்டான். அவளைக் கண்டு, நான் பண்ணிய புண்ணியம் பலித்ததென்று கக்கடநகைத்துப் பக்கமாய்ப்படுத்துத் திக்கென்றெழுந்து தீர்க்கமாய் வீழ்ந்து சரணஞ்சரணம். இதுநல்லதருணந்தருணம். என்மாதவம் வந்தது. என் வழித்துணை வந்தது. என் இஷ்ட தெய்வம் வந்தது. நான் கும்பிட்டதெய்வம் வந்தது. என் பிராணசஞ்சீவி வந்தது. என் மூர்ச்சை சோபம்போக்கும் அமுதமிதோவந்தது. பேசப் பிராணன்தந்த குமுதம்வந்தது. மோகவித்து வந்தது. போகமுத்து வந்தது. என் கண்ணிற்பாவை வந்தது. என்முன் வண்ணப்பெண் வந்தது. ஓகோ! ஆபத்திற்குதவு மணங்கே

வாரும். என் தாகத்தைத் தணிக்கும் தயாரசமே வாரும். என் னருகிலுட்காரும். வறண்டுபோன என்னுடைய மண்டைக்குந் தொண்டைக்கும் சுருண்டுபோன நாக்குக்கும் மூக்குக்கும் பசை யுண்டாகும்படி மதுரவார்த்தையைப்பொழியும். என்னை யிறுகக் கட்டிச்சேரும். கைப்பாகிய என்வாய்க்குக் கனிவாய் முத்தந் தாரும். என் பாவம் போக்கடிக்க வந்தோய்! என்னைவிட்டுப் பிரி யாதிருக்கவேண்டும் நிதமே. நானுமக்குச் சதமேயென்று நிலத் தில் தலை குப்புற்றிருந்த கீசகன் நிமிர்ந்து எக்களிப்புற்றெழு ந்து முன்பின் பாராமல், விரதசாரணியைத் தொட்டணைக்கக் கிட்டினன்.

மீளாத நரகத்திற் காளாகுங் கீசகன் காமவிகாரத்தால் பேய் போலோடிவருவதை விரதசாரணிகண்டு, ஆ! அடாசண்டாளா! துரோகி என்னைத் தொடாதே. என்னை யொருவருந் தீண்டப் படாதே. வீணைசைகொண்டு வாணாளை யொழிக்காதே. நெருப்பி லழுந்திய புழுப்போற் சாகாதே. விளக்கில் வீழும் விட்டிற்பூச்சி போல் வேகாதே. மறுமாதர்மேல் ஆசைப்படாதே. மையல் மோகத்தால்நாசப்படாதே. காமற்பேயாற்கண்கலங்காதே என்று கடுஞ்சொற்களால் கண்டித்தாள். அவ்வாறு கண்டித்துந் தேறு மல் தேடியமருந்து சிக்கியதுபோற் கிடைத்த தேவியே! நான் மகாபாவியே! பெருகியகாமாக்கினியாலுருகி வாடுகிற நான் நூறு யிரம்பேர் தடுத்தாலும் உன்னை விடமாட்டேன். துரட்டுக்கெட் டாப் பழம் வாய்க்கெட்டும்பொழுது, அப்பழத்தைச் சுவைக்க மாட்டாமல் விட்டுவிடுகிற மூடனுமுண்டோ? தோகையே என்று துரத்தினன். அதனால் மிக்க துயர்கொண்ட பாஞ்சாலியானவள் பயந்து, உடல்வியர்த்துக் கொலை வேடனைக்கண்ட கலைமானைப் போல், சேலைகுலைய மாலையலையக் கமலமுகம் வாடக் கண்ணீ ரோடக் கருங்கூந்தலாடக் குடல் குலுங்க குலைநடுங்க துடை யிடைமாளுள் விடவிடென்றோடினள். அவ்வாறோடிய பாஞ் சாலியானவள் நவமணியிழைத்த கதிர்முடிதரித்த விராடராஜன் கொலுவில் தருமராஜன் முதலிய யாவரும் பார்க்கும்படி அபயம் அபயமென்றலரி வாடியகொடிபோல் வந்து வீழ்ந்தழுதாள். அந்த விராடபுரத்தில் கங்கபட்டர் வந்த நாள்முதல் உதயத்திற் சபைசேரும்படி வழக்கப்படுத்தியபிரகாரம் மகாஜனங்களுடன் கூடியிருந்த மனுகுலத் தோன்றலாகிய மச்சராஜனும் மந்திரி மார் முதலிய சாஸ்திரிகளும் தேம்பியழுகின்ற தெரிவையைக்

கண்டு, கருத்து வேறுபட்டு, ஒன்றுந் தோன்றுமிலிருக்குஞ்சமை யத்தில் காமப்பிணியால் கலங்கிய கீசகன் சோமவதனத் துரௌ பதை தன்னைத் தொடர்ந்து பிடிக்கத் துணிந்தாங்கெய்தினன்.

அந்தச்சமயத்தில் மகாலட்சுமிபோன்ற மாதரசியைப் பற்று வதற்கு நீட்டிய கீசகன் கையிரண்டும் அந்தப் பதிவிரதையின் மேற் படவொட்டாமல், சூரியபகவான் அனுக்கிரகத்தால் சுழற் காற்றுப்போல் தோன்றிய ஒருகிங்கரனுனவன் கேடுகாலக்கீசகன் கரத்தைப்பற்றிக் கிறுகிறெனச் சுழற்றி விறுவிறென விட்டெறி ந்துபோனுன். அதனுல் கைவீச்சோடு கடுகிய கீசகன் பெரு மூச்செறிந்து பிரமித்து, மன்னர் நகைக்கக் குப்புற விழுந்து, பின்னும்பிடிக்க வெழுந்தான். பின்பு தானிருக்குமிடத்திற்கும் துரௌபதையிருக்கும் இடத்திற்கும் வெகுதூரமென்றுணர்ந்து, தலைகவிழ்ந்து உடல்குனிந்து வெட்கிச் சந்தடிசெய்யாமல்வந்த வழியே ஓடிப்போனுன். அவ்விடத்தில் நடந்த அதிசயத்தைக் கண்ட யாவருந் திக்கற்றவருக்குத் தெய்வமேகதி என்று சிந்தை நைந்துருகித் திகைத்திருந்தார்கள்.

இப்பால் அச்சபையில் வந்து வீழ்ந்தழுத அவ்வேழைப் பெண்ணின் அலங்கோலத்தையும், தொட்டிழுத்த தன்மைத்துன னது துராக்கிருதத்தையும் அதனுல் தனக்கு நேரிட்ட நிந்தை யையும்விராடராஜன்யோசித்து, அவ்விடமிருந்தபெரியோர்களை யும் இராஜராஜாக்களையும் மந்திரி பிரதானி முதலிய மதிவல்லோ ரையும் பார்த்து, ஓ விற்புத்தியுடையவர்களே! துற்புத்தியுடைய இக்கொடிய கீசகன் துறைதப்பிநடந்ததைப் பார்த்தீர்களா? என்று ஆத்திரப்பட்டு அவனுக்கு நற்புத்தி சொல்லி அவன் செய்த வேலைக்குத் தகுந்த தண்டனை விதிக்கத் தன்னுற் கூடா மையால், அக்கீசகனுடைய பராக்கிரமத்தையும் திக்குவிஜயத் தையும் குறித்துப் பயந்து சிந்தித்திருந்தான்.

அக்காலத்தில் இராஜசபையில் நின்ற விரதசாரணியான வள் ஐயோ! இதென்ன அநியாயம் தெய்வமேயென்று விசனப் பட்டாள். அப்பொழுது அவ்விடத்தில் நிறைந்திருந்த வெகு ஜனங்களுள் தானு மொருவனுக வந்திருந்த வீமசேனனுகிய பலாயனனென்பவன் மனவேஷ்டை யடைந்து, அஞ்சிக் கெஞ் சிப் பஞ்சுபோற் பறந்து ஓடிவந்த பாஞ்சாலியையும், அவளைப் பிடிக்கவந்த கீசகனையும் பார்த்துப் பஞ்சேந்திரியமும் பதறத் துடித்து, ஆசாரவாசல் முகப்பிலிருக்கிற பெருந்தருவைப்பிடுங்கி

யடித்துக் கீசகனையும் விராடனையும் ஒருமிக்க முடித்துவிடுவதற் கெண்ணினான். அப்பொழுது தம்பியாகிய வீமன் எங்கே பதறு கிறானென்று அதுவே நினைப்பாகப்பார்த்துக்கொண்டிருந்த தருமராஜன் அவனது கோபக்குறியையும் எண்ணத்தையும் அறிந்துகொண்டு, அப்பா பலாயனு! நீ மடைப்பள்ளிக்கு எஜ மானுகையால், காய்ந்தவிறகு எங்குண்டோ வென்று உயர்ந்த மரங்களைக் கண்ணோட்ட மிடுகிறதுபோலக் காண்கிறது; நீ இப் பொழுது பார்க்கிறவிருகூஷம் அவசரத்திற்கு விறகாகமாட்டாதே. இதைக் காயவைத்துக்கொள்ளலாமென்று கருதினாலும், இன் னும் இரண்டுமாதஞ் செல்லாமல் உலராதே. முக்கியமாய் விறகு வேண்டியிருந்தால், தகுந்த மனிதருடன் காட்டுக்குப்போய், நீ நினைத்த மரங்களைவெட்டி உன்னிஷ்டப்படி முடித்துக்கொள்ள வேண்டுமேயன்றி, இவ்விராடராஜன் சபையில் நிற்கக்கண்ட மரத்தை அவசரப்பட் டழிக்கக்கூடாதே. மிகுந்தபலசாலியாகிய உனக்கு எதுவும் லக்ஷியமல்ல. ஆதலின் இப்பட்டினத்திற்குப் புறம்பிற்சென்று வேண்டும்மரங்களை வேருடன்செல்லி எளிதாக எரிக்கலாம். இங்கிருக்குந் தருவானது அநேகம் பக்ஷிகட் காதார மாகியும் நமது வாழ்நாளுக் குதவியாகியும் குளிர்ந்த நிழலைக் கொடுத்துக் கொலுமுகத்திற் கழகாயிருக்கின்றது. ஐயோ இம் மரத்தை புத்திமான்கள் குறைக்க நினையார்கள். பச்சைமரத்தை வெட்டலாகாதென்று பெரியோராற் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன ஆபத்து வந்தாலும் பாபத்திற்குப் பயப்படவேண்டுமே என்று தமதுகாலாற் பூமியைத்தேய்த்தார். அவர் இங்கேவிறகின் மேலேற்றி வெளிப்படையாகச் சொன்ன சொல்லின் பொருள் பரோபகாரியாகிய விராடனைக் கொல்லாமல் கீசகனைக் காட்டிற் கொண்டுபோய்க் கொல்லவேணுமெனக் குறிப்பால் விளங்கியது.

அதையறிந்த வீமசேனன் ஓ கோகோ! இவரிங்குந் தடை யாரோ வென்று உடலெங்கும்பதற எழுந்த கோபத்தை யடக் கித் திரௌபதையைப் பார்த்தான். அக்குறிப்பறிந்த பாஞ்சாலி யானவள் தனக்கு நேரிலிருந்த விராடராஜனை நோக்கி, ஓ மகா ராஜனே! நல்லொழுக்கத்தை முற்றிலும் ஒழுகவிட்ட கீசகன் துன்மார்க்கமாய் என்னைத் தொடர்ந்து தொட்டிழுக்க வந்தது நீதிதானோ? சாஸ்திரங்களைப் படித்தும், தன்னுயிர்போல் மன் னுயிரைக் காத்தும், பரதாரசோதரமெனப் பார்த்தும், பாவ புண்ணிய மின்னதென்றறிந்தும், அடைக்கலம் புகுந்தோரை

யாதழுத்தும், தேவதாபக்தி, ஆசாரியபக்தி செலுத்தியும், குல முறை பிசகாமல் நடத்தியும், ஏழைகள் மனம் நோகாமலும், படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் இவ்வாறினையு முடையவனாகியும், செங்கோல் செலுத்தும் சீமானாகிய நீர் உம் மைத்துனனுடைய துற்புத்தியை விசாரித்து என் உள்ளக்கலக் கத்தை மாற்றி, ஆறுதல் சொல்லி ஆதரியாதிருப்பது உமதர சாட்சிக் கழகாமோ? நீதிபரனே! நெறிமுறைமை யறிந்த நிரு பர்கள் தம்மை யண்டினவர்களைத் தம் மக்களைப்போல் காக்க வேண்டுமென்று தருமசாஸ்திரஞ் சொல்லி யிருக்கிறதல்லவோ? தயாநிதியே! வலியவன் ஒருவன் எளியவனை யடித்தாலும், ஒரு வன் பொருளை ஒருவன் அபகரித்தாலும் வம்பு வார்த்தைகளை வழங்கினும் அவைகளை யரசன்விசாரித்து துஷ்டநிக்கிரக சிஷ் டபரிபாலனம் செய்யவேண்டுவ துண்டோவில்லையோ? அப்படி விசாரியாத கொடுங்கோல்மன்னன் இருந்தென்ன என்று உலகம் எண்ணுமே. உத்தமனே உயர்ந்தோர் முதலிய சர்வசனங்களும் துற்சோபம், துற்பயங்கரம், துர்மரணம், துர்வியாதி இவை முதலிய பீடைகளடையாமல் சற்சினேகம், சன்மார்க்கம், சற் குணம் சதாயுள் முதலிய நன்மைகளைப் பெறும்படிக்கல்லவோ அரசனுக்குச் சிங்காசனப் பட்டாபிஷேகஞ் செய்வது.

அவ்வாறு பட்டங் கட்டிக்கொண்ட அரசன் ஆக்கினையா லல்லவோ வருணம் நான்கும் வரிசைதப்பாதிருப்பது. பூர்வத் தில் ஒருபாதம் சந்தனக் குழம்பிலும் மற்றொருபாதம் அக்கினிக் குழம்பிலும் நாட்டி அரசாட்சி புரிந்துவந்த சக்கரவர்த்திகளின் சரித்திரத்தைக் கேட்டறியீரோ? தருமாத்மாவே! உமது தேவி யாருக்குப் பணிவிடைசெய்து பிழைக்கவந்த ஏழையாகிய என்னை இக்காட்சிகண்ட சிங்கபலக் கீசகன்றன்னைத் தீரவிசாரியாமற் போவீராகில் எனக்கு வேறுகதியில்லை. உமது திடத்தை தெரிந் துக்கொண்ட பாதகன் இனியென்னை யெங்கும் பிழைக்கவொட் டானே, எல்லாந்தெரிந்த பெரியோருக்குச் சொல்லாலுணர்த் துவ தியாதொன்றுமில்லை. தோன்றலே! இவ்வுலகத்தில் தவஞ் செய்வதும், யாகம்புரிவதும், தீர்த்தமாடுவதும், தெய்வந்தொழு வதும் பெரிதல்ல. அபயமென்று வந்து அடைக்கலம் புகுந்த வர்களை யாதரிப்பதுவே தருமங்க ளெல்லாவற்றிலும் சிறந்த தென்று சதுர்மறைப் புரோகிதன் பிரமசூத்திரத்திற் சாற்றியிருக் கின்றனன்.

அதற்குத் திருஷ்டாந்தங் கேளும். முற்காலத்தொருநாள் பிரமனுடைய சபைக்குத் தேவேந்திரன் போனன். அவனைக் கண்ட பிரமதேவன் சந்தோஷித்து, ஓ இந்திரனே! சொர்க்க மத்திய பாதாளத்தோர் நடத்துகின்ற தர்மா தர்மங்கள் உன் ஆதீனமா யிருக்கிறபடியால், நீ தரும சூட்சுமமறிந்து நடத்த வேண்டியதாயிருக்கிறது. நீ அவ்வண்ணம் நடத்தாவிடில், இப் பூலோகத்தார் செய்யும் பாபங்களில் பேர்பாதி யுன்னைப் பிடியா மற்போகாது. அப்படிப் பிடித்த பாவங்களை நீ நீக்கிக்கொள்ள வேண்டுமானால், பற்பல அதர்மஞ் செய்கிறவர்களை உடனே யழித்துவிடவேண்டுமென்றார். இப்படிப் பலவாருகிய அதர்மஞ் செய்யும் பாவிகள்யாரென்று தேவேந்திரன்கேட்க,வேதவிதியும், நீதிவழியும், உலகநடையுந் தப்பி நடந்தவர்கள்தான் பாவிகள். இவர்களில் நன்றிகெட்டவர்கள், அடைக்கலம் புகுந்தோரை யாதரியாதவர்கள் இவர்களை மகாபாவிகளென்னப்படும். ஆத லின், இக்கொடிய அதர்மிகளை வச்சிராயுதத்தால் மண்டைகிழிய மோதிப் பண்டுசெய்த பாவங்களைப் போக்கித் தருமத்திற் பிர வேசிக்கப்பண்ணுவையாகில் இவர்கள் செய்த புண்ணியங்களில் பேர்பாதி யுனக்குண்டாம். நீ மூவுலகிற்கு முதற்கடவுளாகையால், இந்தத் தரும சூக்ஷுமத்தை யுனக்குச் சாற்றினேனென்றான்.

அந்தச் சதுர்முகன் மொழியைக்கேட்ட இந்திரன் பூலோ கத்தில் வந்து துஷ்டர்களைச் சிட்சித்துச் சிஷ்டர்களை ரட்சித் துப் புண்ணியம்பெருகப் பொருந்தி வாழ்ந்திருந்தானென்று பெரியோருரைக்கக் கேட்டிருக்கிறேன். ஓ விராடராஜனே! உன் மனைவியாரிடத்தில் வந்துசேர்ந்த அந்நாள்முதல் இந்நாள் வரையிலும் இத்தன்மையாகிய துன்பம் நானறியேன். இன்று என்பொல்லாவினையால் வல்லாண்மைக்கார கீசகன் இக்கொடிய எண்ணங்கொண்டான். அவன்தானப்படி நினைத்தாலும் ஜகந் தாங்கும் நீரும் பேசாமலிருந்தது என் தவினைதான். ஓ ஐயா! உம்மிடத்தி லிப்படிப்பட்ட குணமிருக்குமாகில் அரசாக்ஷி யெவ் வாறு நடக்கும்? உம்மை யார் மதிப்பார்கள்? உம்மை யார் துதிப் பார்கள்? உம்மை யாரடுப்பார்கள்? வருந்தி வந்தவர்களின் துன் பத்தைமாற்றிக் காக்கவேண்டியது உமது கடமையல்லவா? நீர் அவ்வாறு செய்யாமற்போனால், சாஸ்திரப்படி உமக்கு மோக்ஷங் கிட்டாதே. ஓங்கியநரகமும் உம்மைவிட்டு அகலாதே. அதிலும் பேதைப்பெண்கள் - நாதனற்றவர்கள்-மூடவர்-ஊமை-செவிடர்-

குருடர் பிணியாளர்-தரித்திரர் தவசிகள் முதலானோருக்குத் தாயுந் தந்தையும் இராஜனைகையால், அவர்களைத் தன் பிராணனைப் போல் ஆதரிக்கவேண்டும். பழிக்குடன்படாத பார்த்திபனே! நான் அநாதையாயிருக்கிறேன், நீரென்னை நிராதரவு செய்யாமல் இரக்ஷிக்கவேண்டுமென்று சைரந்திரி சொன்னள்.

அவ்விரதசாரணி மொழிந்ததை விராடராஜனறிந்து, ஓ மங்கையே! நான் கீசகனை விசாரிக்கவில்லையென்று நீ கிலேசப் படுகிறாய். உனக்குமவனுக்கும் நேரிட்ட நேசமும் நீ யவன்வீட் டுக்குப்போன காரணமும் உன்னைத் துரத்திவந்ததற் கேதுவும் இன்னதென்று எனக்குத் தெரியாமையால், ஒருதலை வழக்காகத் தண்டிப்பது உத்தமமல்லவே. பின்பு காரணகாரியந் தெரிந்து கொண்டு தீர்க்க விசாரணை செய்யவேண்டி யிருப்பதனாலும் உன க்குவந்த தீங்கு ஒருவாறாய் விலகிப்போனதினாலும் நான் சும்மா விருந்தேன். அம்மா! நீ இந்தவேளை மனம் பொறுத்துக்கொள் ளென்று வாய்குளிரப் பேசினான்.

அவனது இன்சொல்லைக் கேட்ட பாஞ்சாலியானவள் விராடராஜனுக்கு மறுதையரிய மில்லையென்றுணர்ந்து, ஐயா! நீர் சத்தில்லா வசனஞ் சொன்னீர். நான் உற்ற துரைக்கிறேன் கேளும். அடியாளுக்குக் காந்தருவர் ஐந்துபேர் கணவர்கள், புஜபலப் பராக்கிரமசாலிகள், ஒப்பற்றவர்கள், விற்பன விவேகி கள். அவர்கட்குப் பகைவர் இல்லை; யாருக்காயினும் அழிவு காலம் நேரிடில், அவர்கள் தாம் சத்துருவாய்த்தோன்றி யழிப் பார்கள். அவர்கள் கைக்கொண்டிருக்கும் வில்லோசையும் எட்டு திக்குப் பாலரையும் திடுக்கிட்டு விழிக்கச்செய்வதுமன்றிச் சக்கிர வாள முடிமட்டும் உக்கிரமாக வுடைபட்டும் தத்தளித்து ஆடப் பண்ணுமே. அவர்களை யண்டினோருக்குவேண்டிய பாக்கியங்க ளுண்டாமே. அப்படிப்பட்ட மகாபுருஷர்களை மாலையிட்டுமருவி வாழும் என்னை இப்படிப்பட்ட கேலிக்கு இடமாக்கிவிட்ட கீசக னுக்கு நாசகாலங் கிட்டியதென்பதற்குச் சந்தேகம் இல்லை, ஐயோ! இரும்பை நசுக்கியொடிக்குஞ் சம்மட்டியானது நெருப் புக்கும் படுவதுபோல், உம்மை எங்கே மாட்டிக்கொள்ளுகிறதோ வென்னுந் துக்கத்தால் இவ்வளவுதூரஞ் சொல்லியழுகிறேன். ஐயா மச்சராஜனே! இத்தியாதிவல்லமைபெற்ற காந்தருவர்கட்கு மனைவியாகிய நீ என் தேவிக்கு வேலைசெய்ய வருவானேனென் றால், வினைப்பயனை வெல்லவல்லவர் இல்லாமையால், என் நாய

கர் ஐவரும் தீவினை வசத்தால் தங்கள் உருமாறி யிருக்கின்றூர் கள். அவ்வாறு இருந்தபோதிலும் "கடுகு சிறுத்தாலுங் காரம் போகா" தென்பதுபோல், தங்கள் தீரவீரம் மாறினவர்களல்ல. இப்பொழுதிவ்விடத்தில் நடந்திருக்கிற கலகத்தை அவர்களும் அறிந்திருப்பார்கள். தடையின்றி எங்குஞ் சஞ்சரிக்கும் நெஞ் சுற முள்ளவர்கள். தமக்குத்தாமே சங்கதி தெரிந்துகொள்ளுஞ் சக்தியுடையவர்கள். இந்நேரம் இவன் பிராணனுக்கு முடிவு தேடி உலைவைத்திருப்பார்கள், ஆகிலும் மண்ணுலும் வேந்தன் வாய்பேசாதிருந்தால். பெண்ணுகிய நான்போவது எவ்வாறே? புனிதனே! நான் ஒருவரையும் நோகத்தகாது. பூர்வந் தேடிக் கொண்ட வினையையே நோகவேண்டுமென்று பொருமி, விம்மிப் புலம்பி, ஓ சபைநிறைந்த புண்ணியவான்களே! சத்திய தரும மென்றும், அசத்திய தருமமென்றும் இரண்டுண்டு. அவ் விரண்டினுள் சத்திய தர்மமே முக்கியம். அசத்திய தருமம் எவ்விடத்தில் விளங்குகிறதோ அவ்விடத்தில் மகாலட்சுமி யுடன் மாயோனிருப்பான். அந்த ஸ்ரீயப்பதியிருக்குமிடத்தில் கிளர்ச்சியும் சத்துரு ஜயமுமுண்டாம்.

அசத்திய தருமம் எவ்விடத்திலிருக்கின்றதோ அவ்விடத் தில் மூதேவி குடிபுகுவாள். மூடருறவு எய்தும். அன்றியும், கொடுநரகிற் காளாய்த் தளர்ச்சியுற்றுத் தூக்கமும் சோம்பலும் எக்கமும் அடைவார்களெனச் சுருதி முறையிடுகின்ற தாகை யால், ஆணைப் பெண்ணைப்பெற்ற நீங்களாயினுங் கவனித்துத் தருமத்தை யனுசரித்துப் பொதுவாய்ப் பேசலாகாதா? "அரச னெவ்வழி அவ்வழிக் குடிகள்" என்பதை நிலைநாட்டினீர்களோ. நீதிநெறியற்றினீர்களோ? ஐயோ! இந்நீணிலத்தில் நான் பெண்ணுகப் பிறந்த பெரும்பிழையாதோ? தெய்வமே என்று தளர்ந்து வாடினாள்.

அழகியமாதின் தளர்ச்சியைச்சபையிலிருந்த சகலரும்பார்த் துக் கீசகனையும் விராடனையும் நிந்தித்து, விரதசாரணியின் பதிவிரதாதருமத்தைச் சிந்தித்துப் பெண்ணிலக்கணம் பூரண மாக அமைந்திருக்கின்ற இப்புண்ணியசாலியை நிதானித்து இந்த அம்மாள் நல்லகுடிப் பிறந்தாளாய்க் காண்கிறாள்; தேவ புருஷ சம்பந்தம் போலத்தோன்றுகிறது; குணம், மணம், குரல் வசனம் இவற்றை நோக்குங்கால் பத்தினி ஸ்திரீயா யிருக்கிறாள். இத்தன்மையாளாகிய உத்தமிகள் நினைத்த காரியங்களெல்லாம்

சித்தியாகாமற்போமோ? இலேசான பெண்களைப்போல் எண்ணப்படாது. கெட்டமதியுள்ள கீசகன் துட்ட நினைப்பால் தொடர்ந்த மூடத்தனமானது அவன் பிராணமுடிவுக்கோ யாது காரணமோ தெரியவில்லை. பூர்வம் சீதாதேவிக்கு ஸ்ரமம் நேரிட்டதுபோல் நேரிட்டதல்லவா? என்று தங்கள் மனதைத் தாங்களே தேற்றிக்கொண்டு அம்மா! சும்மாவிரு விசனப்படாதே, உமக்கு நல்லகாலம் இந்த விராடபுரத்தில் வரப்போகிறதென்று வாழ்த்தினர்கள்.

அக்காலையில் இவற்றை யெல்லாம் பார்த்து உள்ளே மாச்சரியமும் வெளிக்கு ஆச்சரியமுங் கொண்டிருந்த கங்கப்பட்டரானவர், ஓ சைரந்திரிப் பெயர்பெற்ற பெண்பாவாய்! பெண்களுக்குரிய நாணமடமுதலிய நாற்குணங்களுமாறி இராஜசபையேறி அத்துமீறிப் பேசுகின்றாய். அனியாயக்காரி! தருமபதியாகிய விராடபூபதி மகாதயானிதி, சத்தியவாக்கியர், சாதுசங்கப் பழக்கமுள்ள யோக்கியர், சகலவித சம்பத்துடைய பாக்கியர், சதுர்வேத மோர்ந்தவர், தநுர்வேதந் தேர்ந்தவர், மநுமுறை கற்றவர், மக்களைப் பெற்றவர், நடுவுநிலையாக விசாரிப்பார். பக்ஷபாதமிராது, நீயஞ்சாதே, அவசரப்படாதே. இந்த மச்சராஜன் விசாரியாமற் போனாலும், உனக்குரிய காந்தருவர்கள் அவசியம் விசாரிப்பார்களென்று உன்சொல்லிலேயே விளங்குகிறது. நீ இந்தச்சபையில் ஆத்திரப்படவேண்டாம். உன் எஜமான் கட்டளையைப் பரிபாலிப்பதே முக்கிய தர்மம். சாந்தகுணமே தகுந்த பூஷணம். பெண்ணாகப் பிறந்தோருக்கு அடக்கமிருக்க வேண்டும். ஆதரவற்றவர்க்கு அரசனே தெய்வமென்று நம்பி வாயடங்கி ஒடுங்கிப்போகவேண்டும். அன்றித் தாங்களெவ்விடத்தில் வேலைசெய்கின்றார்களோ அவ்விடத்திற்சொல்லி அவர்கள் மூலமாக விசாரணைக்குவரச் செய்யவேண்டும். அப்பொழுதுன் மனக்குறை எப்பொழுதுமில்லாமல் நீங்கும். இப்பொழுது நீ அந்தப்புரம்போய்ச் சேரென்றார்.

கங்கபட்டருரைத்த கருத்தைத் தெரிந்துகொண்ட மங்கையானவள், அங்கை குவித்துப் புத்தியென்று போற்றிச் சுதர்க்கணையிடத்திற் போய்ப் பெருங் காற்றிலலைந்த முருங்கைபோல் சுருங்கி ஒடுங்கி நின்றாள். இவ்வாறு ஓய்ந்துநின்ற மாலினியை அரசன் பத்திரி பார்த்துக் கருங்குவளை நெருங்கிய கண்ணும் வெண்டாமரைபோன்ற முகமும் சண்பகப்பூவனைய மூக்கும்

முல்லையரும்பைப் பழிக்கும் பல்லும் அமுதமாகிய சொல்லும் கொவ்வைக்கனிக்கொப்பா மிதழும் இராகுவினுல் தீண்டப்பட்ட சந்திரன்போல் குறைந்து வதங்கிய உடலும் வாடியநடையுமாய் வருவானேன்? கண்ணீர் சொரிவானேன்? கழுத்து முத்தாரம் பழுத்துப் போவானேன்? போனயிடத்தில்பொல்லாங்குண்டோ? அப்படிக் கேதாகிலுமுண்டானுல்,இப்பொழுதே சொல்லு தப்பாமல் தண்டிக்கிறேனென்று கேட்டாள்.

அப்படி அன்புடன்கேட்ட சுதர்க்கணையைத் திரௌபதாதேவிபார்த்து, அம்மா! கைவிரலால் கண்ணைக் குத்திவிட்டு யார் குத்தினர்கள்? குத்தியதற்குக் காரணமென்னவென்று கேட்பது ஆச்சரியத்தின்மேலாச்சரியமல்லவோ? என் நிர்வாக முதலிய யாவற்றையும் முன்னமே சொல்லியிருந்த என்னை உன் தம்பியிடத்திற்கனுப்பி வைத்துப் பின்னுலொன்றுந் தெரியாதவள் போல் துடிதுடித்துப் பேசுகின்றாய். ஆயினும் பெரிதல்ல. உன் வார்த்தையின் வண்ணம் புட்பமும், தேனும் கொண்டுபோய்க் கொடுத்தேன். அந்தக் கீசகன் என்னைக் கண்டவுடனே எழுந்தோடிவந்து, என் கையிலிருந்த மாலையையும் மதுவையும் வாங்காமல், என்மேல் விழுந்து அனுபவிக்க எண்ணினன். நான் அந்தப்பாதகன் கையில்சிக்கப்படாமல் தப்பியோடி விராடராஜன் சபையில் விழுந்தேன். அப்பாலென்னைத் தொடர்ந்து வந்த பாவி எப்பாடுபட்டானே? என்னகதிகெட்டானே? நானறியேன் உத்தமியென்றழுதாள்.

இவ்வாறு உருகியழாநின்ற விரதசாரணியின் துக்கத்தையும் சோபத்தையும் போக்கி அம்மா வண்ணமாதே! அந்தப்படுபாவி என் தம்பியானுலும் மகாபதிவிரதையான உன் சித்தஞ் சிதையப் பண்ணியபடியால், கடைகஷ்டனுகிய துஷ்டனுனன். தாய்க் காகாத பிள்ளை ஊர்க் காகாதென்பதுபோல் உனக்காகாத சாவான் எனக்கு மாகாமற்போவான். உனக்கொருநாளுங் குறைவில்லை. பங்கமில்லாத தங்கமே! காமி, வாமி, வெறியன், மூர்யன் வறியன், சிறியன் இவர்களுக்கு மட்டுமரியாதை, கட்டுதிட்டம், ஈனமானம், விதிவிலக்கு, விவேகமுதலியன கிடையாது. நன்மையினுல் வசவிர்த்திக்கு வரமாட்டார்கள். சவுக்கடியே தெய்வம். ஆதலின், முறைகெட்ட மூடனுகிய கீசகனைக் கொல்ல வேண்டுமென்னும் நினைப்பிருந்தால் சொல்லும், விராடராஜ

னுடன் கலந்துபேசி வேலையை முடிக்கச்செய்கிறேன். உமது எண்ணத்தை எனக்கு உணர்த்துமென்று சுதர்க்கணை கேட்டாள். அம்மொழியைக்கேட்ட விரதசாரணியானவள் அம்மா! ஏதோ என்னுடைய கர்மானுபவம் இப்படியிருந்தது. இராஜசபையில் இருந்தவர்கள் நகைப்பதற்கிட முண்டாயிற்று. திக்கற்ற எனக்குத் தெய்வமிருக்கிறது. அடாது செய்பவர் படாதுபடுவரென்னும் பழமொழியுண்டு. அது பழுதுபடாது. என் விஷயத்தில் அபராதியாகிய கீசகன் கந்தருவர் ஐவரால் கால்சாய்ந்துபோவான். எனக்குரிய நாயகர்கள் இன்றைக்கோ நாளைக்கோ வரப்போகிறார்கள். அப்பொழுதிவன் தலையோடுபோமோ? இந்தத் தரணியோடுபோமோ தெரியேன். நான் உன்னை வந்தடுத்து உன்னுடைய உப்புந்தண்ணீரும் புசித்துக் காலங் கழித்துவந்த என்னுல் உனக்கு ஒருகுறைவும் இல்லாதிருக்கும்படி என்னிஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டேன். அன்னையே! என்று வண்ணமகள் வாழ்த்தினுள். அப்பெண்ணின் வார்த்தையைக்கேட்ட சுதர்க்கணையானவள் கண்ணீர்விடுத்து அவள் கண்ணைத் துடைத்து, விம்மி மெலிந்து நம்மிலொருவனுகிய தம்பி வெம்பிவிழும் காலம் வந்ததே. புத்திரமித்திராதியரை யிழந்து போக நேரிட்டதேயென்று கலக்கமுற்று மிகவும் ஏக்கங்கொண்டிருந்தாள். இப்படி துக்கப்பட்ட சுதர்க்கணையாகிய வண்டு விழியாளுக்குப் பண்டுதொட்டுத் தொண்டுபுரிந்து அண்டையில் நின்ற பெண்டுகளெல்லாம் ஒன்றுகூடி மாலினையைக்கண்டு, மதி மருட்கொண்டு ஐயோ! கண்டனுகிய கீசகன் பண்டைவினையால் பொன்றுங்காலத்தை தேடிக்கொண்டானே. அது பெருந்தீயைப்போல் மூண்டுவிட்டதே. விராடராஜனுக்கும் விதண்டையான வியாகூலம் விளைந்ததே. இந்த மோசத்திற்கு நாம் தப்பிப் பிழைக்கும்வகை யெப்படியென்று கிலேசித்து எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பால் பாஞ்சாலியைப் பிடிக்கவந்த கீசகன் திரௌபதையிடத் தாதித்தனனுப்பிய கிங்கரனுல் வீசியெறிய வீழ்ந்து தாஷ்டீகந்தளர்ந்து மோகச்சமுத்திரம் வடிந்து திம்மைத்திரும்பிச் சிந்தைதெளிந்து மயக்கமாறித் தன் மாளிகைபோய்ச் சேர்ந்தான். இவன் நிலை இப்படியிருக்க அச்சமில்லாதிருந்த மச்சராஜன் கொச்சை மொழியாள் கேட்ட கேள்வியினுல் நாணப்பட்டு சபையிலுள்ளோர் பேசிய தன் விவகாரத் தாழ்வையும் கீசகன் தேடிக்கொண்ட நாசத்தையும் தன்மனதுட்

கொண்டு மைத்துனனைக் கொல்லுந்திறம் தனக்கில்லாமையால் புல்லியர் தங்களைப்போல் பொருமலுற்றிருந்தான்.

இத்தன்மையிலிருந்த விராடராஜனை வேதவிதியும் நீதி வழியுந் தெரிந்த கங்கபட்டர் பார்த்துச் சாந்தகுண வேந்தனே! ஆண்மையுடன் அரசாட்சிசெய்யும் அரசர்கள் துட்டரைக் கொட்டமடக்காவிடில் அப்பட்டினத்துச் செல்வமும் ராஜநீதியும் நிலைபெறுவாம். புகழ்ப் பிரதாபமுங் கைகூடாது. செங்கோல் செலுத்துந் திறமையுடையவர்கள் விவகார தசையில் மன்னவன் பிறன் என்னும் பக்ஷபாதம் பார்க்கப் போகாது. வயிறு வளர்ப்பதற்கு வந்து, உம்முடைய மனைவியை யடுத்துக் குற்றேவல்செய்து ஜீவனம்பண்ணுகிற ஒரேழைமேல் மச்சராஜன்மைத்துனன் இச்சைவைத்தானென்பதுவசையோ? அன்றி இசையோ? பெரியமனிதன் நேயமா ஒருபெண்ணைத் துரத்தி வந்தது ஞாயமா? சுத்தவீரன் கொடுமை நினைத்தது தர்மமா? நீர் சும்மா இருந்துவிட்டது மர்மமா? இது கீழ்மக்கள் செய்கையல்லவோ? அக்கீசகன் தன்னைவிடப் பிரபஞ்சமில்லை யென்று உம்மை மதியாதிருக்கின்றான். உமது துரைத்தனத்தில் இப்பேர்ப்பட்ட கெடுதியைச்செய்து கெலித்துப்போனான். அவனுக்கு எதிரொருவருமில்லை. அப்பணிப் பெண்ணுக்குத் திக்கொருவருமில்லை. அப்படிக்கிருந்தபோதிலும், எல்லோருக்கும் பொதுவில் தெய்வமொன்றிருக்கிறதல்லவா. பாவபுண்ணியங்களைப் பார்க்குந் தருமதேவதை சற்றேனுஞ் சகிக்கமாட்டாதே. அரசன் அன்றேகொல்லும் தெய்வம் நின்றேகொல்லும் உலகமாயையையொழித்த ஞானியையும் தீவினை தொடராதுவிடாது. தருமத்திற்கு விரோதமான காரியம் கழுத்தறுப்பென்பதைக் கதையிலுங் கேட்டறியீரோ. இது சகல ஆத்மகோடிகளுக்குஞ் சகசமாயிருப்பது. அவ்வாறிருப்பினும் இலைமறைவோ காய்மறைவோ வென்று தராதரமறிந்து காலமிடந் தெரிந்து காற்றடித்தது தாழை பூத்ததென்னுங் கற்பனைபோல் அனுபவியாமல் அதுவே உற்பனமாய்க் கண்டவிடத்தில் கண்ணுங் கருத்துஞ் செலுத்திப் பெண்டாசை கொண்டு பிதற்றித் தவிப்பது துன்பத்திலும் பெருந்துன்பமாய்ச் சேருமே. ஐயோ! நீரிதுவரையிலும் பெற்ற மகிழ்ச்சியும் புகழ்ச்சியுங் கெட்டுப்போமே. இனி இகழ்ச்சிக்கிடமாகுமே. இறைவனே என்று தருமராசன் சாற்றினர்.

இங்ஙனமுரைத்த கங்கபட்டர் வாக்கியமும் விரதசாரணிக்கு நேரிட்ட அபாக்கியமும் அதனால் தனக்குவந்த சிலாக்கியமும் தன்னிருகாதைத் துளைத்து உருவிப்போனதினால் களத்துப் புத்தியுமிளைத்துச் சிங்காசனம்விட்டெழுந்து திருமனைக்குட்புகுந்து தியங்கித் திகைத்து மயங்கி மலைத்துப் பிரதிக்ஞை தப்பியிருந்தான். அந்தக் கொலுமுகத்திலிருந்த வீமன் நெருப்பினும் அதிகமாகப் பொங்கிப் பொறிசிதறக் கண்களை யுருட்டி விழித்து, நற நறவென்று பல்லைக் கடித்துக் கையிரண்டையுந் தேய்த்து முறுக்கி மோதி முகஞ்சுளித்து, விராடனைப் பழித்து, விண்ணுமண்ணும் வேகக் கலகலவென்று சிரித்துக் குகைக்குட்புகுஞ் சிங்கம் போல் மடைப்பள்ளியில் புகுந்தான். பின்பு தருமராஜனும் மற்றத் தம்பிமாரும் தங்கள் காலத்தை நினைந்து வருந்தித் தங்கள் தங்கள் இடம்போய்ச் சேர்ந்தார்கள்.

வெற்றிவேலேந்திய விராடராஜன் படுக்கைபொருந்தாமல் புரண்டு, அழிவில்லா அரசுக்கு அனர்த்தம் வந்ததேயென்று பழிகாரக் கீசகனை வெறுத்துக் குறுகுறுத்துத் தன் தீவினையை யொறுத்து இனி நாம் முடிபொறுத்திருப்பது எப்படியென்று ஏங்கியிருந்தான்.

மகாலட்சுமிக்கொப்பாகிய சுதக்ஷ்ணாதேவியானவள் துன்பமடைந்து எப்படி விளையுமோ? என்ன நேரிடுமோ? நமது செல்வங்கள் எவ்வாறுமோ? என்று திகிலடைந்திருந்தாள்.

அந்த மச்சநாட்டில் மருவிய நான்கு வருணங்களும் தங்களுயிரின்மேலும் உடலின்மேலும் இச்சைவிட்டுஅச்சமோடிருந்தார்கள்.

இக்கொடிய செய்கைக்கு யார்தான் விசனப்படார்கள். அரசனே! என்று வைசம்பாயனர் சொல்லிவரும்போது, சந்திரகுலத்தோன்றலாகிய ஜனமேஜய மகாராஜன் மனஸ்தாபப்பட்டு, இதென்னபாவமென்றேங்கி பக்கத்திலிருந்த தன் மனைவியான வபுஷ்டாதேவியுடனெழுந்து புராணிகரைப்பணிந்து, சுவாமி! மஹாபதிவிரதையாகிய பாஞ்சாலியம்மனைவள் அந்தத் துன்மார்க்கக் கீசகனைச் சபித்துத் தன் மகத்துவத்தை நிலைநாட்டி வரிசைபெறப்படாதோ? ஏன் சும்மாவிருந்தாள்? மானங் கெடுங்காலத்திலில்லாத மகத்துவம் மற்றொருகாலத்தில் இருந்தென்னபோயென்ன? அந்தக் கீசகன் எம்மாத்திரமனுஷன்? எவ்வளவு பலமுள்ளவன்? எந்தக் குலத்தில் பிறந்தவன்? சுதர்க்கணைக்கும்

இவனுக்கும் சகோதர சம்பந்தம் எவ்வாறுண்டாயிற்று? இவனுக்கு விராடனடங்கியிருக்கவேண்டிய காரணமென்ன? இந்த விவரங்களையெல்லாம் எனக்கு அறிவிக்கவேண்டும். புண்ணியனே என்று ஜனமேஜயன் கேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

கீசகன் வரலாறு

கேளும் ஜனமேஜய மகாராஜனே! பிரமசிருஷ்டியாலுண்டான பிரபஞ்சத்தில் பிராமணஸ்திரீக்கும் க்ஷத்திரியனுக்கும் பிறந்தோர்களைச் சூதகுலத்தாரென்று சொல்லுவார்கள். அந்தச் சூதகுலம் க்ஷத்திரிய குலத்திற்குத் தாழ்ந்ததென்றும் வைசியருக்கு உயர்ந்ததென்றும் ஜாதிநூலில் சொல்லியிருக்கிறது. அப்படிக்கிருந்தபோதிலும், அதுமுதலிதுவரையில் சூதகுலத்தில் க்ஷத்திரியர் சம்பந்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். க்ஷத்திரியகுலத்தில் சூதகுலத்தாருக்குச் சம்பந்தமில்லை. இந்தப் பரதகண்டத்திலுள்ளவர்கள் அந்தச் சூதவம்சத்தைக் குறைவாகப் பேசிக்கொள்வார்கள். அப்பேர்ப்பட்ட சூதகுலத்தில் கேகயராஜனொருவன் இருந்தான். அந்தக் கேகயராஜன் இராஜகன்னியென்பவளை விவாகம் பண்ணிக்கொண்டு லோகப்பிரசித்தனுய் வாழ்ந்தான். அவனுக்கொரு பெண்பிறந்தாள். அந்தப் பெண்தான் ஐயா இந்தச் சுதர்க்கணை யென்பவள் இவள் பிறந்த பின்பு வேறே பிள்ளைகளில்லாமையால், இந்தச் சுதக்ஷணைதேவியைப் பூமரம்போல் அருமையாக வளர்த்துவந்தார்கள். இப்படியிருக்கையில், இவள் தந்தையாகிய கேகயராஜன் ஆண்பிள்ளை பிறக்கவேணுமென்னும் ஆசையால், மாளவதேவி யென்பவளை இரண்டாவது மணம்புரிந்துகொண்டான். அவள் கருப்பத்தில் நூற்றுநாலு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் இந்தக் கீசகன்தான் மூத்தவன். சிங்கபலனென்று பேர்வாய்ந்தவன். மகாபலசாலி. இப்படியிருக்க, விராடராஜனுடைய மூதற்பெண் ஜாதி சுரதையென்பவள், சதானீகன், சங்கன், வராகன், ஆதிவராககேது என்னும் இந்நால்வரைப் பெற்ற பின்னர் இறந்துபோனுள். பிறகு சுதர்க்கணையைக் கலியாணஞ் செய்துக்கொண்டான். இவள் வயிற்றில் உத்தரன் உத்தரையென்னும் ஆணும் பெண்ணும் ஒருபேறுப்பிறந்தார்கள். அவ் விராடனுக்கு

அபிமான புத்திரனுக முதற்பிறந்த சுவேதனென்பவனொருவன் இவர்கள் யாவரும் குழந்தைகளானபடியாலும், விராடன் தம்பிமார்கள் பதின்மர் திடந்தப்பினவர்களாகையாலும் விராடனுடைய மச்சதேசம் சகலவிடங்களும் உள்ளதாகையாலும் சத்துருக்கள் அநேகரிருந்தார்கள். அதனால் விராடன் சித்தங் கலங்கி, இந்தச் சுதர்க்கணைக்குத் தம்பியாகிய கீசகன் சத்துரு சங்காரனென்று கேள்விப்பட்டு, அவனை வருவித்துத் தனக் குதவியாயிருக்கும்படி கேட்டுக்கொண்டான். அதற்குடன்பட்ட கீசகன் உபகீசகர்களாகிய தன் தம்பிமார்களுடன் இந்த விராட புரத்தை யடுத்துச் சேனுபதிப் பட்டமுடையவனுய் திக்குவிஜயம் புரிந்து சகல காணியாட்சிக்கும் தானே சுதந்தரனுனன்.

இப்பொழுது நான்சொன்ன கீசகர்கள் யாவரும் பூர்வஜன்மத்தில் காலகேயர்களென்னுங் காந்தருவர்கள். பாணனென்பவன் முதலாக நூற்றுநால்வர்கள் வாமகாரிகளாகவும் காமவிகாரிகளாகவும் சாமவேதியர் சாபம்பெற்றுப் பூமியிற் பிறந்தார்கள். பாணனென்னும் சிங்கபல கீசகனனவன் அஸ்திரசஸ்திர சாஸ்திரங்களை அப்பியாசித்துப் பதினுயிரம் யானைபலமுள்ளவனுய்ப் பகைவரைக்கொன்று, பலரையும் வென்று, விராடபுரத்தரசை நிலைநிறுத்திவைத்தான். இவனைப் பகைத்தெதிர்த்த திரிகர்த்த தேசாதிபன், தசாரணதேசராஜன், கஜேருகதேசாதிபதி மாளவதேசபோஜன், யவன தேசராஜன், புலிதநகர்த் தலைவன், கோசலதேசமுதல்வன், அங்கராஜன், வங்கதேசன், கலிங்கராஜன், தக்கணதேசாதிபன், நிடததேசாதிபதி முதலானேர்களும் கிராதகுலத் தலைவர்களும் இவனுடன் போர்புரிந்து வெல்லமாட்டாமல், தேரழிந்து வில்லொடிந்து இனி சாகிறபரியந்தம் இவனுடன் சண்டைக்கு வருவதில்லையென்று சபதம்பண்ணிக்கொண்டு ஊர்முகமாயோடிப்போனர்கள். அதனலிவன் அனேக வெற்றி பெற்றவனுய், மதிமந்திரியுத்திகற்றவனுய் இத்தேசமுழுவதும் தனக்குச் சுவாதீனமாக்கிக்கொண்டு எதேச்சையாக விருக்கின்றன். எல்லா மர்மங்களுந் தெரிந்தவனுகையால், இவனுக்கு விராட னடங்கியிருக்கின்றன். இதனலேதான் திரௌபதியைத் துரத்திவந்த துராக்கிரமத்தைப்பற்றி யொன்றுங் கேளாமலிருந்தான். இதன்றியும் திரௌபதியம்மன் கீசகனைச் சபிக்கப்படாதாவென்று விஞவினரே. அதற்குக் காரணஞ் சொல்லுகிறேன் கேளும். தனக்குரிய

கணவர்கள் கண்குத்திப் பாம்புபோல் பார்த்திருக்கும்போது சபிப்பது தருமமல்லவென்றும் சூரியநமஸ்காரஞ்செய்த சுகிர்தத்தினால், தனக்குத் துன்பமில்லாமற் போயிற்றென்றும் எப்படியும் வீமன் தப்பாமற் கொல்வானென்றும் தைரியங்கொண்டு சபிக்காமல் விடுத்தாள். வெண்கதிர்க் குலத்தோனுகிய வேந்தனே! நீர்கேட்ட சங்கதியைச் சந்தேகமறச் சொன்னேன் மேல் நடக்குங் கீசகனுடைய அழிவையுஞ் சொல்லுகிறேன் என்று வைசம்பாயனர் ஸ்ரீவேதவியாசரைச் சிந்தித்து வந்தித்து செப்பத் தொடங்கினர்.

கீசகசம்மாரம்

இப்பால் மாதமொன்றுக் கொவ்வொருவராக மகமேருவை வலம்வருகிற துவாதசாதித்தர்களில் அந்தமாசத்தி லுதயமான மித்திருவென்னுஞ் சூரியன் திரௌபதையம்மள் பூசித்தபடியால் திரௌபதாதித்தனென்று பேர்பெற்று விரதசாரணிக்கு விளைந்த வேஷ்டையைக் குறித்துச் சூரியகுலத்தோனுகிய கீசகனை வெறுத்துக் குலதர்மத்தை விட்டு வழுவினனென்று கோபித்து விஸ்தாரமுள்ள தன் கிரணத்தைக் கூட்டி, அஸ்தமானகிரியில் தேரோட்டி, மேற்றிசை சிவக்க நாற்றிசை யுவக்கச் சாய்ந்து சமுத்திரத்தில் தோய்ந்தான். பொழுதுபோனவுடன் அந்நகரிலுள்ளோர் யாவரும் அடிவயிற்றில் வடவாமுகாக்கினியை குடிவைத்துக்கொண்டு பகீரெனத் திகிலடைந்து, நித்திரை விட்டு, நினைவுகெட்டு, நெட்டுயிர்ப் பெறிந்து, உயிராசைதுறந்து உறக்கமுற்றிருந்தார்கள்.

சுதகூஷ்ணதேவியினிடத்திலிருந்த திரௌபதாதேவியானவள் தீராத்துயரத்தினால் சிந்தை வருந்திக் கண் கலங்கிக் கவலைகொண்டு ஜெப-ஜப-ஸ்நான-போஜனாதிகளுந் துறந்து எண்ணைதுமெண்ணி நமது புகழுக்குப் பழுதுவந்ததே யென்று நெருப்பிலிடும் மெழுகுபோல் நெஞ்சமுருகி எக்கமேலிட்டுத் தூக்கங் கொள்ளாமல் நடுராத்திரியில் வெளிப்பட்டுத் தருமராஜனுடைய சரணரவிந்தத்தைத் தியானித்துக் காவலாளிகளின் கண்ணிற்படாமல் மடைப்பள்ளிக்குப்போய், வெண்பட்டு மெத்தைமேற் சயனித்து நித்திரை செய்வதுபோலிருக்கின்ற பலாயனனைப் பார்த்து வருஷாகாலத்து விருஷபம்போன்ற ஓ மதகரி

மன்னனே! என் மானங்கெட நினைத்த கீசகனை வாட்டாமல் மெய்மறந்து உறங்குவது யாதோ? கவலையுள்ளவர்க்குக் கண் ணுறக்கம் வருமோ? நான் பட்டபாட்டைப் பார்த்திருந்த நீர் கொஞ்சமேனும் படபடப்பின்றி முற்றிலும் மறந்துவிட்டீரோ? நல்லது, எழுந்திரும் எழுந்திருமென்றாள். இவள் வருவதற்கு முன்னமே எண்ணமிட்டுக் கண்ணை மூடிக்கொண்டும் கலவரத்தி லிருந்த வீமசேனன் திடுக்கென்றெழுந்து ஓபேதையே! நீ இந்த வேளையில் தனித்து வருவானேன் என்றான். அந்தச் சொல் பொறுக்கமாட்டாமல் பாஞ்சாலிபதைத்து, ஆகா ஆரோ எவரோ ஏனைதானைவென்று கேட்கின்றீர். பாஞ்சால புத்திரியாயும் பாண்டவர்க்குப் பத்தினியாயும் இந்திரப்பிரஸ்தத்தி லிருந்த என்னை அஸ்தினபுரத்திற் கழைத்துச்சென்று நூறு துட்டரை வெளியிட்ட பட்டபுதேவி எனக்கிட்டமான மாமியென்று அவள் கிட்டவைத்துப்போய்ச் சொக்கட்டானுடித்தோற்றுத் திக்கெட்டு முள்ள துராதுரைகள் நிறைந்தசபையில் துர்ச்சாதனன் என் னையுமற்கட்டி யிழுத்துவரக் கர்னன் துரியோதனன் முதலிய பலரும் இகழ்ந்து துர்ப்பாஷைகள் வழங்க, அதனால் என் அங் கம் பங்கப்படுநாளில் வீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர், திரு தராஷ்டிரரும் ஊமைபோலிருக்க, நீங்களைவரும், ஐம்பொறி யடக்கியென்னும் ஆமைபோலிருக்க, ஆபத்பாந்தவனும் ஆதி மத்தியாந்தரகிதனும், ஆதிமூலப் பொருளும், அனந்தகல்யாண குணனும், யதுகுலமுதல்வனுமாகிய ஜநார்த்தனன் சன்மானத் துடன் என்மானங் காத்தருளினர்.

நீங்கள் அந்நாளிருந்த தன்மைபோலவே இந்நாளிலும் இருக்கப்போகிறீர்களென்று முன்ஜாக்கிரதை செய்ய முழுராத் திரியில் வந்ததென்றாள். நான் பிறந்தகத்திலும் புகுந்தகத்தி லும் அதிக செல்வமாய் ஓராயிரஞ் சேடியர் புடைசூழ்ந்து ஊழி யஞ்செய்ய வாழ்ந்திருந்தேன். உங்களை நம்பிக் கற்களும் முட் களுமுள்ள கானகமெங்குந் திரிந்தலைந்து கசங்கி வருந்திக் காய் கனியருந்திப் பன்னிரண்டு வருஷங் கழித்தேன். ஒரு வருஷம் அஞ்ஞாதவாசஞ் செய்வதற்கு உருமாறிப் பெயர் வேறுகொண்டு என்னிருகையுங் கன்றி, என்மெய்யொளியுங் குன்றிச் சிற்றேவல் புரிந்து வருங்காலையில், கொடிய கீசகனவன் இவ்வித அவ திப்படுத்தினன். பூமண்டலமுழுவதும் புகழ்பெற விளங்கிய தருமராஜனவர் வைதிக வேடம்பூண்டு ஒரு மார்க்கமாயிருக்

கின்றூர். திரிபுவனகண்டக ஜெயசிகாமணியாகிய விஜயன் பேடியுருவெடுத்து, நாடகத்தொழிலடுத்து, ஆடல் பாடல் தொடுத்து மூடுமுக்காடிட்டுக்கொண் டிருக்கின்றூர். நகுல சகாதேவர்களிருவரும்வெளியில்தத்தமக்கேற்றதொழிலில்அமைந்திருக்கிறூர்கள். இவர்களிடத்திலெல்லாஞ்சொல்லிக் காரியமென்ன ஒருலாபமுமில்லை. எனக்குரிய ஐவரில் உம்மைவிட மற்றேருருதவியில்லை. எனக்கு உற்றதுணை நீரே. வாயாற்கூறியசபதத்தையும் மனதால் நினைத்த குரோதத்தையும் முன்பின்பாராமல் முடிக்கத்தக்க பலசாலி நீராகையால், உம்மிடத்தில் என் குறையை முறையிட்டுக் கொண்டே னென்றூள்.

கொண்டலொத்த கூந்தலையுடைய பாஞ்சாலியின்மொழியை வீமன் கேட்டு, வெடுக்கென்றெழுந்து காரை காரியங்களை யோசித்து ஓ மாதே! புருஷர்களுக்குரிய ஆபரணம் பொறுமை. அதில் நீதிவழுவிய நிர்மூடரைக் கணப்போதாயினுந் தாமதியாமல் குப்புறத்தள்ளி யுதைத்தும் தலை பிளக்க மிதித்துக் கீர்த்தியை நிலைநாட்டுவதே சிறந்த ஆபரணமாம் கலனிறைந்த மங்கையருக்கு நலனிறைந்த ஆபரணம் நாணமென்பதுதான் ஸ்திரீ புருஷர்கள் கூடுங்காலத்திலும் அந்நாணம் நீங்காமல் சரசஞ்செய்து அனுபவிப்பதுவே பொற்பூஷணங்களிற் சிறந்த நற்பூஷணமாகும். இப்படியிருக்க, எனக்குப் போதுமான பலமிருந்தும், என்கைக்குத்தக்க கதாயுதமிருந்தும், தனஞ்சயனுக்கு சௌரிய பராக்கிரமமிருந்தும், காண்டீபமிருந்தும் என்னலாபம்? அஸ்தினபுரத்தில் சகுனியுடன் சூதாடித் தோற்றபொழுதும், உன்னை துச்சாதனன் இழுத்துவந்தபோதும், இராஜசபையில் மானபங்கம் பண்ணியபொழுதும், துரியோதனன், கர்னன், இவர்கள் வம்புவார்த்தை பிதற்றியபொழுதும், ஆற்றக்கூடாமல் உடல்பதறியெழுந்த எங்களை ஆத்திரப்படவேண்டாமென்று அடக்கிய அண்ணவானவர், இப்பொழுதும் இந்த விராடன் சபையில் உன்னைத் துரத்திவந்த கீசகனைக் கொல்லவெண்ணிய என் கோபக்குறி தெரிந்து சமிக்ஞையாகப் பேசிச் சாடைகாட்டித் தடுத்துவிட்டார். இவர் என்றென்றைக்கும் இத்தன்மையாயிருந்தால் எங்கள் மானமுங் கெட்டு, ஈனப்பட்டுப் போவோம் என்பதற்குச் சந்தேகமில்லையே. எங்களைச் சமயத்தில் மீறவொட்டாமல் சங்கடப்படுத்திவரும் தருமராஜனுண்டாகிய என்மனஸ்தாபத்தையும் துரியோதனுதியரால்

விளைந்திருக்கிற கோபத்தையும் இந்தக் கீசகன்பேரில் காட்டி, என்கீர்த்தியை நிலைநாட்டி, யானைமத்தகத்தைப்பிளக்கும் சிங்கம் போல் பாய்ந்து அவனுடலை வாட்டிக் குடலைப் பிடுங்குகிறேன். இனிமேல் இவன் விஷயத்தில் யார் குறுக்கிட்டாலும் நானும் பயப்படப்போகிறதும் இல்லை; இவனை உயிருடன் விடப்போகிறதுமில்லை; இவ்வுலகத்தில் அற்பர்களுடைய பெண்சாதிமார்களெல்லாரும் அதிக சௌக்கியமடைந்திருக்கும்போது விற்பனர்களாகிய எங்கள் பத்தினியான நீ மெலிந்து விசனப்படவெண்டிய விதியென்ன நல்லதாகட்டும். வல்லவருக்கு வாழ்க்கைப்பட்டும் இப்படி வருத்தப்படுகின்றோமேயென்று நீ சற்றும் மனமிளைக்காமல் இரு. மாதரசி! முன்னாளில் தீவினைவசத்தால் அகஸ்தியருக்கு அன்புடைய பத்தினியாகிய லோபாமுத்திரையென்பவள் தன் கணவனுக்குப் பணிவிடை செய்து, ஆகாரம் நித்திரையின்றி நெடுநாள் கஷ்டப்பட்டுப் பிறகு நல்வினைப் பயனால் சுபமும் சுகமும் கீர்த்தியும் பெற்றாள். இதன்றியும்.

யயாதிமகாராஜன் புத்திரியாகிய சுகன்னியானவள் சவனக மஹாமுனிவருக்குச் சிசுருஷைசெய்து, சிலநாள்வருத்தப்பட்டுப் பலநாளும் பாக்கியத்துடன் வாழ்ந்து, கண்ணியம் பெற்றுப் புண்ணியலோகமுற்றாள்.

வீமராஜன் மகளாகிய தமயந்தியானவள், பிள்ளைகளைப் பிரிந்து, புருஷனை நீங்கித் தனியவளாய்க் காட்டில் அலைந்து, கரும்பாம்பின் வாய்ப்பட்டு, வேடனால் வெளிப்படச் சிறியதாயார்வீட்டிற்சேர்ந்து, அங்கே குற்றேவல் செய்துகொண்டிருந்து, கொஞ்சநாளைக்குள் தாய்தந்தையை யடுத்துத் தூதுவிடுத்துப் பிரிவுற்றநாயகனைக் கண்டு கூடித் தன் சேயோடு மகிழ்ந்து சிறந்து வாழ்ந்திருந்தாள்.

இவ்வாறு எத்தனையோகோடி இராஜஸ்திரீகள் படாதபாடும் பட்டுக் கற்புக்கோ ரிடையூறுமின்றிப் பதம் பெற்றிருந்தார்கள். ஆகையால் தேவர்களானாலும் நல்வினை தீவினையை அனுபவித்தே தீரவேண்டும். இப்பொழுது நமக்குண்டாகிய துன்பம் இன்னும் மூப்பதுநாளைக்குமேல் இன்பத்தை விளைக்கக் காத்திருக்கின்றது. "பட்டவர் படத்திலிருப்பார்கள்" என்னும் பழமொழி யறியாயோ? அப்படிக்கு இருந்தபோதிலும், இந்தப் பகையை எந்தவிதத்திலும் சீக்கிரத்தில் நானே முடிக்கிறேன் பாக்யவதியே! அஞ்சவேண்டாமென்று வீமசேனன் சொன்னான்.

இவ்வார்த்தையைப் பாஞ்சாலிகேட்டு முரசக்கொடி முதல்வ னாகிய தருமராஜன் உமது குறிப்பையறிந்து கோபமேலிட வொட்டாமல் தணித்தாரென்று மனக்குறை கொள்ளவேண் டாம். நம்முடைய பகையாளி நிச்சயித்த பன்னிரண்டு வருட மூங் கழித்து, ஒருவருடம் அஞ்ஞாதவாசம் செய்யும்படியாக, இந்த விராடபுரத்திற்குவந்து கொஞ்சனாளாயிற்று. இன்னுஞ் சிலநாள் ஒருவரும் அறியாமலிருந்து காலம்போக்க வேண்டு மென்றும், இதற்குள்ளாக நம்மை யாவரேனுங் கண்டால், பகை வெல்லவந்த நற்காலம் துற்காலமாமென்றும், பழையபடி வன வாசம்பண்ண வருமென்றும், அதனால் உங்கள் சீருஞ்சிறப்பும் சபதமும் பலவீனப்படுமென்றும் நினைத்து, உம்மை அவசரப் படவொட்டாமல் அடக்கினர். அவர் காலதேசவர்த்தமானம் தெரிந்த புத்திமானுகையால் உமது வெகுளியைக் கண்டவுடன் அடக்கவேண்டிய கடமைதான். அதனால் அவர்பேரில் தோஷ மில்லை. இந்தப் பஞ்சையாகிய கீசகன் என்னைக் கொஞ்சமாக நினைத்தான் அவனை நான் பார்த்து அடா பாவகாரி! உனக்குக் கேடுகாலம் நேரிட்டதடா துரோகி எனக்குக் காந்தருவர் ஐந்து பேர் கணவர்கள். மிகுந்த திடவான்கள் சத்துருவை வீர சொர்க்கஞ் சேர்க்கும். விஷயத்தில் மகாவல்லவர்கள். மித் துருவானவர்களுக்கு உத்தம குணமுள்ள நல்லவர்கள் எல்லா மறிந்தவர்கள். பொல்லாங்கொழிந்தவர்கள். எங்குமிருப்பவர் கள். நீ செய்த தீமைகள் அனைத்தையும் தெரிந்துகொள்ளத் தக்க ஞானமுள்ளவர்கள். சொல்லாமற் சொல்லிக்கொள்ளா மற் கொல்லத்தக்கவர்கள். நீயும் உன் குடும்பமும் நீரூயழி யாதோ என்று பல நீதிகளையும் பழமையாய் நடந்திருக்கிற சில சேதிகளையுஞ் சொன்னேன். அந்தக் கீசகன் நான் சொல் லியவற்றை அலட்சியஞ்செய்து போபோ! அவர்கள் எத்தகைய காந்தருவ ராலுலும் என்முன்னிற்பார்களோ? என்று ஏசித் துரத்திக்கொண்டுவந்தான். அந்தப் பதிதன் உமக்குமுன் எதிர்ப் படுவானுகில் என்ன பாடுபடான். கருடனது நிழல்பட்ட பாம்பு போல் கெடுவான். என்மனம்பற்றி எரிகிறதே. அந்த நாசகா லக் கீசகன் வந்தவழி போனவழி தெரியாமல், நொந்தழியும் படி நீர் பிரவேசிக்க வேண்டும். ஆனால் ஆத்திரப்படாதேயும். இன்னும் இரண்டொரு நாள் காலதாமசஞ் செய்து அவனை முடித்தால், விரதசாரணிக்கு அன்பர்களாகிய காந்தருவன்

கீசகனைப்பிடித்துத் துடிதுடிக்க அடித்து முடித்து விட்டார்க ளென்று பேசிக்கொள்வார்கள். அப்போது உம்பால் சந்தேகங் கொள்ளுவதற் கிடமிராது. ஆகையால், உமது யுக்திக்கு இசைந்தபடி பார்த்துக்கொள்ளுமென்று துரௌபதை சொன் னாள். அந்தக்கற்புடையாள் வார்த்தையை மீமன்கேட்டுப் பாஞ் சாலியே! கீசகனைக்குறித்துக் கிஞ்சித்தேனும் நீ யோசிக்க வேண்டாம். அவனென்றைக்கு உன்னைத் தொடர்ந்தானோ அன்றைக்கே அழிந்தானென்று நம்பு. உன்னிஷ்டமெப்படியோ அப்படியே அவனுயிரை நஷ்டப்படுத்தி விடுகிறேன்.

ஆனால், இப்போது விடியற்காலமாயிற்று. இனி நாம் அக்காரியத்திற்குப் பிரவேசித்தால் அஞ்ஞாதவாசரகசியம் வெளிப்பட்டுப்போய்விடும். தருமபுத்திரர் சித்தத்திற்கு மெத்த வருத்தஞ் சம்பவிக்கும். அன்னமே! நீ முன்பு சொன்னவண் ணமே எண்ணித்துணிவது கருமமாதலால் இன்றிரவு முழுமை யும் நாளைப்பகல் முப்பது நாழிகையும் பொறுத்து நாளிரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். நீ அந்தச் சுதர்க்கணைமாளி கைக்குப் போய்விடுவையாகில, அத்துற்புத்தியுள்ள கீசகன் நாளைக்காலை உன்னிடத்திற்குவந்து இறுமாந்து கர்வங்கொண்டு இப்பொழுது என்னசொல்லுகிறாய் ஓ விரதசாரணி நான் உன்னைத் துரத்திவந்தபோது என்னை யார்கேட்டார்கள்? யார் தடுத்தார்கள்? எனக்கும் எதிரில்லை உனக்குந் திக்கில்லையென்று சொல்லி மகா தாராளமாய் கிட்டிப்பேசுவான். அவனை நீபார்த்த வுடன் அன்புள்ளவளைப்போல் அரைக்கண் பார்வை நாட்டி அதிக மோகமுகநய ஜாடைகாட்டி ஆசைவிநய அபிநயம் புக ட்டி, மோக விஷயத்தை முடிமேலேற்றி, உன் கற்புக்குமாத்தி ரம் பழுதில்லாமல், அக்கயவனுடன் கலந்துபேசி விராடபுரத் திற்கு மேற்கில் மாஞ்சோலை சூழ்ந்த வசந்த மண்டபத்தில் நாளையராத்திரி பத்து நாழிகைக்கு அவனை வரும்படியாக பக் குவப் படுத்திக்கொள்ளென்று யுக்தி சொல்லி திரௌபதையை அனுப்பிவிட்டுத் தருமராஜனுக்கினைய சத்தியவிரதனும் கரு மலைப்போல் வளர்ந்த இருபுஜமுள்ளவனும் பதினுயிரம் யானைப் பலம் பெற்றவனுமான வீமசேனன் நெய்வார்த்த நெருப்பெனப் பொங்கி, முகம்வேர்த்து நித்திரை பிடியாமல் சித்தம் பிரமித்து பகலிரவென்று பாராமல் தான் குறித்த கால அளவைக் கருதிச் சுடசுட வேலை முடிப்பதற்கில்லையேயென்று மனக் கலக்கங்

கொண்டு படுக்கையில் மல்லாந்து எண்ணமிட்டுக்கொண்டு இருந்தான்.

இத்தன்மையாய் இருந்த வீமனிடத்தில் விடைகொண்டு சென்ற விரதசாரணியானவள் சுதர்க்கணை மாளிகைக்குப்போய் பொழுதுவிடியுமளவும் ஒருவிதமாக முகஞ் சுளித்துக்கொண்டு இருந்தாள். அப்படிக்கிருந்த பாஞ்சாலியின் மனதுக்கத்தைப் பரிகரிப்பதுபோல் ஒளியைக்கூட்டி இருளையோட்டி அவள் முகத்தைமலரச் செய்வதுபோல், தாமரைப்புட்பங்களை மலரக்காட்டி கதிர்க்கிரணங்களை நீட்டிக்கொண்டு சூரியன் உதயமானன்.

அழகிய உதயகிரியிலெழுந்த ஆதித்தனைக்கண்ட சைரந்திரியானவள் வழக்கப்படி காலைக்கடனை முடித்துச் சுதகூஷ்ணை தேவிக்கு மலரெடுத்துத் தொடுத்துக் கொடுப்பதற்குப் பூஞ்சோலைக்குட் புகுந்து வரும்போது, இராஜஸ்திரீயாகிய சுதர்க்கணை முன் தன்னை நிந்தித்த நிர்ப்பாக்கியத்தால் மனம்வருந்திப் போன கீசகன் தன் தமக்கையைச் சிந்தித்து கூமைகேட்டுக் கொண்டு வருவோமென்று நினைத்து மத்தமாருத முலாவிய நந்தவனத்தில் வந்தான். அவன் வந்தவழியில் சந்திரவுதயம் போல் கொந்தமலர் பறித்துக்கொண்டு நின்ற கோதையானவள் அந்தகனைக்கண்ட ஆத்மரைப்போல்நடுங்கித்தெளிந்த ஜிதேந்திரியர்களைப் போல உடனேதேறி மனந் தளராமல் சங்கடப்படாமல் தள்ளாடிஓடாமல் தவித்துவாடாமல் சற்றும் அச்சமில்லாமல் தலைகுனிந்து தன்கால் புறவடியைப்பார்த்து நிமிடத்திற் கொருதரம்கீசகன்முகத்தைநோக்கிப்புன்னகைகொட்டி அவனது துற்புத்தி படருவதற்குத் தானே கொழுகொம்பாகி வீமனிடத்தில்பேசிக்கொண்ட சங்கேதப்படி அதைச்செய்யவெண்ணினாள்.

இவ்விடத்தில் கற்புநிலை தவறாமல் பொற்பிரதமைபோல் இருந்த மாலினியைப் பழிவழிக்குவந்த முழுமூடன் பார்த்துச் சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல் பெருகிச் சந்திரகாந்தக் கல்லைப்போல் உருகிச் செல்வத்தைக்கண்ட தரித்திரன்போல் மகிழ்ந்து, கல்விப்பொருளில் கற்பனையலங்கார கவிதைமேற்கொண்ட கனவான்போல் முகம்மலர்ந்து, விழிகுளிர்ந்து, அவள் கால் முதல் தலைவரையில் இமையாமல்பார்த்துத் தன் அறிவுகெட்டு, அற்பபுத்தி மேலிட்டுத் திக்குநோக்கிக் கும்பிட்டு ஓவிரதசாரணி! எனக்குப் பிராணதாரம் நீயன்றி வேறில்லை. நான் சொல்லப் போகிறதை நன்றாய்க்கேள். இந்தப் பட்டினமும் இந்நாட்டு

வளப்பமும் விராடனுடைய வாழ்க்கையும் என்தமக்கை மங்கிலிய சூத்திரமும் இதோ என் இடதுகையில் முடிவைத்திருக்கிறேன். என்கையை விரித்துவிட்டால் அதெல்லாம் தூருவாசர் சாபத்தால் சமுத்திரம்போல் அழுந்திய தேவேந்திரன் செல்வம்போல் ஆய்விடும். என்னை என்னமோவென்று எண்ணாதே. முன்னமே என்வல்லமை யாவுஞ் சொல்லியிருக்கிறேன். உன்னை நான் துரத்திவந்தபொழுது யாரென்னைத் தடுத்தார்கள்? எவர்கள் என் அருகில் வந்தார்கள்? விராடராஜனுவது எனிப்படிச் செய்தா யென்று கேட்டானு? உனக்காகிலும் உதவி ஒத்தாசைசெய்தானு? ஒன்றுமில்லையே. இன்னும் நான் சொல்லவேண்டுமா? இந்த வேலை என்னையல்லாமல் இன்னொருவன் செய்திருப்பானுகில், இந்நேரம் அவனை எமலோகத்தில் புழுவாய்த் துடிக்கச் செய்வான். எல்லோரும் என்காலில் வீழ்வதினுல் சகலமும் எனக்கே சொந்தமென்று உனக்குத் தெரியவில்லையா? இந்தவிராடனுக்கு நான் கட்டிவைத்திருக்கிற பட்டத்தை இப்பொழுதே உனக்குக் கட்டி உன்னைப் பெண்ணரசியாக்கிவைக்கிறேன். வேண்டுமானுல் பிரத்தியக்ஷமாய்ப் பார். இதன்றியும் உன்னைக் காக்குங் கந்தருவருண்டென்று பேதைமதியால் நம்பிப் பெருமோசம் பேசுகின்றாய். என்னைப் பேசா தும்பேசிக் கருக்குறாய். வீண்கர்வங்கொண்டு செருக்குறாய். இப்பேர்ப்பட்ட நிதியில் உதவிசெய்ய வராதவர்களை உனக்கு உரியவர்களென்று எண்ணலாமோ? அவர்கள் பண்டவாளத்தையும் பக்ஷத்தையுங் கண்டுகொண்ட நீ இனி வேறு பேசப்போமோ? அற்ப மனிதர் பேச்சு அவலமாய்ப் போச்சு. நான் யாருக்கும் அடங்காதவன்; யார்படைக்குந் தேராதவன். என்னைக்குறித்து இன்னுமென்ன சொல்லப்போகிறாய்? உன் எண்ணந்தானென்ன? அடிவண்ணமாமகளே! ஒருவேளை என்பேரில் எத்தனையோ குற்றமிருக்கலாம். சிறியோர் செய்த பிழையைப் பெரியோர் பொறுக்கவேண்டுமென்று புண்ணியவான்கள் பேசியிருக்கிறார்கள். அந்த வார்த்தைக்கு விக்கினம் இல்லாமல் மன்னித்து, என்னரக்ஷித்து பொறுமையுடன் ஆதரிப்பது உன்கிருபைக்குரிய கடனென்று தன் இருகரத்தையுந் தலைமேல் குவித்துச் சேவித்து உன்கல்மனம் இளகி என்கருத்து முற்றுறச் செய்யவேண்டுமென்று காலில் வீழ்ந்தான்.

அவனை மாலினி பார்த்து, முகநயத்துடன் முறுவலுங் காட்டி, நாம் நினைத்தகாரியம் இன்றைக்கு நிறைவேறுமென்று

மாயச்சாயல் மயக்கநோக்கம் வஞ்சனைப்பேச்சு முதலிய மார்க்கங் களினுல் வசனிக்கத் தொடங்கினுள். வாரும் கீசகராஜனே! நான் உம்மைத் தடுத்ததும் விரகதாபப்பட விடுத்ததும் எதினுலென் ரூல்; எனது மேலானமரபினுலும் நல்லொழுக்கத்தினுலும் நான் கொண்டிருந்த விரதத்தினுலும், உமது எண்ணத்தை பின்னப் படுத்தினேன். நீர் என்மேல் ஆசைப்படுமுன்னம் நான் உம் மேல் பாசங்கொண்டிருந்தேன். அதல்லாமலும், நீரென்மேல் வைத்தமோகம் நிலையான துவோ? நெறியான துவோ? வேறுரு பெண்ணைக் கண்டால் பின்வாங்குமோ? மனந் தேங்குமோ? என் னமோ ஆண்பிள்ளைகளின் புத்தி சபலமாமே என்று சோதிக்கும் நிமித்தமாக இஷ்டமில்லாதவள்போல் அபிநயித்தேன். என் மெய்த்தொட்டிருந்த காந்தருவர் ஐவரும் என்னைக் கைவிட் டார்போலுங் காண்கிறது. இனிக் காரியமில்லை. ஓ வீரியவானே! என்மேல் காவலுமில்லை. நிராதரவான என்னைத் தராதரமறி யத்தக்க நீர் அபேக்ஷித்த பொழுதே நான் புனிதவதியானேன். என்னைப் பெண்டாள நினைத்த உமக்குச் சிக்கிரத்தில் மேலான பாக்கியமுண்டாம். என்னுல் உமக்கு விளைந்த வருத்தம் இன்று கூண்டோடு போய்விடும். பெண்களின் குணமறிந்திருந்தும் வீணை இத்தனை தூரம் பிரபலப் படுத்திவைத்தீர். நீர் காணுது கண்டு கருதி மோகித்ததும், வீணைகொண்டு விருதாப் பழிசுமந்ததும், நான் நாணுது நாணி நலிய வாதித்த தும், நீரென்னைப் பிடிக்க வந்ததும், நான் இராஜ சபை யில் ஓடி விழுந்ததும் ஊர்நாடெல்லாஞ் சிரிக்க உடம்பெடுத்த தும் ஏதோ காலவித்தியாசம் கடந்துபோய் விட்டது. போனது போகட்டும். இவ்வுலகத்தில் ஆலகாலவிடத்தையும் அந்தகனையும் யானைக் கவட்டையும் வெங்கைப் புலியையும் அறிவில்லா மூடரையும் ஒருவாறு நம்பலாம். சேலைகட்டு மாத ரைச் சிறிதும் நம்பப்படாது. அது எவ்வாறென்னில், இந்தி ரன்முதலாகிய கந்தருவர்வந்து, ஆடையாபரணந்தந்து ஆசைப் பட்டாலும், ஸ்திரீகள் தாங்கள் கொண்டமையை வெளிப் படுத்தாமல் ஆசையற்றவர்போல் முகத்தைச் சுளித்து, முடுக் காய் முறுக்கி ஏன் என்னைப் பார்க்கிறாய்? நானென்ன வேசியா? தாசியா? உங்களுக்குத் தங்கை தமக்கையில்லையா? எங்கள் வீட் டார் கண்டால் சும்மாவிடுவார்களா? என்று தலைகுனிந்து, கல கலவென்று கண்ணீர்சொரிந்து, சிறுநகைகாட்டிக் குறுவியர்வு

வழித்தெரிந்து, மாராக்குத்துணியைப் பத்துதர மிழுத்திழுத்துச் சொருகி, வாயைமூடிக் கையைநெறித்து, ஜாலமான மாயவித்தையைக்காட்டிக் கால்கடுக்க நிற்பானேனென்று தனக்குத்தானே பேசிக்கொண்டு அப்பால் சிறிதுதூரம்போய் இப்பால் வந்து எட்டிப்பார்த்து, ஒருபக்கத்திலொதுங்கி தலையை நீட்டிக்காட்டி மறைந்து மறுபடியுங்கிட்டி உறவுபோல்கலந்து உடனே ஓடி கூடிக்கலந்து கூடித்திரிவர். இது பெண்களின் கெட்டசுபாவம். இப்பேர்ப்பட்டவர்கள் மனதை எப்படித் தெரிந்துகொள்ளலாமென்றால், அன்னியப்பெண்டுகளாவது தாதிமார் முதலியவேலைக்காரிகளாவது குழந்தைகளாவது கிட்டநின்றால், அவர்கள்பேரில் விழுந்தும் வல்லிக்கொடிபோல் துவண்டு வளைந்து எழுந்தும் பிள்ளையை அணைத்துக் கொஞ்சி முததாடியும் புஷ்பத்தை முகந்தும் பெருமையாக டம்பம்பேசியும் விருதாவாய் ஒருவரையேசியும் சொற்பமான பேச்சுகளை ஓடியமாய்ச் சொல்லியுங் கூசுவார்கள். நாயகன் அவர்களைப் பார்த்தால் அப்போது நிலத்தை நோக்குவார்கள். நாயகன் அவர்களைப் பாராத போதுதலையெடுத்துச் சோரபுருஷனை நன்றாய்ப்பார்த்து நாணி நகைப்பார்கள். இப்படி இன்னும் அநேக ஜாலதந்திரங்களுண்டு இந்தக் குறிப்புகளையெல்லாம் வேறுபாடில்லாமல், சரசநாயகன் தெரிந்து மேளத்திற்குத் தகுந்த தாளம்போட்டு எண்ணத்தை முடித்துக்கொள்வான். மற்றவன் கண்டால் சங்கதி யறியாமல் இதெப்படிபோமோ? என்னவாமோ? என்று பயந்து ஓடிப்போவான். ஆதலால் பெண்கள் கொண்ட புருஷவிகாரமானது லோபியர் பொருள்போல் அழுந்தி யிருக்கும் ஆண்பிள்ளைகள் கொண்ட மோகமானது கல்லாதான்கற்ற கவியைப்போல் வெளியாய்ப்போம். இந்தக்காரியந் தெரியாமல், அவசரப்பட்டவர்கள் பலன் அடையார்கள். நீரும் அவ்வாறே ஆத்திரப்பட்டுவிட்டீர். இப்போதுதானென்ன? உமது இஷ்டத்தை என்னிஷ்டப்படி முடிப்பதனால் பாபமில்லை.உமக்குள்ள காமவெள்ளத்தைக் கடந்து கரையேறுவதற்கு வழிகாட்டுகின்றேன். நீர் கள்ளமில்லாமல் வாரும். எத்தனைவித சாகசங்கற்றிருந்தாலும் உள்வீட்டில் கரணம்போடலாகாது? என் கணவராகிய கந்தருவர்கள் ஒருவேளையிந்தச்சேதிதெரிந்து வந்துவிட்டால் உம்முயிரும்போம், என் தலைமயிரும்போம். அன்றியும், நேற்று என்னைத்துரத்திய உம்மை இந்நாட்டிலுள்ள பெண்க

ளும் புருஷர்களும் அரசன் முதலிய அனைவரும் நன்முயறிந் தார்கள். லோகப்பிரசித்தியாயிற்று. அப்படியிருக்க, நாமிருவ ரும் இன்றைக்கு உறவாடுவதைப் பார்த்தால் எல்லோரும் மிக்க எளிதஞ்செய்து என்னைப் பழிப்பார்கள்.

உம்முடைய தமக்கையாகிய சுதர்க்கணைக்குத் தெரிந்தால் என்னைச் சுத்தமாய் நம்பமாட்டாள். இதுவரையிலும் நான் பிழைத்த பிழைப்பு பேய்ப்பிழைப்பாய் ஆய்விடும். அதன்றியும் அநேக பொல்லாங்குகள் விளையும். நல்லதல்ல, சந்தனமணிந்த தோளனே! நீர் இன்றிரவில் பத்து நாழிகைக்குமேல் வருவீரா கில், உம்மிஷ்டப்படி முடியுமென்று பாஞ்சாலி சொன்னாள். அந்தத் தேன்மொழியானது கீசகன் காதிற் புகுந்து அமுத தாரைபோல் விரகாக்கினியை ஆற்றியபோது வெளியெழும்பிப் போக வழிபார்த்திருந்த பிராணன் நிலைத்து, இளைத்த உடம்பும் பூரித்துக் துன்பக்களை நீங்கி, இன்பப்பயிரேறத் தேகம் பரவச மடைந்து, மோகஞ் சிறந்து ஓமேகங்கண்டாடுமயிலே! இப்போ தல்லவோ உன் சொல்லாலாகிய ஆபரணம் என்காதிற் கணியா யிற்று. இந்தக் கர்மபூமியில் உடலெடுத்த பயன் இன்றுதான் பயனுற்றது. துர்பலனை நான் நற்பலனுற்றேன். என்பாவங் கள் யாவும் பறந்தோடிப்போயிற்று. நானிதுவரையினும் பண் ணிய புண்ணியம் இன்றே ஈடேறியது, என் பாக்கியமே பாக்கி யம். நான் பிழைப்பதற்குத் துணைக்காரணமானது உன் வாக்கி யமே வாக்கியமென்று வாய்புதைத்துக் கைகட்டி மெய்யொடுங்கி வணங்கிப் பணிந்து, என் ஆவியே! பாவியாகிய நான் எவ்வி டத்திற்கு வரும்படியாய்க் கட்டளையிட்டருளுகிறீர்? என்னிஷ்ட காமியமே! என்று கேட்டான். வாரும் ரசிகனே! விராட ராஜனது கோட்டைக்கு மேலண்டையிலிருக்கின்ற மாஞ்சோலை யில் குயில்கள் கூவவும், மயில்களாடவும், கிளிகள் கொஞ்சவும், அளிகள் மிஞ்சவுமாகவுள்ள அழகிய பளிங்குக்கற்களால் கட் டிய வசந்த மண்டபத்தில் வந்துசேரும். நீர் வருமுன்னமே நான் வந்திருக்கிறேன். மலைகள் பேரிலும் ஓட்டுந தேரினை யுடைய வல்லவனே! இப்போது நான் சொன்ன இடம் சந்தடி யற்ற விடமல்லவா? என விரதசாரணி வினவினாள்.

அம்மொழியைக்கேட்ட கீசகன் ஆஹா! அதுவே எனக் கும் தகுந்த இடம். தேவீர் திருவாய்மலர்ந்தவண்ணம் சிக்கிரம் வருகிறேன். உமது திருமேனி புழுதிபடிந்து அசுத்தமாயிருக்

கிறதென்று கூச்சம்வேண்டாம். உமக்கு நல்லநல்ல ஆபரணங்களும் வீலையேறப்பெற்ற வஸ்திரங்களும் புனுகு - சவ்வாது கதம்பம் - கஸ்தூரி - அத்தர் - பன்னீர் முதலிய பூச்சுவைகளும், புட்பச்செண்டுகளும் பஞ்சகச்சாய பரமான்னமும் பலகாரங்களும் பழவர்க்கங்களும் பஞ்சவிடைய தாம்பூலங்களும் என் தலைமேல் சுமந்துகொண்டுவருகிறேன். நீர் அவைகளை அங்கீகரித்து என் கோரிக்கையை ஈடேற்றவேண்டும். கோமளமே! என்குலதெய்வமே! சித்தசன் கொலுக்கூடத்திற்கமைத்த பொக்கிஷமே! என் பிராணனை உமக்கே ஒப்புவித்தேன். இதைவிடவேறே யுபசாரஞ்சொல்ல அறியேன். அடிமை சிறியேன் என்னுயிருள்ளமட்டும் உம்மைநான் பிரியேன். மறுமாதரை நோக்கேன். என்மேல் கிருபை வைக்கவேண்டுமென்று செலவு பெற்றுக்கொண்டு காலவிடத்தைத் தாகத்திற்கு உட்கொள்ளக்கருதிய தரித்திரன்போல் கீசகன்சென்று இந்தச் சூரியனைப்பொழுது தொலைவானென்று அந்தகன் பாசந் தன்னைக் கலக்கும் அஸ்தமனத்தை நாடியிருந்தான்.

இப்பால், கொலைசெய்யுங் கூர்வேல்போன்ற கண்ணுளாகிய பாஞ்சாலி சுதர்க்கணை மனைக்குப்போய் பூமாலைதொடுத்துப் பூசுவனவுங் கொடுத்து அவளுத்தரவின்பேரில் மடைப்பள்ளிக்குச்சென்று, 'மதகிரி வீமனைக்கண்டு நாம் பேசிக்கொண்டபடி அவனை இசையச்செய்துக் கொண்டேன். அப்பால் தெய்வச்செயலெப்படியோ என்றுள். அந்தத் திரௌபதையை வீமசேனன் பார்த்து, ஓ காதலி! நீயேன் கவலைப்படுகிறாய்? ஒருவேளை அந்தக் கீசகன் வராமற் போவானுகில், அவனுடைய வீட்டுக்கு நானேபோய்க் கொல்லுகிறேன். அஞ்ஞாதவாசதவணைக்குள் இவ்வூரார் அறிவார்களே யென்று யோசிப்பையாகில், இந்த விராடபுரத்திலுண்டாகிய ஆண்பெண் அடங்கலுங்கொன்று துரியோதனுதியருக்குச் சேதிதெரியாமல் பண்ணுகிறேன். ஒருவேளை துரியோதனனறிந்து பெரும்படை கொண்டுவந்து அஞ்ஞாதவாசம் பூரணமாய் நிறைவேறுமல் குறைவுபட்டுக் கெட்டுப்போனபடியால், மறுபடியும் பன்னிரண்டுவருஷம் வனவாசம் பண்ணவேண்டிய நிபந்தனைப்படிப் போகவேண்டுமென்று புகன்றுனுகில், அப்போதேயந்தத் துரியோதனனையும் கௌரவரையுங் கொன்று, பள்ளத்திற் புதைத்து அஸ்தினபுரம் விராடபுரம் உபலாவிய முதலிய பதிகளுக்கெல்லாம் தருமராஜனை அர

சனுக்கி வைத்து, எல்லோருங் கொண்டாட எங்கும் பிரக்கியாதி யாயிருப்பேன். சண்டிபுரண்டால் காடுகொள்ளாதென்னும் சங் கதியறியாயோ? சமுத்திரத் தடையாயிருப்பது கரையினுலேயா? சத்தியத்தினுலேயா? பாஞ்சாலி! நீ யாதொன்றுக்கும் பயப்பட வேண்டாம் போவென்றனுப்பினுன்.

அவ்வாறே செலவு பெற்றுக்கொண்ட திரௌபதையான வள் வீமசேனனைப் பார்த்து, ஓ கெடிவீரசிங்கமே! அங்கம் பங் கப்பட்டழியப்போகிற கீசகன் என் சொல்லை நம்பி எப்படியுந் தப்பாமல் வருவான். நீரின்று இரவில் வந்து, ஜாலஞ் செய் யாமல், சந்தடி காட்டாமல் வேலையை முடிக்கவேண்டும் வேந் தனே! இப்படியாக இதனை நடத்திவிட்டால் சாந்தமூர்த்தியா கிய தர்மராஜனுடைய சித்தங்களிக்கும். இந்தச்சொல் வெளிப் படுமாகில் நமதெண்ணமெல்லா மழிந்துபோய்விடும். அன்றி யும் பதிவிரதையைக் கருதிய பாவியாகிய கீசகன் பாழாய்ப்போ னன் பார்த்தீர்களாவென்று உலகிலுள்ள பதிவிரதைகள் மகத் துவமாய்ச் சொல்லிக்கொள்ளும் வார்த்தைக்கு இடமில்லாது போம். பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் பண்ணும்போது தவ ணையொருவருஷங் கடப்பதற்கு முன்னதாய் வெளிப்பட்டு விட் டார்கள் சொற்சோர்வுடையவர்கள் பஞ்சவர் பேச்சுப் பஞ்சுபோ லாச்சே, பாரும் பாருமென்று யாரும் நகைப்பார்கள். நீங்காப் பழிச்சொல் நிலையாய் நிற்கும். ஆகையால் நீர் மனம்பொறுத்து அவசரப்படாமல், ஆடம்பரங்காட்டாமல், யாருமறியாமல், அட க்கமாய் முடிக்கவேண்டுமென்று கூறினுள்: அந்தமொழியைக் கேட்ட பலாயனன் சிந்தை மகிழ்ந்து, நல்லதப்படியே யாகட் டும். நீ மாத்திரம் பிறரறியாமல் விரைவாய் அவ்விடம் வந்து சேரென்று, தலைவாசல்வரையிலும் வந்து விடைதந்து இந்தச் சூரியன் எப்பொழுது தொலைவானென்பதாய்ச் சிந்தைவருந்தித் தியங்கியிருந்தான்.

இவ்விடத்தில் திரௌபதையானவள் சுதர்க்கணைக்குவேண் டிய சித்திரான்னமும் திவ்வியமணக்குழம்பும் கச்சாயவிதங்களும் கதம்பப் பொரியலும் அறுசுவையுண்டியும் சுயம்பாகனுய் வீம னிடத்தில் வாங்கிவந்து கொடுத்து வழக்கப்படிக்கு வேடிக்கை யாக விளையாடிச் சந்தனுதி கந்தந் திமிர்ந்து சிநதைநோயற்ற செல்வியைப்போல் கபடமில்லாமல் யாருடனுங்கலந்துஉறவாடி களங்கரகிதமாய்க் காலம் பார்த்திருந்தாள். அப்படியிருக்கும்

போது, எட்டுத் திக்குங் கெட்டழிந்தோடிய இருளெல்லாந் திர ளாகச் சேர்ந்து தங்கள் பகையாகிய சூரியனைவெல்ல வந்தவாறு போல் சூழ்ந்துகொண்டது. அவ்விருளைக்கண்டு பாபத்திற்குப் பயந்தோடும் பாக்கியவான்களைப்போல், புண்ணியப் பொரு ளாகியவெய்யோன் மேற்றிசைபுகுந்து அஸ்தமனகிரியையடைந் தான். அக்காலத்தில் அளவிறந்த ஆசையை யடைத்து வைத் திருந்த கீசகனனவன் தான் மோசம் போவதறியாமல், வண் ணப்பெண்மேல் கொண்ட மதவிகாரத்தினுல் வாசநீரில் தோய்ந் து, பூஜாவிதி முடித்துப் போஜனமுண்டு, இளைப்பாறவுஞ் சம யமில்லாமல், சந்தன குங்கும சிந்துரபாளித கந்தகதம்ப மிகுந்த சுகந்த நிறைந்த மகரந்தமலர்மாலையும் நவமணிபதித்த அழகிய ஆபரணமும் சித்திரித் தெழுத்தினிற் பிரித்துக் கோத்து முத்து வைத்திழைத்த சரிகைகள் சுற்றிய வஸ்திரமும் கொத்துச் சரப் பளி ரத்னமுருகு முத்திரைமோதிரம் அஸ்தகடகம், விசித்திர மகுடம், பவித்திர முதலிய ஆபரணங்களும் அணிந்து, வாசனை தாம்பூலமும் போஜனபாயச பொரிவிளங்காயும் பண்டுபலாதிக ளுங் கொண்டு, கருத்த இருளில் காலால் வழிதேடி அந்தக னிருக்குந் திக்குநோக்கிச் செல்வதுபோல், அந்தமாலினிசொன்ன வார்த்தையை நிசமென்று நம்பிச் சுதர்க்கணைதம்பி மாஞ்சோலை யிலிருக்கிற வசந்தனுக் கிசைந்த மண்டபத்தை நாடி ஓடிவந் தான்.

இவ்விதமாகவந்த கீசகனுடைய பிராணனென்னும் பனி யைக்கெடுக்கப் புகுந்த சூரியன்போன்ற பாஞ்சாலியானவள் இரவு தோன்றியவுடனே விரைவில் ஸ்நானஞ் செய்து, நித்ய ஜெபமுடித்துச் சூரியன் முதலிய தேவர்களைத்தொழுது, அந்தப் புரம் விட்டுப் புறப்பட்டுச், சத்துருக்கள் உயிரையும் சமையல் வேலைகளையும் இம் என்பதற்குமுன் முடிக்கத்தக்க செம்பொன் மலையை நிகர்த்த தோளும் வீரகண்டை தாங்குந்தாளும், உடை வாளுமுடைய வீமசேனனிடத்திற்குப்போய் விரைவிற் புறப்படு மென்றுள். அவள் சொல்லைக் கேட்ட வீமசேனன் எந்தவேட மெடுக்க நினைத்தாலும், அவனிஷ்டப்படிக்கு அமைய வரங் கொடுத்திருக்கும் எமதருமராஜனருளினுல் சகலாபரண வலங் கார சௌந்தரியப் பெண்ணுருவெடுத்துக் கையில் அள்ளிக் கொள்ளத்தக்கதாய்க் கலந்த நல்லிருளில் மெல்லச் சென்று, கீசகக்கள்ளன் வருவானே வாரானே என்று கவலை கொண்டு,

கனகமயவுசித சிகரமாடமுடைய பளிங்கு மண்டபத்தை அடுத்துத் தெய்வப்பெண்ணென திரௌபதாதேவியை அவ்விடத்திலொளித்து, வண்ணமகள்போலாகிய தன்னுருவத்தைத் தூணில் மறைத்துக் கண்சிமிட்டாமல் காட்டுவழிமேல் நாட்டம் வைத்திருந்தான்.

அந்தவேளையில் செத்த பிணமானது மெத்த பணிபூண்டு வருவதுபோலும், எக்கியத்திற்கிசைந்த நெய்யை நக்கிப் புசிக்க வரும் நாய்போலும் வருகிற கீசகன் உயர்ந்த மாமரச்சோலையில் சாந்தினுல் மெருகிட்ட தாவல்யமான வசந்த மண்டபத்தைக் கண்டு கெண்டையங்கண்ணுளிங்குவந்தாளோ? வந்து என்னைக் காணுமையால் சென்றுளோ? மறைந்திருந்து மனஞ் சோதிக்கின்றுளோ? என்னமோ? அவளெண்ணம் அறியேன். வாசப் பூமலர்மேனிமானே! என்னுசைக்கோ ரளிமதுரத் தேனே! மதன் படையை வாட்டவந்த துணையே! மாதவத்தை யழிக்கும் விழிக் கணையே! என்று கூவிக்கொண்டுவந்த கீசகராஜனை ஆஜானு பாகுவினையுடைய தண்டதரனுகிய வீமன்கண்டு, வெட்கங்கொண் டொதுங்கும் பெண்களைப்போல் அந்தத்தூண்மறைவில்ஒதுங்கி தலையை நாட்டிச் சந்திரபிம்பமுகங் காட்டி இன்னும் பற்பல அபிநயங்களால் அவனைப் பேய்போலாட்டி, அடங்கிக் கிடந்த காமத்தீயைத் தொடங்கச்செய்த சீமாட்டியை அந்தக் கீசகன் கண்ணுருவங் கண்டு, பெண்ணுருவெனச் சிந்தையுட்கொண்டு குனிந்து நேராக அத்தையல் கால்மேற் பணிந்து வாராய், தாராய், கும்மென்றிருக்கின்ற இவ்வனத்தில் என்னை ஒருபொருளாய் மதித்து, என்பேரிலிஷ்டம் வைத்து, இத்தனை தூரம்தனித்துக் கால்வருந்தத்தக்கதாக வரும்படிப் பொருந்துகின்ற தவம் யாருடையதோ! இத்தலம்புரிதவமோ! வலம்புரிக்கழுத்தினையுடையமாதே அறியேனறியேன். காலதாமதமாச்சுதே என்று கோபங் கொள்ள வேண்டாமென்று எனக் கூத்தாடி நின்று ஓகோகோ பருவராதியே! காமவெறியேறிக் கருத்தழிந்துபோன நான் மானுபிமானம் பாராமல் உம்மைத் துரத்திவந்து மனக்குறை விளைத்தேன். அப்பிழை பொறுத்து எளியேனை யாண்டருள்வாயென்று நலம்பொலி மணிமுடி நிலம்படவீழ்ந்து, மறுபடியுமெழுந்து பின்னும் விழுந்து அன்னமேயென்று புகழ்ந்து, செங்கை யிரண்டையுஞ் சிரமேற் குவித்து, அவள் முகத்தைப்பார்த்துச் செவ்விளந்தீரப் பழித்துத் திரண்ட

இரண்டு கொங்கைதாங்கிய மங்கையே! புனல்படிந்து, புகைபர
ந்து, புனுகுகளைந்து, பூவணிந்து புள்ளுறைந்து, பொங்குமங்
குலைப் பொருந்தித் தங்கு கங்குலைந்திருத்தி முடித்த குழற்பூங்
கோதையே! குழலிசைக்கினிய மொழிபல பயிலும் பேதையே!
உமக்குத் தீதுநினைத்த மகாபாவி நானுகையால், தேவரீர் தீர்த்த
வைரம் வையாமல் அதனுலுமதுளம் நையாமல் என்னையாட்
கொள்ளவேண்டும். இக்கடுமையானகாட்டில்கொடியகயவர்மனம்
போல் கருத்த இருட்டில் அடியேனிமித்தம் கலவியை நாடி
வந்து காத்திருக்கிற உமக்கு நானென்ன வுபகாரஞ் செய்யப்போ
கிறேன்? எவ்வித வுபசாரம் பண்ணுவேன்? நீர் கிருபைவைத்து
நடத்த நினைத்த உதவிக்குப் பிரதியுதவி புரிய வகையறியேன்.
நீரின்று கொடுக்கப்போகிற தனத்திற்கு நான் கோடித்தனங்
கொடுத்தாலும் ஈடாகாதே. என்னுசைக் கண்ணே! இனிமேல்
நானென் செய்வேன். ஆகிலும் பதிலுதவிசெய்வதற்கு ஒருவகை
யிருக்கிறது. அதென்னவெனில் என்னுயிரை உமக்கு ஒப்புவிப்
பதுதான் உயர்ந்த கைம்மாறு. இதைவிட வேறு விதியில்லை.
இப்போது தமக்கு வேண்டிய வஸ்துக்களெல்லாம் இதோ
கொண்டுவந்திருக்கிறேன் தயையுடன் அங்கீகரித்துக்கொள்ளும்
ஓ தருணி! தவறுதப்பிய என்னை தாங்கிக்கொள்ளும். ஏன் சும்மா
விருக்கிறீர்? ஐயோ! பொழுது அனியாயமாய்ப்போகிறதே;
அனேக போஜனவஸ்துக்கள் ஆறி யலண்டுபோகிறதே. கிஞ்சுக
வாய்திறந்து கொஞ்சம் பேசப்போகாதோ? பஞ்சவர்னக்கிளியே
அஞ்சாதேயென்று ஆதரிக்கப்படாதோ? தித்திப்பான உன்
பேச்சு என் செவிக்கேறுங் காலமாச்சு. தெய்வப்பெண்ணே! நீ
ரிப்படி மர்மமாயிருந்தாயாகில், மன்மதனுல் நொந்து வெந்துப்
போன நான் கடைத்தேறுங் காலமெதுவோ? நீரெனக்கு இசை
ந்து இவ்வளவுதூரங் கிட்ட வந்திருந்தும், எட்டாமலெட்டி
யிருப்பது என்ன பாவமோ? உத்தமஸ்திரீகளுக்குள்ள சுபாவ
மோ? எதுவும் உமது கருணைக்கு எதிர்நிற்கமாட்டாது. தழைத்
திருக்குந் தோப்பில் தனித்திருக்கும் நாமிருவரும் கொஞ்சி விளை
யாடவேண்டாமா? ஆவிதுடிக்கத் தாவித்துளைக்கும் பாவி மதன்
கணையோ பொல்லாது. என்னிஷ்ட தெய்வமும் அஷ்டஐஸ்வரி
யமும் உம்மையன்றி வேருன்றில்லையென்று உண்மையாய் நம்
பினேன். உன் காலடியழகுக் கீடுபடாத என் பெண்சாதிமார்க
ளின் தேகத்தையும் அவர்கள்மேலுண்டான மோகத்தையும்

இன்று துறந்தேன். உமதாணை என்கண்ணாணை. இன்றுமுதல் என்றைக்குங் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டேன். இதுவே சத்தியம். என்சொல்லே நித்தியம். உம்மையிணங்காத நான் அநித்தியம். ஆ பத்தினி! என்னைப் பற்றி எரிக்குங் காமக்கினி வெதும்பிக்கவிழ்க்கப்பார்க்கின்றது. இத்ததியில் நீர்கைகொடுக்கவேணும் இனித்தாளமாட்டேன். இன்னும் சற்றுநேரம்போனால் உம்மை நான் ஆளமாட்டேன். வாளாயுதக்கண் வாய்ந்த மனைதமே! என்றவளுக்கு நேர்சென்று நின்று ஆகா! நீர் முந்திப் பேசலாகாதோ? பேசினால் உமது வாய்முத்துச் சிந்திப்போமோ? என்பேரில் கோபமோ? அல்லது மனஸ்தாபமோ? ஓ பெண்ணரசே! என்று பலவாராகிய பஞ்சைப் பாட்டுகளைப் பாடினான்.

அவன் பிதற்றிய மொழிகளைக் கொஞ்சநேரம் வரையிலும் கேட்டிருந்த வீமசேனன் தன்முகத்தைக் கீசகனுக்குக் காட்டாமல் தூணில் மறைந்து ஒரு பக்கத்திற் கொருபக்கந் திரும்பி அவனைப் பார்க்கப் பார்க்க மனமுறிந்து, ஆணவமல முதலான அஞ்ஞான விருள்மூடிய ஆசாரஹீனர் வாசாகயிங்கிரியஞ் சொல்லி ஊர்மெச்சப் பால்வார்த்து உண்பதுபோல் உலகமெச்சச்செய்கின்ற படாடம்ப பூசாவிதியின் புண்ணியபயனால் அப்பூசை செய்பவரையும் அவர் கால்வழியையும் நாசமாக்க நகைக்குங் கடவுள்போல் நகைத்துக் கோபாக்கினியால் கீசகனைக் குறித்து வெறித்துப் பார்த்தான். அதுகாலையில் கீசகராஜன் கௌரவமாய்ச் சிரித்து, வண்டுலாவு மலர்குழல் மாதே! என்மேலன்பு இன்றுதான்வந்ததோ? இத்தனைநாட் சென்றதோ? இவ்வளவு தயவு போதுமென்று தன்னிருகரத்திலுந் தாவி, என்பிராணமோகூகாரணி! என்று பற்றித்தழுவினான். அத்தூணில் மறைந்திருந்த வீமன் கீசகன் கைக்குச் சிக்காமல் யானைத் தும்பிக்கைபோன்ற தன்னிருகையும் நீட்டி, முறைவழுவி துறைதப்பித் தழுவநீட்டிய கீசகன் கையிரண்டையும் பற்றிக்கொண்டு நெருக்கினான். நெருக்கவே செந்தேள் கொட்டித் திகைப்பதுபோல் துடித்து உதட்டை மடித்து ஈதென்ன ஆச்சரியம். ஐயோ விபரீதமாய்த் தோணுதே! பெருமோசம்போல்காணுதே! நாமெண்ணிய வண்ணமகளானால், அவளுடைய உள்ளங்கை தாமரைப்புட்பம்போல் மிருதுவாயிருக்குமே. இதகக்கை கல்லினுங் கடிதாகக் காணுதே. இந்தப்பிடி எமலோகத்திற்கு இழுத்துக்கொண்டு போகவந்த காலதூதரால் கழுத்திற்கிடுங் கந்திரிக்

கோல்போலும் இருக்குதே. இது யார்செய்த மாயமோ? அவள் தேடிய உபாயமோ? என்னுத்மாவுக்கு அபாயமோ? ஒருவேளை நம்மை நம்பவைத்து மோசம்பண்ணி யிருப்பாளா? ஏறவிட் டேணியைவாங்கும் புன்னெறியரைப்போல் நினைப்பாளா? நமது தமக்கையினிடமாய் அண்டிப் பிழைக்கவந்த அனுதையானவள் வஞ்சனை விரோதம் மனதில் வைப்பாளா? கொஞ்சமேனும் நன்றி நினையாளா? எனைச்செயும் வினைச்செய லெப்படியோ வறியேன். ஆகிலும் ஸ்திரீகளை நம்பலாகாது என்பது பெரிய பேச்சு. அந்தச் சொல்லை யோசிக்குமிடத்தில், எல்லாப் பெண்க ளும் மோசமுள்ளவர்களா யிருப்பார்களா? சிலவேளை நாம்கொ ண்ட மோகசோபத்தினால் புத்தி மருண்டு சத்தி மாறியதோ? நம்மை இவ்விடம் வரச்சொன்ன காதலி அவளோ? அல்லது இன்னமெவளோ? இதை நன்முய்ச் சோதித்தறிவோமென்று, தனக்குள் கலவரங்கொண்டு என்கையைப்பிடித்த அடிதையலே! மையலாகிரி வந்தது. நீ சரசமாய்ப் பிடித்த என்கையைச் சற்றே விட்டுவிடடி. நீபிடித்த பிடிப்புக்கு இளையாதிருக்கிற என் பிராணவலுவைப் பாரடி. உன்பலத்திற் கென்பலம் ஒன்பது பங்கு உயர்ந்ததடி, உன்னை நான் அடிபிடியென்பதாய்ப் பேசு கிறேனென்று நீ ஆயாசப்படாதே, காமச்சரசக்கலவிக்களிப்பால் கசிந்துவருகிற கசித உசித வார்த்தையடி. என்னிருகண்ணே! காதலிப்பெண்ணே! என்று தன்கையைப்பிடுங்கினன். இவனைத் தனையோ பராக்குக் காட்டி அசப்பில் தன்கையையிழுத்தபோது, ஜாக்கிரதையிலிருந்த வீமன் தான் பிடித்தபிடி விடாமல் வலது கையை நீட்டி, இடது கையை யிழுத்து, இடது கையை நீட்டி, வலதுகையையிழுத்து நிலைமத்திட்டுத் தயிர்கடையுந் தன்மை போல், மாறிமாறியிழுத்து வலித்துத் தளுடன் தேய்த்து, அவ னிருகரத்தையுஞ்சேர்த்துத் தன்னொருகரத்தால் பற்றிக்கொண்டு மற்றொரு கரத்தினால் மொத்தியும் குத்தியும் கிள்ளியும் நிமிட்டி யும் பிசைந்தும் சரசக்குத்து சரசக்கிள்ளென்று சொல்லியும், ஒவ்வொரு கிள்ளுக்கு அள்ளுச்சதை துள்ளும்படியாயும், ஒவ் வொரு குத்துக்கு உழக்கு இரத்தம் பீரிடவுஞ் செய்து அவன் தேகத்தை வருத்தித் தீமைபுரியும்போது, கீசகன் சகிக்கமாட்டா மல் வாய்விட்டிரைந்து, நாடாதும் நாடி, வாடாமுகமும் வாடி, தேகம் வியர்த்துச் சூரசம்மாரச் சுப்ரமண்யக் கடவுளோ? ராகூஷ வைரியாகிய மகாவிஷ்ணுவோ? என்று நிலவரம் விண்டு, கல

வரங்கொண்டு, வகைதப்பி மாட்டிக்கொண்ட தன்கைகளைத் தன்னால் கூடியமட்டும் சாகசஞ் செய்து வாங்கினன்.

அப்போது அந்த வீமசேனன் மின்னொளிபோல் விளங்கிக் கீசகனுடைய இரண்டுகையில் ஒருகையை விட்டுவிட்டு,மற்றொரு கையைப் பிடித்தபிடி தளராமலிறுக்கி, விறுவிறென்று சுழற்றி விசைக்கயிற்றை யிழுப்பதுபோல் அவனுடைய தலைமயிரைப் பற்றியிழுத்து, நான்குதிசையிலுங் கரகரவென்றுசுழற்றி மேலே தூக்கிக் கீழேதாக்கினன். அப்போது கீசகன் பெருமூச்சுவிட்டு எழுந்து, ஐயையோ! ஆண்டவனே! பெண்ணென்றெண்ணிய எண்ணம் போச்சுதே! இப்போது பேயுருவாய் வந்து வாய்ச்சுதே! இனிப்பிழைக்கும் வழியெப்படி? இந்த வேளையில் அஞ்சி இளைப்போமாகில், வந்திருப்பவன் மனிதன். எப்படியும் நம்மை மாட்டுவான்போல் இருக்கிறது. நாம் இவனை முந்தி முடித்து விட்டால் பிந்தி அந்தப் பெண்ணுடன் கூடிப் பேசிக்கொள்ளலாம். இவனைப் பிராணனுடன் விடப்போகாதென்று விரைந்தோடிவந்தான். வந்த கீசகனை வீமன் மடக்கினன். மடக்கிய பிடிப்பைச் சடுக்கென்று தட்டினன். தட்டிய கீசகன் தலையில் குட்டினன். குட்டிய வீமனை முகத்தைப் பார்த்துக் குத்தினன். குத்திய கீசகன்மேல் கொதித்தெழுந்து குதித்து அவன் மூக்கில் தாக்கினன். தாக்கிய வீமனை தடுத்துப் பிடித்தான். பிடித்த கீசகனை புரட்டி பூமியில் சாய்த்தான். சாய்த்த வீமனைக் காலால் தளைந்தான். தளைந்த கீசகனைப் புரட்டி யுதைத் துத்தள்ளினன். தள்ளிய வீமனுக்கிளையாமல், பின்னுங் கீசகனெழுந்து முன்னம் பேசிய ஆணவமும் நாணமும் விடாமல் மற்போர் கொடுக்கவந்தான். அவ்வேளையில் வீமன் ஆக்கிரமித்தெழுந்து எதிரிதோள் மேல் கோடையிடிபோல் இடித்தான். அவ்விடியைப் படியத் தாங்கிய கீசகராஜன் இவனை முடியப் பார்ப்போமென்று விடியற்காலத்துக் காக்கைபோல் கத்திக் குத்துக்குப் பதில் குத்து குத்தினன். அவன் குத்திய குத்தை மகமேருவையொத்த தோளில் தாங்கிய வீமசேனன் தத்தளிக்காமல், முகஞ்சுளித்துத் தன்கை விரல்களை மடக்கிக் கீசகன் மார்புகிழியவும் அவன் தலையெழுத்து அழியவும் முதுகெலும்பு நொறுங்கவும் பழுவெலும்பு முறியவும் தலையுடைந்து இரத்தம் ததும்பி வழியவும் தாக்கினன்.

அந்தத் தாக்குதலை மேற்கொண்ட கீசகன் ஆர்ப்பரித்துக் கனைத்து, வீரங்கொண்டு சுழன்று, இருகையுமுடக்கி இலகுவு

கொண்டெழுந்தான். எழுந்தவன் கரமிரண்டும் கொழுந்தென வதங்கி வாடும்படித் தட்டிவிட்டுக் குலத்திற்குப் பழுது தேடிக் கொண்ட கீசகனைத் துன்னித் தன்காலால் அவன் காலைப் பின்னிச் சேர்த்துத் தூக்கியெடுத்துத் திரௌபதையை யழைத்துத் தீராமோகங்கொண்ட விகாரரூபனைப் பாரென்று சுழற்காற்றிலகப்பட்ட துரும்புபோலும் காற்றுடிபோலும் கறகறெனச் சுழற்றிக் கொக்கரித்துப் போர்சிங்கம்போல் பூரித்துப் பூமியிலெறிந்தான். வீமசேனனுல் எறியப்பட்டு வீழ்ந்த கீசகன் காமவின்பத்தைக் கட்டுடன் மறந்து சோமகுலந் துலங்கப் பிறந்த பாண்டவர்களில் இவன் வீமசேன னென்றறிந்து, துன்பநிறைந்து ஐயோ! இவனை இந்தமட்டும் விட்டுவிட்டு என்னெட்டத்தை நீ பிடிக்கமாட்டாய் போடா போவென்று ஓடலாமென்றுல், இவன் நம்மை எந்நாளைக்கும் பிராணனுடன் விடப்போகிறதில்லை; நாமி துவரையிலும் பிழைத்த பிழைப்புக்குப் பழுதுவந்து போம்; நம்மையாரும் சட்டைபண்ணுகிறார்கள். பெட்டாகிய குட்டு கெட்டுப் போய்விடும். ஆகையால் இவனை ஒரு கைபார்ப்போம். நமக்கு நல்வினைப்பயன் கைகூடுமாலுல், இவனை நம்மனுலகஞ் சேர்ப்போம். ஆகாமற்போனுல், இவனிடத்தில் நமதுயிரைத் தாரைவார்ப்போமென்று எழுந்து விரைந்து கந்துபாய்ந்து வீமன் தலைமயிரைப் பிடித்துக் கைவிரலிற் சுற்றி நொடித்துக் கறகறவெனச் சுழற்றி, நிலைக்கிடையாகத் தள்ளித் தன்னிருகாலால் புரட்டிப்புரட்டி உதைத்து, அவனுடலைத் தேய்த்து மழுங்கித் திரண்ட கற்றூண்போலாக்கி, உள்ளங்கை யிரண்டும் ரத்தவெள்ளங்காண மிதித்துத் தேகம் சிவக்கச்சீறி அறைந்தான். இவ்விதமாகக் கீழேவீழ்த்தி, மோதிப்பிடித்து மாறிமாறி யடித்து மோதுகின்ற கீசகன்வசத்தில் வகைமோசமாய் மாட்டிக்கொண்ட வாயுகுமாரனைப் பாஞ்சாலி கண்டு பரதவித்துப் பாபம்பெரிதோ? புண்ணியஞ்சிறிதோ? சத்தியக்குறைவோ? அசத்தியநிறைவோ? ஓ தெய்வங்களா! வனதேவதையே! வீமராஜனுக்குப் பொல்லாங்கு நேரிட்டபிறகு இம்மேதினியில் நானும் பிராணனுடனிருக்க வேண்டுமா? அவருக்கு முன்னே என் உயிரை மாய்த்துவிடுகிறேன். முதல்வனே என்றழுது பரதவிக்கும்போது, திரௌபதாதேவியின் விசனவசனமானது வீமன்காதில் நுழைந்தது. அதனுல் வீர சந்ததமேறி மேலாள் கீழாளாகப் புரட்டிக், கீழாள் மேலாளாகிக் கண்ணுருட்டி அஞ்சாதே! உயிர்விட மிஞ்சாதே

பாஞ்சாலி! பதருதே, இதோ நான் பிழைத்தேனென்று தேக ஆயாசந் தீர்ந்து, பிராணனைத் திரணமாக மதித்து நீருண்ட வேகங்கொண்டெழுந்த மேகம்போலிரைந்து பூமியில்தோய்ந்து குபீரெனப் பாய்ந்து, கீசகனைப்பற்றிக் கிறுகிறெனச்சுற்றி வானத்திலெறிந்தான். ஆகாயத்தில்போன கீசகனவன் வாயுவை ஸ்தம்பித்துக் கேசரிமார்க்கத்தில் கிளம்பி விறுவிறெச் சுழன்று வீமன்றலைமேற் குதித்து அவன் கழுத்தைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டு தொங்கினன்.

அந்தக் கீசகனை வீமசேனன் இறுக்கிக்கொண்டு அவனிரு கரத்தையுந் தன்னிருகரத்தி லடக்கி, ஆலயிழுத்துக் கீழே போட்டு மடக்கி, வயிற்றை மிதித்து,வாயிலுமுதைத்துப் பற்கள் பதினறையும் உதிர்த்தான். வீமனிடித்த இடியினல் கீசகன்வாய் கிழிந்து, கெடுநீனைப்பழிந்து, பல்லெல்லாம் பதர்போற் பறந்து போயிற்று. பொக்கைவாய்க் கீசகன் புறங்கொடுக்காமல் உரங் கொண்டோங்கி, மரங்களைப் பிடுங்கி வரிசைகள் தொடங்கினன். வீமனும் அவனை விடாமல் தொடர்ந்து, வேண்டிய மரங்களை வேருடன்களைந்து, விதவிதமான போர்புரிந்துவீரவெறிகொண்டாடினன். ஒருவரையொருவர் விடாமல், இடம் வலம் வருதல் கெடாமல், ஒருவரும் அடிகள்படாமல்,ஆயுதமென்பதுளடாமல் அடிக்கடி முதுகுகொடாமல், சோபதாகந் தொடாமல், சூக்ஷாதி சூக்ஷமாயொட்டி நடத்திய யுத்தத்தையும் அவர்கள் மனேதிடத்தையும் தேகாபிமானம்விட்டு அமர்புரிகின்ற திறத்தையும் சொல்லத்தக்கதல்ல. மல்லவனுகிய ஜனமேஜயராஜனே.

இவ்விதமாக இவர்களிருவரும் தங்கள் தங்களுடையமுழுப் பலங்களைக் காட்டி மாறுமல் போராடி வரும்போது பொழுது விடியப்போகிறதே நமது பூர்வோத்திரம் வெளிப்படுமே என்று வீமன் துடித்து, இவனை விரைவில் முடித்துவிடவேண்டும் என்று நினைத்துப் பங்கப்படாச் சிங்கமானது அற்பமிருகத்தை அமுக்குவதுபோல், அந்தக் கீசகனை அமுக்கிக் காலிரண்டையும் மேலாகத் தூக்கித் தலைகீழாய் பூமியில் தாக்கி, அவன்மீதேறி அமுக்கி உட்கார்ந்து, மார்பும் தோளும் வயிறும் பிடரியும் வலியெடுக்கக் குத்தினன். அவன் குத்திய குத்தைச் சிங்கபலம்பெற்ற கீசகனவன் திரஸ்கரித்து அதை யொருவரவு செலவில் வைக்காமல் காலால்வீமன்கழுத்தை மடக்கித்தன்னிருகையையும் தரையில் தெய்த்து வாயுகுமாரன் தலையோடு நெறி

யத் தாக்கினன். அந்தக்கீசகன் அறைந்த அறையானது வீமன் தலைமேல் வீழ்ந்தகாலையில், அரைநாழிகை வரையிலும் அறிவு மயங்கி நெருப்பில் நெய்விட்டதுபோல் கோபங்கொண்டோங்கி கருப்பைக்குள் கட்டுப்பட்ட சிசுவைப்போல் அடங்கிய கீசகனை அசையவொட்டாமல் ஒரே அழுத்தாக அழுத்தி அவன் தலை மயிரைக் கெட்டியாய்ப் பிடித்து, வச்சிராயுதத்தால் மாட்டுவது போல் கையை முடக்கி நகங்களை நீட்டி முட்டியடிக்கொப்பாய் அவன் உச்சியிற் கொட்டினன். அதனல் கீசகன் தலைகிழிந்து, மலசலாதி வழிந்து, கண்ணிரண்டுங் குழிந்து, காதில் உதிரம் பொழிந்து, அந்தக்கரண வாதனையால் பதறி, வந்த மரணவேதனையினல் கதறி, ஆவியழிந்து புவிமேல் சாய்ந்தான்.

மண்மேல் கிடந்த விராடன் மைத்துனனை அந்தமட்டில் விட்டுவிடாமல், வாரிப்பிடித்து, மார்பொடிய இடித்துக் கையை முறித்துக் காலைக்குறைத்து மெய்யைச் சுருக்கிக் கையால் பிசைந்து மாவிளக்குப் போடுவதுபோல் மாமிசத்தைத் திரட்டி உண்டையாக வைத்து, அந்த உண்டையின்மேல் மீசையும் கண்களும் விரிந்த வாயும் பரந்த முகமுடைய தலையை நாட்டித், தன் தலையை யாட்டிப், பணிப்பெண்ணுக்காகக் கொண்டுவந்த வஸ்திராபரண வலங்கார புட்பங்களையும் சூட்டிப், பண்டு கச்சாயங்களையும் அவன் கொண்டுவந்த தலைவாழையிலையில் படையல் போட்டுக், கந்த கதம்ப கஸ்தூரிகளை வாரியிறைத்து, இவ்வுலகத்தில் பேயோட்டிப் பதிபோடப் பூசாரிகள் சிங்காரிக்கும் பொம்மை முகம்போலமைத்து, இந்த வேடிக்கையைத் திரௌபதைக்குக் காண்பித்துக் காமப்பேயோட்டிக் காட்டில் பூசைபோட்டுப் பேய்ப்பதி சிங்காரித்திருக்கிறேன் பாருமென்று சொல்லுவோமென்பதாக நினைத்துக் காயுங்கனியுங் பூவுமாயிருந்த ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கிக் கசக்கித் தியெழத் தெய்த்து பூபூவென்று வாயினலூதிப் பக்கத்திலிருந்த காட்டை கொளுத்திவிட்டு எங்கும் சோதியாய் எரியும்போது, வெற்பெனத் திரண்ட சொற்கத்தைச் சுமந்த கற்பினில் உயர்ந்த பத்தினிப்பெண்ணே! உன் கால்மேல் விழுந்த கடையனைப்பார். கசடனைப்பார். கயவனைப்பார். காமக்களிப்போடு ஆடிய பேயனைப்பாரென்று காட்டினன்.

வெலுஞ்சேலும் விழியாயமைந்த பாலுந்தேனும் மொழியாய்ச் சமைந்த பங்கயப்பெண்பெருமாள் பார்த்துத் தனது வயி



விரதசாரணியை மோகங்கொண்ட கீசகனையும் அவன்
தம்பிமார்களையும் பலாயனன் கொன்றது.

றும் வாயும் மனமும் பதறிக் கதறிய வாட்டமொழிந்து வீமசேனன்மேல் நாட்டமாயிருந்தாள். அவரவர் தேடிய வினைப்பயன்களை அனுபவித்துத் தீரவேண்டுமல்லாது அனுபவியாமல் விடாது தாங்கள் ஒரு காரியத்தைச் செய்ய எண்ணினுல் நினைத்தபடி முடியாது. எண்ணிய வண்ணம் எவர்களும் பெறவில்லை. தமதெண்ணை முன்னுக்கு வராது. உண்மைக்கு தெய்வபலமிருந்தொருவேளை முடிந்தால் முடியும். சிங்கபலம்பெற்ற கீசகன் பாஞ்சாலியினளவில் நினைத்த பொல்லாங்கானது நாமெல்லோரும் நாவால் பேசப்படாத புண்ணியகாரியமாதலால், அதனுல் வந்த மிதமற்றபலனை உடனே அவன் அனுபவித்தான். அதைப்பற்றி நாம் பேசவேண்டிய அவசரமில்லை. கோபாதியாகிய பூபதியே! என்றுஜனமேஜயனுக்குச் சொல்லி வைசம்பாயன மஹாமுனியானவர் மேல்சொல்லத் தொடங்கினர்.

இப்பால், வாயுசுதனுகிய வீமசேனன் அக்கினியில் பிறந்த அணங்கைநோக்கி உனக்குப் பகைவனை கீசகன் ஒருவகையாய் அழிந்துபோனன். உன் விஷயத்தில் இன்னும் யாராவது மன்மதகோலாகல மயக்கத்தைக் கொண்டார்களாகில், அவர்களுமப்படியே அனுபவிப்பார்கள். நீ ஒன்றுக்கு மஞ்சாதே. இனி நாம் இவ்விடத்திலிருக்கத் தகாது. பொழுதுவிடியுமுன் போய்விடவேண்டுமென்று காட்டைவிட்டுப் புறப்பட்டு, மச்சநாட்டை நோக்கி வருகையில், வழியில் ஓர் தாமரைக் குளத்திலிறங்கித் தேகபரிசுத்தஞ் செய்துக்கொண்டு தீர்த்தமருந்தித் தெய்வப்பிரார்த்தனையுடன் சுதர்க்கணை அரண்மனைக்குப் போம்படியாகத் திரௌபதையை அனுப்பிவித்து, வீமசேனன் மடைப்பள்ளிக்குப்போய் மலரணைமேல் படுத்து நித்திரை வராமலிருந்தான்.

இப்படியிருக்க, மடலவிழ்ந்து, இதழ்பரிந்து, மலர்பிரிந்து, மதுநிறைந்து, மணமுறைந்து, தளிர்தழைந்து, தலைசெறிந்து, கிளைமிருந்து, காய்சொரிந்து, கனியுதிர்ந்து, கதிர்மதிநுழையாக் கவிப்போடிருந்த மாததோப்பில் இவரிருவரும் பேசியவோசையும் கைக்குத்தின் முழக்கமும் மண்டபத்திலுண்டான எதிரொலியும் மரங்களைப் பிடுங்கி மாட்டிய ஆர்ப்பும் சத்தமடங்கிய இருபது நாழிகைச் சமயமாதலால், விராடபுர முதலிய சுற்றுக்கிராமங்களிலும் கேட்டது. கேட்டும், ஜனங்கள் அப்போது இராக்காலமானதினுலும் நித்திரை மயக்கத்தாலும் எப்பொழுதும் யுத்தம் இல்லையென்றிருந்த மப்புப்புத்தியினுலும்

பயத்தினாலும் விசாரிக்கவேண்டிய அவசிய மில்லாமையினாலும் கலவரப்படாமல் நிதானித்துக் காரணகாரியங்களை யெண்ணமல் திகிலடைந்து, திரும்பிப்பாராமல் நித்திரை செய்தார்கள்.

ஆனல் முன்னமே கலவரங்கொண்டு இருந்த கீசகன் தம்பி மார் இந்த பேரோசையைக் கேட்டுப் படுக்கைவிட் டெழுந்து உப்பரிகைமே லேறிப்பார்த்து, அந்தச் சத்தம் வருகிற வழியை யுற்றுக்கேட்டுத் தங்கள் அண்ணன் நினைத்த எண்ணமும் வண் ணப்பெண்வாடிய வயிற்றெரிச்சலும் ஊரார் பேசிக்கொண்ட வல தும் தங்களைச் சந்தேகத்தில் கொண்டுவந்து விட்டதாக அச்சப் பட்டுக் கீசகன்படுக்கைவீட்டைப்பார்த்து, அவன் அவ்விடத்தில் இல்லாமையால், பாங்கியர்முதலாகிய பணிப்பெண்களைக் கேட்க, அவர்கள் இன்றுஇரவில் பத்துநாழிகைக்கு ஸ்நானம்பண்ணிச் சகல அலங்கார சம்பன்னராய் மேனிமினுக்கி வெளியே போனு ரென்றுரைக்க, அம்மொழியைக்கேட்ட உபகீசகர்கள் பரதவித் துச் சரிதான் சரிதான். நமது சுதர்க்கணைக்குச் சாந்து சந்தனுதி மலர் முதலியதும் புனைந்துவந்த தெய்வப்பெண்ணின்மேல் இச்சை வைத்தமையால், அன்னத்துவேஷங்கொண்டு, தனக் குரிய போகமாதரையும் விண்டு, மன்மதன் கணையாலுடைந்து பாகொத்தமொழியாளாகிய பணிப்பெண்ணைத்தொடர்ந்து,சோக மேலிட்டுத், தூக்கமுங்கெட்டுத் துயரமாயிருந்தவன், தான்கொ ண்ட விரகவெப்பந் தணிவதற்காக மாமரச்சோலை வசந்தமண் டபத்திற்குப் போனவனுக வேண்டும். அந்தவேளையில் வண் டறுமலர் கொண்டையையுடைய சைரந்திரியானவள் ஏதோ ஒரு காரணார்த்தமாய் அவ்விடத்திற்குப் போயிருக்கவேண்டும். பிரசண்டவேக மதயானைபோன்ற கீசகன் அவளைக்கண்டு ஏதடா நமக்குடன்படாதவள் இவ்வளவுதூரம் வந்திருக்கிறாள். இந்த இருட்டில் தனித்து வருவதற்குக் காரணமென்ன என்று சற் றும் யோசனைபண்ணமல், கலவியை கருதினவனுகவேணும். இதற்குமுன் இவளைத்துரத்திச் சின்னப்படுத்திய செய்தியை அவளுக்குரிய காந்தருவரைவர்கட்குத் தெரிவித்திருந்தவளாக வேண்டும். அவர்கள் அவ்வாறே வசந்த மண்டபச்சோலையில் வந்திருந்தவராகவேண்டும். இவனுடைய பொல்லா வினைவசத் தால் போர் மூண்டிருக்க வேண்டுமென்று தங்கள் தங்களுக் குள்ளே நிச்சயித்து, இனிநாம் சும்மாவிருக்கலாகாது. சீக்கிரம் போய்ப் பார்ப்போம். அப்படி பார்க்குமிடத்தில், நித்தைக்கு

உடன்பட்ட நிஷ்டூரன் உயிரோடிருப்பானுகில், வந்திருக்குங் காந்தருவருடன் முந்திப் போர்விளைத்து, அவரைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கண்கலக்கப்படுத்துவோம். ஒருவேளை கீசகன் நாசமடைந்திருப்பானுகில், அவனைப் பறிகொடுத்து, நாம் உயிருடனிருந்து மானமில்லாமல் வாழ்வது மரியாதையல்லவே. கூடப்பிறந்த தோஷத்திற்காக அந்தக் காந்தருவருடன்போராடி அவன் மடிந்த விடத்திலேயே நாமும் மடிந்துபோவோம். இதைவிட உறுதி வேறில்லையென்று தம்பியர்யாவரும் ஒன்றுப்க் கூடி கண்பொறியெழ விழித்துக் கடகட்வென்றுபல்லைக்கடித்து, விடவிடவென்று வில்லைப்பிடித்து,மடமடவென்று பலவாயுதங் களெடுத்துக்கொண்டு, தடதடவென்று விரைந்துவந்து, கசந்த மனம்போல் கருகிய விருட்டில் வசந்தமண்டபத்தைச்சேர்ந்து, சங்குச்சுண்ணந் தடவிய ஜோதி திங்களொளிபோல் எங்கும் பிரகாசிக்கக் கொழுந்துவிட்டெரியும் வெளிச்சத்தில் அழிந்து சிதைந்து திரைந்து திரண்டுருண்டு மொத்தாகாரமாயிருந்த மாமிசத்துப் பையின்மேல் தமையனுடைய தலைமாத்திரம் அழியாமலிருக்கக் கண்டு, திக்கென்று வயிறெரிந்து, திடீரென்று வீழ்ந்து, வாடி வதங்கி, வயிற்றைப் பிசைந்து, கைகளை நெரித்துச் செய்வதென்னென்று வெம்பித் தேம்பி, விம்மி விழித்து, மண்டபத்தைச் சுற்றிப்பார்த்து, ஒருவரையுங் காணுமல் வாய்விட்டழுது, முகத்திலுந் தலையிலு மோதிக்கொண்டுபுலம்பி அண்ணனுடைய கால் கை முதலான அவயவங்களொன்றுங் காணுதவர்களாய்ப் பிண்டாகாரமாயிருக்கும் பேருடலைக்கண்டு, ஓகோகோ! ஈதென்ன விந்தை! இதுவரைக்கும் வாழ்ந்த எங்களுக்கு நேரிட்டநிந்தை. அளவிறந்த பல பராக்கிரமங்களுள்ள நமது ஜ்ஷ்டனை இப்படியாகக் கொன்றபேரெவர்? அவனைக்கொல்லத்தக்க வல்லவருந் தொல்லுலகிலுளரோ? இவனைக் கொன்றவன் மானிடனல்லன். தேவப்பிறப்பா யிருக்கவேண்டும். வேறொருவனு யிருந்திருப்பானுல், கழுத்தை முறித்து, வயிற்றைக் கிழித்துக் கைகாலையொடித்துக்கசக்கிக் கோசபீசத்துடன் நொய்யக்குத்தி மொத்தையாகச் செய்வானு? ஐயோ! வைச்ச பதமிருக்கப் பிச்சைக்குப் போவானேன். வசந்தப்பித் துர்மரணமடைவானேன். அவனைப்படிப்பட்ட தெவனுயிருந்தபோதிலும், இவனவன் கையாலிறக்கமாட்டான். ஏதோ சூதுவிளைத்துத் தீதுசெய்துவிட்டார்கள். அந்தப் பெண்மோகத்தாலும் இவனது தீவினைவசத்து

லும் மாண்டானென்று மார்பிலடித்துக்கொண்டு, மண்மேல் வீழ்ந்து புரண்டு மானம்போயிற்று, வையகத்தார் பழிக்கும்படிக்கு ஈனமாயிற்று, ஆஹா தெய்வமே! இவனிப்படி அழிந்ததைப் பிறர் அறியாம லடக்கம் பண்ணிவிடவேண்டும். பிறர் அறிந்தால் பெருமோசம் வந்துவிடும். நமது சுதர்க்கணைக்கு மாத்திரந் தெரிவித்து, அவள்கருத்தின் வண்ணம் நடந்து கொள்வோமென்று அவளிடத்திற்குச்சென்று, அடித்துமோதி வீழ்ந்து, அவள் பாதத்தில் தாழ்ந்து நாம் வாழ்ந்த வாழ்வு இன்றோடழிந்தது. மாதரசி! நமது வண்ணப்பெண் மோகங் கொண்ட அண்ணல் விண்ணுலகேறினன். இனிமேல் நடத்துங் காரியங்களுக்கு நாங்கள் ஆலோசனைசெய்ய வந்தோமென்றுசொன்னர்கள். அவர்கள் கருத்தை அந்தச் சுதர்க்கணை கேட்டுத் தம்பிமாரைத் தழுவி நின்றும் கொம்பிலாக்கொடிபோற்றுவண்டும் தரைமேற்புரண்டும் தலையிலடித்துக்கொண்டும் பெருமூர்ச்சையடைந்தும் பதறியெழுந்தும் அடா பாவி! எங்களைத் தெருவில் விட்டாயே; வாழ்ந்தவாழ்வும் இவ்வளவுதானு சாய்ந்மன்மதபாணமாஉன்மேற்பாய்ந்தது; அதனுலேயா நீமரணமடைந்தது; ஐயா! அப்பவென்றுடல்தளர்ந்து, உயிருலந்துசலாடி, ஒ சகோதரர்களே! நானெவ்வளவோ சொல்லியும், பாவி கீசகன் கேளாமற் போக்கழிந்தான். அன்னிய ஸ்திரீகளினுசை என்றும் ஆயுளழிக்குமென்று மோகநிவாரண நூலில் மொழிந்திருந்தும் காலாந்திரத்தாற் கதி சேர்ந்தானே! ஐயோ கீசகக்களிறே!என்று கண்ணீர்வடித்து, அவனது புஜபல காரியங்களைப் படித்து, ஒரு வருமுணராம லொப்பனையிட்டழுது கீசகனிறந்தானென்னுங் கேள்வி பல இராஜர்களுணர்ந்தால், படையெடுத்துப் போர் கொடுத்து இப்பட்டத்தை அபகரிப்பார்களே. என் நாயகனுக்கும் எனக்கும் இந்த நாட்டத்தை வைத்தானே. நடுக்கடல் துரும்பானேம். நடுத்தெருப் புழுதியானேம். அடடா, துட்டசாவானே! என்று பட்டப்பகலில் தோன்றிய சந்திரன்போல் முகத்தொளிமழுங்கி,என்சகோதரர்களே! நானிந்தவார்த்தையை உங்கள் மைத்துனராகிய விராடராஜனுக்குப் பக்குவமாய்ச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் சீக்கிரத்திற் சென்று அண்டை அசலாரறியாமல் அடக்கம்பண்ணிப் போடுங்கள். பரப்பில் விடாதீர்கள். பழிப்புக்கிடம் பண்ணுதீர்கள். பதருதீர்கள். என்னைப் பரதேசியாக்கிப் போடாதீர்கள். நமக்கு நான்குதிக்கி

லும் பகைவர்க ளிருப்பதினால், நீசக னுயிருடனிருக்கின்ரு னென்னுங் கொடியைக்காட்டி அவனுக்குச் செய்யவேண்டிய உத்தரிமைக் கடன்களைத் தீர்த்துவிடுங்களென்று உறுதிகள் சொல்லி யனுப்பிவிட்டு, உள்ளம் நடுங்கி யொடுங்கி வெள்ளம் போல் கண்ணீர்விடுத்துப் பூமிமேற்படுத்துத் தெய்வமேயென்று தேம்பித் தொழுது துக்கமற்றவள்போல் பக்கத்திலிருப்பவர்கட்குத் தெரியாமல் விக்கியிருந்தாள்.

இந்தச் சுதர்க்கனை சொன்னவண்ணம், அண்ணனைத் தகனஞ் செய்வதற்கெண்ணிய தம்பிமார் நூற்றுமூன்றுபேரும் பிரேதத்திற்கு வேண்டியசல்லா சாதராசால்வை சந்தனக்கட்டைகள் ஸ்நான திரவியங்கள் முதலிய சகலமுங்கொண்டு, தமக்கை அரண்மனையிலிருந்து சுறுக்கில் குறுக்கி வரும்போது, வீமசேனனைவிட்டு வராநின்ற வண்ணப்பெண்ணைத் தாங்கள் கண்ணிற்கண்டு வழிமறித்துநின்று, மனஸ்தாபங்கொண்டு, மனைதிடமுடைய நமது தமையன் மாளுவதற்கு இவளே காரணமல்லது வேறில்லை. நாமெண்ணியபடி இப்பொழுதுதான் முடித்துவருகிறுள். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அவனிவள் மேல்வைத்த ஆசையும் இவளவனைக்கெடுத்த மோசமும் அடியோடு நாசமாகும்படியாய் இவளையு மவனுடன் சேர்த்துக் கொளுத்திவிடுவது உத்தமதர்மம். இம்மையிற் கலந்தெரிந்தால் அம்மையிலும் உம்மையிலும் பிரியாவிடையா யிருப்பார்கள். ஆகையால், இவளைக் கூசாமல் பிடியுங்களென்று நான்கு திசையிலும் பரந்து நாய்போல் வளைந்து, மான்போல் மருண்டு செல்லும் பாஞ்சாலியைத் துரத்தினர்கள்.

வனவேடர்போன்ற உபதேசகர்களைக்கண்ட சைரந்திரியானவள் எப்பேச்சும்பேசாமல் அல்லலடைந்து, ஆவிபறியக்கதரும் அன்னம்போற் பதறிப், பொறி புலன் சிதறிக், கைகாலுதறியோடி, ஆ காந்தருவர்களே! எனக்குக் காவலாகிய தெய்வங்களே! பேய்களுலாவுங்காலமாகிய இரவில் யமதூதரைப்போல் சிலதுஷ்டர்களடித்து, என்னைப் பிடித்து, நெருப்பிலிட்டுக் கொளுத்தும்படிக்கு நிச்சயித்தார்கள். அதனல் கொழுகொம்பில்லாக்கொடிபோல் துவளுகிறேன். என்ன செய்வார்களோவென்று வாடுகிறேன். இந்த வீணர்கையி லகப்படாமலோடுகிறேன். இப்பாவிகள் வசப்பட்டு ஆவியழியுந் துன்பத்தைப்பார்க்கிலும், இப்போதுதானே உயிரை யொழித்து விடுவது இன்ப

மென்று நாடுகிறேன். இந்தப் பஞ்சைகள் கையிலகப்பட்டுப் பரதவிக்குமுன்னே அஞ்சே லஞ்சேலென்று நீங்களைந்துபேரு மோடிவாருங்கள்.இந்த ஆபத்துவேளையில்வந்தென்னைக் காருங்கள். மலைகளை மண்ணுகவாட்டும் புஜபலத்தைக் காட்டுங்கள். அந்தத் துன்மார்க்கனை முடித்ததுபோல், இந்தக் கயவர்களையும்வாட்டுங்கள். மனோவேகத்திலுங் கடுகவோடிவந்து இவர்களை யமலோகத்திற்கு ஓட்டுங்கள். ஜய விஜய ஜயந்த ஜயசேன ஜயற்பலனே யென்று, அஞ்ஞாதவாசமுதலில் நேமித்துக்கொண்ட சங்கேதப் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டாள். இவள் கெட்டியாய்க் கூவிய ஓசையை மடப்பள்ளியிலிருந்த வீமசேனன் கேட்டு, வாரிச்சுருட்டியெழுந்து, ஏதோ பிரமாதம் விளைந்ததென்று இடையிற் கச்சையை யிறுக்கிவரிந்து, தொடையிலிரத்தந் துடிக்கப் பரிந்து, இதோவந்தோம், உன்றன் மனந்தளரேலென்று பேரிடிபோ லிரைச்சலிட்டுக் கொக்கரித்து, எக்களிப்புடன் எதிரிலிருந்த மரங்களைப் பிடுங்கி, விறுவிறெனச் சுழற்றிக் கையொடு கையறைந்து, காடுகலங்கக் குதித்து நீண்டவிருக்ஷங்கள் நெரியமிதித்து வந்தான். அவன் வருகிற திசையையும் வந்த விசையையும் உபகீசகர்கள் பார்த்து உடனே முகம்வேர்த்து தங்களில்தயங்கி தைரியமில்லாமல் மயங்கி ஆ தம்பிகளே! இவளிரைத்து கூவியபோது இதோ வந்தோமென்று ஒரு பேரொலி கேட்டது. அவ்வோசை யடங்குவதற்கு முன்னே பெருங்காற்றுப் புறப்பட்டது. மரங்களியாவும் மடமடவென்றுடிகிறது. இவளுக்குரிய காந்தருவர் துணைவருகிறுப்போலுமிருக்கிறது. நமது தமயனை யடித்து முடித்துவிட்டிப்பொழுதுதான் போகிறவர்கள்போலுங் காண்கிறது. நம்முடைய தமையனை இக்கேடுண்டவர்கள் நம்மை எளிதில் விடார்போலுந் தோன்றுகிறது. இனியென் செய்வோமென்று பயந்து, உடல் பதறி நடுங்கிக் கட்டழகமைந்த விரதசாரணியை விட்டு விட்டோடிப் பிழைப்பதே மேலென்று யோசிக்குமுன்னமே காலபாசச் சூலங்கொண்ட காலனைப்போலும் ஆலகாலவனிலம்போலும், வீமன்வந்து புகுந்து விளாசும்போது புத்தித் தாழ்வாற் பிராணனைப் போக்கடித்துக்கொண்ட கீசகன் தம்பிமார்கள் சுற்றியோடி விலகினர்கள். அவர்களைக் கொத்துபோற் சேர்த்து வளைத்துப் பத்துபேர்க்கு ஓரடியாயடித்து, ஒருவருந் தப்பிப் பிழைக்காமல் மடித்து, அவரவரெலும்பையுமொடித்து மேலுல

கிலேற்றினன். அந்த உபகீசகர்கள் சகோதரவார்ச்சல்லியந் தப்பாமலுந் தமையனைப் பிரியாமலும் அவன் போனவழியே போனார்கள்.

இப்பால், துவளும் இடையுஞ் சுவர்னப்பட்டு உடையும் அன்னநடையும் அரம்பைத் தொடையும் அருட்கட்டையும் அணிபூஞ்சடையும் கற்புடைமையுமுள்ள விரதசாரணிமேல் விருப்பம்வைத்த கீசகனை வீமசேனனழித்தபோது, அவன் ஒரு வருமறியாமல் உபாயத்திலொழிந்தான். இந்த உபகீசகர்களை மடித்தபோது பொழுதுவிடியுஞ் சமையமாகையாலும் விராட புரத்தைச் சமீபித்தவிடமாகையினாலும் ஊரார்றிந்து உறக்க மற்று வருந்திக் கலங்கிப் பயந்து, சரிதான் சரிதான் வண்ண மாதுமீ தெண்ணங்கொண்ட திண்ணியனாகிய கீசகனை அந்தப் பெண்ணுக்கிசைந்த கந்தருவர் வந்து கொன்றார்களாக்கும். அவனுக்காகப் பரிந்துவந்த கீசகன் தம்பிமார்கள் ஒன்றுகூடி சண்டைவினைத்துநின்ற நூற்றுமூன்றுபேரையும் வென்றார்க ளாக்கும். ஆகிலும் தேவஸ்திரீயை மனிதன் நாடுவது தீங்கு. தேவர்களுடன் மனிதரெதிர்த்துச் சண்டைசெய்வது தீங்கிலுந் தீங்கு. தன்பலமும் எதிரிபலமும் எண்ணமற் சண்டையிட்ட கீச கர்களில் ஒருவரும்பிழையாமல் விண்ணுலகுற்றார்போலுமென்று பட்டினத்திலுள்ளவர்கள் யாவரும் பேசிக்கொண்டார்கள்.

இவ்வாறு உலகம் நடுங்கி யொடுங்கும்படிக்கு அன்றிரவில் கண்டகராகிய கீசகர்களைக் கொன்று நாய், நரி, பேய் பிசாசம், காக்கை, கழுகு, கூளி, காளி முதலியவற்றிற்கு விருந்தாக்கிவிட்ட சுயம்பாகியாகிய வீமசேனனும் பரிவினாற் பதமளித்த பாஞ்சாலி யும் திரும்பும்போது, வாயுகுமாரன் திரௌபதையை யணைத்து வண்டாருமலர்க்கொண்டை கண்டமாதே! கற்புடையமாதர்க்கெப் போதும் ஆபத்துநேரிடாது,ஒருவேளை தீவினைப்பயனால் நேரிட் டாலும் சூரியனைக்கண்ட பனிபோலகலும். மேலும் நற்குணநற் செய்கையுடைய பதிவிரதைகள் தாங்களெப்படி நினைத்தாலும் முடியும். அதற்கொப்பாக ஒருகதை சொல்லுகிறேன் கேளும்.

பூர்வத்தில் இமயபர்வத இராஜகுமாரியான பவானியிடத் தில் பணிவிடை பண்ணிக்கொண்டிருந்த ஜயை என்னும் பெய ரினையுடைய தெய்வப் பெண் ஒருத்தி இந்தப் பூலோகத்தில் வாழும் மாதர்களுடைய இல்லற தர்மம் எப்படியோ வென்று சந்தேகங்கொண்டு பவானியாரைக் கேட்டாள். அதற்கு அம்பி

கையானவள் அந்தப் பெண்ணைப்பார்த்து நான் சொல்லுவதினு லுனக்கு அனுபவமாகாது. நீ போய்ப் பூமியிற்பிறந்து இல்லற தர்மத்தைக் காட்டிப் பிரமாணமாகக் கண்டனுபவித்து வரக்கட வாயென்று அனுக்கிரகம் பண்ணினாள். அவ்வாறே மண்ணிற் பிறந்து வளர்ந்து. சிறந்துவருங்காலையில், தேவராதனென்று ஒரு முனிவன் தனக்கு உபசாரஞ் செய்வதற்கு உத்தம குணசாலி யான பத்தினி யொருத்தி வேண்டுமென்று தேசமுழுமையுந் தேடித்திரிந்து, வாடிவருந்தி வரும்போது, ஒரு சிற்றூரக்கிரா ரத்திலிருந்த இந்தப் பெண்ணைக்கண்டு, கன்னிகையென்றுணர் ந்து இவளது பதிவிரதாகுணத்தைச் சோதிக்க வேண்டுமென் றெண்ணிப் பெரிய ராக்ஷஸ ரூபங்கொண்டு, கோரமா யெதிர் சென்று நின்று, அவளைப் பருந்துராஞ்சும் பாவனைப்போல் தூக்கிக்கொண்டு, மகாவாரணியத்திற் போய், நூறுயோசனை விசாலமுள்ள தாமரைத்தடாகக் கரைமேல் வைத்து, வெகுவித சந்தோஷமுண்டாக்கிப், பற்பல கனி தேன் கிழங்குகளுங் கொடுத்து, உற்பலத்தாமரைமல்லிகைமுதலிய புட்பங்களுமளித் துப், போகபுணர்ச்சியின்பொருட்டு பேசுவனவெல்லாஞ் சரச மாய்ப் பேசித் தன்னுற்கூடியமட்டுந் திருத்தி, நயபயங்காட்டி பொருந்திப் பார்த்தான். அவளந்தவிதத்திலு மயங்காமல் திடச்சித்தமாயிருந்து கலவியமளிக் கலத்தலுக்குச் சம்மதியாமற் போனாள்! அப்போது இராக்ஷசரூபங்கொண்டவன் தன்கையில் பிடித்திருந்த கோலால் தள்ளி பலவந்தமாய்ப் புணர்ச்சிசெய்ய ஆரம்பித்தான். அவளதற்குமஞ்சாமல், தன் இருகையையுந் தலைமேற்குவித்து, ஓ தர்மதேவதையே! நானிதுவரையிலும் மனோவாக்குக் காயங்களினுல் வழுவுதல் முதலிய பழுதுமில்லா மல் கற்புடைமைகாத்து ஒப்புவமையில்லாதிருந்தேன். இப்போ திந்த இராக்கதன்கை என்மேற் படுமுன்னமே அற்பமாகிய என் னுடலுங் கருங்கல்லாய்ப் போகக்கடவதென்று கூவினாள். அவ் வாறு உரத்துக்கூவினவளை அதட்டி, அந்த ராக்ஷஸன் வெரு ட்டி பயங்காட்டி மேல்விழுந்து தழுவப்போகையில், அவள் கல் லாய்ச்சமைந்தாள். அவளுக்கு நேரிட்ட அபாயத்தைக்கண்ட முனிவன் இராக்ஷசரூபத்தைவிட்டு பழையவடிவெடுத்து அவ ளுடல் கல்லாக்கியதைத் தடுத்துத் தான் அதுவரையிலுந்தேடிய தபோமகிமையை அதற்கிடாகக்கொடுத்து அவளைத் தன்வாழ்க் கைத் துணை நலத்திற்குரிய மனைவியாக்கி விதிப்படி புணர்ந்து,

கொக்கோகநூலிற் கூறியவண்ணம் ஆலிங்கனம் முதலிய யாவு நடாத்தி, அநேக வரங்களுமளித்துத் தன் ஆச்சிரமமடுத்து, அறம் பொருள் இன்பம் வீடு திறம்பாதடைந்து இல்லறவாழ்க்கை இத்தன்மையதென் றியாவருமறிய இகத்தில் அவ்விரு வரும் நாட்டிவைத்தார்கள்.

கேளும் பாஞ்சாலி, நல்லவர்களுக்கு ஒருநாளும் பொல்லாங்கு வராது. வந்தாலும் நிலையாயிராது. பின்னல் நன்மையுண்டாகும். ஆதலால் எப்படிப்பட்ட ஆபத்துகள் வந்தாலும் அதற்கஞ்சி விசனப்படலாகாது. இப்போது உனக்கு நேரிட்ட கஷ்ட நிஷ்டூரங்களுக்காகத் துக்கப்படாதே. இன்னுஞ் சில நாளைக்குள் நமக்கு நல்லகாலம் வருமென்று நயந்துபேசிச் சுதர்க்கணையிடத்திற்கு அவளை யனுப்பிவிட்டு, ஒரு தடாகத்தில் இறங்கி ஸ்நானம்பண்ணி, நித்தியவிதி நிறைவேற்றிக்கொண்டு தான் வெளியே போய்வந்த செய்தி ஒருவருமுணராதிருக்கும்படி மடைப்பள்ளிக்குப் போய்விட்டான்.

இந்தப்பிரகாரம் வீமசேனன்போகத் திரௌபதையானவள் பொழுது விடிந்துபோயிற்றென பயந்து ஒடுங்கி ஒதுங்கி, வாடி வதங்கி, நம்மை யார் பார்ப்பார்களோ? என்ன நினைப்பார்களோ? என்னவென்றேசுவார்களோ? ஏதோ, என்னமோவென்று அச்சத்துடன்போய்ச் சுதக்ஷணதேவியின் அரண்மனைக்குட்புகுந்தாள்.

இவ்விதஞ்சொன்ன வைசம்பாயனர் பாதத்தில் ஜனமேஜய மகாராஜன் பணிந்து புகழ்ந்து, ஓ சுவாமி! உபகீசகர்கள் கையிலகப்பட்ட பாஞ்சாலியை வீமசேனன் வந்து விடுவிக்காமற் போனால், கீசகனுடன் சேர்த்துக் கொளுத்திப் போடுவார்களோ கிருதார்த்தனே யென்று பரிக்ஷித்துவின் பாலன் கேட்க, வைசம்பாயனர் சொல்லுகிறார். மதிமரபிலுதித்த மன்னனே! கேளும். ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய கடாக்ஷவீக்ஷண்யத்தினாலும் தருமபுத்திர மகாராஜனுடைய சத்திய நித்திய தவத்தினாலும் பாஞ்சாலியின் கற்பின் தன்மையினாலும் அப்படிப்பட்ட பொல்லாங்கு நேரிடாது. ஒருவேளை நேரிட்டாலும் தான் பெற்ற பெண்ணைத் தந்தையாகிய அக்கினிதேவன் கொளுத்துவானா? தானே சுட்டெரிப்பானா? அப்படிநேரிடுங்காலையில் தருமதேவதையும் அதற்குச் சகாயப்படுமா? சந்திரகுலாதிபனே என்று சந்தேகந்தீர்ந்து மேல் நடந்த வர்த்தமானங்களையுஞ் சொல்லத் தொடங்கினர்.

இப்பால், கறுத்த விருள்கலந்து, கவிந்து பரந்து, நிறைந்து, ஜகத்தை மறைத்துப் போர்த்த திரைக்களங்கத்தை வெறுத்து விலக்கி, நிலத்தைவிளக்கி, விளர்த்த கிழக்கிலுதித்த கதிர்க்கிரணமாலின் சோதியானது உதயகிரி முடிமேலேற்றிய மணிவிளக்குபோல் எட்டுத்திசையும் பிரகாசிக்க, பிரபை விட்டொளிகாட்டிச் சூரியோதயமானவுடனே அன்றிரவில் நடந்த யுத்தவிபரீதமும் சத்தப்பிரதாபமும் விராடபுரமெங்கும்பரவி, ஆயிரங்கிரணனிலதிகமாய் விரிந்து மச்சநாட்டுள்ள ஜனங்களும் கோட்டைக்கு மேற்புறத்தடைந்து, வனத்தில் மாண்டுகிடக்கிற உபகீசகர்களையும், அவியாமலெரிகிற மாஞ்சோலையில் ஆயிமகமாயிக்குப் பூசை போட்டுச்செய்த பதியலங்காரம்போலிருக்கும் கீசகன் தலையையுங் கண்டு விசனங்கொண்டு, பயந்து ஓட்டமா யோடிவந்து, விராடராஜனுக்குச்சொல்லி வெறுப்படைந்தார்கள். கீசகனழிந்த செய்தியைத் தன் பெண்சாதி சொல்லக்கேட்டு, முன்னமே மன்னன் வருந்தி இனிநானென்செய்வேன்? கன்னியன்னமே! என் தோள்போயிற்றென்று கண்ணீர்வடித்துப் படுக்கைவிட்டெழப் பலமற்றவனுயிருக்கும் பார்த்திபன் செவியில் உபகீசகர்களு முயிரொழிந்தாரென்றுரைத்தவுடனே இடிமேலிடியும் அடிமேலடியும் எய்தியவாறுபோலிரங்கியிரைந்து,விரைந்தெழுந்து கொலுச்சாவடியிற் கூடிய தூதர்களைக்கூவி, என்மைத் துனரிறந்த காரணகாரியங் கண்டறிந்து வாருங்கள் என்றனுப்பினன். அப்படியே அவர்கள்போய்ப் பார்த்துச் சிதைந்து வதைந்த கீசகர்களைக் கண்டு, ஆச்சரியமு மாச்சரியமு முள்ளவர்களாகி, அரசன் திருமுகத்தைப் பார்த்து இராஜகுல ராஜனே! பராக்கு. கீசகராஜனுடன் உபகீசகராஜரும் பறந்துபோனார்கள். அவர்கள்பேருமறைந்துபோயிற்று. அந்தப் பிணங்களலங்கோலமாய்க் கிடப்பதை நோக்கி இந்தப்பட்டினத்து ஜனங்களெல்லோரும் பயங்கொண்டு வெளிவரமாட்டாமல் வேசாறி வெம்புகின்றார்கள். இந்தவிபரீதம் எல்லாம் சைரந்திரி என்னும்பெண்ணால் விளைந்ததன்றி, மற்றொருவராலும் அல்ல. அந்தப் பாக்கியசாலி இன்னுஞ் சிலநாளிவ்விடத்திலிருந்தால், இவ்வூரிலுள்ளோரியாவருஞ் சாகாமற்போகார்கள். தருமசீலதயாளுவாகிய தராபதியே! இனி தாங்களே யோசிக்கத்தக்கதென்று சரணஞ்செய்தார்கள் அவர்களுரைத்த மொழியை யோசித்து, மந்திரிகளுடன்கலந்து. வார்த்தையாடி தந்திரயுத்தியினாலும் மந்திரசித்தியினாலும் அந்

தக் கந்ருவரைக் கைப்பிடியாய்ப் பிடிப்பதற்கான உபாயந்தேடி விற்படை வேற்படை யோக்கியவீரர்களை விடுத்து மற்புயவலி மிகுந்த மைத்துனரை அற்பமாயெண்ணிச் சற்பனை செய்து பிராணனைவாங்கிய துற்பலமுள்ள துட்டர்களை எப்படியாகிலுங் கைப்பிடியாகப் பிடித்து என்சொற்படி வரச்சொல்லுங்களென்று பற்கடித்து, விராடன் பகர்ந்து, இறந்துபோன மைத்துனருக்குச் செய்யவேண்டிய ஈமவிதிக்கடன் முடித்து, இனி யென்ன மோசம் வருமோவென்று ஏக்கமேலிட்டுத் தூக்கம்பிடியாமலிருந்தான். நேற்றிரவில் நடந்த சங்கதிகளைப் பாண்டுமக்கள் ஐவரும் பாஞ்சாலியும் தனித்தோரிடத்தில் சேர்ந்து கலந்து, வார்த்தையாடி அஞ்ஞாதவாசஞ் செய்யவந்த நமதவதி நாளாயிற்று. இன்னும் உள்ள கொஞ்சநாளுந் தொலைந்தால், வெறுப்பாயெடுத்த வேடத்தைவிடுத்து; விருப்பாம்பழைய வேடமெடுத்து, வெகுஜனங்களுங் காண வெளிப்பட்டுப் பேசவேண்டிய சேதிகளையெல்லாம் பேசிக்கோள்ளலாம். அதுவரையிலுஞ் சந்தடிபண்ணாதிருப்போமென்று பேசிக்கொண்டு விற்பனவிவேகிகளாகிய அவ்வேந்தர்கள் தங்கள் கற்பனைத் தொழிலில் பக்குவமாகவிருந்து காலங்கழித்தார்கள். அதுமுதல் விராடராஜனும் சுதர்க்கணையும் புறம்பிலுண்டான சுற்றத்தாரும் மற்றையவர்களும் அந்த விரதசாரணியினிடத்தில் அதிகமாய் நெருங்கவும் வேடிக்கையாய்க் கொஞ்சவும் குலாவவும் போ வா என்று வாய்ப்பேச்சுப் பேசவும் பயந்து, அவளாலாகவேண்டியவேலைகளைத் தாங்களே செய்துக்கொண்டும் அம்மா தாயே! சும்மாவிருவென்று உபசரித்து எங்களுக்கு உயிர்த்துணையாயிருந்த கீசகர் உன்மேலாசை வைத்து, மானமதிகெட்டுநாசமானர். நீ எங்கள்பேரில் யாதொரு குற்றங்குறை வையாமல் கோபதாபஞ் செய்யாமல், உமக்குக் காவலாகிய காந்தருவரிடத்தில்சொல்லி எங்களைரக்ஷிக்கும்படி பிராணபிக்ஷை தாரும். நீரெங்களுக்குப் பக்கத்துணையிருந்து காரும் என்று உபசாரம் பண்ணிப் பொன்னைப் போற்றுமாப்போல் பூசித்துவந்தார்கள். அந்நகரில் உள்ள நான்குவருணத்தவரும் திரௌபதியம்மனைக்கண்டால்,எதிர்சென்றோடித் தீர்க்கதண்டனிட்டு, மரியாதையுடன் பாதபூசைபண்ணி, மஞ்சள், குங்குமம், கெந்த, கதம்பம், சந்தனுதி, யக்ஷதைகளைச் சாத்தித் தூபதீபங் கொடுத்து வணங்கி, வாய்க்குற்றம் கைக்குற்றம் வரப்போகிறதென்று வயிற்றில் வாள்கட்டிக்கொண்டவர்போல் பயங்கரத்

துடன் மதித்துத் துதித்துச் சன்மானம் புரிந்து தேவதாவுப சாரம் ராஜோபசாரம்போல் பல உபசாரங்களையுஞ் செய்துவந் தார்கள். பாஞ்சாலியும் இந்தப் பூனை யந்தப்பாலைக் குடிக்குமா வென்பதுபோல் எனக்கென்னதெரியும். நான் என்ன அறிவேன் அம்மாவென்று சுதர்க்கணைக்கிணையாய்ப் பொருந்தி அமர்ந்து வாழ்ந்திருந்தாள்.

பாண்டவர்கள் அஸ்தினபுரத்திற் சொக்கட்டானுடித்தோற் றுப் பன்னிரண்டுவருடம் வனவாசஞ்செய்யப் புகுந்து, காடாக் கினியோங்கிய காட்டிலும் காளவிஷாக்கினி தங்கிய பாலை நிலத் திலும் வடவாமுகாக்கினி வந்து குடிகொண்ட மலைச்சார்பிலும் திருபுராக்கினி சிறந்த பருக்கைக்கல் மேட்டிலும் மதனக்கினி மலர்ந்த மடுக்கரை-குளக்கரை-நதிக்கரைகளிலும் திரிந்து மழை-பனி-காற்று-வெயில் முதலாகிய வருத்தங்களையும் பொறுத்து அலைந்த சரித்திரத்தைச் சொன்னேன். பஞ்சவரைக் காட்டி லோட்டிவிட்டு வீரகண்டைதாங்கிய தன்பாதத்தில்சத்துருவெல் லாம் மித்துருவாய்ப்பணிந்து, கப்பணங்கட்டிவரப் பொற்பணி முடிபூண்டு, எப்புவனங்களுக்கும் ஏகசக்ராதிபதியா யிருந்து துரைத்தனஞ் செய்துவராநின்ற பாப இருதயம்படைத்த துரி யோதனராஜன் அச்சமில்லாச் சேனைகளுடன் மச்சநாட்டைப் பகைத்து இச்சையின்படிக்குப் பசுமந்தைகளைக் கொள்ளையிடலா மென்று கொச்சைமதியால் இச்சைகெட்டுவந்த தக்ஷிணநிரை மீட்சி உத்தர நிரைமீட்சியென்னும் மாடுபிடி சண்டையைச் சொல்லுகிறேன் கேளும் ஜனமேஜய மகாராஜனே! என்று வைசம்பாயனர் சொல்லிவருகிறார்.

கீசகசம்மர்ம முற்றிற்று.

தக்ஷிண நிரைமீட்சிச் சருக்கம்

கண்ணன் துதி

சந்தவிருத்தம்

தொழுவார்தம் வினைதீர முற்கோல மாய்வேலை சூழ்பாரெயிற்
றுழுவானை நன்னுமை மொன்றுயினுங் கற்றெழு குருவோதினுர்
வழுவாத சுரராக நரராக புள்ளாக மாவாகபுன்
புழுவாக வொன்றிற் பிறத்தாலு நரகிற் புகார்காணுமே.

(இதன்பொருள்)

பணியத்தக்க பக்தஜனங்களின் தீவினை தீர்ம்படியாய் ஆதி வராகமாகிப் பூமிதேவியாருக்கு ஆடையாகிய கடல்சூழ்ந்த உலகத்தையுழுதருளிய பெருமானை அவனது அனேகமாயிரந் திருநாமங்களில் ஒன்றுயினுங் கற்று ஒருதர முருவேற்றினவர்கள் தவறுதலில்லாத தேவர்களாவார்கள். ஒருவேளை, நரர்களாகப் பக்ஷிகளாக மிருகங்களாக அற்பப்புழுக்களாகப் பொருந்தி பிறக்கினும் நரகிற் புகுதமாட்டார்கள். ஆதலால் இத்தன்மைவாய்ந்த நற்பதவியைக் கொடுக்குந் திருநாமச் செஞ்சுடரென்னும் ஸ்ரீகோபாலஸ்வாமியைச் சிந்தித்துப் பொற்பாத கமலங்களைப் பூசித்து, ஸ்ரீவேதவியாசராகிய மெய்த்தவனை விசுவாசித்து,மேல் நடந்த தக்ஷிணநிரை மீட்சியின் சரிதையைச் சொல்லுகிறேன். கேளும்ஜனமேஜெயமகாராஜனே! என்று வைசம்பாயனர் வகுத்தல் செய்தருளுகின்றார்.

மராடமன்னர் முதலிய யாவரும் வணங்கும் விராடபுரத்திற் கீசகர்களை வென்றபின்னர், பாண்டவர்களும் பாஞ்சாலியும்அஞ்ஞாதவாசஞ் செய்து வருநாளையில், கீசகர் நூற்றுநால்வருங் கேடுகண்டதைக்குறித்து, மச்சராஜன் பெருமூச்சுவிட்டுக் கிலேசமுற்று, இந்தநாள்வரையிலும் இந்த ராச்சியத்திற் கிடையூறு வராமற்காத்துச் சேனாதிபத்துவ விசார்ணையுஞ் செய்து,எனக்குத் திகிலுந் தீங்குமில்லாமல், தனது சொந்தம்போற் பார்த்து வந்த என் மைத்துனன் மாண்டானே. ஆ! இனிநானெப்படி பகைவரை வெல்லுவேன்? இறைகேட்டனுப்பும் முறைமையுடைய வேந்தற்கு இல்லையென் றென்னமாய்ச் சொல்லுவேன்? எங்கும் விரோதிகளாய்ப்படைகொண்டு சண்டைசெய்ய வருவார்களே? அப்படி வருபவர்களுக்குப் பயிர்களைப் பறித்த பாவனையாயிற்றே. கோட்டையை யிடித்த கொள்கைபோலாயிற்றே. என்னிடத்தில்வைத்த மதிப்பு முதலிய கௌரவமும் இன்றோடு ஒழிந்ததே. நமது கீசகனுக்குச் சமானமான பலசாலியைச் சம்பாதித்துச் சேனாதிபதி யாக்கவேண்டுமே. தெய்வமேயென்று மனக்கவலையுற்றிருந்தான். அந்தச் சமயத்தில் பக்கத்திலிருந்த கங்கபட்டர் மச்சராஜன் மனதைத்தேற்றி, வாய்மினற்றலை மாற்றித் துஷ்ட கீசகர்களுடைய நஷ்டத்தைப்பற்றி நீங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றீர். அன்னியராஜ பயங்கரங் கொண்டச்சப்படு

கிறீர். நீரியாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். படுபாவியான கீசகன்பட்டதே உமதிட்ட தெய்வானுக்கிரகமென் றெண்ணிக் கொள்ளும். இனியுமக்கு நல்லகாலம். அந்தக்கீசகனின்னுமிருப் பானுகில், சத்தியவாக்கியமும் சகலபாக்கியமும் யோக்கிய சிலாக் கியமும் பாழாய்ப்போய்விடும். இதுவரையிலும் உம்மைப் பிடித் திருந்த ஏழரைநாட்டுச்சனி விட்டுப்போயிற்று. துட்டத்துரோ கியை நினைத்துத் துன்பப்படாதீர். நமதுமடைப்பள்ளிமல்லனை விட வேறு சேனுதிபதியும் வேண்டுமோ? இனியுமக்குப் பகைவ ரென்பவருமில்லை. உமதுசத்தியசவுச வாசாரவிரதம் உற்ற துணை யாயிருந்து, மேலான சம்பத்தை உமக்குண்டாக்கி வைக்கும். நீர் சஞ்சலப்படவேண்டாம். சாந்தகுணனே என்று தருமசொரூப னுரைத்துச் சமாதானப்படுத்தியபோது, விராடராஜன் வேதியர் பெருமானுரைத்த புத்தியைக் கேட்டு, மிகு மகிழ்ச்சிகொண்டு மேன்மையோடிருந்தான். அன்னிய மாதர்மேல்வைத்த ஆசா பாசத்தால் மோசம்போய்த் தம்பிமார்களுடன் கீசகன் பட்டா னென்று தேசாதேசமெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

இது இப்படியிருக்க, நிலைபெற்ற விருபுறத்திலும் அலை யெறிந்தொதுங்கிய பொற்சன்னங்களும் நவமணிக்குப்பைகளும் இராசிராசியாய்ப்புரண்டு, பிரகாசித்திருக்கின்ற கங்கைவளமோங் கிய குருநாட்டுக்குக் கதிபதியான துரியோதனராஜன் அவ்திரு புரத்தை யாண்டுவருகையில் ஒருநாள் நம் வஞ்சகச் சூதினில் தோற்றுப்போன குந்திதேவியின் பிள்ளைகள் இன்னும் வன வாசஞ்செய்ய வேண்டியிருக்குமா? அல்லது அஞ்ஞாதவாசம் பண்ணப் போயிருப்பார்களே. அவர்கள் நாட்டைவிட்டுக் காட் டுக்குப்போன நாளைக் கணக்கிட்டுப் பாருங்கள் சம்பிரதிகளே யென்றான். அவ்வரண்மனைக் கணக்கரில் பெரியராயசக்காரனெ ழுந்து வணங்கி; இராஜாதிராஜ ராஜபரமேசுவர இராஜமார்த் தாண்ட ராஜவுத்தண்ட ராஜகெம்பீர ராஜப்பிரபுடீக ராஜதுரந் தர ராஜராஜேசுவர வணங்காமுடிபொறுத்த துரியோதன மகா ராஜனே! பராக்கு. ஆண்டவனுதாரப்படிக்குப் பாண்டவர்கள் வனவாசங்கழிந்து அஞ்ஞாதவாசத்தில் முக்கால்வாசியுந்தொலை த்துவிட்டார்களென்றான். அந்த மொழியைக் கேட்ட அரவ கேதன் சிந்தைவருந்தி அவசரப்பட்டு, அருகில் நிற்றந்திருந்த சாரணர்களையழைத்து அடாதுதர்களே! பாண்டவருறைந்திருக் கும்பதியைக்கண்டறிந்து நமக்குத்தெரிவிப்பீர்களாகில், உங்களுக்

குக் கோடிபொன்னும் குதிரை - யானை - தேர்-குடை-கொடி-பட்டு பட்டாவளி-ரத்தினபரணம் - சிவிகை - அறுகு-தீவட்டி-ஜயபேரி-பாங்காவாத்தியம் கிராமம்-பூமிமுதலான வெகுமதிகளுங் கொடுப்பேன். நான்குதிக்கும் நன்றாய்த்தேடிப்பார்த்து வாருங்களென்று சந்தனத் தாம்பூலங் கொடுத்தனுப்பினன். அரசன் சொல்லாசையை நம்பி அநேகதூதர் புறப்பட்டுச் சபை மெச்சும்படி வெகுமதி பெறவேண்டு மென்னுஞ் சந்தோஷத்தால், வான மளாவிய மதில்வளைந்த கோட்டைகளும் மாடமாளிகை கூட கோபுரமுள்ள பட்டினங்களும் சிற்றூர்கிராமங்களும் அக்கிராரங்களும் துருவங்களும் நதி, குளம், ஏரி, தடாகம், ஓடை, கயம், கால்வாய்களும், வாழை, கமுகு, கரும்பு, தேங்கு,வருக்கை மாமுதலிய வளப்பமும் பெற்ற நாடுகளும் மேன்மைபொருந்திய வீடுகளும் வண்டோலஞ்செய்யும் பூங்காடுகளும் விண்டலமுயர்ந்த பர்வதங்களும் சுரபுன்னை தாழை கரும்பனையடர்ந்த மணல்மேடுள்ள கழிக்கரையும் வழிக்கரையுந்தேடிப் பாண்டவர்களின் காலச்சுவடுண்டோ வென்று நாடி நாலுதிக்கும் பிரிந்தவர்கள் கூடி, வேசாறி வாடி, நாமெல்லோரும் அதிர்ஷ்ட மற்றவர்களென்று தங்களைத் தாங்களே நொந்துகொண்டு, அஸ்தினபுரத்திற்கு வந்து சூரியபுத்திரனுகிய கர்னன், சௌபலராஜகுமாரனுகிய சகுனி பரத்துவாச தநயன் துரோணசாரி, சிவன்காதன் அஸ்வத்தாமன், சரத்துவந்தமகாரிஷி சந்ததிகிருபாசாரி, சந்தனுநந்தனன் வீஷ்டுமாச்சாரி, பச்சை முதலிய ரத்னபரணமும் வெட்சிமாலையும் புனைந்த திரிகர்த்தன், வியாசன் வழித்தோன்றல் விதுரன், திரிதராட்டிரன், இன்னுமுள்ள பலதேச ராஜரும் மந்திரி சாமந்தரும் தந்திரி சாளுவருஞ் சூழ்ந்திருக்கச், சந்திரனைவிட்டகலாத தாராகணம்போல் தம்பிமார் மொய்த்திருக்க, முடிமன்னர் முறைமையுடனிணங்கிக் கப்பணஞ் செலுத்திக் கால்மேல் வணங்கக் கட்டியர்கூற பட்டுவர்புகழத் துட்டர்கள்தாழக் கவிவாணர் துதிக்க இசைவாணரிசைக்க மறையவர் ஆசீர்வதிக்கப் பரதநாட்டியப் பாவையராடச் சுரஜதிகூட, வெண்சாமரம்போட வீரர்களெதிரோட, வெண்பட்டுக்குடை நிழற்றச் செம்பத்மராகத்தால் அமைத்த வீரசிங்காதனத்தின்மீது மத்தியான சூரியன் போல் வேந்தர் வேந்தனை சுயோதனராஜன் வீற்றிருந்தான்.

வினைப்பயனுக்கேற்ற விதியைக்கதியாக்கிக்கொண்ட வேந்தனிருந்த கொலுமுகத்தில் பாண்டவர்களைத்தேடி யிளைத்துவந்த

தூதர்கள்போய் நின்று தீர்க்கதண்டனிட்டு நந்தியாவட்ட மாலைபுனைந்த நாதனே! கொன்றைமாலையணிந்த பரமசிவனுக்கு வலதுகண்ணுகிய சூரியகிரணங்கள் பாயுமிடத்தில் அந்தச் சருவேசுரனுக்கு இடதுகண்ணுகிய சந்திரப்பிரகாசம் பரவுமிடங்களிலும் அவ்வாதிபாண்டுரங்க னெற்றிக்கண்ணுகிய அக்கினிதேவன் பொருந்துமிடங்களிலும் காலகண்டன் காலருள்கண்டகாலனுடைய கரும்பாசஞ் செல்லுமிடங்களிலும் புகுந்து சோர்வில்லாம லாராய்ந்துபார்த்தோம் எங்கும் பாண்டவரைக் காணுமல் பங்கப்பட்டிங்குவந்தோம். பார்த்திபனே! தங்கள்சமுகத்தில் நாங்களுண்மையாய்ச் சொல்லுகின்றோம். ஆண்டவனருளால் பாண்டவர்கள் மாண்டேபோனார்கள். சந்தேகமில்லை. தேவரீரிடத்தில் தவணைவைத்துக்கொண்டு போனநாள்முதல் இதுவரையிலுந் தேடித்தேடி விருதாவாய்க் காலம்போக்குவதில் பிரயோசனமில்லை. சீக்கிரஞ்சென்று மன்னர் பெருமானுக்கு முன்னுடிச் சொல்லிவிட்டால் இன்னும் வேண்டிய வுபாயந் தேடிக்கொள்வாரென்று எண்ணி வந்துவிட்டோம். தேவரீர் கட்டளையின்படி நடக்கிறோமென்று நமஸ்கரித்து, வாய்புதைத்துக் கைகட்டிப் புத்திபுத்தியென்று விண்ணப்பம் செய்தார்கள்.

மன்மதனையொத்த வடிவமைந்த துரியோதனராஜன் சாரணருரைத்த லோபமொழியைக் கேட்கக் காதிரண்டுங் கும்மென்றடையக்கதறி, உடல்பதறி, இருகரத்தையுமுதறி, தன்னருகிலிருந்த சாதுக்கள் முகத்தை நோக்கி ஐயா பெரியோரே! இந்தத் தூதர்கள் அவனிமுழுதுந்தேடி யலைந்துவந்து உரைத்ததைக் கேட்டீர்களே. இனி நான் செய்யவேண்டிய காரியமின்னதென்றியம்புங்கள்.. பாண்டுமக்களைவரும் பாஞ்சாலன் தையலும் துவாதசவருடம் வனவாசம்பண்ணி தேகமிளைத்துக் களைத்து ஆவியழிந்து போனார்களோ? அல்லது அஞ்ஞானவிருளைப் போக்கிச் சுஞ்ஞானச்சுட ரெரிக்கச்செய்யுந் தவமுனிவர்களினுல் மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசைவிட்டு, மனுதிடம் பெற்று விஞ்ஞானவினக்கத்தால் வேதாந்தியானார்களோ? ஒருவேளை யாருமறியாம லஞ்ஞாதவாசங்கழிந்து முடிவில்லிவ்விடம் வந்து முளைப்பார்களோ? தெரியவில்லை. உங்களுங்களுள்ளத்தில் செவ்வையாக நிதானித்து யோசித்துச் சொல்லுங்களென்று கள்ளமனத்தோனை காந்தாரிபுதல்வன் கேட்கச் சூரியன்புத்திரனை கர்ணன் சொல்லலுற்றான்.

அரவக்கொடி நிலவிய கௌரவகுல முதல்வனே! என் சொல்லுறுதியைக்கேளும். பாண்டவரைவரும் வனவாசம் பண்ணிப் பன்னிரண்டு வருடத்தையுங் கழித்துக் காடுவிட்டகன்று நாடுபற்றிச் சென்று, கூடுவிட்டுக் கூடுபாய்வதுபோல், மாறு வேடம்பூண்டு, பெயர் வேறுகொண்டு, குலம்வேறு காட்டி, குணம் வேறுநாட்டி, நீதிநெறி பிசகாமல், ஆசாரம் வழுவாமல் பழமைச்செல்வம் பாராட்டாமல் அடங்கி, ஆயுதங்களை மறைத்துவைத்துக் காலத்துக்குத்தக்க கோலமாக ஒவ்வொரு வேலையில் இருந்து அஞ்ஞாதவாச வருடமுந் தொலைத்து, அப்பால் வெளிப்பட்டு ஆபரண மணிமாலைகள் பிரகாசிக்கும் மார்பினையுடையவராய், ஆயுதபாணர்களாய், இறுமாந் திவ்விடம் வந்து, நாங்கள் முன்னஞ் சூதாடித்தோற்றநாடு கொடுப்பையாவென்று நம்மைக் கேட்பார்கள். அவர்களுயிருடன் வருவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. வேருக நினைக்கவேண்டாம். இலங்கியவலம்புரி மாலையைப்பார்த்து அரிவைய ராசைகொண்டடரும் அலங்கார மார்பனே! என்று வீரப்பிரதாபந்தெரிந்த மேலோனும் மந்திரசக்தி வரோதயனுமாகிய அங்கதேசாதிபன் அறைந்தான்.

இவ்வாறிசைந்த கர்னன் கருத்தைச் துச்சாதனன்கேட்டுத் துடித்து, மனங்கொதித்தெழுந்து, கண்ணுங்கருத்துங் காதும் புகையக் கனன்று, அண்ணனடிமலரிற் பணிந்து, மலையிரண்டு திரண்ட தோளாகிய வள்ளலே! ஏழையாகிய வென்சொல்லையும் இரங்கிக் கேட்டருளும். பாண்டவர்கள் நாட்டைவிடுத்துக் காட்டை யடுத்தபோதே செத்த பிணத்தோடொத்த பிணமானர்கள். மனுஷத்தனமுள்ள மானிகள் இந்நாள்வரையிலும் உயிரோடு இருந்து இனிஇவ்விடம் வரப்போகிறார்களென் றெண்ணுகிறீர்களா? ஐயோபாவம். அவர்களப்போதேகெட்டு மண்ணில் மக்கிவிட்டார்கள். அவர்களைப் புதைத்தவிடமும் புல்முளைத்தாயிற்று. ஐவர்கள் பேரும் மறைந்துபோயிற்று. அக்காரியங்களை நிதானிக்காமல் கர்னராஜன் இப்படிச் சொன்னது தப்படியல்லவோ? இதன்றியும், அவர்களுயிருடனிருந்தால்பாதாளபேதவஞ்சனம் போன்ற நம்முடைய தூதர்களின் கண்ணில் அகப்படாமற் போவார்களா? இதுவே நமக்குபோதுமானசாக்கியிருக்க, வேறு வேறெண்ணி விரிக்கவேண்டியதென்ன? தேவரீர் கட்டளையிட்டருளுவீராகில், காட்டிற் கஷ்டப்பட்டுக் காலங்கழித்த ஐவர்கள்

தாறுமாறு யிறந்ததற்குக் காரணஞ் சால்லுகிறேன் காவலர்க் கிறையே! கவனித்தருளும்.

வாரேறிய மலைமுலையும் வாடா வல்லிக் கொடியிடையும் வாழைத் தொடையும் அன்னநடையும் வர்ணவுடையுமுடைய மங்கைமார்க்கெல்லாங் கடைப்பட்ட அந்தஸ்திலுல் வறுமை யுடைய பாஞ்சாலியானவள் மர்மம்விட்டுத் தருமராஜனேநோக்கி ஐயோ! பாவியே! அன்னம் இல்லாமல் நான் அலைகின்றேனே, ஆவியொழிகின்றேனே, ஏழை யெளியவர்க்குப் பெண்சாதியான வள் எவ்வளவோ செல்வங்களை யின்பமா யனுபவிக்கிறார்களே. கோழையாகிய உங்களுக்குப் பெண்டாகிய நான் ஏழையாகித் துக் கித் தவித்துக் கண்டார் சிரிக்கக் கலங்குகின்றேனே. முகத்திற்கு மஞ்சளுண்டா? நெற்றிக்குக் குங்குமமுண்டா? கூந்தலுக்குமாலை களுண்டா? குகூசிக்குக் கஞ்சியுண்டா? அஞ்சலென்பவருண்டா? ஆதரிப்பவருண்டா? ஒஞ்சரித்துப்படுக்க வோலைப்பாய்உண்டா? குந்தியிருக்க குடிசையுண்டா? வஞ்சியர்தம்மைப்போல் வரிசைக ளுண்டா? வெளுத்தவாய்க்குவெற்றிலையுண்டா? ஆஹாதெய்வமே சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை மேலென்பார்கள். நீங்கள் மேலும் வில்லும், வாளும், பூர்த்த தோளும் உடையவர்களாய் இருந்தென்ன பலன் பெற்றீர்கள்? எனக்கென்ன நலம் வைத் தீர்கள்? நீங்களைவரும் ஆண்பிள்ளைகளிற் சேர்க்கைதானே? உங் கள்போன்றவர்களைப் பார்க்கும்போது வெட்கமில்லையா? என்று நாள்தோறும் சலித்துக்கொண்டுபேசி, வீணாய் வெறுத்து, அவ மதித்து ஏசி, முகங்கடுகடுத்துத் தினமுஞ் சண்டைகொடுத்தாள்.

அதனால் தர்மராஜன் குக்கல்வாய்ப்பட்ட முசல்போல்வருத்த முற்ற நாளையில், தம்பிமார் தமையனை யடைந்து, வடவைக் கனல்போற் கொதித்துக் கோபித்து அடா துரோகி! உன்னுடன் பிறந்து என்ன பலன் கண்டோம்? பெண்சாதி பிள்ளைகளை விட் டோம். நாடு நகரங்களைச் சூதால் இழந்து கெட்டோம். சகோத ரர்களாகிய துரியோதனாதியரைப் பிரிந்தோம். உண்டு தின்று உறங்கும்பருவத்தில் உண்ணாமல்தின்னாமல்ஓட்டாண்டியானோம். ஒருவருக் கொருகாசு கொடுக்க கதியற்றோம். யுத்தமுனையில் வெற்றிபெறுதற்கும் வகையற்றோம். இனியுன்னிடத்தில் பொரு ந்தி யிருப்பது தர்மமா? எங்களை இப்படிக்கு எளிதஞ் செய்வது மர்மமா? பாண்டுவுக்குப் புத்திரராகப் பிறந்த கர்மமா? உனக்கு ஊழியஞ்செய்ய எங்களை மடக்கிவைத்துக்கொண்டாய். வேப்பம்

வித்துக்கு ஒப்பானவனே என்று மரியாதைதப்பி எதிர்த்துக் கொண்டார்கள். தன்னே டொருநாளும் மாறுபட்டுப் பேசாத தம்பிமார்கள் வாயில்வந்தபடி பேசிய வருத்தத்தினுலும் திரௌபதை படுத்துந் தொந்தரையினுலும் தனக்கு உள் இருக்கும் சில அசந்தர்ப்பங்களினுலும் அகாலபோசனத்தினுலும் காட்டுத்தீ வெப்பத்தினுலும் மலேக்கானலாலும் பனியாலும் தன்னைப் பிடித்த சனியாலும் சமானமான அரசர்கள் பழித்துச் சின்னத் தனஞ் செய்வதாலும் பாபமும் பழியும் மேலிட்டதாலும் நம் இடத்தில் வந்து முகத்தில் விழிக்கப் பவுஷில்லாததாலும் தன் னுற் கூடியவரையிலுந் தாழ்ந்து குழைந்து விசனுக்கினியினுல் வெந்து சஞ்சலத்துடன் சலித்து உயிர்விட்டான்.

பிரியாமலிருந்த தருமராஜனுயிர்பிரிந்தபோது, தம்பிமாருந் திரௌபதையுந்தழுவி அழுது அந்தோ! பழுதுவந்ததே என்று பரதவித்து, அண்ணனைப்பறிகொடுத்து மண்ணிலிருந்துஎன்ன வாரிக்கொள்ளப் போகிறோம்? என்றைக்கிருந்தாலும் நமக்கு மிதுவே கதியென யிறந்துபோனுர்கள். அவ்விடமிருந்த கழுகு பருந்து காக்கை முதலிய பட்சிகளும் வயிராறத் தின்று கழித்து விட்ட வெலும்புகள் மண்ணில் மக்கி மறைந்துபோயின. அவர் களைக்குறித்தின்னும் பேசுவதுவீண். எனக்கனேகவிதங்களினுல் திருஷ்டாந்தமாயிற்று. அண்ணு! நான் திண்ணமாய்ச் சொல்லு கிறேன். கருமானுலையில் காய்ச்சித் துவைத்த இரும்பிலேறிய சலமானது திரும்பி வந்தாலும்வரும், காடேறிய பாண்டவர்கள் இனி நாடேறப் போகின்றதில்லே. என் சொல்லுக்கு எதிரெவர் பேசினுலும் அது ஈடேறபபோகிறது மில்லேயென்று உரைத் தான். அந்தத் துச்சாதனன் சொல்லேத் தேவர்கள் விரும்புந் திவ்யக்கியான இச்சாசுதந்தரராகிய துரோணுசாரியர் கேட்டுப் பச்சாதாபப்பட்டுப் புன்னகைவிளத்துப் பாண்டவர் பக்ஷத்தில் வைத்த பக்ஷமும் பண்பும் அன்பும்யாவருக்கும் பரிஷ்காரமாய்த் தெரியும்படிக்குச் சொல்லத் துணிந்தனர்.

ஓ ராஜாதிராஜனை திரியோதனமகாராஜனே! கேளும். உம்முடைய தம்பியாகிய துச்சாதனராஜன் கூஷாத்திரயமாகச் சொன்ன ஆத்திரவார்த்தையை யோசித்துப்பாரும். பாண்டவர் களே இலேசாக நினைக்கவேண்டாம். சிறுபிள்ளேயுடுத்திய சிற் றுடைபோற் பேசாதேயுங்கள். முன்பின் எண்ணிப்பாராமல் முழு மோசம் போகாதேயுங்கள். முறைதப்பான ஆலோசனை பண்

ணதேயுங்கள். பாண்டவர்க ளெத்தன்மையரென்றால், வேத முறை வழுவாத வித்தகர்கள். விண்ணவர் கொண்டாடுமேன்மை பெற்றவர்கள். யாருடைய நாவுக்கு மினிமையானவர்கள். எத்த லத்தவர்க்கு முதன்மையானவர்கள். மூவாசையற்றமுனிவரா லுங் காணுதலாற்பெற்ற பாசுபதமுதலியபாணவலிமையுடையவர்கள். மிகுந்த சுகந்த கற்பகமாலை பூனைந்தவர்கள். விற்பனவிவேக முயர்ந்தவர்கள் எங்கும் விளங்கும் இளஞ்சூரியன்போல் சரீர தேஜசுடையவர்கள். மந்திரஞானியர். எப்புவனமுமதிக்கும் ஒப் புவமையில்லாதவர். மருதமரத்தை யுதைத்திரட்சித்துக் குருந்த மரத்திற் குதித்துவிளையாடி பன்னகசயனஞ்கியதிருமாலைப்பாண் டவர் சகாயனென்று யாவருஞ் சொல்லும் பதம் பெற்று இறு மாந்திருக்கும் பார்த்திபர். காலகேயநிவாதகவசர்களுடைய உரத் தையும், வரத்தையும், சிரத்தையும் புரத்தையும் போக்கித் தேவர் களிடரை நீக்கித் தேவேந்திரனுக் காதிக்கமுண்டாக்கிவைத்து அழியாக் கீர்த்தியைப் படைத்தோர். கடலிலுமுயர்ந்தகண்ணரு ளுடையோர். அமுதினுமினிய அன்புடையோர் சற்றும் பிசகாச் சத்தியசம்பன்னர். வித்தகமனுநூல் மேம்படுமன்னர். இத்தன் மையராகிய அந்த வுத்தமவேந்தரைச் செத்தனரென்பது தகு மோ? அத்தினபுரியில் உத்தமர்கூடிய சபையிற்கூறிய உறுதி சபத முடிக்காமற் போவாரோ? மத்தியர்கூடி வசைபேசும்படி யாய் சாவாரோ? பாண்டவரை மாண்டவரென்று மனப்பால்குடி யாதேயுங்கள். பகைவருக்கு ஆடவரென்று யோசிக்கவேண்டி யது. தங்களுண்மையை நிலைநிறுத்தும்படிதவணைநாட்கழித்து இன்னும் சிலநாளையி லிவ்விடம் வந்து சேரப்போகிறார்கள். நாமெல்லோரும் கண்ணுற் காணப்போகிறோம். தேனெங்குமாலை தாங்கும் பூமானே! நான் சொல்லியதைச் செவ்வையாய்த் தெரி ந்து உட்கொள்ளுமென்று துரோணச்சாரியர் சொன்னர்.

இப்பால் வில்லின்மறை வல்லவராகிய கிருபாசாரியர் சொல் லத்தொடங்கினர். நல்விவேக சுகபோகமுற்ற விராஜனே! சத் தியம் விட்ட அசத்தியர்களுக்கு மிர்த்திவு கிட்டிவருமேயன்றிச் சத்தியந்தொட்ட உத்தமர்கட்கு உரிய காரியம் நிறைவேறுமுன் மிர்த்திவு யெட்டிப்பாராது. ஆதலால், உண்மையுள்ள பாண்ட வர்கள் மரணமானுர்களென்று அகாலமரணத்திற்கு இடமான வர்களே சொல்வார்கள். புத்திமான்கள் அவைகளை யொருபோ தும் ஒப்புக்கொள்ளார்கள். விம்முதலுடன் சென்ற வேந்தர்

வேந்தர்கள் ஐவரும்நம்மிடத்திலொப்புக்கொண்டபன்னீராண்டு மெளிதிற் கழித்து, அஞ்ஞாதவாசங் குறித்து, அவரவருருவை மறைத்து, எந்த நகரத்திலாவதடுத்து, எடுத்தகாரிய முடிப்பதற் குந் தொடுத்தவேலை நடத்துவதற்குங்கருதிக் காத்திருப்பார்கள். அவர்களைக்கண்டு பிடிப்பவர்களுமுண்டோ? மண்டல துரந்தர மனுகுலத்தவனே! அவர்கள் மகாசூராள். தனுமுறை முதலிய சாஸ்திரமறிந்த வீரர்கள். சாதுசங்கப் பழக்கமுற்ற தீரர்கள். தனகனக வஸ்துவாகன தர்மவிசாரணையிற் குபேரன் போன்ற வர்கள். தவம்பெற்றவர்கள். மதிமந்திரிகள். ஒருமையும் பெரு மையு முறவாய்க் கலந்தவர். இவ்வைவர்களில் தருமநந்தனர் சதாநிஷ்டைகூடினவர். அவாவறுத்தலும் பொறுமையும் அழு க்காறின்மையும் நற்குணச்செய்கையும் புறங்கூறுமையு முடைய வர். தம்பிமாரிடத்தில் அவர்களிஷ்டத்திற்கு மாறுபடாமற் நட ந்து காலத்துக்கேற்ற புத்தியுத்திகளை யெடுத்துக்காட்டி, அவர் களைத் தன்வசப்படுத்திக்கொண் டிருக்கத்தக்கவர். அந்தத் தம்பி மார்கள் தமையன் சொல்லுக் கிரண்டில்லாமலிருந்து, அவர் கீறிய கோட்டைக்கடவாமல் நடந்து, தமையனைத் தந்தையாக வுட்கொண்டு நிந்தை தேடாதிருப்பவர்கள். ஆதலால், அவர்க ளுக்கு ஒருபோதும் பொல்லாங்கு நேரிடாது. அப்பேர்ப்பட்ட அறிவாளிகள் மனவெறுப்பினுல் ஜேஷ்டனைத் தாறுமாறுப்ப் பேசி அவருமிறக்கத் தாங்களும் இறந்தவர்களென்பது மாச்சரி யமன்றி ஆச்சரியமல்ல. அந்த நினைப்பை முற்றும் மறந்து எப் படியும் இவ்விடம் வருவார்களென்னும் எண்ணம்வைத்து,அவ ர்கள் வந்துவிட்டால் அதற்கு என்னசெய்வோம் என்றும் அச் சத்தோடிருக்கவேண்டும்.

அர்ச்சுனனெனுமென்முல் அசகாயசூரன், அதிவீரன், மூன் றுலகையும் வெல்லுந் தீரன், சுந்தரத்திற் சொகுசுடைய மாரன், தேவதாஸ்திரந்தெரிந்த கெளமாரன். வீமனெப்பேர்ப்பட்டவ னென்முல், ஊழிகாலத்தெமன்போல் யுத்தம்பண்ணத்தக்க சண் டப்பிரசண்ட தண்டதரன். சத்வகுண தர்மராஜன் சண்டைசெய் யவந்தால், திரிபுவனமுந் திக்கென்றெரிந்துபோம்,வடவாமுகாக் கினியும் வாடிச் சாம்பலாய்ப் போய்விடும். அவருடைய மகிமை யையாருமறியார்கள். அறியத்தொடங்கினுல் அளவிறந்திருக் கும். அரவக்கொடியோனுகிய அரசனே! இளையவரிருவர் எத் தன்மையரென்னில், ராமபாணத்திலுங் கொடிய அம்பினையுடை

யவர்கள். பரதன்போலும் இலக்குமணன்போலும் விரதம் காப்பவர்கள். பாஞ்சாலியோ பதிவிரதைகளிற் பதிவிரதையானவள். சொல்லைக் கடந்து சொற்புகலாதவள். பல்லைத் திறந்து நகைக்கறியாதவள். வல்லவர் தம்பால் மாறுகொள்ளாதவள். துடிப்பினையுடையவள். தூற்றலில்லாதவள். நற்குண நற்செய்கைகளை வாய்ந்தவள். இப்பேர்ப்பட்ட எழிலுடைமானுள் இவள் தர்மராஜனுடன் சண்டை போடலானுளென்பது தவறிலுந் தவறே. இவர்கள் முக்கியமாய் அக்கியாதவாசந் தொலைத்து இவ்விடம் வருவார்கள். உங்களெண்ணத்தைப் பார்த்தால் அனர்த்தம்விளையுமென்பதற்கு ஐயமில்லை. அவர்கள் வெளிப்படுவதற்குமுன் எவ்வகையிலாவது கண்டுபிடித்துச் சபையிற் பேசியிருக்கிறபடிக்கு மறுபடியும் வனவாசம்போகச் செய்வோமாகில் நாம் சுகப்படலாம். அப்படி செய்யாவிடில் அர்ச்சுனன் கணை அக்கிரமித்து வந்து நம்மைக் கொண்டுபோய் நமனுலையத்தில் சேர்க்கும்.

இதன்றியும், வேதியருக்கு வேதமே கண்கள். க்ஷத்திரிய ஜாதியருக்குத் தூதரே கண்கள். ஆகையால் நீங்கள் சாரணரை விடுத்து முன்ஜாக்கிரதை படவேண்டியது. நமது யுத்திக்கு மேலான புத்தியையுடையபாண்டவர்கள் ஆண்டவன் அருளைப் பெற்றவர்கள். எவர்கண்ணுக்கும் அகப்படார்கள். பகலளவு போனுலொழிய இரவு வராது. அதுபோல், உருவமறைத்துறையும் பாண்டவர்கள் அஞ்ஞாதவாசங்கழித்து வெளிப்படுவார்கள். நமது பலாபலத்தை நாமெண்ணி மெச்சும்போது எதிரிகளின் பலாபலத்தையு மெண்ணித் துணியவேண்டியது. இப்படிக்கெல்லாம் யோசித்து ஒன்றைச்செய்தால், என்றென்றைக்கும் பழுது படாது. அதைவிட்டுத் துராலோசனை செய்வதினுற் பிரயோசனமென்ன? என்று மதியிலுயர்ந்த கிருபாசாரியர் வகுத்தார்.

இந்தப்பிரகாரம் துரோணாசாரியரும் கிருபாசாரியரும் பேசியவிவரங்களைச் சபைநிறைந்த சகலருங் கேட்டுப் பெரியோர்களின் கருத்தை தங்கள்தங்கள் புத்திக்கிசைந்தபடி யோசித்து, முடியப்போகிற காரணகாரியங்களையும் நிதானித்து வாய்மூடி மௌனமாயிருந்தார்கள்.

அந்தவேளையில் கௌரவகுலப் பிதாமகனுகிய விஷ்டுமாசாரியர் துரியோதனனைப் பார்த்து அப்பா! திரிதராஷ்டிரனுக்குச் சுபுத்திரனும் எனக்குப் பௌத்திரனுமான சுகோத்திரனே! நீ தூதர்களை யனுப்பி பாண்டவர்களைத் தேடச்சொன்னது

ஞாயமே. அவர்கள் தேசமெங்குந் தேடிப்பார்த்து திரும்பிவந் துரைத்தது அபாயமே. அதற்காகக் கர்னராஜன் பேசியது நேயமே உன் தம்பி துச்சாதன னுரைத்ததுனக்கு அநியாயமே. துரோணசாரியருங் கிருபாசாரியரு மொழிந்தது காயமே. நீ யந்தப் பாண்டவர்களை யெப்படியுங் கைப்பிடியாய்ப் பிடிக்கவேண்டுமென்றெண்ணுவதபாயமே. இதனுற்காரியமில்லை.பாண்டவர்கள் பன்னிரண்டுவருஷம் வனவாசஞ்செய்து, அஞ்ஞாதவாசமோராண்டுதொலைப்பதற்குன்னி ரூபமறைந்து, ஒருதேசத்தில் உறைந்து, முக்காலே மூணுமா முக்காணி வருஷமுங் கழித்து விட்டார்கள். இப்போது நீங்கள் ஐவர்களைக் கண்டுபிடிக்குமுன் மற்ற நிகரமுள்ள மாகாணி வருஷத்தை மொழித்துவிட்டு வெளிப்படுவார்கள். அப்பேர்ப்பட்ட அறிவுடையோர்களை மரணமடைந்தாரென்று பேசினவர்கள் அந்தப் பாண்டவர்களால் மரணமடையத் தக்கவர்களே. அத்தன்மையான அவசரப் பேச்சை எத்தன்மையோ ரெடுத்திசைத்தாலும்,புத்திமானுகிய நீ யெவ்வளவும் நம்பப்படாது. ஆனல் ஐவரிருக்குமிடத்தை நீங்களறியவேண்டுமென்று விருப்பமுள்ளதாகில், முந்நூலாசிரியர்களால் அதற்கோருபாயமுண்டாயிருக்கின்றது. அந்தக் குறிப்பின்வழியை நான் குறிக்கிறேன். நீங்கள் நிதானித்துக்கொள்ளுங்களென்று காங்கேயர் சொல்லத்தொடங்கினர்.

முனீஸ்வரர்களாலும் ரிஷீஸ்வரர்களாலும் மதிக்கப்படாத தருமராஜனும் திரௌபதாதேவியும் சகோதரர்களும் பொருந்தி வாழ்கின்ற நாடும் நகரமும் மாதமும்மாரி வருஷிக்க வளங் கொண்டிருக்கும். காடுகரம்புள்ள மலைகளெல்லாம் தேன்மாரி கசிந்துகொண்டிருக்கும். ஆறு குளத்தினலைகள் யாவும் நவரத்தினங்களைக் கொழித்துக்கொண்டிருக்கும். கழனிகளி லுயர்ந்து தவழாநின்ற சிப்பிகள் முத்துக்களை முறைமுறையே ஈன்று கொண்டிருக்கும். கருங்கடற்கரைகளில் சிவந்த பவளக்கொடிகள் படர்ந்திருக்கும். காடுகள்தோறும் தேடற்கரிய பொருள் வளம் நிறைந்திருக்கும். பசுவினங்கள் வேளைக்குப் பத்துப்படி பால்கறக்கும். வெகுஜனங்கள் நடக்கும் வழிகளெங்குங் கரும்பாலைசிறக்கும். எப்போதும் முப்போகந்தப்பாமல் விளையும். நித்திய சுபமங்களமாயிருக்கும். அருந்ததியைப்போல் பதிவிரதையான ஸ்திரீகள் பொருந்தியிருப்பார்கள். சாரபயம் வராது. சோரபய நிராது. தெருக்கடோறும் தருமக்கொடி நாட்டியிருக்

கும். போர்முகத்தில் வெற்றிக்கொள்ளும் ஜயக்கொடி கட்டியிருக்கும். வண்டினம் மதுவுண்டு மகரதந்தோய்ந்து காந்தாரம் பாடும் அந்நகரத்தோர் அண்டினபேரை யாதரித்துக் கீர்த்திப் பிரதாபம்பெற்று ஜீவகாருண்யரா யிருப்பார்கள்; துற்சோபம், துர்ப்பயங்கரம் துர்மரணம் துர்வியாதி முதலான தேகபீடை வாரா. யோகமார்க்க நெறிதேடித் தீவினையொழித் திருப்பார்கள் பொதுச்சாலையிற் கட்டிய ஆராய்ச்சிமணி யென்றுமசையாது. அசையும்படியான அக்கிரமங்களுமிராது. எளியவரென்றும் வலியவரென்றும் பாராமல், யாவரும் நடுவுநிலைமையான நீதியொன்றுயிருக்கும். எவர்க்கு மறிவு குறையாது. சகல கலைக்கியானங்களுந்தவறுது. உடனுக்குடனே துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனம் நடந்தேறிவரும். ஆசாரபூசாவிதிகள் அதிகமாயிருக்கும். தேவாலயம் விஷ்ணுவாலயம் மிகுதியாய்ச் சிறப்புற்றிருக்கும். பாபத்திற்குங் கோபத்திற்கும் பயந்தடங்கி வாழ்வார்கள். புண்ணியத்திற்கும் பொருமைக்கும் பொக்ஷமாயிருப்பார்கள். தைரியம் கல்வி ஞானம் குணம் பெருமை மேன்மை தபம் ஜபம் தானம் நிதானம் வெகுமானம் சன்மானம் வேதமந்திர வேள்வியும் ஓமமும் பூரணகும்ப புண்ணிய போஜனமும் நவமணிமாளிகை யரசும் ஏங்குஞ் சிறந்திருக்கும். சுபமங்கள கல்யாணமுரசும் தியாகமுரசும் வெற்றிமுரசும் எங்கெங்கும் வலம்புரிச்சங்கங்களு முழங்கிக் கொண்டிருக்கும். காயாமரங் காய்க்கும். பூவாமரம் பூர்க்கும். கமலக்கருணைக் கண்ணனும் மகாலட்சுமியுடன் வாசமாயிருப்பார். இத்தன்மையாகிய உத்தம நகரமெதுவோ அதுதான் புண்ணியபுருஷர்கள் வாழும் பதியென்றுணர்ந்துகொள். இவை பெரியோர்கள் பேசியவண்ணம் நானுமுண்மையாய்ச் சொன்னேன். இனிமே லுன்னுடைய வல்லமையினுல் யோசித்து உறுதி செய்துக்கொள்ளவேண்டியது என்று பீஷ்மாச்சாரியர் விளம்பினர்.

பக்கத்திலிருந்த திருபாச்சாரியர் மகிழ்ந்து, வணங்காமுடி மன்னனைநோக்கி, வில்லும் வேலுந்தாங்கிய வேந்தனே! உன்னெண்ணப்படி முடியும்வண்ணம் சுலபமாகிய சூக்ஷியை உங்கள் பாட்டனுர் சொல்லிவிட்டபடியால், திண்ணிய தூதரை விடுத்து தேடச்செய்வதற்கிதுவே நல்ல ஆதரவென்றிசைத்து மேலுஞ் சொல்லுகின்றூர். அன்புடைமையுடைய பாண்டவர்கள் இராஜசபையிற் சொக்கட்டானுடித் தோற்றநாளையில்,

என்னையொத்தவர்களேர்படுத்திய வாக்கியம் பழுதுபோகாமல் பன்னிரண்டுவருடங் காடுறைந்து, ஒருவருடம் நாடுறைந்து காலங்கழிப்பதற்காகத் தங்கள் வடிவத்தை மறைத்திருப்பார்களென்பதற் கையமில்லை. பூருவமிந்த இராஜசபையி லுடன்பட்டுப் பேசினபேச்சின்படிச் சொற்சோர்வுபடாமல் தவணைநாளைத் தவிர்த்து விவகாரப்பழுதுவராமல் மெய்வழி நிற்கின்றார்கள். அந்தப் பதின்மூன்று வருடமுஞ் சென்றபிறகு பாண்டவர்களை நீங்களிவ்விடம் வருவீர்களாகில், உங்கள் நாட்டையொப்புவித்துவிடுகிறேனென்று உறுதியுடன் எங்களுக்கு முன்பாக நீ சொல்லியிருக்கின்றாயல்லவா? நீ அப்போது உரைத்த வாக்கியத்தை இப்போது தவறி யேதேதோ பேசுகிறாய். இன்னும் பாண்டவர்களைக் கண்டுபிடித்து பின்னும் பன்னிரண்டுவருடம் காட்டிலோட்டி விடவேண்டுமென்று மெத்தப் பிரயாசையுடன் சித்தப்பிரமையடைவது அநியாயமல்லவோ? ஐயோ! தலை போங்காலம் நேரிட்டாலும், சரீரத்தைவிட்டு உயிர்கெட்டாலும், உன்னைப்போலொத்த உத்தமன் சொல்நிலைதப்பிச் சோர்வடையலாமோ? அப்படி நிலை தவறுவையாகில், உன் அரசாக்ஷி என்ன பிரயோசனத்தைப்பெறும்? ஆனால் எனக்கொன்று தோன்றுகிறது. பாபங் களைந்து பாராளும் பார்த்திபரிடத்தில் சத்தியந் தப்பிய குணம் தோன்றுமாகில் அவர்களின் அரசாட்சி பரராஜர் பங்காய்விடும். அஷ்டலட்சுமி அகன்று கஷ்டலட்சுமி கலந்து உறவாடுவாளென்று வேதத்தில்விளம்பிய மொழியொன்றுண்டு. அதை யுன்னும் இடத்தில் உன்னுடைய செல்வம்முழுமையும் சத்தியவான்களாகிய ஐவர்களுடைய தென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இதை நீ செவ்வையாய் போசித்துப்பார். ஆதிகாலத்தில் நாங்கள்எல்லோரும் உன்னுடன்கூடிக் குலாவியிருந்து பேசியது என்னவெனில், பாண்டவர்கள் வனவாசஞ் செய்து வந்தால் அவர்கள் நாட்டைக்கொடுத்துவிடுவதென்னுந் தீர்மானம் யன்றி வேறொன்றும் இல்லை. இப்போது உனக்கு இஷ்டமாகிய தம்பிமார் முதலினோர்களும் நீயுந் தாறுமாறுப்பேசுவது சரியல்லவே. அறியாதவர்கள் எப்படிப்பேசினாலும், பெருமையும் நிலைமையுமுடைய பெரியவனுகிய நீபேசப்படாதே. உங்கள் குணத்தை நிதானிக்குமிடத்தில் நீங்கள் நினைத்தகருத்தை நேரேயறிந்தோம். நீங்களொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்னும் நெறியறியீரோ? நீங்கள்

எண்ணிறந்த நாள் தேடினாலும், உங்கள் கண்ணுக்கு பாண்டவர் அகப்படப்போகிறது இல்லை. அவர்களைக் கண்டுபிடிக்குஞ் சாமர்த்தியமும் உங்களுக்கில்லை. அப்படிக்கல்லவென்று கண்டுபிடிக்க வெத்தனிப்பீர்களாகில், வீணன பழியும் இழிவுங் குறைவும் நேரிடுமே யல்லது நிறைவேறுது. அவர்களென்னாலும் நன்னாளாகவே யனுபவிப்பார்கள். அஞ்ஞாதவாசமும் பண்ணி ஆயிற்று. நீ கங்கணங் கட்டிக்கொண்டு இதுவரையிலுந் தேடவிருந்த தூதரால் பாண்டவரிருக்கும் ஸ்தானந் தெரிந்துகொள்ளாமற்போனாய். இனிமேல் தேடவிட் டென்னபலன் காணப் போகிறாய்? விருதா வாலோசனையாற் பிரயோசனமில்லை. யாது ஒரு காரியத்திற்கும் முன்ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். பின் னெண்ணிப் பார்ப்பது பேதையர்பக்ஷம். தவணை நாட்கழியுங் காலையில் தடவிப்பார்க்கத் துணிவது மேன்மையோர் பக்ஷமல்ல ஆயினும், பாகீரதிபெற்ற கோமுனியாகிய பரிசுத்த இருதயரான வீஷ்டுமாச்சாரி சொன்ன குறிப்பின்படித் தூய்மையும் வாய்மையும் பொருந்திய தேசம் எவ்விடம் இருக்கின்றது என்று அதையாகிலுந் தெரிந்துக்கொள். பிறகு மற்ற விஷயம் யோசிக்கலாம் என்று பூர்வாச்சாரியர் பேசியபோது, அவர்இடத்தில் நேசவிசுவாசமுள்ள துரியோதன மகாராஜன் மனம்வருந்தி, மானிலம் எல்லாந் தேடித் திரிந்தலைந்து வந்த சாரணர்களை நோக்கி, நீங்கள் பார்த்த தேசத்தில் எங்கள் ஐயா அவர்களுரைத்த வார்த்தையின்படி அழகும், வளமும், அன்பும், நோன்பும், நேயமும், நிலையும், நீதியும், நெறியும், மானமும், தியானமும், வண்மையும், பண்பும், இசைந்து இருக்கும்பட்டணம் எதுவோ அதைத் தெரியச் செய்யுங்களென்று சுயோதனன் கேட்க, வேவுகாரர்கள் எல்லோருங் கூடி, அரவக்கொடிக் கதிபனுடைய அடிமேற் பணிந்து சுவாமிபராக்கு! பெரியமூதாதைபேசியபடியேமாதமும் மாரியின் போகமும் பூதலப்பயிர் பொருந்துமுப்போகமும் ஆதலர்க்களிக்கு அன்னமுதலாகிய தியாகமும் சீருஞ் சிறப்புந் திகழுநற் செல்வமும் அறம் பொருளின் பலமுமான மேம்பாடும் நிறந்தரும் பசுக்கள் நெருக்கமும் சுத்தமும் பாபச் சுருக்கமும் படையின் பெருக்கமும் வாழையுங் கமுகும் வளர்தரு தேக்குங் கரும்பும் வளம்பட விளைந்து பார்ப்பவர் மனதையுங் கவர்ந்து மென்மேற் சிறந்த நாடு மச்ச நாடல்லது மற்றநாடில்லை. வேறே மாற்றிச் சொல்வதற்கும் வகையில்லை, எங்குமாராய்ந் துணர்ந்

தோம். அந்நாட்டின் மகிழ்ச்சியை நாங்களென்ன சொல்லுவோம். இந்நாட்டுக் கிசைபெற்ற ஏந்தலே! நம்முடைய பிதாமகன் பேசிய வார்த்தை பிசகில்லை. சத்தியந்தான். வணங்காமுடியோனே! மற்றோராச்சரியத்தைக் கேளும். யாரோ வொரு பெண்ணைவள் சைரந்திரியென்றும் மாலினியென்றும் பிருகந்நளையென்றும் வண்ணமாமகளென்றும் பேர்பூண்டு விராடராஜன் மனைவியிடத்தில் வந்து சேர்ந்திருக்கின்றாளாம். அவள் பேரிற் கீசகன் ஆசைகொண்டு துரத்தினானும். எவனோ வொரு கிங்கரன் குறுக்கே நுழைந்து, அவனைப் பிடித்தெறிந்து வீசினானும். சபையிலிருந்தவர்க ளேசினர்களாம். அந்தக் கீசகனையும் அவன் தம்பிமார்களையும் மோசஞ்செய்து பொழுதுவிடியுமுன்னமே கொன்று போட்டார்களாம். இவ்விதமாகக் கொன்றவர்கள் யாரென்று விசாரிக்குமிடத்தில், மேற்கூறிய வண்ணமாமகளுக்கு மெய்க்காவலாக விண்ணுலகிற் சஞ்சரிக்குங் காந்தருவரைவரென்று மண்ணுலகெல்லாம் பேசிக்கொள்ளுகிறார்கள். நாங்களதை நன்றாய் யோசிக்குங்காலையில், அந்தக் காந்தருவர் ஐவரும் பாண்டவர்களென்றும், அவர்க்குரிய பாஞ்சாலி வண்ணமாமகளென்றும் துணிவாய்ச்சொல்வோம். இதுவேநிச்சயமென்று ஸ்திரமாய்ச் சொன்னர்கள்.

இவ்விதங் கூறிய சாரணர்களின் ஸ்திரவார்த்தையையும் வீஷ்டுமாசாரியர் மனங்குவிந்துரைத்த சத்திய மொழியையுஞ் சேர்த்துத் தன் கருத்துக்கிசையச் சீர்தூக்கிப் பார்த்து, காரணகாரியத்தை யோசித்துத் துரியோதனன் பூரணமனத்தோடு பேசத் தொடங்கினன். ஐயா! கிருபாசாரியர் வீஷ்டுமாசாரியர் முதலிய கிருபைக்கடலாகிய பெரியோர்களே! கேளுங்கள். கீசகன் வீமசேனன் சராசந்தன் பகாசுரன் மந்திராஜன் பலதேவன் இவர்கள் யாவரும் இந்திரன் முதலிய தேவர்கள் புகழத்தக்க தோள்வலிமையுள்ளவர்களாய்ப் பதினாயிரம் யானைபலம் படைத்தவரென்றும் இவர்களில் ஒருவரையொருவர் கொல்லலாமேயன்றி, மற்றொருவரால் மடியாரென்றும் பெரியோர்கள் பேசக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியிருக்க, காந்தருவர் வந்து கீசகர்களை மடித்தாரென்பதை எப்படி நம்பலாம்? அந்தச்சைரந்திரி நிமித்தமாய்க் கீசகர்கள் சங்கரிக்கப்பட்டார்கள் என்பதையுன்னி யோசிக்குமளவில், அவள் சைரந்திரியல்லள்; திரௌபதையென்றும் அவ்வைவர் காந்தருவரல்லர்; பாண்டவரென்

றும், அவர்களில் வீமசேனனே கீசகர்களை நாசஞ்செய்தவரென்றும், பெட்டிக்குட் பாம்புபோல் அடங்கி விராடபுரத்தில் இருக்கின்றார்களென்றும் கெட்டியாய்ச் சொல்வதற்கு யாதொரு அட்டியுமில்லை. அதேனெனில், வல்லிரும்பையொத்த அழுத்த முடைய புயவலிமை பெற்ற யக்ஷர்கள், அமரர்கள், நாகர்கள், அசுரர்கள், இராக்கதர்கள். காந்தருவர்கள் முதலாகிய யாவரும் அந்தக் கீசகன் வல்லமைக்கு ஆற்றமாட்டாமல் கால்கை நடுங்கியொடுங்கி யிருந்தார்கள். இவர்களில் ஓர் பிரிவாகிய காந்தருவர் வந்து கொன்றார்களென்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. தேன்துளிக்கு முடியாதகிய கீசகனை மடித்தவன் காமனுக்கொப்பாகிய வீமனென்று நினைப்பதற்குத்தடையில்லை. இது நிச்சயமே. வண்டுமொய்க்குங் கொண்டையினையுடைய வண்ணப் பெண் வடிவினுள் ஐவர்க்குரிய தேவியே. இதற்கையமென்பதில்லை. ஆகையால் பாண்டவர்கள் விராடபுரத்தில் மறைந்திருக்கின்றார்கள். அஞ்ஞாதவாசத்தவணை கழிக்கும் நாள் இன்னுமிருக்கிறபடியால், தாங்கள் வெளிப்படாமல், சிங்கபல கீசகனுயிரைத் தீர்த்துவிட்டார்கள். இதற்குமேல் நடக்கவேண்டிய யோசனையென்ன? இன்னதென் றுரையுங்கள். பொன்னனைய பெரியோர்களே யென்று ஐயங்கொண்டாளும் புயங்கக்கொடியோன் கேட்க, சூரியகுமாரனகிய கர்ணன் ஓர் மொழி யுரைக்கலுற்றான்.

மனங்காதலிக்கும் வணங்காமுடிமன்னனே! முன்னமெண்ணியதே நிசம்; இன்னுமேன் தாமசம். மேகமண்டலமளாவிய தேர்விதங்களும் மும்மதம்பொழியும் யானையினங்களும் ஆலகாலம்போன்ற காலாட்களும் தகுஷணமே புறப்பட்டு மச்சநாட்டைவளைத்துப் போர்தொடுத்துப் பசுக்கணங்களைத் தடுத்து நமதூர்புகவிடுத்துக் கண்மூடிக் கண்திறப்பதற்கு முன்னமே கலகம் விளைத்துவிடுவோம். நாம் எண்ணியவண்ணம் பாண்டவர்கள் இருப்பாராகில், விராடனுக்குப் பரிந்து நம்மேற் சண்டைக்கு வருவார்கள். சும்மாயிருக்கமாட்டார்கள். அவர்களைக் கண்டுபிடித்தால் விவகாரப்படி நடத்தலாம். அவர்கள் அவ்விடத்திலில்லாமற்போனுல் மடக்கியபசுமந்தைகளெல்லா முங்கட்கடைக்கலந்தானே. இரண்டுவிதத்திலும் நமக்கு லாபமிருக்கிறது. இதுவே பாங்கென்று அங்கதேசராஜன் சொல்ல, அங்கிருந்த வரசர் யாவரும் பொங்கிப் பூரித்து இதுவே எல்லோருக்குஞ் சம்

மதமென்றிசைந்தார்கள். பெருமையையுடைய துரியோதனமகாராஜனும் இக்கருத்துக்கிசைந்தான்.

அந்தவேளையில் திரிகர்த்த தேசாதிபனுகிய சுசர்மா வெழுந்து, கரத்தைச் சிரமேற் குவித்துப் பணிந்து கௌரவகுலாதிபனே! முன்னொருநாள் சேனாதிபதியாகிய கீசகனுக்கும் எனக்கும் போர்விளைய, மன்னவர்களுடன் வந்து வளைத்து, என்னைப்பிடித்து, இருகப்பிணைத்து தன் நகரத்திற்குக் கொண்டுபோய்விட்டான். அவன் கையைவிட்டுத் தப்பித்துவரப்பட்டபாடு தெய்வமறிந்தது. அத்தச் சத்துருவை வெல்வதற் கென்னுற்கூடாமையால் அந்தநாள்முதல் இந்நாள்வரையிலும் நன்னாள் நமக்கெப்போது வருமென்று நான் காத்திருக்கிறேன். அன்னாள்செய்த முழுவினவசத்தால் அவன் தன்னுற்கெட்டான். காமாந்தகனுகிய கீசகன் வாசஞ்செய்த மச்சதேசத்திற்கு என்னைப் போகச்செய்வீராகில், விராடன்முதலிய வேந்தரையும் பிடித்துக்கட்டி, என்மனதில் வெந்துகொண்டிருக்குங் குரோதத்தையுங் காட்டித் திட்டி, அந்தவிராடன்மைத்துனனுகிய கீசகன் என்னைப்படுத்திய அவமானத்தை இவன்பாற்படுத்தி, அங்கொளித்திருக்கும் பாண்டவரைப் பக்குவமாயறிந்து, மச்சராஜன் வளப்பங்களைக் கைவசப்படுத்திக் கீசகன் பலத்தால் நமக்குக் கப்பணங் கட்டாதிருந்த கருவத்தை யடக்கிப் பசுமந்தைகளையு மடக்கி அஸ்தினபுரம் வந்து சேருகிறேன், கர்த்தனே என்று திரிகர்த்தன் சொல்ல, ராஜாதிராஜன் மிகவும்நகைத்து மகிழ்ந்து படையிலுமொருவன் கொடையிலு மொருவனெனப் புகழ்ந்து, அண்ணு கர்ணு! சுசர்மா சொல்லிய வாக்கியம் உனக்கெப்படி யிருக்கிறதென்று கேட்டான். அடடா! இப்போதே அப்படிச் செய்வது உத்தமம் என்றான். அப்பொழுதே சேனைசனியங்களைச் சேகரிக்கும்படி உத்தரவு செய்து சுசர்மாவுக்கு வரிசைகளுந் தாம்பூல மரியாதையும் நடத்தி அண்டகடாக மதிரும் வாத்தியங்களுடன் சண்டைக்கனுப்பினான். அவ்வாறு விடைகொண்டு திரும்பிய திரிகர்த்தனனவன், விந்தகிரிக்கொப்பாகிய தேரேறிப் பூலோகவேந்தன் போல் புறப்பட்டுச் சிறப்புப்பொருந்திய விராடபுரத்தின்மீது போர்புரியப் போனான்.

இப்பால் நந்தியாவட்டமாலையணிந்த நராதிபன் சபையிலுயர்ந்த சாதுக்களை நோக்கி, ஐயா! பூர்ணஞானசில புண்ணிய மூதாதையாவோர் புகன்ற குறிப்பிற்கிணங்க நமதுதுதருரைத்த

சொற்களினுலும் என்னுடைய நிச்சயத்தினுலும் அந்த விராட புரத்தில் பாண்டவர்க ளிருக்கிறார்களென்பது பரிஷ்காரமாய்த் தெரிகிறது. அதற்குக்காரணமென்னவெனில், கேகயராஜ குமார னுகிய கீசகனிறந்த காட்சியே சாட்சியாய்விட்டது. அவ்விடத் திற்குத் தண்டெடுத்துப்போன திரிகர்த்தனுனவன், மச்சநாட்டிற் புகுந்து மாட்டை மடக்குங்காலத்தில், எதிரிகள் சும்மாவிருக்க மாட்டார்கள். அவர்கள் மேல்விழுந்து போர்கொடுத்து மாட் டைத் திருப்பிக்கொள்ளுவார்கள். ஆயுதங்களால் அடிபட்டு, மூனைகெட்டுப், படைமுறிபட்டு, பிடித்த பசுக்களைவிட்டு முதுகிட் டோடிவருந் திரிகர்த்தனுடையவருத்தத்தைக் கேட்டுப் பின்பு நாம் படைத்துணை போவது நன்மையோ? அல்லது இப்போ முதே செல்வது நலமோ? கூறுங்களென, புத்தியிற்சிறந்த கர்ன ராஜன் மனம் பூரித்துக் கொற்றவனே! வித்தக விராடராஜன் மைத்துனனுகிய கீசகனை யனுப்பி அடிக்கடி யுத்தம் பண்ணச் சொல்லி நம்மைத் திடுக்கிடச் செய்துக்கொண்டு இருந்தானே. அந்த வஞ்சந்தீர நாமவனைத் தண்டிக்கவேண்டுமாதலால், உமது பெரியவர்களின் அனுமதிபெற்று பெருஞ்சேனைப் படை கூட்டிப் புறப்பட்டுப் போர்மாட்டென்று கவசகுண்டலங் கழல, அவன் மொழியைச் சிவன்மொழியா யுட்கொண்டு, பின்னும் பெரியோர்களைப் பார்த்து நான் நினைத்த நினைப்புக் கென்ன சொல்லுகின்றீர்கள்? உங்கள் கருத்தையு மொளியாமல் வெளி யிடுங்களென்று திங்கள் குலத்துதித்த துரியோதன்ன் வினவி னன். அப்போது அங்கிருந்த விரதப்பொருளாகிய கிருபாச்சா ரியரும் மெய்த்தவ வித்தக வீஷ்மாச்சாரியரும் வேதவித்தாகிய துரோணச்சாரியரும் முக்கியமாய்ப் படையெடுத்துப் போக வேண்டியதென்று சம்மதித்துப் பொழுதுபோனபிற்பாடு போ வோமென்று உரைத்தார்கள். அந்த மொழியைச் சர்ப்பக்கொடி யோன்கேட்டுச் சந்தோஷித்துத் துச்சாதனனையழைத்துனக்கு நற்றுணையாகிய தம்பி! ரதகஜதுரகபதாதிகள் முதலிய சேனைக ளைப் பிரயாணபேரிகை அறைந்து புறப்படச்செய் என்றான். அப்படியே செய்வேனென்று பிரயாணபேரி முழக்கிவைத்துப் புள்ளிப்படந்திருந்திய நாகக்கொடி பொருந்திய சுயோதனன் தம்பிமார் தொண்ணூற் றொன்பதுபேரும் சல்லியராஜன் சௌ பலராஜன் சகுனிராஜன் கர்னராஜன் முதலிய ராஜர்களையும்கூட் டித் தங்களெண்ண மிவ்வாறெனத் தெரியக்காட்டி யுத்தகோலங்

கொண்டிருந்தார்கள். கொத்துச் சித்திரவேலைப்பதித்த ரதத்தைச்செலுத்தி மச்சநாட்டின்மேல் சென்ற திரிகர்த்ததேசாதிபனுடைய செய்தியைச் சொல்லுகிறேன் கேளும் ஜனமேஜய மகாராஜனே! என்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

பெருமையில் உயர்ந்த பெரியோர் பேச்சைப் பொருளாகக் கொள்ளாத துரியோதனன் ஆக்ஞாபித்தவண்ணம், படைசேர்த்தெழுந்த வெட்சிமாலைப்பெற்ற திரிகர்த்தனனவன், முரசவாத்தியம் பேரிடங்கா காகளம் சங்கம் தாரை பூரி வீரசின்னம் தப்பட்டை முதலிய வாத்தியங்களைத் திக்கெட்டுஞ் செவிடுபடமுழக்கிக் கத்தி கட்டாரி கேடயம் ஈட்டி எறிவேல் சூலம் பிண்டிபாலம் வாள் முசலம் தோமரம் குந்தம் சக்கராயுதம் மற்றும் உள்ள ஆயுதங்களெல்லாம் பள பள வென்று விளக்கொளிபோல் மின்னப் பிடித்துக் கவச குண்டல கிரீட மதாணி கடக கங்கண தோளணிப் பதக்கந் துலங்கியிருக்கும் வீரர்களையும் திடகாத்திர தேகதீரர்களையும் திசாதிசைகளிற் பாயவிட்டு, ஓர் அக்ரோணிப் படைகளுடன் மச்சதேசத்திற்குத் தக்ஷிணபாரிசத்தில் வந்து இறங்கிக் கட்டுக்காவலில்லாமல் எதேச்சையாகத்தின்று கொழுத்துக் கன்றுடன் தழைத்துத் திரிகின்ற பசுமந்தைகளனைத்தையும் மடக்கினன். அப்போதந்த மாடுகளெல்லாம் காதுகளை நெறித்துக் கண்களையுருட்டி விழித்துக் கடைப்பார்வைபார்த்துத் தலையேறிட்டுத் தங்களை மடக்கினவர்கள் அன்னியரென்றறிந்து, தங்கள் தங்கள் கன்றுகளுடன் பெயர்ந்து, கும்பலினின்று முறிந்து கும்மாளமிட்டு நாலுபக்கமும் பிரிந்து அம்மாவென்றலறி வீரிட்டதிர்ந்து, அதிர்ந்து பயந்து, செம்மான் பாய்வதுபோல் பாய்ந்து, சும்மா வொருமூலையிற் கொம்பசைத்துக் கூட்டமாய்ச் சாய்ந்து, வெருண்டு, பதறிக்கதறிக் கால்தவறிக் கலங்கித் திகைத்து மயங்கித் தியங்கி அகன்றோடும் பசுமந்தையைச் சுசர்மனுடைய சேனைசனியங்கள் துரத்தி துரத்தி மறித்துப் பிரித்து இருப்புக்கண்ணியால் தடுத்தார்கள், அந்தப் பசுமந்தைகளைக் காத்திருந்த காவலர்களும் அவைகளை மேய்த்திருந்த கோவலர்களும் ஆக்கிரமித்து அதிர்த்தெழுந்து மூவுலகதிரும்படிக்குத்தாவி மேவலர் சேனைமேல் விழுந்து அஸ்திர சஸ்திர ஆயுதங்களாலும் குடிதடி குண்டாந்தடி சுக்குமாந்தடி வளைதடி கிலுக்குத்தடி முறுக்குத்தடி பாணத்தடி ஈட்டி எறிஈட்டி திருகீட்டி சொருகீட்டி உருகீட்டி குத்தீட்டி பாலா பல்லயம் பற்ஜி பட்டா பாங்கு

சாங்கு கத்தி கட்டாரி பிச்சுவா கவண்கல் உண்டைவில் சுண்டு வில் அம்புவில் இத்தன்மையாகிய ஆயுதங்கள் பலவுங்கொண் டெதிர்த்து, கோபமுதிர்ந்து பாய்ந்து சினத்தால்காய்ந்து, அவர் கள் மாய்ந்துபோம்படியாய்ச் சிலரை வெட்டியும் பலரைக் குத்தி யும் அடித்தும் மடித்தும் சிலபேரை யுதைத்தும் சிலரைவதைத் தும் பலரை மறித்தும் பலரை முறித்தும் துண்டித்தும் கண் டித்தும் சுற்றியபேர்களைக் குத்தியும் பற்றியபேர்களை யெற்றியும் தங்கள் மாட்டைத் திருப்பினர்கள். திரிகர்த்தனைச்சேர்ந்த சேனை கள் சித்தம் பிரமித்து, ஒருமுகமாகச் சாய்ந்து, கணக்கு மிதமற்ற கடுங்கணைகளைத் தூண்டி, மும்மதயானைகளை மூடிக்கிக் கோட்டை மதில்போல் குறுக்கி வகுத்துச் சிகரம்பெற்ற தேரைச்செலுத்தித் திசையிலோடிய நிரைகளைவளைத்துக் குப்புற்று பாயுங்குதிரையை விடுத்து கூட்டமான சேனை நிலைகெட்டழிய சொந்த சேனைக ளாலந்தச் சேனைகளை முறிந்துபோகச்செய்து, மறுபடியும் மந் தையைத் திருப்பிக்கொண்டு, கட்டுக்காவலமைத்து, ஐயம் ஐய மென்னச் சிங்கநாத முழக்கி அந்தப் பசுக்கூட்டங்களுக்காக மேலிட்டுவந்த கோபாலர்களையும் பூபாலர்களையும் வில்லெடுத்து வளைத்துச் சரமாரி தொடுத்துத் திசைமாற விடுத்து, விசனப் படும்படியாய் மாட்டி வாட்டியபோது இடையர்களெல்லாம் இடைந்திடைந்து, கையிழந்தவ நம் காலழிந்தவரும் மெய்புளை ந்தவரும் மேலுளைந்தவரும் முடிபோனவரும் அடிபோனவரும் மூனைகெட்டபேரும் நிலைவிட்டபேரும் கண்ணீராறு கரையின் றிப்பெருகி, வாரிநீர் வழிவதுபோல் வழிய வந்து, விராடபுரத் திற் புகுந்து முடிவேந்தனுடைய கொலுமுகத்திற்கு முன் சென்று நின்று, சங்காழி முகுந்தனைப்பொல் சிங்காசனத்திருந் தருளும் எங்கோனே! என்று வணங்கிச் சுசர்மாவுடன் திரிகர்த் தர்களும் குருசேனசகிதராய் நேர்ந்து தென்திசையில் நிறைந்த பசுமந்தையை மடக்கினர்கள். அவர்களுடன் நாங்களும் பகை த்து, எங்களாற் கூடியமட்டும் போரிட்டுப் பார்த்தோம்; அவர் களை வெல்ல வல்லபமில்லாமல் அடிபட்டு, வெம்பி வெதும்பி யோடிவந்துவிட்டோம்; அறுபதாயிரம் பசுக்கள் அவர் வசப் பட்டன. இன்னும் நாற்பதினுயிரம் பசுக்களையுங் கைக்கொள்ளப் பார்க்கிறார்கள். நாதனே! தேவரீர் ஆலசியம்பண்ணுமல், அமர்க் கெழ வேண்டுமென்றார்கள். முல்லை நிலமாக்கள் மொழிந்த தைக் கேட்ட வல்லவன் நகைத்துக் கண்களிரண்டுங் கறுத்து,

வென்று கைநெரித்துப் பற்கடித்துச் சிரித்து, ஓகோ! விசுவாச மோசத்தைக் கண்டீர்களா? சொற்பனத்திலும் நினைக்கப்படாத அற்பனுகிய திரிகர்த்த னென்பவன் எங்களாற் கட்டுப்பட்டு நொந்து கால்மேல் வீழ்ந்திரந்து, என்றென்றைக்கும் அடிமை யென்று புகன்று, இழிவுபட்டுப்போனதை மறந்து, மூவர் முத லிய தேவராலும் வேறுநினைக்கப்படாத விராடபுரத்துக்குவந்து மிகுந்த சேனையுடனெதிர்த்துப் போர்கொடுத்து, வெகுபேரைக் கொன்று, மாட்டையு மடக்கியிருக்கிறனும். நல்லது ஆகட்டும் ஓ சேனுதிபதிகளே! வீரபட்டம் பெற்ற ரதகஜதுரக காலபல முள்ள ஓரக்ரோணி சேனைகளையும் யுத்தசன்னமாகப் படுத்துங்க ளென்று, மெத்த முழக்கமாய் வெளிப்படச்சொன்னன். அந்தச் சொல் செவியிற் புகுமுன்னமே கரத்தில் வில்லும் கழுத்தில் மாலையுந் தரித்த காவலர் அநேகர் எட்டுத்திசையிலும் மட்டுப் படாத வாத்தியமுழங்கத் திரண்ட தேரேறி, வெள்ளம் புரண்டு வருவதுபோல் வந்து மொய்த்தார்கள். அதன்றியும் வெல்லும் படியான அதிரதர்களெழுந்து நவமணிகளாற் சிறந்த முடியும் சூரியன் நாணத்தக்க மாணிக்கப் பதக்கமும் ஆணிப்பொன் மதா ணியும் நிரைவென்றேர் அணியும் தும்பைமாலையும் கேயூர மணி குண்டலகண்டியும் பிரதாப வில்லும் சபதச் சொல்லும் பொங்க மாகக்கொண்டு சிங்கம்போற்சென்று, பொன்னுலகைவிட்டிழிந்த தேவேந்திர னென்னும்படியாய்த் திக்கஜங்களுக் கொப்பாகிய யானையின்மேலேறிப் பெரும்புலியெனச் சீறிப் புறப்பட்டார்கள். எண்ணிய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற திண்ணிய திடகாத் திர தீரர்கள் யாவரும் ஒன்றுகக்கூடி விராடராஜன் வெளிப்படு முன்னமே நாம்போய்த் திரிகர்த்தனுடன் அவன் சேனைகளையுங் கொன்று பசுக்கணங்களைக் கொண்டு, விராடனுக்கெதிர்சென்று, நாங்கள் ஜயித்துவந்தோம். நீங்கள் போகவேண்டிய நிமித்திய மில்லை என்றுசொல்லி, உயர்ந்த விருது பெறுவோம் என்பதாக ஆணிவில்லை வளைத்து, நாணிபூட்டி, அம்பறாத் தூணிமாட்டி, வாளுங்கேடயமும் வல்லயமும் பல்லவமுங் கொண்டு பகைவர் பட்டார்கள். முதுகிட்டார்கள். அவர்கள் கெட்டார்களென்று கெருவித்தெழுந்து, கட்டுக்கடங்காமல், அட்டாளதேசமும் உலா விவரும் பட்டாளக் குதிரையேறி வந்தார்கள். சேனவீரர்கள் திரண்டு, திக்கென்றெரியச் செவ்விழிகாட்டிக் சீறிப்புகைந்து, செம்பொறி சிதறக்காய்ந்து, வீரகண்டையைபாட்டி, வெதுப்பும்

வெறுப்புங்காட்டி, ஆயுதங்களைப் பிடித்து, அரைகூஷணமுந்தரி யாமல் துடித்து, அலைபரந்த கடலேழும் அடியோடு பெயர்ந்த வந்நாளிந்நாளென்று அகிலசராசரமும் பேசிக்கொள்ளும்படி யாய்ப், பேரோசை முழக்கிப் பெருங்கும்பு சேர்ந்தார்கள். இவ் விதமாகச் சதுரங்க சேனைகள் புறப்பட்ட வீராவேசத்தை விரா டனுடைய முதற்பிள்ளை சுவேதனென்பவன் கேள்விப்பட்டு, நாமிருக்க நம்முடைய தந்தை வருந்துவானேனென்று, தனது பிராணனையையும் எதிராளியையும் துரும்பாக மதித்துப் பம்பரம் போற் சுழலும் செம்பொற்றேரேறி, வீரலட்சுமியை விவாகஞ் செய்வதற்கு விரும்பிவருந் தீரபுருஷனைப்போல் கூரம்புப்புட்டி லும் கார்முகவட்டமும் தாங்கிக் குவலய நடுங்கக் கவலையோ டடைந்தான்.

இரண்டாவது பிள்ளை சதானீகனென்பவன் சங்கதிகளறி ந்து முகச்சுளிப்புடன் வெளியேவந்து அப்படியா இந்நாள் வரையிலும் பின்னமில்லாத மச்சநாட்டிற் பிரவேசித்து கொஞ்ச மேனு மச்சமில்லாமல் மாட்டை மடக்கிய லச்சைகெட்ட திரி கர்த்தனுடைய சேனைகளென்னுஞ் செய்கால் நிலத்தை என் வில்லம்பு கொண்டுழுது, இரத்தநீர்பாய்ச்சி, உயிராகியவிரையை விதைத்து, அக்கிரமமென்னுங் கண்களைக் களைத்து, வெற்றிப் பயிர் விளைத்து, பூபாரப்பிணப்போர்கட்டி, எமனுக்கு மேல்வாரங் கொடுத்து, என் தந்தைக்கு கீர்த்தி என்னும் நிலவாரம் கொடுக் கிறேனென்று திடுக்கென்றெழுந்து, வில்லைவளைத்து நாணேசை தெரித்து, பங்கப்படாத சிங்கக்குட்டியானது தங்கக்கிரியில் தாவும் தன்மைபோல் விசாலமான தேரேறி வீதியில் வந்தான்.

மூன்றுவது பிள்ளை சங்கனென்பவன் சிங்கநாதஞ் செய் தெழுந்து எங்கள் மாமனுகிய கீசகராஜனிருக்கிற வரைக்கும் கொஞ்சம் கோப்பியமாயிருந்தது. அவனிறந்த பின்பு மெத்த சாப்பியமாய்விட்டது. இனிமேல் பலரும் வசையாயேச அம் மொழியைக்கேட்டு நானுயிரோடிருந்து இன்பமனுபவிக்கமாட் டேன். இதோ வாளாயுதமெடுத்துப் புறப்படுகிறேன். வந்தவர் நொந்தழியக் கொந்தித்தள்ளுகிறேன். அவர்களை வெல்லாம லுங் கொல்லாமலும் போவேனுகில் என்னுவியிழந்து பொன் னுலகம்போய்ச் சேருகிறேன். இதுவே சத்தியமென்று சபதங் கூறி, விசையுடனெழுந்து திசையசையுந் தேரேறி கவசமணி ந்து தன்னையொத்த தராபதி குமாரரும் மின்னுக்கினையான

ஆயுதந் தாங்கி வீராவேசங் கொண்டுவரத் தானும் பிரயாண மானான்.

நான்காது பிள்ளை வராகதேதென்பவன் நான்கு வேதமும் தனுர்வேதமும் தர்மசாஸ்திரமும் மனுவிக்கியானமுந் தேர்ந்து அறம் பொருளின்பம் வீடென்பனவற்றை யறிந்து பொறுமை கவசம் பூண்டு, மன்னுயிரனைத்தையுந் தன்னுயிராய்ப் பரிந்து பாதுகாக்கும் பருவநாயகன், குலமன்னர் கூட்டமும் பலமன்ன ரீட்டமும் காலாட்படைகளும் ரதகஜ துரங்கமும் வேற்படை விற்படையுங் கொண்டு மச்சதேசத்து தட்சணதிசையிற் சென்று லட்சியம் வையாமல் அந்நத் திரிகர்த்தனை இகூஷணமே பிகூஷா பாதகனுக்கி, வீரசொற்கத்தி லேற்றிவிட்டு வேறு வேலை பார்க் கிறேனென்று விசித்திர கவசம்பூண்டு தேரேறிப் போரேறு போல் புறப்பட்டான்.

இந்தப்பிரகாரம் நான்கு பிள்ளைகளும் நால்வகைச் சேனை களும் ஆரவாரித்தெழுந்து,சத்திரம் சாமரம் ஆலவட்டம்கொடி குடை பீலிக்குஞ்சம் மகரதோரணம் டால்வகைகளும் படைமன் னரும் வாத்யகோஷ்டமும் பின்னுமுன்னும் பெரும்புறக் கடல் போல்வர சிங்கநாதம்சங்கநாதம் எங்கும்நாதமாய்முழங்கத் தேர் யானைநிரையுடன் சேர்ந்த சேனையை விராடராஜன் கண்குளிரக் கண்டு, பிள்ளைகள் நால்வரும் செல்வதைப் பார்த்து, ஐயோ!இந் நாள்வரைக்கும் என்னைவிட்டுப்பிரியாமலும் போர்முகமறியாமலு மிருந்த சிறுவர் முன்பின் யோசியாமல் போயிருக்க, நாமிவ்விட மிருப்பது நியாயமோ? என்று எண்ணித் தன்கோதரர்களாகிய சதானீகனையும் மதிராசுவனையும் அழைத்துவரச் சொல்லி, ஓ தம்பிமார்களே! தக்ஷிணநிரை மீட்சிக்குப்போன• நமது பிள்ளை களின் போர்த்திறத்தையும் குருசேனையுடன்வந்த திரிகர்த்தனது போர்த்திறத்தையும் நான் பார்க்கவேண்டியிருப்பதால், சிக்கிரத் தில் தேர் கொண்டுவரச் செய்யுங்களென்றான். தமையன்மொழி தவறாத தம்பியிருவரும் இரதத்தை யலங்கரித்து, திடவேக முள்ள குதிரைகள் பூட்டி மதிமோகனென்னுஞ் சாரதியுடன் கொண்டுவந்து நிறுத்தினர்கள். பொன்தகடு வேய்ந்து நவரத் தினமிழைத்த அஸ்திர சஸ்திர திரஸ்காரவயக் கவசந் தரித்து, அம்புப்புட்டிலும் வரிநெருங்கிய வில்லும், வாளும், வேலுந் தாங்கிய மகுடமும் மகரகுண்டலமும் வாகுவலயமும், கச்சையும், வீரகண்டையும், விரற்சாடும், கரச்சாடும், துன்னுதற்பட்டமுந்

தரித்துத் தம்பிமார்களும் இராஜகுமாரர்களும் மகாப் பிரபல்ய சேனைகளும் விருது மேளவாத்தியங்களும் வெண்சாமரையும் வெள்ளைக்குடையும் மயிர்ப்பீலியும் புடைதாங்கிவரப் புறப்பட்டுச் சேனாதிபதிகளும் படைவீரர்களும் முன்செல்லக் கட்டியர் பட்டுவான்களும் படைவீரர்களும் புகழ்பாடப் பரதநாட்டிய மாடத் திருநீறணிந்த திருநேத்திரதாரியாகிய ருத்திரமூர்த்தி யிவனெனச் சாதிக்கும்படியாய் வடுவில்லா மரபோனகிய விராட பூபதி வந்தான். அம்மன்னனைத் தொடர்ந்து வழிவிடப்போன தருமராஜனை வீமசேனன் நகுலன் சகாதேவர் மூவரும் பார்த்து, இந்த விராடராஜனனவன் மாடுபிடிசண்டைக்கு நம்மைச் சகாயமாயழைக்காமல் போகிறானே. இதென்ன காரணமென்று கண்ஜாடையிற் பேசிக்கொண்டார்கள். அவர்கள் கருத்தையறிந்த கங்கபட்டரானவர் மச்சராஜனை நோக்கி, நமது மடைப்பள்ளியிலிருக்கிற பலாயனன் மல்லர்களை வென்றபோதே மகாபலசாலியென்று நீரறிந்தீரல்லவா. அவன் மிஞ்சிய மற்போரிலும் கொஞ்சம் விற்போரிலும் பழகினவனுகத் தோன்றுகிறது. இதோநிற்கின்ற தந்திரபாலனும் தாமக்கிரந்தியும் போர்புரிவார்கள்போலும் இருக்கிறது. இவர்கள் தருமராஜனிடத்திலிருக்கும்போது, கௌரவர்களுடன் கூடி ஆயுதப்பரிக்ஷையில் பயின்றிருக்கின்றார்கள். சில சமயத்தில் சண்டையிலும் ஜயங்கொண்ட தாஷ்டீகர்கள். இவர்களை ரக்ஷிக்கும் நீர் சண்டைக்குப் போம்போது, இவர்கள் உம்மைவிட்டுத் தனித்திருப்பது தருமமல்லவே. இம்மூவரையும் அம்மூவராகப் பாவித்துக் கூட்டிப் போவது நலமாகும். நான்மாத்திரம் இவ்விடமிருப்பது நியாயமல்லவே. நீங்களியாவரும் முன்செல்லுங்கள் நான் நடந்து பின்வருகிறேனென்று சொல்ல, அவரிசைத்த மொழியை யன்புடன் கேட்ட விராடன் சிந்தைகளித்து, இது என் தவப்பயனென்றுரைத்துத் தம்பியாகிய சதானீகனை யழைத்து, இந்தமகாஸ்வாமியாகிய கங்கபட்டருக்கும் மற்ற ஆசாமிகளுக்கும் சிங்கமுக லலாடத்தேரும் பங்கப்படாத வில்லும் அம்புரூத்தூணியும் தினுசுவாரியாய் ஆபரணங்களும் ஆயுதங்களுங்கொடுத்து அதிசிக்கிரத்தில் உன்னுடன்கூட அழைத்துவாவென்று ஆக்யாபித்துப்போனன். அரசனுத்தாரப்படிக்குச் சகல வரிசையுஞ் சதானீகனுற் பெற்றுத் தடந்தேரேறி, எவர்களுக்கு முன்னுதாயிவர்கள்சென்று விராடராஜன் தெற்குக் கோட்டைவாசல் தாண்டு

முன்னமே சேனையுடன்கலந்துபோனர்கள். அக்காலையில் பொன் மலையையொத்த எண்ணுயிரந் தேர்களும் மும்மதம் பொழியும் ஐயாயிரம் யானையும், இம்மெனப் பறக்கும் இருபதினுயிரம் குதிரையும், பொம்மென நெருங்கிய லக்ஷம் கால்பலங்களும் தம்பிமார்களும் சாதுரியமுள்ள சூரர்களும், மந்திரி தந்திரி மகுடவர்த்தனரும் சுந்தர மைந்தரும் சுதந்திர வேந்தரு மேவினர்கள். கொம்பு கொடி மூரசு வாத்யகோஷ்டங்கள் எட்டுதிக்குஞ் செவிடுபட தும்பு தூசிகள் அம்பரமட்டுமேகச் செம்பரத்தம் பூப்போல் சிவந்த கண்களையுடைய விராடன் படையைப் பின்னிறுத்திக் தன் மாட்டை மடக்கிய சத்துரு சேனைகள்மேற் சென்று போர் தொடுத்தான்.

அவ்வரசன் கோபாக்கினியால் பகைவருயிரை வாங்கிச் செறிந்து, வெற்றிவேல் தாங்கித்திரிந்து, முகங்கரிந்து புரிந்த சண்டையை தேவேந்திரன் முதலிய தேவர்களும் பார்க்கச் சொர்னமயமான விமான மூர்ந்துசென்று, ஆகாயத்தி லிடமில்லையென நெருங்கித் திரண்டு வேடிக்கைப் பார்க்கும்வேளையில், இருதிறப் படைகளுங் கைகலந்து யானையும் யானையும், குதிரையும் குதிரையும், தேரும் தேரும், காலாளும் காலாளுமாக தொந்தயுத்தம் பண்ணினர்கள். யாரையார் துவைத்தார்கள், யாரையார் வதைத்தார்கள், யாரையார் சிதைத்தார்கள், எவரையெவர் கொன்றூர்கள், எவரையெவர் வென்றூர்கள், எவரையெவர் துன்பப்படுத்தினர்கள், எவரையெவர் ஓட்டினர்கள், எவரையெவர் மாட்டினர்கள், எவரையெவர் வாட்டினர்கள் இன்னவிதமென்று நானெப்படிச் சொல்லுவேன்? ஆனலும் வரிசையாகப் புகுந்து மாச்சரியத்துடன் உடலை வகிர்ந்து இரத்தவெள்ளம் புரண்டோடச் செய்தபடியால், போரின் பெருமையைப் புகழ்ந்துபேச வல்லவரில்லாமற் போனர்கள்.

இத்தன்மையான காலத்தில், நூறுநூறுயிரம் ரதங்கள் நீறுநீறுயழியக் குதிரைகளிறந்துகுவிய, மாறுமாறுகிய மன்னருடல்களும் வேறுவேறுகிய வீரர் குடல்களும் தாறுமாறுகச் சிதைய மலைநிகர் புஜபல மண்டலேஸ்வரர்கள் தலைபோயுருண்டு சங்கடமடைய, இதனைக்கண்ட யாவரும் அஞ்சி இன்சொல்லுரைக்கத் திறங்காட்டிவந்த திரிகர்த்தன் சேனைகள் புறங்காட்டி நொந்து புலம்பியோடும்படியாக விராடன் சேனைகளை மேலிட்டுச் சாடிய பொழுது கோபமாயெழுந்த குருகுலசேனைகள் கூறுகூறுய் நிலை

கெட்டோடினர்கள். வீரிட்டடர்ந்த விராடசேனைகள் வீரரோ டேதிர்த்துப் போர்விளைத்ததால், அப்போரி லாற்றமாட்டாம லஞ்சிப் பயந்தோடுகின்ற அலங்கோலத்தைத் திரிகர்த்தன் தம்பி யாகிய திடனென்பவன் கண்டு, முகம்வேர்த்து, அண்டகடாகம் பிளக்கும்படி ஆர்த்து, வில்லெடுத்து நாணிதொடுத்து, இருட் பாணங்களை விடுத்துச், சூரியனுமஞ்சி யொதுங்கத் தேரைச் செலுத்திப்போராடினர். வாரி நீரைவாரிய மாரிபோற்பொழியும் வாளியின் வல்லமையால், விராடனது நால்வகைப்படையும் ரதி கர்களும்பின்னிடைந்து ரதமும் உடைந்து யானை குதிரைகளும் அழிந்து மானுபரணமகிபரும் ஒழிந்துபோனர்கள். தனுர்வேத சாஸ்திரங்கற்ற விராடன்பிள்ளைகள் நால்வரும் சதானீகன் முத லாகிய தம்பியரும் வெற்றிப்பயிர்விளைக்கும் வீரவேந்தரும் வித ரணசாலிகளாகிய மாந்தரும் இசைகெட்டழிந்து திசைவிட்டோ டும்படிக்குத் திரிகர்த்தன் தம்பியான திடனென்பவன் மலைந்து ஜயம்பெறுகின்ற நன்மையைத் திரும்பிப்பாராமலோடிய துரி யோதனன் சேனைகள் கண்டு வருந்தியதோஷம் போக்கிப் புகழ் ந்து, புளகாங்கிதத்துடன் வாடியபயிர் மழைகண்டவாறு மிக மகிழ்ந்து, கடல்முழக்கம்போலிரைந்து, திரும்பி விரைந்தோடிப் புகுந்து திரிகர்த்தன் தம்பியைக் கலந்து நான்குபுறமும் பறந்து, அணியணியாய்ப்பிரிந்து, வில்லினவளைத்துப் பாணஞ் சொரிந் தார்கள். அவற்றின்வேகத்திற்குவெருண்டு அரண்டுபுரண்டு மரு ண்டு, மேனிபுண்ணுகி விலகிக் கண்களிரண்டும் கலங்கிக் கருதா தெல்லாங் கருதிக் கசிந்துருகி, வியாகூலமடைந்து, அச்சமே லிட்டு,அமர்முனைவிட்டோடாநின்ற அரசர்களையும்சேனைகளையும் விராடனுடைய முதற்குமாரனுகிய சுவேதனன் கண்டு கோபத் தாற் கொதித்து, மனம் பதைபதைத்து ஓடவேண்டாமென்று கையமர்த்தித் திரிகர்த்தனையுங் குருசேனைகளையுஞ் சிதைத்துவிடு றேனென்று தேரைச்செலுத்திச் சென்று, வைரவில்லை வளை த்து நாணிதொடுத்துச் குணத்தொனிசெய்து, அஸ்திர சஸ்தி ரங்களை எய்து,மாறுபடாதயானைப்பெருக்கத்தையும் கூறுபடாத குதிரைக் கூட்டங்களையும் வேறுபடாத மிகுதீரவீரர்களையும் நீறு நீருகத்தெரித்ததுமல்லாமல்,மேலிட்டுவரும் வேந்தரையுமாட்டி மற்றோர்திசையில் வளைந்து போர்மூட்டிச் சுற்றிய பெருஞ்சேனை களின் தலைகள் சுழலப் பேய்போலாட்டி பின்னிடவோட் டினன்.

இவனுக்கிளையவனுகிய சதானீகனென்பவன் மன்னவர் மதிக்க வரிச்சிலை வளைத்து, பொன்னிருள் பூண்ட தேர்மேல் வந்த மன்னர்முடிகளைத் தென்னங்குலைபோற் சிதறவுதிர்த்துமுன்னும் பின்னும் முடுக்கி யதிர்த்துச் சின்னப்பட்டுப் பயந்தொதுங்கும் படியாக துன்பப்படுத்தி, உருத்துச் சினந்து, உறுக்கிச் சிரித்து, உரத்துடன் முனைந்து ஒருதிசை புகுந்தான்.

அவனுக்குத் தம்பியான சங்கனென்பவன் முன்னவன் காட்டிய முடுக்கைப்பார்த்து வன்னத்தேரோட்டி வரிச்சிலைநாட்டி, நவமணிபதித்த கிரீடம்பொறுத்த வெற்றிவீரக் கொற்றவரேறிய ஆயிரந்தேர்களையடித்துக் குறைத்து, அச்சு மச்சு முறிய நிறைத்து, அனேகரை மடித்துப் பிணமலைகுவித்துத் தானைருதிக்கிற் சென்று, ஐயசிங்கம்போல் தாக்கிச் சத்துருக்களை நமனிடத்திற்குப் போக்கினான்.

இவனுக்கிளையவனுகிய வராககேதென்பவன் வாசமாலைகள் மணக்கவணிந்து, பூசலுக்குரிய புகழுடனெதிர்த்து,பலம்பெற்ற சிலையை வளைத்துப், பாணங்களால் உருவத்துளைத்துப் பதறிக்கதறிச் சிதறி முடியும்படி செய்து வேங்கைப்புலிக்கெதிர்ப்பட்ட மான்போலோடிய பகைவர் யாவரும் கெட்டொழியும்படி நிர்த்துளியாக்கிவிட்டுப் பூணணிப்புயஞ் செழிக்கப் பொருந்தினான்.

இந்தப் பிரகாரம், பாற்கடலை மந்தரகிரியானது கலக்கிக் கடைந்தவாறுபோல், விராடராஜனது நான்கு பிள்ளைகளும் நால்வகைச் சேனையும் எட்டுத்திக்கும் புகுந்து, போராடியவேளையில், தந்தையான விராடராஜன் அப்புத்திரரின் சாமர்த்தியத்தைக் கண்டு உற்சாகங்கொண்டு, (ஆலமரத்தின்விழுது அம்மரத்தைத் தாங்குமாறு) தனக்குதவியாய்வந்துவளைந்த தன்மக்களைப் புகழ்ந்து, மகிழ்ந்து, தளர்ச்சியில்லாமற் கனித்து ஐயமாலையு முடியுந்தரித்த விராடன் தானும் வெகுண்டு, எக்களித்து, விசித்திர வின்னுணேற்றி, முச்சட்டைமுழங்கக்காட்டி அச்சுடனமைந்த தேரோட்டிச் சங்குகளின்ற முத்தினங்கள் சந்திரனைப்போல் பிரகாசிக்கும் வயல்சூழ்ந்த நாட்டுக்கதிபனுகிய திரிகர்த்தன் தம்பியைவளைத்து,பத்துக்கணைகளைப் பாயத்தொடுத்து,அவன்விடுத்த பாணங்களையழித்துக் கெடுத்துக் கொடி குடை தேர் குதிரை சாரதி வில்லையுமழித்து, அவனுடன் கூடவந்த வீரர்களையுங் குறைத்து நேருக்குநேர் தாராளமாய் நெருங்கி, அவன்மேல் மாறுவேக வடிக்கணை முடுக்கிச் சேனை வேறுதேசத்தரசர் கூட்

டம் வேருகச் சிதறும்படி தாறுமாறுக முறித்துத் தளிப்படப் பிரித்துப் போர்விளைத்தான். அதனல் திரிகர்த்தன் தம்பி சிந்தை வருந்தி, தோளுந் துளைப்பட்டு, வாளுந் தறிபட்டுச் சேனையுங் கெட்டுச் செருமுகம்விட்டு, ஓடுகின்றபதாதியருக்கோரடி மூந்திப் புறங்கொடுத்தோடும் புன்மையைத் திறம்படைத்தவிராடர்கோன் கண்டு, ஊழிகாலத் தொருவனுகிய உருத்திரமூர்த்திபோ லுருத் தெழுந்து, வாடிப்போகிற குருசேனைகளைமறிந்துத்தறித்து, மடியச்சிதைத்து,ஒருவருந் தனக்கெதிர்ப்படாமல்வதைத்துப் பிணக் குப்பைமீது சக்கரம்புதையத் தேர்விடுத்துச் சென்முன்.

இவ்விதமாக விராடபூபதியால் நிலையழித்துவிட்ட குரு சேனையும் திரிகர்த்தன் தம்பியும் பலங்குறைந்து,படைமுறிந்து, நொந்துபோனர்கள். அந்தயுத்தத்தில் இரத்தம் பெருகி ஆறு போலோடப் பிணங்கள் மலைகள்போற் குவிந்து கூருடக்காக் கையுங் கழுகுங் கலந்துவிளையாட, நாயும் நரியுஞ் சிறிப் போராடப் பேயும் பூதமும் புகழ்ந்து கொண்டாட, எமபடாளுயிரை யிழுத்துக்கொண்டோடக் கூளியும்பருந்தும் விருந்துண்டாடப் பைசாசகணங்கள் பாடி நின்றூட, அறுபட்ட தலைகளைப் பூமி தேவி யம்மானூராடப்புயமுந்தலையும் பொருந்திப்புரளப் பொடிப் பொடியாக்கி ஒருகோடி .சுடுசரம்விட்டு அருகோடிய தேரையுந் தூண்டி ஐயங்கொண்டு வருகின்ற விராடராஜனது திடத்தை திரிகர்த்தன் கண்டு வெகுண்டு கொதித்து வெருண்டு வில்வளைத்துப் புரண்டுபோன சேனவெள்ளத்தைப் போகவொட்டாமல் திருப்பிச் சந்திரனைக்கண்ட சமுத்திரம்போற் பொங்கி, அட்டதிக்கஜங்களும்அயர்ந்துநடுங்கிமதம்பொழியும்படியாய்நாணெலி செய்து, வெற்றிப்பாடல்கள் பாடுகின்ற நால்வகைப் படைகளுடன் சேர்ந்து, மகமேருவைப்போன்ற இரத்தினத்தேர்மேலிருந்து, கடுவிடநாகக்கணை மழைபொழிந்து, விராடன் சேனைகள்யாவும் விருதிழந்து புறங்காட்டச்செய்து, திக்கெட்டுந் திடுக்கிட்டுத் திக்குமுக்கிட்டு விக்கிட்டோடச்செய்து, மதயானைக் கூட்டத்தில் வந்துபுகுந்த மடங்கள்போல் பாய்ந்து தேர்நிரையையும் யானையினத்தையும் குதிரைப் பந்தியையும் காலால்களையும் போக்கிவிட்டுச், சுற்றிச்சுற்றித் தும்சஞ் செய்கையில், விராடராஜன் பிள்ளைகள் வந்து கொடுஞ்சமர் விளைத்தார்கள். அவர்கள் வெங்கணையாயுதம் வில்லுமிழந்து, கரி பரி தேர் காலாளுங் குறைந்து குடல்கலங்கி,உடல்நடுங்கிக்,குலைகுலைந்து,தலைநடுங்கி,

உயிரொடுங்கிப் பெருமூச்செறிந்து, உடன்பட்டோருடன் திடங் கொண்டோடவும் தேகத்தில்தாங்கிய காய்களுடன் சேனைகள் மருண்டேங்கவும், பசுக்காவலரும் படைவீரரும் பறந்து பின் வாங்கவும் படாதபாடும் படுத்தி, ;மச்சராஜனுடைய பசுமந்தை யைத் தன்னிச்சையின்படிக் கைக்கொண்டு நச்சரவக்கொடியை நாட்டி நாம் வெற்றிகொண்டோமென்று ஜயபேரியடித்துச் சிந் தைமகிழ்ந்து, சிலதூரத்திற்கப்பால் சேனைகளையுஞ் சேர்த்துத் தீரம்பேசியிருந்தான்.

இவ்விதமாக வீரகண்டையும் வீரபட்டமும் விண்மணிமுடி யுஞ் செங்கழுநீர்மாலையுங் காந்தக்கோதையும் பொருந்தித் திருந் தியிருந்த பெருந்தகையான திரிகர்த்தராஜனை மச்சநாடன்கண்டு, மதிமுகம்வேர்த்துத் தேருடனெதிர்த்துச் சிலைவளைத்திழித்து, மூறுக்கு நாணியை யிறுக்கியேறிட்டு, ஐம்மலர்வாளி ஐம்முக வாளி ஐந்து இடிக்கணை ஐந்து விஷக்கணைமுதலிய வேறுவேறு அஸ்திரங்களை விறுவிறெனவிடுத்துத் திரிகர்த்தனெறிய தேரை முறித்துச் சாரதியின் தலையைத் தறித்துக் கொடியைக் குறைத் துக் குதிரையை வதைத்து வில்லைப்பிளந்து, நாணியைத்துணித் துக் கவசத்தைப் பொடித்துக் கருத்தைக்கலக்கி, அச்சமூண்டா கும்படிக்குக் கொத்தாகிய பத்து அம்பை அவனுடைய மார்பில் விடுத்தான். அந்த விராடன்விட்ட கணைகளினால், நேர்புகுந்த சுகர்மாவானவன் தேரழிந்து சிலைமுறிந்து சிரொழிந்துபரதவித் துப் பின்பு நெஞ்சுரமுற்று இந்த விராடனை நானெளிதில் விட மாட்டேனென்று சேமத்தேரேறிச் சிலைக்கணை கொண்டுசென்று தேர்நின்று,ஆரவாரித்து இருபதுபாணம் இடிபோல்தொடுத்து அவனது தேர் அச்சுமச்சு குற்றுக்கால் கொடுங்கை கொடி குடை குதிரை சாரதி முதலியவற்றைத் தூள் தூளாக்கிப் பஞ்சுபோற் கொட்டிப் பறக்கவிரட்டி, அவனுடைய இடக்கை வில்லினைச் சடக்கெனத் தறித்துத் துவஜமழித்துக் கவசங்கிழித்து ஜாடும் பொழுது தட்டுக் கெட்டுத் தடுமாறியுலைந்து கட்டுவிட்டுக் காவ லறிந்து நிலத்தில் நின்று மலர்த்திவிழித்த கண்களுடன் வாடி வருந்தினன். அப்போது அவனுடன்வந்த சேனைகளழுது ஐயையோ! நமதரசனுக்கும் வந்ததோ பழுது. ஓ தெய்வமே யென்று தொழுது, நாவறண்டு நாணமேலிட்டு யுத்தமுனைவிட் டுச் சித்தம் பிரமித்தோடும்படியாகச் சிதறக் காட்டிப் பலம்பெற்ற வில்லாளியாகிய விராடன் கழுத்தில் வில்நாணியை மாட்டி ரதக்

காலுடன் பூட்டி ஜயசங்கபேரி முழக்கி நால்வகைச் சேனையோடு சென்று, நான்குபுறத்திலும் காவலாகவடர்ந்து, பசுமந்தைகளுந் தொடர்ந்துவரும்படியாக ஓட்டிக்கொண்டு பணிக்கொடி தரித்த பார்த்தீபனை நாடிப்போனன். அந்த அபஜெயத்தைக் கண்ட விராடன் மைந்தரும் பசுக்கூட்டங்களுக்குக் காவலாக நந்தரும் படைத்துணை வந்த வேந்தரும் பராக்கிரம வீரமாந்தரும் தங்களாற் கூடியவரையிலும் நேர்ந்து, காலகதியை யோர்ந்து மனம் நொந்து கங்கபட்டரிருக்கு மிடத்திற்கு வந்து அவர் கால்மேல் விழுந்து தந்தையை யிழந்தோம் எந்தையாகிய அரசனைப் பிரிந்தோமென்றேங்கி யழுதார்கள்.

அந்தவேளையில், நெடுந்தூரத்திலிருந்து யுத்தவித்தையைப் பார்த்திருந்த தருமராஜனை குருகுலக் கோமன், பயப்படாதீர்களென்று அவர்கள் படும் பரிதாபத்தைமாற்றித் தன் பக்கத்திலிருந்த பலாயனனாகிய தம்பியைக் கடைக்கண்ணாற் பார்த்தார். அவரது கண்ஜாடையைக்கண்ட் வீமசேனன் ஊழித்தீயைப்போலெழுந்து தன்னுடலை மறந்து யுகமுடிவில் தோன்றும் சங்காரக்கடவுளாகிய உருத்திரமூர்த்திபோல் பேரோசைகொண்ட வாயுதேவனனவன் மிக உயர்ந்த மலைகளையும் உவரியலைகளையும் உலத்துமோதிச் சிதைக்குமாறு மற்றொரு தேரைவாரித் திரிகர்த்தன் தேர்மேல்மோதி, அவன் படைவீரர்களையுங் கொன்று, பசுநிரைகளையும் வென்று விராடனையும் விடுவித்துக்கொண்டு திரும்புதற்கெண்ணி திடுதிடெனச் சென்றான். எடுத்தடி வைக்குமுன்னமே எற்றக்கோல்தூரம் போய்விட்ட இளஞ்சிங்கத்தின் ஆத்திரக்குறிப்பைத் தருமராஜனறிந்து, ஓகோ! மோசம்வந்ததே என்று உணர்ந்து, தம்பியைத் தனிப்பட வழைத்து அடா குழந்தாய்! அப்பனே வீமா? ஒப்பில்லாச் சுப்பிரதீபம்போன்ற உத்தமனே! என்றணைத்துப் புகழ்ந்து உன் கருத்தை நானறிந்துகொண்டேன். என் கருத்தை நீகண்டுகொள்ளவில்லை. ஆத்திரப்படாதே. நமது அடக்கம்விடாதே. இதுவரையிலுங் கழிந்த வனவாசத்தைக் கெடுத்துப் போடாதே. இப்போது உதயமான சூரியன் அஸ்தமானமாகிற வரைக்கும் நாம் இன்னாரென்று எவர்களும் அறியப்படாதே. ஒருவேளை சத்துருக்கள் நம்மைத் தெரிந்துக்கொண்டால் நாமிதுவரையிலும் பட்டபாடு பாழாய்ப் போகுமே; இதையுன் கருத்திலிருத்திச்சென்று, பெருஞ்சண்டைவிளைத்து வீமசேனனென்றும் பெயரை வெளிப்படுத்தாமல் வில்லும்பாண

முங் கொண்டு, தேர்மேற்சென்று திரிகர்த்தனுக்குன்திறங்காட்டி நின்று அவனைத் தேருடன் வென்று நம் விராடராஜனை மீட்டு விடென்று வேண்டிய புத்தியுக்திகளை வீமனுக்குரைத்து வீராவேசமிவனுக்கு மேலிடாதிருக்கும்படி எமதர்மராஜனுகிய தன் தந்தையைப் பிரார்த்தித்துவிடுத்தார்.

அவ்வாறு அண்ணன் சொல்லுக்கு அடங்கிய வீமசேனன் கேயூர மணிகுண்டல கவசகுண்டல முதலிய பணிபூண்டு, அம் புருத்தூணி யாவுந்தரித்து, ஆகாயமளாவிய குன்றனைய தேரின் மேற் பாய்ந்து வில்லைவளைத்து நாரியேற்றி வெற்றிபெற்ற சிங்கமானது யானைமேல் தாவும் வீரப்புப்போலும், வேகின்றதீயைப் போலும், வெறித்துப்போனன். அவன் செல்லும் வேடிக்கையைப் பார்க்கும்படிக்குத் தேவேந்திரன் முதலிய தேவர்களும் ஆகாயத்தில் நிரைந்து அழகிய விமானத்தமர்ந்து வேடிக்கை பார்த்தார்கள்.

வீமனுக்குப் புத்திமதி விளம்பிவிடுத்த மூரசக்கொடியோனுகிய தருமராஜன் மனந்தாளாமலும் தம்பியை நம்பாமலும் நகுல சகாதேவர்களாகிய தாமக்கிரந்தி தந்திர பாலர்களைப்பார்த்து ஐயா, இளந்தம்பிமார்களே! உங்களண்ணனுகிய வீமனை யனுப்பி யிருக்கின்றேன். அவனே மிகுந்த ஆத்திரமுடையவன்; அவசரக்காரன் முன்கோபமுள்ளவன் அவனொருவேளை சுசர்மன்பேரில் பாய்ந்து சுடுசரந் தொடுத்துச் சமர்புரியும் வேளையில் தன்னுடைய வில்லும் பாணமுமுறிந்து, மேனிவருந்தி, வம்பு நேரிடுமாகில் தேரைவிட்டுக் கீழே குதித்து, அம்புகள் பறக்குங்கும்பலிற் புகுந்து, விற்போர்விடுத்து மற்போர்கொடுத்து மலைகளை மரங்களை வாரணத்தேர்களை வாரியடித்துமாறுகொடுப்பான்; அதனுலிவன் வீமனென்று வெளியாகிப் பாண்டவர் இவ்விடத்தில் இருக்கின்றார்களென்று பகைவர் அறிந்துகொள்வார்களே; அவர்களறிந்தால், மறுபடியும் நாம் வனவாசம் பண்ணவருமே; நாமெண்ணிய வெண்ணம் ஒன்றும் நிறைவேறுமற் போய்விடுமே. உலகம் பழிக்க இடமுண்டாகுமே என்று தம்பியர் இருவருக்கும் தழைக்கச்சொல்லி, நீங்களிரண்டுபேரும் கூடச்சென்றிருந்து வீமனை மிஞ்சவொட்டாமலடக்கித் திரிகர்த்தனைமடக்கியுத்தந்தொடங்கிப் பசுக்களையும் விராடனையும்விலக்கி வேடிக்கை பார்ப்பவர் தலைகுலுக்கி வியக்கும்படியாய் அமர்முடித்து ஜயத்துடன் வருவதே பெருமையென் றுரைத்தனுப்பினர். அவரு

டைய இதோபதேசத்தை சிரமேற்கொண்டு அவ்வாறே முடிப் போமென்று அண்ணனைத்தொழுது வெகுளிமேற்கொண்ட இள ங்காளையரிருவரும் பொன்மயமான போர்த்தேரூர்ந்து கல்லென் றிசைக்குங் கார்முகம்வணங்கி நூற்றிலொருவனென்னு மதிரத வீரர்தலைகள் குதிரையின் காலிலும் யானையினடியிலும் அகப் பட்டுருளும்படியாகச் சேனைகளை நடாத்திப் பாணப்பிரயோகம் பண்ணிக் கண்ணுக்கெட்டிய தூரம் பறந்து ஓட்டமாயோடு கின்ற வாயுபுத்திரனுகிய வீமசேனன்மேல் நாட்டமாய் நாடிச் சென்றவர்களாகித் திரிகர்த்தன் சேனவெள்ளத்தை நீத்திப் போய் தேருடன் தேர்கலக்கப் போராடினர்கள். தேவர்கள் புகழாநின்ற குருகுலஜயபதியான தருமர் தம்பிமார் மூவரும் போயிருக்கிறார்களே தாழ்ச்சியென்னமோ? சண்டையாதோ? என்று மனந் தரியாதவராய்த் தானெடுத்த வேடத்திற்குத்தக்க மரியாதையும் மகிமையும் தப்பாமல் சம்மாரகாலத்தில் புரண் டெழுகின்ற சலநிதிபோல் குணக்கடலு மருட்கடலுங் குவலயத் தேரேறி அகூடதை யிறைத்துக் கட்டுகளெட்டும் குச்சுப்பட் டுடைய வில்லைத் தொட்டெடுத்து வாயுவேக மனவேகத்துடன் வந்து தம்மைத் தம்பிமார் பார்க்குப்படி சமர்முனையிற் கலந்தார்.

இவருக்கு முன்சென்ற தம்பியரிருவரும் நெருங்கி ஏப்புறத் துச் சேனைகளையும் அப்புறத் தகலவிடாமல் துப்புறவொழித்து மன்னர் தம்முயிரை வானுலகேற்றிச் சின்னபின்னஞ் செய்து வருவதை வீமன்கண்டு மேலாகிய சந்தோஷங்கொண்டு பலம் பொருந்திய வில்லில் சரங்களைப் பூட்டி தலம்புரண்டோடத் தாக்கினன்.

அவ்வேளையில் திரிகர்த்தனுனவன், இவர் ஆரடா அப்பா என்று சென்ற தேரைத் திருப்பி எதிர்நின்று வீரலட்சுமி விளை யாடுகின்ற வில்லவளத்துப் பாணங்கள் பற்பல திசையிலும் பறந்திடச் சொரிந்தான். அக்காலையில் அழிவில்லாப்பலம்படை த்த ஆண்சிங்கம்போன்ற வீமசேனன் தன்தேரைத் திரிகர்த்தன் தேருக்கெதிர் முடுக்கி, அயிந்திராஸ்திரங்களை விட்டு மடக்கி, அவன்தொடுத்தகணைகள் யாவையுந்தெறித்து வில்லையுமுறித்து நாணியையறுத்துச் சாரதிகுதிரைத்தலைகளையும்பறித்து தேரையு முடைத்து நியங்கச் செய்தான். அப்போது திரிகர்த்தனுனவன் திடதைரிய தீரம் விடாமல் வேறு தேரேறி மின்னெனவிளங்கும் வடிவேலை வீமன்பேரில் வீசினன். அந்த வேலாயுதமானது பூர்

ணச்சந்திரனைப் பிடிக்கத்தாவிய செம்பாம்புபோல் புரண்டு திசா திசையிலுந் தீப்பொறியிறைத்து வருவதை வாயுமைந்தன்கண்டு, பற்களை நெறநெறவென்று கடித்து நின்று அதனைப் பிரமாஸ்திரத்தால் ஓடித்தான். வேற்படை மூறிந்ததைச் சுசர்மன் கண்டு வெகுண்டு வச்சிரக்கட்டு முட்கட்டுகளுடைய கதையைச் சுழற்றி கரகரவென்றெறிந்தான். விறுவிறெனச் சுழன்றுவரும் வெங் கதையை வீமன்நோக்கி நெருப்புத்தலைபெற்ற இருப்புக் கணைகளைப் பத்தெடுத்து நேர்வருங் கதையை நிமிஷத்தில்பொடித்து அசைவற்றிருந்தான். புலவர்கள்புகழும்படிக்குப் பொடிப்பொடியாயுதிர்ந்தழிந்த தன் கதாயுதத்தை திரிகர்த்தன் நோக்கி, வந்த வேலை யெந்தவேலையோ என்று மனம் நொந்து வாடி, வாளை யுருவி விண்டலத்துய்ந்து மண்டலத்திற் பாய்ந்து வீசிய வீரத்தை பீமன் பார்த்து நகைத்து நாகம்போற் சினந்து மேகக் கணைபோக்கித் தேகஞ் சோகங்கொள்ளும்படி துளைத்துத்தாக்கி, அவனைச்சார்ந்த யானை சேனை பரிவாரங்களையுங் கலக்கி அப்பாலோட்டிவிட்டுச் சுசர்மாவையும் அவன் கைப்பிடித்த வாளையும் அலங்கோலமாக்கி எங்குமில்லாமல் இலவம்பஞ்சுபோல் பறக்க அடித்து அவன் தலைமயிரைப் பற்றியிழுத்தான். அக்காலையில் திரிகர்த்தராஜன் பொறிபுலன் மயங்கித் திக்குமுக்கிட்டுத் தலையிரக்கத்துடன் தளர்வுற்றிருந்தான். பாண்டவர் வனவாசம் பண்ணும்போது அவர்களை பங்கப்படுத்தவந்த துரியோதனன் சித்திரசேனனிடத்தில் சிக்கிப் புத்திர மித்திர பூவைமாருடன் தாமணிப்பிணையாகத் தானுங் கட்டுண்டு பரதவித்த தன்மையையொத்திருந்தது. யுத்தமுகத்தில் மற்றொருவரையும் வெற்றிபெறவொட்டாத சுத்த வீரத்திரமுற்ற திரிகர்த்த தேசாதிபதியாகிய சுசர்மாவானவன் சிங்கத்தினிடத்திற் சிக்கிக்கொண்ட மத்தகஜம்போல் வல்லமை குறைந்து வாயுகுமாரனாகிய வீமனிடத்திலகப்பட்டுப்போனான். உடனே வீமசேனன் விராடபூபதியைக் கட்டவிழ்த்து அவனைத் திரிகர்த்தன் தேரினின்றும் தன்தேரிலேற்றிக்கொண்டு தான்பிடித்த சுசர்மாவின் தலைமயிரை சுற்றிப்பிடித்த பிடிவிடாமல் தன்தேர்மேலிழுத்து இரத்தத்துளிபீறிட்டுச் சுற்றிலுந் தெரிக்கும்படியாய் மடலோடு மடல்சேர மணிக்கயிற்றினால் இறுக்கிக்கட்டி அவனைத் தன் எதிரிலிருக்குங் குருசேனைகளுக்குக் காட்டி, இதோசண்டைசெய்யச் சமர்த்துள்ளவர்கள் வாருங்களென்றவர்கள்மீது சரமாரிபொழிந்து கோபாவேசங்கொண்ட

வீமசேனனை சுசர்மா சேனைகள் கண்டு பயங்கொண்டோடிப் போனர்கள்.

அவ்வேளையில் சர்வசம்மாரகால ருத்திரன்போ லுருத்தெழுந்த வாயுகுமாரனை விராடராஜன் நோக்கி, நமது குலதெய்வமே இவ்வுருக்கொண் டெழுந்ததென்று மிக மகிழ்வடைந்தபோது பதினாயிரம் குதிரைவீரர்கள் பாய்ந்து கோபாலருடன் சேர்ந்து திரிகர்த்தன் கைக்கொண்ட விராடனுடைய பசுநிரைகளைத் திருப்பிக்கொண்டு ஜயம் ஜயம் ஜயமென்று ஜயக்கொடி நாட்டிச் சிறுபறைகொட்டிப் பலவித வாத்தியங்களு முழக்கிக் கொண்டு தங்கள் எதாஸ்தானமாகிய மச்சதேசத்திற்குத் தென் புறத்தில் கலந்து முன்போலிருந்தார்கள்.

கங்கபட்டராகிய தருமராஜன் தமதுபக்ஷம் ஜெயமென்றறிந்து மூந்திக் கூடாரத்திற்குப்போய் ஒன்றும் அறியாதவர்போல் தாமிருக்கத்தக்க ஆசனத்திலிருந்தருளினர்.

பின்னர், சத்துருவான திரிகர்த்தனை வென்றவனைத் தேர்களில் இறுகக்கட்டிக்கொண்டு வீமசேனனும்விராடனும் தேருர்ந்து சென்று சேனைகளுடன் பிள்ளைகளுந் தம்பியருஞ் சூழத் தருமராஜனுக் கெதிர்போய்ப்பணித்து நின்று, சுவாமி! தேவரருடைய அனுக்கிரகத்தால் ஜயங்கொண்டு வந்தோமெனச் செப்பினர்கள். இணையில்லாத கங்கபட்டரும் அவர்களை ஆசீர்வதித்து அருகிலிருந்த ஆசனத்தி லிருத்தினர். அப்போது கங்கபட்டரை விராடன் பணிந்தெழுந்து, ஆண்டவனே! போர்முகத்தில் வீரர்களைப் பொருதியோட்டிஊர்முகத்தில் என்னைக்கொண்டு வந்துகாட்டி, உலையாய்ப்புகழை நிலைநாட்டி,எனக்குக்குலதெய்வமாகத்தோன்றிப் பகைவர் கைபட்ட என்னையும் பசுக்களையும் மீட்டி ரக்ஷித்தபலாயனனுடைய பேருதவிக்கு நானென்னவேறு உதவி செய்யப்போகிறேன்? அப்படிக்கல்லவென்று செய்தாலும் இவர் புரிந்த உதவிக்கு ஈடாகாதே? இதற்கு ஒத்த கைம்மாறுளதோவென்று யோசிக்குமிடத்தில் இப்புவியிலும் எப்புவியிலும் இப்பிறப்பிலும் எப்பிறப்பிலும் இல்லையென்று உரைத்துப் பலாயனனைத் தன் மார்போடணைத்து என்மைத்துனனை கீசகனைப் பறிகொடுத்துக் கதியற்றிருந்த என்னை நீங்கள் இவ்வேளையிலடுத்து எதிரிகையிற்பட்ட சிறையை விடுத்து எனக்கு உயிர்கொடுத்தீர்கள். நீங்கள் இவ்வித வுதவி செய்யாவிடில் இந்நேரம்என் கதி எப்படியாமோ அறியேன். ஆகையால் என்னரசுரிமை என்

பட்டினம் என்செல்வமுதலிய யாவையும், என்னுயிரையும் உங்களுக்கே தத்தமாகக் கொடுத்தேன்; உங்கள் பெருமைக்கும் அருமைக்கும் நீங்கள்செய்த நன்மைக்கும் நான் தத்தம் பண்ணிய பொருள்கள் தகுதியற்றனவாயிருப்பினும், பக்தி சிரத்தையாகச் செய்கிற ஏழைப்பூசையை எப்பொருட்குமுரிய ஈசன் அங்கீகரித்துக்கொள்வதுபோல் தாங்களும் தயைபுரிந்து ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் எப்பொழுதுமென்னைவிட்டு நீங்காமலிருந்து ரக்ஷிக்கவேண்டுமென பற்பலவிதமாக உபசாரவார்த்தைகள்சொல்லிப் பிரார்த்தித்தான்.

அவ்வரசன் மொழியைக்கேட்டு தருமராஜனும்தம்பியர்மூவரும் மகிழ்ந்து புகழ்ந்து வாழ்த்தினர்கள். பின்னும் முரசக்கொடியுடைய முதல்வன் நகைத்து மச்சதேசாதிபனாகிய மன்னனே! பாண்டவர்களிடத்தில் பக்ஷமாயிருந்த நாங்களைவரும் ஒருவரைவிட்டொருவர்பிரியாமல் உத்தமனாகியஉம்மிடத்தில்வந்தடைந்த அந்நாள்முதல் இந்நாள்வரையிலும் விரதசாரணியுடன் நன்னாளாகக் கழித்து அன்னவஸ்திராபரணங்களுக்குக் குறைவில்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தோம். நாங்கள் வெளிப்பட்டுப்போவதற்கு இன்னஞ் சிலநாளிருக்கின்றன. நாங்களுனை விட்டுப்போனாலும் உமக்கு எந்நாளுங் குறைவில்லையென்று உபசாரஞ் சொல்லி, பரிசுத்த இருதயம்படைத்த பார்த்தீபனே! நீர் அளித்த சகல சம்பத்தை அனுபவித்ததிலும் ஆயிரம் பங்கு அதிகமாக நாங்கள் ஆனந்தப்படும்படியாக உமது தேரிற் கட்டுப்பட்டிருக்கின்ற திரிகர்த்தராஜனைக் கட்டவிழ்த்துவிட்டு உபசரித்துச் சன்மான வெகுமானத்துடன் ஒரு ரதங்கொடுத்து அனுப்பவேண்டியதென்றார். தன்னருகிருந்து இரக்கமாகச் சொல்லிய தருமராஜனுடைய கருணைமொழியை விராடன் காதாரக்கேட்டு வாய்திறவாமல்தானே எழுந்துபோய்க் கட்டவிழ்த்துவிட்டு,ஆபரணவஸ்திராதிகளும்வழங்கி, அழகியதேருமளித்து,ஓதிரிகர்த்தனே! முன்னொருநாள் நீ அவமானபட்டிருக்கப் பின்னும்வந்து அகப்பட்டமையால் மன்னர்முறைமைப்படிக்கு உன்னைவாளால்வெட்டவேண்டியதாயினும் இந்த மகானுபாவராகிய கங்கபட்டர் தப்புவித்தார். இவரால் பிராணப்பிச்சை கிடைத்ததென்று எப்போதுமறவாமலிருவென்று அனுப்பினன். அத்திரிகர்த்தன் விராடனைப்பார்க்க வெட்கப்பட்டு, மெத்த விசனமுற்றுப் புத்திமயங்கிச் சித்தப்பிரமைகொண்டு, சுயோதனன்முதலிய கொற்றவர்கள்

தனக்குப்பின்னுதவிவந்து கைகொடுக்காமற்போனார்களே? அவர்கள் முகத்தில் நாமெப்படிப்போய் விழிப்போமென்று மனமெலிந்து, ஓடியொதுங்கிப் பதுங்கிய தன்படையுடன் கலந்து, கங்கபட்டரைக் கருணையில் தருமராஜனென்று புகழ்ந்து பிழைத்தது போதுமென்று ஓடிப்போனான்.

அப்பால் தருமநந்தனன் விராடனைப்பார்த்து, இப்பொழுது போன திரிகர்த்தன் ஒருவேளை மேற்படை கூட்டிக்கொண்டு வந்தாலும் வருவானென்று உரைக்க, அதைக்கேட்டமதிகுலவேந்தனுகிய மச்சராஜன் ரதகஜதுரகபதாதிகளான நால்வகைப்படையையும் பிள்ளைகள் மூவரையும் பேரணிநிறுத்தி, மேற்படை வருமார்க்கத்தில் வேவுகாரரை யனுப்பிவிட்டு அன்றிரவுமுழுமையும் அவ்விடத்தில் முகாம்போட்டுக்கொண்டிருந்தான். அவன்மூத்தகுமாரனுகிய சுவேதனென்பவன் திரிகர்த்தனுலடியுண்டு,முறிபட்டோடி முக்கண்ணனுகிய முதல்வனைப் பூசித்து எக்காலத்தும் உரம்பெற்றவர்களுக்கு மிளையாமலிருக்கும் வரம்பெறக் கருதி தவஞ்செய்யப்போனான்.

இங்கே சூரியன் அஸ்தமனமானது, வீமசேனன் திரிகர்த்தனைத் தேருடன்கட்டிய திறத்தைச் சமுத்திரநாதனை வருணன் கண்டு, இன்னும் பாண்டவர்களை வெளிப்படவிடாமல் சூரியன் தடுத்திருக்கிறுனென்று கோபங்கொண்டு மேனி சிவக்கக்காட்டி மேற்றிசையிற் கொண்டுபோவதுபோலிருந்தது. கேளும் ஜனமேஜெயமகாராஜனே என்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

தக்ஷிண நிரைமீட்சிச் சருக்கம் முற்றிற்று.

உத்தர நிரைமீட்சிச் சருக்கம்

கண்ணன் துதி

உருவமாயருவமா யகம்புரத் திறுமுலாவும்
ஒருவன்மூவுல கோரடியளந்த சேவடிகள்
வருவதாகியும் போவதாகியுந் தடுமாறும்
கருவெனும்பெருங் கடற்கரை யேறலாங்கலமே.

(இதன் பொருள்)

உருவாகியும் அருவாகியும் உள்ளாகியும் புறம்பாகியு முலாவுகின்ற வொருவனது மூவுலகு மோரடியால் அளந்த சேவடிகள் போக்குவரத்தாகத் தடுமாறுகின்ற கருவென்னும் பிறவிப்பெருங்

கடலைக் கடக்கலாகுந் தெப்பமாம். இத்தெப்பமாகிய செந்தா மரைக் கமலம்போன்ற திருமாலின் திருவடிகளைச் சிந்தையால் தொழுது, எந்தையாகிய வேதவியாசரையும் வந்தித்து, ஒப்பற்ற சித்திரமணித் தேரேறிக் குருசேனையுடன் கூடிவந்த திரிகர்த்த தேசாதிபனென்னுஞ் சுசர்மாவானவன் விராடபுரத்தின் தக்ஷிண பாரிசத்தில் சேர்ந்து ஆதிசேடனால் சுமக்கப்பட்ட இப்பூமியதி ரும்படிக்குப் பெரும்போர் தொடுத்து விராடனுடைய மாட்டுமந் தைகளை மடக்கிப் பிடித்து. ஐயப்படைத்துத் திரும்புங்காலையில் பசுக்காவல ரடிபட்டோடி விராடராஜனுக் கறிவித்தவுடனே அவ்வரசன் ஓரக்ரோணி சேனையுடன் வந்து, திரிகர்த்தனுடன் சண்டைபுரிந்து தேரிற் கட்டப்பட்டு சுயம்பாகியினால் விடுபட்டு மறுபடியுந் திரிகர்த்தனைப் பிடித்துத் தேர்க்காலுடன் கட்டி அவ மானப்படுத்திக் கங்கபட்டர் மொழியால் விடுத்து அவன் கைக் கொண்ட மந்தைகளைத் திருப்பிக்கொண்ட கதையைச் சொன் னேன். அந்தத் திரிகர்த்தராஜனுக்குப் பின்படையாகவந்த துரி யோதனனும் பெருஞ்சேனைகளும் மச்சநகரத்தின் வடபாரிசத்தி லடுத்து அங்கிருந்த மாட்டுமந்தையை மடக்கியதையும், பேடி யினால் மானங்கெட்டுப் பசுநிரைகளை விட்டோடியதையும் பகரு கிறேன்கேளும் ஜனமேஜய மகாராஜனே என்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

குவலயம் புகழுங் குருகுலக்கோமானே! கேளும். திரிகர்த்த ராஜன் தன் கைவசப்பட்ட மாட்டையும் விட்டுத் தானுங்கட் டுண்டு விடுபட்டுச் சேனையுடன்முதுகிட்டுத் திரும்பிவிட்டசெய்தி யைத் துரியோதனன்கேட்டு ஆக்கிரமித்து வியாக்கிரம்போல் எழுந்து பாண்டவர் பதுங்கியிருக்கும் பருவத்தையும் பாராமல், பசுநிரையை மடக்கிய பக்குவத்துடன் பட்டினம்வந்துஞ் சேரா மல் விருதாவேலை செய்துவிட்டான் சுசர்மாவென்று வெதும்பி, ஐயோ! ஆண்மையுடையவ னிவனென்று நம்பி வீண்மோசம் போனேமே. அடா துச்சாதனனுகிய தம்பி! நமது நால்வகைப் படையு மெழும்படி விளம்பி நான்யுத்தகோலங்கொள்ள வெற்றி முடி கொண்டுவாவென்று கிளம்பி, நாம் திக்கெட்டுஞ் செவிடு படப் பேரிகை முழக்கிக்கொண்டு பட்டப்பகலில் புறப்படுவது பக்குவமல்ல வென்று சொல்லி, விட்டெரிக்குங் கிரணங்களை யுடைய வெய்யோன் உதயஞ்செய்யு முன்பாக அட்டகஜத்திற்கு இணைப்பட்ட துட்டயானைகளை நடாத்தி, கட்டுக்காவலுடன்

மட்டுபடாச் சேனைகள் புடைசூழப் புறப்பட்டு, விராடபுரத்து உத்தரதிசையில் சென்று, நவதானியம் விளைந்த நாடுகாடுகளை யழித்து நால்வகைச்சேனையை நிறைத்து, ஊரிலுள்ளோரை யோடவிட்டடித்து, ஓடும்பேர்களை வோடாமல் மறித்துச் செழித்துவளர்ந்த கருப்பங்கொல்லைகளையுந் தீயிட்டுக்கொளுத்தி நன் செய் யுன்செய் பயிர்களை நாசப்படுத்தி, ஆழ்ந்தகுளங்கள் அனைத்தையுந் தூர்த்துத் தடங்கள் மடங்களைச் சரியவிடுத்து, ஆறுகால் ஏரி அணைக்கரைகளை அழித்துப், போராகக் குவித்த நெற்களை பொறிபறக்கக் கொளுத்தி, நாடுகாடாகக் காடுமேடாகக்கெடுத்து, மாடுகளைப்பிடித்து, அறம் பறந்தோடவும், மரஞ் சிறந்தோங்கவும், வில்லை வளைத்து அல்லல்விளைத்தார்கள். அக்காலையில், அந்த மந்தைகளுக்குக் காவலாயிருந்த நந்தகோபாலர் வந்து எதிர்த்துப் போர்புரிந்து, திறனழிந்து, சிந்தைநொந்து, ஊர்புகுந்து உத்தரனோடு உரைத்தார்கள்.

அவர்களை நோக்கி என்னதுன்பம் நேரிட்டதென்றுகேட்க, அவர்கள் இராஜகுமாரனடிமேல் வீழ்ந்தெழுந்து, சுவாமி! அடியேன் பராக்கு. தென்திசையில் திரிகர்த்தன் வந்து புகுந்து, பசுமந்தையை மடக்கிய செய்தியறிந்து, அப்பசுக் குலங்களை மீட்க வேண்டிச் சேனைகளுடன் விராடபூபதி சென்றிருக்குஞ் சமயம் பார்த்து, அரவக்கொடியோனுகிய துரியோதனராஜன் பலம் பொருந்திய படைகளுடன் வடதிசையிற் கலந்து, பதாதிகளைப் பிரித்துவிட்டு நாட்டிலுள்ள பலன்கள் யாவையுமழித்து அதாகதஞ் செய்து மாட்டையுங் கவர்ந்து, கூட்டமாயெதிர்த்த எங்களையு மாட்டிப் பிளந்துவிட்டான். நீர் இத்தருணம் வீட்டிலிருப்பது தகுதியோ? சநதிரகுலேந்திரனே! என்று முறையிட்டனர்.

இவ்வண்ணம் தன் பிள்ளையினிடத்தில் வினையுரைப்போர் விளம்பியசொல்லை உத்தரனுகிய சுபத்திரனைப்பெற்ற சுதர்க்கணையானவளறிந்து, ஆ! இதென்ன! நாட்டில்அரசனில்லாத வேளை பார்த்து மாட்டை மடக்குவார்களோ? இராஜநீதிக் கேற்குமோ? பெண்பாலாகிய நானென்செய்வே னென்றேங்கித் தன் பக்கத்திலிருந்த பாங்கியைநோக்கி, அடிதாதியரே! இந்தவேளை தப்பித்துக்கொள்வதற்கு எந்தவழியுங் காணும். வந்திருக்குங் குருகுல சேனைகள் நமதந்தப்புரம் புகுந்து தொந்தரை செய்யுமுன்னமே ஜாக்கிரதைப்படவேண்டும். அதற்கு என் சிந்தையிலொரு தந்திரந்தோன்றுகிறது. அதைக்கேளுங்கள். எப்பேர்ப்பட்டவர்

களும் பெண்கள்பேரிற் படையெடுக்க லாகாதென்று அரசநீதி யிருக்கின்றது. அதைப் பலரறியாவிட்டாலுஞ் சிலராயினும் அறிந்திருப்பார்கள். பாவபுண்ணியம் பார்த்து நடப்பார்கள். ஆகையால், நீங்கள் யாவருங் ஆயுதபாணிகளாய்ப் புறப்பட்டுக் கோட்டைமதின்மேலேறிக் கூட்டங்காட்டி நமதுமச்சநாட்டைக் காருங்களென்று சொன்னள்.

அவளுரைத்த வார்த்தையைக்கேட்ட உத்தரகுமாரன் தெருப் பில்விழுந்த புழுப்போல் துடித்துப் பெருமூச்சுவிட்டுப் பெற்ற தாயை வணங்கி, அம்மா! நானிருக்க நீயென்ன சொன்னாய்? நீரிப்போதுரைத்த மொழியானது மிகவும்நன்றாயிருந்ததென்று வெகுண்டு நகைத்து, ஐயையோ! என்னைக் கொல்லமாட்டாமல் புல்லியமொழி சொல்லினையே. உனது வயிற்றிற் பிறந்து சகல கலைகளுமறிந்து செல்வச்சிறுவனாயிருந்து செழித்து அழுதநந்திய என்னை மன்னனுக்குப் பிறந்த மைந்தர்களில் கடைசியிற் பிறந்த மகனென்னப்பூரித்து ஆதரித்துவந்த அன்னையாகிய நீ இதுவரையில் அருமையாக வளர்த்தது சத்துருக்களால் பகை வந்து நேர்ந்தபோது பெண்டுகள்கூடிச் சண்டைசெய்து தாங்கு வதற்குத்தானே? இந்த ஸ்திரீகளால் மச்சநாட்டுக்குவந்த வருத் தம் நீங்கிப்போமானால், நானுனக்குப் பிள்ளையென்றிருந்து பிர யோசனமென்ன? எனக்குவீரனென்னும் மேம்பாடென்ன? நான் கற்ற வித்தைகளினால்பயனென்? நானொருவனி நக்கிறேனென்று சற்றுமதியாது பயனற்றவார்த்தைகளைச் சொல்லினையே. தாயே! நானந்தச் சத்துருக்களைச் சயிக்கமாட்டேனென் றெண்ணினை யாக்கும். சப்திக்குஞ் சப்தசமுத்திரம்போல் படையெடுத்துவந்து நமது பசுநிரைகளைக்கவர்ந்த பகைவருக்கெதிரில் நானொருவனு மூனந்து, முழுப்போர்புரிந்து, இமைகொட்டுமுன்னமே இவைத் தோடவாட்டி விஜயக்கொடி நாட்டி ஜயபேரியடித்து யாவரும் மெச்ச திரும்பிவந்து உன் பொன்னடியை பூசிக்கிறேன். போர் முகத்தில் காலமறிந்து சமயம் தெரிந்து மனக்கருத்துணர்ந்து முகக்குறிப்போர்ந்து எதிரியினெண்ணங் கண்டு தேர்விடுக்கத் தக்கவனுகவும் என்மனதுக்கொத்தவனுகவும் சாரதியொருவன் கிடைப்பானுனில் யார் என்னை வெல்லவல்லவர்கள்? அம்மணி! அப்படிப்பட்ட சாரதியொருவன் இல்லாக் குறையினால் நியுரைத்த பேதைமைச் சொல்லுக்குப் பின்னிட்டுத் தவிக்கிறேன். இப் போதுவந் தெதிர்த்திராநின்ற கர்னராஜன் வீஷ்டுமாச்சாரியர்

அரவக்கொடிபடைத்த துரியோதனன் இவர்களியாவரும் புறங் கொடுத்தோடப் போராடி, அவர்கள் குலத்தில் அவதரித்திரா நின்ற மகாவீரசிகாமணியாகிய அருச்சுனன்கூட அதிசயிக்கும் படியாக ஜயித்து, நமது மாட்டுமந்தையைமீட்டுக்காட்டுக்கோட் டிவிட்டு இந்நாட்டில்வந்து அடிவைப்பேன் அம்மாவென்று சொல்ல, அதைக்கேட்ட சுதர்க்கணையானவள் என் அப்பனே! நீ இப்போது உரைத்ததெல்லாஞ் சரிதான். உன்னிஷ்டப்படி தேரைச் செலுத்தத்தக்க வல்லவனை நானெங்கே கண்டு தேடு வேன். உனக்குச் சாரதி தேடுவதற்கு முன்னம் எதிரிகள் வந்து கோட்டையைக் கைக்கொண்டு போவார்களே என்று சொல்லித் தாயும் பிள்ளையும் ஏக்கமுற்றிருக்குஞ் சமயத்தில் இக்கருத்தைப் பக்கத்தினின்று கேட்டிருந்த பணிப்பெண்ணான விரதசாரணி உத்தரனுரைத்த உறுதிச்சொல்லையும் அருச்சுனனைப் புகழ்ந்து பேசிய அன்பையும் தன் சித்தத்திற் குறித்துச் சற்று நிதானித் துச் சித்திரவில் கொண்டு சிவபெருமான் தலைமேற் புடைத்துப் பாசுபதாஸ்திரம் பெற்ற தனஞ்சயனுகிய பேடியிருக்கும் நாடக சாலையில் புகுந்தாள்.

மிக்க அவசரமாகவந்த விரதசாரணியின் அக்கரையையும் முகக்குறிப்பையும் பிருகந்நளையாகிய பேடிகண்டு ஓடிவந்து வாரும் உட்காருமென்றுபசரித்து, இதுவரையிலும் பேதமில்லா மற் பேசுவதுபோற் பேசித் தங்களுக்குள் அமைத்துக்கொண்ட சைகையினல் தனித்துச்சென்று, தெற்குத்திசையில் திரிகர்த்தனை யனுப்பிவிட்டுத் திரண்ட சேனையுடன் வடதிசையில் புகுந்து மாடுமடக்கினன் துரியோதனனென்று கோபாலர்வந்துகூறினர் கள். அந்த மொழியைக்கேட்ட சுதகூஷ்ணதேவி சிந்தைநொந்து அருகிருந்த தாதியர்களை யழைத்து, விராடராஜன் வருகிறபரி யந்தம் கோட்டைமதில் மேற்கூட்டங் காட்டி நாட்டைக்காருங்க ளென்று நவின்றுள். அப்பேச்சைக்கேட்ட உத்தரகுமாரன் மனம் பொருமல் மாதாவை வெறுத்து தனது வீரப்பிரதாப வெற்றி யைப்பேசித் தன்மனதுக்கிசைந்தவல்லவனிருப்பானுனில் தனஞ் சயனுங் கொண்டாடச் சண்டைபோடுவேன். கூத்திரியத் திறத் தைச் சாதிப்பேனென்று சஞ்சலப்படுகிறனென்று சொன்னுள்.

அம்மொழியைக்கேட்ட விவேகவல்லவனுகிய பேடி ஆத் திரப்படாமல், தாங்கள்கடத்தவேண்டிய அஞ்ஞாதவாசத்தவணை நாளைக் கணக்குப்பார்த்து ஊர்வசிசாபமுற்ற ஒருவருடந்தொகை

யையும் காலமும் பலமுங் கண்டறிந்துகொண்டு வெளிப்படுங் காலம் இதுதானென்று மிகமகிழ்ச்சியுடன் திரௌபதியைப் பார்த்து, பெண்ணுயகமே! இவ்வளவுதூரம் வந்து என்காதிலேற்றிய வீரரசமானது விருதாவாய்ப்போகாமல்எப்படியாவது சுதர்க்கணைக்கும் உத்தரனுக்கும் தெரியப்படுத்தி சாரதிதொழிலுக்கு என்னை இசைவிப்பது உன் கடமையென்று ஒருதரத்திற் கொன்பதுதரமாகச் சொல்லி வேண்டினன். அவ்வாறே நல்லதென்று நடந்த வண்ணப்பெண், நெருங்கித் துணிந்த தனமும்சுருங்கிக் கனிந்தமனமும் துவண்டயிடையுஞ் சிறந்த நடையுமுடைய உத்தரைகுமாரத்திக்குச் சங்கதியாவுந் தெரிவித்து, அவளுடன் சென்று புத்திரனுகிய வீரகண்டை தரித்த இளஞ்சிங்கத்தைக் கண்டு, ஐயா! நானொரு நன்மை சொல்லுகிறேன். ஐயமில்லாமல் அங்கீகரியும். வையமுழுதும் உம்மை வாழ்த்தும். போய்யிலாப் புகழணிபூணலாம்; இப்போது நேரிட்டிருக்கிற துஷ்டரை வெல்லுவதற்கு இஷ்டமிருந்தால், திருத்தமாகியதேரைப் பொருத்தமாகச் செலுத்துஞ் சாரதியில்லையென்று சங்கடப்பட வேண்டாம். நமது உத்தரை நாயகியாருக்கு நடனத் தொழில் பயிற்றினானின்ற பிருகந்நளை என்னும் பேடிக்கொப்பாகிய சாரதி இப்புவியிலுமில்லை. எப்புவனத்திலுமில்லை. அவள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் தங்கையான சுபத்திராதேவியைத் திருமணமுடித்தவள். காண்டாவனத்தை யெரித்த காலத்தில் அக்கினிதேவன் கொடுத்த அழிவில்லா இரதத்தைச் செலுத்தி, யாவருந் துதிக்கத் தேவருங்களிக்க அடுபோர்புரிந்து ஜயம்பெற்றிருக்கிறாள். நான் பாண்டவர்க்குரிய பத்தினியிடத்திலிருந்த நாளையில் இந்தப் பேடியின் திறத்தை யறிவேன். மெத்த மகிமை பெற்றவள். வீரப்பிரதாபமுற்றவள். மேலும் வல்லவள். என்பேச்சை நம்பியோசித்துப்பாரும். வேந்தன் மைந்தனே! என்று விரதசாரணி சொல்லவும்,உத்தரகுமாரன் உடற்பிறப்பாகிய உத்தரையானவள் அலர்ந்த செந்தாமரைக் கொப்பாகிய தமையன் முகத்தை தயவுடன் நோக்கி, எனதண்ணுவே! இந்த மாலினி சொன்ன வாக்கியம் ஒருக்காலும் பிசகாது. ஒருநாள் பரதசாஸ்திரத்தைக் குறித்து நானும் அந்தப்பேடியும் பேசிக்கொண்டு இருக்கும்போது, சாரதித்தொழிற்குரிய சாஸ்திரப்பேச்சும் வந்தது; அந்த விஷயங்கள் யாவையும் கிரமமாகப் பிரசங்கித்து, என் சித்தம் பிரமிக்கச்செய்து, தேர்விடுந்திறமெல்லாந் தனக்குத்திட்டமாய்த்தெரியு

மென்று உண்மையைச் செப்பியிருக்கிறாள். அதனால் அந்தப் பேடியை யொப்புக்கொள்ளும்படியாக நானும் விரும்புகிறேன் என்று தங்கை பேசவும், இவ்விருவர் பேச்சையுங்கேட்ட உத்தர குமாரன் கலீரென நகைத்துப் பளாபளா! நல்லவார்த்தைசொன் னீர்கள். கேடில்லாக் கீர்த்தியையுடையவர்கள் பேடியையுஞ் சார தியாகப் பெறுவார்களோ? ஆணும் பெண்ணுமல்லாத அலி யைச் சாரதியாகக் கொண்டு, போர்க்களத்திற் சென்று சத்துருக் களை வென்று ஜயம்பெற்றாலும், அது நிலைநின்று புகழாமோ? பேடிமுகத்தில் விழித்துவிட்டு ஒருவேலைக்குப் போனாலும், அக் காரியங் கெடுதலுமன்றி, நமக்குண்டாகிய ஆண்மையும்அறிவும் புகழ்ச்சியும் பொருளாகாமற் போய்விடுமே. அடடா! இப்பேர்ப் பட்ட அலிகளது முகாலம்பனம் பண்ணப்படாதே. அந்தோ! பேதைமைப் புத்தியாற் பேசவந்தீர்களே போங்கள் என்று பொருமி யுரைத்தான். அறியாதவன் கொண்ட ஆத்திரத்தைக் கண்ட சைரந்திரியானவள், சரச விராடராஜ தநயனே! நான் சொன்னவளைப் பேடியென்றெண்ணிப் பேசாதே. அவளுடைய காரியம் இப்போது தெரியாது. இனிமேல் தெரியப்போகிறது. அப்பொழுது என்னை நீ எப்பொழுதுங்கொண்டாடப்போகிறாய். ஐயனே! இவளை வலவனாகக்கொண்டு ஜயம்பெறப்போகிற மேன் மையும் நான்புகன்ற வாய்மையும் நீவசனித்த தூய்மையும் இன் னுஞ் சற்றுநேரத்தில் அறியப்போகிறாய். வெகுகாலத்திற்குமுன் னமே நானவளுடன்கூடி ஓர் இடத்திலிருந்து பழகியறிந்தவள். ஆகையால், இப்பேர்ப்பட்டவளென்று இவள் குணங்களையெல் லாம் எடுத்துச் சொல்லத் துணிந்தேன். இன்னுஞ் சொல்லு கிறேன்; உனக்கு நல்லகாலமிருந்து இவ்வல்லவியைச் சாரதி யாகக் கொண்டு யுத்தகளத்தில் புகுவையாகில் வீரமும் பிரபல வெற்றியும் பெற்றுப் பசுமந்தைகளையும் மீட்டுக்கொண்டு சுபகர மாய்த் திரும்பிவந்து உன் அன்னையாகிய சுதர்க்கிணையைத் தொழுது மகிழ்வாய். இவளுக்குக் கைவாசியுண்டு. இந்தப் பேடி யைவிட்டு நீ வேறொரு சாரதியைக் கொண்டுபோனாலும், போர் முனையில் இழிவாகிய அபஜயமடைவதற்கு ஐயமேயில்லை. அன் றியும் சாரதி எப்பேர்ப்பட்டவனாய் இருந்தாலும் சாமர்த்திய முகிய உனக்குத் தாழ்ச்சியென்ன? வல்லவனுக்குப் புல்லும் ஆயு தம் என்னும் வசனம் அறியாயா? மண்பூனையாலும் எலிபிடிப் பதே காரியம். நானுங்கட்கு விரோதியல்லவே. உங்களுடைய

சுகதுக்கங்களுக்கு உடன்பட்டவளே. இனிநான் உமக்குச்சொல் லவேண்டிய தொன்றும் இல்லே இளங்களிறே! என்று பணிப் பெண் இயம்பினுள். உத்தரை குமாரத்தியும் அதற்கொத்துப் பேசினுள். இவற்றையெல்லாங் கேட்ட இளஞ்சிங்கமானவன் சாரதித்தொழிற்கு வேறுவழி யில்லாமையால், ஒருவாறு சம்ம தித்து மண்குதிரையை நம்பி யாற்றிலிறங்கும் வகையாயிருக் கிறதே. வண்ணமாமகளே உன்சொல்லே நம்பினேன். நல்லது, அப்படியே யாகட்டும். தெய்வச்செயல் உள்ளபடியே நடக்கட் டும். அந்தப் பேடியை யழையும் பார்ப்போமென்றான். அவ னுடன்பட்டமையைத் தெரிந்துகொண்டு பத்தரைமாற்றுப் பொன்னணியணிந்து பணிப்பெண்ணும் உத்தரைகுமாரத்தியும் ஓரடியாகவோடிப் பேடியுருவந் தாங்கிய பெருந்தகையைக்கண்டு வாடியமைந்தன் மனதைத் திருப்பினேும், கூடியவரையி லுடன் பட்டு உன்னே யழைக்கிறான்; வாவென்றழைக்குமுன்னமே பிரு கந்நளையானவள் இதோவந்தேன் வந்தேனென்றெழுந்து வேக மாக நடந்து கையில் அணிந்த வளையல் கலகலவென்றொலிக்கக் கமலக்கண்ணிலங்கு மதிமுகம் ஜொலிக்க வந்து, இராஜகுமார னைக் கண்டு உபசரித்து நின்றுள். இப்படியாக வந்த பேடியை இராஜபுத்திரன் பார்த்து ஓ பேடி! அஞ்வங்களுடைய சுபாவம் அறிந்து, எஜமானன் கருத்துணர்ந்து காலங்கண்டு, கைத்திறங் காட்டிச் சமயோசிதமாகக் குதிரைகளே நடத்திப் போர்முகத்தில் தேர் செலுத்துந் திறம் உனக்கு உண்டோவென்று கேட்க, எதி ரில்வணங்கிநின்ற பேடியானவள்எங்களிளஞ்சிங்கமே! கூலிக்குக் குற்றுகிறவளே கேளிக்கையாடச் செய்வதுபோல், நாட்டியங் கற் பிக்கும் அறிவிலியாகிய பேதையை விற்பூட்டிப் பெருதுப் போர் முனையில் தேர்விடச்செய்வது திறமோ? இராஜராஜர்கள் அறி யுந் தொழிலே நான் அறியத்தக்கவளோ? ஐயா! அந்தச் சாரதித் தொழிலென்ன சாமானியமோ சொல்லும். அழகு ஈகை குணம் புகழ் மெய்மை வண்மைமுதலிய யாவுமுள்ள மச்சராஜன்மகனே! ஆணும் பெண்ணுமல்லாத அறிவிலியானவள் உமதுள்ளக் குறிப்பும் குதிரைகளின் குணதிசயங்களு முணர்ந்து தேர் விடத் தக்க திறமுடையவ ளாவேனே வென்று சிரமசைத்துக் கரநெரி த்து குறுநகையுடன் சொன்னுள். அவள்காட்டிய புன்னகையின் குறிப்பை மன்னன்மகனறிந்து, இவளிடத்தில் ஏதோகொஞ்சம் வித்தையின் இறுமாப்பிருக்கிறதென் றோர்ந்து அடி பேடி! என்

மனமொத்தசாரதி மாண்டுபோய்விட்டான். அதுமுதல் என் பராக்கிரமம் ஒய்ந்துபோய்விட்டது. இனி எனக்குத்தக்க சாரதி எப்போதகப்படுவானென் றேக்கமுற்றிருந்தேன். இப்போது உன்னுடைய திறமையுந் தெளிவும் நெளிவும் அனுபோக சாலிகள் சொல்லத் தெரிந்துகொண்டேன். தேர்விடுந் தொழிலுக்கு உன்னையே விரும்பியிருக்கிறேன். சுத்தவீரனை இராஜன் எவ்வளவு பலசாலியாயிருந்தாலும், யுத்தஞ்செய்தால், ஓய்ந்திருத்தல் உடன்சென்றெதிர்த்தல், பிராணன்விடல் முதலிய விவைகட்கெல்லாம் சமயம்காலம் இடம் திடமறிந்து தெர்செலுத்துஞ் சாரதி தீர்க்காலோசனை செய்யாவிடில், எஜமானனுக்கு இன்பமென்ப தெவ்வளவு மிராது. அன்றியும் அரசன் வெற்றிமாலை யணிவதும் பெரும்புகழ் பெறுவதும் பெரியகாரியங்களை முடிப்பதும் எதிரிகளை யோடவிட்டடிப்பதும் இவைகளியாவும் சாரதியின் பேருதவியினு லுண்டாகத்தக்கனவே யன்றி வேறில்லை. ஆதலால், நான்விஸ்தரித்துச் சொல்லவேண்டியதில்லை. நாமிப்போது செல்லுகின்ற போர்முகத்தில் தேர் செலுத்தும் உன் திறமையை நான் கண்டுகொண்டால், அளவுபடாதஎன்சம்பத்துகள் யாவும்உனக்கேசொந்தமென்றுஐயமில்லாமற் கைமேற்கொண்டு வையகம்வாழ்த்த மகிழ்வுற்றுய்யலாம். வாசனைதங்கிய கருங்குழலோங்கிய ஏ பேடி! என்னை நீ வேறுக நினையாதே. உன் மனம் போல் நடந்துகொள்வேன். நமது விராடபுரத்திற்கு வடதிசையில் வளைந்திருக்கிற சத்துருக்களோடு எதிர்த்து சண்டைவிளைத்துச் சயித்து மாட்டுமந்தையை மடக்கிவருவோம். சீக்கிரந் தேர் கொண்டு வாவென்றான்.

உத்தரனுரைத்ததைக் கேட்ட பிருகந்நளையானவள் நான் பலவகைச் சாதுரியமுள்ளஇச்சாரதித்தொழிற்கு வல்லமையற்ற வளாயினும் இராஜலக்ஷணமமைந்த உமது கருணைக் கண்ணின் கடாட்ச வீட்சண்ணியத்தினாலும் மேன்மைதங்கிய விராடபூபதியின்சத்தியநெறியினாலும் பொன்னாட்டினர் புகழ இந்நாட்டினர் மகிழ என்னாற் கூடியமட்டும் தேர் விடுகிறேன். மன்னா! நீ யாதொன்றுக்கும் மயங்காமல் யுத்தகோலங் கொள்ளென்று பேடி கூறிய தீரமொழியை உத்தரகுமாரன் கேட்டு யோசித்துத் தேர் விடுந்திறம் இவளிடத்திலில்லாவிடில் நமதுபணிமாதுஇத்தனை துணிவாகப் பகர்வாளா? ஏதோ கொஞ்சம் பசையிருக்கிறது. இனி நமக்குப்பயமில்லையென்று மனங்களிகூர்ந்து யுத்தகோலச்

சாலையில் நுழைந்து, குடுத்தினிச் சல்லடந் தொடுத்துத் தட்டி வரிந்து, அரைப்பட்டு கைகட்டி, வஜ்ஜிரக்கவசம் உருக்குகவசம். இருப்புக்கவசந் தரித்துப் பாஜிபந்து கடகசங்கண மணிந்து, வாகுவலயம் பூனைந்து, அங்கைமூடி, புறங்கைமூடி, விரற்சாடு கரச்சாடு முன்கைப்பூண்தொடுத்து முழங்கைத்தோற்கைத்தோற் கட்டு இருப்புச்சீரா மார்புறைபூண்டு குண்டலம்பரித்து, திரிபுண் டரந் தரித்துச் செந்தூரத்திலகமிட்டு, முத்தாரம் இரத்னரம் மோகனரங்களும் அணிந்து, மாணிக்கப்பதக்கம் வயிரப்பதக்கம் தும்பிப்பதக்கம் துத்திப்பதக்கம் சரப்பணி கண்டசரம் உத்தர சஞ்சம் மோகனமாலை முதலிய ஆபரணங்களும் தொடுத்தமாலை கோத்தமாலை தும்பைமாலை வெட்சிமாலை முதலிய மாலைகளுந் தரித்துச் சாந்து சவ்வாதுபூசி நவமணிபதித்த ஜோதிமாமகு டஞ் சிரமேல்தாங்கி வீரபட்டங்கட்டி வாளும்வேலு மருங்கிற் சேர்த்து, உச்சிதமான பச்சைவில்லேந்தி, அம்புரூத்தூணி பழ குடனிறுக்கிக் காலில் வீரகண்டாமணி தொடுத்துப் போரலங் கிரதம்யாவும் புகழ்பெறக்கொண்டுயுத்தசன்னத்தனாய்த்தோன்றி தலைவாசலில் சென்று நின்றான்.

இத்தன்மையான உத்தரகுமாரனை பெற்றதாயாகிய சுதர்க் கணையானவள் கண்ணாரக்கண்டு, கருத்துள் மகிழ்ந்து, ஒன்றுந் தோன்றுமல் உள்ளங் குளிர்ந்து திருஷ்டிபடப் போகிறதென்று சிந்திக்கும் வேளையில், மைந்தனெடிவந்து சாஷ்டாங்கமாகப் பணிந்து வணங்கினான். சேயானவன் தொழுத காட்சியைத் தாயானவள் பார்த்து, ஆசையாகத் தழுவி முத்தமிட்டு, அன் பினாலுருகி ஆநந்தம் பெருகி, என் கண்மணியே! தேர்மேற் சிற ந்து போர்முனை புகுந்து தீரசத்தியினாருளால் வீரவேந்தரை வென்று வெற்றிமேற்கொண்டு பசுக்களுடன் மீண்டு பட்டினம் வரக்கடவாயென்று வாழ்த்தினள். இதற்குள்ளே பேடியானவள் நேர்பாய்ந்து குதிரைப்பந்தியை யாராய்ந்து சுழிசுத்தம், ஜாதி குணம்தேசம் வாசம் இரவிற் பிறந்தது பகலிற் பிறந்தது மானம் வயிரம் தீரம் திடம் ரோஷம் வேகம் இவை முதலாகியவற்றிற் சிறந்த சுபகரமுள்ள குதிரைகளைநாடிப் பிடித்து, ரதத்திற்பூட்டி, அம்புமுதலிய ஆயுதவகைகளும்வைத்துச் சுற்றிலும் பந்திபந்தி யாக வெற்றிக்கொடி நாட்டி ஆசாரவாசலில் கொண்டுவந்து தேரை நிறுத்தினான். அத்தருணத்தில் உத்தரன் தங்கையாகிய உத்தரகுமாரத்தி முத்து ரத்தினமுதலிய நவமணிகளாலமைத்த

ஆலஞ்சுற்றி, வென்னீரளித்துத் தமையனைப்போற்றி அருமையான என் அண்ணனே! தேவரீர் யுத்தமுகத்திற் சென்று சத்துருக்களை வென்று அவர்கள் தேரிற்கட்டிய சித்திரவஸ்திர விருதுத்துணிகள் எல்லாவற்றையும் கொண்டுவந்துகொடும். நான் விளையாடும் பொம்மைகட்குக் கட்டவேண்டுமென்றுள். இளையவள் வார்த்தையைக் கேட்ட இராஜகுமாரன் வளையாத தலையை வளைத்து, "அக்காடுவெட்டிப் பருத்திவிளக்கில் அப்பாவெனக்கொரு துப்பட்டித்தாரு" மென்னும் பழமொழியை ஒத்திருக்கின்றதே நமது தங்கைமொழி, என்று மாறுத்தரஞ் சொல்லமாட்டாமல் நகைத்துக்கொண்டிருந்தான். அவனுக்கு அருகிலிருந்த பேடியானவள் அம்மா! அவ்வாறெகொண்டுவருவதற்கு அட்டியென்ன? சாமர்த்தியமுள்ள உன் தமையனுக்கு இது ஒரு பெரிதோ; தேர்த்துணையுடன் அவரவர் தலைத்துணிகளையுங் கொண்டு ஜயம்பெற்று வருவதுமரிதோ. நீ சந்தேகப்படவேண்டாமென்று உறுதியாகச் சொல்லி உத்தரனைநோக்கிச் சகுனங்களெல்லாஞ் சரியாயிருக்கின்றது, இதுவே நல்லவேளை, இரதமீது ஏறுமென்றுள். அவன் அப்படியே யாகட்டுமென்று அன்னைமுதலாகிய பெரியோர் யாவரையும் வணங்கி விடைபெற்றுப் பொன்மலைபோன்ற தேரிற்பொருந்தி போர்ச்சிங்கத்தைப்போல் பூரித்திருந்தான்.

அப்பொழுது சுதர்க்கணையானவள் தன் புத்திரனது முன்னழகையும் பின்னழகையும் பார்த்துப் பொங்கிப் பெருமூச்சுவிட்டு ஒருபட்சம் பூரிப்பும் மற்றொருபட்சத்தில் அறியாச் சிறுவன் யுத்தத்திற்குச் செல்கின்றானே என்ற ஏக்கமுங் கொண்டவளாகி நின்றுள். அவ்வேளையில் அரண்மனைப் பெண்கள் யாவரும் கற்பூரதீப நீராஞ்சனமெடுத்துத் தங்கள் இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தித்துப் பேடியை வாழ்த்தி எங்கள் பிள்ளை பத்திரம் பத்திரமென்று சொல்லி நின்றார்கள். பேடியும் அவர்களைப் பார்த்து, நாங்கள் போய்வருகிறோமென்று சொல்லி இராஜஸ்திரீயினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, குதிரைகளின் கலினக்கயிற்றை இடதுகையாற் பிடித்துக் குறடாவை வலதுகரத்திற் முங்கித் தேரின்மீது ஒருகால் ஊன்றுமுன்னமே கதி கவனம் தாவல் என்றுசொல்லப்பட்ட மூவேகத்தையு முடையவனுய்ப் பூமி கிடுகிடென்றதிரவும் தும்புகள் மேலெழுந்து ஆகாயத்தைக் கப்பிக் கொள்ளவும் புரவிகள் அதிவேமாய்ச் சென்றன. அந்த விராட

புரத்திலுள்ள பிரம, கூடத்திரிய, வைசிய சூத்திராதிகளில் ஆண்களும் பெண்களும் அணியணியாக நின்று எங்கள் இளவரசாகிய உத்தரகுமாரனுக்கு மங்கள முண்டாகுகவென்று மனதாரவாழ்த்தித் தங்கள் தங்கள் வழிபடுகடவுளைத்தொழுது துதித்தார்கள். இப்படி இருக்கக் கண்மூடி கண்திறப்பதற்கு முன்னமே வானுறநிமிர்ந்து வளைந்த மதில்சூழ்ந்த இராஜவீதியையும் மற்றும் பற்பல வீதிகளையுந் தாண்டி, ஒற்றைச் சக்கரமும் சப்தமாவென்னுங் குதிரையுமுடைய தேர்மேற் பிரகாசிக்குஞ் செங்கதிர்போல சங்கிராமஜயவுத்தண்ட தீரனுகிய உத்தரகுமாரன் உத்திரதிசைக்கு வந்துவிட்டான்.

இவ்வாறு விராடபுரத்தின் வடதிசையைநோக்கி அதிவேகமாக வருகின்ற இரதத்திற் பொருந்திய இளஞ்சிங்கம்போன்ற உத்தரகுமாரன் ஸ்ரீராமனைப்போல் குபேரதிசையைக் குறிக்குங் காலையில், வான் இடமறச்செறிந்து நிறைந்த நக்ஷத்திரங்கள் போலும், அளவிடுதற்கரிய கடற்கரை மணல்போலும் திரண்டு பரவிய துரியோதனன் சேனைகள் தன் கண்களுக்கெட்டியதூரம் விரிந்து நிறைந்திருப்பதைக்கண்டு, ஆஹா! அடிபேடி! பொறு, பொறு. பொறு, பொறு. அவசரப்படாதே. நீ விடுந்தேர் விறுவிறென்றோடுகிறது. ஐயோ! என்தலை கிறுகிறென்றுசுற்றுகிறது. பூமி நெறநெறவென்று நெரிகிறது. என்குலையோ நடுங்குகிறது. குடல் குழம்புகிறது. எதிர்நிற்குஞ் சேனைகளைப்பார்த்தால் கர்ப்பங் கலங்குகிறது. பாவி தேரைச் சற்றே நிறுத்தடி, நமக்கெதிராகிய படைகளைக் கண்ணுல்தான் பாரடி. யானை எத்தனை கோடியோ? குதிரை எத்தனை கோடியோ? சேனை எத்தனை கோடியோ? தேர்களைத்தனைலக்ஷமோ? நாமெப்படி கணக்கிடப்போகிறோம்? என்னசெய்வோம்? ஐயையோபேடி! நீயாகிலும்பார்த்துச்சொல்லடியென்றேங்கி, உள்ளங் கலங்கிக் கைகால்கள் நடுங்கி கண்களிருண்டு, உடல் பதைத்து, உயிர் துடித்து, நாவறண்டு, முடிசோர்ந்துப் பிணம்போல் தேர்மேற் சாய்ந்தனன்.

இவ்வாறு பிதற்றி, முருகக்கடவுளாகிய செவ்வேள் விட்டவேலாயுதத்தால் கிழிபட்டு வீழ்ந்த கிரவுஞ்சகிரிபோல், போர்முனை புகுதற்குச் சக்தியில்லாதவனுய்த் தேர்மேற்சாய்ந்த உத்தரகுமாரனைப் பேடி பார்த்துத் தன்னிருகையாலு மணைத்து எடுத்து நிறுத்தி, வேர்வை துடைத்துச் சோபந்தீர தாகமளித்து ஆனைத் தேற்றி, அவன் முகத்தை நோக்கி, எனப்பா

இப்படியானையென்று அறிவிற்சிறந்த பேடி சொல்லத் தொடங்கினள். வாளும்வேலுங்கொண்டவிராடமைந்தனே! நீஎதிர்நிற்கும் படையைப்பார்த்து பயந்தாயோ? ஏன் கலங்கி வீழ்ந்தாய்? இறுமாந்தெதிர்த்த பகைவரை எங்குமில்லாமல் அழித்துவிடுவதொன்று. அல்லது, நாமாவது யுத்தகளத்தில் மாள்வதொன்று. இதுவே சுத்தவீரருடைய துணிவு. வேறே யோசிக்கத்தக்கதொன்றுமில்லை. இதைவிட யாதேனும் உண்டாயிருக்குமாகில் அதை எனக்குச் சொல். முற்றிலும்வளைந்த சத்துருக்களை வெற்றிபெற்று வருகிறேனென்று நீ உன் அன்னைமுதலிய யாவரிடத்திலும் உரைத்துவிட்டு உத்தரதிசைநாடி இன்னுஞ் சற்று நேரமாகவில்லையே. இதற்குள் மறந்துபோனையோ. நல்லது, கைப்பிடித்த வில்லை வளைத்துக் கடுங்கணை தொடுத்துப் போர்செய்து அணுவத்தனையேனுங் காயம்பட்டுத் திரும்புவையாகில், உன்னைக் கிஞ்சித்து சூரத்துவமுள்ளவனென்றுவது மதிப்பார்கள். இல்லாவிடில் அதிக அற்பமாக எண்ணுவார்கள். சற்றுமுன் நீ வீட்டிற் பேசிவந்த வீரவசனங்களை முற்றிலும் மறந்து இப்பொழுது முதுகிட்டோடும் இழிவை யோசிக்குமிடத்தில் குறைந்தபெண்கள் கூடக் குலுக்கென்று நகையார்களோ? இப்படிப்பட்ட உடம்பும் எடுக்கலாமோ? உன்னை யார்தான் பூசித்துப் புகழ்வார்கள். ஐயோ! அடா தம்பி! நீ புறப்படும்போது புலிபோற் கர்ச்சித்து இதோ பார்! சத்துருக்களையெல்லாம் அதஞ்செய்து நமது மாடுகளை மடக்கிக்கொண்டுவருகிறேனென்று வாய்ப்பதட்டமாயுளறினையே. அப்படி மகாவீரம் பேசி வெளிப்பட்ட நீ எதிராளிகளிருக்குமிடத்தை மிதிக்குமுன்னமே உயிருலந்து, உடல்நடுங்கித் திடனழிந்து திகைத்துவீட்டையே. உலகமென்னசொல்லும்? படையைப்பார்த்துப் பதறிக்கதறி யோடினனென்னும்பழிப்பிற்கிடமாமே. இத்தன்மையாகிய நிந்தை நேரிட்டபின்பு உயிரிருந்தென்ன? மானங்கெட்டும் பிராணனுடனிருப்பது மரியாதையோ? நீயே யோசித்துப்பார். பயப்படாதே. தைரியமாய் இரதத்தின்மீது உட்காரு. அலகடற்கொப்பாகிய பெரும்படைகளை வென்றுவருவோம். அப்பா! இன்னொன்று சொல்லுகிறேன் கேள். கருங்கற்றூணைது சுமக்கமாட்டாத பெரும்பளுவைத் தாங்கினும்பிளந்து முறிந்துபோய்விடுமன்றித் தளர்ந்துவளைந்துதலசாயமாட்டாது. அதுபோல், அளவிடப்படாத யானைசேனையடித்தாலும் கூடியமட்டுஞ் சண்

டைசெய்து, களர்ந்தவிடத்து அப்போர்க்களத்திலேயே உயிரை யொழித்துவிடவேண்டியது. மெலிந்து வெருண்டு புறங்கொடுந் தோடுவது வேந்தர்க்குத் தகுதியல்லவென்று விளம்பியிருக்கும் சாஸ்திரத்தை நீவிசாரித்ததில்லையோ. இப்பொழுதுதானென்ன ஒன்றும் முழுகிப்போகவில்லை. போர்முகநிலையுங் கார்முகமுறை யும் கடுங்கணைத்தொகையுங் கற்றிருக்கின்ற நீ பெரியமலையைக் குறியாகக் கொண்டடிப்பதுபோல், பெருங்கும்பாகியசேனைகளின் மேல் மொத்தமாகப் பாணங்களைத் தூற்றிவிட்டால், கும்பலில் கோவிந்தம் போடுவதுபோல், அம்புகள் போய் விழுந்து இன் னுரின்னுரென்று பாராமல் யாவரையுங் கொல்லும். உனக்குத் தகுந்தபடியே யானுந் தேரைச் செலுத்துவேன். அப்போது உனக்கு மேலான கீர்த்தி விளையும். வைத்தகுறிதப்பாமல் மாட்டு கிறான் விராடராஜன் மைந்தனென்று கடல்சூழ்ந்த உலகக் காவ லரும் படைகளும் உனக்கெதிர்வராமல் ஒருமிக்கவொழிவார்கள். அப்பனே! இப்படியாக அடித்து, வேந்தர் யாவரையு முடித்து, அவர் கைக்கொண்ட பசுக்கூட்டங்களைப் பிடித்துச் சயபேரிகை யடித்து விராடபுறம்போய்ச் சேர்வோமாகில், சந்திரவம்சத்து அரசர் அனைவரும் பந்துவர்க்கத்தா ரெல்லோரும் உன்னைப் புகழ்வார்கள். நெடுநாளைக்கு உன்கீர்த்தி நிலைபெற்றிருக்கும். அவ்வாறன்றி புறங்காட்டி யோடுவையாகில், உலகுள்ளளவுந் தீராத வசையடைவாய். வந்தபகைவரைவென்று திரும்புவோ மாகில் வையகமெல்லாங் கைகுவித்துப் போற்றுவதுமன்றி,உன் தந்தையுஞ் சிந்தை மகிழ்ந்து அளவில்லா ஆனந்தத்தையடை வார். ஒருவேளை நமதெண்ணம் முன்னுக்குவராமல் நாமிறந்து போனால், புகழுடம்பு பெற்று, அரம்பாஸ்திரீகளின் இளமூலைப் போகந்துய்த்து, வீரசொர்க்கமுற்றுக் கற்பகத்தருநிழலில் வீற் றிருந்துவாழலாம். இரண்டுவிதத்திலும் நமக்கின்பம்உண்டாம். ஓ இளங்கன்றே! பேடியாயிருப்பவரை பேடியென்று பேசுவது பெருமையன்று. போர்புரிவேனென்றுவந்து பேச்சுத்தடுமாறிச் சோர்ந்து படையைக் கண்டு பயந்து ஓடவழிபார்க்கும் ஒரு வனையே பேடியென்று உயர்ந்தோருரைப்பார்கள். சொற்சோர்வு படேல் சோம்பித்திரியேல்' என்னும் வாக்கியங்களை விற்போ ருடைய வேந்தர் மறவார்கள். கலகத்திற்சென்று கால்நாட்ட நின்று உயிரிழந்த வீரர்களினது கதைத்திறம் உணர்ந்திலையோ? அரசிளங்காளையே! என்று பற்பல வகையினாலும் உத்தரகுமா

ரனைத் தேற்றிக்கலவரத்தைமாற்றிக் கட்டுரையாகிய வீரதர்மங்களாற் கரைத்தாள்.

இவ்வாறு எடுத்துரைத்த பேடியின் கருத்திற்கிணங்காமல் தேரழுந்துஞ் சிறப்பினையுடைய மச்சநாடன் மைந்தனாகிய உத்தரகுமாரன் விற்பிடிக்க வெருண்டு பற்கடித்து மருண்டு, கண்ணீருகுத்துக் கடைவாய் குழைத்துப் புருவம் நெறித்து நெற்றி வியர்த்துப் பொருமிச் சொல்லுகின்றான். ஆரடி அடிபேடி! உற்றுப்பாரடி குடிகேடி! உனக்குக்கண்ணில்லையோ? இப்படையோடு எதிர்ப்பதாரடி? இப்படியே திரும்பிப்போவது சீரடி! அப்பப்பா! என் கர்ப்பங் கலங்குகிறதே. குடைகளும் நாற்படைகளும் கருங்கடல்போற் புலங்குகிறதே. பூமிமுழுதுஞ் சேனைக்காடாகப் பொங்கி நிறைகின்றதே. ஐயோ! சித்தம் பிரமிக்கிறதே. இந்தக் கும்பலில் நானொருவன் சென்று மீண்டு வருவேனென்று விந்தைப்பேச்சே. பெற்ற தந்தைக்கும் ஏச்சே. என் மதியுங் கெட்டுப்போச்சே. ஏதேது இனிக் காரியமில்லை. நான் சண்டைக்குப் போனால் தப்பாமற் சாவேன் சந்தேகமில்லையடி பேடி! என் கதியை இன்னதென்றறியடி, என் தந்தைதாய்க்கு நான் கடைப்பிள்ளையானதால் இனி பெறப்போகிறோமா வளர்க்கப்போகிறோமா வென்று செல்வமாகவும் மிக அருமையாகவும் வளர்த்தார்களே; நானும் என்னைப்போன்றுள்ள சிறுவர்களோடு சேர்ந்து உண்டைவில் கையிற்பிடித்து விளையாடித் திரிந்துகொண்டு இருந்தேன். என்னைச் சண்டைமுகத்திற்கொண்டுபோகாதேயடி! யுத்தஞ்செய்யும் பருவம் எனக்கின்னும் வரவில்லையடி! நான் அறியாதபிள்ளையடி! எனக்கேன் இந்தச் சள்ளையடி. ஆஹா! இதென்ன அநியாயம் கொடையாளியாகிய கர்ணன், வீஷ்டுமாசாரியர், துரோணாசாரியர், கிருபாசாரியர், அஸ்வத்தாமர் மற்றுமுள்ள வீரர்பலருஞ்சேர்ந்து மூனைந்த போர்முகத்திற் புகுந்து போராட அறிவேனே? போடிபோ. அடிபேடி! நல்லது. தெய்வச்செயலுள்ளபடியாகிறதென்று மனந்திடங்கொண்டு சண்டை செய்வோமென் றெண்ணினாலும் தேர்கள்கோடி, யானை இரண்டு கோடி, குதிரை வெகுகோடி, பதாதியர் கோடாகோடி, இவையன்றியும், பட்டவர்த்தனர், அதிரதர், சமரதர், மகாரதர், அர்த்தரதர் இவர்களையெல்லாம் படைத்துணையாகக் கொண்டுவந்து நமது பசுமந்தைகளைக் கவர்ந்த வணங்காமுடியோனுக்கெதிரில் வணங்குமுடிபெற்ற பேடியாகிய உன்னை உதவியாக நம்பிப்போ

ய்ச் சண்டை தொடங்கலாமோ? காலபலமும், தன்பலமும், மாற்றான் பலமும் துணைப்பலமும், ஆராய்ந்துணராத அரசனது முயற்சிகள் அனைத்தும் பயன்படாதென்று பெரியோர் சொல்லுவார்கள். நானே மெத்தவுஞ் சிறியவன். அதிலுஞ் சொற்பபல முள்ளவன். இத்தன்மையனுகிய வென்னை அதிரதரிற் சிறந்து பின்பலம் விரும்பாமற் போர்முகத்திற் புகுந்து மதயானைகளைப் பிளந்து புஜபலபராக்கிரம விக்கிரமம் பெறும் டோர்விஜய சிங்கம்போன்ற அர்ச்சுனராஜனென்று மதித்திருக்கின்றனையோ? ஐயோ பேதையே! அந்த விஜயன் புரியும் போர்க்களத்தில் எழுந்து பறக்காநின்ற பரமாணுவுக்கு ஈடாவேனே! பாவி! ஏண்டி வம்புசெய்கிறுய். யாரெப்படியானலும் விளைந்தபோர் எப்படி போனலும் உனக்கென்ன நஷ்டம்? என்னைத்தானே சாரும். நீயேன் வீணே துள்ளிவிழுகிறுய்? இராஜஸ்திரீகளுக்கு ஆடல் பாடல் கற்பித்துப் பத்துநாளைக்கிருந்து வயிறுவளர்த்துப் போகின்ற உனக்கேன் இத்தனைவீம்பு? பிள்ளையருமை யறியாத பெருமூடி போடி. இப்போதுதா புதிதாக வில்வித்தையிற் கைப் பழகிவருகிற நான் நெடுநாளாகக் கற்ற வில்லாளிகளிடம் எதிர்ப் பேனுகில், மானங்கெட்டு ஈனப்பட்டு மாள்வேனென்பதற்குச் சந்தேகமென்ன? ஐயையோ! உன்னுலென்னுவி ஒழிய வந்திருக்கிறதே என்று கண்சிவந்து கடுங்கோபங்கொண்டு என்பேச்சுக் கெதிர் பேசாதே பேசாதே என்று பின்னுஞ் சொல்லுகிறுன்.

ஆ பிருகந்நளையென்னும் அலியே! எங்கள் பசுமந்தைகளையெல்லாம் பகைவர் கொண்டுபோனலும், மச்சநாடு முழுவதும் நாங்கள் இழந்தாலும, குடி, படை, அரசு, நிதி, நிகேஷபங் குறைந்தொழிந்தாலும், இதனல்வரும் பெரும்பழி எனக்கடுத்தாலும், எங்களைத் தெய்வம் நடுத்தெருவில் விடுத்தாலும் உனக்கொன்றுமில்லையே. என்னைத் தடுத்துரைக்கவேண்டிய அவசியம் உனக்கு என்ன? நான் இப்போது சொல்லுகின்ற சொற்படி வாயை மூடிக்கொண்டு, அப்படி யிப்படிப் போகாமல் ஊரைப் பார்க்கத் தேரைத் திருப்பு. அடி மகராசி! உனக்கே கோடி புண்ணியமுண்டு. தயைசெய்து என் தாய்முகத்தில் விழிக்கச் செய்வாய். உனக்கு வேண்டியவையெல்லாம் தருகிறேன். நான் சொன்னசொல் மாறேன். சண்டை செய்யப் போகிறேனென்று என்னுயிருள்ளவரையிலும் இனிப்பதறிக்கூறேனென்று கதறிக்

கூறிய சிறுவன் மொழியை காண்டீபதரன் கேட்டு, அந்தோ! ஏது இனிக் காரியமில்லை. இவன் கருத்தைப் பார்க்குமிடத்துத் தேரைவிட்டுக் குதித்துப் புறமிட்டோடுவான்போலும் இருக்கிற தென்றெண்ணி, மறுபடியும் மனவெறுப்பில்லாமல் மன்னன் மகனை மகிழ்ந்து நோக்கி, அப்பா க்ஷத்திரியகுலாதிபனே! திரி லோகத்திலும் ஏகசக்ராதிபத்தியமும் ஆக்கினைச்சக்கரமுஞ் செல் லும்படி செய்து, இப்பொழுது நிரைநிரையாய் வந்தடர்ந்த பெருஞ் சேனைகளை ஒருகணையால் மாளச்செய்து, உன் சிந்தை மகிழ நிமிஷத்தில் திரும்பி வந்துவிடுவோம். நீ யாதொன்றுக் கும் பயப்படாதே. உன்னை நம்பிவந்த என்னை நீ திடமாக நம்பு. இந்தப் பகைவருடைய வாளாயுதம் வேலாயுதம் பாலாயுதம் குந் தாயுதம் சக்கராயுதம் வில் கணை முதலிய ஆயுதங்களெல்லாம் நெல்லிற் பதர்போல் நெருப்பெழப் புடைத்துச் சேனை யானை களைத் துடைத்துச் சயம்படைத்து மேன்மையாகத் திரும்பு வதை விட்டுக் கீர்த்தியைப் போக்கி விராடராஜன் பெற்ற பிரதா பத்தைப் பாழாக்கி எதிரிகளுக்கஞ்சி யோடினனென்னும் ஏளன மூண்டாக்கி, என் புகழையும் மண்ணைக்கி ஓடுவது தகுதியோ? உன் தாயாகிய சுதக்ஷணாதேவியும் உனக்கிளையாளாகிய உத்தரை யும் உன் பந்து மித்திர வர்க்கங்களும் உன்னிடம்வந்து வணங் கும் பணிப்பெண்களும் பட்டனத்தி லுண்டாகிய வெகு ஜனங்க ளும் நமதிளவரசனாகிய உத்தரகுமாரன் யுத்தத்திற்குப்போயிருக் கிறான்; சத்துருவை வென்று அவர்கள் கைக்கொண்ட பசு மந் தையைத் திருப்பி வருவானென்று மேகத்துளியை விரும்பும் பயிர்போல் வாட்டமுற்று வாய்திறந்து நீவரும்வழியைப் பார்த் திருப்பார்களே. அப்பேர்ப்பட்டவர்கட் கெதிரில் நீ எப்படிப் போய் விழிப்பாய்? என்ன சொல்லிசைப்பாய்? ஐயோ! இந்த அவமானத்தைப்பார்க்கிலும் நான்சொல்வது கசப்பா? நினைக்க நினைக்க எனக்கு வியசனஞ் ஜனிக்கிறதே. நான் பேடியான போதிலும் இதுவரைக்குந் தேர்விடுத்த போர்முகத்தில் யார் பிழைத்தார்கள்? கண்டதுண்டம்படக் கொன்று கைகண்டதன்றி சண்டைக்குப் பயந்தோடிய சங்கதியைப் பார்த்துமறியேன்; கதைகளிற் கேட்டு மறியேன். என்னுற் பிசகுவந்ததுமில்லை. என்னை நம்பியபேருக்கிடறுதந்ததுமில்லை. இப்போதுமென்ன? இதழ்விரிந்த மலர் செறிந்த மன முறைந்த, வரிநிறைந்த, தொடையணிந்த படைதிணிந்தபலவான்கள் அடங்கலும் விறு

விறென்று தலைசுழன்று தந்நிலை தெரியாமல் தயங்கும்படி இர தஞ்செலுத்துகின்ற என் கைச்சாதுரியத்தினுல் செல்வ மிகுந்த உங்கள் பசுமந்தையைத் திருப்பிக்கொள்வோம்; திடதைரிய தீர சிந்தை சிதையாமல் வா. நான் விடப்போகிற தேர்ச்சாகசத்தைப் பார். ஒருவேளை உனக்குச் சத்துருக்களாற் குற்றம் நேரிடுமாகில், உடனே உன்னுயிருக்கென்னுயிரைத்துணையாகக்கொடுக்கிறேன். நீ என்னை நம்பித் தேரிலுட்கார். எத்தனையோ கோடாகோடி சேனைகளென்று இருதயங்கலங்காதே. என்னும் எழுகடற்போற் படையெழுந்தெதிர்த்தாலும் பெரும்பொறைக் கடல்போற் பெயர்ந்து வந்தாலும் வரட்டுமென்று உறுதியாய் மனத்துணிவு பெறுவையாகில், தேவர்கள் மதித்துத் துதித்துச் செய்யும் ஆசீர்வசனமும் தீரலட்சுமியின் கருணைகடாட்சமும் பூதலத் தோர்காதலித்துப்புகழும்புகழ்ச்சியும் உனக்குண்டாமென்பதற்கு யாதொரு ஐயமில்லை. நீமாத்திரங் குருகுலநாயகன் பேரைக் குறித்து வில்வளைத்துக் குணத்தொனி யெழுப்பு. எழுமுன்னமே பெருங் காற்றிற்பறக்கு முருங்கைச் சருகுபோ லடித்து, வற்சல மத்தையைக் கைப்பிடித்து, கூஷணப்பொழுதில் உன்னை மச்ச தேசத்திற் கொண்டுபோய்விட்டு மறுவேலை பார்க்கிறேன். இன்னுரைக் கொல்லவேண்டும். இவ்வாறு வெல்லவேண்டும். இப்படிக்குச் செய்யவேண்டுமென்னும் வருத்தம் உனக்கு எவ்வளவும் வேண்டாம். நீ யஞ்சாதே. நன்மை தீமைக் குடன்பட்ட வென்னுடன் கூடிவாவென்று புத்தியிலுயர்ந்த பேடியானவள் மெத்தவும் மனம் வருந்திச் சொன்னுள்.

தன்னுற் கூடியமட்டும் உத்தரனுடைய மனதைக் கரைக்க உரைத்த வார்த்தை யத்தனையிலும் அணுவத்தனையேனு மவன் சித்தத்திற் பொருந்தாமல் யுத்தவீரந் திருந்தாமல் மானம்போ மென வருந்தாமல் வேரூன்றுந் தோன்றுமல் புறமிட்டோட நாணமல் புகழாபரணம் பூணமல் போக்கின்பேரில் நோக்கமுள் ளவனுய்ப் பெண்யானைகள் போன்ற எருமைகள் கரைபுரள விழித்துக் கன்றைநினைந்து மடிசுரந்து வழியப்பொழிகின்ற பாலானது காலில்வீழ்ந்து சென்று மேலாகிய நெற்பயிரிற் பாய, அப்பயிர் கற்பகம்போற் றழைத்துக் கதிருடன் சாயும் வளம் பொருந்திய மச்சநாட்டுக் கதிபதியாகிய விராடகுமாரன் பெரு மூச்செறிந்து, பேச்சுந் தளர்ந்து பேடியை நோக்கிப் பேசத் தொடங்கினுன்.

அடிமோசக்காரி! நான் எத்தனவிதத்திற் சொன்னலும் எள்ளத்தனையுந் தெரிந்துகொள்ளச் சக்தி உனக்கில்லை. உன் சுயபுத்தியாற் துணிவு பெறுவையென்றாலோ அதுவுமில்லை. சொற்புத்தியுஞ் சுயபுத்தியுமில்லாத துஷ்டியைத் துணைகொண்டு சண்டைக்குப்போகலாமா? இவ்விடத்தில் மேகம்போற் கவிந்த துரியோதனனுடைய சேனைக்கெதிரில் யுத்தஞ்செய்யத் தெரியாத என்னைக் கொண்டுபோய்விட்டு நீ வெற்றி பெறலாமென்றெண்ணினையோ? நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்க்கக் கூடுமோ? அதற்கு நான் ஆளல்லவே. என்னைப் பெற்றவனுலும் அவனைப்பெற்ற பாட்டனுலும் தனுர்வேதங்கற்ற சாதுரியராலுலும் இந்தப் படையை வெல்ல வல்லமை யிருக்குமா? சொல்லடி பெருமூடி. புத்திகெட்ட பேதையே! உனக்கென்ன தெரியும்? நீயென்ன அறிவாய்? மறுமன்னர்க் குண்டாகிய வுறுதியும் போர்மேற் செல்லும் திறமும் காலபலமும் காரியாகாரியங்களுந் தெரியாத கயவருக்கென்ன சொன்னலுங் கண்டறியமாட்டார்கள். ஐயோ! ஈதென்ன பாவம். அடி ஏண்டி! பழிசுமந்துகொள்ளுகிறுய்? வேண்டாமடி பாவி. நான் சொல்வதை இன்னங்கேளடி லோபி. படமுடைய பாம்புக்கொடி படைத்த பார்த்தீபனுடன் சத்தியவிரத சரதநெறி பெற்ற சாந்தரும் வெற்றிவேலேந்திய வேந்தரும் மூனந்து சண்டைசெய்யும் போர்முகத்தில் குற்றமற்ற தனுர்வேதங் கற்றவருங் கால்வைக்கமாட்டார்களே. நமனும் எட்டிப்பார்க்க நடுங்கிக்கண் கலங்குவானே. அப்பேர்ப்பட்ட வதிரதர்களுக்குமுன் விற்பிடிக்க வறியாச் சிறுவனுகிய வென்னைக் கொண்டுபோய்விட்டுச் சண்டைபோடென்பது தகுதியோ? அவர்கட்கெதிரில் நானெப்படிப்போய்நிற்பேன். என்ன யுத்தம்பண்ணுவேன்? நல்லது, உன்பேச்சை நம்பி நானெதிர்த்தபோதிலும் தொலைதூரத்திலிருந்து பாணம் விடுப்பேன். நானொருகணை விடுக்குமுன்னமே அவர்கள்ஓராயிரங்கணை தொடுப்பார்களே. அவர்களெய்யு மம்பினுல் உன்கையும் மெய்யும் கலங்கி முதற்பலியாய் நீ விழுவையே. உன்னைக் காக்கும் வல்லபம் என்றனக் கில்லையே. அப்பால் நான்செய்வதென்ன? அடி தப்பரைக்காரி! பிற்பாடு என் தேருஞ் சாரதியுங் குதிரையு மொழிந்து, வில்லுந் துணிந்து நானு மழிந்துபோனுல் வெற்றி எவர்பக்ஷமாகும்? ஒருவேளை தெய்வச்செயலால் தப்பிப்பிழைத்தால் நம்மைத் துரிதக்கணை ஏவித் துரத்தியடிப்பார்களே. அதனுல் துய

ரிழந்து அருமையான தேகம் அலக்கழிந்து கால்நடுங்கிக் கை நடுங்கிக் கண்கலங்கிப் புண்கள்பட்டுக் கருத்தழிந்து விழுந்து புரண்டெழுந்து உள்ளங்கால் சிவக்க உரங்கெட்டோடி, மச்ச நாட்டிற்போய்ச் சேர்ந்து வாடி வருந்துவது உனக்கிச்சையோ? அது உனக்கு லச்சையோ? அதனலுனக்கிகழ்ச்சியோ? நிதானித் துப்பாரடி. இதைவிட நான் சொல்லுவதைக் கேளடி. நாமேறி வந்த ரதம் மூறியாமல் வில்லழியாமல் குதிரை சாகாமல் நீயுமடி யாமல் நானடிபடாமல் ஒரு குறைவில்லாமல் உயிருடன் திரும்பி வெற்றியடையார்போல் மீண்டும் ஊர்புகுவது பெருமையோ? சிறுமையோ? யோசித்துச் சொல்லடி உயிரழிக்கும் பேடி! என்று பற்பலவிதமாகப்பேசி மலையருவிபோற் கண்ணீருகுத்து உண் ணீருலர்ந்துள்ளமுழுகி கொடியபாவியாகிய விந்தப்பேடி நம் மைப் பிராணனுடன் விடமாட்டாள் குடிகேடியென்றுயோசித்து கைபிடித்த வில்லையும், அம்பரூத்தூணியையும் வீரகண்டையை யும் தேர்மேல் போட்டுவிட்டுப் பின்புறமாய்ப் பூமியிற்பாய்ந்து ஓடினன். வாரணப்போர்மூனவெல்லப் பூரணவாண்மை பெரூத விராடகுமாரன் தேர்விட்டிழிந்தோடுவதைக்கருணைக்கடற்கொரு முதலாகிய அருச்சுனன் கண்டு, பச்சாதாபப்பட்டுக் குதிரைக் கடி வாளத்தைத் தேர்க்காலிற்கட்டிவிட்டு, நிலத்திற்குதித்து இளைத் தோடுகின்ற உத்தரகுமாரனைப் பின்தொடர்ந்தான். திரண்ட கற் றூணையொத்த புஜபல ஜயசிங்க விஜயன் உத்தரகுமாரனுக்குப் பின்னெடியபோது, நந்தியாவட்டமாலையணிந்த துரியோதன னுடைய படைமன்னர் பார்த்துச் சங்கதி தெரியாதவர்களாய் ஓவென்று சமுத்திரம்போ லிரைந்து தங்களிற்றூங்களே பொங்கி மகிழ்ந்து கைகொட்டிக் கலீரென்று நகைத்தார்கள். அந்தவேளை யிற் சிவந்தகண்களையுடைய வீஷ்டுமாச்சாரியரும் மற்றைப் பெரி யோர்களும் தமது விவேகத்தால் நிதானித்து நமக்கெதிராக வந்து தேரைவிட்டோடுஞ் சிறுவனைத் தொடர்ந்து செல்லுஞ் சாரதியைக் கூர்ந்து யோசித்தால், விசாலமாக நீண்ட விழிப் பார்வையும், ஏறுநெற்றியும், ஆஜானுபாகுவாகிய தூணைக்கரமும், வஜ்ரமலைபோன்ற மார்பும், பச்சைவர்ணத்தாமரைமலரையொத்த முகமும், பருத்தவிடையும், கனத்ததொடையும், சிவந்தபாதமும், சிரித்த நகையுமுள்ள சிலைவிஜயனைப்போற் றோன்றுகின்றது. ஆனல், அணிந்திருக்குங் காதோலையினலும், தினிந்திருக்கும் ஆபரணங்களினலும் கலகலக்கும் வளையல்களினலும்கட்டியிருக்

கும் புடவையினாலும், பின்புறமுடித்தகொண்டையினாலும், முன் புறு மைவிழிக்கெண்டையினாலும்பெண் ணுருவாய்க்காண்கிறது. ஆகையால் பெண்ணுருவென்றும் ஆணுருவென்றும் பெண் ணும் ஆணுமல்லாத பேடியுருவென்றும் எப்படிப் பேசலாம்? ஈதன்றியும் முத்துச்சரக்குடைகள் பத்திபத்தியாகசிறந்த விராட நகரத்திலிருந்து ஒற்றைத்தேர் புறப்பட்டது. அந்தத் தேரிற் பொருந்தியிருந்தவன் சிறுபிள்ளையாகத் தோன்றினன். அவன் நம்முடன் யுத்தஞ்செய்ய வந்தவன்போலு மிருக்கிறது. அவ னுக்குத் தேர்விடுஞ் சாரதி ஆனென்றும் பெண்ணென்றுந்தெரி யாமற் சந்தேகமாயிருக்கிறது. அவர்களின்னரென்றும் இன்ன காரணமாக வந்தார்களென்றும் எடுத்துரைப்பார்யாருமில்லையே. அந்தோ! இந்தச் சூதை எவ்வாறறியலாம்? எப்படிஉணரலாம்? ஈதென்னசூதோ? இனி விளையப்போகிறதென்னவாதோ? என்று மனமுறுகி, மறுபடியுந் தெளிந்து, ஆலோசனைச் சங்கங்கூடி, அவரவர்களும் நாடி ஸ்திரமாய்ச் சொல்லலுற்றார்கள்.

திரிகர்த்த தேசவாசனை சுசர்மாவென்பன் விராட நகரத் திற்குத் தக்ஷிணபாரிசத்தடைந்து, பசுக்கூட்டங்களை ஓட்டிய காலையில் விராடராஜன் துடித்து மலைபோற்றிரண்ட தனது தோள்மேலடித்து வைரங்கொண்டு பற்கடித்து விற்பிடித்து நால்வகைத்தானையுடனடைந்து எதிரியையடைந்து எவரையும் வென்று தங்கள் பசுநிரையைக் கைக்கொண்டு மண்ணுலகத் தோரும் விண்ணுலகத்தோருங் கொண்டாடும்படி ஜயம்பெற்றவ ராகவேண்டும். பாண்டுமைந்தரைவரும் இப்பதியிலிருந்தார்க ளென்பதற்குச் சந்தேகம்வேண்டுவதில்லை. மச்சராஜன் தக்ஷிண திசையிற் சண்டைக்குப் போம்போது, உத்தரகுமாரனென்னும் இளங்காளையை விட்டு மற்றப் பிள்ளைகளுடனும் அஞ்ஞாத வாசஞ் செய்வதற்கு மாறுவேஷத்துட னமர்ந்திருந்த தரும ராஜன், வீமசேனன், நகுலன், சகாதேவனுடனும் சென்றிருக்க வேண்டும். ஊர்வசி சாபம் பெற்ற பேடியுருவத்துடன் வெளிப் புறப்பட வெட்கப்பட்டு ராஜகன்னிகைக்கு நாட்டியம் பழக்கின நபுஞ்சகனைவன் நரனாகவேண்டும். நாமெல்லோருந் திரண்டு சமுத்திரம்போற் புரண்டு மச்சநாட்டின் வடதிசை யடைந்து வீட்டை நாட்டை வேகக்கொளுத்தி மாட்டைக்கூட்டி மடக்கிய வன்மையைத் தூதர்களோடித் துயருடன்சொல்ல, வில்வேளைப் போல் வீட்டில்இருந்துகேட்ட உத்தரகுமாரன் விசனமடைந்து

கண்சிவப்பேறி, என் தந்தைமாருந் தமையன்மாரும் இல்லாத சமயம் பார்த்து வந்தார்களே எனக்கொரு சாரதியும் இல்லையே யென்று தயங்கிச் சோர்வடைந்தவனுகவேண்டும். இக்காரியங் களைக் கேள்விப்பட்ட அர்ச்சுனராஜன் எக்களிப்புட னெழுந்து, பயிர்க்கொல்லைக்குத் திருஷ்டிப்பரிகாரமாகச் செய்துவைத்திருக் கும் புல்லாடவனையொத்த உத்தரகுமாரனுக்கும் போர்க்கோலஞ் செய்து, தானே சாரத்தியம்பண்ணச் சமைந்தவனுகவேண்டும். அந்தப் பேடி பேசிய சாதுரியவசனச் சமர்த்திலுலும், உறுதி யூக்கமுடைமையிலுலும் தான் சிறுவனுனதிலுலும் முன்பின் ணைண்ணிப் பாராமல் எதிரியைத் தன்னையுமெண்ணுமல் மானபி மானத்தையு மதியாமல் "இளங்கன்று பயமறியா தென்பது போல்" தேர்மேலேறிப் போர்புரிய வந்திருப்பான். இதுவே நிச்சயம். இதற்குவேருக நினைக்கவேண்டியதில்லை. அப்படி வந்த உத்தரகுமாரன் கங்குகரைகாணுத நமதுசேனைகளைப்பார்த் துக் கருப்பமுமனமுங் கண்ணுங்கலங்கித், தான் நினைத்த சண் டைநினைப்பையு மறந்து, தாய்தந்தையரிடத்தில் உரைத்ததைரி யத்தையுந் துறந்து, வாட்டத்துடன் ஓட்டங்கொள்ள நினைத்த வனுகவேண்டும். அவன் மடமையைத் தெரிந்து சாரதி சொல்ல வேண்டிய கடமையையும் தீரவீரத் திறமையையும் இராஜமுறை மையையுந் தெளிவுறச்சொல்லித் தேற்றியுந் தேராதவனைத் தேர் விட்டிழிந்து உயிர்க்குறுதிதேடி ஊரைப்பார்த்தோடுகிருன். அதி பயங்கொண்டோடுகின்ற விராடகுமாரனைச் சாரதியாகிய பேடி நோக்கிப் பின்தொடர்ந் தோடுகிருள். இதுதான் இப்பொழுது நடந்திருக்கிற காரியமென்று ஆலோசனைச் சங்கமாகக்கூடிய யாவருந் தங்கள்பேரறிவினுல் நிச்சயித்தார்கள். இவர்கள் நிதா னத்தைக்கேட்ட சுயோதனனும் அவன் மனதிற்கிசைந்த மன் னவர்களும் பயங்கொண்டு, இருதயத்திற் பசுமரத்தாணிபோற் பதிந்து காதினுழைந்த நாராசமெனநலிந்து என்னமோ ஏதோ வென்று பிராந்தியாற் பதைத்தோடுகின்ற உத்தரகுமாரனைக் கண் ணைச் சிமிட்டாமல் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள்.

இப்படியிருக்க, ஊர்முகமாயோடிய உத்தரகுமாரனைப் பிடிக் கப்போன பேடியானவள் கூணைப்பொழுதிற் சென்று, எதிர் நின்று மறித்து, அவனுடைய முன்கையைத் தொட்டிழுப்பதற் கஞ்சினுள். அதேனெனில், வீரப்பிரதாபமென்மையில்லாதவேந் தனுலும் தான் சாரதித்தொழிற்கிசைந்த வண்மையினுல் எஜ

மானன் கைதொடுவது மரியாதையல்லவென் றிருந்தாள். இப் பால் எமபாசம்போல் இருகரத்தையும் விரித்துத் தடுத்தெதிர் நின்ற பேடியைப் பிதிர்கலங்கியோடுகின்ற உத்தரகுமாரன்கண்டு மதிமயங்கித் தியங்கி வதங்கி வாடி, அடிபேடி! குடிகேடி! நிர் மூடி! இன்னும் என்னை விடாயா? கொடி சூலி! என்னைப் பூனை யைக்கண்ட நிளிபோலும், பூதத்தைப் பார்த்த வுயிர்போலும் பயத்து மெய்நடுங்கி யுளறிப்பேசுகின்ற உத்தரனை பேடிவேடப் பிரதாபன் பார்த்து இளவரசான இறைவனே! உன்னைத் துணை யாக நம்பித் தேர் செலுத்திவந்த என்னை யோசிக்குமிடத்தில், வினையைத் துணையாக நம்பிய வீணர்களை பொத்தேனென்று வெறுத்துச் சற்றுநேரம் பொறுத்து, ஆஹா அரசிளங்கன்றே! இப்படியுஞ் செய்யலாமாவென்றிசைத்தாள். அவள் பேச்சைக் கேட்டுக் கலகலத்த உத்தரகுமாரன் அந்தப்பேடியின்முகத்தைப் பாராமல், நிலத்தைப் பார்த்து, நெடுமூச்செறிந்து. திக்குமுக் காடித் திடுக்கிட்டோடிக் கண்ணீர் சொரியவும் விடவிடவென்று கைகால் நடுங்கவும், முத்துபோல் வேர்வை முகத்திற் றுளிக்க வும், எண்ணங்குலையவும், இதயந்துடிக்கவும், மல்லுந் தளரச் சொல்லுங் குளறவெருண்டு விம்மிச் சொல்லலுற்றான்.

அடி சீமாட்டி! இவ்வுலக வாழ்க்கையை விரும்பிய உயிரா னது நமனைக்கண்டு நடுக்கங்கொள்வதுபோல் உன்னைக் கண்டு ஓடுங்கிவிட்டேன். அடிபேடி! நான் சொல்லும் நன்மையைக் கேளடி. யான் பிள்ளையாகப் பிறந்த அந்நாள்முதல் இந்நாள் வரையிலும் தாய்தந்தையரை விட்டுப் பிரியாத தனயனடி. நான் போர்க்கோலங்கொண்டு தேரேறிவரும்போது என்னைப்பெற்ற சுதக்ஷணதேவி என்முகம்நாடித்தன்முகம்வாடி வாசற்படிவந்து வழிவிட்டாளே; அவளுடைய மனமும்வயிறும் எப்படி வருந்தி யதோ? என்ன திகிலடைந்ததோ? நானறியேன், சிறியேன். அவளப்படி அவலமுற்றிருக்க நான் இவ்விடத்திற்சேனைகளைக் கொன்றுவென்று விஜயத்துடன் திரும்பினால் தாய் வயிறெரியச் சம்பிரமங் கொண்டாடுந் தலைதலையர்களில் நான் ஒரு பாவியல் லவோ? அடி சதிகாரி! உனக்கு வெகுகோடி புண்ணியமுண்டு. கண்ணியமுண்டு சுகிர்தமுண்டுசுபமுண்டு. நான்வந்தசந்தோஷ மாரூமற் கொண்டுபோய் விராடநகரத்திற் சேர்த்துவிடுவை யாகில், என் தாய் தந்தையின் பக்ஷம் உன்பேரி லதிகமாயுண்டா கும். அவர்களுனக்கு வெகுமானஞ்செய்யுமுன்னமே யானே தேர்

குதிரை ஆடை ஆபரணங்களும் அடியேன் கொடுக்கிறேன். அடிபேடி! உன்னை நான் கனவிலுமறவேன். நீயும் நானும் உடலிரண்டு உயிரொன்றென மிகவும்ஒருமையாயிருப்போம். எக்காலமும் உன்பேர் விளங்கும்படியாக இவ்வுலகிலுன் உபகாரச் செய்கையைவ்வதாபித்து என்னிஷ்டதெய்வமாகஉன்னைக்கொண்டாடுவேன். நான்மாத்திரம் நகரம்போய்ச் சேர்வேனுகில் மன்னரையடக்கி மாட்டைமடக்கிப் பின்னமில்லாச் ஜயம்பெற்றதுபோல் ஆவேனடி. அடியுத்தமி! ஏதோ என்மனங்கலவரப்படுகின்றது. இன்னொருதரம் என்தாயைப்பார்க்க விச்சைமேலிடுகிறது. மச்சநாடுபோய்த் திரும்பிவராமல் சண்டைக்கடியெடுத்துவைக்கமாட்டேன். என்மண்டைக்கு ஓலைகொண்டுவந்த கொடும்பாவி! கண்மூடித் திறக்குமுன்னம் பட்டினம்போய்ச் சேரடி. ஐயோ! குலைதுடிக்கிறதே. கரைந்துருகிய என்னைக்காரடி. அடிபேடி! நீ என்பங்கிற்கு அஷ்டமத்துச் சனிபோல் எங்கிருந்து வந்தாயடி? நீயாரடி? ஒட்டா, உறவா? ஒன்றுமில்லையே. ஆயினும் இவ்வேளை நீதான் எனக்குத் தாயடி. இரும்போ கருங்கல்லோ உன்னிதயமடி. சண்டாளி! எனக்கும் உனக்கும் என்னபகையடி. எங்களுக்குத் தெரியாத ஜென்மப்பகையுண்டோ? தாகூண்யம் வையடி. தைரியம் சொல்லடி. நீ எனக்குச் செய்யும் உபகாரம் நன்மை தீமை யிரண்டும் வேண்டாம். ஓடிப்போம் என்னைத் தடுக்காமல் விட்டுவிடுவதே கோடிபுண்ணியமடியென்று இவ்வாறு பற்பல விதமாகக்கூறி, இச்சனியைத் தப்பியோடுவதற்கு வழியில்லையே என்று மிரளமிரள விழித்து வெம்பும் விராடபுத்திரனை விஜயன்பார்த்து மெத்த விசனப்பட்டு, ஏதேது இனித் திரும்பான் என்று எண்ணியபோதிலும் இப்போது இவனை விடப்படாது. மற்றொருவிதத்தால் மனந்தேறச் செய்வோமென்று உத்தரகுமாரனைநோக்கி, விராடராஜபுத்திரனுகிய உத்தமனே! உனக்கு நித்தியவாழ்வைத் தரவேண்டுமென் றெண்ணியிருந்த எண்ணத்தையுங் கெடுத்து, நீயும் மயங்கிப்போய்விட்டாய். போனதுபோகட்டும். இனியாவது செவ்வைபடும்படி உன் சித்தப்பிரமையை விட்டுவிடு. நான் சொல்லப்போகிற உறுதிமொழியைக் கேட்டு உன்மனதைத்தேற்றி என்மனம்போல் இசைந்துவருவையாகில் மேலானதிறம்பெற்ற வில்வல்லவர்களினுஞ்சிறந்தவன் நீயென்று யாவரும் மதிக்க உன்னை முதன்மையாக்கி, இப்பொழுது நேரிட்டிருக்குஞ் சத்துருக்கள் வாடும்படியாய் மாட்டி பசுமந்தைகளை

யெல்லாங் கூட்டி, பெருங்கீர்த்தியை நிலைநாட்டி விராடபுரம் போய்ச்சேர்வோம். இவ்வாறுஜயம்பெறுவதற்குமுன் மனந்தளர்ந்து வந்தவழியே திரும்பியோடுவதைக் கண்டால் என்னைப்போலொத்தவர்கள் ஏளனஞ் செய்யார்களா? ஓ இராஜபுதல்வனே! பேடியென்றென்னைப் பிழைபடநினையாதே. நீ எப்போது ஜயங்கொண்டுவருவாயென்று உன்வரவை எதிர்ப்பார்த்திருக்கும் உன் தாயுந்தந்தையும்பந்துக்களும் சந்தோஷத்துடன் உன்னைத்தழுவவும் அன்பினலுருகிப் பேரானந்தக்கண்ணீர்பெருகமுத்தந்தரவும் பொன்னுலகத்திற்கினையாகிய உன்னுலகத்தார் யாவரும் என்னையும் உன்னையும் புகழ்ந்து மகிழ்ந்துவந்து எதிர்கொள்ளவும் மலையாகிய கீர்த்தியைவளர்த்து, நிலையாகிய ஜயத்தை விளைத்து, ஒருநிமிஷத்திற்குநிமிஷம் ஜயம்பெறுகின்ற விஜயனென்றென்னைப் பலரும் நினைக்கவும், மந்திரகிரியா லலைப்பட்ட பாற்கடல்போல் பகைஞர் சேனைக்கடலைப் படுபாழாகக்கலக்கியடித்து கருந்தூள் செந்தூள் எழும்ப முடித்து, நீடுழி வாழ்வை உனக்கு நிலைபெறச்செய்வேன். மச்சகுலாதிபன் மாதவப்பேறே! நீ இச்சொல்லுக்கிணங்கிச் சப்தமாவென்னும் பச்சைப்புரவித் தேர்க்கொப்பாகிய அச்சுவச்சிரத்தால் அமைத்திட்ட நமதுச்சிதத் தேர்மேலிருந்து, அச்சமில்லாமற் சாரதி தொழிலாகிலுஞ் செய்வையாகில், முச்சகங் கொண்டாடும் முதன்மையைப் பெறலாம். இதற்காகிலும் உடன்பட்டு வருகின்றாயாவென்று போருக்கு முதற்பாதமான பேடி கேட்க, உத்தரகுமாரன் சற்றுழ்ந்து யோசித்து நிதானித்து நாம் தனித்திவள்கையிற் சிக்கிக்கொண்டோம். என்னமோ காலகதி யின்னதென்று தெரியவில்லை. நாம் போர்செய்வோமென்று புறப்பட்டவேளை எப்படிப்பட்டதோ? இன்றுதயத்தில் யார்முகத்தில் விழித்தோமோ? இந்தப் பேடிப்பாவி நமக்கு எமன்போல் வந்து சேர்ந்தாளே. இவள் நம்மை உயிருடன் விடாள்போலுமிருக்கிறதே. எதிரியைப் பார்க்கப் பார்க்கப் பயமேலிட்டு நடுங்குகிறதே. ஐயோ! வாய்க்கொழுப்புச் சீலையில் வடிந்ததுபோல, என் வாய்ச்சொல்லே எனக் கிடர் விளைத்துவிட்டதே. இனி தெய்வச்செயல் எப்படியோ தெரியேன். தாய்தந்தைதேடிய தவம் இதுதானே? தர்மந் தலைகாக்குமென்பது பொய்யோ? இந்த நபுஞ்சகியானவள் ஜயம்பெறுகிறவில்வல்லபத் தீரர்களைப்போற்பேசுகின்றாளே. பயமின்றி சாரத்திய தொழிலாவது பண்ணென்று பகர்கின்றாளே. இதற்கும்

மாட்டேனென்று குதர்க்கம்பேசுவது தகுதியல்லவே. நல்லது உள்ளபடியாகிறது. நாமுங் கொஞ்சம் சாரதிசாஸ்திரம் பார்த்திருக்கின்றோமே. ஆதலால் தேர்விடுந் தொழிற் கிசைந்து கொண்டால் போர்முனைபுகுந்த பேடியைந்தெரிந்துசமயத்திற்கு தக்கபடி பார்த்துக்கொள்ளுவோமென்று ஒருவாறு உடன்பட்டு நடுக்கமும் எக்கமுநீங்கி, ஊக்கமேலிட்டு உள்ளந்தேறித் திடுக்கிடமூடுக்குஞ்சிங்கம்போற்சீறி வீரப்பார்வைகாட்டி அடிசீமாட்டி! உனக்கும் எனக்கும் ஏதோவொரு சம்பந்தமுண்டாயிருக்கிறது. அதின்னதென்றுந் தெரியவில்லை உன்னிஷ்டப்படியே ஒப்புக் கொண்டேன். என்னிடத்திற்றப்பொப்பிருந்தாலும் நீயேசகிக்க வேண்டுமென்று உத்தரகுமாரன் உரைத்தான். பேடியானவள் சித்தமகிழ்ந்து திரும்பி, உத்தரனுந் தானும் ஒருமையுடனேடி வந்து தேர்மேலேறிக் கடிவாளம்பிடித்துக் குதிரைகளை மூடுக்கச் செய்து, அதிரதனுகிய அருச்சுனன் நாயகனுக வமர்ந்து பூர்வ புண்ணியப்பலனிப்போது கூடியதென்றுகளித்து வில்லும்பாண முங் கரத்திலேந்தி, வேந்தனுன உத்தரகுமாரனுக்குத் தைரியஞ் சொல்லி ஐயா விராடகுமாரனே! நமக்கு நேர்வடக்கிருக்கும் ருத்திரபூமியில் சாமுண்டி சந்நிதானத்திலிருக்கும் வன்னிமரத் திற்குநேராக நமது தேரைச்செலுத்தென்றுள். அவள் சொல்லி யடங்குமுன்னமே என்னமோ காரணந் தெரியவில்லையென்று எண்ணிப் பொன்மயத்தேரை வன்னிமரத்திசையிலோட்டினுன். இந்தச்சங்கதிஇவ்விடத்திலிருப்படியிருக்க நேராகவடதிசையை நாடிவந்த தேரானது மாறி வடகிழக்கிற் போவதைத் துரியோ தனன் முதலிய பெரியோர்கள் பார்த்து நமது படையின்மீது லக்ஷியம்வைத்து வருகின்றவன் அர்ச்சுனனல்லது மற்றொருவ னுமல்ல, அன்னியரென்னுஞ் சந்தேகம் வேண்டியதில்லை. அவனைப் பேடியென்று மதித்தது நமது பேதமைத்தனமென் றெண்ணிப் போர்முனைவிட்டோடிப் புத்தி மழுங்கிப் பொறி புலன் குன்றிக் கண்கலங்கிக் கவலைகொண்டார்கள். உடனே அனர்த்தமான அவசகுனங்கள்விளைந்தன. இவற்றையெல்லாந் துரோணசாரியர் கண்டு யோசித்து விசனப்பட்டு அரவக்கொடி படைத்த அண்ணலுக்குச் சொல்லுகின்றார்.

மதிமரபுற்ற வணங்காமுடிபெற்ற மகிபனே! யான்சொல்லு கிறதைக் கேள். வானமுழுது மதிர்ந்து, திக்கெட்டுங் கம்பித மெழுந்து, பகற்காலத்தில் நக்ஷத்திரமுதிர்ந்து, மேகம் இரத்த

மழை பொழிந்து, பூமாலைகள் கரிந்து, புலால் நாற்ற மிகுந்து, யானை குதிரைகள் கண்ணீர் சொரிந்து, பருந்துங் காக்கையும் பறந்து மேல்வீழ்ந்து, நாயும் நரியும் புரண்டோலையிட்டுக், கழுகுங் கூளியும் கவிந்து நிறைந்து, ஆயுதமுனைக ளனற்புகை மலியச், சேனைகள் தியங்கித் திடுக்கிட்டலையப் பற்பல துர்ச்சகுனங்களுண்டாகியதை யோசிக்குமிடத்தில், சகுன சாஸ்திரப்படி இராஜனுக்குத் தீங்கும் அபஜயமும் விளையுமென்பதற்குச் சந்தேகமில்லை. சாஸ்திரந் தப்பென்றெண்ணுமல், நீ முன்னாக்கி ரதைபடவேண்டுமென்றுரைத்து, வீஷ்டுமாச்சாரியர் கிருபாசாரியர் முதலிய மேலோரைநோக்கி விளம்புகின்றார்.

ஓ அதிரத மகரத சமரதத்தலைவர்களே! சமுத்திரம்போற் பரவிய நமது வீரர்கட்கெதிரில், ஒற்றைத்தேர் செலுத்தி வருகிறவுறுதியுணர்ந்தீர்களே. அவன் நமது எண்ணிறந்தசேனைகளையு மொருகணையால் வெற்றிபெறத்தக்க வீரப்பிரதாபனல்லாவிடிற் றனியொருவனுய்த் தனித்துவருவானே? ஆதலின் நம்முடன் நிர்ப்பவர்களில்லையென்று இறுமாந்து வாய்மதம்பேசி மகிழ்ந்து திரிவது தகுதியன்று. சுத்தவீரர்கள் தங்கள் தங்கள் படைகளையணிவகுத்துக்கொள்வதே உத்தமம். தக்ஷிணநிறைமீட்சிக்குச் சென்ற திரிகர்த்தனையிகழ்ந்த சாதுரியவான்களே! தமது தேகமழிந்தாலும் பிராணனொழிந்தாலும் மடக்கியமாட்டைவிடாமல் தீரவீரத்திடங்காட்டிச் ஜயம்பெறுவதே திடவான்கட்குரிய கடனுமென்றுரைத்து, யானை, குதிரை தேர் காலாட்களையணிபெற வகுத்து இடைக்கிடை படைத்தலைவர்களை நிறுத்தி அவர்கட்கு நடுவிற் பசுமந்தையை மடக்கி வைத்துக்கொண்டு கட்டுக்காவல் திட்டப்படுத்தி மட்டுப்படாத தனுர்வேத வரோதயனின்றான். இத்திறமோர்ந்த இராஜவீரர்களனைவரும் இனி யிந்தப் பசுநிறையைக் கவர்வாருமுண்டோ வென்றிரைந்துபேசிக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் தேவர்கள் கொண்டாடுஞ் சத்திய விரத வுத்தமனாகிய வீஷ்டுமாசாரியின் முகக்குறிப்பைத் துரோணாசாரியருணர்ந்து தேவரீரெண்ணிய கருத்துக்குத் திருகில்லை. வருகிறவன் அருச்சுனனே. வாளாண்மை வில்லாண்மையிற்சிறந்த குருகுலச் சேனையை மதியாதவனுய் ஒண்டித் தேருடன் வெளிப்பட்டிருக்கிறான். இவன் வருவதைப் பார்த்தால் சூரபத்மன்மேலெதிர்த்த சுப்பிரமணியக்கடவுள்போலிருக்கிறது. இதில் யார் யார் மாள்வார்களோ? யார் யார் பிழைப்பார்களோ? என்ன அனர்த்தம்விளை

யுமோ? அறியேனென்றுரைக்க, அவரை அர்ச்சுனன்பேரில் உள் ளன்புடைய வீஷ்டுமாசார்ரியர் பார்த்து, ஓவீரர்கள் மதிக்கும் வில் லாசிரியனே! பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் பண்ணவேண்டிய ஒருவருடமுங் கழித்து வெளிப்பட்டிருப்பார்களா? அல்ல துமாடு பிடி சண்டையென்று மகிழ்ந்து கோபத்தினுல் வெளிப்பட்டிருப் பார்களா? ஒருவேளை காலவளவைக் கடந்து அவசரப்பட்டிருப் பார்களானுல் மேல்நடக்கவேண்டியதென்னென்று வேந்தர்சபை யில் நியமித்தநிபந்தனையை சிந்தித்துப்பார்த்தேனன்றி வேறொரு ன்றும் நினைக்கவில்லையென்று இருவருங்கலந்துபேசிக்கொண்டு துரியோதனனிடத்தில் தாங்களெண்ணிய கருத்தைக்காட்டாமல் வேறுவிதமாய் விளம்ப நினைத்து,வாருங் குருகுலசிந்தாமணியே! எதிரியுடனெதிர்த்துப் போர்புரியத்தக்க நாள் இன்றேயென்றந் தப்பாண்டவர்களிதுவரையிலும்பொறுத்தனுபவித்தகடவனுள் முழுவதும் போக்கிப் புறப்பட்டார்போலுங் காண்கிறதென்று வீஷ்டுமர் புகல, அம்மொழியைக் கேட்ட தநுர்வேத சம்பன்ன ரானவர் தெவிட்டாவமிர்தமுண்ட தேவர்போற்களித்து ஒருவச னஞ் செப்புகின்றார்.

ஐயா மதிகுலவரோதய விரதசிகாமணியே! இவ்விடமிருக் கும் நமது சேனையைநாடி ஒருவில்லுடன் தேர் செலுத்திவரும் ஒருவன் திறத்தையுன்னில் ஒருபுருஷசிங்கமானது வெகுகாலங் குகைக்குளடங்கிப் பரிதாபத்தா லிளைத்து நற்காலம் நேரிடுநிற வரையிலும் வாட்டமுற்றிருந்து, கடகுஞ்சரக் கூட்டங்களைக் கண்டுகளித்துத் தாவியெழுந்து, வருவதைப்போ லிருக்கிறது. கறைமிடற் றண்ணலாகிய பிறைமுடிப் பிஞ்ஞகனளித்த பாசு பதாஸ்திரம்பெற்ற பார்த்தனை யெதிர்த்துப் போரிடும் வில்வீரர் கள் இந்தத் தொல்லுலகில்லை. வெயிலுக்கிணையாக மின்மினி பிரகாசிக்குமோ? சொல்லுங்களென்று துரோணாசாரியர் விளம் பினர். அச்சொல்லாகிய நாராசமானது கர்னன் காதில் நுழை ந்தமாத்திரத்தில் செயலுஞ் சிந்தையுந் திகைத்து நொந்து வாயுங்கண்ணும் வறண்டு புகைந்து வேசாறி யுள்ளம் வெந்து வெகுளி மிகுந்து வில்வேதந் தெரிந்த வேதியரைப் பார்த்து இருகண்களுஞ் சிவந்து, ஓ துரோணாசாரி! இப்போதென்ன சொன்னையென்று கருவி, அங்கிருந்த மணிமகுட மன்னரெல் லாங் கூசி மடங்கவும் தடவிகட குஞ்சரவீரர்கள் வாய்பேசாம லொடுங்கவும் சுற்றுமுற்ற மற்றச்சேனைகள் குலுகுலந் தேங்கவும்

மிக்க இறுமாப்புடன் ஒருத்தரஞ் சொன்னன். ஆஹா தநுர் வேதியனே! தநுர்வேதமொழிந்ததன்மமுணர்ந்தாயா? "நன்மை கடைப்பிடி; நன்றி மறவேல்" என்பதல்லவா? கோடி மகுட மன்னர் வந்து வணங்கும் மகா மண்டலேஸ்வரனுகிய சர்ப்பக் கொடிதரித்த துரியோதனராஜன் உன்னிடத்திற் பக்ஷம்வைத்து இராஜ வைபவ வலங்கார வணிமணிப் பணியாடையும் வீர பட்டமும் பெருமையுங் கொடுத்துச், சவுக்கியபோசன சம்பிரமத் துடன் சீர்பெறச் செய்து உன்னுடைய உதவியினுல் வெற்றிகள் பெற்றுக்கொள்ளலாமென்னு மாசையை மிகுதியும் வைத்திருந் தான். நானும் அஃது உத்தமமென்றெண்ணினேன். இப் பொழுது உன்னெண்ணத்தை நிதானிக்குங்காலையில் எதிரிகளைக் கொண்டாடியவர்கள் புஜபலத்தைப் புகழ்ந்து அன்னமிட்ட ஆண்டவனுடைய ஆண்மையைக் குறைத்துப்பேசி உலகமிக ழும்படிச்செய்து நன்றிகுன்றி மரம் வைத்து வளர்த்தவனுக்குப் பலன் கொடாமல் அண்டைவீட்டுக்காரன் அநுபவிக்கும்படி யாய்ச் சாய்ந்த மூடக்குத் தென்னமரம்போற் குறைந்த மதியைக் கொண்டிருக்கிறாய். தருணத்தில் தண்ணீர்வார்த்து வளர்த்த கௌரவகுல முதல்வனைவிட்டுச் சொல்வண்மையும் வில்வண் மையுமுள்ள பாண்டவர்ள்பேரிற் பக்ஷங்கொண்டாய். ஐவர் பேரில்அன்புமாசையும்உனக்குண்டாயிருக்குமானுல், அந்தப்பஞ் சைகட்கு நீயினத்ததாகப் புகழ்ந்து பேசவேண்டுமேயன்றி மற் றவர்களைக் குறைத்துப் பேசுவதி லுனக்கென்ன லாபம்? எவ் வளவேனு மேன்மை கிடைக்குமா? எம்போலியரை வெல்லும் வல்லபம் அந்தப் புல்லியருக்குண்டா யிருக்குமாகில் போர்க்களத் திறங்கண்ட வீரர்கள் அவர்களைப் புகழாதிருப்பார்களா? கற்ரு ரைக்கற்ருரே காமுறுவரென்பதுபோல் வீரரை வீரர் வியந்துரை யாரோ? மணங்கமழு மாலைபுனைந்த தோளினையுடைய மறை யோனே! நீ யிப்படிக்கெல்லாம் பூச்சிகாட்டாதே. இவ்வேளை, நமக்கெதிரானவன் அசகாயசூரனுகிய விஜயனைலும் அவனுக் கெதிர் நானெருவனுமுனைந்து வில்வளைத் தமர்புரிந்து மண் ணுளவிரும்பிய அவனை விண்ணுள விடுகிறேன். இதுவே சத்தி யம். உலர்ந்த சரகு எரிநெருப்பிற் கரிந்து வேகாதிருக்குமாகில், தேர்மேலேறிப் போரிடவருஞ் சிலைவிஜயனுங் கீர்த்திபெறுவா னென்றுணரலாம். நீயேன் விருதாவிற் சொற்சோர்வுபடுகிறாய்? வேதியகுலனுகிய நீயேன் வீண்பழி சுமக்குகின்ரு யென்ரு ன்.

கர்னன்சொன்ன வார்த்தைகளைக் காதிற்கொண்ட சுயோதன ராஜன் அண்ணு! எதிரியைப் புகழ்ந்து பெருமையாகப் பேசுகிற வர்களெல்லாம் பேசட்டும். நீரேன் அவசரப்படுகிறீர்? போர் செய்ய வருகிறவன் பார்த்தனு யிருப்பானுகில், நமக்கு நல்லகால மென்றே யெண்ணும். அதேனெனில், அவர்களொப்புக்கொண்டு போன பன்னிரண்டுவருட வனவாசத்திலும் ஒருவருட அஞ் ஞாதவாசத்திலும் நாட்குறைவிருக்கிறது, அதைக்கண்டுபிடித்து மறுபடியும் அவர்களை வனவாசம்பண்ண வனுப்பிவிடலாம். அப்படிக்கல்லவென்றுல் இந்த யுத்தத்திலுயிரழிந்து போவார்க ளென்று உறுதியாய்ச் சொல்லிவிடும். தாக்ஷண்யமாய் முன்பின் பார்க்கவேண்டுவதில்லை யென்று களிப்புடன் சொல்லத் தாமரை மாலைதரித்த தனுர்வேதியரும், பனைமாலைதாங்கிய வீஷ்டுமாச் சாரியர் முதலாகிய வேந்தரும் சரிதான் சரிதானென்று சிரக்கம் பஞ் செய்து வரவரக் கண்டறிவோமென் றிருந்தார்கள்.

உத்தரகுமாரனை யுடன்படுத்திக் கொண்டுவந்த பேடியான வள், ஓ ராஜகுமாரனே! எப்பேர்ப்பட்டவனுலும் எக்குலத்தா னுலும் போர்முகவீரனென்று பேர்பெற்று யுத்தமுனை புகுந்த வன் முன்காயம் பெறுமல் முடிசாய்க்கப்படாது. புறங்கொடுத் தோடிவருங் காலையினும் புகழுண்டாக் மார்பிற் காயம்வாங்கிவர வேண்டும். அப்படி வரத்தக்க வல்லமையில்லாதவன் தேசம் ஆறில்லா நாட்டையும், அரணில்லாக் கோட்டையையும், தர்ம பத்தினியில்லா வீட்டையும், வள நீங்கிய காட்டையும், பொறை யிலா வரசையும், ஞானமில்லாக் கல்வியையும், நன்மணமில்லா மலரையும், மதியில்லா விசும்பையும், மைந்தனில்லாச் செல்வத் தையு மொப்பானென்று இராஜதர்மங்களால் அவன் மனதைத் தேற்றிப் பயங்கரத்தை மாற்றி வீராவேசம்விளைத்து ஆறுகோடி மாயாசத்தியாலும் மாறுபடாத அரன்போன்ற வீபற்சானவன் வன்னிமரத்தைச் சேர்ந்தான்.

பராசத்தி கோயிலும் பாலநிலமுஞ் சிறந்தடர்ந்த வன்னி மரத்தோப்பில் வந்த உத்தரகுமாரன் கன்னிப்போரால் வந்த ஜன்னிதோஷத்தாற் கலங்கி யசைவற்றிருந்தான். அப்படிக்கிரு ந்த சாரதியைப் பேடி பார்த்து, அப்பா! நீ என்சொல்தப்பாமல் இந்த மரத்திலேறி வடபுறத்திற் பிணைத்துப் பருத்த கிளையின் பொந்தில் சேமஞ்செய்திருக்கிற ஐவரது ஆயுதங்களையும் அம்ப ருத்தூணியையு மெடுத்துவாவென்று கூறினுன். அந்தப் பேடி



அருச்சுனன் உத்தரனுல் வன்னிமரத்திலிருந்து தன் ஆயுதங்களை
எடுத்து சுயரூபத்துடன் சண்டைக்குப்போகுதல்

மொழியால் தேறிய மைந்தன் ஈதென்னவிந்தை என்றெண்ணி உயர்ந்து தழைத்து விரிந்த வன்னிவிருக்ஷத்தைநோக்கி, ஐயோ! பூதப்பிரேதங்கட்குரிய பிணக்காட்டகத்தி லென்னை அநியாயமாகக் கொண்டுவந்து நிறுத்தி இந்தப் பெரியமரத்தி லேறென்ப தென்ன பேதமை? அடிபேடி! ஒரே தரமாய் என்னுயிர்வாங்குவ தற்கோ? அடிபாவி! இந்தமரம் என்னிரண்டுகைகளுக்கும் அடங் காதே. நானெப்படியணைத்தேறுவேன். என்மார்பிடம்போதாதே கால் அணைத்தேறும் வல்லமையுமில்லையே. உனக்குக் கொஞ்ச மேனும் ஜீவகாருண்யமில்லையா? அடிநபுஞ்சகி! நானொருயுக்தி சொல்லுகிறேன் கேள். மச்சநாட்டை நோக்கிச் சற்றுதூரம் போவேனுகில் வேண்டிய வேலைக்கார ரகப்படுவார்கள். அவர் களா லாயுதமெடுப்பிக்கிறேன். மரமேறும் பழக்கமெனக் கில்லை யடி. கடன்வாங்கியிறைகொடுத்தவரும்மரமேறிக்கைவிடுத்தவருந் தலையெடுக்கமாட்டார்கள். நானுன்கையிலகப்பட்டேன். ஏ வீர மாகாளி உன் சந்நிதானத்தில் வந்தேன். இயாவரு மிறந்தழியு மிடஞ் சேர்ந்துவிட்டேன். இனி யென்னுயிராசை விட்டேன். ஆ கெட்டேனென் றிருகண்ணிலுங் கண்ணீர்விடுத்தேங்கினன்.

இவ்வாறிரங்கி பின்வாங்கிய பாலனை யவன்பாங்கியிலிருந்த பேடியானவள் கைகளாற் றூங்கி, மார்போடணைத்து மகிழ்ச்சி யாய்த்தழுவித் தடவிக்கொடுத்து உள்ளன்புகாட்டி அப்பா! நீ அஞ்சாமலேறி ஆயுதமெடுப்பையாகில், உனக்கதிக மங்களகர முண்டாமென்று அவனைத் தேர்கொடுங்கைச் சிகரத்திலேற்றி மரக்கிளையிற்றூண்டிப் போம்படிக்கான உபாயஞ்சொல்லிப் போக் கினள்.

பின்னுற் பெற்றனுபவிக்கப்போகிற பெரும் பயனென்று காத்திருப்பதனுல் அந்தப் பேடி பேச்சு பிசகாமல் மச்சகுமாரன் அச்சமில்லாமற் கிளைமேற்றூவி, ஆயுதங்களைப் பாண்டவர்கள் பதுங்கிவைத்தார்க ளென்னும்பேச்சு நிச்சயமோ வென்னமோ நிதானிப்போமென்று கிட்டிக், கிருஷ்ணசலத்திற் கட்டியிருந்த கட்டை யவிழ்த்துப் பார்க்கும்போது உச்சிதமான கிருஷ்ணசர்ப் பமொன்று சீறித் துரத்தியதைக் கண்டு மதிமருண்டு மயங்கி வருந்தித் தியங்கி, அடிவஞ்சகப் பேடி! சண்டைமுகத்திற்கு வாரேனென்ற வென்னை உபாயமாய்க் கூட்டிவந்து வன்னிமரத் திலேற்றிப் பாம்புக்கிரையாக்கவோ பார்த்தாய்? நான் பண்ணிய பாவமென்னமோ? உன்னைச் சாரதியாக வெண்ணிவந்த தோஷ்

மோ? இன்னமு மென்னை என்னசெய்யப்போகிறாய்? இந்தமட்டும் என்னை விட்டுவிடு. எனக்குப் புத்திவந்தது. அடி சதிகாரியென்று மயங்கி யிரங்கிவரத் திரும்பிய உத்தரனியற்கையைப் புத்திசாலியாகிய பேடி கண்டு இறங்காதே யிறங்காதேயென்று கையமர்த்தி, நீ கண்ட பாம்பானது உன்னைப் பதறிக்கடியாது. அதற்கு நீ பயப்படாதே. அதிதுணசாலியாகிய வரசகுமாரனே! உனக்குப் பொல்லாங்குவிளைக்கும்படியான பொறுமை எனக்கில்லை. நீ விருதாவிற் கவலைப்படுகிறாய்; இன்னுஞ் சற்று நேரத்தில் உனக்கு மேலான சுபங் கிட்டப்போகிறது. எப்போதும் என்சொல் உனக்கு ஒப்பில்லா வின்பத்தையுண்டாக்கக் காத்திருக்கிறது. உத்தரகுமாரனே யென்று அவன் கருத்திலெழுந்த கலவரத்தைக் களைந்தாள். அம்மரத்தின்மீதிருந்த ராஜகுமாரன் பிராணன் போனாலும் போகட்டும், பேடி பரிந்து வலிந்து சொன்ன பேச்சைப் பார்ப்போமென்று உளந்தெளித்து பேடியிடத்திற்சிக்கிப் பேய்போலலைவதிலும் பெரும்பாம்பின்வாய்ப் பட்டிறப்பது புண்ணியவசந்தானென்று துணிந்து பாம்புருவாய்க்கண்ட படையின்பேரிற் கைவைத்துக் களத்தான். அப்போது ஒரு பொல்லாங்கும் இல்லாதிருந்ததைப் பார்த்து, அடடா! இதில் என்னமோமகத்துவம் இருக்கிறதென்று தனக்குள்தானே பூரித்துப் பூமியினின்ற பேடியை நோக்கி வீணை நிஷ்டூரத்திற்காளான வித்தைக்காரி! இந்த மரப்பொந்தில்வைத்திருக்கும் ஆயுதங்களுடன் மலைப்பாம்பொன்று சுற்றிக்கொண்டிருக்கிறது; உன்னால் எனக்கென்னதைரியமுண்டானாலும் பாம்பென்றூற்படையுநடுங்கும் என்னும் பழமொழிக்கியல்பாய் மனம் வருந்தி வாடுகிறது. அப்படி யிருந்தபோதிலும் பாண்டவர்களின் படைகள் இவ்விடத்தில் வந்த வரலாறும் விஷாக்கினியுள்ள பாம்பொன்று சிறிக்கொண்டிருக்குந் தன்மையும் அவர்களிந்த வன்னிமரத்தில் ஒளித்துவைத்த காரணமும் இந்த ரகசியமுனக்குத் தெரிந்தவிதமும் எனக்கு ஒளியாமல் விபரமாகச்சொல்லுவையானால் நான் இந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு உன்னுடன் கூடவந்து நீ சொன்னபடி கேட்டு நடப்பேன். இல்லாவிடில் இம்மரத்தைவிட்டிறங்கமாட்டேனென்றுரைத்து அம்மரத்தில் அட்டகாசஞ்செய்து அமர்ந்திருந்தான்.

அம்மைந்தனறைந்ததை பேடிகேட்டு சிந்தை பூரித்து சிரித்துமகிழ்ந்து தேர்த்தட்டின்மீதினின்று அடித்தோரைக்காக்கும்

அரசிளஞ்சிங்கமே! பாண்டவர்கட்குரிய படைகளை இவ்வன்னி மரத்தில் மறைத்துவைத்தபோது இருவர்தவிர மற்றவர்கள் கண்ணுக்குப் பாம்புருவமாய்த் தோன்றக்கடவதென்று தருமராஜனுரைத்த சத்தியவாக்கின்படி சர்ப்பமாகத் தெரிவதைக் கண்டு சஞ்சலப்படாதே. அது ஒரு பெரிய வில்லென்றறிவாய். அவ்வில்லின் பிரதாபமும் அதுகிடைத்தமுறைமையும் எப்படிப்பட்டதெனில்: சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மாவினிடத்தில் நூருயிரவருடம், தக்ஷபிரமாவிடத்தில் பதினுபிரவருடம், தேவேந்திரனிடத்தில் ஆயிரவருடம், வருணனிடத்தில் நூறுவருடம், மற்றும் பலரிடத்தில் நெடுங்காலமிருந்து இவர்கட்கு உண்டாகிய பகைகளைக் களைந்து, வருணனிடத்தில் வந்துசேர்ந்து பொன்மணியும் பூசையாகக்கொண்டு, சிலவருடஞ் சென்றபின்பு அக்கினிதேவனடுத்துக்கேட்க, வருணராஜன் அவனிடத்தில் ஆசைவைத்துக் கொடுத்தார். இந்த வில்லினுல் வெற்றிபெற்றுவரும் அக்கினிதேவன் காண்டவவன தகனகாரணத்தினுல் அருச்சுனனுக்குக் கொடுத்துத் தனக்கு வேண்டிய காரியங்களை முடித்துக்கொண்டான். அதுமுதல் இதுவரையிலும் அறுபத்தைந்து வருடமாக அருச்சுனராஜன் கரத்திற்கிசைந்து அநாவிர்தகண்டம் அளாவிர்தகண்டம் முதலிய வெண்டிசையும் வென்று ஜயமாலைபுனைந்து மனுபீஷ்டங்களைக்கொடுத்து வெகுவித வதிசய வெற்றியைப்பெறக்கடவதென்று தேவர்களுரைத்தருளிய ஆசீர்வாதத்தினுல் அசைவற்றிசைபெற்றிருக்குங் காண்டீபமென்னப்பட்ட வில்லென்றறியக்கடவாய். இந்தவில்லுக்கொப்பாகிய வில் இந்திரலோகமுதலிய எவ்வுலகத்தினும் இல்லை. இந்திரநீலம் வைத்திழைத்த ஒளிபோற்பிரகாசிக்கும். அதனை நீநன்முய் நிதானித்துப்பார்க்கில் உனக்கே செவ்வையாய்த்தெரியும். அன்றியும் பஞ்சபூதங்களினுலும், மானிடர் முதலிய பதினெண்கணங்களினுலும் பழுதுபடாத காண்டீபமென்பது அதன் பெயர். பூர்வம் சொர்க்கலோகத்திற்குற்ற துன்பத்தினை நீக்கும்பொருட்டு காலகேயநிவாதகவசர்களைவென்று யமபுரத்திற்கனுப்பிய திறமையும் இராஜசூயயாகத்திற்காகத் திக்குவிஜயஞ்செய்து திரவியஞ் சேகரித்த முறைமையும், சித்திரசேனன்முதலிய காந்தருவரைக் கண்கலங்கத் துரியோதனனைக் குடும்பத்துடன் கட்டவிழ்த்து மீட்ட கருணையும், காண்டீபனடைந்த பெருமையும் இந்தவில்லின் வலியேயன்றி மற்றொன்றல்ல. இந்தமட்டும் இதுநிற்க சத்தாகிய

பாற்கடலைக்கடைந்த மத்தாகிய மந்தரகிரிபோன்று கொத்தாகிய மற்ற ஆயுதங்களுடன் கலந்து விளங்குகின்ற வெவ்விய கதை யானது வீமசேனனுக்குரியது. மற்றுமுள்ள ஆயுதங்கள் யாவும் தருமராஜநகுலசகாதேவர்களுடைய ஆயுதமென்றுபேடிசொல்ல வெற்றிமேற்கொண்ட விராடகுமாரன் தன் மனக்கலக்கந் தெளிந்து சகல படைகளையுங் கண்ணுற்கண்டு சொல்லுகிறான். கடையேனாகிய வெனக்கு இவற்றையெல்லாங் காண்பித்து என்னை யாளாக்கிவிட்ட காரிகையே! இஷ்ட தெய்வம்போல் என்னைத் தடுத்தாட்கொண்ட ஏந்திழையே! மகா புண்ணியவதியாகிய குந்திதேவி என்ற மைந்தரைவ நம் தங்கள் தங்கள் உயிர்போல் கருதிய ஆயுதங்களை ஒருநாளும் பிரியார்களே. அப்பேர்ப்பட்ட மகாபுருஷர்கள் இந்த வன்னிமரத்தில் மறைத்துக் குறிப்பிட்டு வைக்கவேண்டிய அவசரமென்னமோ? இப்பொழுதவர்களெந்த நாட்டிலிருக்கின்றார்களோ? எப்படியானார்களோ? அதைஎனக்கு உணர்த்தவேண்டும் பாக்கியசாலியென்று உத்தரன் கேட்க, வாசம் நிறைந்த மலர்போற்சிறந்த கட்கருணையினையுடைய பேடியானவள் முகநயந்து புன்னகைபுரிந்து அகமகிழ்ந்து அன்புள்ள வரசனே! பாண்டவரைவரும் நந்தியாவட்டமாலை யணிந்த நராந்தகனுடைய வஞ்சத்திற்குள்ளாகிச் சொக்கட்டானுடித் தோல்வியடைந்து சோர்வடைந்தவர்களாய் அஞ்ஞாத வாசமும் போக்குவதற்குடன்பட்டு காட்டிற்கழிக்கும் நாட்களைக் கழித்து நாட்டிலிருக்கும் நாளை நினைத்து யாவராலுந் தாங்கள் இன்னரென்று அறியாதிருக்கும்படிக்குத் தங்களாயுதங்களை இம் மரத்தில் மறைத்துவிட்டு, வேடமாறி எவரும் ஐயங்கொள்ளாதிருக்கும்படிக்கு அவரவர்க்குத் தக்க தொழிலை மேற்கொண்டார்கள். இப்பொழுது அவர்கள் எவ்விடத்திலிருக்கின்றார்களோ எனக்குத்தெரியாதென்றுகூற, மறுவில்லா மச்சகுமாரன் பெருந் தகைப்பேடி பேசிய வார்த்தையைக்கேட்டுப் பெருமூச்செறிந்து உடல் படபடத்து உயிர் துடிதுடித்து ஒருவாக்கியம் புகன்றான். ஐயோ தெய்வமே! சத்தியந் தப்பாத சாதுவானவர்கள் அசத்திய துஷ்டராகிய சுயோதனதியரால் இப்பாடுபடத் தக்கவரோ? தருமம் அவர்கட்குச் சகாயம்பண்ணுமற் போயிற்றே? கலிகாலமாயிற்றே? பாவமேலிட்டதோ? நீதிவழி கெட்டதோ? கொடியோர் களிக்கப் பாண்டவர்கள் துன்புற்றுத் தேம்பி வாடச்செய்தது தீவினையோ? மெய்த்தவத்தையும் மேலான தருமத்தையும்

சத்தியத்தையும் இவ்வுலகிலுள்ளோர்கள் கொண்டாடுகின்றார்களே. அந்தோ! இனி எப்படி தருமத்தையும் நம்பலாம். அசத்தியமேலிட்டு அக்கிரமிகளுக்குத் துணை செய்யுமாயின் சத்தியத்தை நம்பிச் சங்கடப்படுவது தகுதியோ? தருமமே சத்தியம், சத்தியமேநித்தியமென்றிருந்த தருமராஜனும், தோள்வலியைத் துணையாய்க்கொண்ட வீமசேனனும், திறனுற்ற - சிலைபெற்ற - விஜயசிகாமணியும், இளையவரிருவரும் வாசமணக்கும் மலர்க் குழலினையுடைய திரௌபதை மாதுடன் எவ்விடத்தில் துன்பம் அனுபவிக்கின்றார்களோ? எத்தொழிற் செய்கின்றார்களோ? ஐயோ! பற்பல யாகங்கள்செய்து சோடச மகாதானமும்பண்ணி மேலாகிய வாழ்வனுபவித்துத் திரிபுவனஜயம் பெற்றிருந்தாலும், அவ்வாழ்வை கீழ்ப்படுத்தித் தாழ்வை மேற்படுத்தி, நல்லோரைப் பொல்லாராக்கிப் பொல்லாரை நல்லோராக்கி, வீரர்களை விதவையாக்கி, விதவைகளை வீரர்களாக்கி, ஜாதியினரைத் தனவான்களாக்கித், தனவான்களைத் தரித்திரர்களாக்கிப், புனிதமுடையோர்க்குப் பிணியைவிளைத்து, பொய்யரை மெய்யராக்கி, மெய்யரைப் பொய்யராக்கி இவ்வாறு தலைகீழாகப்பண்ணுவதோ ஊழ்வினைப்பயனென்றுருகித் தன்மனங் கருகிக் கண்ணீர்பெருகியோடக் கசிந்து பெருமூச்செறிந்து, தெய்வமே! பாண்டவர்கள் இப்போது எங்கிருக்கின்றார்களோ? நல்லவர்கட்குத் தீவினைவிளையுங் காரணம் என்னவோ? என்று உயிர்வேதையுடன் ஏக்கங்கொண்ட உத்தரகுமாரனுடைய உண்மையையும் உறுதியையும் பேடி தெரிந்துக்கொண்டு மகிழ்ந்து உரைக்கத் தொடங்கினள். பள்ளநீர்க் கயங்களோறும் பால்பெருகியோடும் மச்சநாட்டிறைவன் மைந்தனே! கேள். நிந்தையில்லாப் பாண்டவர்களைக் குறித்து நைந்து வருந்தாதே. அவர்களிப்போது உன் நாட்டிலும் நகரினும் படைவீட்டிலும் இருக்கின்றார்களென்று சொன்னள். அவள் வார்த்தையைக் கேட்ட உத்தரகுமாரன் சித்தம் பிரமித்து, அம்மம்மா! என்னூட்டிலும் வீட்டிலும் எப்படியிருக்கிறார்கள்? அந்த வித்தையை எனக்கு விபரமாகச் சொல்லும் தாயேயென்று உத்தரன்கேட்கப் பேடி சொல்லுகிறாள். அப்பா! மூதன்மையான குலத்தையும் மூடிவில்லா நலத்தையு முடையவராய் விராடராஜனுக்கு அருகில் ஆசனத்திலிருந்து திவ்விய மங்கள விக்கிரகமாய் விளங்கி விவகார தருமநீதிகளை விளம்பிக் கங்கபட்டரெனப் பெயர்பெற்ற கருணையாளர்தான் முரசுக்கொடி

படைத்த தருமராஜன். நாவிற்கு இனிய அறுசுவை பதார்த்தத் துடன் அன்னஞ் சமைக்கும்படியாக உங்கள் மடைப்பள்ளியி லிருக்கும் பலாயனனென்னுஞ் சுயம்பாகிதான் வீமசேனன். எங்கும் பிரசித்தமாகிய குதிரைக்கூட்டங்களுக்கு எஜமானனாகிய தாமக்கிரந்திதான் நகுலராஜன். உங்கள் பசுமந்தைகட்குத் தலைவனெனவந்த தந்திரபாலனனவன் சகாதேவன். உன்தாயா கிய சுதர்க்கணையினிடத்தில் பணிப்பெண்ணுயமைந்த விரத சாரணியானவள் மகாலக்ஷிமிக் கிணையான திரௌபதாதேவி. உன் தங்கையாகிய உத்தரைக்கு மத்தளதாள விதத்துடன் தத் திமி தரிகிடதோமென நிர்த்தனம் பழக்கிக்கொண்டிருந்த பிரு கந்நளை யென்னும் பேர்கொண்ட பேடியாகிய நான்தான் அருச் சுனன். அன்றியும், உன் அம்மானுன கீசகன் திளொபதையின் மீது காதல்கோண்டு துன்மார்க்கம் நினைத்தமையால், அவனை வசந்தமண்டபச் சோலையிலடித்து அவன் தம்பிமார்களையுமுறித் துக் காந்தருவர்மேற் பழிவைத்தவன் வீமசேனனென்று தெரிந் துக்கொள். வீமன் கொன்றுவிட்டுக் காந்தருவர்மேற் பழிசுமத் திய தென்னவென்றால், நாங்கள் கழிக்கவந்த அஞ்ஞாதவாசத் திற் கிடையூறு வருமென்றஞ்சி மந்திரத்தால் தடைபட்டிருந்த கிருஷ்ணை சர்ப்பம்போ லடங்கியிருந்து, தவணை நாட்களைக் கழி த்துவிட்டோம். நாங்கள் அனுபவிக்கவேண்டிய பதின்மூன்று வருஷமும் நேற்றோடு தீர்ந்துபோய்விட்டது. இனிமேல் எங் கட்கு யாதொரு பயமுமில்லையென்று சொல்ல, உத்தரகுமாரன் கேட்டு, ஆச்சரியத்துடன் புகழ்ந்து இது நல்லகாலமாயிருப்ப தால் இவ்வேளையில் இன்னஞ் சில ரகசியங்களை வெளியாக்கிக் கொள்வோமென்று விரும்பி ஓரேமனதாய்த் துணிந்து, ஐயா! தேவர்கள் கொண்டாடநின்ற பேரழகும் சிவபெருமான் அளித்த வருளாண்மையும், சிலைவிஜயத் திறமும் பெற்ற தீரவீரவருச்சுன ராஜன் நான்தானென்று நீர் சொன்னபேச்சை நான் நம்பமாட் டேன். நீயே நரனென்று ஸ்தரமாகச் சொல்லுவாயாகில்,உனக் கெத்தனை பெயர்கள் கிடைத்துள்ளன? அவை வந்ததற்குக் காரணமென்ன? நீ இதுவரையிலும்பெற்ற பெருமைகளென்ன? அவற்றை என் மனக்கலக்கந்தீரச் சொல்வாயாகில், நானுனக் கடிமையாவேனென்பதற்கு யாதொரு தடையுமிராதென்று உத் தரகுமாரனுரைக்கச், சித்திரப்பாவைபோலிருந்து கேட்ட விஜ யன் சிந்தைகளித்துச் சொல்லத் தொடங்கினன்.

அருச்சுனனுக்குற்ற பெயரும், அப்பெயர்வந்த வரலாறும்:—

வெற்றிபெற்ற விராடபுத்திரனாகிய உத்தரகுமாரனே! எனக்குக் கிடைத்திருக்கின்ற பெயர் பற்குணன், பார்த்தன், கிரீடி, தனஞ்சயன், விஜயன், சுவேதவாகனன், வீபற்சு, சவ்வியசாசி, சிட்டினன், அருச்சுனன், கிருட்டினனென்னப் பதினொன்று. இவ்வாறமைந்த வென்பெயரைப் பெரியோர் முதலிய யாவரும் பெருமையாகக் கொண்டாடிப் பேசுவார்கள். இப்பெயர்வந்த தற்குக் காரணம் யாதெனில், பங்குனி யுத்தரத்திற் பிறந்தமையால் பற்குணன் என்றும், என்னையின்ற அன்னையின் பெயர் பிரதையாதலின் பிரதைசம்பந்தம் பார்த்தனென்றும், தேவலோகத்திற் புகுந்து தேவேந்திரன் கொடுத்த கிரீடம் புனைந்து சிம்மாசனத்தில் வீற்றிருந்தமையால் கிரீடியென்றும், இராஜசூயயாக மியற்றிய அந்நாளில் உத்தரகுருகண்டத்து சென்று சித்தர்கள் தேவர்கள் காந்தருவர் முதலினோர்களை வென்று எண்ணிறந்த தனக்குவையை மகமேருபோற் குவித்தமையின் தனஞ்செயனென்றும் திரிபுவனத்தும் என்னைச் சயிப்பவரின்றி திசைமுற்றும் யானொருவனே என்று விஜயங் கொண்டமையால் விஜயனென்றும், பரமசிவத்தின் வெள்விடைபோல் விளங்கும் நான்கு சுவேதப்புரவிகள் பூட்டிய தேரேறி நடாத்துகின்றமையால் சுவேதவாகனனென்றும், என்னைக்கண்டு வேந்தர் யாவரும் மண் பொன் பெண்ணாசைகளை விட்டுக் கண்ணைப் பிசைந்து கலங்கி பின்னிட்டு விண்ணுடுசேர விடுக்குந்திறத்தால் வீபற்சென்றும், இடக்கை வலக்கை யிரண்டினாலும் பாணந் தொடுக்குந் திறத்தால் சவ்வியசாசியென்றும், என்னையும் என் வில்லையும் என் தமயனையும் இகழ்ந்துபேசுகின்றவன் மட்டற்ற வல்லமைபெற்ற வானவராயினும் மன்னவராயினும் அவர் தலையைநொறுக்கி நாசஞ்செய்வேன் என்று சபதங்கொண்டிருக்கின்றதால் சிட்டினனென்றும், யான் மரகதமணிபோல் நிறமுடைய வுடல்பெற்றிருத்தலால் அருச்சுனனென்றும், காண்டவ தகனகாலத்தில் மாதவனும் யானும் வேற்றுமையின்றி மருவியவாற்றால் கிருட்டினனென்றும், இத்தன்மையாயினைந்த பதினொருபெயரும் கற்றவராலுங் கொற்றவராலும்நற்றவராலும் தேவர்கள் முதலிய மற்றவராலும் வந்துற்றன வென்றோதி, ஐயா உத்தரகுமாரா! பூர்வம் திரிபுரத்தை நீறெழச் சிரித்தருளிய சிவபெருமான் அனுக்கிரகஞ் செய்த திவ்வியாஸ்திரங்களும்

பிரமா விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்களளித்த கூரிய பாணங்களும் பெற்றிருக்கின்றேன். அவைகளை நாங்கள் அஞ்ஞாதவாசஞ்செய்ய எத்தனித்தபோது இந்த வன்னிமரப்பொந்தில் மறைத்துவைத்தோம். இப்போது உனக்குப் பாம்புருவமாய் காணுகின்றகாண்டீபமும், அக்ஷயதூணியும் அக்கினிபகவானுற் நிடைத்தன. முப்பத்து முக்கோடி தேவர்களும், தேவேந்திரனுங் கொண்டாடிக் கொடுத்த தேவதத்தத்துடன் பதினுயிரங் குதிரை பூட்டிய இந்திர விமானத்தை மாதலி யோட்டிய காலையில், அதன்மேலாரோகணித்துத் தோயமாபுரத்திற்சென்று மூன்றுகோடி நிவாதகவசர்களைக்கொன்று, ஜயங்கொண்டு, தேவஸ்திரீகளாலமெடுக்கவும், புட்பமாரி பொழியவும் புகழ்ந்துவாழ்த்தவும் பிரதாபம் பெற்றேன். இரணியபுர வாசிகளான அறுபதினுயிரம் காலகேயர்களையும் அவர்கட் குதவியான பதினுயிர மரக்கரையும் யான் பாசுபதக்கணையால் மாய்த்து மந்தாரமாலை புனைந்து வரிசைபெற்றுப் பூலோகத்திற்கு வந்த மேன்மையை நீ கேட்டறியாய்போலும். நல்லது, உத்தரகுமாரனே! ஆயிரம் பேச்சென்னத்திற்கு ஒரு வார்த்தை சொல்லுகிறேன். நீ யதையுற்றுக்கேள். சத்துருவை முடிப்பதும் தாகத்திற்குச் சலங்குடிப்பதும் இவ்விரண்டும் எனக்கு அதிசொற்பமான வேலையன்றி வருத்தமிராது. ஆதலால், நான் அருச்சுனனென்பதற்குச் சந்தேகமில்லை. இப்போது நமக்குநேராகிய சேனைகளைக் கண்காணுமலோட அடிக்கிறேன். கன்றுடன் கலந்த பசுநிறைகளை மீட்கிறேன். நீ இனிதாமதஞ் செய்யாமற் புறப்படென்று சொன்னன்.

அம்மொழியைக் கேட்ட உத்தரன் ஒருவாறு தேறி, மகிழ்ந்து, இனி நமக்குப் பயமில்லையென்று தான் ஏறியிருந்த விருக்ஷத்தை விட்டிறங்கி இரதத்தின்மீது இளஞ்சூரியனைப் பனிமூடியதுபோல், பேடியுருவமமைந்த பெருமானைக்கண்டு நெடுநாளாகத் தேடிய தேவைப்பணியும் அன்பர்போற் பணிந்து துன்பமுந் துயருந் தொடராச் சொரூபனுடைய திருவடியை சிரத்திலுங் கண்களிலும் முகத்திலுஞ் சேர்த்து முத்தமிட்டுத் தன்னைத்தானே மறந்து தனக்குத்தானே திடுக்கிட்டுப் பயந்து இனியவசனம்மொழிந்து நயந்து நின்றான்.

அக்காலையில் பார்த்தனனவன் விரைவிற் தேர்விட்டிழிந்து பிரியாப் பிரியத்துடன் முகமலர்ந்து, உத்தரகுமாரனை உடல்

குழைய வணைத்து ஐயனே! இன்னமுனக்குப் பயமுண்டாயிருக்கின்றதோ? என்னளவிற் சந்தேகமுண்டோ? நீ யொன்றுக்கும் அஞ்சாதே. நீதில்லாச் ஜயம்பெற்று வாழ்வாயென்று உறுதி வார்த்தைகளுரைத்துத் தேற்றினன். அதனலுத்தரகுமாரன் களித்து முகமலர்ந்து, சிவந்த கைகளைச் சிரத்திற் குவித்துக் கண்ணீர் பெருகக் கசிந்துள்ளமுருகிப் பாற்கடல்போற் கீர்த்தி படைத்த பார்த்த மகாராஜனே! தேவரீரின்னரென்றறியாமல் ஏழை மதியால் அபவாதச் சொற்களைப் பிதற்றி அபசாரங்களைப் பெரிய மூட்டையாகக் கட்டிக்கொண்டேன். நான் மகாபாவியாயினேன். சிறியேன் செய்த பிழையைப் பொறுத்து அருள் சுரந்தாளவேண்டும். அத்தனே! என்னிட்டமாகிய கர்த்தனே! என்று பற்பல வசனங்களினுற் பரதவித்துக் கூறி மேலுஞ் சொல்லுகின்றன்.

கருங்கடல் அகடுகிழிய ஒருங்குடனெடிக் கலக்கும் கங்கை வளம் பெருகிய குருநாட்டரசே! கேட்டருளும். தேவரீர் திருவடிபெயர்த்தருளிய சாரதித்தொழில் நமக்குக்கிடைக்குமா? ஜன்மாந்தர புண்ணியபலன் எண்ணியவண்ணங்கைகூடுமாவென்று வெகுநாளாகக் கவலைகொண்டு மனங்குன்றியிருந்தேன். அண்ணலே! தான் கற்ற வித்தையைப் புகழ்ந்து பேசுகிறவர்களைப் போல் நாமும் பேசப்படாதென பொறுத்திருந்தாலும், தமது கருணையானது என்னைப் பேசச்செய்கிறது. அருமையறியும் பெருமானிடத்திற் பேசாமல் பின்னை யாரிடத்திற் பேசப்போகிறேன். அரவாபரணம்பூண்ட ஆண்டவருக்கு வேதப்பரி தூண்டிய பிரமனுல் விதித்திருக்கின்ற ரதசாஸ்திரங்களெல்லாம் பார்த்து எல்லா வல்லமையிலுங் கைதேர்ந்திருக்கிறேன். கருணை கடாட்ச காண்டீபதரனே என்று சொல்லிப் பணிந்தான்.

அந்த ராஜகுமாரனை அருச்சுனன்தழுவி யணைத்து என்னிதயத்திற்குகந்த இளஞ்சிங்கமே! நீயும் நானும் நெருங்கிய இஷ்டராமனும். இனி நெருப்புங் காற்றுஞ் சேர்ந்தபின்பு சத்துருவாகிய காடு நீறுபடாதிருக்கக்கூடாது. இன்னம் யோசனைக் கிடங்கொடாது விரைவிலேறி இம்மரத்திலொளித்து வைத்திருக்கும் வில்லும் பாணமும் எடுத்துவாவென்று விளம்பினன். உடனே உத்தரகுமாரன் தடையில்லாமல் ஏறி உத்தரவின்படி தேவதத்தமும்-காண்டீபமும்-அக்ஷயதூணியும் எடுத்துக்கொண்டு மற்றை யாயுதங்களை முன்போல் வைத்து மான்

தோலாற்கட்டி மறைத்துவிட்டு, மரத்தைவிட்டிழிந்து, அர்ச்சுனராஜனைத் தொழுது அவர்கையிற் கொடுத்துத் தனக்குச் சாரதித்தொழில் கிடைத்த சந்தோஷத்தால் திடீரென்று தேரிற் குதித்துக் குதிரைக் கடிவாளங்களைக் கையிற்கொண்டான்.

அப்பொழுது அர்ச்சுனராஜன் இந்திரன் முதலிய தேவர்களையும் ஊர்வசியையுஞ் சிந்தித்துத் தந்தை, தாய், தமையன் முதலானபேர்களையும் வந்தித்துத் தர்மதேவதையையும் போற்றினன். அவ்வேளையில் பாண்டுமகாராஜன் பூர்வந்தேடிய பாக்கியம் பலித்ததுபோலும், பேடிரூபத்தை நீங்கி பழையபடி சுந்தர புருஷவடிவமெய்தினன். ஆகாயத்திலுள்ள அமரர் யாவரும் வாழ்த்திக்கொண்டாடினர்கள். அர்ச்சுனனைக் கண்ட ஆடவர் யாவரும் பெண்மையை அவாவுந் தன்மையால் அருகிலிருந்த மச்சகுமாரன் இச்சைமேற்கொண்டான். கூணத்திற்கு முன்னே இருள் மூடியதுபோல் பேடியாயிருந்து இப்போது பச்சைமணியின் பிரகாசம் வீசிச்சொலிப்பதுபோற் றுலங்கியதன்மை எவ்வாறிருந்ததென்னில், இந்திரஜாலங் கற்றவர்கள் கூணத்திற்கு கூணம் வெவ்வேறு ரூபத்தைக் காட்டுகின்ற வித்தைபோன்றிருந்தது. அர்ச்சுனனது தேககாந்தியைக்கண்ட உத்தரகுமாரன் மின்னலுக்கெதிரில் விழித்தவர் கண்போற் கூசிக் கவிழ்ந்து, இரண்டு கைகளினலுஞ் சேர்த்திறுகத்தழுவி என்னையனே! உமது மாசற்ற திருமேனிக்கு மறுவுவந்த காரணம் யாதோ வென்று வணங்கிக்கேட்க, விஜயன் ஓ இராஜசெல்வமே! தேவர்கட்குப் பகையாகிய காலகேய நிவாத கவசர்களை ஜெயித்து, வெள்ளையானையின்மேற்பவனிவந்து அமுதபோசனமுண்டு இந்திராசனத்தில் இருந்த எனக்குச் சந்தோஷம் உண்டாகும்படி தேவேந்திரன் நினைத்து அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்த்தமை என்பவர்களை நாட்டியமாடச் செய்தான்.

அவர்களாடிய ஆடலிலும் பாடியபாடலும் சிறந்த முகநயமுள்ள ஊர்வசியை நான் மெச்சிச் சிரக்கம்பஞ்செய்தேன். அவளிருந்த தேவர் முதலிய யாவரும் ஊர்வசி இன்று செவ்வையாய் நடித்தனளென்று கொண்டாடினர்கள். யான் அன்றிரவில் எனக்கமைந்த அரண்மனையிற் போயிருந்தேன். நடுராத்திரியில் இந்த ஊர்வசி என்னிடத்திற்கு வந்தாள். எங்கள் பாட்டனை புரூரவச்சக்கிரவர்த்தியின் பத்தினியென்று மெத்தப் பயந்து எழுந்து அவள் பாதத்தில் விழுந்து நின்றேன். கொழுந்து

விட்டெரியுஞ் சுடர்போற் கொதித்து, நானெண்ணிவந்த எண்ணத்தைப் பின்னம் பண்ணியபடியால், மண்ணில் வாழுமனுக்களில் நீ பேடியாகுகவென்று சபித்துப் போயினள். பொழுது விடிந்தபின்பு அவ்வுருவத்தோடு வெளியே வருவதற்கு வெட்கப்பட்டிருந்த என்னைத் தேவேந்திரன் கண்டு, விசனமடைந்து சங்கதி யறிந்துகொண்டு ஊர்வசியினிடத்துச் சென்று அவளுக்கு வேண்டிய உறுதிமொழி புகன்று என்சாப நிவாரணஞ் செய்தான்; அந்தச் சாபம் நானினைத்தபோது ஒருவருஷம் என்னைத் தொடர்ந்திருக்கவும் நான் நினையாதபோது என்னைவிட்டு நீங்கியிருக்கவும் அனுக்கிரகித்தாள். அந்த ஊர்வசி யனுக்கிரகத்தால் உன்னுடைய விராடபுரத்தில் ஒருவருஷம் பேடியாயிருந்து அஞ்ஞாதவாசம் பண்ணும்படி நேரிட்டது. அப்பனே! எனக்குப் பேடியுருவமைந்த வரலாறிது என்றுரைத்துத் தன் தந்தையாகிய இந்திரனையும், வம்சநாயகனாகிய சந்திரனையும், திரௌபதையைப் பெற்றவனாகிய அக்நிதேவனையும் சிந்தையிற்றுதித்து, வந்தனைபுரிந்து, தனக்கு வேண்டிய அணிமணிப் பணிகளைக்குறித்து விரும்பினன். அவ்வேளையில் தேவேந்திரனவன் தன்மைந்தன் பழைய வடிவங்கொள்ளப் போகிறானென்று மகிழ்ந்து, கதிர்மணிக் குண்டலம், கனககிரீடம், நவமணியிழைத்த இரத்னபரணங்களும், ஒப்புவமையில்லா முப்புரிநூலுடன் கற்பகமாலையுங் கந்தமுந் தந்தான். அவற்றையெல்லாம் அர்ச்சுனன் பெற்றுக்கொண்டு, ஊர்வசியம்மனை உள்ளத்தில் நினைத்துப் பஞ்சாயுதன்போலும் அஞ்சனமேனி யழகனுயினன். இவ்வாறு கட்டழகமைந்த காண்டீபனென்னுங் காளையானவன் அக்நிதேவனுல் அநுமக்கொடியும், அஸ்வகதியும் வரும்படியாகச் செய்துகொண்டு சகலாபரணபூஷிதனுய்ப் பூரணவலங்கிருதத்துடனிருந்து, தான் ஏறிய தேரில் நாட்டிய சிங்கக் கொடியைமாற்றி அண்டமுகடதிர ஆகாயமார்க்கமாய்வந்த அனுமக்கொடியை அமைக்கச்சொன்னன். அர்ச்சுனனேறிவந்ததேரிற் பிரகாசித்த அனுமக்கொடியை உத்தரகுமாரனுடைய சிங்கக் கொடியானது கண்டு துவண்டு நாமிந்த அனுமக்கொடிக்குச் சரியாகமாட்டோம்; இந்த அனுமாரானவர் இராமராவண யுத்தத்திற் சங்கைதீர்ந்திருக்கின்றவரென்று தைரியம்விட்டுச் சந்து பார்த்து நுழைந்துகொண்டதோ வென்று சாதுரியவான்கள் சாற்றும்படியாய் அதனை வன்னிமரப்பொந்தில் மறைத்துவைத்

தார்கள். பிறகு அர்ச்சுனராஜனும், உத்தரகுமாரனும் ஒருவரை யொருவர்நோக்கிக் களித்து, அவ்விடத்திருந்த காளிகாதேவியை கைதொழுதெழுந்து இரதமேறி ஆகாயமளாவிதழைத்த வன்னி மரத்தை வலம்வந்து தொழுது, விஜயகாண்டீபவில்லை நிறுத்தி வாசமலர்மாலை சாத்திப் பூசைபுரிந்து நாணேற்றி டங்காரஞ் செய்தான். அக்குணத்தொனியினால் உலகெலாம் பெரும் ஊழிக் காலம்போலோசையெழும்பி எங்கும் நெருங்கிப் பொங்குகடல் போன்ற சேனைகளெல்லாம் நின்ற நிலையில் நிலைதவறிப்போய், யானைவீரர், அஸ்வதீரர், அழகியதேராள், அணிபடைக்காலாள் அதிரத மகரத சமரதர் முதலிய யாவரும் பேரிடிமுழக்கங்கேட்ட பெரும் பாம்பினம்போல் தலையெடுக்காமல் தட்டழிந்தார்கள். அக்காலையில், கற்பகமாலையணிந்த மற்புய கோலாகல விற்பன விவேக விதரணசாலியான வீபற்சு யாருந்திடுக்கிட்டுக் கண்கலங் கும்படியாகத் தேவதத்தத்தை எடுத்துத் தனது செவ்வியவாயில் வைத்தூதினான். அவன்செய்த சங்கத்தொனியால் மகமேருமூத லாகிய மலைகளும் அதிர்ந்து கடலுங் கீழ்மேலாக குழம்பிச் சப்த மேகமும் பிதிர்ந்து அஷ்டநாகமுஞ்சிதைந்து நக்ஷத்திரங்களும் உதிர்ந்து அண்டமுகடு பிளந்துபோயின.

இவ்வித சங்கத்தொனியினாலும் வில்லொளியினாலும், நாணே சையாலும் தேரிற்கட்டிய புரவிகளும் பதைக்கச் சாரதியாகிய உத் தரகுமாரனும் சங்கடப்பட்டுத் தலை நட்டுக்கொண்டு பிடித்த கடி வாளத்தையும் விட்டுக் கண்பொறி கலங்கிச் செவிடுபட்டு உணர் வுகெட்டு ஒடுங்கி வீழ்ந்தான். இவ்வாறு நடுங்கி நிலத்திற் சாய்ந்த உத்தரகுமாரனைக் காண்டாவனதகனகாண்டீபன் கண்டு, தனது நீண்ட கைகளாலெடுத்தணைத்து ஆலவட்டம் சாமரை களினால் வீசி ஆயாசந் தணித்து வியர்வைபோக்கி அயர்வுநீக் கிப் பன்னீர்தெளித்து வெந்நீரளித்துக் கலையாற்றினான். உத்தர குமாரன் கலைதீர்ந்தெழுந்து கண்விழித்துப் பார்த்து நடுக்கமுங் கவலையும் நீங்காதவனுக்கு காதடைபட்டு கிரீடியுடன் ஈனசுர மாய்ப் பேசினான். அருச்சுனன் உத்தரனை நோக்கிப் பொருப் பைக் குடைந்து கடைந்து பொருந்திய தொத்துள புஜமுடைய விராடர்கோனளித்த புனிதகுமாரனே! நான் செய்த சங்கத் தொனியினால் ஐம்புலாதிகளு மயங்கி அவசரமடைந்த உன் பேதமைத்தனம் யாதோவென்று கேட்டான். ஐயா! சப்த சமுத் திரங்களும் பொங்கி நெருங்கி வழிந்து உலகமழியுஞ் சர்வசம்

மார ஊழிக்காலத்தோசையென்பது தேவரீர்முழக்கியசங்கோசை யைப் பார்க்கிலும் அதிகரித்திருக்குமோ?எல்லாவுலகிலும் எழும் பற்பலவோசைகள் யாவும் இப்போதிவ்விடத்தில் உமது வில்லா லுண்டாகிய விபரீதத்தைப்போலும் விந்தையைப்போலும் விளக்கமாட்டுமோ?இத்தன்மையாகிய பேரோசையைக்கேட்ட தேவர் களிலும் திக்குப்பாலகர்களிலும் யார்தான் பயத்து மயங்காமற் போவார்கள்?யார்தான் திகிலடையமாட்டார்கள்? அப்படிக்கிருக்க உமது கால்மாட்டிலிருந்த நான் பயப்பட்டு வீழ்ந்தது பெரிதல் லவே. அந்தமட்டுமே உயிர்தப்பிப் பிழைத்துத் தேவரீருடன் பேசப் புறப்பட்ட நான் மிகவுந் தைரியசாலி யல்லவோ? மூத்தொழில் நடாத்துகின்ற மூவரும் நடுங்கு முழக்கத்திற்குச் சித்தப் பிரமைகொண்டு தேறிய என்னை ஆதரித்தருளும் அர்ச் சுனராஜனே இனி நானென்ன சொல்லப்போகிறேன் என் றிரங்கிய விராடராஜகுமாரனை அன்புடனேக்கித் தோளுடன் மார்புதோயத் தழுவி மாதவமுனிவரால் தான் கற்றுள்ள மயக் கந்தீரு மந்திரத்தை உபதேசித்து, ஓ உத்தரகுமாரனே! உனக் கும் குதிரைகளுக்கும் இனி யொருநாளும் பயமில்லை. ஈரே ழுலகுங்குலுங்கினாலும் ஓரேழ்கடலுங் கலங்கினாலும் என்றென் றைக்குங் கவலையில்லாதிருக்கலாம். இப்பொழுது விரைவில் தேர் செலுத்தென்று தனஞ்சயன் சொன்னன். அச்சொல் லைக்கேட்ட மச்சராஜன் மதலையானவன், அருச்சுனன் தனக்குக் கிடைத்த ஆசையினால் அன்புமேலிட்டுக் கையிற் கடிவாளம் பிடித்து உச்சவான் கதிர்த் தேரிற் பூட்டிய பச்சைமா ஏழையு மோட்டிய அருணனைப்போலும் விளங்கிய குதிரைகளைப் பட படவென்று செலுத்தினன். அப்பொழுது பனியினால் மறையப் பட்டு ஒளிமழுங்கி உடலொடுங்கிய ஆயிரங்கிரண சூரியனைவன் உதயமான தன்மைபோல் பேடியுருவால் மறைந்து பெருமை குறைந்திருந்த அருச்சுனன் பின்னழகும் முன்னழகும் பிரகாசிக் கச் சிறந்து நெடுஞ்சிலையும் கொடுங்கணையும் கைப்பிடித்துக் கௌரவ முதல்வன் சேனையிலுள்ள நிருபர்களியாவரும் நடுநடு ங்கி நாவறண்டு விலவிலத்துப்போகும்படி அவர்களுக்கு நேரிற் றோன்றினன்.

இவ்விதமாக அழகிய தேர்மேல்வந்த அனுமக்கொடிக் கதி பனை வீஷ்டுமாசாரியர் முதலாகிய வீரர்கள்கண்டு வேறுவேறு எண்ணங்கொண்டு விருது முதலாகிய வீரசின்னமும் சோர

நின்றூர்கள். அவ்வேளையில், நான்மறைக் கொடிப்படைத்த துரோணாசாரியர் பாம்புக்கொடியும் நந்தியாவட்ட மாலையையுடைய துரியோதன மஹாராஜனைப் பார்த்து, வணங்காமுடி பெற்ற மகிபனே! இசைபெற்ற விஜயன் சர்வசம்மாரகாலக் கடவுள்போல் களங்கமில்லாமல் வருகிறான் பாரென்று சொல்லத் தொடங்கினர்.

இதோ நமக்கெதிரில் ஓடிவருகிற தேர் வேகத்தினால் இந்தப் பூமியைத்தாங்கும் பணமகுடமுடைய ஆதிசேடன் என்ன பாடுபடுகின்றானே? அந்தத் தேரிலிருக்கிற மகாபுருஷன் கையிற் பிடித்த வில்லின் நாணோசையால் தேவலோகந் தத்தளியாதிருக்குமோ? போர்முகத்தில் முழக்குஞ் சங்கத்தைப் பூரித்த பேரொலியானது எட்டுத்திக்கையுஞ் செவிடு படுத்தாமல் விட்டுவிடுமோ? இப்படிக்கெல்லா மில்லாவிடில், ஒண்டித்தேரும் ஒற்றைவில்லுங் கொண்டு ஒன்றுக்கும் அஞ்சாமல் தனிமையாய் வருவானே? இவ்விடத்திலிருப்பவர்கள் இன்னரின்னரென் றறியாமலும் நன்மை தீமைகளை நாடாமலும் நம்மோடெதிர்த்து யுத்தஞ் செய்ய வருகிறவன் அசகாயசூரனென்றுந் திடதைரிய தேககாத்திரமுள்ளவனென்றுந் தெரிவாய், எப்போதும் யாதொரு காரியத்தையும் செவ்வையாக நிதானித்து யோசிக்கவேண்டியதே. ஐயா துரியோதனராஜனே! ஜோதிப் பிரகாசகுண்டலமும், சுடர்விடு கதிர்மணிமகுடமும், உதயகிரியிலெழுந்த சூரியன்போற் றுலங்கும்படியாகவருகிறவன் இந்திரன் மைந்தனென்று சொல்லுகிறதற்குச் சற்றும் சந்தேகமில்லை. அதற்குச் சந்திரனைப் பாதியாகப் பிளந்து வைத்ததையொத்த கோரதந்தம் பெற்ற கொடிய இராக்ஷதப்படைகளை அடியோடுமடித்த அனுமக்கொடி காக்ஷியே சாக்ஷியாக விருக்கிறது. அன்றியும், அவன் வருகிற திறத்தை நோக்குமிடத்தில், வெற்றிபெற்ற வில்லைப்பற்றி ஈரேழுலகையும் இன்றே வென்று செல்லுவேனென்று இறுமாப்பு அடைந்து, யாவரையும் பொருளாகவெண்ணமல், யானைகளை நோக்கித் தாவுகின்ற ஆண்சிங்கம்போல் வந்துவிட்டான். மேல் நடக்கவேண்டியதென்ன? இனி சும்மாவிருப்பதிற் காரியமில்லை. நம்சேனைகளை வீரியங் கெடச்செய்து சூரியனுக்கெதிர்ப்பட்ட பனிபோல் ஓடச்செய்வான். இதல்லாமலும், ஆழ்ந்த பேரறிவுடைய அருச்சுனன் இதுவரையிலும் வாழ்ந்த நமக்கெதிரில் வந்து வெல்லவேண்டுமென்று வில்வளைத்தானுகில், இவ்விடத்

துள்ள நமதணியில் அவனெடிதிர்த்துப் போராடத்தக்கவர் கள் யாரிருக்கின்றார்கள்? ஒருவேளை தப்பியோடிப் பிழைப்போ மென்றாலோ அவன் கையிலிருக்கும் அஸ்திர வலிமையால் அதல சுதல பாதாளம் போனாலும் அங்கும்வந்து போர்புரிந்து கொல்வான். நாம் அறிந்த அருச்சுனனேயன்றி வேறல்லன். ஆகையால், நானொன்று நினைக்கிறேன், நம்மோடவன் எதிர்ப்ப தற்கு முன்னே அஸ்தினபுரத்திற்குப் போய்விடுவோமாகில், ஒரு வருக்கும் ஒன்றுமில்லை. ஊர்சிரிக்கப் பழியுமில்லை. யோசிக்கு மிடத்தில் வேறுவழியுமில்லை. அப்படிக்கு அல்லாமல் தானென் னுங் கருவத்தால் தலைகாட்டி நிற்போமாகில், என்றைக்கும் அவனை வெல்லும் வல்லபம் நமக்கு இல்லாதிருந்தாலும் இன் றைக்கு நிச்சயமாக நம்மை யவன் முறியவடிப்பான். அதே னெனில், நாம் நாடுவிட்டுப் புறப்பட்டதுமுதல் மாடுமடக்கிய விதுவரையில் நேரிட்ட துற்சகுனத்தினாலும் மனச்சோர்வி னாலும் வெற்றிபெறுவது அரிது. ஆதலால் நாம்மடக்கிய பசுக் கூட்டங்களை ஓட்டிக்கொண்டு பட்டினம்போய்ச் சேர்வோமாகில், நமக்குலாபமுண்டு நாம்பயந்துஓடிவிட்டோமென்று யாவரும் பழியார். அதற்கு ஓர் உபாயமுண்டு. அவ்வுபாயமென்னவெனில், குலநாயகனாகிய வீஷ்டுமாசாரியரும், கிருபாசாரியர், அஸ்வத் தாமா முதலிய பலரும் நானும் இங்ஙனம் நெருங்கிநின்று, எதிர் வருகின்ற தனஞ்சயனை மறித்து யுத்தஞ்செய்கின்றோம். நீரும் உனக்குரிய சில வேந்தரும் வீரர்களும் பாதிபதாதிகளும் மடக் கிய பசுக்கூட்டங்களும் இவ்விடம்விட்டுப் பெயர்ந்து, அரவக் கொடி நாட்டிய தேரைத் திருப்பிக்கொண்டு, தேசம்போய்ச் சேர் ந்துவிடுவையாகில், துரியோதனராஜன் பெரும்படையுடன்வந்து விராடராஜனுடைய பசுமந்தைகளை மடக்கிக்கொண்டு போய் விட்டானென்று உன்னைப் பலரும் கொண்டாடுவார்கள். ஆரியக் கூத்தாடினாலுங் காரியத்தின்மேல் கண் என்பதை யோசிக்க வேண்டும். அப்பனே! நான் சொல்லுவது உனக்கு ஒப்போ ஒப்பில்லையோ? சொல்லென்று கேட்டார். அவருரைத்த சொற் சூசகத்தையுணராத துரியோதனன் பதைத்துச்சொல்லலுற்றான்.

வாரும் சதுர்வேத பாராயணராகிய தனுர்வேதியரே! பாண்டு புத்திரர்கள் எங்கள்மாமனிடத்திற் சொக்கட்டான் ஆடிதோற்று, நீர்வளம்பெற்ற நாடும், நலனுற்ற நகரும், மற்றும் பற்பல செல் வங்களும், சேனைகளும் இழந்து, காட்டிற் பனிரண்டுவருஷங்

கழித்து, நாட்டில் ஒருவருஷம் அஞ்ஞாதவாசம் ஒழித்து, ஒருவருக்குந் தெரியாமலிருந்து வெளிப்படும்படியாக உங்களைப் போல் தேறித்தெளிந்த பெரியோர்களால் நிச்சயித்த நிபந்தனையை ஒத்துக்கொண்டகாலத்தில், மற்றொருவிதம் நிர்ணயம் பண்ணியிருந்ததை மறந்து பேசுகின்றீரோ? ஐயரே! ஐவரும் உருவமறைந்து கருவங்குறைந்து அஞ்ஞாதவாசத்திலிருக்கும் போது அவர்கள் இன்னவிடத்தில் இருக்கின்றார்களென்று நாமறிந்தால், அன்றுமுதல் பன்னிரண்டுவருடம் வனவாசம் பண்ணி ஒருவருடம் அஞ்ஞாதவாசம் செய்யவேண்டுமென்று ஸ்தாபித்திருக்கிற மொழிப்படிக்குச் சத்தியந்தவறுமற் போக்க வேண்டுமல்லவா? அப்படியிருக்க, அஞ்ஞாதவாசத்தவணைநாள் முடிவுபெறுமுன்னே எப்படிவெளிப்படலாம்? என்னுடைய நல்லகாலம் இப்போது வருகிறவன் அருச்சுனனாக விருப்பானுகில், நமக்கு மேலான நியாயவழி தருமல்லாமல் தாழ்வான தீமையைத் தரமாட்டாதே. ஓ தனுர்வேதியனே! மாறுபட்டுப் போராடும் பெருஞ்சமர் வல்லவராகிய பாண்டவர்கள் இந்தமச்சநாட்டிலிருப்பது தெரியாமல் வந்தோமோ? விராடபுரத்தின்மீது நமக்கிருந்த நெடுநாட்பகையை முடித்துவிடவேண்டுமென ஓர் மனதாய் முன்னர் திரிகர்த்தனே யனுப்புவித்து, பின்னர் நாமெல்லோரும் ஆலோசித்துப் பஞ்சவர்களின் அஞ்ஞாதவாசத்தைக் கெடுத்துவிடவேண்டுமென்று தானே வந்தோம். ஐயா துரோணரே! இப்படியிருக்க, அருச்சுனன் வந்தானென அதைரியமாய்ப் பேசுகின்றீரே. ஐயோ! நரனேவந்து நமக்கெதிர் நின்று யுத்தஞ்செய்யத் தொடங்குவானுகில், நாம் அவனுடன் பகைத்துப் போர்புரியவேண்டிய அவசியமில்லையே. விவகாரமென்கிற கயிற்றினால் அவனையும் அவனுடைய சகோதரர்களையும் அவர்களுக்குச் சகாயமானவர்களையும் குண்டுகட்டாகக் கட்டியுருட்டிவிடலாமே. அவனெவ்விதம் நம்மைவெல்லக்கூடும்? நாம் கைக்கொண்ட மாடுகளை அவனெவ்வாறு கைப்பற்றக்கூடும்? அவன் கழிக்கவேண்டிய அஞ்ஞாதவருஷத் தவணையில் இன்னம் ஒருநாட் போக்கவேண்டியதாயிருக்கிறது. இதற்குள் அவசரமாய் வெளிப்பட்டிருக்கின்றான். எங்கள்குல முதல்வராகிய வீஷ்டுமாசாரியருக்கு இந்த வித்தியாசங்களெல்லாம் நன்றாய்த் தெரியவரும். அந்தமகானுபாவரே இந்தவிவகாரத்தைக்கண்டறிந்து மறுபடியும் பாண்டவர்கள் வனவாசம் பண்ணும்படி ஸ்தாபிக்

கப்போகின்றீர். இதற்குள் நீரேன் ஆத்திரப்படுகின்றீர்? யுத்தத் திற்கு இளைத்த லோபரைப்போல் என்னை ஊருக்கு ஓடிப்போ வென்று உறுதிசொல்லவந்தீரே? என்னகாரணத்தால்இவ்வாறு கூறினீர்? நல்லது துரோணரே! நீர் சொல்லியவண்ணம் ஒற் றைத் தேர்மேல் வருகிறவன் தனஞ்ஜயனுகிச் சண்டைதொடுத் தாலும், அவனுக்குச் சகாயமாகத் திக்குப்பாலர்க ளடுத்தாலும், தேவர்கள், கந்தருவர், அரக்கர், இயக்கர், அரசர் முதலினோர்கள் வந்து என்னுடன் போர்கொடுத்தாலும் நம்மைஜயிக்கமுடியாது. எப்படியும் நாமெண்ணியவண்ணம் பழுதுபடாமல் மாட்டுமந் தையை மடக்கி நமதுவசம் பண்ணிக்கொண்டோம். நாமுந் துணிந்து வந்திருக்கின்றோம். ஆகையால், இவ்விடம் விட்டுப் பெயராமல் இருந்து ஒருகைபார்த்துவருகிற வீரனைப் புறங்கண்டு வென்று விவகாரமேற்கொண்டு ஜயபேரி முழக்கி என் தேசத் திற்குப் போவேனேயல்லாது, திருடனைப்போற் பதுங்கி ஓடிப் போகமாட்டேன். நூலுணர்விற் பயின்ற நுண்ணியனே! இது வரைக்கும் சத்துருக்கள்மேல் யுத்தம்பண்ண வேண்டுமென்று சொல்லுமுன்னமே கண்கள் சிவந்து கறுவிப்புகைந்து கைதேர்ந் த காரியவான்போல் மேகமண்டலம் அளாவிய தேர்மேலேறி, ஆயுததர ஆரவார வீராவேசத்துடன். அடுத்து வீரச்சேவகங் காட்டி எட்டுதிசையிலும் இசையை நாட்டிவந்த உங்களுடைய பகல்வேஷத்தை மெய்யென்று நம்பியிருந்தேன். இப்போது வெட்டவெளியாயிற்று. ஐயா! நமக்கெதிரோடிவந்த பகைவனைக் கண்டவுடன் வருந்தி மயங்கி வாடி ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து நெடுமூச்சுவிட்டு, நீநாட்டைநோக்கி ஓடிப்பிழைக்கிறே னென்று கண் கலக்கப்படுவதற்குத்தானே இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டு வந்தது? எதற்காக இவ்விடம் வந்தோம்? புறங்கொடுத் தோடுவதற்கோ? இதை நீர் நன்றாய்த் தெளிந்து சீர்தூக்கிப் பாரும். தேசிகனே! விற்றிறமேன்மைபடைத்த வேந் தர் யாவரும் விஜயனுக் கெதிர்நின்று மேன்மைபடைத்து ஜயம் பெறுந்திறத்தைச் சிந்தையில் நினைக்கமாட்டார்கள். அப்பப்பா! அவன் மகாதீரனென்றுசொல்லித் தளருகின்ற சிலைக்குருவாகிய உமது சொல்லைக்கேட்டு மீதலத்தோரும் பூதலத்தாரும் கலகல வென கைகொட்டி நகையார்களா? இனி உம்மைக்கண்ட கைம் பெண்களும் அலக்ஷியமாக பகையார்களோ? காயத்ரிதேர்ந்தகலை வேதியனே! மற்போர்நிறைந்தவிற்போர்சிறந்த வானவர்கோன்

மகன் வருவதைப் பார்த்து, வசமில்லாமல் மடக்கிய மாட்டை யோட்டிக்கொண்டொதுங்கி மாநகர்க்குப்போவேனுகில், அதனுல் எனக்கு வருவது வசையோ? இசையோ? அல்லது வருகிற வனைக் கண்டு பயமில்லாமல் எதிர்நின்று போர்புரிந்து வென்று ஜயம் பெறுவது புகழோ? சொல்லும். மித்துருவை யிகழ்ந்து, சத்துருவைப் புகழ்ந்து மகிழ்ந்து பாடாநின்ற நைச்சிகனே! தனுர்மறை கற்ற சதுர்மறையோனே! எண்ணிறந்த கோடிக ளாக இவ்விடத்திற் சேர்ந்த நமது வீரப்படைகள் எல்லாஞ் சேர்ந்து ஒருவனுகத் தனித்து வராநின்ற வில்லாளியை ஜயிக்க மாட்டார்களென்றுல், ஒற்றைத் தேரோட்டி வருகின்ற ஒருவன் இத்தனைபேர்களையும் எப்படி ஜெயிப்பான்? வருகிற சுத்தவீரன் பிராணனைத் துரும்பாக மதித்தவனென்றுல், அத்தன்மையோர் நமது சேனைகளில் இல்லையோ? ஆகிலும், போர்செய்யப் புகுந் தோருக்குப் பிராணன் பெரிதோ? மானம்பெரிதோ? கடல்சூழ்ந்த வுலகத்தில் பெருமையும் மானமும் போனபிறகு சஞ்சாரப் பிரே தம்போல் பிராணனுடனிருப்பதில் என்னபிரயோசனம்? புண் ணியபூசுரனே! இனி நான் பலவாறுகப்பேசுவதில் லாபமில்லை. ஒரேவசனஞ் சொல்லுகிறேன் கேளும். இதோவருகிற என்பகை யாளியைக்கண்டுபயந்து அஸ்தினபுரத்திற்குப் போகமாட்டேன். எனக்கு உபகாரிகள்போற் சொல்லுகிறவர்களின் பேச்சுகளையெல் லாங் கேட்கவுமாட்டேன். இவைகளெல்லாம் அவரவர்கள் மன தில் உறுதியாயிருக்கட்டும். ஆனல், இப்போது வருகிற அர்ச்சு னன் சண்டைக்குப் பயந்தவர்கள், ஆவியைக் காக்க ஆசைப் பட்டவர்கள், பெண்சாதி பிள்ளைகள், மண்மனை, நிதிநிக்ஷபப் பாசமுள்ளவர்கள் இவர்கள் யாவரும் நன்மையுடன் பட்டினம் போய்ச் சேரலாம்.

அப்படிப்போக மனமுடையோர்களுக்கு யாதொரு தடையு மில்லை. இவ்விடத்தில் வந்திருக்கும் படைகளையெல்லாம் சாய்த் துக்கொண்டுபோனலும், என்னதிர்ஷ்டம் குறையாது. யாருக்கு யார் துணை? அவரவர்களுடைய நல்வினை தீவினையே அவ ரவர்கட்குத் துணையாய் நிற்கும். ஓ அறிவிலுயர்ந்த மறைவேதி யரே! நீர் இதை நன்ரு யறிந்துகொள்ளுமென்று அடங்காக் கோபங்கொண்டு துச்சாதனன் முதலிய தம்பிமார்களையும் தார் வேந்தர்களையும் நோக்கிக் குணத்தொனிசெய்து படபடப்புடன் பேசினன்.

ஆ என்னன்புக்குரிய தம்பிமார்களே! எனக்கு வெற்றி தர வந்த சம்பிரமவீராளாகிய வேந்தர்களே! பிரமதேயசுடையமுதற் குலத்தோன்றலும் விற்குருவுமாகிய துரோணாசாரியர் நன்னெறி கற்ற பெரியோரா யிருந்தும் சமயோசிதப் பேச்சைச் சாதுரிய மாய்ப் பேசிச் சாப்பாட்டுக்குச் சங்கடப்படாமல் காலபோசனஞ் செய்து காலங்கழித்திருப்பதே காரியமென்று ஆரியசித்தாந்த முதலிய சாஸ்திரத்திற் கண்டுளார்போலும், தநுர்வேதத்திலுள் ளனவெல்லாந் தப்பாமலுணர்ந்து புத்திமான்களுக்குப் போதிக் கத் தெரிந்தவர் வாதித்து வராநின்ற சத்துருக்களைச் சேதிக்கச் சென்று போர்புரிந்து வென்று வருகின்ற வீரத்திறம் இவ ருடைய தொழிலன்றென்று நன்முய்ப் பிரசித்தமானவர். ஆகை யால், இப்பேர்ப்பட்டவரை நீங்கள் நம்பியிராமல் வருகிற எதிரி யென்னும் போர் யானையின் முனை புகுந்து தனிமுகச் சிங்கம் போற் சாதித்துவிடுங்கள். சண்டைபோடப் பயந்த வைதிகர்க ளெல்லோரும் அர்த்தரதப்படைக்குப் பின்னிலைநின்று நமக்குச் சயமுண்டாகும்படி யாகஜபம்பண்ணிக்கொண்டிருக்கட்டும். உங் கள்வேலையில்நீங்கள்சாக்கிரதையாய்இருங்கள் ஒருவருதவியைப் பார்க்கவேண்டாம் போங்களென்றுரைத்தான். இவ்வாறு துரி யோதனன் சொன்ன சொல்லானது அவ்விடமிருந்தவர்களின் செவிகளில் நுழைவதற்கு முன்னமே துரோணாசாரியர் குமார னை அஸ்வத்தாமன் கேட்டு, நெருப்பில் வீழ்ந்த புழுப்போல் துடித்துக்கண்கள்சிவந்து பொறிபறந்து புகைமலிந்து பொருப் புக்கிணையான புயம்படைத்த புயங்கேதனனைப் பார்த்து வணங் காமுடியுடைய மன்னனே! என்று மத்தகஜம்போற் கூவியழை த்து அன்புக்கொருவராகியவீஷ்டுமாச்சாரியமும்,கர்னராஜனும், துச்சாதனன் முதலிய தம்பிமார்களும், மன்னமண்டலீகரும் மற்றுமுண்டான முடிமகிபரும் கண்ணிரண்டுமூடி காதிரண்டு மடைந்து உள்ளங் கலங்கி உடலும் நடுங்கி உயிரொடுங்கும்படிச் சிலவார்த்தைகள் சொல்லத் தொடங்கினன்.

அஸ்வத்தாமன் தந்தைக்காகப் பரிந்து பேசுதல்

ஆ கௌரவகுலாதிபனே! நாம் அஸ்தினபுரத்தை விட்டு வந்ததும் விராடராஜனுடைய பசுமந்தையை மடக்கிக்கொண் டதும் கூட்டமாகிய நால்வகைச் சேனைகளை வரிசைப்படுத்தி வைத்ததும் ஜயம் பெறுவதற்கோ? அல்லது அபஜயமடைவ தற்கோ? நீர் சொல்லும். அப்படிக்கிருக்க, வீரலட்சுமி வாசமா

யிருக்கும் வெற்றிவேல்பெற்ற துரோணாசாரியருடைய மனம் நொந்து நையும்படியாக வசைமொழிகளை வழங்கிவைத்தது தகுதியோ? கூரிய வேலும் வில்லுங்கொண்ட கோமானே! நீ பிள்ளையாய்ப் பிறந்தநாள் தொடங்கி இதுவரையிலும் எங்கே யுத்தஞ்செய்து வெற்றியடைந்திருக்கின்றாய்? இந்த விராட்புரத் திற்கு வந்து பசுக்காவலாளரை மடக்கி மந்தையை மடக்கிவிட் டோம். இதுவொரு ஜயம். முதலிலே சுகமாயிருந்த பாண்டவர் களையழைத்து மோசச் சூதாடிப் பூமி முதலிய செல்வங்களை அபகரித்துக்கொண்டு காட்டுக்கோட்டிவிட்டோம் இரண்டாவது ஜயம். இதுதானே நீ கண்காட்சியாய்க் கண்டிருப்பது. இதை விட வேறுசொல்ல யோக்கியதை உண்டா? என்னமோ பெரிய யுத்தங்களெல்லாஞ் செய்து சூரர்களை வென்று வெற்றிமாலை பூண்டு கோட்டை கொத்தளங்களை முற்றுகையிட்டதுபோல் மெத்த மெத்த இறுமாந்து பேசுகிறாயே. இதென்ன கட்டுவார்த்தை. நீ பேசும் வீரம் ஒரு காசுப்பெறுதே. நமது திறத்தை நாமே யெடுத்துப் பேசிக்கொள்ளுகிறதா? இது நன்றாயிருக்கிறது. போம் போம் ராஜனே! இராஜசபையிலிருக்கும் பெரியோர்களுக்குக் கடமை யென்னவென்றால், காமாந்தகராகிய காவலருக்குக் காரியா காரியங்களை யெடுத்துக் காட்டிக்கொண்டிருக்கவேண்டுமென்பதாக நீதிநூல் முறையிடுகின்றது. துரோணர் அந்நீதிப் பழக்கத்தையும், உலகவழக்கத்தையும் அனுசரித்துச் சொல்லவேண்டிய தருமத்தைச் சொன்னாராக்கும். அவ்வாறிடித்துச் சொன்ன தருமவாக்கியம் உனக்குச் சம்மதமில்லாமற் போனால், அவருடைய சொல்லுக்குக் காதுகொடுக்காமல் வருகிற வீரனுக்கு எதிர்போய் நின்று போர்புரியலாமே. அப்படிப் போகிற உன் வீரதீரத்தை யார் தடுத்தவர்கள்? நீயென்ன சண்டை செய்யாதவனா? பூர்வத்தில் நீ புகுந்த போர்முகத்தில் எங்கேயாகிலும் அடிபட்டுப் புறங்கொடுத்துஓடியிருக்கின்றையா? இல்லையே. கையில் வில்லுங் கணையுமிருக்கச் சத்துருக்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு சண்டை போடமாட்டாமல் கட்டுப்பட்டிருக்கின்றையா? இல்லையே. இப்போதுதானென்ன; நீ தேரேறிப் புறப்படுவதுதான் தாமதம்; துரியோதனமஹாராஜன் வில்வளைத்தானென்று கேட்டவுடனே போர்முகத்திலுள்ள அதிரத வீரர்கள் முதலிய யாவரும் அபஜயமடைந்து உயிர் தொலைவார்கள். அப்பேர்ப்பட்ட வாகைபெறுஞ் சேவகனாகிய

பூபதியைப் பார்த்து, நீ மாட்டை யோட்டிக்கொண்டு ஊர்முக நோக்கி ஓடிப்போவென்று இவ்விருத்தவேதியர் சொல்லலாமா? ஐயோ உத்தமனே! அவர் சொன்ன சொல்லானது நீ இதுவரையிலும் பெற்றிருக்கும் வீரத்திற்கு மிகவுங் குறைவாயிற்றே. அப்பா சுத்தவீரனே! சகோதரர்களிடத்திற் சூதாடிப் பூமியைப் பறித்து ஜ்ஞஷ்டப்ரா துருவின்பெண்சாதியானதிரௌபதாதேவியென்னுந் தாயைத் தலைமயிரைப் பிடித்திழுத்துச் சபைநடுவே வஸ்திரத்தை உரிந்து மானக்கேடுண்டாக்கிக் காட்டுக்கு வழி காட்டிவிட்ட கதைபோல் நினைத்தையோ? அல்லது உன் மாமனாகிய இச்சகுனி முதலினோர் வாய்கொண்டபடிபேசி சயித்தவீரமென் றெண்ணினையோ? ஐயோ! அப்படி ஜெயித்த ஜயமெல்லாம் கருமபூமியில் பாபமென்னுங் காணியாக்ஷியைக் கொடுக்கத் தக்கது. அவ்வளவு எளிதென்று இப்போது எண்ணுதே. வருகின்றவன் தனஞ்சயன், இவனுக்கெதிரிலிருந்து வில்வளைத்துப் பாணந்தொடுத்து யுத்தம் பண்ணித் தீரவேண்டும். வேந்தனே! சூதாடித் தோற்ற அந்தநாளையிலிருந்த அர்ச்சுனன் தானேயென்று அலக்ஷியமாய் நினைத்தால் இந்த நாளையில் உங்களையெளிதில் விடுவானென்று எண்ணங்கொள்ள வேண்டாம். உன்னம்மானை சகுனிராஜன் உனக்காகப் பாடுபட்டுச் சம்பாதித்த தருமமானது, சீக்கிரத்தில் திரண்டுருண்டுவளர்ந்து இப்போது வந்தெதிர்த்துக்கொண்டது. இதைக்குறித்து நீ யொருவருக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஒருவரும் உங்களுக்குச்சொல்லவேண்டிய அவசியமுமில்லை. நீயாரையுந் துணைப்பற்றவேண்டாம். நீ யொருவரை விரும்பித் துணைவரக் கேட்டையாகில் யாருந் துணையாகமாட்டார்கள். அந்த ஆசையை விட்டுவிடு. சூதாடி உனக்குச் சந்தோஷமுண்டாக்கினவன் இதோ உனக்கு நேராக நிற்கின்றான். இப்போது நேரிடப்போகிற போர்முனைக் கெதிரில் அவனைப் போகச்செய்வது நியாயம். ஆயுதபாணியாய் அவன் போர்மேற் புறப்படும் விதத்தைப்பார். நல்ல நல்ல ஆயுதங்கள் அவனிடத்திலிருக்கிறது, யாரொருவர் உடன்படுகிறார்களோ அவர்கள் குடித்தனத்தைக் கெடுத்துவிடும்.

அப்பேர்ப்பட்ட ஆயுதமிருக்க, உனக்கென்ன குறை? அவன் பன்னிரண்டு எட்டு இரிக்கால் தொகை முதலாகிய சில்லரைப் பகடைகளால் கட்டு-வெட்டு-குத்து-பிரித்துவிடு தனியே ஓட்டிவிடென்று சொல்லி விஜயனை யெதிர்த்தவனை வெல்லுவான்,

அந்தப் பார்த்தனை வெல்லும் பராக்கிரமம் எங்களைப்போன்றவர்களுக்கில்லை. எங்களையல்லாமல் நாகலோகத்தார்முதலிய மூன்று லோகத்தாரும் நரனுக்கெதிர் நிற்கமாட்டார்கள். ஒருவரும் நிகரில்லாதவனுய் வருகிற அர்ச்சுனனைக் கண்டு நான் வெல்லுகிறேன் என்று வாய்வண்ணம் பேசுகிற வல்லவர்களுமுண்டு. வாய்ச்சொற் சொல்லுவதற்கென்ன பஞ்சமா? வருகிறவனை ஜெயிக்கலாமென்பதென்ன கொஞ்சமா? மதிமரபிற்பிறந்தவனே! பெரியோனுகிய சிலேயாசாரியரை அவமதித்துச் சொல்லத்தகாத சொல்லைத் சொல்லி, வெல்ல வல்லவன் நீ யாகையால், இதோ நான் சொல்லுகிறேன். இம்மண்டலத்திலும் விண்டலத்திலும் அர்ச்சுனனுக் கெதிரொருவருமில்லை.

அவனுக்கு ஒருவரை ஒப்பிடுவது தப்பு. இவனுடைய போர்முனையில் நீதானுவது இன்னம் எப்பேர்ப்பட்டவர்களாவது கிட்டி எட்டிப்பார்த்து வந்தாலும் போதுமே. இதுவே அவனைச் சயித்த கீர்த்தியிலும் எண்மடங் கதிகமான பெருமையையுண்டாக்குமே. அவனுடைய போர்முகத்தில் நீர் நேர்முகமாகப் போய்வர மாட்டுவையோ? உன் கண்ணிற்கண்டு கலங்காதிருப்பையோ? நாகக்கொடியோனே! உன்னிடத்தில் விசுவாசம் வைத்த ஆசாரியர் எதிரி இப்பேர்ப்பட்டவன்? அவனுடு சண்டைசெய்யவல்லவர் எண்டிசையிலு மில்லையென்று சொன்னுல் இந்தப்பேச்சுக்குத் தகாதவார்த்தைகளைப் பேசினுய். அருமையறியாத உன்னுடைய யுத்தமுனையில் எங்களைப்போன்றவர்களிருக்கமாட்டோம். வீரத்தைவிட்டு நாணமுங் கெட்டிருக்கிற துரோணசாரியர் தனுர்மறைக்குருவாயிருந்தும், துரியோதனன் பேசிய ஈனவார்த்தைகளைக் கேட்டும், இன்னம் போகாமலிருக்கிறூர். இவர் இவ்விடத்திலிருந்து சண்டைகூடச் செய்வார் போலு மிருக்கிறது. ஐயா! அவமரியாதை நேரிட்டபோதே அந்த அரசனுடைய உறவை நீக்கிவிடவேண்டும். அல்லது பேசினவன் பிராணனை அறப்போக்கி விடவேண்டும். இவ்விரண்டிலொன்றும் இல்லாதிருப்பது மனுஷத்தனமல்லவேயென்று அசுவத்தாமன் தன்தந்தையை நொந்துக்கொண்டு அரவக்கொடிக் கதிபனைப்பார்த்து, அரசனே! இப்போது நான் சொல்லுகிறதைக்கேள். எல்லாவுயிரையுங் கவரும்படியான எமதருமராஜனையும், கடல்நீரைவறட்டும் வடவாமுகாக்கினியையும், உருத்திரமூர்த்தியின் கண்டத்தைக் கருகிய ஆலவிடத்தையும், மட்

டுப்படாத எட்டுத்திக்கையும் அட்டமாகயத்தையும் ஒருநொடியில் மடிக்கப் பார்ப்போம். அல்லது ஜயிப்போம். தேவேந்திர குமாரனை சிலவிஜயனை மாத்திரம் ஜெயிக்கமாட்டோம். நீ உன் சிந்தையில் இதை விந்தையாகக்கொண்டு மனவுறுதியோடு நின்று தெளிந்துபாரென்று கூறினன். அந்த சொற்களையெல்லாம் துரியோதனனுக்குச் சமீபத்தில் நின்ற கர்னராஜன்கேட்டு நெறநெறவென்று பற்கடித்து, வெற்றி வீரவேல் பெற்ற பெரியோர்களை நோக்கிப் பேசத்தொடங்கினன்.

கர்னன் கூறுவது

பூலோக புரந்தரராகிய புனிதர்களே! விராடராஜனுடைய பசுமந்தைகளை மடக்க யோசித்து, அஸ்தினபுரத்தை விட்டுப் புறப்பட்ட நாம் வாசமாலை தரித்துவரா நின்ற விஜயனென்னும் வில்லாளியை வியந்து புகழ்ந்து பேசுவது மேன்மையோ? குந்தி தேவியின் மைந்தர் தொடுக்குங் கொடுங் கணைக்கஞ்சிப் பயப்படுகிறவர்கள் விருதாவில் இவ்வளவுதூரம் ஏன் வரவேண்டும்? ஐயோ! வீட்டிலிருக்கப்போகாதா? அப்படியே வேலை மெனக்கிட்டுவந்தவர்கள் எதிரியைச் சயிக்கத்திறமில்லாவிட்டாலும் வாயை மூடிக்கொண்டு சும்மாவிருக்கலாகாதா? திறவான்களாகிய தீரர்களுக்கு நேரில் வாய்க்கு வந்தமட்டும் பிதற்றுவானேன்? இவ்வளவு காரியத்திற்குப் பெரியவர்களென்று பேர்வைத்துக்கொள்ளுவானேன்? தனக்கு வெல்ல வல்லபமில்லாவிட்டால் தரணியிலுள்ளவர்களும் வெல்லமாட்டார்களென்று தப்புந்தாறுமாய் வீண்பேச்சு பேசவேண்டிய வேலையென்ன? சுத்தவீரர்கள் மனமுறிய மெத்தவருத்தப்படுத்துவானேன்? இருளைக்கெடுத்துவந்த மத்தியானச் சூரியன்போன்ற நாளொருவனுமெழுந்துநெருப்புக் கொழுந்துபோல் வருகிற விஜயனையடுத்து அச்சமில்லாமல் நாணிதொடுத்து அபாரமாகக் கணைகள்விடுத்துஎன்னிச்சையின் படியே எதிர்த்து போர்தொடுத்து அவனேறிவந்த தேரின் அச்சு மச்சு குத்துக்கால்களையு முறித்துக் குதிரை நான்கையும் அறுத்துக் காண்டீபத்தையும் அனுமக்கொடியையும் குறைத்து வெற்றி பெறப்போகிற என்வீரத்தை அர்ச்சுனனைக்கண்டு கொண்டாடுகிறவர்கள் அச்சப்படுகிறவர்கள் யாவருமிருந்து காக்ஷியாய்க் காணுங்கள். மேலும் மண்டலத்தைக் கீறி விண்டலத்தைப் பீறி குண்டலமசைய வருந் தேரோனுகிய தண்டதரன் தம்பியைக்

கண்டவுடனே, எண்டிசையதிர மண்டலாகிர்தியாகிய வில்லை வளைத்து வருணாஸ்திரம் பிரயோகஞ்செய்து வடவைத்தீ வேகத்தைமாற்றுந் தன்மைபோல் ஒருகணத்தில் அவன் பலத்தை மாற்றி நீங்கள் கண்டு கண்களிக்கச் செய்கிறேன் பாருங்கள். இதல்லாமல், அவன் வனவாசம் பண்ணிய பன்னிரண்டுவருடமும் அஞ்ஞாதவாசமான ஒருவருடமும் துருப்பிடித் தழுக்கடைந்து மழுங்கிக் கிடந்த காண்டீபத்தையும் கணைப்பெட்டியையுங் கைக்கொண்டு கலங்காமல் நமக்கெதிர்வருகின்ற நரனுடையதிடத்தையுந் தீரத்தையும் தேகத்தையும் சின்னபின்னமாய்ச் சேதிக்கிறேன். நீங்களெல்லோருங் கூடிப்பார்க்கலாம். ஓபெரியோர்களே! அர்ச்சுனனுக்கெதிரி அங்கர்கோனென்று,இச்சகமெங்கும் பிரசித்தமாகப்பேசிக்கொண்டிருக்க,நான் அவனை எளிதில்விடுவேனே? நானும் ஒரு வில்லைப் பிடித்து மலைபோலெதிர்த்து மலைந்து போர்த்திறந் தெரிந்த புண்ணியவான்களைப்போல் புகழ்பெறுகின்ற பிரதாபத்தைக் காணவாருங்கள். குளப்படியாற் பாய்ந்து வருங் குதிரைகள்மேலும் அக்குதிரைகள்பூட்டிய தேர்மேலும் கோடாகோடி பாணங்களைச்செலுத்திக் கொல்லுவதல்லாமலும், அவனது ஆஜானுபாகுவாகிய கரங்கள் தறிபடவும் கால்கள் முறிபடவும் விரிந்தமார்பு துளைபடவும் அணிந்த முடியுடன் தலையறுபடவும் விரைந்து போர்புரிந்து நான்வெற்றிகொள்ளப் போகிற வித்தையைப் பார்த்து நீங்கள் மகிழுங்கள். இவ்விடத்தில் நான் உறுதியாகச் சொல்லுகிறேன். ஞாபகமாய்க் கேளுங்கள். நானிதுவரையில் நரபதியாகிய துரியோதனமகாராசனிடத்தில் உண்டு வளர்ந்துவந்த செஞ்சோற்றுக்கடனும், கர்ணன், அர்ச்சுனன் என்னும் எங்களிருவரில் வல்லவர் யாரோவென்று சந்தேகங்கொண்டிருந்த சகலருக்கும் சந்தேகந் தீருஞ்சமயமும் இளமைப்பருவத்தில் தனுர்வேத பரிக்ஷை பார்த்தபோது அர்ச்சுனன் தலையையறுத்து அரங்கபூசை செய்கிறேனென்று அரசருக்குமுன்னே நான்கூறியிருந்தசபதமுடியுங்காலமும்,பற்குனனை வெல்லும் வல்லவரில்லையென்று சிலையாரியனும் அஸ்வத்தாமனும் பேசிய கட்டுவார்த்தை கெட்டோடச் செய்யுந் தருணமும் இப்போது எனக்கு நேரிட்டிருப்பதனால், என்னுடைய பரமகுருவாகிய பரசுராமர் கற்பித்துள்ள அற்புதமான அஸ்திர வித்தைகளை நிலைபெறச் செய்து அவருடைய திருவடிகளைத் துதிக்குங் காலம் கிடைத்திருக்கின்றதை மதிக்கும் விவேகிகளாகிய மன்ன

வர்களே பாருங்கள். பெருந்தேரிலோங்கி ஒருசிலைதாங்கி வருகிறவனைக்கண்டேங்கி மயங்குகிற ஒருகோடி நரபாலரும் என்சுற்றிலுமிருந்து வெற்றிபெறும் வேடிக்கையை முற்றிலு மறியுங்களென்று உருத்திரமூர்த்திக் கொப்பான வீஷ்டுமாசாரியார் முதலிஞரருக்குக் கேட்கும்படிச் சொன்னன். அச்சொல்லை கிருபாசாரியர் கேட்டு மனந்தாளாமல் பேசத்தொடங்கினர்.

கிருபாசாரியர் கர்னனைடு பேசுதல்

ஆகா! அங்கதேசத் தரசராகிய அறிஞனே! நெடிய கடல் சூழ்ந்த உலகத்தை ஆளுகின்ற அரசருக்குச் சாம-பேத - தான-தண்டமென்னுஞ் சதுர்வித உபாயமுண்டு. இந்நான்கில் தண்டமென்னும் உபாயத்தை அனுசரித்துச் சண்டைசெய்யக் கற்றிருக்கின்றுயன்றி மற்ற மூன்று உபாயமும் அறிந்திலாய்போலும். அவ்வுபாய மூன்றையும் அறிந்துகொள்ளத்தக்க சுயபுத்தி உனக்கில்லாவிடினும் தெரிந்த பெரியோர்கள் சொல்லுகின்ற சொற்புத்தியாகிலுங் கேட்டு நடக்கவேண்டும். தண்டமென்பதைத் தாமதகுணத்தோர் விரும்புவார்கள். சாத்வீக குணமுள்ளவர்களுக்கு மற்ற மூன்றுந் தகுதியுடையனவாகும். அஃதெவ்வாறெனில் அரசனனவன் காரியத்தைக் கருதி யோசியாமல் பகைவர்மேற் செல்லுதல் அப்பகைவரைத் துன்பமில்லாமல் நிலைக்கச்செய்வதாகும். மேலும் தொழில் வல்லமையையும் தன் வல்லமையையும், எதிரி வல்லமையையும், துணை வல்லமையையும் ஆராய்ந்து தன் வல்லமை மேலிட்டிருக்குமாயின் தானெடுத்த காரியத்தை முடிக்கலாம். ஆதலால் காரியாகாரியங்களெல்லாவற்றையுங் கருதி பிறகு சமராடப் புகுவோருக்கு எவ்வுலகத்தும் எக்காலத்தும் ஒப்பில்லாக்கீர்த்தியுண்டாகுமென நீதிநூலில் கூறியிருக்கின்றது. அதன்றி தன் பலமும் எதிரி பலமும் சகலமும் அறிந்து வீரியமாக யுத்தஞ் செய்யத்தக்க புத்திமான்களாயினும் பெரியாரைத் துணைக்கொள்ளென்னும் நீதிபடி தன்னிலுமிக்க அறிவாளிகளைக் கேட்டு அவர்கள் புகன்ற நல்வழியே நடக்கவேண்டும். அப்படிக் கேளாத அரசன் உன்மத்தனுய் இருப்பானுகில், அவனது சுகதுக்கத்திற்கொப்பப் பொருந்திப் பக்கம் இருக்கும் என்போன்ற பெரியோர்கள் அவனுக்கு இடித்துச் சொல்லவேண்டியது கடமை. திசையளவுநாறும் உதிரப்பசை வீறும் வேலேந்திய கர்னனே! வருகின்ற தேர் ஒன்றென்றும்

அத்தேர்மேல்வருகிறவன் தனியனென்றும் அவன்கையிற்பிடித்துள்ள வில் ஒன்றென்றும் அவன் எம்மாத்திரமென்றும் இலேசாக வெண்ணி ஆத்திரப்பட்டுச் சொல்லினையல்லவோ? உன்னையொத்தவன் இவ்வாறு உரைத்தால் மாற்றுயர்ந்த பொன்னைப் போன்று வருகின்றவன் உன்னை என்னவென்றுபுகலவேண்டும்? அவன் உன்நாவுக்கு அடங்கினவனு? இலேசானவனு? அந்தோ! மாசானவனே! இந்த பாராளுந் துரியோதனன் முதலிய பல படைக் கூட்டங்களையும், வீஷ்டுமாசாரியர் என்னையும், வீரியம் பேசுகின்ற உன்னையும் ஒருபொருளாய்நினைக்காமல் திரஸ்காரஞ் செய்யத்தக்கவனென்று உனக்குத் தெரியாதா? ஆண்சிங்கஞ்சீறியானைக்கூட்டத்தின்பேரிற் பாயுந்தன்மைபோல் வருகின்றனே? அவனுக் கெதிர்நின்று போராடுபவர்களுமுண்டோ? சிவபெருமானொருவனே சென்று திரிபுரம் நீறுகக்கண்டு திரும்பினனென்று இதுவரையிலும் நீகேட்டு இருக்கவில்லையோ? செருமுகப்புலியோ சீர்படைத்த பாஞ்சாலராஜனுடைய பட்டினத்தில் திரௌபதாதேவிக்குத் திருக்கலியாண முகூர்த்தமென்று சுயம்வரஞ் சாட்டியபோது மச்சேந்திரலக்ஷ்யத்தை முடித்து,இச்சைவைத்துவந்த ராஜரெல்லோரையுங் ஓடவிட்டடித்துக் கச்சணிந்த பெருந்தனக் காரிகையுங் காண்டீபத்தையுங் கைப்பிடித்துக் கலகலவென்று ஜயலக்ஷ்மி நடித்துவரக்கண்ட காளை வருகின்றன். அவனுடனெதிர்த்துப் போராடுந் திறனுள்ளவர்கள் எவரும் இல்லையே. மாலை புனைந்த மணிமுடியணிந்த வண்மையோய்! நீயந்தச் சுயம்வரகாலத்தில் திரௌபதாதேவியைக் குறித்துப் போயிருக்கவில்லையோ? சகல ராஜாதி ராஜராலும் வளைக்கப்படாத வில்லை நீ உன் இருகையினுல் தாங்கி வளைக்கவில்லையோ? அங்ஙனம் நடந்த விந்தைப் பேச்சுகளையாவது வேடிக்கையாய்க் கேள்விப்படவில்லையோ? இதன்றியும் கொடுமையாளராய்த் தொடர்ந்த யதுகுலத்தாரை யெல்லாங் குமுக்கி ஜயங்கொண்டு சுபத்திராதேவி மணம்புரிந்து கொணர்ந்த காலத்திலும், முப்பத்துமுக்கோடி தேவர்கள் முதுகாட்டியோட வடித்து அஷ்டதிக்குப் பாலரும் சப்த சமுத்திரத்துடன் சப்தமேகமுஞ் சலிக்கக் கெலித்துக் காண்டவவனத்தை அக்கினிதேவனுக்கு ஆகாரமாக ஊட்டிவைத்த காலத்திலும், அனுவிர்தகண்டம் அளாவிர்தகண்ட முதலிய உத்தரகுரு கண்டத்திலுற்றோரியாவரும் முடிவணங்கித் தொழுது கண்ணீர்விட்டழுது எங்களுக்குப்

பழுதுவராமற் காரும்; கடைக்கண் பாருமென்று உபசாரத்துடன் திரவியங்கள் குவிக்கப்பெற்ற காலத்தினும், மாயாவரத்துடன் தோயமாபுரத்திலிருந்த காலகேய நிவாதகவசர்களையும் இரணியபுரவாசிகளையு மடித்து அவர்களுடைய தோள்வலியும் உரத்தின் வலியும் உபயோகமாகவொட்டாமல் அடித்துமுடித்த நாளையிலும், அட்டதிக்கும் புகழ்பெற்ற சித்திரசேன னென்னுங் கந்தருவராஜனைக் கொட்டமடக்கி நமது அரசனுகிய துரியோதன மகாராஜனையும் தம்பிமார்களையும் தர்மபத்தினிகளையும் கட்டு அவிழ்த்து மீட்டு மானங்கெட்ட பிராணனைக் காப்பாற்றிவிட்ட காலத்திலும் இதோ வருகிற கட்டழகனுகிய கிருட்டினனுக்குத் துணையா யிருந்தவர்கள் யார்? ஒருவருமில்லையே. எக்காலத்திலும் அவன் கையிற் பிடித்த விஜயகாண்டீபத்தின் துணையல்லது வேறுதுணை கண்டதில்லையே. அவன் வேறு துணை நாடிப்போய் ஜயித்திருப்பதுண்டானுற் பேசு. கர்னராஜனே! உன்னுடைய குணதிசயமென்ன வெனில், அரசர் முதலினேர் கூடிய சபையில் எனக்கு மிஞ்சினே ரெவருமில்லையென்றும் எனக்கே எல்லா ஆற்றலுறுண்டென்றும்என்னுடன் போராடும் பகைவர் பூமியிலில்லையென்றும் பலவாருகப் பேசுகிற வழக்க முனக்குண்டு. நீ சொல்லியவண்ணம் எங்கேயாவது சோர்வற முடித்து வெற்றிகொண்டு இருக்கின்றுயா? நீ எந்தச் சத்துருக்கள்மேல் சண்டைக்குப் போனுய்? எவ்விடத்தில் கீர்த்திபெற்றுய்? இந்த நரனுக்கு நேராகப் போய் நிற்கத்தக்க திறமுனக்குண்டா? அப்படியிருந்தால் யாதேனுமொன்று குறிப்பி. அப்பா! நான் பேசுவதென்ன தப்பா? சிவபெருமானுஞ் செங்கண்மாலும் பிரமாவும் தேவேந்திரனும் தேவர்களும் மற்றும் உள்ளவர்களாலும் ஜயிக்கமுடியாத வல்லவனனவன் வில்லவளைத்தானுகில், அவனுடைய வீரத்தைப்பழித்து இங்கிருக்கும் அரசர் முதலிய ஆரியர்களுக்கு எதிரில் என் வீரத்தைக் காட்டி ஜயம் பெறமாட்டுவையோ? எண்ணமற்பேசிய நீ இழிவடையப் போகிறுய். உன் திறத்தை நாங்களறியாதவர்களா? அடா அப்பனே! சிரேஷ்ட முனிவராகிய வீஷ்டுமாசாரியரும், சிலேக்குருவான துரோணசாரியரும், சிவசுப்பிரமணியக் கடவுள்போன்ற அஸ்வத்தாமாவும், நானும், நீயும், தேனிறைந்தவலம்புரிமாலையணிந்த துரியோதன மகாராஜனும், ஜகத்ரக்ஷகராகிய தார்முடிவேந்தர் பலரும் ஒன்றுகச் சேர்ந்து அழகிய தேரைச் செலுத்தி

வில்லம்புகள் தாங்கி மேலான யுத்தஞ்செய்தாலும் இந்த அர்ச்சுனனை வெல்வது அரிதரிதென்று கருதிக் கரையும் எங்கட்கெதிரில், நானெவனே போர்முனை புகுந்து வெல்லுகிறேன்; அவனைக் கொல்லுகிறேனென்று நீ சொல்லுகிறது காலில்லாதவன் காதவழி நடப்பேனென்பதுபோலாம். நீசொன்ன சொற்படி முடிப்பையாஞல், பனியானது சூரியனைவிழுங்கிவிடுமென்று சந்தேகமறப் பேசலாமே? ஓ கொடைக்காரனே! நீர்வளமுள்ள குருநாட்டுக்கு அதிபதிகிய கௌரவகுல முதல்வன் உன்னிடத்தில் நேயம் வைத்திருந்தால், அவனுக்கு ஸ்திரமான உறுதிவார்த்தைகளைச் சொல்லி நீதிநெறி குறையாமல் பாராளுமுறையைப் போதித்துப் பக்கத்தில் மந்திரிபோலிருந்து, தந்திரத்துடன் நடத்துவதைவிட்டுப் பயன்படாத வார்த்தைகளைப்படித்து அசத்தியத்தைச் சத்தியமென்று கூறித் துரியோதன இராஜனை சண்டைமுகத்திலிழுத்துவிட்டு இருபுறத்தும்இடியுண்டிளைத்து மருண்டு நிற்கவைத்து அச்சமயத்தில் நீ அப்பால் நீங்கிப் போவதற்காகவோ இவ்வளவு தூரம் நினைத்துச் சொல்ல வந்தாய்? உத்தமனே! அந்தமட்டும் நீ யறிந்ததுபோதும். இந்தமட்டும் உன் கடையைக் கட்டென்று மூவரையும் வெல்லுங் கிருபாசாரியர் கூறினர். அவர் மொழியைக்கேட்ட கர்ணராஜன், நெருப்பில்விட்ட நெய்போலுருகிப் புகைந்து கண்ணிரண்டும் சிவந்து கடுங்கோபங்கொண்டு குற்றமானமொழியை மெத்த மெத்தப்பேசிக்-கிருபாசாரியருடைய முகத்தைப் பாராமல் மற்றவர்கள் பக்கமாய்த்திரும்பி அவர்கள் முகத்தை நோகிச் சொல்லத்தொடங்கினன்.

கர்ணன் சொல்வது

ஓஹோ முடியரசர்களே! வாசங் குலவும் மாலை நிலவும் வணங்கா முடிவேந்தனுடைய வளப்பங்களையும், சகல சுபசந்தோஷ சவுக்கியங்களையும், தாழ்ச்சியில்லாமல் தங்கள் தங்கள் பந்துவர்க்கங்களுடன் காலங் கருப்புத் தோன்றுமல் அனுபவித்துச் சிறுமையின்றிப் பெருமையாய் அண்டிப் பிழைத்தபேர்கள், சண்டைமுகத்தில் வந்துநின்று அன்னமிட்டாரை யிகழ்ந்து கன்னமிட்ட சத்துருவைப் புகழ்ந்து சித்தங்களித்து மகிழ்ந்து தோள்வலியைத் துதித்து தாள்வலியை மதித்துக் கொண்டாடுமிவர்களால் நமக்கு ஜயங்கிடைக்காமற்போமோ? இவ்வுலகத்

தில் நன்னெறியில்லாமற் போமோ? மழைமாரி குறையுமோ? வளரறங்குன்றுமோ? ஆ அகாலமே! வருகிற நரனனவன் மிக வுந் திறவானென்று புகழ்ந்து பேசுவதனல் இலாபம் என்ன? அவன்பேரில் உங்களுக்கு அன்பிருக்குமாகில் அந்த அன்பு விருதாவாய் போகாமல் ஒன்றியாய் வருகிற அவனுடன் போய் கூடிக்கொள்வது தகுதியாகும். அப்படிக் கல்லவென்றல் அவ ரவர்களுடைய வீட்டுக்குப்போய் பெண்சாதி பிள்ளை முகத்தில் விழிக்கலாம். இதற்கு யாதொரு தடையுமில்லை நேரே வருகிற பார்த்தனுகிய பஞ்சைக்கு நானே யெதிராகிறேன். அவனு என்னை ஜயிக்கிறவன்? அடடா பாதாள மேழும் மீதல மேழும் பரந்த அண்டசக்கிரவாளப் பரப்பும்தப்பாமற் பெருமைபெறுஞ் சுப்பிரதீபக் கணைகளினல் சிவனுக்கெதிரான மதனைப்போலாக் கித் திக்குத் திகாந்தத்திலும் சொக்குப்பொடிபோல் தூற்றி விடுகிறேன் உங்களுக்குச் சேதிசொல்ல ஓலைவிடுகிறேன் உங்க ளூருக்குப்போய் உறங்குங்களென் றுரத்துக் கொதித்து உரைத் துச் சிரித்தான்.

இவ்வாறு கொடைக்கரசராகிய கர்னராஜன் பேசினபோது சேமித்துவைத்த திரவியம்போலுற்ற சிலநூலும் பெற்ற பல நூலுங்கற்ற வீஷ்டுமாச்சாரியர் உன்மத்தனை யொத்த துரியோ தனராஜனை யழைத்துத் தராசு நிலைபோல் நடுவுநிலைமையாய்த் தெரிவிக்கத் துணிந்தார்.

வீஷ்டுமாச்சாரியர் சொல்வது

திங்கள்மரபிற் ரோன்றிய மங்களமுக சுந்தர துரியோதன ராஜனே! சிலையாசிரியராகிய துரோணாசாரியர் சொன்னது மேன்மைமிகுந்த பெரியோர்கள் பேசவேண்டிய விதிதான். சகல கலைஞானமுந்தேர்ந்த அஸ்வத்தாமாவானவர் பரிந்தெழுந்து காரியாகாரிய மெடுத்துக் காட்டிக் கண்டிக்கவேண்டிய கடமை தான். மலைபோல் நிலைபெற்ற கிருபாசாரியர் மடக்கி மடக்கித் தெரியவைத்தது மனுநெறிமுறைதான். இலைபோலொளிரும்வே லேந்திய கர்னராஜன் தராதரமறியாமற் பேசியது தகுதியற்ற தான். பெரியோரை நிந்தித்துப் பேசப்போகாது. பெரியோர் சிந்தைநொந்தால் வறுமை நிறையும். வாழ்நாள்குறையும். இது எவர்களுக்கும் எப்போதும் தகாது. மல்லின் வலியும் மலையின் வலியும் தளர்வில்லாமல் வளருந் தடம்புயனே! அரவக்கொடி

யும் அணிமணிமுடியும் பொறுத்த ராஜகண்மணியே! திருதராட்டிர புத்திரனே! துரியோதனனென்னும் என் பௌத்திரனே! நான் சொல்வதைக்கேள். மெய்யறிவுள்ள மேலோர் செய்கையெவ்விதமென்னில், தங்களுக்குத்தற்காலம் நடந்துவருகிறதிசாபலனுந் தெய்வபலனும் செய்கையுமேதுவும் காரணகாரியங்களும் செவ்வையாக நாடித் தீர்க்காலோசனை செய்து வெல்லத்தக்க வல்லமை தங்களுக்குண்டாயிருந்து துணிவுபற்றியபோதிலும், பகைவரை எவ்வாறு வெல்வதென்பதைப்பற்றி தீர்க்காலோசியாமல் அலக்ஷியமாக வெண்ணி அவசரப்படார்கள். தங்களாலாகிற காரியமானாலும் என்னமோ போய்ப்பார்ப்போமென்பார்கள் மேம்பாடுடைய விவேகிகள். அவிவேகியானவன் முன்பின்னெண்ணுமல் வாய்க்குவந்தமட்டும் வல்லமைபேசி, எதிரியின் பலத்தை எண்ணுமலேசி, வீண்காரியத்திற் பிரவேசித்து நாலுபேரும் சீசியென்று நகைக்க முகங்கூசி நாணிவந்தால், சொன்னசொல்லின்படி வெல்லாமல் பல்லைக்காட்டிப் பரதவித்து ஓடிவந்துவிட்டானென்று உலகமுள்ளவரையிலும் வசைமொழியொழியாது நிற்கும். அதனால் நல்லோர் அடங்கியிருந்து காரியபாவங்களில் கருத்து முற்றநேரிட்ட காலங்களிலும் தங்கள் வல்லமையைக்காட்டித் தளர்ச்சிபெறுமல் புகழுடன் மனக்கிளர்ச்சிபெறுவார்கள். அப்பேர்ப்பட்ட வீரர்களை யாவருங்கொண்டாடவேண்டியது. இதுதான் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் புத்திமான்களுக்கும் புத்தியீனர்களுக்கும் இருக்கிற வித்தியாசம். ஈதிப்படியிருக்க, நாம் பூசிக்கப்பட்ட ஆசாரிய புருஷர்கள் யுத்தநிலத்தில் வரும் சத்துருவைக் கண்டமாத்திரத்தில் வெற்றிபெற விரும்பிப் போர்முனைபுகுந்து வில்வளைத்துக் கூரிய கணைகளைச் செலுத்திக் கருக்குலையச் செருக்களையக் கால்மாடு தலைமாடாக்கி ஜயம்பெறத்தக்க திடவான்களானவர்கள். இத்தன்மை வாய்ந்த உத்தமர்களை யுத்தகளம் விட்டோடிப் போங்களென்றும், எனக்குப் பின்னிருந்து பாருங்களென்றும், அக்பான கேவலரைப்போல் பெண்டாட்டி பிள்ளைகளைச்சேர்த்து பிழையுங்களென்றும் இப்படிக்கெல்லாஞ் சொல்லலாமோ? மானமுள்ளவர்கள் இவ்வாறு வெளிப்படையாகப்பேசி வெளிப்படுவார்களோ? மானங்கெட்டவர்கள் இன்றைக்கு வீரனென்பார்கள். எனக்கவன் பகையென்பார்கள். நாளைக்கு உறவாடும் வேலையிலிருப்பார்கள். எப்போதும் மெத்த நல்லவனென்பார்கள். சின்னைத்திற் கெல்

லாம் அப்பா! அவனு கெட்டவனென்பார்கள். அவர்களுக்கு ஈனமான மில்லாமையாலும் நாணம் வெட்கம் நலிந்தமையாலும் களிம்புபோக்கியசெம்புபோல்விளக்கி முன்சொன்னவார்த்தைக்குப் பின்சொன்ன வார்த்தை மாறுபடுமேயென்னும் மதியின்றி யலைவார்கள். மானமுள்ளவர்கள் சொற்சோர்வு படாமலிருந்து மானக்கேடுவராமற் காத்துத் தங்கள் பிராணனைத் துரும்பாய் மதித்துச் சத்துருநேரிட்டால் யுத்தமும்பண்ணி வெற்றியும்பெற்று வீரவாகையுற்று தீரலட்சுமிக்கு இருப்பிடமாவார்கள். ஆதலால் பழம்புண்ணுளி பரிகாரியென்னும் பழமொழிபோல் நாலு துறையுமறிந்த அனுபவசாலியான பெரியோர்கள் இப்படிப்போனல் இப்படி முடியும். இன்னது செய்தால் இன்னதுவருமென்று நம்போலியரைத் தடுத்துச்சொல்ல வேண்டிய சம்பந்த முண்டாயிருந்தபடியால் சொன்னர்கள். வழியே போகிறவர்கள் நமக்கு நற்புத்தி சொல்லவருவார்களா? அப்பா துரியோதனு! மூதுமறையாளராகிய இவர்கள் மூவரும் மும்மூர்த்திகளுக்கொப்பானவர்கள். சாபானுக்கிரக சாமர்த்தியமுள்ளவர்கள், திரிலோகக்கியானிகள். இத்தன்மையினராகிய ஜீவன்முத்தரை இக்கர்னனெதிர்த்து இழிவாகப் பேசத்தகுதியுள்ளவனே? நல்லது. இப்போது வருகிற அர்ச்சுனனுக்கு முன்னின்று போர்செய்து வெல்லுந் திடமுள்ள ஆரியருள்ளமும் அவர்களுடைய செவிகளும் வெதும்பி வெதும்பி வெந்து போகும்படியாய் விளைத்து விட்டீர்களே. ஆகா! இப்படியும் பேசலாமா? ஐயோவென்று தன்கையோடு கையறைந்து மூகம் வாடி வேர்த்துத் தேர்விட்டிழிந்து சூரியன்போற் புகழ்படைத்த வீட்டுமாசாரியர், துரோணசாரியர், கிருபாசாரியர், அஸ்வத்தாமா இவர்களிடத்திற்குச் சென்று நின்றார். பிரதாபம்பெற்ற பாட்டனர் தேர்விட்டிறங்கு முன்னமே துரியோதனன் பயந்து தானும் தேர்விட்டிறங்கி ஓடிவந்தான்.

அப்போது, துரோணர் முதலிய மூவருக்குஞ் சந்தோஷமுண்டாகும்படியாகத் துரியோதனனைப்பார்த்து விஷ்டுமாசாரியர் சொல்லுகின்றார்.

அப்பா துரியோதனு! இம்மூவரும் எப்படிப்பட்டவர்கள் என்றால், தேவரும் கொண்டாடுகின்ற சீலத்திறமுடையவர்கள். அன்றியும் நம்போன்றவர்கள் வணங்குவதற்கும் வழிபடுவதற்கும் வாழ்த்துவதற்கும் பூசிப்பதற்கும் விசுவாசிப்பதற்கும் நேசிப்

பதற்கும் தருமநீதிகளை யோசிப்பதற்கும் தானம்பெறுவதற்கும் நன்னெறியாய்ந்து நன்மார்க்கம் போதிப்பதற்கும் நமது மனதைச் சோதிப்பதற்கும் திருஷ்டிக்கண்வைப்பதற்கும் ஆசீர்வாதம் செய்வதற்கும் உன்னத ஸ்தானத்திலிருந்துகொண்டு பூஜிதையாகப் பெருமைபெறத்தக்க பெரியோர்கள். இவர்கள் திருவடிகள் நமது மணிமுடிமேற் பொருந்திக்கொள்ளத்தக்க யோக்கியமுடையன. இங்ஙனமிருக்க, இவர்களைக் கோபித்து அற்பமாகப் பேசி அவமதிப்பாக மதித்து சிந்தைவருந்த திடுக்கிடச்செய்து நாம் வீண்பழிசுமந்து வினைமூட்டை கட்டிக்கொள்ளுவதற்கு உரியோ ரல்லவே. துரியோதனு என்று பாரமார்த்திய தருமங்களை படித்தது இவ்வளவுதானு? உன்னுடைய இராஜாங்கமென்றுவெறுத்து, பெற்றூர் அகடழிந்தால் பிறரும் அகடழிப்பாரென்னும் பழமொழியுமெடுத்துக்காட்டிப் பெரியோரைப் பிழைத்த பேதமையால், கண்டவர் நின்றவர் கொண்டது கொண்டபடி கொழிப்பார்கள். அண்டையாருஞ் சிரிப்பார்கள். சண்டையின்தன்மை உனக்கென்ன தெரியும்? சாதுக்களின் சேதியை நீயெப்படி அறிவாய்? சாதுசங்கப்பழக்கம் எவ்வாறு உணர்வாய்? காரியத்தாழ்ச்சிசெய்து கலகமுண்டாக்கிக் கலைத்து அறிவாய்; போபோவென்று கடுஞ்சொற்சொல்லி, ஆசாரியருடைய பாதங்களில் வீஷ்டுமாச்சாரியர் வீழ்ந்து கையுமெய்யுங்குவிய நேயமும் அன்புநிறைய வெற்றிக்கு வித்தாகிய வேத வேதியரைப்பார்த்து விளம்பலுற்றூர்.

ஆசாரிய சுவாமிகளே! தனுர்வேத சதுர்வேத சம்பன்னர்களே! சரணம் சரணம். புல்லறிவுடையோர் என்ன சொன்னலும் கற்றறிவுள்ள உத்தமராகிய தங்களைப் போன்றவர்கள் அதைக் குற்றமாய்க் கொள்ளார்கள். மேலும், தங்களை இகழ்ந்து பேசிய தறுகண்ணுளரை பதிலுக்குத் தாங்களிகழாமல், ஜீவகாருண்யத்தால் க்ஷமிக்கவேண்டியது. அதுவுமல்லாமல், ஊழ்வினைவயத்தால் இகழ்ந்தவர்கள் மீளாநரகத்திற்கு ஆளாகாமல் ஜகதீசனைக் குறித்து மந்திர ஜபார்ச்சனை செய்து மன்னிப்புக்கேட்டு வரம்வாங்கி க்ஷமித்தலும் சான்றோர்க்குரிய கடனுகையால் பூரணகிருபாநோக்கமுள்ள புண்ணியர்களே! இந்தப் புத்தியில்லாத பேருக்குத் தீங்கு நேரிடாதபடி சித்தமிரங்கித் திருவருள்பாலிக்கவேண்டும்; பகைவர் நேரிட்ட சமயத்தில் இப்பதிதர் பேசிய வீண் வீரம்பேச்சும் விருதா கைவீச்சும் பயன்படாது. காற்றுக்

குப் பதர் கலங்காதிருக்குமா? கலங்காமணிகளாகிய காரணர் களே! அடிமை புகுந்த எங்கள்பேரில் அன்புவைத்து ஆதரிக்க வேண்டும். இனிநான் சொல்லவேண்டிய உபசாரமென்னவிருக் கின்றது. தனுர்வேதக்கடலும் சதுர்வேத சமுத்திரமும் உள்ள நிறையக்கொண்டிருக்கும் உத்தமர்களே! குற்றமற்ற உங்களுக்கு ஒப்பாக நாங்கள் வேறொருவரை நினைக்கத் தக்கதோ? அதுநிற்க குருகுலநாதனுக்கும் அவன் சேனைக்கும் ஏதாகிலும் தீங்குநேரிடு மாகில், அந்தப்பழியான துரியோதனனுக் குரிமையாகிப் பிரியா திருக்கிற தனுர்வேத சம்பன்னராகிய உங்களைச்சாராமல்விடாது. அப்போது மதிப்பிலுயர்ந்த உங்களை நாடெங்குந்தூறுவார்கள். மதிப்பற்றவர்களைக்குறித்து யாரும் பேசமாட்டார்கள். ஆதலால் தங்கள் மனத்திற் பலவாருகிய குற்றங் குறைகள் இருந்தாலும் அவைகளைத் தீர்க்க வயிரமாகப் பாராட்டாமல் தம்மையடுத்த மன்னவனுக்கு எப்போதுங் கீர்த்தி யுண்டாகும்படிச் சகாயஞ் செய்யவேண்டும். மனுநெறி முதலிய மற்றநூல்களிலும்சொல்லி யிருக்குமுறையும் இதுதானே அப்பேர்ப்பட்ட சாஸ்திரங்கள் முற்றுங் கற்றிருக்குங் கருத்தினையுடைய கடவுளரே! மற்றோர் விண்ணப்பம். இந்தக் கர்னராஜன் கழறிய வார்த்தைகள் கள ங்கமுள்ளனவென்று யோசிக்க வேண்டாம். அவனுடைய கருத்தை வேறுவிதமாகக் கண்டுகொண்டேன்; அதென்னவெ னில், தானிப்படிப் பேசினால் உங்களுக்கு இன்னும் மேலான வீரத்துவமுந் தீரத்துவமும் உண்டாய் அர்ச்சுனனைச் சயிப்பீர்க ளென்றும் துரியோதனனிட மிருக்கும் உங்கள் அன்பு வெளிப் படுமென்றும் புருஷயுத்தியாகச் சொன்னன். ஆதலால், தாங் கள் மனம்பொறுத்துக் காத்தருளவேண்டும். இதோ நமக்கெதி ரில் அதாகதஞ் செய்யக்கருதி வருகிற சுவேதவாகனனென்னுங் காளை சூரியபகவானுக்கு முன்னே நாமும் நமது சேனையும் பனி போல் ஆய்விடுவோம். இதுபிரத்தியக்ஷமாகத் தெரிந்திருந்தும் நீங்கள் மனவெறுப்படைவானேன். பிறகு தங்களுடைய சித்த மென்று அளவிடுதற்கரிய புகழ்ப் பிரதாபத்தையுடைய வீஷ்டு மாசாரியர் வேண்டிக்கொண்டார். உடனே, துரியோதனராஜ னும் கர்னராஜனும் பணிந்து துரோணாசாரியர், கிருபாசாரியர் அஸ்வத்தாமா முதலிய மூவரையும் போற்றிச் சுவாமிகளே! விளையப்போகிற தீங்கு இவ்வகையானதென்று தெரியாமல் எதே தோபேசிவிட்டோம். எங்கள் பிழையைப் பொறுத்து இரக்ஷிக்க

வேண்டுமென்று சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து வேண்டிக்கொண்டு அவர்களின் மனக்குறையை மாற்றினர்கள். இந்தப்பிரகாரம் இவ்விருவரும் வேண்டிக்கொள்ளச் சான்றோராகிய அம்மூவரும் கோபமாறி துரியோதனனையும் கர்ணனையும் ஆசீர்வதித்துப் பக்கத்திலுள்ள பலரையும் நோக்கிச் சிலமொழி பகர்ந்தார்கள். இதழ்விரிந்த வலம்புரி மாலையணிந்த குருகுலவேந்தனும் அங்கதேசராஜனும் எங்களை சுடச்சுடப் பேசியது முடிவில்லாத துன்பத்தை விளைத்ததாயினும், அது தேவர்கள் கைகூப்பிச் சிந்தித்து வந்திக்கப்பெற்ற விரதசீல வீஷ்டுமாசாரியருடைய சாந்த வசனமென்னும் அமுதத் தாரையால் தணிந்துவிட்டது. இனிச் சிந்தனையில்லை. நம்முடையபேரில் கோபங்கொண்டுவருகிற நரனுக்குத் தப்பிப் பிழைக்கத்தக்க வழியையும் மேல் நடக்கவேண்டிய வகையையுந் துரியோதனராஜனுக்கு ஆகவேண்டியஉறுதியையும் யோசித்துச்சொல்லுங்கள். நாமெல்லோரும் படைகூட்டி நின்று வருகிறவனை வளைத்துப் போர்புரிந்தபோதிலும் அர்ச்சுனன் அந்த துரியோதனன் பேரிலும் நாம் மடக்கிய பசு நிறையின்பேரிலும் லக்ஷியம் வைத்து வருவதால் கூட்டங்காட்டி எதிரில் நிற்கும் நம்மையெல்லாம் ஒருபுறமாய் ஒதுக்கிவிட்டு வணங்காமுடிமன்னனை வளைத்துத் தனித்து விஜயகாண்டீபக் கணையாற்றுளைத்து ஆதிநாட் பகையை ஆற்றுவானுகில், அநேககோடி அஸ்வரதங்களும் திரளாகிய சேனையானைகளும் வெகுவாகிய வீரர்களும் நாமும் கும்புகூடியிருந்து என்னபிரயோசனம்? வில்லாசிரியர் முதலியபல்லோருமிருந்தும் துரியோதனன் அடிபட்டான். பார்த்தீர்களாவென்று பழிப்பும் அவமதிப்பும் வருமல்லாமல் வேறு புகழுண்டாமோ? ஐயா வீஷ்டுமாச்சாரியரே! நமதுதேரில் வருகிறவன் நீலமேனியுடையவனுதலின் அர்ச்சுனனென்பதற்கு ஐயமில்லை. ஆகையால் அவனுடனெதிர்த்துச் சண்டைபோடுவதொன்று. அல்லது, ஒருவருடம் அஞ்ஞாதவாசத் தவணைக்கு ஒருநாட்குறைவென்று துரியோதனமகாராஜன் கணக்கிட்டுச் சொன்னவாறு வழக்கிட்டு மறுபடியும் காட்டுக்கு ஓட்டிவிடுவதொன்று இவ்விரண்டு காரியத்தில் ஒன்றை நிச்சயித்து ஸ்திரமாய்ச் செய்யுங்கள். மிஞ்சிய பிறகு விழிப்பது காரியமல்லவென்று துரோணாச்சாரியர் கேட்டுச் சிந்தைதெளியச் செப்பத் தொடங்கினர்.

அஞ்ஞாதவாசத் தவணைநாளைக் குறித்து வீஷ்டுமாசாரியர் பேசுவது

அப்பா துரியோதனு! தப்பான காரியத்திற் பிரவேசிக்காதே; நானுனக்குச் சொல்லுவதைக் கேள். அஞ்ஞாதவாசத் தவணை நாளைக்குறித்தும் பாண்டவர்கள்மேல் வழக்கிட்டு மீண்டும் வனவாசத்திற் கனுப்பவல்லவர்கள் ஆண்டவனுற் படைத்த நமது குலமுதல்வனுன சந்திரனுடைய நிழல்படிந்த பூமி முதலியது திரிலோகத்திலுங் கிடையாது. அதேனென்றுல் ஜகதீசனுடைய ஆக்கினையினுல் காலசக்கரஞ் சுழன்றுவருகிறகாலில் அகப்பட்ட சூரியசந்திரர் முதலாகிய நவக்கிரகங்களின் சாரத்திலுலும் தினசார பேதத்திலுலும் சற்றேறக்குறைய ஐந்துவருஷத்திற்கு ஒருதரம் அதிகமாசம் வருகிற கணிதப்படிக்கு யோசிக்குமிடத்தில் இப்போது இரண்டு மாதமும் பன்னிரண்டுநாளும் உயர்ந்திருக்கின்றன. அந்த உபகரி நாளைக்கூட்டி நேற்று உதயத்திற்கே பதின்மூன்றுவருடமுங் கழித்துப் போட்டார்கள். இன்றையத்தினம் அவர்களின் தவணைநாளைக்கு மேற்பட்ட நாளாகையால் நேர்புகுந்து போர்செய்யப் புறப்பட்டு இருக்கின்றுன் கிரீடி. நீயதை யோசியாமற் சொன்னுய். மன்னவனே! பாண்டவர்கள் வார்த்தை தப்பி வசனிக்கமாட்டார்கள். ஒருவர் தினையத்தனை நன்றிசெய்யினும் அதைப் பனையத்தனையாகக்கொண்டு, பிராணனுள்ளவரையிலும் மறவாமற் புகழ்ந்து பேசத்தக்கவர்கள். ஒருவர் செய்த பல பொல்லாங்குகளையும் அருவிச் சலம்போல் ஆற்றிமறப்பார்கள். தீர்க்க வைரிகளல்லர். சத்தியநெறியும் நித்தியவிதியுந் தப்பார்கள். வானவர்கொண்டாடும் ஞானமுள்ளவர்கள். வண்மை உண்மை திண்மையுடையவர்கள். நல்லொழுக்கமும் அவ்வொழுக்கத்திற்குத்தக்க நடைப் பழக்கமும் உடையோர்கள். பொருமையற்றவர்கள். அயலார்சொத்துக்கு ஆசைவைக்காதவர்கள். புறங்கூருதவர்கள். அக்கிரமத்திற்குடன்படாதவர்கள். குலமுறைக்குன்றுதவர்கள். ஆகையால் அவர்களொருநாளும் அபக்கியாதிபெறமாட்டார்கள். அபஜெயமடையார்கள். இவ்விதஇருதயசுத்தியுள்ளவர்கள் ராஜசபையில் ஒப்புக்கொண்டுபோன தவணைநாள் கழிவதற்குமுன்னமே தாராளமாகச் சண்டைக்கு வருவார்களா? அவர்கள் சாஸ்திரங்கல்லாதவர்களா? கணிதநூலுணராதவர்களா? நல்லது. அப்படித் தப்பிவருந்தன்மை பாண்டவர்களிடத்திலுண்டாயிருக்குமாகில் அஸ்தினபுரத்தில் நீங்களாடிய

தலையறுந்த ஆட்டத்திற்கும் சொக்கட்டான் ஆட்டத்திற்கும் திரௌபதையை துகிலுரிந்த ஆட்டத்திற்கும் ராஜசபைகூடிய உங்கள் துன்மார்க்கக் கூட்டத்திற்கும் உட்பட்டுத் தடைக்கஞ்சிய சர்ப்பம்போலும் கரையின்றி கட்டுப்பட்டிருக்கும் கடல்போலும் பொறுமையாய் இருப்பார்களா? இதலாவது நீதெரிந்துகொள்ளவேண்டாமா? கழனியிற் றழைத்த கருப்பஞ்சோலையின் செழுமையைச் செந்நெற்பயிர் காட்டவும், செந்நெற்பயிரின் கொழுமையைப் படப்பையில் வளர்ந்த கழுகஞ்சோலை நாட்டவும், கழுகஞ்சோலையின் வளமையை முடக்கின்றி யுயர்ந்த தென்னஞ்சோலை தெரிவிக்கவும், தென்னஞ்சோலையின் சீர்மையை இன்னுமுள்ள சோலைகள் விளக்கவும் தங்கும் நிலவளத்தினையுடைய குருநாட்டுக் கதிபனை குபேரனே! பன்னிரண்டு வருடம் வனவாசஞ்செய்த பாண்டவர்கள் சந்திரனுடைய சாரகதியினுல் அஞ்ஞாதவாச வருடம் ஒன்றையும் நேற்றோடுதுலைத்துவிட்டார்கள். நீ யதைக்குறித்துச் சந்தேகப்படவேண்டாம். பதின்மூன்று வருடமும் போக்கிவந்தால், உங்கள் நாட்டை விடுகிறேனென்று நீ ஆதியிற் சொல்லியவண்ணம் பாண்டவர்களுக்குரிய பதியைக் கொடுத்து, அவர்களுடன்கலந்து சமாதானமாய்ப்போவது மிகவும் நல்லது. கூடித்திரிய தர்மத்திற்கும் உத்தமம்; சத்தியவாக்குந் தப்பாது. இந்தப்படி நடவென்று மனத்தழுக்கற்ற வீஷ்டுமாசாரியர் சொன்னர்.

இவைகூறிய குலகுருவாகிய பிதாமகனைத் துரியோதனமகாராஜன்நோக்கி முகங்கறுகி மனம்குறுகி உரைதளர்ந்து, எங்களையாவே! தேவரீர்சொன்னசொல்லனக்குச்சம்மதமில்லை. முன்னே நிச்சயித்தனுப்பிய பதின்மூன்று வருடமும் கழிந்துபோனற்றூனென்ன, இன்னமும் ஒருமுறை வனவாசம் பண்ணிவரும்படி ஓட்டிவிடுவேனேயன்றி நாடு கொடுப்பேனில்லை. நீங்களந்தத் தவணைநாளை நாடிக்கணக்குப்பார்க்கவேண்டுவதுமில்லை. இதோ மின்னல்போற் பிரகாசிக்கும் வில்வேந்தர்களுக்கு முன்பாக விளம்புகின்றேன். சங்கினமீன்ற முத்துக்களால் அடைபடுமடை நீர்தடைபடாதோடுங் கழனிகள் சூழ்ந்த நாடேனும் நகரேனும் ஐவர்க்களிக்கமாட்டேன். அதேனெனில் நான் என்ன கொடுத்து இணங்கினலும் என்னிடத்தில் பிரியம் வையாமல் எந்நாளுஞ் சத்துருவா யிருப்பார்களன்றி எனக்கு மித்துருவாகார்கள். ஆகையால், நான் கொடுத்துப் பொல்லாங்கு பெறு

வதைவிட கொடாமல் விரோதப்படுவதே நன்மை. அவர்கள் வேண்டுமானால் சண்டைபண்ணி மூன்றுலோகத்தையும்வென்று தாமே ஆளட்டும். அவர்கள் செல்வஞ் செருக்கி வாழுங்காலத்தில் துரியோதனனுல் சுகப்பட்டோமென்று சொல்லிக்கொள்வார்கள். மேலும் எக்காரியம் எப்படியானாலும்எவர்களெவ்வாறு சொன்னாலும் அவைகளுக்கெல்லாம் காதுகொடாது ஒரே நிலையாக யுத்தம்புரிந்து போர்முனையில் இறந்தானென்று எனக்குக் கீர்த்தியுண்டாம் என்றான்.

இப்படி வணங்காமுடிபெற்ற மன்னன் ஸ்திரமாகசொன்ன கருத்தையும் வீஷ்டுமாசாரி சொல்லிவந்த விதத்தையும் காலநிதானத்தையும் படைமன்னர்களுடைய எண்ணத்தையும் வெற்றிமாலை பொருத்த துரோணாசாரியரறிந்து பேரும்பிரதாபமும் பெருமையும் படைத்த கௌரவகுலசிங்கமே! பாண்டவர்களுக்கு நாடுகொடேனென்று நீபகர்ந்தது நிச்சயமானால் உனக்கு அவர்கள் ஓடு கொடுப்பார்களென்பது உண்மையே. இனி ஒருகூஷணப் பொழுதும் நீ யிவ்விடத்தில் நிற்கப்போகாது. எங்களையும் ஸ்திரமாக நம்பாதே. நாமிப்போது கைக்கொண்டிருக்கிற மாட்டையோட்டிக்கொண்டு ஓட்டமும் நடையுமா யூர்போய்ச் சேருவையாகில், நீயும் வெற்றிபெற்றதுபோலாம். நமது யுக்தியும் நிறைவேறும். இவ்விடத்திலிருந்து போர்புரிந்து ஜயங்கொண்டு போகலாமென்றால், நாம் மடக்கியமாட்டையுங் குருநாட்டையும் இழந்து அநியாயமாக உயிரிழக்கவேண்டிவரும். ஆனதால் நம்முடைய சேனைகளை இரண்டு பிரிவாக்கி ஒரு பிரிவை ஆவினங்களுக்குக் காவலாக அழைத்துக்கொண்டு நீ அஸ்தினபுரத்திற்கு போய்ச் சேர்வது உத்தமம். மற்றச்சேனைகளுடன் நாங்கள் கும்பலாகயின்றைக்கு வருகின்ற தனஞ்சயனை உன்மேல் வரவொட்டாமற்றடுத்து, எங்களாற் கூடியமட்டுஞ் சண்டைதொடுத்துச் சமயம் பார்த்து பட்டினம்வந்து சேர்ந்துவிடுகிறோம். விரதங்கெட்டாலுஞ் சுகந்தக்கவேண்டும். சுகங்கெட்டாலும் விரதந்தக்கவேண்டும். இரண்டுங்கெட்டால் என்ன பலனுண்டாம்? இறைவனே! நாங்களெப்படியாகிலும் அடிப்பட்டு அவதிப்பட்டுத் தட்டுக்கெட்டுத் தடுமாறி வந்தாலும், விராடபுரத்திற்குப் போய் மாட்டுமந்தைகளை மடக்கிவந்தோமென்று பெருமை பாராட்டிப்பேசித்திரியலாம். இழிவென்பது நம்மைவிட்டிப்பாராதென் றுரைத்தருளினர். அக்காலையில் விரதமுனியாகிய வீஷ்டு

மாசாரியரும் கிருபாசாரியரும் சந்தோஷித்து, அந்தோ! இந்த யுக்தி மேம்பாட்டை விளக்குமென்று விளம்பி ரதகஜ துரகபதாதிகளை ஈரிருகூராக்கி ஒருகூறு துரியோதன மகாராஜனுக்கு மெய்க்காவலும் மற்றேர்கூர் பசுமந்தைக்கு காவலுமாக அமைத்து, அஸ்தினபுரத்தை நோக்கி போம்படியாக அனுப்பிவித்தார்கள். உடனே பிரதாபமுடிவேந்தன் புறப்பட்டு, அரவக் கொடி நாட்டிய தேரிலமர்ந்து ஆனினங்களையும் அநேக வீரப் படைகளையுந் தனக்கு முன்னுக நடத்தித் தானுந் தேரை விரைவிற் செலுத்திக்கோண்டு சந்தடி செய்யாமற் சென்றான்.

பிறகு துரோணாசாரியர் கிருபாசாரியர் வீஷ்டுமாசாரியர் அஸ்வத்தாமா கர்ணன் முதலிய மன்னர் மன்னர்களும் எஞ்சி நின்ற சேனைப்பிரிவைக் கடல்போற் பெருக்கிக்காட்டி எங்குந் தாமாய் எதிர்த்திருந்தார்கள். எவ்வகைப்பட்ட திறமுடையோரும் இவர்களுக்கு முன்சென்று நின்று யுத்தஞ்செய்வது மெத்தவும் அருமையென்று இளைத்து வாடி ஓடிப்போம்படியாகச் சிலசேனைகளைப் பல சேனைகளாகத் தோற்ற வமைத்து உத்தர திசைக்குக் கிருபாசாரியர், தக்ஷிண திசைக்கு அஸ்வத்தாமா, இந்திரதிசைக்குக் கர்ணன், தூசிப்படைக்குத் துச்சாதனன், கூழைப் படைக்கு விகர்ணன் இவர்களை மெய்க்காவலாக நிறுத்திச் சேனைகளுக்கு மத்தியில் சகுனி, சயிந்தவன், சோமதத்தன், பாகுலீகன் முதலிய முதன்மையோரை யிருத்திப் புறமிடாப் புகழ்பெற்ற புண்ணிய சீலனாகிய வீஷ்டுமாசாரியரும், மங்களம் பொங்கும் மகிழ்ச்சிதங்கிய துரோணாசாரியரும் சேனைகளின் முனைமுகத்தினும் நடு நிலத்தினும் முயற்சி விடாமல் பொருந்தினார்கள். வானமளாவிய குடைகளும், வாளொளி மின்னும் படைகளும், வகைவகையான கொடிகளும், வளைதடி முதலிய தடிகளும் பாலா பல்லயங்களும் மகரதோரணங்களும் நிறைந்து முரசு காகளம் எக்காளம் கொம்பு பம்பை தாரை பூரி வீரசின்னம் சங்கம் பேரி மற்றுமுள்ள வாத்தியங்களும் பூமி செவிடுபட முழக்கி ஆர்ப்பரித்திருந்தார்கள். இவர்கள் துணிவையும் சேனைசெனியங்களை திருத்தியமைத்த திறத்தையும் துரியோதனன் பசுமந்தையுடன் நீங்கிப் பட்டினம்போகின்ற ஒழுங்கையும் தேவேந்திரன் கண்டுவிட்டு ஒற்றியாய் ஒருதேரில் வருகிற அருச்சுனனுக்கும் கெட்டிக்காரத்தனமாய் பட்டினம்போகிற கௌரவர்களுக்கும் இவ்விடத்தில் நடக்கப்போகின்ற யுத்தத்திறத்தை பார்ப்போ

மென்று அக்கினி யமன் வருணன் குபேரன் பிரம்மா விஷ்ணு உருத்திரன் முதலிய சகல தேவர்களுடன் அந்தரநிறைய இந்திர விமானத்தின்மீது வந்து நின்றனர். அவ்வேளையில் பரவாசுதேவனனுக்கிரகஞ்செய்ய அவனுக்கினேப்படிக்குச் சொர்க்க லோக நிசம்பெற்ற அஷ்டகன் வசுபுத்திரன் வாருகன் நகுஷன் மாந்தாதா சிபி புரூரவன் கார்த்தவீரியன் பரதன் பகீரதன் சகரன் தசரதன் அரிச்சந்திரன் பாண்டு முதலிய மகாராஜரும் விருதுடால் மேளங்களுடன் அரிச்சந்திரனுதி கற்பகப் பூமாலை வாசங் கமகமவென்று பரிமளிக்கவந்து விளங்கிய வேடிக்கை பார்த்திருந்தார்கள். அவர்களில் சந்திரகுல தோன்றலான பாண்டுமகாராஜன் தன் மகன் வரவைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு இரண்டுதோளும் பூரித்துத் திரண்ட உடலும் பாரித்து இன்ப மதுவுண்டு தென்பு மேற்கொண்டு களித்தவர்போல் இந்திரனுக்கு அருகாசனத்திற் பொருந்தியிருந்தான்.

இவ்வாறு தேவதைகளுடன் தேவேந்திரனும் வானத்தில் தானமில்லாமல் விமானத்திலிருந்து வேடிக்கைபார்க்கும்போது தேனிறைந்த மாலைபுனைந்த சூரியகுலத்தோன்றல்களும் சந்திரகுலத்தரசரும் சற்றும் ஏமாறுமல் விழித்தகண்விழித்தவண்ணம் பார்த்துக்கொண்டிருக்கையில் விஜயப்பிரதாப வீரகாண்டீப விஜயனனவன் பானுகோடி ஜொலித்த சோப்யம்போல் வெளிவந்தான். இப்படியாகத் தேர்செலுத்தி அணிவகுத்திருக்குங் கௌரவசேனைக் கெதிரில் வந்த காண்டீபனது தேரொலியென்னும் பேரொலியால் அட்டகிரிகளும் அட்டநாகங்களும் அட்டதிக்குகளும் அட்டபாலர்களும் அட்டவசுக்களும் திடுக்கிட்டுத் திகைத்தார்கள். அந்தத் தேரிற்பூட்டிய குதிரைகளின் குளத்தெழுந்த தூசிப்படலமானது எண்டிசையு மொய்து எழுகடலையுந் தூற்றுச் சக்ரவாளச்சுற்றும் அண்டமுகடுமுற்றுங்கப்பிக்கொண்டது. வேடிக்கைபார்க்க நின்ற தேவரு மொதுங்கினர்கள். சக்ரவர்த்திகள் முதலிய யாவரும் பதுங்கினர்கள். சேனைமுனையிற் செறிந்திருந்த தீரரும் நடுங்கினர்கள். சேனபதிகளான வீரரும் ஒடுங்கினர்கள். தயங்குகின்ற துரியோதன ராஜனுடைய நால்வகைச் சேனைகளின் திறத்தையும், சுற்றிநின்ற படைவீரர்களின் திறத்தையும் எளிதிற் றெரிந்துகொண்ட விஜயனனவன் தனக்குச் சாரதியான உத்தரகுமாரனைப்பார்த்து எதிரிசேனைகளிருக்கின்ற இறுமாப்பைபார்த்தையா? நீரோட்டமுள்ள நெடுங்கடல்போல்

நிலைகொள்ளாதிருக்கின்றது. ஆகிலும், நமக்கொரு லக்ஷியமல்ல இப்போதவர்கள் செய்திருக்கின்ற அபாயமான உபாயத்தைஉனக்குநானெவ்வாறுரைப்பேன்? என்னுடையவெட்கம் என்வாயை மூடுகின்றது. நம்மையவர்கள் மோசம்பண்ணி விட்டார்கள். அந்தச் சங்கதியை உனக்குச் சொல்லாமல் வெல்லக்கூடாது. அதென்னவென்றால், காட்டுக்குப்போன பாண்டவர்களில் பார்த்தனனவன் தலைமாட்டுக்குத் தீங்குவிளைக்க வந்துவிட்டான். நீ நாட்டுக்கு நல்லதுரையானதால் நாம் கூட்டியமாட்டுமந்தையை ஓட்டிக்கொண்டு உன்வீட்டுக்குப் போய்விடென்று வணங்காமுடி மன்னனுடைய மனத்தைத் திருத்திப் பாதிசேனையை அவனுக்குக் காவலாகப் பொருந்தியனுப்பிவிட்டு, மீதிசேனையை நமக்கு எதிர் நிறுத்திப் பேரணிவகுத்துப் போராட நினைத்துப் பெரியோர்கள் நிற்கின்றார்கள். இவர்களுடன் யுத்தஞ்செய்யத் தொடங்குவோமாகில், பசுக்கூட்டங்களோடு துரியன் பட்டினம்போய்ச் சேர்ந்து விடுவான். பிறகு இவர்களை வென்று நாம் அடையப்போகிற லாபமென்ன? ஆகையால், நமக்கு நேர் நிற்கும் பெரியோர்களும் அறியாமல் மன்னனுக்கு உரியோர்களு முறியாமல் நாம் செய்யப்போகிற வேலையின்னதென்று யாருங் குறியாதிருக்கும்படியாகத் தேரோட்டிக்கொண்டு போகாநின்ற துரியோதனனுக்குக் குறுக்கேபோய் நின்று மறுத்து வருத்தி நமது மாட்டை மடக்கிக்கொள்வது மதியூகியாகிய மன்னவன் செய்யும் போர்த்திற உபாயமாக்கும். மைந்தனே! நாம் மீட்கவந்த பசுமந்தைகள் அஸ்தினபுரம் போய்ச் சேர்ந்தபின்பு இவ்விடத்திலுள்ள பல்லோரை யொழித்தும் வல்லோரை யழித்தும் பிரயோசனமென்ன? ஆரியக்கூத்தாடினாலும் காரியத்திற் கண்ணிருக்க வேண்டியது. ஆதலால், முன்னுதாகப் பசுக்களை மடக்கி விராடபுரத்திற் கனுப்பிவிட்டுப் பிறகு பெரியோர் முதலிய உரியோர்களுடன் சமராடித் துரியோதனனையுஞ் சலிக்கவடித்து வெற்றிபெற்று விராடபுரம் போவோம். ஒருவேளை தடுக்க நாடிப் போங்காலயில் இந்தப் பெரியோர்கள் மேல்விழுந்து போர் கொடுப்பார்களாகில், நாம் நேர்புகுந்து கடுங்கணைப் பிரயோகங் காட்டிக் கலக்கிக் கண்ணுக்குக் காணுமல் ஓடிப்போகும்படியாய் விலக்கிக் காரியானுகூலத்தைக் காண்போம். இதை விட யோசனையில்லையென் றிசைத்து எக்களிப்போடெழுந்த பற்குணனை உத்தரகுமாரன் பணிந்து சித்தமகிழ்ந்து இப்படிப்

பட்ட காலத்திலல்லவோ என்சாமர்த்தியத்தை யறியவேண்டும்? அத்தனேயென்று குதிரைக் கடிவாளத்தைக் குறுக்கிப் பிடித்துக் குலுக்கி விடுத்துச் சிகரகுன்றம்போன்ற தேரை செண்டு போல் எழுப்பிப் பெரியவர்களுக்கு வலசாரி வருவதுபோல் சூழ்ச்சிகாட்டித் துரியோதனன்போன திக்கைத் தொடராது மேலுக்குமேலாக மேற்றிசையைநோக்கி விரைவில் விட்டான்.

அக்காலையில், அனுமக்கொடியாடுந் தேரில் அமர்ந்து வருகின்ற அர்ச்சுனராஜன் தக்ஷிணதிசையிலிருந்த சிலேக்குரு வான துரோணாசாரியருக்கு குருபாத வணக்கம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று குறித்துக் காண்டீபம் வளைத்து நாணேற்றிச் சரணுணைசை காட்டி இரண்டுகணை யெடுத்துப் போற்றிப் பணிந்து விடுத்தான். காமதகனனுகிய கண்ணுதலின் கடாட்சம்பெற்ற காண்டீபன் அபிமந்திரித்து விட்ட அஸ்திரம் இரண்டும் அந்தரம்புகுந்து ஆகாசசிந்துவைக் கவர்ந்து அலர்ந்து விரிந்த மலர்களைப் பறித்துவந்து துரோணச்சாரிய ருடைய பொன்னடிமேற் பொழிந்து பூசித்து வருகையில் பின்னும் இரண்டு பாணங்களைப் பிரயோகஞ்செய்தான். அவ் விரண்டும் திரண்ட உருண்டைபோன்ற அண்டத்திற் பறந்தன. அவற்றுள் ஒன்று பிரிந்து ஆசாரியரைச் சூழ்ந்துபிரதக்ஷணஞ் செய்து திருவடியிற் பணிந்தது. மற்றொன்று பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒருவருடம் அஞ்ஞாதவாசமும் பண்ணித் துன்பந் தொலைத்துத் தேவரீருடைய அனுக்கிரகத்தால் இன்பம்பெற வெளிப்பட்டோம். என்னுடன் எல்லோரும் க்ஷேமமாயிருக்கின்றுர்களென்று சுபஞ்சொல்ல வந்ததுபோல், ஆசாரியருடைய செவியினிடத்தி லொதுங்கி ரீங்காரமிட்டு நின்றது. இவ்விந்தையைக் கண்ட துரோணச்சாரியர் சிந்தைதளர்ந்து திக்பிரமைகொண்டு தியக்கமடைந்து ஒன்றுந் தோன்றுமல் இருந்துவிட்டார். அவரத்தன்மையில் இருக்கும்போது பச்சிம திசையிற் படர்ந்த அர்ச்சுனனனவன் குலமுதல்வனுகிய வீஷ்டுமாசாரியரைக் கண்டு, அவரைத் தொழும்படியாகக் கருதி துரோணாசாரியரைக் குறித்து முன்னம் தொடுத்த விரண்டு பாணங்களைப் பின்னும் நான்கு பாணம்விடுத்து கங்கை நீராட்டிக் கர்ச்சித்துப் பத்திரபுஷ்பங்களிலை அர்ச்சனைபுரிந்து செவிகளுக்கு க்ஷேம சமாச்சாரந் தெரிவித்து வடதிசையில் மேருவைப்போல் படைக்காவலிருக்கின்ற கிருபாசாரியருக்கும் நான்கு

பாணஞ் செலுத்தி வந்தனை வழிபாடுசெய்து காதுகளிடத்துங் கணையொலிகாட்டித் தன்மேல் அவர்கள் நெடுநாளாக வைத் திருந்த காதலை விருத்திசெய்து அவரவர்கள் தம்மைத்தாம் மறக்கும்படியாகத் தலைமயக்கங் கொள்வித்துத் தன்னையவர்கள் தொடராதிருக்கவும் தேடாதிருக்கவும் மோகனமுண்டாக்கிச் செவ்வானத்திற் கலந்து மறைந்து செல்கின்ற செங்கதிர்ச் செல்வனுடைய தேர்போல், தன்னுடைய தேரைச் செந்தூள் களால் மறைத்து அங்கு நிறைந்த பெரியோர்களும் பிறமன்னர் முதலிய யாவரும் அறியாதிருக்கும்படியாக அவர்கட்குப் பின் பக்கமாக நெறிபற்றிப் போயினன். இவ்வண்ணம் பார்த்தன் ஏறிய தேரை மூர்த்தண்யமாகத் திருப்பி முடுக்கி வேகமாய் விடுத்த உத்தரகுமாரன் திறத்தை வீஷ்டுமாசாரியர், துரோணாசாரியர், கிருபாச்சாரியர், அஸ்வத்தாமா முதலிய யாவரும் பார்த்துப் பார்த்தனுக்குத் தகுந்த தேர்ப்பாகன் அகப்பட்டா னென்று பட்சமாய்ப் பேசி மேலும் என்றுங் காணுத அதிசயம் இன்று கண்டவர்களைப்போல் ஆனந்தங்கொண்டு, ஆ தெய் வமே! இந்நாள் வரையிலுந் தனுர்வேதங்கற்றுச் சம்பிரதாய முற்று மந்திரார்த்தங்களைப் பெற்று சமர்த்தாயிருந்து சம்பிரம மாய்க் காலங்கழித்து வாழ்ந்த நாம் கதையிலுங் கேட்டில்லாத கற்பனையிலுங் கண்டறியாத அந்நியாதிசயமான அம்புகளைச் செலுத்தி கும்பலினின்ற நம்மைக் குறித்து அன்புபாராட்டி னனேயென்று ஒருவரோடொருவர் கூடிக் கசிந்து, ஆஹா! இந்த வல்லவனுக்கு ஈடாகிய புருஷர்களுமுண்டோ? அடடா! விஜயன்விட்ட கணைகளில் ஒரு கணையானது ஆகாய கங்கையை அள்ளிவந்து சளசளவெனப் பொழிந்து சரணங்களில் அபி ஷேகம் பண்ணவும், மற்றொருபாணம் புஷ்பம் பறித்துவந்து அர்ச்சனை செய்யவும், மற்றோரஸ்திரம் வஸ்திரம்போல் வளை ந்து வலஞ்சுற்றி வரவும், பின்னும் ஓர் அம்பு தீதிலாச் செய்தியைக் காதிற் போதிக்குந் திறம்போல் இறையவும் செய்த பிரதாபம் வாய்ந்த பெருமையோய்ந்த தனுர்மறை முதலிய சாஸ்திரங்களாய்ந்த தனஞ்சயன் சண்டைமுகத்தில் மூடுக் குஞ் சரத்தை தடைசெய்யக் கற்ற தாஷ்டீகர்களுண்டோ? இத ன்றியும் பெரும்பார மேறினுந் தளர்ந்து வளையாத கற்றூணைப் போல் எத்தனைகோடி படைகள் சுற்றினும் சற்றுமிளையாத தன ஞ்சயனவன் மெத்த வல்லமைகொண்டு ஒரு சாரதி துணையை

க்கொண்டு சண்டைபோடத் தலைப்பட்டிருக்கின்றான். இன்று இவனது போர்முகத்திற்கு நேர்முகங்காட்டி தேர்செலுத்தி யார் ஜெயிக்கப்போகிறார்கள்? நாம் பிழைக்குமா றெப்படி? என்னிடத்திற் கற்காத கணையுங் கற்றிருக்கின்றானே கங்கா புத்திரனே யென்று துரோணாசாரியர் கண்கலக்கப்பட்டுக் கழறிய போது விஷ்டுமாசாரியர் விளம்பத் தொடங்கினர்.

ஐயா துரோணாசாரியரே! அனுமக்கொடி படைத்த அர்ச்சுனராஜன் எனக்கு மரியாதை நடாத்திய மந்திராஸ்திரந் திறத்தையும் நம்முடையபேரி லெதிர்த்து நாணுமல் வருகிற மனுஜெதிடத்தையும் நிதானிக்குமிடத்து, அவனுடனெதிர்த்து அவனைத் தொடர்ந்து அமராடிக் கெலிப்பதற்கு யாவராலுங் கூடுமா? அதன்றி, பாஞ்சசன்யப் பரந்தாமனான ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய பரமதயாள பாத்திரனு யிருப்பவன். தந்தையாகிய இந்திரனுடைய கருணையையும் மந்திரக் கணையையும் துணைப்பற்றி அன்புக்குந் தயைக்கும் இடமாயிருப்பவன். ஏற்றுவாகன மூர்த்தியாகிய கூற்றுதைத்தோனது கடாட்ச வீட்சண்ய முண்டாயிருப்பவன். இத்தியாதி நல்வினைப் பயனுற்ற நரனை ஜெயிக்கத்தக்கதீரர் நம்மவரிலில்லையே. நாமென்னசெய்யலாம்? நமதுசொல்லை உட்கொள்ளாமல் தள்ளி நடக்குந் துரியோதனன் துள்ளுகாளை போற் துடித்து பாண்டவருடன் சொக்கட்டானுடி அவர்களுடைய நாடு நகரத்தைப் பிடுங்கிக்கொண்டான். அதுவுமல்லாமல் பட்டபுஸ்திரீயாகிய பாஞ்சாலியம்மனைத் தலைமயிரைப்பற்றியிழுத்துச் சபை யேற்றுவித்து வஸ்திரமுரிந்து மானபங்கம் புரிந்து பன்னிரண்டு வருடம் வனவாசம் பண்ணப்போக்கினன் அப்பேர்ப்பட்ட அபாக்கியனனவன் ஒருபோதுஞ் சிலாக்கியனுகமாட்டான். சத்திய வாக்கியனை தருமராஜனுக்கு இளைய தம்பியினுற்கெடுவான் உயிர்விடுவான். இன்றைக்கு அவமானப்படுவான். இதற்குச் சந்தேகமில்லை. அது அப்படியிருக்க அணி நிறுத்திச் சேனைக்குக் காவலாயிருந்த நம்மை ஆவலாய்ப் பூசை பண்ணிப் போய்விட்டானே. அவன்செய்த உபசாரத்திற்கு நாம் ஒரு ஆசீர்வசனஞ் சொல்ல வகையில்லாமற் போனுமே. நமக்கெதிராகவந்த மலைப்புயன் சிலைக்கரன் வானவர்கோன் மைந்தன் நந்தனந்த நேயனுகிய நரனுக்கு நாம் சரியாகாமற்போனுமே. நல்லது, நாம் மடக்கிய மாட்டுமந்தையை விடுவிக்க வந்தவன் படைமேல் விழுந்து அமராடவேண்டுமே. நம்மையு மய

க்கி நமது சேனையையும் விலக்கி நான்குதிக்குங் கலக்கி ஊரை நாடிப்போகிற துரியனைவிடாமல் நாடிப்போனென்போலு மிருக் கின்றதே. ஐயா! மற்றதை யுத்தத்திற்கலந்து பேசித் தெரிந்து கொள்வோம். வெற்றிவீர விஜயன் போனவழியைச் சுற்றிப் பாருங்கள். பிரசித்தனை துரியோதனனை உற்றுக்காருங்கள். யாவருஞ் சேர்ந்து வாருங்கள். சித்தப்பிரமைகொண்டு தியங்கா தீர்கள். சிலவிஜயன் தேரை தெற்கு மேற்கு வடக்கில் விட்டா லும் கிழக்கில் விடாதீர்கள். சேனமன்னர்களே என்று யானை சேனை பரிவாரங்களுடனின்று ஒன்றுந் தோன்றுமல் யோசித் துக்கொண்டு ஒருவாறு உறக்கம் பிடித்திருந்தார்கள்.

அத்தருணத்தில், கடுமையாக வீசிய காற்றின் வாட்டத் தால் கருங்கடலைக் கிழித்தோடுகின்ற கப்பலைப்போல் திக்குத்தி சைகள் நெக்குவிட்டசைய மட மட கட கட தட தட கிடு கிடு பட பட வென்று மண்ணுங்குலுங்க விண்ணுங்கலங்கப் பார்ப்ப வர் கண்கள்மயங்க மனவேகத்திலு மிஞ்சிய வேகங்காட்டிச் சிகரத் தேரை யோட்டித் துரியோதன ராஜனுடன் ஓட்டமு நடையுமாய்ச் செல்லுகின்ற சேனைக்கு முன்சென்று ஐயம் ஐய மென்று தடுத்து நின்றான்.

அப்போது, அந்தப் பசுக்கூட்டங்களுக்குக் காவலாகப்போ கின்ற ஆயர்களும் கோபசபதங்கூறும் வாயர்களும் யுத்தம் செய்ய விரும்பிய நேயர்களும் ஆயுதபாணிகளாய் அதிர்த்து யாருடனும் போர்புரிய எதிர்த்து வாளும் வேலும் பிடித்துவிதி ர்த்து ஓடும் படைகள் உரக்கக் கொக்கரித்துக் கர்ச்சிக்கும் பல த்தை அர்ச்சுனன் அறிந்து எ ஏ ஹே! யென்றிரைந்து இரு தோளும் பூரிக்க விரைந்து காண்டீபத்தை நாரிபிகிந்து காய்ச் சித் துவைத்துக் கடைச்சற் பிடித்த கணைகளைத் தொடுத்து ஆகர்னபரியந்தமிழுத்தான். அச்சமயத்தில், கிரீடியின்தேர் ஓடி வந்து கிட்டி வளைத்த கெடுதியை சடுதியிற்கண்ட துரியோத னன் சஞ்சலப்பட்டுப் பெரியோர்கள் பேச்சைக் கேளாததினற் பெருமோசம் ஆயினதே. அவர்களங்கும் நாமிங்குமாகப் பிரிந்து இவனிடத்தில் அகப்பட்டோமே யென்று பெருமூச்சுவிட்டுச் சற்றுநிதானித்துச் சித்தம் பேதித்து ஓடவுங்கூடாமல்திரும்பிப் போய் வீஷ்டுமர் முதலியோருடன் கூடவுங்கூடாமல் வாடி வதங்கி மரத்தினிழலி லொதுங்கி மறைதலும் வெளிப்படுதலு மின்றிப் பதுங்கி நின்றான்.

இவ்வாறு தீரகண்டனை துரியோதனன் மதின்மேற் பூனை போற் சமயத்தைதோக்கி இளைத்துக் காட்டிய செய்கையையும் அவன் சேனைகள் சிலைவிஜயனல் வளைக்கப்பட்ட வகையையும் வீரகண்டை தரித்த விராடராஜகுமாரன் தெரித்துக்கொண்டு விஜயலக்ஷிமியருளால் இன்று நமக்கு ஜெயமென்று முகமலர்ந்து விந்தகிரிபோலமைந்த தன் சொந்த ரதத்தை வாரிதியிற் சுழன்ற மந்திரகிரிபோற்றிருப்பிக் கர கர கர கரவென்று சக்கரத் தொனிகாட்டி விற்கரத்தனை விஜயனை நோக்கினன். அந்த வேளையில் அர்ச்சுனனனவன் பேரிடி முழக்கம்போல் காண்டீபம் வளைத்து நாணிதொடுத்து டங்காரஞ் செய்தான்.

அத்தொனியை வீஷ்டுமர் கிருபர் துரோணர் அஸ்வத்தாமர் கர்னன் சகுனி முதலினோருங் கேட்டுத் திடுக்கிட்டு ஓகோ! என்னமோ மோசம் வந்தது நாணேசையுந் தனுர்வோசையுங் கேட்கின்றது. சமர்புரியவந்த குமரனைக் காணேம் ஆர பார தீர வீர மூர்த்தண்யமாகத் தேரூர்ந்துவந்த போர்வீரனெங்கே? ஈசானிய மூலையில் இடிக்கின்றுப்போ லிருக்கின்றது. ஆனல் அது மழை யிடியுமல்ல மகரமச்ச முலாவுகின்ற கடலொலியுமல்ல, வாடை கீழ்க்காற்றின் முழக்கமுமல்ல. கெடி வீரசிங்கக் கிரீடி கைக்கொண்ட காண்டீபக் கிண்கிணி நாணேசைபோற் காணுகின்றது. கவனமாகக் காதுகொடுத்துக் கேளுங்கள் தீது அணுகவொட்டாமற் றிசைகளைப் பாருங்கள் சிந்தையும் எண்ணமுஞ் சிதறுமலுய்த்துணருங்கள் பார்த்திபன் கதியைப்பதறுமற் பாருங்களென்று வடகிழக்கு மூலையிற் கண்வைத்து ஏதேது இதற்குள் அர்ச்சுனராஜன் இவ்வளவுதூரங்கடந்துபோவானே, இப்போதுதானே நாம்பார்த்தோம். மேற்குத்திக்கில் வெகுதூரம் போனனேயென்று ஒருவருக்கொருவர் வாதுகொடுத்து நான்கு பக்கமுங் காதுகொடுத்திருந்தார்கள்.

அப்போது பசுமந்தையையும் பாம்புக்கொடியையுமுடைய பார்த்திபனையும் சேனைகளுடன் மடக்கிய செஞ்சிலை வீரச்சேவகனனவன் பார்த்து நாமின்னுஞ் சற்றுநேரந் தாழ்ந்து வருவமாகில் மாட்டுமந்தைகளுடன் மன்னனுஞ் சேனையும் அஸ்திபுரத்தின் எல்லைபோ யணைவார்கள். அவர்களந்த எல்லையை மிதித்துவிட்டால் நாம் அபஜயமடைந்து திரும்பியதுபோலாம். பிராணன் வைத்திருக்கவேண்டிய பெருமைபிராது ஏதோ தெய்வானுகூலத்தாலும் பெரியவர்களைப் பூசைசெய்த பூஜாபலத்தி

னலும் துரியோதனன் பசுமந்தையுடன் அகப்பட்டுக்கொண் டான். மேற்படையோ சமீபத்திலிருக்கின்றது நம்முடைய வில் லோசை கேட்டவுடனே வீஷ்டுமர் அஸ்வத்தாமா முதலிய பல் லோரும் வந்து கவிந்துகொள்வார்கள். பிறகு மிகுந்த பிரயாசை யுடன் பசுமந்தைகளை மீட்கவேண்டிவரும். ஆகையால்முன்னே மாட்டை மடக்கி மச்சநாட்டுக் கனுப்பிவிட்டு, அப்புறம் வருகிற வர்களுடன் போராடுவது உத்தமமென் றுன்னி, காண்டீபத்திற் கணைதொட்டுப் பொருப்புமுதற் பூமியெல்லாம் நெருப்புமழை பொழிவித்துத் திக்குமுக்காடச்செய்து திசாதிசைகளனைத்துஞ் சின்னபின்னப் படுத்திவிட்டான். அவனுடைய தீரவீரத்தைத் தேவர்கள் கண்டு திடுக்கென்றொடுங்கிப் பக்கென்றெழுந்து இனி காரியமில்லை இந்தப் பூமியில் பலிகொடுப்பதற்கெண்ணிச் சேனை களைக் கூட்டிவந்தான் துரியோதனனென்று அவனை நிந்தித்து ஐயோ தெய்வமே! தீவினையேயென்று நைந்து எவ்விதத்திலுஞ் சவ்வியசாசி பந்தித்துவென்று விடுவான் என்று சிந்தித்து கண் சிமிட்டாதிருந்தார்கள்.

அக்காலையில் விஜயனுடைய வில்லோசையும் நாணோசை யும் தேவதத்த முழக்கமும் தேரோடு மொலியும் குதிரைகள் அனுமானிக்கும் பழக்கமும் சாரதி யிறையும் வழக்கமும் அனு மக்கொடி யாடுகின்ற படபடாகாரமும் அஸ்திரங்க ளோடுகின்ற சிடசிடாகாரமும் போராடு மிடங்கள்தோறும் புறப்படு மொலியும் வீரர்கள் மாரூடும் வலியும் புவனமூன்றும் பயங்கொள்ள வயம் பெறும் ஜயசிங்கம் வருகிறவழியில் திரளாகக்கூடிய யானை கும்பு கள்போல் துரியோதனனைக் சேர்ந்த சேனைகளும் வெற்றிவா ளேந்திய வீரர்களும் பொங்கித் தங்களாற்கூடியமட்டும் போராடி விஜயனுக்கெதிர் நிற்கமாட்டாமல்தலைநாணி புறங்கொடுத்தோடி னர்கள். அச்சமயத்தில் அர்ச்சுனன் தொடுத்த அனல்மூனைக் கணையானது கொதித்தெரிந்துகோபித்து விழுந்து குதிரையைத் தரித்து யானையை மூறித்து கொடிமுடி மன்னரைக் குறைத்துக் குலாவி யுலாவித்திரியுங் கொடுமையைத் தேவேந்திரனும் தேவர் களும் மூவர்களும் குபேரன் முதலிய யக்ஷர்களும் பார்த்துக் கிரீ டியை மிகவுங் கொண்டாடி ஒப்புச்சொல்லுவதற்கு உவமைதேடி னர்கள். பின்னும் புகழ்ந்து மகிழ்ந்து ஆனந்தவெள்ளத்திற் குளித்து ஆசைமேலிடக் களித்து ஆடினர்கள். அர்ச்சுன னேவிய அக்கினிபாணத்தின் பிரசண்டவேகக் காற்றினால் பாத

மூமீதலமு நைந்து பூதலமும் பஞ்சுபஞ்சென்னப் பறந்தது. சுயோதனுதியர் முதலிய யாவரும் நெஞ்சுலர்ந்து நாவறண்டு நாபிவறையிலும் புகைந்து நாடாதும் நாடி, இதென்ன! அக்கினி நக்ஷத்திர வுதயமோ? அல்லது, ஆலாலஞ் சேகரித்த புதையலோ? வடவைத்தீயின் அம்பாரமோ? வாடைக் காற்றின் வன்மையோ? என்று அவர்களன்று பட்டபாட்டை நானென்னென்று சொல்லுவேன்? நான்குவகை ரதிகரையும் நால்வகைப் படையையும் சுயோதனுதியரையும் உயிருடன் சுடும்போது சும்மாவிருப்பாருமுண்டோ? ஐயா ஜனமேஜய மஹாராஜனே! இவ்வாறு நரனேவிய அக்கினி பாணத்தால் படைநான்கும் மண்ணோடு மண்ணுப் படிந்து பதறிச் சிதறிப் பிரிந்து, பலர்மாய்ந்து தேய்ந்துபடையோய்ந்துபக்குவத்தைஉத்தரகுமாரனறிந்துகாவற் கட்டுக்குட்பட்டிருந்த தங்களிடையரை நோக்கி, ஓகோ கோவலர்களே!உமக்குயாதொருதடையுமில்லை. உங்களோடுஎதிர்க்கப்படையுமில்லை. நீங்கள்உற்சாகத்துடன்வற்சலங்களையோட்டிக்கொண்டு ஊர்போய்ச்சேருங்களென்று உரக்கக்கூவி இருகரங்களையும்வீசிப் போங்கள் போங்களென்றிசைந்து சொல்லினன். அப்போது தங்கள் இராஜகுமாரன் கூறிய இனியவார்த்தையைத் தனிமையாய்ச் சஞ்சலப்பட்டுக்கொண்டுவந்த யாதவர் சகலருங் கேட்டுச் சம்பிரமங்கொண்டாடி, நமது இளஞ்சிங்கமே யுத்தஞ்செய்யஎற்பட்டுப் புறப்பட்டபடியால் கௌரவகுலச் சேனைகளை எங்குமில்லாமற் சங்கரிப்பார்; நாமுங் கெலிக்கலாமென்று பொங்காரத்துடன் ஓங்காரமிட்டு அகமகிழ்ந்து முகமலர்ந்து மூனைகலந்து கலகலவென்று மணிமுழங்கி பசுவடர்ந்துநின்ற இடமடைந்து, ஊலென்று வாய்குவித் தூதி புள்ளாங்குழலிசையையுஞ் சமிக்ஞையையும் வழக்கப்படிக் காட்டினர்கள்.

இடையரின் குறிப்போசையைக்கேட்ட காட்டுப்பசுக்களும் நாட்டுப்பசுக்களும் தலையெடுத்துப்பார்த்து வாலசைத்து உடல்குலுக்கிக் கொம்புகளைத் தாழ்த்தித் தங்களுக் கிடைகட்டியிருந்த மச்சநாட்டெல்லையைக் குறித்து இறுமாந்து நெரித்துச் சேனைகளைய முறித்து அம்பரமுழுதுந் தும்படையக் கம்பளத்தாயர் கலந்து பின்னடையப் பம்பரமெனச் சுழன்று கும்மாளமிட்டு மானினந் தாவுதல்போற் குதித்து வண்டெனப் பறந்து செண்டென வெழுந்து கண்டவர் கலங்க மண்டலமயங்கச் செந்தூள் கருந்தூள் வெண்டூள் பறக்கத் திசைதடுமாறி பசுக்களுமோடத்

திரைகடல் வறள யானைகள்கதறச் சேனைகள் பதற அரைக்கணப் பொழுதில் திரும்பிய பசுக்களைத் துரியோதனனும் அவனுடன் கலந்துவந்த தேசராஜவீர பூபாலர்களுங் கண்டு வருந்தி மடக்கி வந்த பசுக்களை விடப்படாதென்று மானப்போர்வை பூண்டு வந்து தம் வல்லமையைக் காட்டி மனதொந்து தங்களாலாகா மல், காய்ந்துருகிச் சிடசிடப்படங்கிய நெய்போல் வாயடங் கினர்கள். மச்சராஜனுடைய கோபாலர் இச்சைமேற்கொண்டு உருகி ஓசையடங்கிப்போன நெய்யில் ஒரு துளிப்பால் தெரித் ததைப்போல், சளசளவென்று உரத்துக்கூவி எதிரி கைக்கொண் டுபோன எங்கள் மந்தையை மீட்டோமென்று எங்கும் பிரகாசிக் கத்தாவி எந்நாளும் பெறக்கூடாத ஜயத்தை இந்நாள் அடைந் தோமென்று இறைவனைப் புகழ்ந்து மந்தையை விடாமற் றொடர்ந்துவந்தார்கள்.

புள்ளாங்குழற் றொனியாலும் கண்டத்தொனியாலும் தெரி ந்து, கால்வீசியோடும் பசுக்கள் பசும்பொற் குடம்போன்ற மடி யுடைய கபிலைகள் பருவக்கன்றுகளுள்ள கோமளங்கள் சூற்கொ ண்ட சுரபிகள் சூற்படாக் கடாரிகள் இளமையான விடைகள் முதிர்ந்த விருஷபங்கள் கட்டுப்படாக் காளிகள் கறுப்பு வெண் மை சிவப்பு கலப்பு முதலான பலவர்ணப் பசுக்களும் துரியோ தனன் சென்றவிடந் தொடங்கி வீஷ்டுமர் துரோணர் முதலி யோர்கள் அணிவகுத்துநின்ற இடம்வரையிற் காலாற்சிலவரை மிதித்து சிதைத்து வாலாற் பலரையடித்து மடித்து உடலாற் சிலரை யுராஞ்சி யிடித்துக் கொம்பாற் பலரைக்குத்தி வீழ்த்திக்; கோலாகலமா யணியைக் கலைத்து அம்புபோற் பறிந்து நிறைநி றையாய் பாய்ந்து போகின்ற பசுமந்தையை பார்த்தன் பார்த்து வீஷ்டுமர் முதலியோர் மாடுகள்போகிற மார்க்கத்தில் படைவை த்துக்கொண் டிருக்கிறபடியால், ஒருவேளை மந்தைகளை மடக்கு வார்கள். நாம் இவ்வற்சலங்களைக் கூட்டிப்போய் மச்சநாட்டில் விட்டுவரலா மென்று நினைத்தால் வீபற்சுவந்தான்; எங்களை மயங்கவைத்து மாட்டை யோட்டிக்கொண்டு போய்விட்டான் சண்டைசெய்து வெற்றிகொண்டு போனவனல்லவென்று பல் லோரிடத்திலும் பழிப்பாய்ச் சொல்லிக்கொள்வார்கள். மேலும் நாம்போய் திரும்பிவருவதற்கு முன்னம் துரியோதனன் தப்பிப் பிழைத்தே னென்று அஸ்தினபுரத்திற்குப் போய்விடுவான் போலுந் தோன்றுகிறது. ஐயோ! அவனைக்காணவும் அவனு

டன் ஆசையாய்ப் பேசவும் பதின்மூன்று வருடங்கழித்து அவ சரப்பட்டு ஓடிவந்தேனே. ஆகையால் நாம் இவனைவிட்டுப் போகலாகாது. வேறுவகையான காவலமைக்க வேண்டுமென் றெண்ணி, விஜயகாண்டீபத்தில் சோனுமேகம் பொழிவது போல், பாணப்பிரயோகம் பண்ணிப் பசுமந்தைக் கிருபாலும் அண்டச்சுவருக் கொப்பாகச் சரக்கூடவேலி யமைத்து, மந்திர மென்னுங் கட்டுகளிட்டு வைராக்கியமாகிய மகா புருஷனையும் நிறுத்தினன். வற்சலங்களும் யாதொரு தடங்கலு மில்லாமல், நிரந்தர மங்கள துரந்தர புரந்தரனுகிய விராடராஜனது மச்ச னுட்டில் இதுவரையிலும் வசித்திருந்த வனங்களிற் போய்ச் சேர்ந்தன. எமன் கைக்கொண்ட உயிர்மீண்டவாறு பகைவர் மடக்கிய பசுக்கணம் வந்ததை அந்நாட்டிலுள்ள பலரும் பார்த்து ஐயம் ஐயமென்று சிந்தைமகிழ்ந்து பத்திரமாகப் பசு மந்தையைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

இவன், வணங்காமுடி மன்னனும் தாங்கள் வகுத்தனுப்பிய சேனைகளும் சாய்த்துக்கொண்டுபோன பசுக்கணங்களுங் கோபா லர்களும் தங்களுக்கு நேரிற்போராடி ஊரிலோடிய விதத்தைத் தேரிலேறியிருந்த சிலைக்குருவாகிய துரோணாசாரியர் வீஷ்டுமா சாரியரும் கிருபாசாரியரும் அஸ்வத்தாமா கர்னன் சகுனி சால வன் விகர்னன் துச்சாதனன் முதலினோர் பார்த்து, சரிதான்; நாம் ஆலோசனைபண்ணிப் பசுநிறைகளையும் பார்த்திபனையும் அஸ்தினபுரத்திற்கு அனுப்பிவைத்த உளவை அர்ச்சுனன் எப்படியோ அறிந்துகொண்டு, இங்கிருந்த நம்மெல்லோருக் கும் இன்பமுண்டாகும்படியாய் அம்புகளை விடுத்து அவசரப் படுத்திச் சாரதியுந் தானுந் தேரூர்ந்து சென்று சமர்த்தாகவெ ன்று மாட்டையும் சேனையும் மன்னனையு மடக்கிவிட்டான். நாம் எண்ணிய எண்ணங் கைகூடவில்லை. பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியுமென்பதுபோல அவனெண்ணிய வண்ணம் இசைவாக்கிக்கொண்டான். இவ்விடத்திற் கூட்டமான நமக்கு இனியென்ன ஆட்டபாட்ட மிருக்கிறது. அவன் நம்முடனெ திர்த்தால் நாமெடுப்பது ஓட்டவாட்டமேயென்று ஒரேநாட்ட மாய் மனதொந்து உறங்கினர்கள்.

இங்ஙனம் சிலைவிஜயனவன் ருத்திராம்ஸ முண்டாய் அரைக்கணத்தில் நிரைக்கணத்தை மீட்டுச் சரக்கூடங்கட்டிப் பெருக்கவிடுத்த தன்மைப்படிக்கு வடகிழக்கு மூலையிலிருந்து

தென்மேற்கு மூலையில் மாடுகள் போய்ச் சேர்ந்தவாறுணர்ந்து மனமகிழ்ந்து, நல்லது இராஜாதிராஜ னெங்கே? அவனேறிச் சிறக்குந் தேரெங்கே? அத்தேரிற் பறக்கும் பாம்புக்கொடி யெங் கே? என்று எட்டுத்திசையும் மட்டிட்டுப் பார்த்து வரும்போது, ஆனினங்களை முன்னுக்கிச் சேனைகணங்களைப் பின்னுக்கி மூடுக் காய்ச்சென்ற துரியோதனராஜன் அர்ச்சுனன் தெறித்த விற்கு ணியாலும் வாய்வைத்து முழக்கிய சங்குநாதத்தாலும் பாணக்கு ழாத்தாலும் வீரர்படும் பாட்டையும் சேனைகெடுங் கேட்டையும் கண்டு வெருண்டு அலமருண்டு மதிபுரண்டு கண்கலங்கி ஒருபுற மொதுங்கி நெறிமயங்கி யொடுங்கிநின்றுவிட்டான். அவ்விதமா கிய துரியோதனராஜனைச் சவ்வியசாசிகண்டு கண்கள் சிவந்து முகம்சுளித்துப் பற்கடித்து மீசைதுடித்து வியர்வுபொடித்து வெகுளிமேற்கொண்டு எத்திசையிலும் பிரசித்தனை உத்தரகுமா ரனைப் பார்த்து ஒரு உத்தரஞ் சொல்லலுற்றான். வெற்றிபெற்ற வேலாயுதம்பற்றிய விராடகுமாரனே! நம்முடைய ரதத்தைக்க ண்டு பயங்கொண்டு தன்படைகளையும் கன்றுந் தாயுத் துன்றிய பசுக்கூட்டங்களையும் விண்டு, தானுந் தலையிறக்கங்கொண்டு இந் நிலத்தை விட்டகன்று அதோ ஒரு மரத்தினிழலில் ஐம்பொறி யடக்கி ஆமைபோலிருப்பவன் கௌரவகுலாதிபனை துரியோ தன மகாராஜன். அவனருகே நமது தேரைக்கொண்டுபோய் நிறுத்துவையாகில், அற்பமிருகத்தை சொல்பமாயழிக்கும் ஆண் சிங்கம்போல் அவனுதிரத்தை என் பாணத்திற்கு ஆகுதி கொடு க்கிறேனென்று நமடு கடித்து, உடலந்துடித்து குறிப்பினுற் றெரியப்படுத்தினன். அர்ச்சுன னுரைத்த வார்த்தைக்கு கருங் குவளைமலர்ந்து நிறைந்தவாவி செறிந்த கழனிகள் சூழ்ந்தமச்ச நாட்டிறைவன் மைந்தனை உத்தரகுமாரன் கேட்டு, மனோவேக மும் வாயுவேகமு மடைன்றுரைக்கத் தக்கதாகத் தன் தேரை விடுத்து துரியோதனனுடைய சேனையைத் தடுத்து அவன் தேரையடுத்து தன் தேர்க்குதிரைகளின் முன்னங்காலை அவன் தேர்க்குதிரைகளின் தலைமே லேற்றுவித்தான்.

அவ்வேளையில் சந்தேகங்கொண்டு சலிப்பாயிருந்த வீஷ்டு மாசாரியர் துரோணாசாரியர் முதலிய மேன்மையோர் மாடுகள் திரும்பிவிட்ட மார்க்கத்தினாலும், சங்கத்தொனி வில்நாரித்தொ னிகேட்ட தன்மையினாலும் செவ்வையாய்க் காரியபாவந் தெரிந் துக்கொண்டு, ஓகோ! மிஞ்சிப் போயிற்று. அஸ்தினபுரத்தை

ஆனினங்களுடன்போன நமதரசனைப் போர்முகப்புலியானபுரு ஷன் மடக்கிக்கொண்டான்; இவ்விடத்திலிருந்த நம்மை யேங்க வைத்து சிங்கமானது நரியடிதேடிச்செல்லுமாறு, கிரீடி மேற்கு முகத்திற் போக்குக்காட்டி கிழக்குமுகம்வந்து கிட்டிவிட்டான். இவன் எந்தவழி வந்தானே? அந்தரவாசிகளாகிய அமரர்கள் இவனுக்கு உளவாயிருப்பார்களோ?வணங்காமுடியோன் சென்ற மார்க்கம் இவனுக்கெப்படித் தெரியும்? என்னமாயறிவான்? இத் தனைபேர் கண்களுக்குத் தெரியாமல் இவனெப்படித் தேரூந்திப் போனான்? அவன் மனதிற்குத் தகுந்தவாறு சாரதியுங் குதிரை யும் அமைந்தனவே. ஆகிறகாலத்தில் எல்லாம்அடுக்காய்அமை யச்செய்யும், நல்வினையை யாரும் புகழ்ந்தேற்றுவார்கள். ஆத லால் நாம் சும்மாவிருக்கப்போகாது, இந்நேரம் நமது மன்னன் என்னகதியானானே தெரியாது. இப்படியே நாமெல்லோரும்பிரி யாதுசென்று துரியோதனக்கு உபபலமாகநின்று, அபாயம் ஒன் றும் நேரிடாமல் அர்ச்சுனனை வென்று, மறுபடியும் அந்த விரா டபுரத்தைத் திரும்பிப்பாராமல்ஊர்போய்ச் சேரவேண்டுமென்று உள்ளத் துறுதியாய்க்கொண்டு தாங்களிருந்த விடத்தை விட்டு நீங்கி வச்சிரயூகம் பத்மயூகம் அர்த்தசந்திரயூக முதலிய அணி யைக் கலைத்துப்போட்டு, அவசரப்பட்டு மந்தரமாருதம் பிந்திப் போம்படியாய் முந்தி நால்வகைச் சேனைகளுடன் ஓடிவந்தார் கள். ஐயா ஜனமேஜய மஹாராஜனே! இவர்கள் எவ்வளவு வேகமாய்த் தேர்செலுத்தி வந்தாலும் நந்தனந்தனன் மைத்து னன் இந்திரன் மைந்தனுந்திய சயந்தனவேகத்திற்கிணையில்லை யென்றியம்பத்தக்கதாம். ஆதலால் அர்ச்சுனன் தேரை துரிய னிடத்திற்றிருப்பி, தான் பேசவேண்டியவரையிற் பேசித் தன் மனம் வெறுத்துத் திரும்பப்போகிற சமயத்தில் வீஷ்டுமர் முதலி னோரின் தேர்வந்து கூடுவதை இனிச் சொல்லப்போகின்றகதை யினுற் றெரிந்துகொள்வீரென்று வைசம்பாயனர் சொல்லினர்.

அர்ச்சுனன் துரியோதனனுடன் பேசுதல்

அர்ச்சுனன் தேரானது அரவக்கொடியோனுடைய தேரைநாடி யோடிச் சென்றபோது, பெருக்கமான வெள்ளக் குறுகிச் சுருக்க மாயோடுஞ் சேர்வைப்போல் குதிரைகள் நடையோய்ந்து சாரதி யொருபுரஞ்சாய்ந்து தானுமாய்த்தவன்போ லிருந்த மன்னனு க்கு நேரிற்சென்ற அருச்சுனனவன் துரியோதனனுடைய முகத்தைப் பார்த்து பேசவேண்டுமென்று ஆசைகொண்டுநோக்

கினன். அப்போது சுயோதனனுடைய முகம் அருச்சுனனுக்குத் தெரியவொட்டாமல் அவன் தேரில் இருந்த சாரதியும் ரதத்திற்கட்டிய நான்கு அஸ்வங்களும் தடையா யிருந்தமையால் திடீரென வடிகணையெடுத்து அபிமந்திரித்து விடுத்து சாரதியையும் குதிரைகளையும் போக்கி வெட்டாரவெளியாக்கி,இந்திரபிரஸ்தத்தில் ராஜபோகத்திலிருந்த ஐவர்களை யழைப்பித்து பொய்ச்சூதுடைய சகுனியைச் சேர்த்து இக்கட்டான சொக்கட்டானுடி வஞ்சநினைப்பில் நாக்குவருந்தப் பேசியவர்களின் ஐசுவரிய முதலியதும் ஒன்றுமுழியாமல் ஒருங்கே கைக்கொண்டு கொஞ்சமேனும் நெஞ்சிரக்கமில்லாமல் வனவாசம் பண்ணவிட்ட பாதகனுகிய பாம்புக்கொடியோனை சங்கடப்படாமல் தாராளமாய் எதிராகப்பார்த்து சற்றே நகைத்தான். அப்போது துரியோதனனுடையசாரதியுங் குதிரைகளுந் தலைசாய்ந்துபோனதைக்கண்ட உத்தரகுமாரன் கையிடித்த கடிவாளத்தை உலுக்கி பின்னுக்கிழுத்து முன்னுக்கு முடுக்கி குதிரைகளை ஓரடி யடித்தான். அவை எக்காலத்தும் அடிபடாததாதலால் உடம்பு சிலிர்த்து ஓவென்றிரைந்து கழுளித்து விரைந்து கலினத்தைத் தடுத்துக் கைக்கடங்காமல் கால்மீறி எழுந்து துரியோதனனுடைய தேர்த்தட்டின்மேற் காலூன்றி நின்றன. தேருந் தேருமுட்டியபோது, சிலவிஜயன் தேரிற்கட்டிய அனுமத்துவஜமும் காற்றிலாடி கடுகடுப்பாயூடி ஒன்றோடொன்று துன்னிப் பின்னிப் படபடாகாரமாய் அடிபட டிடிபட் டரைபட் டுரைபட் டுரிபட் பொடிபட் டுடைபட்டு உடனே விடுபட்டுக் கோபமேலிட்டு அண்டமும்அகண்டமும் அதிரும்படி வாய்விட்டு அனுமக்கொடியானது அரவக்கொடியைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லிற்றென்று புராணிகர் கற்பித்தருளினர்.

அஃதென்னவெனில், உன் தந்தையான வாயுதேவனுக்கும் என்தந்தையான ஆதிசேஷனுக்கும் தத்தம் பலத்தைக் குறித்து நீ சிறியன், நான் பெரியனென்னும் விவாதம் விளைந்தது. இருவர்திடத்தையும் யெவருங் காணும்படி மகமேருவின் அடி முடி வரையில் ஆயிரஞ் சுற்றுக ஆதிசேடன் வளைந்து தன் வல்லமையைக் காட்டியபோது, என்தகப்பனை வாயுதேவன் இரைந்து விரைந்து தன்னுற்கூடியமட்டுஞ் சாதித்து உங்களினத்தனைசேடன் பதறிக்கதறிச் சிதறிப்போகப் புரட்டி அந்த மேருவின்சிகரத்தில் மூன்றுமுடியை வாரிக்கொண்டுபோய்ச் சமுத்திர

கதியாக்கித் தன்ஞண்மையை நிலைநாட்டி ஜயங்கொண்டான். அன்றுமுதலின்றளவும் பாம்பினங்களுக்கும் வாயுவினங்களுக்கும் பகை விளைந்திருக்கின்றது. அதுபற்றி, நானந்த வாயுதேவனுடைய மைந்தனுகையால் பூர்வம் நடந்த பொல்லாங்கைப் பாராட்டி உன்னை வெல்லாமலுங் கொல்லாமலும் அடிக்காமலும் விடுவதில்லையென்று மேல்விழுந்து துரியோதனன் பாம்புக்கொடியை படாதபாடும் படுத்தி அருச்சுனன் துவஜத்தில் ஆஞ்சநேயர்வந்து நிர்த்தனம் பண்ணினர். மேலும் காண்டாவன தகனநிமித்தம் அக்கினிதேவன் இந்த அனுமக்கொடியை அருச்சுனனுக்கு அளித்தகாலத்தில், ஆஞ்சநேயர் பிரசன்னமாய் இராவண கும்பகர்னன் முதலிய மூலபலங்களையெல்லாம் முடித்துத் தாயாகிய சீதைக்குத் திருவாழி கொடுத்துத், தந்தையரான ஸ்ரீராமலக்ஷ்மணரையும் தன் தோளிலெடுத்து அவர்களுடைய திருவடியை அடுத்து பட்டாபிஷேக சம்பிரம பாக்கியங்களையும் பார்த்த கண்களால் இந்தப் பஞ்சையான மானிடரையும் பார்க்கும்படிக் கமைந்ததேயென்று பரதவித்தபோது, அக்கினிதேவன் அருட்கண்ணோக்கி அடியேன் நிமித்தம் அமர்ந்தருள வேண்டுமென்றறைய, அவ்வாறே நல்லதென்றமர்ந்த அனுமானவர் துரியோதனனுடைய சேனைக்கடலைக் கலக்கிக் கடக்கவும் விஜயவீரியன் ஜயம்படைக்கவும் உதயகிரியிலெழுந்த சூரியன்போல் கோபச்சுடர்விரித்துக் கூசாமலெரித்துக் கோரதந்தந்தெரித்துக் குறுகுறுத்தநோக்கி உண்மையாய் அருச்சுனனுடைய தேர்க்கொடியாடையில் அனுமார்வந்து பிரசன்னமானர்.

வேடன்கையில் அகப்படாமல் விடுபட்டுப்போன மிருகம் மீண்டும் அகப்பட்டவாறு அருச்சுனன்கையிற் சிக்கிக்கொண்ட அரவக்கொடியோன் இடிமுழக்கங்கேட்ட உரகம்போலேங்கித் தானிருக்கும் நிலைதெரியாமல் மயங்கி யொடுங்கினன். அருச்சுனன் அவனைப்பார்த்து சிலவார்த்தை சொல்லத்தொடங்கினன்.

ஆ வணங்காமுடிபெற்ற மன்னனே! நீ எங்கேயோடுகின்றாய்? என் வாடுகின்றாய்? ஓடவேண்டிய அவசியமென்ன? ஐயா உன் கையிற் பருத்தவில்லும் பக்குவமான அஸ்திரங்களும் போதுமானபலமுமிருக்கப், புண்ணியவான்களாகிய பெரியோர்கள் பக்கத்துணையாக விருக்க, வேண்டியமட்டுந் தனங்களிருக்கத் தம்பிமார்களும் ஏவலாளிகளும் எழுகடல்சூழ்ந்த பூமியும் மாயச்சூதா

டும் மாமனும் மகா பிரபலனை கர்னனுமிருக்கப் போர்மூன கண்டு நீயும் புறமிட்டோட நினைத்து வாயைத்திறவாமல் மயங் கிப் பேய்போ லோடிப்போவது திறனே? நல்லகாரியம். நீ இப் படியே அஸ்தினபுரம்போய்ச்சேர்ந்தால் வீரபட்டமும் சிந்து ரப்பொட்டுமிட்ட பட்டத்துயானைமீதேறிப் பவனிவரும் இராஜ வீதியில் உன்னைப் பார்ப்பதற்கு ஓடிவராநின்ற பொற்பாவை போன்ற கச்சணிந்த கனதன மாதர்களுங் கன்னியர்களுங்கண்டு இந்த சகத்தையாண்ட துரியோதனன் பித்தன் பித்தனென்று இகழ்ந்துபேசிச் சிரிப்பார்களே; நீபோகலாமோ? இதன்றியும், சோடசகலைநிறைந்தமதியம்போலிலங்கிய சுவேதகூடத்திரமென் னும் வெள்ளைக்குடை பிடிக்க, இருபக்கத்திலும் பால்நுரைபோ ன்ற சாமரைவீச, வந்தியர் சூழ்ந்து வாழ்த்திப் புகழச் சிந்தை களிக்கச் சிங்காசனமேறி பரராஜரும் வந்து ஆசீர்வதிக்க மித் திரபுத்திர பந்துவுடன் கூடிவாழ்கின்ற வேந்தர் வேந்தனென் றும் லோகாதிபதியாகிய நீ, சண்டைமுகத்தைக்கண்டு பெண்டு கள்போல் ஓடுவது தீரத்துவமோ? நீ இப்போ தென்னிடத்தில் தனித்தகப்பட்டாய். உன்னையும் உன் சகோதரர்களையும் ஒரு கணப்போதில் என் கணைகளினலே சல்லடைக் கண்களாகத் துளைத்து அவற்றிற்கு இரையாக்கி விடுவேன்.

ஆனல், சிங்கக்கொடிக் கதிபனகிய என் தமையன் வீமசே னன் உங்கள் நூற்றுவரையுங் கொல்வேனென்று இராஜசபை யிற் சொல்லியசபதம் வீண்போமேயென்று உன்வாளை விடுத் தேன். பகற்பொழுதை விளக்கியபானு அஸ்தமிக்கிறவரைக்கும் பார்த்திருந்து முறையிற் பிரகாசிக்கவருஞ் சந்திரனைப்போல், எங்களைக் காட்டிலோட்டிவிட்டு நீங்கள் நாட்டிலிருந்து நல்ல பாக்கியங்களை அனுபவித்துக் காலந்தப்பாமற் புசித்து ஆக்கினை சக்கரஞ் செலுத்தி அரசாக்ஷி செய்துவந்தீர்கள். மறுபடியும், விடியற்காலத்தில் அந்தச் சந்திரனொளியைத் தவிர்த்துத் தானே பிரபுத்துவஞ் செய்யவந்த சூரியனைப்போல் நாங்கள் வெளிப்பட்டோம். சங்கினங்கள் தவழும் வயல்கள்சூழ்ந்த கங் கைவள நாடனகிய வீமசேன மகாராஜன் கதையினல் தாமத மின்றி நாளைக்கே உங்களைக் களப்பலி யூட்டிவைக்கப்போகின் றேம். மேலும் வீமசேனராஜனுடைய சபதந் தப்பினலுந் தப் பிப்போகட்டும். பாவியான உன்னைப் பார்த்துக் கொல்லாமல் விடலாகாதென்ற கடுங்கோபம் எனக்குண்டா யிருந்தபோதிலும்

இரப்பவர் யுத்தத்திலிளைத்தவர்கள் புறங்கொடுத்தோடினவர்கள் வில்லெப்போட்டு புல்லெக்கவ்வினவர்கள் குழந்தைப் பருவ முடைய இளையவர்கள் யாவரும் புகழுங் கவிராஜர்கள் தவராஜர் கள் தூதுவர்கள் நோயாளிகள் விருத்தர்கள் பிரமக்கியான முள்ள பிராமணர்கள் ஸ்திரீகள் இவர்களைக் கொல்லுவது மகாபாவமென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். அந்த தருமம் என்னை நெறிபிசகவொட்டாமற் றடுக்கின்றது. அதனல் இப்போது இளைத்து ஓடிப்போன உன்னை நானென்றுஞ் செய் யேன். அவர்கள் கூறிய நீதிவாக்கியத்தை நினைத்து நானுன் உயிரைத் தப்பவிட்டேன். அடாவஞ்சகனே! பாவபுண்ணியத் தை எண்ணிப் பாராத பொய்யனே! நீ யெண்ணிய எண்ணம் சித்திக்குமென் றிருந்தாயோ? வனவாசஞ் செய்கின்ற பாண்ட வர்கள் மறுபடியுந் திரும்பிவரமாட்டார்கள் என்னு மதியோ? இனியெப்படி உன்தலைவிதியோ? வாழ்வாரைப்போலும் தாழ் வார், தாழ்வாரைப்போலும் வாழ்வார். இதைச் சற்றேனும் உன்மனதில் வையாமற் போனதென்ன ஊழோ? இதென்ன ரோஷமில்லாத வாழோ? சதுரா யிருக்கின்றேமென் றெண் ணப்போகாது, தருமத்திற் கொருநாளும் பிசகு வராது. தான் என்னுங் கர்வம் நிலைநில்லாது. ஐயையோ! அது பொல்லாது சொல்லாதுபோகின்ற தூர்த்தனே! என்று பலவாருகப்பேசி, இழியக் குத்தினன். இவ்வாறிகழ்ந்து பேசியபோது துரியோ தனமகாராஜன் எதிர்ப்பேச்சு பேசாமற் கோபமேற்கொண்டு ஆபத்துவேளை யிதுவென்று மனத்தாபத்துட னிருந்தான். அவன் இவ்விடத்தி லிவ்வாறிருக்கும்போது இத்திசை நோக் கித் திரும்பிய வேதக்கொடியுடைய துரோணாசாரியர் கிருபாச் சாரியர் அஸ்வத்தாமா வீஷ்டுமாசாரியர் கற்பகக்காவைப்போல் அற்புதமாகக் கொடுக்குங் கர்ணராஜன் சகுனி சயித்தவன் விகர் னன் துச்சாதனன் சாளவன் முதலிய சாமர்த்தியவான்களும் சர்பக்கொடிதரித்த மற்புயமகாராஜனுக்குத் துணைவந்து கூடி னர்கள். அவ்வாறு வந்தவர்களில் துச்சாதனன் விகர்னன் முத லிய தம்பியரிற் சிலரும் முடிவேந்தர்களிற் பலரும் வெற்றிமாலை யணிந்த சுத்தவீரர்களும் மாமனும் மைத்துனனும் உடல்பதறி யோடிவந்து மதயானைபோற் புகுந்து நந்தியாவட்ட மாலை தரித்த நராதிபனைத் தாங்கி ஆதரித்துத் தேற்றினர்கள். இதற் குள்ளாகக் காரோசை கடலோசை ஊழிப்பேரோசை இடி

யோசை முதலியவெல்லாம் ஒன்றுசேர்ந்து ஓரிடத்திற் பிறந்து முழங்கியவாறு தேரோசை குதிரைகளின் குரலோசை மதயானைகளின் ஓசை பதாதிகளிஞ்ஞைசை நாஞ்ஞைசை சங்கத்தொனி தாரை பூரி சின்ன முதலிய வாத்தியவோசை சரங்களிஞ்ஞைசையாகிய இவைகள் எங்குமுழங்கப் படையாளர் வந்து குவிந்தார்கள். சப்தசமுத்திரம்போலிரைந்து ஆர்ப்பரித்து இருபக்கத்திலுங்கவிந்த படைமன்னர்களைத் துரியோதன மகாராஜன்கண்டு, சற்றுத் திடங்கொண்டு குனிந்த தலையை நிமிர்ந்து பார்த்தான். இவன் பார்த்தபோதே படைகளுக்கருகிலிருந்த கர்னன் நெற்றி வியர்த்து நெறநெறவென்று பல்லைக் கடித்து வெம்பிக் கிளம்பி வெதும்பிச் சீறிக் கனைத்துத் திசாதிசைகளும் திடுக்கிடத் திரும்பிச் சடக்கெனத் தேரைத் தடதடவென்று முடுக்கி மின்னுடன் மின்மினியும் வேங்கையுடன் மானும் சிங்கத்துடன் யானையும் கன்மலையுடன் மணற்குன்றும் எதிர்ப்பதுபோல், கர்னராஜன் அருச்சுனன் தேருக்கு நேர்சென்று நின்று ஓ அர்ச்சுனு! என் முன் திரும்பு. வணங்காமுடி மன்னனாகிய துரியோதனனை வளைத்துத் தகுதியற்ற சொல்லாலிகழ்ந்து கண்டவாறு பேசுவது நியாயமல்ல. நாங்கள் யாவருமிருக்க நராதிபனை யெதிர்த்தது வீரியமல்ல. நீ என் வீஞ்ஞைகக்கிடந்து மயங்குகின்றாய்? இதோ நானுனக்குமுன் வந்திருக்கின்றேன். என்னுடன் பகைத்துப் போர் புரிவதற்கு உனக்குத் திறமுண்டாயின், என்னைத் திரும்பிப் பாரென்று போர்த்திறக் குறிப்பாற் புகன்று அக்கினி கக்கும் பொறியும் புகையுந் திக்கென்றெழுவதுபோல் மொழிந்தான். இவ்வண்ணம் அங்கதேசாதிபன் சொன்னவார்த்தையை அருச்சுனன்கேட்டுக் குபீரென்று பொங்கியெழுந்த கோபாக்கினியானது கால்முதல் தலைவரைக்கும் உதிரத்தை முறித்துவிட்டதனால், முகங்கறுத்துக் கும்பகரட குஞ்சரத்தை மடக்கி யடக்கியாளியானது சிங்கத்தைக்கண்டு செறுத்துப் பாய்கின்ற செயல்போல் துரியோதனனை விட்டுவிட்டு அறைகூவிவந்தவிருந்தினனாகிய அங்கராஜனுக்கு நேரே இரதத்தை முடுக்கி எதிர்த்தான்.

காண்டீப விஜயனுக்கும் கர்னராஜனுக்கும் சண்டை

அருச்சுனன் தேரும் கர்னன் தேரும் கிட்டி நெருங்கி ஒருவரோடொருவர் எதிர்த்து யுத்தஞ்செய்யப் புகுந்த காலையில், கர்னனைச்சேர்ந்த காவலர்களும் ரதகஜதுரகபதாதிகளும் கனை

த்துக் கனன்று சிங்கத்தைத் துரத்தி வருகிற சேங்கன்றுகள் போல், பங்கப்படாத பற்குணனை வளைத்து பற்றினர்கள். இவர் களல்லாமலும் திரியோதனன் தம்பிமாராகிய சித்திராங்கதன் விகர்னன் சித்திரசேனன் சங்கிராமசித்து சித்திரவிரதன் துன் முகன் துர்ஜயன் முதலியோரும், கர்னனுக்கு உப தம்பிமாரா கிய ராதைமக்களும் கர்னனைப் பின்னுக்கித் தாங்கள் முன்னுகிக் கனகனவென்றுவீசிய காலாக்கினி கதித்தெழுந்தவாறு சேர்ந்து விசித்திரமான வில்லைவளைத்து சரநாணெலியேற்றிச் சற்குரு வைப் போற்றி உடலூடுருவிப் பாய்கின்ற உயர்வடிக் கணைகளை ஒருபது ஐம்பது எண்பது நூறுநூறென்றுதொடுத்துத் திக்குத் திசையெங்கும் அக்கினிமயமாக்கி அதிவேகமுங் கோபமுங் கொண்டு யாருக்கு மடங்காமல் நின்று அமராடுவதைச் சுப்பிர மணியரை நிகர்த்த சுவேதவாகனன்கண்டு இவ்வளவுபேருக்கும் இவ்விடத்திலேயே மரணமென்றெண்ணித் திறமிகுந்த செஞ் சிலையைத் திடீரென்று வணங்கிக் கட்டுப்படாத சரநாணைசை காட்டியபோது, எதிரிகளுக்குண்டாகிய இறுமாப்பழிந்து எண் ணமொழிந்து சரீரமயர்ந்து நேயராகிய சயந்தன்மேற் சாய்ந்து மறுபடியுந் தெளிந்தெழுந்து கண்கள் சிவந்து போரிற்புகுந்து தேரிற்சிறந்து சாணைபிடித்துத் தைலதூபஞ்செய்த சரங்களை மாரிபோல் சொரிந்தார்கள். அப்பாண வருஷத்தைப் பார்த்த பார்த்தனனவன் இவர்களை யெளிதில் விடலாகாதென் றெண் ணிச் சோனுமேகஞ் சொரிவதுபோல் நானுவித அஸ்திரங்களை விடுத்துத் திரியோதனன் தம்பியாகிய சித்திராங்கதனுடைய வில்லையும் அவனேறிய ரதத்தையு மழித்து முடியையுங் குறை த்து உடலையுஞ் சல்லடைக் கண்ணுக்கி, அவன் தம்பியாகிய மதி யூகி யென்பவனையும் விகர்னனென்பவனையும் பார்த்து பிறை முகக்கணைகளாற் பிளந்து புறங்காட்டிப்போக கிளர்ந்து, சித்திர சேனனென்பவனை வளைத்து அவனேறிவந்த தேரையு மழித்து அவன் சேனையையு மொழித்து இடியோசை கேட்டு இளைக்கும் பாம்பைப்போற் பூமியிற் புரளவிட்டு உடல எங்கும் புண்ணுக்கி, மேலிட்டுவந்த சங்கிராமசித்து வென்பவனைச் சலிக்கவடித்து, அவனுடலைப் பீறி உதிரம்பெருகவிடுத்துத் துன்முகனைடெதிர் த்துத் துரத்திவிட்டுத் துற்சயனை நோக்கி நச்சரவக் கொடியோ னுடன்பிறந்த நாசகாலர்களேயென்று நலியத் தாக்கினன். நால் வகை யானைகளும் நானிலவீரர்களும் அதிரத மகரத சமரதர்க

ளும் சூரியகிரணத்திற்குமுன் பனிநெருக்கம்போற் சூழ்ந்து, நம் வாழ்வு இம்மட்டோவென்று சோர்ந்து, நிலத்திலாழ்ந்து, சிலர் நீங்கிப் பலர் பின்வாங்கிப் பலங்குறைந்து அயர்ந்துபோவதைக் கர்னராஜன்கண்டு காண்டீபனெங்கேயென்றுவரும்போது, அஸ்வத்தாமா குறுக்கிட்டு, ஓ அங்கராஜனே! நீ எந்த அருச்சுனனை யிகழ்ந்து பேசினையோ அச்சங்கிராமவிஜயன் இவன்தான். இவனை எவ்விதத்திலு மாட்டி இவ்விடம் விட்டோட்டி எங்கள் முன் நீ ஜயமடைந்து வரவேண்டியது. அபஜயத்திற் கிடங்கொடாதே. அப்பனே! செவ்வையாய் ஆலோசனைசெய். உன்மேல் வெகுநாளைய அடம்வைத்திருக்கிறான் இந்தக்கிரீடி. நீ இராஜசபையிற் பேசிய சங்கதிகளைச் சரக்கோவையாய்க் கோர்த்து வைத்திருப்பான். ஆகையால், நீ தப்பிவருவது அருமை. ஜாக்கிரதையென்று சொன்னர். இவ்வாறு அஸ்வத்தாமன் சொன்னதைக் கேட்ட கர்னராஜன் மனந்தாளாமல் ஓ அஸ்வத்தாமா! நான் பிராமணஜாதியிற் பிறந்திருந்தால் யுத்தஞ் செய்வதற்கு அஞ்சுவேன். அப்பேர்ப்பட்ட நைச்சிக இனத்திற் பிறவாமற் கூத்திரிய குலத்திற் பிறந்து கூத்திரிய தருமத்தை யனுசரித்து கையில் விற்பிடித்த நான் அமருக்கஞ்சுவேனென்று நினையாதே. இப்போது என்னுடன் எவரெதிர்த்தாலும் அவர்களுக்கு இப்பூமியே சமாதியிடமாக அடக்கம்பண்ணித் திரும்புவேன். இதற்கு வேறு திருஷ்டி. என் பராக்கிரமத்தையும் யுத்தத்தின் அதிசயத்தையும் நீயேகண்ணாரக்கண்டுகளிக்கப்போகின்றாய் பாரென்று வெற்றிக்கொடியும் வாகைமாலையுஞ் சுற்றிலுங் கட்டித் தூக்கிய கொற்றத்தேரை நெருக்கி யுத்தத்திற்குக் குறுகினன்.

அவ்விதமா யடுத்தசமயத்தில், இந்திரகுமாரனுடைய ரதமுங்கிட்டியது. கர்னராஜனுடைய ரதமும் அருச்சுனன் தேரில் முட்டியது. அவ்விருவர்தேரிலும் பூட்டிய குதிரைகள் கனைக்கவும் சாரதியிருவருஞ் சப்தித்திரையவும் தேர்ச்சக்கரங்கள் கிறிச்சிட்டொலிக்கவும் சிறுமணிச்சதங்கைகள் கணகணவென்னவும் நிரர்களிருவரும் வில்லையெடுத்துப் பிடித்து நிறுத்தி வளைத்து இழுத்து நாணிதொடுத்து நாரிதெறித்து டங்காரம் செய்து பொன்மலைபோல் பிரகாசிக்கின்ற வில்லிலிருந்து விறுவிறென்று விடுத்த வேகக்கணைகளின் வீரத்திறத்தால் சமுத்திரம் சுவறி நிலதடமாறி தளதளவென்று கொதித்துக் குறையவும் புவனப்

பதப்புப் புகையால் மறையவும் யுகமுடிவோவென்று உலகத்தா
ரிறையவும் அட்டதிக்குங்காதாரமாகிய எட்டுக்கிரியும் எதிரொலி
செய்யவும் திக்கஜங்கள் திடுக்கிட்டு வாடவும் அஷ்டமாநாகங்
கள் அலறியஞ்சவும் ஆகாயத்தில் வேடிக்கைபார்க்குந் தேவாதி
தேவர்களும் பூபாலராகிய போர்வேந்தர் பலரும் எப்புவனங்
களிலும் இதைவிட அதிசயமில்லையென்று அற்புதமடைந்தார்
கள். அன்றியும் சங்கநாதமுதலிய வாத்திய வொலிகள் முழங்
கின. தீவுகளனைத்துந் திகைக்குங் காலையில், சிங்கலலாடத்
தேர்க்கிறையாகிய அங்கர்கோனனவன் ஆலகால விஷத்திற்
கொப்பாகிய அம்புகளைக் கும்பலாய்ப் பொழிந்து அருச்சுன
னுடைய வில் பாணம் தேர் குதிரை சாரதி முதலியனவெல்லாஞ்
சீர்குலையப்பண்ணினான். அவன் தொடுத்த அஸ்திரங்கள் வருகி
றதுரிதத்தை அருச்சுனன் கண்டு வாய்மடித்து அடையாளப்
பொறித்தலும் அக்கினிப் பொறியையுமுடைய அனலாஸ்
திரங்களேவிக் கர்னன் விட்ட கணைகளனைத்தையும் ஒரு நொடி
யிற் செத்தைபோலாக்கி வில்லில் மேகாஸ்திரந்தாக்கி வந்தித்து
மந்திரித்து வள்ளலான கர்னன்மேற் கொள்ளை கொள்ளையாய்
கூசாமலிறைத்தான். வெள்ளையானமேற் பவனிவரும் வேந்தன்
மகனுந்திய பாணங்கள் காரிடி கடலிடி காலிடி நீரிடி நெருப்பிடி
போல் நெருப்பொடுவருதலைக் கர்னன் கண்டு, கோடாகோடி சூடு
கணைகளைப் படபடெனத்தாக்கி எதிரியுந்திய மேகாஸ்திரங்களைச்
சிந்துசிந்தாக்கினான். இவ்வாறு இருதிறத்தவர்களும் திரண்ட
பழிகளைப் பரபரவென்று செலுத்தித் தேரைக் கரகரவென்றுசுழ
ற்றிச் செஞ்சிலைச் சதங்கைகள் குலுங்க அசைத்துக் கொஞ்ச
மேனும் ஒருவரையொருவர் மிஞ்சவிடாமல் அடர்த்துப் போர்
கொடுத்து வரும்போது, கனகக் கொடையனகிய கர்னன்கைமிஞ்
சிக் காய்த்துத் தோய்த்துக் கடைச்சற்பிடித்தபாணங்களைஎடுத்து
உத்தரகுமாரன்மேலோச்சிஇரதத்தின்மீதுஇருபதுகணைகளை எடு
த்துச் செலுத்திக் குதிரைகள்மீதுகுறிபிசகாது நாற்பதுசரங்களை
ப்போக்கி விஜயன்மேல் நூறுகணைகளை விடுத்தான். அண்டச்சுவ
ரின் அடியைப் பெயர்த்து எண்டிசை முழுவதும் இடியப்பொடி
த்துச் சரசரசரவென விரைந்துவருங் கணைகளைத் தனஞ்சயன்
கண்டு, ஒருசதுர்முகக்கணைகொண்டுஅவற்றையெல்லாம் பிளந்து
பொடியாக்கினான். அந்தவிபரீதத்தைப் பார்த்திருந்த அமரர்களி
யாவரும்போர்த்திறப்பார்த்தனைப் புகழ்ந்துக்கொண்டாடினர்கள்.

பற்குனன் வில்லிற் சரந்தொடுத்து கர்னன்மீதும் அவன் தேரின்மீதும் குதிரைகளின்மீதும் சாரதியின்மீதும் பிரயோகித்தான். அந்தக் கணைகளெல்லாம் ஏகமுகமாய்க் கூடி இந்திர நாட்டை நாடி சப்தமேகம்போ லெழுந்து, இசைந்து, ரதகஜ துரகபதாதிகளை நாடித்தேடி வருகின்ற வேகத்தைக் கர்னராஜன் கண்டு, காலாக்கினிபோன்ற பாணங்களை விடுத்து அவற்றை அணுவினும் பரமாணுவாக்கிவிட்டான். இவன் ஆண்மையைக் கண்ட யாவருந் துதித்து இவனுக் கெதிருண்டோவென மதித்தார்கள். உடனே இருவரும் பிரிந்து பின்னுமெதிர்த்து வாசாமகோசரமாய் வடிக்கணை சொரிந்து அமர் புரிந்தார்கள். இருவர் விழிகள் எரியவும் இருவர் மனதுபதறவும் குதிரையினங்கள் கதறவும் சேனைகளெங்குஞ் சிதறவும் கட்கனலும் தேர்ச்சக்கரங்கள் திருகிய செங்கனலும் கணைகள் கக்குங் கடுங்கனலும் பொங்கிப் புகையவும், ஒருவரை யொருவர் வெகுண்டு புகன்ற உறையினின்று எழுந்த பெருங்கனல் விரித்து எரிந்து நிறைந்தது. இருவர் தேரும் இடைந்தும் இடைந்தும் இடைவிடாமல் உழன்று சுயவன் திகிரிபோற் சுழன்றதால், பாதல பூதல முழுவதும் பள்ளமாகி மறுபடியுஞ் சேனைகளாலெழுந்த புழுதிகளால் நிறைந்தது. இவ்வாறு தொடர்ந்து தாறுமாறுப் வேறுவேறு பாணங்களை நூறுநூறுகத் தொடுத்துச் சண்டைகொடுத்து நின்றார்கள். அவ்வேளையில், அருச்சுனனுனைவன் அங்கராஜன்செய்த அமர்த் திறத்தைக்கண்டு அதிக கோபங்கொண்டு ஆ கர்ணு? உனது சாமர்த்தியமும் நீ செய்யுஞ் சண்டையும் நீ கற்ற கல்வியும் இவ்வளவென் றறிந்துகொள்ளும்பொருட்டே இதுவரையிலும் உன்னைப் பிராணனுடன் விட்டு வைத்திருந்தேன். இனி நான் தாமதிக்கமாட்டேன். பொறுமைக்கு இடங்கொடுத்தால் அது வறுமைக்கு இடமாகும். இவ்விடத்தில் உள்ள பெரியவர்களும் உரியவர்களும் அறியும்படி ஓரேகணையால் உன்னை வாட்டிக் கீர்த்திநாட்டி நானடையப்போகிற வெற்றியை நீயே நன்றுயோசித்துப் பாரென்று இரண்டு அர்த்த சந்திராஸ்திரங்களை விட்டு அதிசீக்கிரத்தில் கர்னன் கையிற் பிடித்திராநின்ற வில்லைக் கடுக்கென் றொடித்தான். அப்பொழுது கர்னன் கலகலவென்று நகைத்து மலைபிளந்ததுபோ லொடிந்தவில்லை விட்டெறிந்து கண்களை யுருட்டி விழித்துக் காரும் பாருங் கருகநோக்கி வேறு வில்கொண்டு பற்குனன்மேல் சிகைவிரிந்த செங்

கதிர்வேலெடுத்துச் செலுத்தினன். அங்கதேசாதிபன் எறிந்த வேலாயுதமானது வெளிப்பட்டு சொர்ன நிறமாகச் சொலித்து செஞ்சிலை விஜயனை நோக்கிப் பூரணச் சந்திரனைப் பிடிக்க வருகின்ற இராகு கிரகம்போல் வந்தது. அந்த வேலாயுதம் கந்தமாதன முதலிய கடலுங் கலங்கத் திரிபுவனமுந் திடுக்கிட வருவதைச் சர்ப்பக்கொடிதரித்த கௌரவகுல திரியோதனனும் ரதகஜதுரகபதாதிகளுங் காவலர்களுங் கண்டு ஓகோ! அர்ச்சுன னுடைய சௌரியம் இப்போதல்லவோ தெரியப்போகின்ற தென்று நிமையுடன் நிமைகொட்டாமற் பார்த்திருந்தார்கள். எல்லோரும் நடுங்க எதிரேறிவந்த வேலாயுதத்தை அனுமக் கொடிக் கதிபதியான அர்ச்சுனன் பார்த்து, வலிதிருந்தி மணி பொருந்தி மலரணிந்து விளங்குகின்ற வச்சிரக்கணை யொன் றெடுத்து அசைவற்ற வில்லிலமைத்து அபிமந்திரித்து ஆவே சங்கொண்டுந்தினன். அந்தக் கணையானது பந்துபோ லெழு ந்து வந்து மேல்விழுந்து வந்த வேலாயுதத்தை அரப்பொடி யாக தூறி அந்தப் பொடியை வணங்காமுடிமன்னன் முதலிய கௌரவ சேனைகளின் கண்களிற் றூவியது. விழித்தகண் விழித்தபடி வேடிக்கைபார்த்திருந்த வேந்தர்யாவரும் இதற்கோ இந்தக்கொள்ளை அடா பாவியென்று .தலையிறங்கிக்கொண்டார் கள். அதைக்கண்ட தேவர்கள் அகங்களித் தாடினர்கள். அங்க தேசராஜனுகிய கர்னன் அருமையாய்ப் பெற்றிருந்த வேலா யுதம் அர்ச்சுனன் கணையால் அழிபட்டுப் போனதைக்கண்டு சற்றுந் தளராமல் மனந்திடங்கொண்டு வைரவில்லெடுத்து நாரிபிகித்து சிறுநாணைசைகாட்டிச் சிலைவிஜயனுக்கு எதிரில் வந்து அளவுபடாத அஸ்திரங்களை அமோகமாகச் செலுத்திப் போர்செய்யுந் திறத்தை இந்திரன் மைந்தனன தனுர்வேத சுந் தரத் தனஞ்சயன் கண்டு பரமனை வணங்கி அருச்சனை புரிந்து போற்றிச் சிறந்த பொற்கட்டமைந்த அஸ்திரங்களைத் தெரிந் தெடுத்து விடுத்துச் சங்கமுங் குறித்துச் சொர்ணமயமாய் விளங் கும் கர்னன் தேரையும் மின்னெழில்போன்ற மச்சக்கொடி யையும் நான்குபுரவியையும் அப்புரவிகளை பாங்குற லிடுக்குஞ் சாரதியையும் பொடியாக்கி அவனுடற்காப்பாகிய மணிக்கவசத் தையும் அறுத்துவிட்டு வீரபட்டத்தையுந் தூளாக்கித் தலை யிறக்கமாய்ப் பூமியில் நிற்கச்செய்து மிகமகிழ்வுற்றுச் சிற்சில வார்த்தைகள் சொல்லலுற்றான்.

ஐயா கர்ணு! இளமைதங்கிய ரிஷபம்போன்ற உன்னை நான் நெடுநாளாக அறிவேன். உன் யோக்கியம் எப்படிப்பட்ட தெனில் புத்தியில்லாத புரவலர்சேர்ந்த புன்சபையில், என்னை வெற்றிகொள்ளத்தக்க சுத்தவீரர்கள் ஒருவருமில்லையென்றும் யுத்தத்தில் நான் அதிசமர்த்தனென்றும் விஸ்தாரம் பேசுவாய். நான் நிகரற்றவனென்பாய். இப்படி பிதற்றிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் உன் பொல்லாதவேளை யுத்தம்நேரிட்டால் அற்பபலம்பெற்ற அறிவில்லாரைப்போல் அயலிற் பதுங்குவாய், ஒருவேளை அடுத்துப் போர்கொடுக்கத் துணிந்து ஆனமட்டும் பார்ப்பாய்; உடனே அடிபட்டு ஓட்டமெடுப்பாய். இக்குணம் உன்னுடன்கூட பிறந்திருக்க வேறே யொன்றுண்டாகுமா? ஐயோ! எவர்களென்ன கேட்டாலும் இல்லையென்னுமற் கொடுக்குந்தன்மை உன்னிடத்தில் உண்டென்றும் ஓயாமலீயுங் கொடையாளியென்றும் இடையெழுவள்ளலில் ஒருவனென்றும் உன்னைப் போற்றிப் புகழ்கின்றார்கள். ஆனால் யுத்தகளத்தில் செருக்குடன் வந்து அடிபட்டவுடனே அப்பாவென்று புறங்காட்டியோடுகிற விஷயத்தில் நீ மிகவுங்கொடையாளிதான். நானும் உன்னை மதித்திருக்கின்றேன். வாய்மதம் பேசும் வள்ளலே! போர்முகத்திற் றேர்செலுத்திப் போர்புரிந்து புறமிடாதிருந்து பிராணனை விட்டுவிடுவையாகில், ஜகத்திலுள்ள தேவர்களும் எதிர்கொண்டு சென்று மகிழ்வார்கள். அரம்பாஸ்திரீகளின் போகமுண்டாம். வீரசுவர்க்கமடைவாய். இல்லையாயின் நீ யடுத்திருக்கின்ற அரவக்கொடியோன்கொண்டாடும்படிக்குத் தப்புவார்த்தைகளைக் குளறி உன் காலத்தைக் கழித்து நமனுக்குநாளை ஒப்புவிப்பது உத்தமம். அப்படிச் செய்யாமல் அமர்செய்ய வந்து புகுந்து பிறைமுகப பகழி சொரிந்து நானும் போராடுகின்ற வீரபுருஷனென்று தேரேறி வந்து எதிர்த்தது மதியீனம். திறனற்றவனே! மேலும் பாஞ்சாலராஜன் பண்ணிய யாகாக்கினியிற் பிறந்த திரௌபதாதேவியை அத்தினபுரியிற் கூடிய கொற்றவர் சபையிலேற்றி வஸ்திரபங்கஞ்செய்த காலையில் பொறிபுலன் கலங்கிக் கண்ணீரைத் தாரைதாரையாச் சொரிய மெய்சோர்ந்து நடுநடுங்கி நின்று மானந் தன்னதென்று மானம் வாதித்துத் தன்னுல் புடவையைத் தடுத்துக்கொள்ள மாட்டாமல் வஸ்திரத்தைக் கைவிட்டுத் தேகாபிமானம் நீங்கி ஹரிவாசுதேவா! ஸ்ரீகிருஷ்ணு!

மானுடிமான முன்னுடையதென்று துதித்து வணங்கி மரம் போல் நின்ற பாஞ்சாலியைத் துஷ்டராகிய நீங்கள் பார்த்து நகைத்துப் பரிகாசவார்த்தை பகர்ந்தீர்களே. அந்தவேளையில் எங்கள் தமையனுகிய தர்மராஜன் அப்பா தம்பிமார்களே! இப் போதொன்றும் முழுகிப்போகவில்லை. இதுவரையும் நாம் தரு மந்தப்பி நடந்தோமென்னும் பேருமில்லை. பழிச்சொற் பெரு மற் சகித்திருங்களென்று அடிக்கடி யெங்கட்கு அறிவுறுத்திச் சாந்தம் பத்தினிதநயன் பொறுமையென்று தர்மஞ் சொல்லித் தடைப்படுத்தினர். அவரோதிய மூலமந்திரத்தால் மாநாகம் போல அடங்கித் தடைபட்டுக் கர்மானுபவப்பிரகாரங் கடத்தி னேம். ஆஹா! வைதிக சாந்தஸ்தராகிய தருமராஜனது அருள் நிறைந்த கடைக்கண் கொஞ்ச மசைந்திருப்பினும், எங்களை நோக்காதிருக்கினும் போதுமே. இதுவரையிற் கர்னன் திரியோ தனன் என்னும் பெயர்கள் இந்தக் காசினியோர் பேசிக்கொள் ளவுமிருக்குமோ? இவர்கட்குச் செல்வமும் செருக்குமோ? தீரமும் பெருக்குமோ? ஆ பாவி! அடடா! நாங்கள் ஒடுங்கியிருந்தும் அச்சபையில் நீங்கள் நடத்தின அந்நீதத்தால் வீமசேனன் வெகுண்டு மனம் நொந்து திரியோதனன் முதலிய நூற்றுவரை யும் என் கதையால் நானே நொறுக்குகிறேனென்று சபதஞ் செய்து இவர்களை முடிக்கிறபரியந்தம் கையாற் ஜலமருந்தமாட் டேனென்று கூறினன். அந்தச் சொல்லைக்கண்ட சமஸ்தமான பேரும் தலைசாய்த்துச் சாய்ந்தார்கள். அந்தவேளையில் நா னுமெழுந்து மின்னிய கணையால் உன்னுயிர்போக்குகிறேன் என்று உறுதிவார்த்தை உரைத்திருக்கின்றேனே. அது உனக்கு நன் றாய்த் தெரியவருமே. என்றைக்கிருந்தாலும் என் பாணத்திற்கு உன் தலை இரவலே. இப்போதுமென்ன? ஒரேமுழுக்கில் மண் ணைடுக்கவேண்டுமென்னும் அவசரமில்லை. நீ இப்போதிருக்கும் கதியை யோசித்துப்பார். உனக்கு என்னுடன் சண்டைபோடத் தெரியுமாகில் தாராளமாய் வந்து போர்புரிந்து என்னை ஜயிக்க லாம். நான் உனக்கு இந்தப் பூமியை இடம் பண்ணியிருக்கின் றேன். ஐயோ பாவம்! எங்கே பிறந்தாய், எங்கே வளர்ந்தாய், எங்கேயிருந்தாய், இங்கே புகுந்தாய், அங்கே தேசாதிபனே! அவ்வாறு சாகாமல் இன்னுஞ் சிலநாளைக்கு இருக்கவேண்டு மென்று எண்ணினாலும் இதோ நான் தொடுக்கப்போகின்ற இந் துமுகாஸ்திரங்களினால் தப்பாமல் உன் தலை தத்திவிழப்போகின்

றது. அப்பா! நான் முன்னதாய் உனக்கறியச் செய்தேன். இப் போதாகிலும் சாகாமல் தப்பித்துக்கொண்டுஓடிப்போவாயென்று உறுக்கி விழித்தான். இந்தப்பிரகாரம் அர்த்தனரீஸ்வரம்பெற்ற அம்பிகையுடன் என்கர்த்தராகிய பரமேஸ்வரர் மழவிடைமேல் எழுந்தருளிவரும்படிக்குத் தவயோகஞ் சாதித்த தனஞ்சயனன வன் சாற்றியபோது, அவனிசைத்த கடுமொழிகளெல்லாங் கல ந்து பிலம்புகுந்துஉறையுமாறு கர்னராஜனுடைய காதிற்புகுந்து கலங்கச்செய்தான். அதனற் கர்னனனவன் சூரியன்போற் கண் சிவந்து நெருப்புக்காற்று வீசுவதுபோல் நெட்டுயிர்ப்பெரிந்து இரத்தினமிழைத்த கடகசுங்கணத் தோளணிதாங்கிய இருகரத் தையும் பளபளவெனத் தட்டி இரண்டு கையையுங் கூப்பிக் கொட்டி கக்கட கக்கடச் சிரித்துச் சிரத்தை யசைத்துத் திக்கென் றெரிய விழித்துப் பக்கத்திற் குப்புறப் பாய்ந்தோடிப்போனன்.

இவ்வாறோடிய கர்னன் மனந்துணிந்து மலைபோற்றிணி ந்த சேமத்தேரேறி வச்சிரக்கவசம் உச்சிதக்கவசம் மாணிக்கக் கவசம் பொற்கவசம் பூண்டு விசாலமான மார்பில் முப்புரிநூலும் முத்தாரமும் கொத்துச்சரப்பளியும் பொன்மாலை பூமாலையும் மின் னும்படித் தரித்து வில்லைப்பிடித்து விசையாயிழுத்துக் கடலின் அலைபோற் றுலங்கிய நாரிமாட்டித் தடதடவென்று தேரைச் செலுத்திச் சற்றுநேரத்திற்கு முன்னே சண்டைபோட்டு இளைத் தோடிய தடத்திற்போய் நின்று, மீசைமுளைக்கு மிகு முறுக்கேற் றிக் கண்டவர் கலங்கக் கனைத்துக் கொண்டலவாகன குமார னை கிரீடியை அண்டையிற்கண்டு, அடா அருச்சுன! எங்கே ஓட வழிபார்த்திருக்கின்றாய்? சண்டைபோட வகையில்லாமற் போகின்றாய்? இதோ நான் வந்திருக்கின்றேன். போரிலிளை யாமல், என்னை வளைத்துப் போர்புரிய வாடாவென்று அவனை மடக்கி, ஏண்டா என்னை யிழிவாய்ப் பேசினையென்று தன் நாக் குத் தழும்பேறும்படியாய்க் கோபங்கொண்டு கொடியசொற்களைக் கொட்டினன்.

அடா பஞ்சவரில் இடைப்பட்ட பஞ்சையே! நீ என்னடா கொஞ்சமேனும் அஞ்சாமல் மிகக்கற்ற சுத்தவீரன்போல் கர்வங் கொண்டு மிஞ்சிப் பேசுகின்றாய்? தலையறுந்த ஆட்டமாய்த் தனக்குத்தானே சுழன்றாடுகின்றாய். ஊரில் உலகத்தில் உள்ள பெரியோர்கள் உரியோர்கள் சிறியோர் முதலிய வறியோர்கள் இவர்கள் யாவரும் உன்னைப் பார்த்து இவனும் ஒரு வீரன்

ருவனென்று ஏளனஞ்செய்து சிரிக்குமாறு ஏமாந்த சூதாடி, நாட்டை நகரத்தை நலத்தைப் பலத்தைப் பங்காளிகள் கையில் ஒப்புவித்துப் போட்டு, மானம்போனாலும் பிராணன் இருந்தாற் போதுமென்று இருளுக்குப் பிறப்பிடமும் இருப்பிடமுமாகிய வனத்திற் சென்று கதியற்றிருந்து கஞ்சிக்கலைந்து வயிறுகட்டி வாணாளோட்டிக் காலங்கழிக்க கற்றுயன்றிப் போர்முனைக்கண் நேர்புகுந்து வில்லாளரான வல்லாளருடன் விதண்டை விளைத்து வெற்றி பெறுகின்ற விதம் இவ்வாறென்று அறிவாயோ? வீரப்பிரதாபம் பெற்ற விவேகிகளை உணர்வாயோ? நீயும் ஒரு வில்வீரனென்று வீரபட்டங் கட்டிக்கொண்டு வில் லெடுத்தும் போர் தொடுக்க வந்தாயே? நன்று நன்று. அஸ்தினபுரத்து ராஜகோஷ்டியில் சூதாடித் தோற்று மரியாதை இழந்ததுமன்றி உங்கள் நாட்டைப் பறித்துக்கொண்ட நரேந்திரனவன் உங்கள் மனைவியின் மயிரைப்பற்றி யிழுத்துவந்து சபையிலேற்றி மானபங்கஞ் செய்வித்தபோது தலைநீட்டாதிருந்த உங்கட்கு இன்றிவ் வீரத்திற மெங்கிருந்து முளைத்தது? மானமும் வல்லமையும் மாறுதவனே! கீழே கிடப்பவன் மேல் வருவதுமுண்டென்பதுபோல், சூரத்துவம்புதிதாயுனக்குஇக்காலையிலுண்டாயிருப்பினும் என்னைச்செயித்து இசைபெற உன்னாலாமோ? ஆ கிரீடி! விஜயகாண்டீபம் எடுத்து வெற்றி வாகை சூடுதற்கு வந்தாயோ? ஆ பைத்தியக்காரா! இராஜேஸ்வரனாகிய திரியோதனமஹாராஜன் சமுகத்தில் பேச்சுமூச்சின்றி அடங்கி கிடந்த பாண்டவர்களில் பின்னிட்டிருந்த நீ என்னைமிரட்டி ஜயிக்கவந்தது உன்பேதமையே, இதோ இப்போது நான் விடுக்கப்போகின்ற இரவியாஸ்திரங்களால் உன் உடல் முறிபட்டு உன்னை யொத்தவர்கள் நிந்திக்கத் தலைப்பட்டு நீ நெடுநாளாய்த் தேடிச் சேகரித்த கீர்த்தியுங்கெட்டு நிஷ்ரேமாகிய வசைமேலிட்டுப் பொன்னுடம்போய்ச் சேரும்படியாய் நாளிட்டுவைத்த நன்னாள் இன்று வந்தொத்துக்கொண்டது. இனியென்ன விருக்கிறது? தாய் தனயன் தம்பியர்கள் தாரம்தனயன்முதலினைரையொழித்துவிட்டுச் சண்டைக்குத் தலையிட்டு விராடபுரத்தெல்லையிற் பொன்னுலகடையப்போகிறவுன்னைக் குற்றமான கொடுஞ்சொற் கூறுவானென்? அப்படிப் பேசுவதனால் எனக்கென்ன லாபம்? ஓபார்த்தனே! சற்றுநேரத்திற்குமுன் என்னை ஜயித்துத் துரத்திவிட்டதால் இறுமாந்து முன்பின்னெண்ணுமல் குறைகுடந்

தளும்புவதுபோலும் தொய்யரிசி கொதிபொறுக்காத தன்மை போலும் விபரீதமாகப் பேசினையே; உன்னுடனெதிர்க்கையில் என் கைவில்லையும் நானேறிய தேரையும் இழந்து நானும் போர்முனையி லழிந்துபோனதை இன்னகாரணத்திற்கென் றறி யாமல், வெற்றியடைந்தோமென்னும் உற்சாகங்கொண்டு உமக் கிஷ்டமானபடிப் பேசினபோலும். அப்பா அருச்சுனு! யானை யைச் சிங்கம் பங்கப்படுத்துவது இயற்கை. அத்தகைய சிங்கம் யானைக்கு இளைத்துப்போமாகில் அந்த யானை சந்தோஷப்பட் டுச் சிங்கத்தைப் பழித்துப்பேசுவது கூடுமோ? உன்னை வல்லவ னென்று பேசிக்கொள்ளுகின்றீர்களே. உனக்கென்ன தெரி யும்? வில்லானது எவ்வளவு துவண்டு வளைகிறதோ அவ்வள வும் வேகத்திற்கிடமென்று தோன்றவில்லையா? ஆட்டுக்கடா பின்னுக்கிடைவது எதிராட்டின் தலையோட்டிற்குக் கேடென் றுணராயா? ஏதோ காரணத்தினற் பின்னிட்ட சிங்கமானது மறுபடியும் வீரிட்டெரிந்து மத்தகத்தைப் பிளந்து மூளையை யுறுஞ்சிப் போடுமென்று சற்றேனும் நீ நினைக்காமற் போன தென்ன? இனி உன்னிடத்திற் பேசுவதிற் பயனில்லை. அப்பிர யோசனு! இனி என் விற்றிரத்தைச் காண்குதியென்று உரத்த தொனிசெய்து அதட்டிக் கரத்திலிருக்கும் வில்லைநாட்டி நாண் பூட்டி வலுத்த கணைகளை வந்தித்து மாட்டி வீரலக்ஷணங்காட்டி மிகுந்த விசையுடன் தகுந்த சரங்களை விறுவிறென்று பொழிந்தான்.

சூரியகுமாரனை கர்ணன் தொடுத்த சரங்களினாலும் அவன் மீறிப்பேசிய வீரச்சொற்களினாலும் அருச்சுனன் மனம்பதை த்து அனலாஸ்திரம் புகையாஸ்திர முதலியவைகளை அபிமந் திரித்துப் போக்கிப் பற்பல தேயமாந்தரும் விற்படை வேற் படையுடைய வேந்தரும் வீரசேனைகளும் இருண்டு மருண்டு இளைத்துப்போம்படிச்செய்து கர்ணன்மீதுங் கணைகளுந்தினான்.

இவ்வாறு எண்ணிறந்த அம்பினங்கள் முந்தியதைக் கர் ணன் கண்டு, அதைத் தடுத்தொழிக்கக் கோடி அஸ்திரங்களை விப் போராடித் தன் சேனையோடும் வேந்தரோடும் சேர்ந்து கிரீ டியைவளைத்துக்கொண்டு ஈட்டி கதை வாள் வேல் சூலம் பிண்டி பாலம் தோமரம் கத்தி கடாரி வாங்கு முசுண்டி முள் முளை சக் கர முதலிய சஸ்திரங்களை எடுத்தெடுத்தெரிந்து, மூடுபனிபோல் ஜாடுங்காலையில் சிங்கமென நின்ற தனஞ்சயன் செஞ்சுடர்க்

கணையை எடுத்து அபிமந்திரித்து பூசைகள் புரிந்து காண்டீப நாரியில் வரிந்து தலைகால் தெரியாமற் சொரிந்தான். அக் கணைகளெல்லாஞ் சேர்ந்து கும்பலிற்போய் விழுந்து தும்பு பறக்கச் சிதறவடிக்கும்போது காவலர் முதலிய சேனைகள் கடல் முகட்டெழுந்த கதிரவன் முன்பட்ட பனியெனப்பட் டழிந் தார்கள். விண்படரும் மேகம்போலடர்ந்த நான்கு படைகளி லும் புண்படாமற் போனவர்களில்லை இந்தப்பிரகாரம் வந்த சேனைகளெல்லாம் கரமுறிந்து கால் தறிபட்டு சிரமுடைந்து சிலநெரிந்து சிதைந்தன. வெற்றிபெற வந்தவீரர்கள் வதை ந்து சாய்ததையும் பிணச்சேற்றிற் புதைந்து போனதையும் ஓதுங்கியோடுவதையும் பதுங்கிவோடுவதையும் பானுகுமாரனை கர்னன் பார்த்துப் படபடத்துச் சினந்து குருகுல சேனையிலு ள்ள படைமன்னர் அன்புகூர்ந்து இன்புறுமாறு ஆசாரியரான பரசுராமரைப் பணிந்து போற்றி அழல்வாளி கோடி அனல் வாளி கோடி அரிவாளி கோடி யெடுத்துத் தொடுத்தான்.

அந்தக் கணைகள்யாவும் செந்தீயிறைத்து ஐகமுற்று நிறை ந்து விண்ணைக்கருகி மேகங்களைச்சுருக்கி வேலை நீரை வெதுப்பி வெந்நீராகக்குழப்பி விண்டலமளாவிப் பிடித்து மேலிட்டு நின்ற மலையை யிடித்துப் பெருங்காற்றடித்துச் சோலைமேகம்போற் பொழிந்து சற்றேனுந் தங்காமற் றிரிவதைப் போர்முகப் புலி யான விஜயபுருட சிலாக்கியன் கண்டு சிங்கமுகமுடைய இந்து முகாஸ்திரம் ஐந்து ஆய்ந்தெடுத்து அபிமந்திரித்து எதிரி தொட்ட பாணங்களைச் சற்றுநேரத்திற் சிதறவடித்து வெற்றி பெற்று வரக்கடவையென்று விட்டான். அவை அவனுந்திய வண்ணம் வந்து முந்திய கணைகளைப் பிளந்து வானெர் கண் டோடக் களந்துலாவித்திரிந்தன. இவ்வாறு மூவுலகுங்கொண் டாடக் கொடையாற் பெயர்பெற்று கீர்த்திவிளக்கிய கொற்றவ னுகிய கர்னனும், தொடுக்கும் படையாற் றுட்டர்களழியக் கொட்டமடக்கிப் பெயர் விளக்கும் பாண்டவனுகிய பார்த்தனும் ஒருவர்க்கொருவர் எதிர்த்துப் போர்புரிந்தார்கள். இருவர் கணை யும் பரிந்து இருவர் இரதமுஞ் செறிந்து இடைபட்ட சேனை யும் சிதைந்து ஆகாயமும் பூமியும் நிறைந்து சூரியவொளியுங் குறைந்து வேடிக்கை பார்த்திருந்த மூவரும் தேவரும் மறை ந்து இடம் பெயர்ந்தார்கள். வாயுதேவனும் உலகி லுலாவுத லொடுங்கி வ்தம்பித்துப்போனன். இருவரும் விடுத்த பாணங்க

ளின் வேகத்திலுல் வெகுபேர் மாண்டார்கள். அடிக்கடி அவ சகுனங்களும் விபரீதங்களும் உண்டாய்த் திகிலும் விளைந்தது. யுத்தஞ் செய்கின்ற இருவர் கண்களுஞ் சுழன்று இருவரெண் ணங்களுமழன்று, சிறப்பாய்வநந் தேருந்தேரும் நெருப்பாய் வருங் குதிரையும், சிறப்புற்ற தேர்ப்பாகரும் ஆர்க்கின்ற கோடிகள் ஒன்றேடொன்று ஊடுதாக்கி அனர்த்தம் உண்டாக் கியபோது, கர்னன் கனத்து இடம் வலம் வலம் இடமாகத் தேரைத் திருப்பிக் கர்ஜ்ஜித்து பெரும்புலியென்ன புகுந்து அடா அருச்சுன! ஒரு வருஷகாலங் கடத்தவேண்டிய அஞ் ஞாதவாசத்தில் இன்னம் ஒருநாள்கழிக்கவேண்டியிருக்க, அதற் குள் அவசரமாய் வெளிப்பட்ட உன்னுல் மறுமுறை பாஞ்சாலி யுடன் நீங்கள் ஐந்துபேரும் வனவாசஞ்செய்ய நேரிட்டதே. அது நீங்கள் சபையிற் சொல்லிய சத்தியவசனந்தானே. அதை நீ மறந்து ஏனை மெத்தத் தத்திச் சுற்றித் தலைகீழாய் வீழ்கின் றாய்? கற்றவித்தையெல்லாங் காட்டுகின்றாய்; குற்றமற்றவனைப் போற் கொண்டானடிக்கின்றாய். இதோ நான் விடப்போகின்ற சிலீமுகங்களினுல் நீ இறந்துபோவாயேல். "கூண்டோடு போயிற்று குளிருங் காய்ச்சலும்" என்னும் பழமொழிப்படி மற் றவர்களை மன்னிக்கப்படும். ஒருவேளை என் கணைக்குத் தப்பிப் பிழைப்பாயாகில் இன்னும் பதின்மூன்று வருடம் வனவாசம் பண்ணவேண்டும். இவ்வாறே ஒவ்வொரு அஞ்ஞாதவாசத் தோறும் உங்களை எப்படியாகிலுங் கண்டுபிடித்துக் காட்டை அரசாளவிடுத்து நாங்கள் நாட்டுக்கரசராயிருந்து எங்கள் கால த்தை இன்பமாய் கழிப்போம். உங்கள் காலத்தை உதவாமலொ ழிப்போம்; இந்த ஞாலத்தை இசையுடன் புரப்போம்; நீங்கள் செய்யும் இந்திரஜாலத்தை பசையறக் கரைப்போமென்று சிந் தைவெம்பித் தீப்பொறி பறக்கும் நெருப்புக்கணைகளை ஒன்றின் பின்னென்றுக வந்தி நிரைநிரையாகச் சிந்தி அர்ச்சுனனையும் அவனுடைய தேரிற்பூட்டிய அஸ்வங்களையும் சாரதியும் அலக் கழித்தான். கர்னன் சிந்திய அந்தக்கணைகளானதையும் ஆகாச பாணம்போலிறைந்து இராகுக் கிரகம்போல் விரைந்து பரந்து எரிந்து வருகின்ற கோரத்தைப் பார்த்தன் பார்த்து கண்ணும் மனமுங் கறுத்து விண்ணும் மேகமும் வேகச்செறுத்து வின் ணிவீக்கி ஒன்றுபட்டோடச் சரங்களைத்தாக்கிப் பட்டப்பகற் போல் வெட்டவெளியாக்கிப் பானுகுமாரன் உந்திய பாணங்களை

யெல்லாம் நடுப்பாதியில் துண்டித்து, அவனது சேனைகளையும் நிலைகெட்டோடச்செய்து, இந்தக் கர்னனை எதிரியாகக்கொண்டு நாமிவனுக்கு நேராகநின்று போராடுவதும் இவன் நம்மையடிப்பதும் நாம் இவனையடிப்பதும் பெருமையாயிருக்கவில்லை. பார்க்கின்றபேர்கள் இவனுஞ் சுத்தவீரன்தான் இவனுல் அருச்சுனனும் அடிபட்டான் வெகுநேரஞ் சண்டைசெய்தானென்று சொல்லுவதற்கு இடமுண்டாகும். ஆதலால் இது நமக்குத் தகாது. இவனைவெடிதிர்த்து வெகுநேரமாகிறதென்று நெற்றி வியர்த்துப் புருவமத்தி நெறித்துச் சற்றுநகைத்து முற்றப்பகைத்து உச்சிதமான வச்சிராஸ்திரந் தொடுத்து அவனுக்கு உடற்காப்பாகிய கவசத்தையும் மார்பையும் உடலையும் பீறிக்கிழித்துப் பெருந் துளையாக்கி உதிரம் பெருகியோடச் செய்து அவ்வளவில் விட்டுவிடாமல் இரண்டு காளமேகச கணையைத் தாக்கி வீணைப்பிதற்றும் வாய்மேலடித்துக் கச்சை நெடுங்கொடியைப் பிச்செறிந்தொடித்துக் கண்கள் இரண்டிலும் புண்படவடித்துப் பிரமிக்கச்செய்து, நவரத்தினமுடி தவறக் கெடுத்து, வாகுவலயமுதலிய மதாணிப் பதக்கங்களையு மாற்றிப் பாரியவில்லைப் படீரென முறித்துப் பாவியான கர்னனைப் பார்க்கப்பார்க்கப் பற்றிக்கொண்ட வயிற்றெரிச்சலுடன் வைரம்பற்றிய எரிகணையிறைத்து அவன் இருதோளையுத் துளைத்துப் பகைத்தெரித்த பரிவாரங்களையும் வளைத்துக்கொண்டு பஞ்சுபோற் குமுக்கிக் குவித்துக் குலைகுலைந்தோட ஜாடியடித்து எதிரொருவருமின்றி எங்குந் தனித்து ஊடாடிவருந் தாடாளனை தனஞ்சயனை வகூஷ்தலத்தில் மகாலட்சுமியை வைத்தருளிய மாயனும் அவரது திருநாபிக்கமலத் தெழுந்தருளிய சேயனும் பகூஷ்துடன் மகிழ்ந்து பரிந்தார்கள். தேவர்களும் புகழ்ந்து கொண்டாடினர்கள்.

இப்பால் அங்கதேசாதிபன் அர்ச்சுனலைடியுண்டு தனக்கு உயிர்த்துணையான வில்லும் ஒடிந்து ஜீவரத்தினத்தை யிழந்த செந்தலை நாகம்போற் சிந்தைதளர்ந்து பின்னுந் தைரியம் விடாமற் கிளர்ந்து,வேறு விற்பிடித்து மின்னல்போற் பிரகாசிக்கின்ற நாரியிறுக்கித் திசாதிசைகள் நடுங்க சந்திரசூரியர் உதிரவானிறைத்த மோனமுனிவரும் ஞானமுனிவரும் மூப்பத்து மூக்கோடி தேவர்களும் மூக்குண மூத்தொழில் விளையாட்டுடைய மூவர்களும் பேரானந்தங் கொள்ளும்படிக் கொஞ்ச

நேரத்திற் குள்ளாகத் துரோணமேகம் பொழிவதுபோற் கொடிய விஷத்தைக் கக்குகின்ற கணைகளைக் கைக்கொண்ட மட்டுங் கட்டுகெட்டாகத் தொடுத்தான். இவ்வாறு கர்ணன் தொடுத்த கணைகளினுல் அருச்சுனனுடைய தேரும் நான்கு குதிரைகளும் உத்தரகுமாரனை சாரதியும் அலக்கழிந்து கலக்கங் கொண்டார்கள். அவ்வேளையில் எங்கும் புகழ்ந்தேத்தா நின்ற பற்குனனெனவன் அமுதாகரனென்னும் அர்த்தசந்திர பாணத்தை நிமிடிகரிக்கக் காண்டீபத்திற் பூட்டிக் கடுகத் தெரித்துக் கர்ணனுல் விடப்பட்ட காலாக்கினிக் கணைகளையெல்லாம் ஒன்று போனவழி மற்றொன்று போகவிடாமல் தகர்த்துக் கிழித்து ஒழித்துப் பழித்து இடியாஸ்திரங்களை முடியப் பரப்பி வடுவில்லாத கர்ணன் பிடித்திருந்த வில்வளைவை நிமிர்த்து மளமளவென்று நடுவற முறித்தான்.

அப்போது, அங்கதேச பட்டாபிஷேகத்தைத் துட்டரைக் கொட்டமடக்கும் துரியோதனனுற் கட்டிக்கொண்ட கர்ண ராஜன் தன்கையிலிருந்த வட்டவரி வில்லானது அருச்சுனனுல் வெட்டுண் டொழிந்தபோதே அதுகெட்டதென்று விட்டெறிந்து எட்டுத்திக்குங் கெட்டயரும்படி ஆர்ப்பரித்து வச்சிரக் கட்டிட்ட மலைபோன்ற கதாயுதமெடுத்து விறுவிறெனச் சுழற்றி விட்டெறிந்தான். அதனுல் குவலயம் நடுங்கிப் பின் வாங்க அலைகடல் நிலைதவறி முன்னேங்க திசையானை யெட்டுத் திடுக்கிட்டொதுங்க சக்கரவாளத் தலைதாழ்த்திப் பதுங்க எங்குமில்லாம லுழக்கி உக்கிராகாரமாக வருகின்ற கதாயுதக் கடுமையைக் காண்டீபன் கண்டு வயிரக்கணையொன்று மந்திரித்தெடுத்து மலையுடன் மலைவுறுமாறு கதாயுதம் வருவதைக் காட்டிக் காதளவும் இழுத்து மாட்டினுன். அந்த வயிரக்கணையானது வந்து கர்ணன் வீசிய கதையை வழிமறித்துக்கொண்டு, அதை அனந்தங்கோடி சக்கைசக்கையா யுடைத்து வெற்றிபெறுவதற்கு விரும்பிவந்த அவன் சேனைகளின்மேல் இறைத்து அவர்களையுஞ் சின்னபின்ன மாக்கியது. அதனுல் சேனைகளுந் தானுஞ் சகிக்கமாட்டாமல் கவண்கல் லடியுண்டு அழிந்தவர்களைப்போல் கை கால் வாய் சிரம் உடல் முதலிய உறுப்புகளும் வருந்தி மடங்கி யோடினர்கள். இவ்வாறுகத் தன் படைமன்னர் முதலாகிய சேனைகளும் அவ்விடத்திற் பொருந்திப் போர் கொடுக்கமாட்டாமல் மாறுபட்டோடினதையும் தான் எடுத்

தெறிந்த தண்டாயுதமானது உமியுந் தவிடும்போல முறிந்து பறந்து சிதறிப்போனதையும் எதிரியாகிய இந்திரகுமாரனும் அவனேறிய தேரும் அதிற்பூட்டிய குதிரையும் சாரதியும் அணுவளவும் பழுதுறுமலிருக்கும் அதிசயத்தையும் தன்னுடைய கதாயுதம் அநியாயமாய்ப்போன புதுமையையும் அந்த அருச்சுனன் கணைகள் அதிக்கிரமித்துக் கொல்லுகின்ற மந்திரத்திறமையையும் கர்னன்கண்டு பெருமூச்செறிந்து ஏக்கங் கொண்டுயாதொன்றுந்தோன்றுமல் இளைத்து நின்றுவிட்டான்.

அப்படிநின்ற அங்கராஜனைச் சங்கிராமவிஜயன் பார்த்து கெக்கலிகொட்டி நகைத்து மெத்த போர்வீரர்களை யடித்து செத்துப்போகமுடித்து வெற்றிபெறப் படித்திருக்கிற பத்துகணைகளை ஆராய்ந்தெடுத்து பற்பல பூசைகள் செய்து உபசாரத்துடன் வணங்கி அபிமந்திரித்து தெரித்தான். அந்தக்கணைகள் பந்தபாசம்போற்பற்றி எட்டுத்திக்கிலுஞ் சுற்றிக் கர்னன் ஊர்ந்துவந்த கனகமயமான ரதமும் அந்தரத்திற் பூட்டிய வேகக் குதிரையும் அப்புரவியின் மனமும் எஜமானுடைய இஷ்டத்திற் கேற்கும் படியாய்த் தேர் செலுத்துஞ் சாரதியும் ஒருகூணத்திலழிய ஒழித்து அக்கம் பக்கத்தில் நிற்கும்படைகளைக்கழித்து அண்டகடாகம் வரையிலுஞ்சென்று உலாவிக்கொண்டிராநின்ற பாணங்களையும், கலமதிமுகங் கடுத்துக் கறுத்து நிற்கின்ற காண்டீபனையும் கர்னன் கண்டு கனல்வீசக் காய்ந்து, சாய்ந்துபோன தேர்விட்டிறங்கிப் பாய்ந்து உதடுமடித்து முகஞ்சுளித்துக் கைவேல் கதிர்வேல் வடிவேல் நெடுவேல் முதலிய வேலாயுதங்களைப் போக்கி பூமியில் நின்று செவ்வையானயுத்தஞ் செய்தான். இதன்றியும் நான்கு புறத்துந் திரும்பி வாங்குவரிசைகள் விரும்பி வளைந்து விளையாடிவருகின்ற செங்கதிர்ச் சேயனைச் சிலைவிஜயன் பார்த்து இனி மிவனை இவ்விடத்திலிருக்கச் செய்யலாகாதென் றெண்ணி விருதுகட்டிய அம்பொன்றெடுத்து பிரமாஸ்திர மந்திரத்தையுச்சரித்து ஆசாரிய வணக்கஞ்செய்து அரைகூணத்தில் தூற்றினான். அந்தப் பிரமாஸ்திரம் புறப்பட்டு கர்னனெறிந்த வேலாயுதங்களையெல்லாம் அதஞ்செய்து அந்தக் கர்னனுடைய மார்புந்தோளும் புண்பட்டுத் துளைபட்டு மயிர்க்கால்தோறுங் கண்விட்டு இரத்தப்பிரவாகமாக்கி மிகவருத்தப்படுத்தியது. அதனல் கர்னனுடைய தேகமுழுமையுஞ் சரங்கள் பாய்ந்து அம்புப்பயிர் நட்ட செம்பொன் மலைபோலோய்ந்து வருந்தித், தலை சாய்த்து

எதிர்த்துப் போராடுவதற்கு வேறுவகையில்லாமல் படுகுழியில் வீழ்ந்து பரதவிக்கும் யானைபோல் நிலத்தில்நிற்கின்ற கர்னராசனைச் சுவேதவாகனன்கண்டு வேகத்தக்க கோபங்கொண்டு இரக்கமென்பது எவ்வளவு மில்லாமல் மகிமைபெற்ற சரங்களை வாரிவாரிச் சொரிந்தான். அருச்சுனனனவன் அஸ்தலாகவத்தால் அமோகமாகப் பொழிந்த அஸ்திரங்கள்யாவும் காடாக்கினிபோலெரிந்துக் கர்னன் நெற்றியிற் கட்டியிருந்த வீரப்பட்டத்தைத் துட்டத்தனையாய்ப் பொடித்துப் பட்டங் கட்டிய நெற்றியில் பொட்டிட்டதுபோல் முத்திரை யடித்து ஊசி நுழைதற்கிடமில்லாமலுருகி அவன்தேகத்தில் ஊடாடிமருவியகாலையில் யாதொன்றும் யோசிப்பதற்கிடமில்லாமல் பெருமைபெறக்கருதிய சாமர்த்தியமும்விட்டுச் சண்டைமுனையுங் கெட்டு தானும் புறமுதுகிட்டு சங்கை மெலிட்டோடினன். அக்காலையில் அருச்சுனன் தேரிலிருந்த உத்தரகுமாரன் பளபளவென்று இரண்டு கைகளையுங் கொட்டிக் சலகலவென்று நகைத்து ஓகோவென்றிரைந்து விரைந்து தேர்விட்டான். அஞ்ஞான வஞ்சகத்தில் அனுதினமும் கருத்தைப்பொருந்திய திரியோதனனும், அவன்தம்பிமார்களும், குற்றத்திற்கு மிகத்திடஞ்சொல்லிந் தேற்றுகின்ற சகுனிமுதலிய மற்றையோர்களும் அருச்சுனன் செய்த யுத்தமுகத்திற் புறங்கொடுத்தோடுகிற கர்னனைக்கண்டு கவலைமேற்கொண்டுஐயையோ இனி எக்காலத்திலும் நமக்கு ஜயமில்லை, இப்போதிருக்கின்ற அரசாக்ஷியும் போய்விடுமென்று ஏங்கித் தளர்ந்தார்கள். சூரியனுக்கொப்பாகிய ஆரியர்களான வீஷ்டுமாசாரியர் கிருபாசாரியர் துரோணசாரியர் முதலிய பெரியோர்களும் முகமலர்ந்து அகமகிழ்ந்து புயம்பூரித்து தேகம்பாரித்து ஜயமுஞ் செல்வமும் தனஞ்சயனே பெறுவான். அவன் தீரனென்பதற்குத் தடையுமுண்டோவென்று வாழ்த்தினர்கள்.

அவ்வேளையில், அதிரதத்தலைவர்களில் எவரும் எனக்கிணையாகமாட்டார்களென்று ஆவிபறியப் பலகாலுங்கூறித் தேறிய அங்கதேசாதிபன் சங்கடப்பட்டு நொந்து பின்காற் பிடரியிலடிபட ஓடுகின்றதை அழகிய தேர்மேல் அமர்ந்திருந்த அஸ்வத்தாமா கண்டு வெகுண்டு அவசரத்தில் தன் தேரை முடுக்கிச் சென்று இந்தக்காலத்தில் இந்தக் கொடையாளியைத் தடுத்துப் பேசவேண்டுமென்று போனன். இவன் தேரோடி வருகின்ற பேரோசையைக் கேட்டு முன்னமே கலவரங்கொண்டோடிவரு

கின்ற கர்னன் திரும்பிப்பார்க்க அவகாசமும் திடதைரிய தீரமு மில்லாதவனுய், அருச்சுனன் துரத்தியடிக்க வருகின்றனனென்று மேலும் மேலுந் திகிலடைந்து பின்னும் முடுக்காய்ப் பதறிப் பூமிமேலிடறி விழுந்தோடினன். இவ்வாறிளைத்துப்பிராண பயங்கொண்டோடுகின்ற கர்னனே அஸ்வத்தாமன் மறித்து படையாளியான பாரமார்த்தியனே! நான் அஸ்வத்தாமன். நீர் கண்பொறி கலங்கித் தலை கவிந்தோடும் வேளையில் என்னை அருச்சுனனென்றெண்ணி ஆத்திரப்பட்டு ஓடவேண்டாம். நில்லும் நில்லும், ஐயோ பாவம். சற்றே நிதானித்துப் பாரும். இங்கே வாரும். இளைப்பாறும் ஓகோ ஓகோ! இதென்னகோலம் ஐயோ! பொல்லாதகாலம் எனிவ்வாறோடுகின்றீர்? புழுதியிற் புரண்டொதுங்கிக் கண்களிற் சலம்கலங்கி மார்புந் தோளுங் காலுங் கையும் நடுங்கிப் போவானேன்? எதிரிகள் வாய்யெடுக்கவொட்டாமல் வாயாடுகின்ற உமதுவசனம் ஒடுங்கிப்போவானேன்? காரணஞ்சொல்லும், காரியவானே! நாமெல்லோருங்கூடி மாடுமடக்கிய அவ்விடத்தில் சற்றுநேரத்திற்கு முன்னே இதோ ஓடிவருவது எற்றைத்தேரென்றும் அதன்மேல் வருகின்றவன் தனியனென்றும் அவன் கைப்பிடித்திருப்பது ஒரு வில்லென்றும் அவன் எனக்கெம்மாத்திரமென்றும் ஆணவமாய்ப் பேசி, நீங்களிருவரும் எனக்குப் பின்னின்று வேடிக்கைப் பாருங்களென்றேசி பந்திப்பாகிய படைகளுடன்சென்று முந்திப்போய்நின்று மூனைந்து போர்புரியப் போனுயே. அப்பா கர்னு! நீ கைப்பிடித்திருந்த வில்லெங்கே? ஜெயிப்பேனென்ற சொல்லெங்கே? கச்சைக்கொடியெங்கே? சோம்பாதோடுந் துரகமெங்கே? தருணத்திற் காக்குஞ் சாரதியெங்கே? தந்திச் சேனையெங்கே? மந்திர உச்சரிப்பெங்கே? வீரப்பட்டமெங்கே? முத்தாலவட்டமெங்கே? மாணிக்கக்கவசமெங்கே? தூணிக்கவசமெங்கே? சொல்லப்பா வெல்லப்பா கினுமினுப்பாய்ச் சொல்லுஞ் சொற்சோர்வில்லாத விற்சாதுரியனே! வேந்தன் தம்பியாகிய துற்சாதனனெங்கே? மச்சானெங்கே? மாமனெங்கே? பச்சாதாபம்பார்க்காதபதிதனே! மாறுபட்டுவரும் பகையாளிகளைப் பேர்பெற்ற ஆயுதங்களினுல் தாறுமாருகக் கூறுகூருக்கி வேறுலகாளவிட்டு இந்நிலம்புரக்க வலம்புரி மாலையணிந்த திரியோதனமகாராஜனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணிச் செல்வந்த னுக்குகிறேனென்றும் அருச்சுனனுக்கு வைரி நானொருவனேயென்றும் பெருமை பாராட்டி அரு

மையாகச் சொல்லிய நீ அந்த அருச்சுனனு லடிபட்டுப் பெருகி வழிகின்ற இரத்தவெள்ளத்தில் நீந்தி விசனமாந்தி இருகை யேந்தி நிலத்தில் வீழ்ந்து நெடுங்காற் புதைய ஓடவேண்டிய தென்ன? உத்தமனே! எங்களைப்போன்றவர்களல்லவா ஒருவ னுடைய அன்னத்தைப் புசித்து யுத்தகாலத்தில் எஜமானனை யிகழ்ந்துஎதிரியைப்புகழ்ந்துநன்றிகுன்றி மானங்கெட்டுநாணம் விட்டுநடக்கத்தக்கவர்கள் இதன்றிதீபத்துடன்ஜயிக்கப்போகின்ற உம்மையொத்த வீராளுடைய பக்கத்திலிருந்து நச்சுநச்சென்று லச்சைகெட்டுப் பேசி, ஜயிப்பவர்களையுந் தடுத்து அவர்களுக் குள்ள திடதைரியத்தையுங் கெடுத்து வெல்லுகின்றவர்கட்கு உற் சாகஞ் சொல்லாமலும் காரியத்தாழ்ச்சி செய்பவர் நாங்களாத லால், எங்களை ஊர்முகமோடிப் போகச் சொன்னாய். அப்படிப் போக மனமில்லாதவர்கள் அருச்சுனனைமுடித்து வெற்றிபெறப் போகின்ற என் யுத்தவல்லபத்தை படித்து எனக்கும்பின் நின்று கண்டு சந்தோஷப்படுங்களென்று பேசினாய். ஐயோ! எங்கள்கதி தான் அப்படிக்கானாலும் வாய்ப்பகட்டுரைத்தஉன்கதியை யோசி க்குமிடத்தில் போர்முனையை விடுத்துச் சாதுவாகிய பாண்டவர் களுக்குச் சந்தோஷங் கொடுத்து உனக்கு அன்னமிட்டுரக்ஷித்த திரியோதனனுக்குத் துன்பமூட்டை கட்டிப்போட்டு நீ பெற் றிருந்த புகழையும் இழந்து நன்றிமறவாத வெற்றிவீரனானையே. வீரசுதந்தரனே! இப்போது ஓடுகின்ற நீ ஒருவேளை திரும்பிவரு வையாகில் உன்னைக் காப்பாற்றிய திரியோதனனுக்கு என்ன சொல்வாய்? பெரியோர் முதலிய பிராமணர்களுக்கு க்ஷாத்திரம் இல்லை; வைதிக சாந்தஸ்தம் உடையவர்கள்; க்ஷாத்திரமுள்ள க்ஷத்திரகுலாதிபன் நான்தான் என்று மார்தட்டிப்பேசிய நராதி பனே! எக்காரியங்களையும் எண்ணித் துணியாமல் விண்ணணம் பேசுகின்ற வீணனே! இத்தருணத்தில் நான் இசைப்பதைக் கேட்பாயாக. உலகத்தில் மௌடீகர்களாய் இருக்கின்றவர்கள் இருந்தவிடம்விட்டெழுந்திராமல்வாய்கொண்டமட்டும் வசனிப் பார்கள். சொல்லியவண்ணம் நடத்தமாட்டார்கள். அப்படிநடத் தலாமென்பது சிருஷ்டிகர்த்தாவாகிய திசைமுகனாலுங் கூடாது ஆகையால் கெடிஷ்டதலாதிபனை கௌரவகுலமுதல்வனால் தனம் தானியம் சம்பத்து பசுபத்தினி புத்திர மித்திர பாக்கியமும் படைத்து பொக்கிஷப் பொருளைப் பூரியாய்க்கொடுத்து புகழுடம் பெடுத்துப் பூரித்திருக்கும் புஜபல வலிமையால் முன்பின் யோசி

யாமல் தாறுமாறுப்பப் பேசிவிட்டாய். மகான்களுடைய மனதை யும் முறியடித்தாய். உன்பேச்சின்படி முடிப்பதற்கு உனக்கும் அசாத்தியமாயிற்று. ஒரு சிங்கத்தைப் பதினாயிரம் யானைகள் வளைத்துக்கொண்டாலும், குப்பைமேடு தங்கத்தை மறைத்துக் கொண்டாலும், சிங்கத்திற்கும் தங்கத்திற்கும் பங்கம் வருமா? கிரீடியை இனிச்சயிக்கலாமென் றெண்ணுதே. அங்கர்கோனே! என்று பற்பலவிதமா யெடுத்துப் படித்துத் தவடையில் அறைந்ததுபோற் பேசியபோது, சூராதி சூரனும் அஸ்திர சஸ்திர சாமர்த்தியனுமாகிய கர்ணன் யாதொன்றும் பேசாமல் எதிர்த்து வாயாடாமல் தலையெடுத்துப் பாராமல் சமயத்திற் குத்தக்கபடி சொல்லாமல் அர்ச்சுனனுல் மடிந்த பிணமலைகளுக் குப்பின்னலொதுங்கி ஆமைபோற்பதுங்கி அகுதிபோன்று நின் ருன். அவன்கதி அப்படியிருக்க வாசத்தேன்மருவிக்குலவியவன சத்தார் மாலைநிலவிய வீரத்தோள் பூரித்திலங்கிய தனுர்வேதியர் குமாரனெனமருவிய அஸ்வத்தாமாவென்னும்அதிரதமுதல்வன் யுத்தத்திற் புறமிட்டோடும் விதவை முகத்தில் விழிக்கலாகாது. விழித்து வசனிப்பது மிகு பாவமென்று அவ்விடம்விட்டு நீங் கித் தனது தந்தைமுதலிய பெரியோர்களிருக்குஞ் சார்பிற் போய்ச் சார்ந்தான். இங்கிப்படியிருக்க, அருச்சுனனிடத்தில் நடந்த அதிசயத்தைச் சொல்லுகிறேன் கேளும் ஜனமேஜய மஹாராஜனே என்று வைசம்பாயனர் சொல்லலுற்றார்.

பிறகு விஜயவீரப்பெருமையாற் சிறந்த அருச்சுனன் பொற் சிகரங் கூடிய அனுமக்கொடியாடும் தேர்மீதிருந்து கர்ணன் ஓடும்போது கைகொட்டி நகைத்த உத்தரகுமாரனை யதட்டி ஆ ஆ வென்றான். அந்த அதட்டலைக்கேட்ட உத்தரகுமாரன் கர்ப்பம் கலங்கி சர்ப்பம்போல் வளைந்து ஒருவாறு வாடி தாயூட் டிய செவ்வெண்ணெயைக் கக்கி உறங்கியுழன்று ஓடுங்கியழன்று தேரிற் சாய்ந்தான். இவ்வாறிளைத்த விராடபுத்திரனைப் பாண்டு புத்திரன் பார்த்துப் பரிதாபங்கொண்டு மிகப் பயந்துவிட்டான் என்று தன்னுடைய சித்தத்திற் றேர்ந்து மகிழ்ந்த முகமும் குளிர்ந்த பார்வையும் கனிந்தசொல்லுங் கசிந்த அன்புள்ளவ னுய்ச் சொல்லுகின்றான். மச்சகுலத்திற்கணியாகிய மணியே! இஜ்ஜகத்திற் பிரகாசிக்கிற இரவிமைந்தனை கர்ணன் என்னுட னெதிர்த்து அதிர்ந்து போர்புரிந்து வெறுங்கை வீணன்போல் பின்னிட்டோடிப்போனன். அவனோடிவிட்டானென்று நாம்

அலக்ஷியமாயிருக்கலாகாது. இராஜவீரர்கள் யுத்தத்தில்யிளைத்து ஓட்டமெடுப்பது முண்டு. மறுபடியுங் கிளைத்துவந்து போர் தொடுப்பதுமுண்டு. இதன்றி அங்கர்கோனை அடித்துத் துரத்தி யதுபோல் பெருங்காடென்னக் கலந்து நமக்குநேரில் அடர்ந்து பெருமுழக்கமிட்டிருக்கின்ற சேனைகளுடன் அதிரதர் முதலிய வேந்தர்களையும் வென்று ஜயம்பெறவேண்டியிருப்பதனால் இவ்விடத்திற் கூடியுள்ளவர்கள் இன்னார் இன்னரென்று நீ தெரிந்துகொள்ளும்படி சொல்லுகிறேன்கேள் என்றான்.

நறுமலர் மாலையையணிந்த தோளினையுடைய வாட்படை மைந்தனே! இதோ நம்முடைய எதிரில் நிற்கின்றவர்கள் தெய்த நிலைக் கருப்பொருளாகிய பனையைக் கொடியிலெழுதிப் படைத்திருக்கின்றவர். பாரிய தேரினையுடையவீரியர். தெய்வத்தன்மை பெற்ற அஷ்ட வசுக்களில் ஜேஷ்டரானவர். இவ்வுலகமுதலிய எவ்வுலகுங் கொண்டாட நின்ற எங்கள் குலத்தலைவர். இவரது தந்தையாகிய சந்தனுமகாராஜனுக்குப் பரிமளகந்தியாருடைய போகநலங் கிடைக்கும்படி விவாகஞ் செய்வித்தவர். அந்த விவாக முன்னிலையில், இவர் அனுபவிக்கவேண்டிய சகல வைபவ சம்பிரமங்களையும் சிறுவயதிற் கைவிட்டு இராஜயோகமான விரதவழியில் நின்று வீஷ்டுமாசாரியரென்று பேர் கொண்டு மெய்வழிகண்ட மேன்மையோர்களால் மேன்மைபெற்றவர். இவர் எந்தகாலத்தில் இறக்கவேண்டுமென்று எண்ணுகின்றாரோ அந்தக்காலத்தில் எமதருமராஜன் இவரிடத்திற்கு வரவேண்டுமல்லது மற்ற ஆத்மகோடிகள்போற் கருதி வரலாகாது. இவருடைய ஆயுண்முடிவில் தண்டபாச சூலகண்டனுகிய நமன் வந்தாலும் அவனுடைய அதிகாரவேதை அற்றுப்போம்படிச் சத்தியசீலவுத்தமனை சந்தனு மஹாராஜன் வரங்கொடுக்க ஆசீர்வசனமுந் தந்தருளப்பெற்றவர். இவ்வுலகத்தில் இவரெத்தனநாளைக் கிருந்தாலுமிருக்கலாம். இவர்தானப்பா எங்கள் மூதாதையாகிய பாட்டன்.

சத்துவகுண புத்திநுட்பத்தால் கற்றறிவுடைய உத்தரகுமாரனே! இந்த வீஷ்டுமாசாரியருக்கு அண்டையில் சண்டைக்கு வந்திருக்கின்ற நான்கு வேதத்தையும் பொறித்த நான்மறைக் கொடிதரித்த சக்கரத்தேர்மேலமர்ந்திருக்குஞ் சுவாமியவர்கள் தென்சாறுபாய மாஞ்சோலை வீறும் பாஞ்சாலதேசத்தையாளும் துருபதராஜன் கொண்ட கர்வத்தைப் பங்கப்படுத்தினவர். அறு

பத்துநான்கு கலைக்ஞானங்களும் ஐயந்திரிபில்லாமல், விருத்திப்பொருளுடன் ஆராய்ந் துணர்ந்தவர். வேதசாஸ்திரங்கள் முற்றும் அஸ்திரம்பெறத் தேர்ந்தவர். சாம்பிரதாய தனுர்வேத மோர்ந்தவர். மிக்கத் திரவியசம்பன்னர்களுக்குச் சிலேத்திறந் தெரிவிக்கும் விற்குருவானவர். முடிதாங்கிய தேவர்களும் படியோங்கிய முனீஸ்வரர்களும் பணியும்படியான பதம்பெற்றவர். உத்தம கூடத்திரிய குலத்திலுற்றவர்போல் வெற்றிவாகை படைத்த வீரப்பிரதாபர். மதாணி முதலிய திராணியுடையவர். இவர் தானையா எங்களுக்குக் குருவாகிய துரோணாசாரியர்.

சங்கிராம விற்குருவாகிய துரோணாசாரியருக்கும் கங்காபுத்திரரான வீஷ்டுமாசாரியருக்கும் நடுவில் வெள்ளைக்கொடியும் பொன்னிறமுடியும் வீரபட்டமும் வேகப்புரவியும்பூட்டி மேக மளாவிய வெண்கலத்தேரோட்டி ஊக்கத்துடன் வந்திருக்குந் தீர்க்கமும் அமுதங் குலாவிய மதிமுகமும் குமுதமனைய சிறு நகைக் குறுவியர்வும் பெருமிதமும் அருள்விழியும் குறுமணி யாற்செய்த ஆபரண அலங்காரமும் பிரமதேஜசும் பணைத்த தோளும் வீரகண்டை தரித்தவனும் சௌந்தரியகாந்தியும் தவமும் ஜபமும் வரமும் உரமும் பொறுமையுமுடையவர். தனுர் வேதத்திலும் சதுர்வேதத்திலும் நிபுணரானவர். இந்தக் குவலயமெல்லாங் கொண்டாடுங் குணநிதியாகிய கிருபாசாரியர்.

இந்தக் கிருபாசாரியருக்கருகில் நிற்கின்ற அழகிய தேராளியானவர் பஞ்சபாணந்தரித்த மன்மதனென்று சிலர் பேசவேலாயுதந்தரித்த பாலசுப்பிரமணியரென்று பலர் சொல்லச் சோடச கலைநிறைந்த சந்திரனென்று சிலர் துதிக்க வச்சிராயுதந் தாங்கிய இந்திரனெனப் பலர் மதிக்க மூதண்டநடுக்குங் கோதண்டராமனென்று சிற்சிலர்கொண்டாட பிதாவாக்கிய பரிபாலனஞ் செய்த பரசுராமனென்று பற்பலர் வந்திக்க இவ்வாறு எப்புவனமுங் கொண்டாட ஒப்புவமையில்லாத தோற்றம்படைத்த புணணியன். முப்புரமெரித்த எப்பொருட்நிறையான முக்கண்மூர்த்தியின் திருவருட் பயன்பெற்றகாலை. ஒரு கூஷணத்தில் திரிபுவனத்தையும் அழிக்குங் குழக்கன்றுபோன்ற அஸ்வத்தாமா. எங்கள் குருவான துரோணாசாரியருடைய குமாரன் எனக்குரிய மித்திரன். விராடபுத்திரனை உத்தரகுமாரனே! இப்போது நான் சொல்லிவந்த வித்தக வீஷ்டுமாசாரியரும் துரோணாசாரியரும் கிருபாசாரியரும் அஸ்வத்தாமாவும் என்னிடத்தில் அரு

மைபாராட்டி அன்புவைத்திருக்கின்றவர்கள். குற்றமற்ற விற்றி றம் பெற்றவர்கள். அப்படிக்கிருப்பினும் அவர்களுடன் போர் புரியவேண்டிய அவசியம் இல்லை. இன்னம் நாம் வெல்லவேண் டிய ஆசாமிகள் வேறிருக்கின்றார்கள். அவர்களை முன்பின் பாராமல் முதலறக்கொன்று வெற்றிபெறுவது நமக்குமேலாகிய கீர்த்தியாம். இன்று பூர்த்தியாகப் போர்புரிந்து புகழுறச் செய் வோமாகில், அது நல்ல திடத்தையும் திறத்தையும் அறத்தை யும் மகிமையையும் நமக்கு விளக்காமற் போகாது. ஆகையால் நாம் வெல்லவேண்டிய மேவலரைச் சொல்லுகிறேனென்று விளம்பலுற்றான்.

உத்தமனென்னும் உத்தரனே! நமக்கு நேரில் நீலக்கொடி யாடை பறக்குந் தேரிலிருப்பவன் வணங்காமுடிமன்னனை வண ங்கி அவனது மதியை மயக்கித் தன்வசமா யிணக்கி இந்திரப் பிரஸ்தத்தில் இருந்த எம்மை வரவழைத்து வஞ்சகச் சூதாடச் செய்த கொடும்பாவி. மகாசபை கூடிய மன்னர் முதலிய மாதக ரச் சனங்களும் எங்களைக்கண்டு கண்கலங்கும்படியாய் இயற்றிய காந்தாரதேச வீரன். சவுபலராஜகுமாரன், எங்கள் சமஸ்தா னத்தைக் கெடுக்கப் புகுந்தகருப்பன். கபடமடைந்த குடிக்கைக் கடைவால் விஷங்கொண்ட செந்தேள். எக்காலத்தும் நம்பப் படாத உரகம். இவன்தானேயா சகுனியென்பவன்.

அந்தச் சகுனிமாமனுக்குச் சமீபத்தில் குச்சிதமில்லாச் செச்சைக் கொடியோடு அச்சடித்ததுபோல் உச்சித விற் பிடித்து வச்சிரத்தேரேறி விசித்திரப்பணி பூண்டிருப்பவன் நச் சரவக்கொடியோனுக்குந் தம்பி இளவரசுப் பட்டங்கட்டிக்கொ ண்ட தம்பி. சர்வதந்திர வுபாயசுதந்திரன். பழிபாவத்திற் கஞ் காத பஞ்சமாபாதகன். கொஞ்சமேனும் நெஞ்சிரக்கமில்லாத துற்சாதனன். இவன்தான் பாஞ்சாலிமயிரைப் பற்றியிழுத்து கண்ணியர்கள் இருந்த சபைக்கேற்றிவைத்து வஸ்திரபங்கம் பண்ணிய புண்ணியவான்.

அதோ ஈசானதிசையில் பன்றிக்கொடி பறக்கச் சண்டைத் தேரேறி துற்சாதனனுக் கண்டையிலிருப்பவன் திரியோதனன் முதலாகிய நூற்றுவருக்கு மைத்துனன். தங்கை துச்சலை யை கலியாணஞ் செய்துகொண்ட தோன்றல். சிந்துதேசராஜ சயத் திரதன். எங்களாற் பெற்ற வெகுமானங்களையுஞ் சன்மானங்க ளையு மறந்து நாங்கள் வனவாசஞ்செய்கையில் ஒருநாள் வேட்

டைமேற் போயிருக்கையில் அவன் முறைபாராமல் திரௌப தையை யெடுத்துப் போனன். அந்தச் சங்கதியை நாங்கள் தெரிந்துவந்து ஓட்டமாகச் சென்று அவனைக்கண்டு பிடித்துத் தலையைச் சிறைத்து ஐந்து சிகைவைத்து முகத்திற் புள்ளியிட்டுப் பேர்வேறிட்டு தருமராஜனுக்கெதிரில் நிறுத்திக் கட்டவிழ்த்து அவமானப்படுத்தித் துரத்திவிட்டோம்.

வாயுமூலையி லிருக்கின்றவன், காந்தாரி திரிதராஷ்டிரனெனுஞ் சேற்றிற்பூத்த பலவகைப் புட்பங்களில் ஒரு செங்கழுநீர்ப் புஷ்பம்போல் பிறந்திருக்கின்ற விகர்னன். இந்நீதிமான் நெறிமுறை தவறாம லுன்னிப் பாவபுண்ணியங்களெண்ணித் திரௌபதைகேட்ட கேள்விக்கு இராஜசபையில் நியாயஞ்சொல்லி பாஞ்சாலியின் சஞ்சலத்தைமாற்றித் தேற்றிவிட்ட தருமவான். இவனை இவ்வுலகத்தில் புகழாதவர்களில்லை. புத்திமானை உத்தரனே! இதோ நமது தேருக்கெதிராக நகூஷத்திரக்கூட்டம் போல், தேர்மேல் விளங்குகின்ற கொடிய துஷ்டர்கள் திரியோதனனுக்குத் தம்பிமார்கள். காலாந்தகரென்று கருதுவதற்குத் தடையில்லை. அதோ தத்தித்திமி திகுதாவென நர்த்தனஞ்செய்யுங்குதிரைகள் பூட்டியரதத்திலமர்ந்தவன் சோமதத்தன். இதோ சித்திர வில்வளைப்பவன் அஸ்வசேனன்.

அதோ தென்புறம் நிற்பவர்களியாவரும் தேசராஜபோஜர்கள். இப்போது, நானுனக்குக் காட்டிய இவர்களையெல்லாம் எதிர்த்துச் சண்டைவிளைத்து நிலைகுலைந்தோட வடித்து மந்திரகிரியாகிய மத்தாலடிபட்டலைபட்ட பாற்கடல்போலுழக்கிச் சுழலவிட்டுக் கலக்குகின்றேன். ஓ விராடவேந்தன் மைந்தனே! நீ யதைச் சற்றுநேரத்திற் காண்பாயென்று சொல்லித் தன் உள்ளக் கருத்தையும் அவனுக்கு விள்ளும்படியாய் மெள்ளத் தெரிவித்தான். அதென்னவென்றால், யுத்தமுனையிலடிபட்டு ஓடிப்போன கர்ணனைக்கண்டு உத்தரன் கைகொட்டி நகைத்ததைப் பற்றி, இனிமேல் வீஷ்டுமர் துரோணர் கிருபர் அஸ்வத்தாமா முதலிய நால்வரும் தன்னைடெதிர்த்துச் சண்டைவிளைத்து அடிபட்டுப் புறங்கொடுத்தோடப் போகின்றார்களென்பது தனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றபடியால் ஒருவேளை யவ்வாறேறும்போது நமது சாரதி கைகொட்டிச் சிரிப்பானுகில் குலமுதல்வனை வீஷ்டுமர் முதலாகிய பெரியோர்கள் தங்களிடத்தில் அன்புவைத்தவர்களாதலால் அவர்களுக்கு வந்த குறைவும்

அவமானம் தனக்கு வந்ததுபோலுமென்றெண்ணி அருச்சுன ராஜன், மச்சராஜன் குமாரனுக்கு அச்சமுண்டாகப் பேசி, மற்றச் சத்துருக்களையுந் தெரிவித்து ஒருவேளை அவர்கள் ஓடும் போது அவர்களை நோக்கி உத்தரகுமாரன் நகைத்தாலும் அதனல் தாழ்ச்சியொன்று மில்லையென்று எண்ணிய தன் கருத்தை, இவர்கள் சத்துரு இவர்கள் மித்துருவென்று உத்தரனுக்குச் சொல்லிப் பெரியோர்கள்மே லிருக்கின்ற பக்ஷத்தையும் திரியோதனுதியராகிய பகைவர்மேலி நக்கும் அடத்தையும் வைரத்தையும் வேறுவிதமாய் வெளிப்படுத்தினன்.

அப்பா உத்தரகுமாரனே! பரிசுத்தவான்களாகிய ஆசாரிய புருஷர்கள் மேலெதிர்த்துப் போர்புரிய வேண்டிய கருத்தை யொழித்து, மற்றவர்கள்மேல் யுத்தஞ்செய்யவேண்டி யிருப்பதால் நமது தேரைச்செலுத்தி க்ஷணத்தில்ஜயம்பெறலாமென்று சிந்தைமகிழ்ச்சிகொண்டு செப்பினன்.

இவ்வாறுரைத்த சப்பிரதீபம் போன்ற அருச்சுனனது கருத்தை உத்தரகுமாரன் மிகுந்த நுட்பமாயறிந்து தான் நகைத்ததைக்குறித்து மிகப்பயந் தினத்துத் தன்னிடத்தில் அருச்சுனன் கலந்து பேசினனென்று தன்னை மறந்து போகாமல் ஜாக்கிரதையாய் மரியாதையுடன் அடங்கி அருச்சுனன் உரை வாய்மூடு முன்னமே ரதத்தை, மனோவேகத்திலும் வாயுவேகத்திலும் மிஞ்சும்படிக்கு மண்டலமதிர எண்டிசை யதிர அண்டர்கள் ஒதுங்க அஷ்டமா நாகங்கள் கண்பிதுங்க கடலேழுமதிர நட்சத்திரங்களுமதிர கதிர்மதிவெருவ கல்மலைகளுருவக் கடகட கடகடவென்றோட்டி, தடமகுடவரசர் படையைச் சாய்த்துச் சக்கரங்கள் கரகரிக்க உக்கிரமான விக்கிரம பராக்கிரமத்துடன் விஜயசாரதியான உத்தரகுமாரன் அஸ்வங்களை முடுக்கி விரைவுடன் விடுத்தான். கேளும் ஜனமேஜய மகாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

துரோணாசாரியருக்கும் அருச்சுனனுக்கும் சண்டை

இவ்வாறு உத்தரகுமாரனுக்குத் தெளிவுண்டாகும்படித் தெரிவித்துப் போர்மேல் வருகின்ற தீரன் கருத்தையும் அவனேறிய செம்பொற் றேரின் வேகத்தையும் சேனைகளின்மேற் செல்கின்ற மர்மத்தையும் ஆழ்ந்த கேள்விகளா லுயர்ந்த துரோணாசாரியர் கண்டு, கண்ணருள் கொண்டுபெற்ற தந்தை பிள்ளையை நாடிப்

போவதுபோல், தன்னுடைய தேரைசெலுத்திக்கொண்டுபோய் அருச்சுனன் தேருக்கு நேர்சென்று நின்று மறித்து, அப்பா அருச்சுனா! நாங்களெல்லோரும் உனக்கெதிரிலிருக்க நீ எங்களை விட்டுவிட்டு எங்கேபோகின்றாய்? நீ யப்படியொதுங்கிப்போனாலும் நானுன்னை விடமாட்டேன். என்னுடன் யுத்தஞ்செய்ய வாவென்று வில்வளைத்து நாணிதொடுத்து டங்காரங் காட்டினார்.

இந்தப்படி வார்த்தையாடிச் சண்டைசெய்யவந்தது ரோணாசாரியை தர்மராஜனுக்கிளைய தனஞ்சயன்கண்டு, தேர்விட்டிழிந்து செந்தாமரைக் கமலம்போன்ற அவர் திருவடியிற் பணிந்து கரங்குவித்துத் துதித்து அந்தணர்க்கரசே! தேவரீரனுக்கிரகத்தால் பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒருவருடம் அக்கியாதவாசமுங் கழித்து வெளிப்பட்டோம். இனிமேல், தர்மாதர்மந் தெரிந்து நடப்பிக்கவேண்டிய கடமை தங்களைப் போன்ற பெரியோர்கள் தன்மை. ஆசாரியசுவாமிகளேயென்று இணக்கமாகப்பேசி வணக்கமாகத் தொழுது மேலுஞ் சொல்லுகின்றான். மாதவமணியே! வரிசிலைக் கணியே! யாதொரு காரியமும் இன்னதென்றறியாத வென்னை எல்லாந் தெரிந்தவனென்றுக்கி இவனுக்கு மிஞ்சிய செஞ்சிலைவீரர்கள் இவ்வுலகத்தும் எவ்வுலகத்தும் இல்லையென்று புகழலாமோ? பல்லோருங் கொண்டாடும்படியாய் வில் வேகமும் அஸ்திரசத்தியும் சஸ்திர சத்தியும் குற்றமறக் கற்பித்தருளிய சத்திய வுண்மைச் சம்பன்ன தெய்வமே! தேசிகனுகிய தேவரீர் என்னை ஒரு பொருட்டாக மதித்து மறித்து யுத்தஞ்செய்யப் பகைத்து வரலாமோ? அடியேன், பயமில்லாமல் வெளிவந்து குருஸ்வாமியோடுநின்று உறுத்து விற்பிடித்து நாணிதொடுத்துக் கணைகள் விடுத்துப் பூசல்புரிய விதரணை பெற்றிருக்கின்றேனே? அவ்வளவு வித்தை கற்றிருக்கின்றேனே? விற்குருவாகிய வேந்தனே? வேதியகுலசாந்தனே! அப்படிக்கல்லவென்று அறிவினத்தால் ஆசாரியருடனெதிர்த்து அடுத்துப் போர்விளைத்துத் தமது திருவடிக்குத் துரோகம் நினைப்பது பஞ்சமாபாதகத்திலொன்றுகிய பெரும் பாவமல்லவோ? பாபரகித புண்ணியவானே! என்னுடையஎண்ணமென்னவென்றால், தேசராஜவீரர்களும்சேர்ந்து நால்வகைச் சேனைகளுடன் புகுந்து விராடராஜனது மாட்டுமந்தைகளை மடக்கி திரியோதனராஜனையும் அவன் தம்பிமார் சகுனி முதலியோரையும் வளைத்துக்கொண்டு இடியுடனிடிமின்னலுடன் மின்னல்

மேகத்துடன் மேகம் எதிர்த்து எரிந்து புகைத்தெழுமாறு போர் த்திரங்காட்டி பார்த்துத் தேவரீர் உபதேசித்தருளிய மந்திரக் கணைகளைத் தொடுத்து அவர்கள் உயிரை வாட்டி வதைத்து எம லோகத்தில் குடிபுக விடுத்து இணையில்லாமல் இருப்பதன்றி, தேவரீருடனும் கிருபாச்சாரியருடனும் தேவாள் குமாரனுகியும் என் சிநேகனுகியும் இருக்கின்ற அஸ்வத்தாமாவுடனும் பாட்ட ராகிய வீஷ்டுமாசாரியருடனும் சண்டைசெய்யேன். அப்படி க்கு ஒருவேளை சண்டை செய்ய நேரிடுமாகில், அது தர்மமல்ல. தகுதியான தன்மையுமல்ல. கொடியபாவத்தைக் கூட்டிவைக்கு மென்று என்றைக்கும்சத்தியமாய் எண்ணியிருக்கின்றேன். முனி சிரேஷ்டராகிய மூதறிவோனேயென்று வணங்கிச்சொன்னன். அருச்சுனன் இவ்வாறு சொன்ன மொழியை விற்றிறமுடைய துரோணாசாரியர் கேட்டுச் சற்றுநேரம்யோசித்துச் சம்மதியாகிய பேரன்புடன் நிம்மதியாயிருந்து எம்மதியுந் தோன்றுமல் நன் மதியோடு ஆசீர்வதித்து விண்மதிக்குலத்து வேந்தனை விஜய ராஜனே! என்னிஷ்டமென்னவெனில்,யுத்தகளத்தில் உனக்காக உழைக்கிறேனென்று உறுதியாகச் சொல்லி, ஒருவனுடைய உப் புந் தண்ணீருமுண்டு, அவனுடைய நன்மை தீமை என்னுடை யதென்று நாடியிருந்த நான் சமயம் வந்தபோது அவனுக்குத் துரோகம் பண்ணுமல் உடன்படவேண்டு மென்பது. இதுகாரி யம் உனக்குத் தெரியாமலிராது. ஆதலால் திரியோதனராஜனுக் குச் செஞ்சோற்றுக் கடன்கழிக்க, அமர்தொடங்கி சேஷனென் றும் பிள்ளையென்றும் படுகளத்தில் ஒப்பாரி பாராமல் எதிர்த்துப் போர்புரியவந்தது. இதன்றியும், தேவேந்திரன் முதலிய தேவர் களையும் வருத்தப்படுத்தி திரிலோகத்தையும் பயமுறுத்திநடுங்கப் பண்ணிக்கொண்டிருந்த காலகேய நிவாதகவசர்கள் மூன்று கோடி அறுபதினுயிரம்பேர்களை ஒரு கூணத்தில் மடித்து, ஐயக் கொடி பிடித்து, சிவசுப்பிரமணியக் கடவுள்போல் தேவசேனு பதிப் பட்டமுங் கிரீடியென்னும் பெயரும்பெற்றுச் சிறப்படைந் தாயென்று கேட்டுச் சிந்தை மகிழ்ந்திருந்தேன். அந்தத் திறன் எப்படிப்பட்டதோ? அம்முறைமையைனக்குக்காண்பிக்கவேண் டுமென்று வருந்திக் கேட்கின்றேன். அதற்கு நீ யுடன்படாவிட் டால், உனக்குக் கோபம் பிறக்கும்படியாய் நான் முந்தி உன்னை யடிக்கிறேன் பாரென்று இந்துமுகாஸ்திரம் இந்திரமோகாஸ்தி ரம் செந்திக்கணைகள் கொத்தலர்ப்பகழிகள் கூர்வாயம்புகள் சதா

கதிச்சரங்கள் சகஸ்திர பாணங்கள் முதலிய கூரம்புகளை எடுத்து வந்தித்து மந்திரித்து அனுசந்தித்துச் செந்தூள் கருந்தூளை ழும்ப மந்தரவரை யனையதேரை வலமிடமாக யாறிவிடுத்து, மழைபோல் வானமும் பூமியும் நிறைய வாசாமகோசரமாக வாரி யிறைத்து, சாரதி குதிரைகளைச் சற்றுந் தெரியவொட்டாமல் மறைத்துத் தனுர்வேத சாகசங் காட்டிய உத்தமகுணத் துரோ ணாசாரியை, கொற்றவர் முதலிய பலரும் மெத்தப் புகழ்ந்து சித் தமுவந்து கொண்டாடி இத்தினம் அருச்சுனன் இற்றனன், அற் றனன், செத்தனனென்று மகிழ்ந்து கூத்தாடினர்கள். இதல்லா மல் ஆகாயத்தில் வேடிக்கைபார்த்திருந்த தேவேந்திரனும் தேவர்களும் பாண்டு முதலாகிய பார்த்திபர்களும் ஆகா! துரோ ணாசாரியர் இதுவரையிலும் இப்பேர்ப்பட்ட விற்றிறங் காட்டிய வீரத்திறங் கண்டறியோமே. ஐயோ! சீஷனுகிய விஜயனுடன் வேடிக்கையாய்ப் பேசி வினைச்சண்டை விளைத்தாரே யென்று மேன்மேலும் பேசிக்கொண்டார்கள்.

இவ்வாறு வலி பொருந்திய பாணங்களைப் பொழிந்து யுத்தஞ்செய்கின்ற துரோணச்சாரியைச் சுத்த வீரத்துவமுடைய பார்த்தன் பார்த்து, ஸ்வாமி! அடியேன் தேவரீரையுடையஅடி மைப் புத்திரனென்று முடிதாழ்த்தி வணங்கினேன். தேவரீர் என்னை மன்னிக்காமல், சன்ன பின்னலாய்ச் சரவருஷம் வரு ஷித்துப் போட்டீர். இனிமேல், தன்னைத்தான் தப்பித்துக்கொள் ளவேண்டிய தர்மந்தானே. தாமறியாத காரியமொன்றில்லை. என்மேல் தப்பிதமுமில்லை. நீர் ஜாக்கிரதையா யிரும் என்று தனிப்புலிபோற் குமுறி யிறைந்துபுகுந்து விரைந்து தேரூர்ந்து புகழெய்திய பிரதாப வில்லைப் பிடித்து நிறுத்தி நாணிமாட்டி டங்காரங் காட்டி நாலிரண்டு நாராசக் கணைபூட்டி நாராயணமந் திரமேற்றி நான்கு திசையும் நடுங்க முடுக்கி துரோணாசாரியர் தொடுத்த பாணங்களத்தனையும், கொள்ளைபோற் குனிந்து எள் ளைப்போ லிடிந்துபோகச் செய்தான். அவனது பாணத்திறத் தைப் பார்த்த துரோணச்சாரியரும் ஆசாரியபட்ச மறவாத அரு ச்சுனராஜனும் ஒருவருக்கொருவர் குறுகி நேரிட்டுப் புயமிரண் டும் பூரித்து மேலிட்டு மலைபோன்ற வில்லை பிறைபோல நாணி பிகிந்து ஆகர்ணபரியந்த மிழுத்து அநேகவித அஸ்திரங்களை விதைத்து வருஷருது காலத்துமேகம்போல், கோடாகோடிசரங் களைச் சொரிந்தார்கள். அப்படிக் கையோயாமற் பொழிந்த அதி

ரதத்தலைவர்களில், கோபமுதன்மையான துரோணாசாரியரும் கோபத்தில் நயமுகனுகிய காண்டீபனும் படபடத்துவிட்ட பகழிகளானவை சீறிப்புகைந்து தீப்பொறிமிகுந்து சினங்கொண்டு புகுந்து கதிர்முனையும் வாயுவேகமுங் கலந்து ஒன்றினோடொன்று முரும்பந்து, எதிரெதிர் நின்று போர்மூட்டி ஒன்றையொன்று கவ்வி ஒன்றையொன்று கிழித்து ஒன்றையொன்று அழித்து ஒன்றோடொன்று கலந்து இக்கணை துரோணருடையது அது கிரீடியுடையதென்று பேதித்துப் பேசக்கூடாமலிருந்ததல்லாமல் அருச்சுனன்மேல் துரோணர்பாணமும் துரோணர்மேல் அருச்சுனன் பாணமும் பட்டதில்லை. அப்பால், வேதக்கொடியாடிய சூரியன் தேருக்கொப்பான தேரில் துரோணாசாரியரும் அனுமக்கொடி சூடிய இரதத்திலேறிய அருச்சுனராஜனும் கரகரவென்று தேரைச்சுழற்றி சரசரவென்று சரமாறி பொழிந்தார்கள். துரோணாசாரியர் இந்திராஸ்திரம் எடுத்து மந்திரித்துவிட்டார். அருச்சுனனும் இந்திராஸ்திரம் விட்டு அதைக் கெடுத்தான். துரோணர் அக்கினியாஸ்திரம் விட்டார். அர்ச்சுனன் அக்கினியாஸ்திரந் தொடுத்து அதைத் தடுத்தார். துரோணர் சூரியாஸ்திரம் வீசினர். அர்ச்சுனன் சூரியாஸ்திரஞ் செலுத்தி அதைத் தூளாகச்செய்தான். அர்ச்சுனன் சந்திராஸ்திரம் உந்தினன். துரோணருஞ் சந்திராஸ்திரம் போக்கிச்சிந்தினர். துரோணர் வருணாஸ்திரந் தாக்கினர். அர்ச்சுனனும் வருணாஸ்திரம் பூரித்து மாற்றினன். துரோணர் வாயுக்கணை தூவினர். அருச்சுனன் அக்கணைக்கு எதிராக வாயுக்கணை யேவிக் குறைத்தான். இவ்வாறு தேயுக்கணை கருடாஸ்திரம் நாகாஸ்திரம் மேகாஸ்திரம் பர்வதாஸ்திரம் மோகாஸ்திரம் வேலாயுதம் கமலாஸ்திரங்கள் முதலிய தேவதாஸ்திரங்களும்வீசி தேவலோகத்தார் மெய்ப்புளகுற்று வாழ்த்தும்படி வெகுநேரந் திரிந்து ஒருவரையொருவர் ஜயித்து மறுபடியும் போர்புரியப்பரிந்து ஆர்ப்பரித்து பாணந் தொடுத்தார்கள். கல்வி முதலியவற்றைப் பேசப்பேச ஆசை யதிகரிப்பதுபோல் வீரனுடன் வீரனெதிர்த்து போர்கொடுக்கக் கொடுக்க வீராவேசமேறுகின்ற துண்மைபோல், துரோணாசாரியர் ப்ராணபதமான விஜயனைப்புகழ்ந்து சூரியாஸ்திரந் தொடுத்தார். அர்ச்சுனன் மேகாஸ்திரம்விடுத்து அந்தச் சூரியக் கணையின் வெப்பத்தை யொடுக்கி காளகூடம்போற் கறுத்து மின்னல் இடியுடன் வெள்ளம்பொழியப் பண்ணினன்,

அந்த விஜயனுடைய பாணத்தின் விந்தையைக்கண்ட துரோ ணாசாரி வாயுவாஸ்திரங்களை மந்திரித்து விடுத்து மேகாஸ்திரத் தைச் சிதறவடித்தார். ஆசாரியரேவிய வாயுக்கணைகள் அனர்த் தம் பண்ணுவதை அர்ச்சுனன் கண்டு வாயுபக்ஷணஞ் செய் கின்ற நாகாஸ்திரத்தைப் பிரயோகம்செய்து நாசமாக்கினான். நரனுந்திய நாகாஸ்திரத்தைத் துரோணாசாரியர் பர்த்து நடுங்கி கருடாஸ்திரக் கடுமையைக் காண்டீபன் கண்டு கலகலவென்று நகைத்து நாராயணாஸ்திரத்தால் நன்மையுண்டாகச் செய்தான். இவ்வாறு கருடாஸ்திரத்தைக் காண்டீபனெடுக்கி கதியைக் கண் ணுற்ற தனுர்வேதியரானவர் சத்துரு மித்துருவான அஸ்திரங் களை யெறிந்து உத்தம மத்திம மந்திர சுதந்திர மார்க்கமுந்தெரி ந்து மனங்களிகூர்ந்து மறுகாலுந் தன்றேரூர்ந்து வலமிடஞ் சுழன்று சக்கரத்தொனியுடன் கலகலவென்று சப்திக்க இருவர் தேரும் நெருங்க இருவர்வில்லுங்குளிக்க இருவர்நாரியுமொலிக்க இருவர் தண்டையுங் கலிக்கப் பூமியும் பொருப்பும் கிடுகிடுவென் றதிர தாராகணங்கள் பலபலவென்று தரைமேல் உதிர உலக மதிக்கக் கலகம் விளைத்தார்கள். இவ்வாறிருவருமேவிய பாணங் கள் சக்கிரவாளம் வளைந்த தடமெல்லாம் நிறைந்து பேரோசை யுண்டாக்கி அண்டச்சுவ ரடங்கலும் முட்டி எட்டுத்திசைமட்டு மெட்டி மட்டுப்படாமல் வாட்டி நின்றன. இதன்றியும் முப்புர த்தையெரித்தருளிய தர்ப்பரனுதற் கண்ணிற் பிறந்த அக்கினிப் பொறிக் கிணையாகச் சிறந்த அந்தப் பாணக்கினியின் வெப்பத் தினுல் மகரமச்சங் குலாவிய மற்ற மச்சங்களுக் காதாரமாகிய கடலும் பரந்து, விரிந்த பாதலத்தினீரும் மேலுலகடைந்த ஆகாய கங்கையும் வறண்டதென்று அண்டத்தோர் பேசிக் கொண்டார்கள்.

இவ்வாறு துரோணர்ச்சுனர்கள் இவர்கள் மூனைந்து போர் புரிகையில் அவர் சாரதிகள் ஓட்டம் கோணம் வட்டம் வளவு திருகல் மாறல் முன் செல்லுதல் பின் செல்லுதல் முதலாகிய வகையால் தேரோட்டுந் தன்மையினுலேயே, பூமியைப் பிளக்க ஆதிசேடனுடைய ஆயிரம் பணமகுடங்களுமுடைய திசைகள் அசைந்து திக்குமுக்காட மேருவுங் குலுங்க ஈரேழுலகுமலங்கக் காட்டிலுள்ள மிருகங்களுங் கலங்க நாட்டிலுள்ள யாவரும் நடு ங்க வித்தென்னப் பரவிய நக்ஷத்திரங்கள் கொத்து கொத்தாய் முத்துப்போலுதிர இத்தன்மையான யுத்தஞ்செய்தார்களென்று

யாவரும் சொல்லுதற் கிடமில்லாமல் மிக்க வல்ல வில்லாளர் களும் வல்லாளர்களும் சொல்லாமல் ஓடும்படி நேரிட்டது. அந்தவேளையில் துரோணாசாரியருடைய சேனையானது கடல் போலிரைந்து பூரித்துப் பொங்கிய ருத்திரசன்னதங்கொண்டு தேவேந்திர குமாரனுகிய சிலவீரனை வளைத்து அவனது தேர்ச் சக்கரங்களைத் துளைத்து ஈட்டி தோட்டி துறட்டி பாலா பல்லயம் தண்டாயுதம் சக்ராயுதம் வேலாயுதம் பாலாயுதம் குந்தாயுதம் வாளாயுதம் சூலாயுதம் மழுவாயுதம் எழுவாயுதம் கொழுவாயுதம் வச்ராயுதம் பிச்சுவா கட்டாரி முதலிய வளைதடி குடுதடி குண்டாந் தடி பாணத்தடி முறுக்குத்தடி இருப்புத்தடி குலுக்குத்தடி உக் குலக்கை செக்குலக்கை இன்னும் பற்பலவாகிய அஸ்திர சஸ்தி ரங்களுங்கொண்டு மோதி அமராடியபோது அந்தரவாசிகளாகிய தேவர்கள் ஆச்சரியங்கொண்டு யுத்தஞ் செய்கின்ற ஆச்சரியங் கண்டு என்னகாரணத்திற்கோ இப்பேர்ப்பட்ட விபரீதச்சண்டை யென்று பார்க்க ஏக்கங்கொண்டிருந்தார்கள்.

அந்தவேளையில் கலங்காக் கருத்தினனுகிய காண்டீபனும் குந்திதேவியினுடைய புத்திரசிகாமணியும் நாராயணனுக் கொப் பாகிய நரனும் நானிலம்புகழுங் கோமானும் வானிலமகிழுஞ் சீமானுமாகிய அர்ச்சுனன் நகைத்து மட்டுப்படாதனவாகியும் எதிரிகளின் வாளியினல் வெட்டுப்படாதனவாகியும் வீரங்காட்டி வெங்கனலைக் கொப்புளிக்கும் அம்புகளை வீரகாண்டீபத்தில் அனுசந்தித்து ஒன்றின்மே லொன்றுகச் செலுத்தி உப்புக் கட லூடெரியும் வடவையை ஒப்பக் குப்பென்றேங்கி வெதுளிமேற் கொண்டு விரைந்து முன்னின்றான்.

இவ்விதமாகச் சவ்வியசாசி தொட்ட அஸ்திர மடங்கலும் போய்விழுந்து எதிரிவிட்ட ஆயுதங்களையும் நால்வகைச் சேனை களையும் நலியப்படுத்தி நாசப்படுத்தி இரத்தவெள்ளம் ஓடும்படி அதாகதஞ் செய்தன.

இத்தன்மையாகச் சேனைகளைத் தனஞ்சயன் முடியடித்த முறைமையைத் துரோணச்சாரியர் கண்டு அர்ச்சுனன் தேருக்கு நேர்சென்று நின்று தன் படைகளுக்கு நேரிட்ட இடரை நீக் கும்படியோசித்து நெறுநெறென வில்லைவளைத்து நீண்டபாணங் களை வேண்டியமட்டும் போக்கி அருச்சுனன் செலுத்திய கணை களத்தனையும் மண்ணுக்கிப் பின்னும் ஈடுக்கீடாகப் பெருஞ்சரங்க ளேவிக் காண்டீபன் விடுகணைகளைத் துண்டிக்க, அதைப் பரா

கிரமவிஜயனேக்கிப் படபடத்துப் பசையழிக்கும் நாராசக் கணை களைப் பார்த்துப் பொறுக்கி நாராயணமந்திர மேற்றி விடுத்து நேரில்வந்த துரோணசாரியையும் அவருந்திய அஸ்திரங்களை யும் மாறிமாறித் தாறுமாறாய்ப் போகக்கண்டான். சேனைமேகம் போற் சோர்வில்லாமல் சரவருஷம் பொழிந்து முறியவடித்த துணிவையும் விஜயனது வீர வில்வேக வித்தையையும் சிந்தை செய்யுமிடத்தில் மான் மழு சூலப்படை தரித்தருளிய மகாதேவ னும் இவனுக்கெதிர்வந்து மலைந்து போராடமாட்டான்போலு மிருக்கிறதே. அவன்முன் என்போலொத்தவன் என்னசெய்யப் போகிறேனென்று வண்டுதுன்றுந் தாமரைமாலையணிந்த துரோ ணச்சாரியர் கண்டுங்காணாதவர்போல் சற்றுநின்றுதயங்கி ஆதியி லிவனுக்கு வில்வித்தை கற்றுக்கொடுத்து வீஷ்டுமர் முதலாகிய வேந்தர்கட்கெதிரிற் பரீக்ஷித்து யாவரும் மெச்சும்படியாய் லக்ஷி யம்பெற்ற தனுர்சாஸ்திரங்களும் மந்திரங்களும் தந்திரங்களும் கற்ற இவன் அப்போதைக்கிப்போது ஒன்றுக்குப் பத்து பத் துக்கு நூறு உயர்ந்திருக்கின்றான். இத்தன்மையான விற்றிறத்தி னல்தான் நிவாதகவசாளைக் கொன்று முத்தலம் புகழுங் கீர்த்தி பெற்று இறுமாந்து நம்மை எங்குமில்லாமலடித்துச் சயித்தான். ஆதலால் ஜயவிஜயனென்னும் பேர் இவனுக்கே தக்கது. இனி வேறு பேர் கூறுவதற்கிடமில்லை. நாம் இந்த அருச்சுனனுக்குத் தொண்டுசெய்து அவனண்டையிற் காத்திருந்து அருமையான வில்வித்தையைக் கற்றுக்கொள்வது நலமென வெண்ணினர்.

இவ்வாறுக வெண்ணங்கொண்ட துரோணசாரியரின் கரு த்து ஒருவாறு முடிவுபெறு முன்னமே கிரீடி ஊரோடுயிர்களை வேரோடு களைகின்ற யுகாந்தகாலப் பேரொலி நாட்டி, உருத்திடி த்துப் பயங்காட்டி, இடியாஸ்திர முதலிய பர்வதாஸ்திரங்களை யேவினன். அவ்வஸ்திரங்களானவை வந்து ஆசாரியருடைய தேரை மளமளவென்று முறித்து வேதக்கொடியை வீறிட்டொ டித்து குதிரை நான்கையுங் குறுகக்குறைத்துச் சாரதி தலையைச் சரியத் தரித்துக் கையிற்பிடித்த வில்லையு முறித்து வில்லில் மாட் டிய நரம்பையுமறுத்து எங்குந் தாமாய்த் திரிந்தனன். தானே றிய தேருங் கைப்பிடித்த வில்லும் முறிந்ததால் வேல் வில் கொண்டு மறுதேரேறி பதிற்சரந் தொடுக்க வெட்கப்பட்டு வேதவேதியரான தனுர்வேத முனிவர் புறங்கொடுத் தோடி னர்.

இவ்வாறு சமர்முனைவிட் டோடுகின்ற தன் தந்தையான துரோணாசாரியையும் அவர் விடுத்த அஸ்திரங்களின் தளர்ச்சியையும் அருச்சுனன் தொடுத்த கூரிய பாணங்களின் கிளர்ச்சியையும் அசுவத்தாமா கண்டு சீற்றங்கொண்டு வெம்பி வெதும்பி கண்ணீர் ததும்பித் தனது தேரைச் சலுதியிலுந்தி தனஞ்சயனுக்கு முந்திச் சண்டைசெய்யத் தொடங்கினன். இவ்வாறு தனுர்வேத சாஸ்திரச்சாலைச் சிநேகனும் ஆரியகுமாரனும் வீரியநாமனுமாகிய அஸ்வத்தாமாவானவன் அர்ச்சுனராஜனைத்தடுத்துப் போர்கொடுக்க வந்தது எத்தன்மைய தென்னில் மேன்மேலாக நெருப்புப்பொறி வீசிய பெருந்தீக் கடவுளைப் பகைத்து ஆலகாலவிடத்தில் மூளைத்த அருங்கனல்வந்து எதிர்த்ததுபோலிருந்தது. அவ்வாறு மூனைந்த அஸ்வத்தாமன் அருச்சுனனுடைய தேரின்மேல் ஐம்பது அஸ்திரங்களும் அசுவங்களின் மீது நூறுகனையும் சாரதியின்மேல் இருநூறு சரமும் அனுமக்கொடிமேல் ஐந்நூறம்பும் பச்சைநிற பார்த்தன்மேல் ஓராயிரம் பகழியும் முன்பின்பாராமல் பிரயோகம்பண்ணித் தன் பின்பலத்தைத் தேடாமல் பங்கப்படாத சிங்கக்குட்டிபோற் சீறிநின்றான்.

அந்த அஸ்வத்தாமன்கோர்த்த அம்புக்கும்புகளைப் பார்த்த தேவேந்திரன் முதலிய தேவர்களும் ஆர்ந்து ஆச்சரியப்பட்டார்கள்.

அப்போது ஜயவிஜய சௌரிய பராக்கிரம கண்டீரவ காண்டீப தனஞ்சயன் கண்டு அண்டமுகடு அதிரவருகின்ற பிரசண்டகனைகளாகிய ஓராயிரத்தெண்ணூறு பாணங்களையும் ஒருநொடியில் நறுக்கென்று குறுக்கில் வெட்டி, குறுந்தூளாகக் கொட்டிவிட்டுக் கூர்மையான இருபது சூரியாஸ்திரங்களைக் குறித்துக் கைப்பிடித்து ஆரியமந்திரம் உச்சரித்துத் தொடுத்து அசுவத்தாமா ரதத்தில் நாட்டிய சுவேதத் துவஜத்தை அடியோடுமாட்டித் தீரப்பார்வை காட்டிநின்றான். அதைக்கண்ட அஸ்வத்தாமன் கச்சிதமான வச்சிரவாளி தகூணமேற்கொண்டு பிரயோகம்பண்ணி மெச்சிய மேன்மைக்கு உச்சிதமாகிய அருச்சுனராஜனது வீரப்பட்டத்தை யறுத்து ஓடியாத காண்டீபத்திற்பூட்டிய அருந்தநாணியைக் குதை நீக்கித் தளரப்படுத்தி அனந்தங்கோடி அம்புகளினால் ஆகாயம் பூமி யாவற்றுந் தெரியாமல் மறைத்து அருச்சுனனுடைய தேரையு மூடினன். இத்தன்மையாகக் குருபுத்திரன் நடாத்திய யுத்தத்திறத்தை வெற்றி வீரப்பிரதாப விஜயன்

கண்டு புன்சிரிப்புக்கொண்டு, ஓ அஸ்வத்தாமாவென்னுஞ் சிரஞ்சீவி வரத்தைப் பெற்றோனே! என்னுடைய வின்னுணியைத் தளர்த்துவிட்டதினால் உனக்குப் போர்ச்சேவகனென்னும் புகழ் கிடைத்ததுண்டோ? போ போ. அது பைத்தியமாவென்று வீரதீர காண்டீப வின்னுணியிறுக்கிக் கோரபார சரங்களைக் குறையாமல் நிறைத்தான். அஸ்வத்தாமாவும் அவற்றிற்கிடாகிய சரங்களை அபரிமிதமில்லாமல் அமோகமாய் நிறைத்தான். இவ்வாறு இருவருஞ் செப்பிடுவித்தை செய்பவர்போல ஒப்புவமை உரைப்பதற்கின்றி எப்புவனமும் நடுங்க அம்புமாரிபொழிவதைச் செப்புதற்கரிய துரியோதனன் சேனைகள் தங்களுக்கு ஜயகாலமென்றுட்கொண்டு சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல் இரைந்து பொங்கி ஆசாரிய குமாரன் செய்த அமர்த்தொழிலைப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். இவர்களிருவரும் விட்ட அஸ்திரங்களானவை பரவி எட்டுக்கரியும் எட்டுக்கிரியும் வட்டப்புவியும் அட்டமாநாகமும் மேலுள்ள சுவர்க்கலோகமும் நடுங்கச் செய்தனர்.

இவ்வாறு ஒருவருக்கு ஒருவர் ஓயாமல், ஒன்றுபத்து நூறு ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் லக்ஷாலக்ஷம் கோடி கோடாகோடி அற்புதம் நிற்புதம் பொற்புதமென்று கங்குகரைகாணமல் எங்கு மிறைந்துறைய ஒரு முகூர்த்தபரியந்தம், நெற நெற நெற நெற வெனப் பொழிந்தகாலையில், தோள் வல்லமையுமுடைய துரோணாசாரி மகனது அம்புராத்தூணிநிறைந்த அஸ்திரங்களியாவும் வறண்டுபோய் தரித்திரன்போற் சோர்வடைந்திருந்தான். அஃதெப்படியிருந்ததென்னில் கீழ்மக்கள் மேன்மக்களாவார்களென்பது கனவிலுங் கிடையாது. ஒருவேளை தந்தை விந்தெழுந்து முந்திவந்த தெந்தவினையோ, அந்தச் சம்பந்த அருவினையதனல் நடுவது பாதி முதலிய நாட்களிற் செல்வம் நேரிடலாகும். அவ்வாறு நேரிட்டால், அதைப் பாதுகாத்துத் தன்னிலுஞ் சிறந்த சாதுக்களுடன் சகவாசஞ் செய்து விற்பன விவேகம் விளங்கக் கற்பனையான கல்வியையறிந்து அக்கல்வியிற் கழறிய கருத்தை யுணர்ந்து அந்தக் கருத்திற்கிணங்க அடங்கியிருந்து மூன்பின் உலக முறைமையுந் தேர்ந்து அடக்கம் வணக்கம் அன்பு பூண்டொழுகி இரக்கம் தயை பெற்றிருப்பவர்களுக்கு அச்சம்பத்தெந்நாளுந்தவறடையாது. அப்படிக்கில்லாமல் பற்பல அகந்தைகள் விளைத்து தலைகால் தெரியாச் சன்னதமாடியிளைத்து பெரியாரைப் பணியாத பெருமை முளைத்து வீஷ்டுமத்

தாற்றினைத்து வெறும்பொய்யாற் கனைத்து விசனத்தால் உளைத்து வெதுப்புண்டு அறிவில்லாத அற்பர்க்குச் செல்வம் பகை என்பதற்கிணங்க, கிடைத்திருந்த ஐசுவரியத்தைப் பிரயோசனப் படவொட்டாமற் போக்கடித்துக்கொண்ட வெறும்வீணரைப் போல் அஸ்வத்தாமன் தான் அருமையாய்ச் சம்பாதித்த அஸ்திரங்களடங்கலையும் வழிதுறையில்லாமல் வாரியிறைத்து வதங்கியிருந்தான்.

இந்திரகுமாரனுகிய அருச்சுனனது அம்புரூத்தூணியோ இறைக்க இறைக்கச் சுரக்கு மணற்கேணிபோல் எடுக்கவெடுக்கக் குறையாமல் அக்ஷயமாய் எப்போதும்போலிருந்தது. அதெப்படியெனில், தப்பிதமில்லாமல் கற்கவேண்டியஆசு மதுரம்சித்திரம் விஸ்தாரமென்னும் நான்குகவிகளையும் ஆராய்ந்து தெளிந்த பூரண வித்துவான்களின் விவேகவினைவினுல் கற்பனை அலங்காரங்காணச் சுரக்கும் பாவின் விருத்திபோலிருந்தது.

இப்படிக்கிருக்க குற்றமற்ற வெற்றிபெற்ற கொற்றவர் தம்மைப்போல தேரின்மேலசையாமலிருந்த சிங்கக்குருளைபோன்ற அசுவத்தாமனது செயலையறிந்தோ, அல்லது திறமாகிய சிலவிஜயனுடன் போர்புரிந்து ஜயம்பெற நினைந்தோ அல்லது மைத்துனராகிய துரோணரும் மருமகனுகிய அசுவத்தாமாவும் இளைத்துப்போனர்களே. அப்படியே நாமும் இளைத்துப்போவோமென முனைந்தோ சிவந்தநிறமுந் திறமும்படைத்த கிருபாசாரியர் தம்முடைய தேரைக் கடகடவென்றுவிடுத்துக் கணைகளை வெகுவாய் தொடுத்து தனஞ்சயனை டெதிர்த்துச் சண்டை வினைத்து தடுத்தார்.

அந்தவேளையில் கடல்நிறங்கொண்ட காண்டீபனனவன் சாரதியான உத்தரகுமாரனைப் பார்த்துப் புத்திமானே! அசுவத்தாமன் அம்புக்கூட்டிலுள்ள அஸ்திரங்களெல்லாவற்றையும் வாரியிறைத்து வறண்டிளைத்துப்போனுன். அவனுக்கு நேரிட்ட அவமானத்தை வெளிப்படுத்தலாகாதென்று அவன் நல்லம்மானை கிருபாசாரியர் நம்மூடனெதிர்த்து போர்புரிய வருகிறூர் பாரென்று அருட்பார்வையாற் காட்டினுன். அக்குறிப்பை யறிந்துகொண்ட உத்தரகுமாரன் சக்கரங்களுள்ளதேரைக் கர்க்கரத் தொனிகாட்டி முட்கரமாகவோட்டிப் பூர்வாசாரியருடைய தேர்க்கெதிர் வந்து வளைத்தான். அதுகாலையில் அருச்சுனராஜன் காண்டீபத்து நாணியையிறுக்கி மின்னலோடு இடிமுழக்கத்

துடன் பொழிகின்ற மேகமும் நாணி வெட்கப்படும்படி சரசர வெனச் சரதாரையாய்ப் பொழிந்தான். அதைக்கண்ட கிருபா சாரியருங் கிட்டி ரதத்துடன் ரதத்தைமுட்டி நாலாவிதகோலா கல பாணங்களைக்கொட்டி அவனுந்தியகணைகளை வெட்டி ஓட்டி யுத்தம் பண்ணினார்.

இவ்வாறிருவரும் போராடியவல்லமையை இவ்விதமென்று மதித்துச் சொல்ல வல்லவரில்லை. ஆனல் வானத்தில்வேடிக்கை பார்த்திருந்த வானவரும் முதலாகிய பிதிர்தேவதைகளும் வெகு தூரம் ஓதுங்கிச்சென்றார்கள். பிரசண்ட வாயுவுங் கலங்கிப் பிர காசிக்கு மேகமேருவுங் குலுங்கி எட்டுதிக்கு மகமேருவுங் குலுங்கி. எட்டுதிக்குஞ் செவிடுபட் டொடுங்கிப் போயின. அம்பரஞ் சுழ ன்று பம்பரம்போலாடி. அக்கினிமிகுந்து அனற்பொறி மலிந்து வீசியது. அண்டகூடந்தொட்டு அகண்டமும் நெக்குவிட்டுச் சாய்ந்தன. அந்தரகதியாய் தொக்கி அஞ்சன மேகமும் விக்கி அதனது வாயின் பெருக்கில் நீரிடி நெருப்பிடியைக் கக்கி மலைக் குகைகளிலும் பிலத்துவாரங்களிலும் புகுந்து உக்கி யொடுங்கிப்போகப் பிரமாதம் விளைந்தது. இவ்வாறு விற்றிறங் காட்டி விக்கிரமக் கிருபாச்சாரியரும் பராக்கிரமப் பற்குனனும் தங்களுக்குத் தெரிந்த சிலைத்திறங்களைக் கணைத்திறங்களைச் சீரா ட்டிப் பாராட்ட அவர் சாரதிகள் முன்னேட்டமாகத் தேரைச் செலுத்தி இருவரும் வெகுநேரம் வரையிலும் பகழிகளுந்தி ஒருவர்க்கொருவர் உதிரஞ்சிந்தி உடலெல்லாஞ் சிந்துசிந்தாய்க் கொந்தி உருத்துப் போர்புரிந்தார்கள்.

அப்போது கிரீடியானவன் கைமிஞ்சி நிருடிச் சரங்களைச் சரேலெனப் புகுத்திப் புட்பகவிமானம்போன்ற சக்கரத் தேரினை யும் வெள்ளைக்கொடியையும் சாரதி குதிரைகளையும் விழத்தாக்கிக் கிருபாசாரியருடைய உடல்முழுதுந் துளைத்து மறுபடியும் பாத முதற் றலைவரையில் பாணங்கள் ஊடுருவிப் போகும்படி நாணி வீக்கி டங்காரஞ்செய்தான். அந்தக்காலையில் கிருபாசாரியர் மதி மயங்கித்தியங்கிக் கண்கலங்கி மானந்துலங்கி மண்மேற் கரைந் தார். அக்கிருபாசாரியருக்கு இரண்டு பக்கத்திலுந் திரண்டமலை போலிருந்த வலியையுடைய சந்திரகேது சுலோஷணன் மணி மந்தன் ஏமவான்முதலிய வெற்றிவில் வீரவேந்தர்யாவரும் ஆர் த்து அருச்சுனனைமடக்கி ஜயம்பெறுமல் விடமாட்டோமென்று ஸ்திரப்போர் விளைத்தார்கள். அவர்களை அருச்சுனன் பார்த்து

அதிகோபமுற்று வேர்த்து மறுகிக்கொதித்து மாறிமாறி வீரக் கும்புகள்மேல் நூறு நூருயிரம் அம்புகளேவி அன்னேருடைய ஆயுதங்களையும் பாணங்களையும் விற்களையும் தேரையும் சிகரங் களையும் நொறுக்கிப் பறக்கவடித்து மலையொத்த புயத்தைக் குறைத்து இடையுந் தொடையும் இடையத்தறித்து கரமுங்கா லும் புறம்பட முறித்து தலையையுடைத்துதரணிமேற்குவித்துத் தாவியகாலையில் வீரத்தேரேறி, தீரம்விடாத விருத்தராகிய கிரு பாசாரியர் வெளிப்பட்டார். விஜயன் வாள்தூவி அவருடைய வில்லையும் ரதத்தையும் சாரதி குதிரைகளையும் அழித்து அவருக் குப் பின்னுதவிவந்த மன்னவர் சகலரையுஞ் சிந்திஞன்.

தனக்குதவியான மன்னரையும் மடித்துத் தன்கையிலிருந்த வில்லையு மொடித்துத் தானேறிவந்த தேரையும் பொடித்துத் தானைகள் நான்கையுந்தவிடாய் அடித்து ஜயம்படைத்த தனஞ் சயன் சரவேகத்தைத் தாங்கவியலாத கிருபாசாரியர் உடல்படப டத்து வேர்த்து பூமியிலுட்கார்ந்து எரிவேலெடுத்துப் பூசை முடித்துப் பற்குணன்மேலெறிந்தார். அந்த வேலாயுதம் அதிர் ந்துவருகிற ஆர்பாட்டத்தை அருச்சுனன்தெரிந்து நகைமுகமா கச் சிரித்து அக்கினியாஸ்திரந்தொடுத்து வெட்டையாகிய வெ ண்கலப்பொடிபோல் உடைத்துத்தள்ளினன். அப்போதுகிருபா சாரியர் தானெறிந்த வேலாயுதம் முறிந்ததையும் அதைமுறித்த அருச்சுனனது திறத்தையும் கண்டு ஆக்கிரமித்து வெகுண்டு உடல்மறந்து சிறந்த வாளாயுதமுங் கேடயமுங் கைக்கொண்டு ஓரேவீச்சாக வீசிடக்கருதி விஜயனுடைய தேரிற் பாய்ந்தார். இவ்வாறெண்ணிப் பாய்ந்த பூர்வாசாரியரைக் காண்டவவனமழி த்த காண்டீபன் கண்டு வெந்திடச்செய்யும் இந்துமுகாஸ்திரச் சுந்தரக் கணைகளில் வாளாயுதத்தையும் பரசையும் நீருக்கிபூளைப் பூப்போற் போக்கினன். அதனல் யுத்தமுனையில் வெற்றிபெறக் கற்ற வீரம்பெற்ற கிருபாசாரியர் வேறு போர்புரிவதற்கு விதியில் லாமல் சற்றுநேரம் அசைவற்றிருந்து தன்ஸ்திதியைநிதானித் துத் தனக்கு முன்னேசண்டையிலிளத்த தாஷ்டீகளைப்பற்றியும் யோசித்துக் கீழ்க்கண் பார்வையாய்க் கிரீடியைப் பார்த்துச் சிறு நகைவிளத்துத் திடீரென்றோடி வீரகண்டாமணி கட்டிப் பிரகா சிக்கின்ற துரோணசாரியர் புத்திரனை அசுவத்தாமனுடைய தேரிலேறிக்கொண்டார்.

இங்ஙனம் முனைவீரங்காட்டிப் போர்புரிந்த கிருபாசாரியர் பின்னிட்டோடி மருமகனுடன் ரதத்திலிருந்த வண்மையை அவரை நம்பிப்போன சேனைகள்கண்டுவாடி அருச்சுனன்பாணத்தால் அடிபட்டோடினர்கள். முன்னிட்டடுத்து யுத்தமுனையேறிய கிருபாசாரியர் இழிவு தேடிக்கொண்டு பின்முதுகு கொடுத்துப் போனதைப் பொற்சக்கரம் பூட்டிய தேர்மேலிருந்த போர்சிங்க வீஷ்டுமாசாரியர் கண்டு மேகங்களை மின்னலுடன் பிடித்துப் பிசிந்தமைபோல் விளங்கிய செஞ்சிலைதாங்கி ஓங்கிய சேவகத்திறங் காட்டிப் பேரணிப்படை புடைசூழ்ந்து பின்வரப் போர்முகநோக்கிப் பிரதாபனை சவ்வியசாசியை வளைத்து நாணெலி செய்தார். அக்குருகுலகோமான் தெறித்த குணத்தொனிகேட்டுக் கரையுடைந்த எரிநீர்போலிருந்த சகுனி துர்ச்சாதனன் முதலாகிய சங்கிராம வேந்தர்கள்கூடி வீஷ்டுமாசாரியருடைய ஆகரவின்மேல் அருச்சுனனைநாடி அளவற்ற அம்புகளைத் தொடுத்தார்கள். அதைக்கண்ட நரனனவன் பம்பிய மேகம்போல் நச்சரவப் பாணங்களை விடுத்து அவர்கள் தூற்றிய அஸ்திரங்களை யெல்லாம் நாலிரண்டாய் ஓடித்து நாரியோசை காட்டி தேவதத்தத்தை முழக்கினன். அதனெலியால் யாவரும் மடக்கி மயங்கி நலியாலடங்கினர்கள். சந்திரகுலத் திந்திரனைத் தோன்றிய தனஞ்சயன் தானேறிவந்த மந்தரமலைபோன்றரதத்தைத் தந்திரமாகச் செலுத்தும்படி சாரதியான உத்தரகுமாரனுக்குச் சாற்றினன். அவனப்படியே மூடுக்கி ஒரு நொடிப்பொழுதில் குலகுரு வசிக்குந் தலக்கணிற் சார்ந்தான். இவ்விதமாகச் செவ்விசேர்ந்த மன்மத வடிவம்பெற்ற வாசவன் மதலை உலக முடிவிலெழுகின்ற ஆலகாலம்போலும் காலகாலன் போலும் போர்முனையிற் கலந்ததைக் காங்கேயன் கண்டுகளிக்குங் காலையில், வாளாயுதவல்லமைபெற்ற இடபசேனன் அர்ச்சுனனை மறித்துக் கேதுராகு கிரகங்கள்போற்செறிந்து பலம்பொருந்திய பாணங்களைத் தெறித்துக்கிரமமாகப்பிரித்துத் தானும் நெறித்து நின்றனன். அந்த இடபசேனன் செய்த போரைப் பார்த்த நரனன் ஆங்காரங்கொண்டு ஸ்திரமான சரங்களைப் பலவாருகச் செலுத்தி யடித்து அவனுடைய தேர் சாரதி குதிரைகள் கொடுங்கை முதலியவற்றையும் போக்கிக்கைப்பிடித்தவில்லையுங் கரனையாயொடித்துச் செங்கதிர்ச் சிலீமுகந் தெறித்து அவனது தேகத்தையுந் துளைத்தான். அந்த அடியினற்களைத்த இடபசேனன்

உடலெறிந்து உயிர் கரிந்து வீஷ்டுமாசாரியருக்காகப் பரிந்து புகுந்த பக்ஷம் போதுமென்று முனைகெட்டழிந்து முதுகிட்டயர்ந்து முறையிட்டோடினன்.

அவனோடுவதை நோக்கிய சிந்துதேசாதிபனென்னுஞ் சயிந்தவனும் காந்தாரதேசாதிபனை சௌபலச்சகுனியும் வெம்பு மனத்தினராகிய திரியோதனன் தம்பிமார்களும் மற்றுமுள்ள மன்னர்களும் எதிர்த்து அதிர்த்து விதிர்விதிர்த்து வெந்தழற் கணைமழை சிந்தியகாலையில் மதர்த்த ஆணைரூத்த மாதலி கொழுநன் நகைத்து மனவேஷ்டையாய்ப் பகைத்துப் புரத்தை யெரித்த வலிபொருந்திய அஸ்திரங்களையுந்தி அவரவர் பிடித்திருந்த வில்லையும் எய்த பாணங்களையுஞ் சிந்தி, கொடியையும் நாணியையும் குறைத்து, குதிரைசாரதிகளைத் தறித்துக் குடையையுடைத்துத் தேரையுமுறித்துப் பின்னும் நூறு பெருங்கணை தாக்கி வீறுபட்ட சேனைகள் தாறுபட்ட யானைகள் மாறுபட்ட ரதங்கள் இவ்வாறொழிந்தனவென்று சொல்வதற்கிடமில்லாமல் வெவ்வேறுக நீறுபட்டொழிய நிமிஷத்தி லொழித்துச் சேறுபட்ட உதிரவெள்ளத்தில் தேர்செலுத்தி எதிரொருவரில்லாமல் வருகிற விஜயபராக்கிரமனை பனைக்கொடிபறக்கச் சிறந்த தேர்மேலிருந்த பிதாமகன் கண்டு பார்த்தனே! இதோ நான்காத்திருக்கின்றேன்; வாவென்றெதிர்த்தார்.

அவ்வாறெதிர்த்த வீஷ்டுமாசாரியரை அருச்சுனன்வணங்கி ஓடுங்கி ஐயா! தங்கட்கு நானெம்மாத்திரம்? என்னையொருபொருளாகக்கொண்டு என்னுடன் சமராடல் தகுதியோ? ஆண்டவனே! என்று நிம்மதியாய் நின்று மேகம்போன்ற காண்டீபங்கொண்டு மின்னற்கிணையாகிய நாணிபிகித்து தேருங் கலங்க நாணொலி செய்து தீரஜயவாளி மஹேந்திரபாண முதலியவற்றை வாரிவாரி வரிசையாய்ச் சொரிந்தான். வீஷ்டுமாசாரியரும் உகாந்தகால மேகாந்தகார மழைபோல் வாகார்ந்த வாளிகளை மேலும்மேலும் சரமாரியாகப் பொழிந்தார். இவ்வாறு மலையுமலையு மெதிர்த்து மாரடும்வாறு போராடினர்கள். அவர்களிருவரும் புரிந்த போரினல் ஏழுசமுத்திரமும் எட்டுதிக்குப் பாலகரும் ஒன்பது கிரகங்களும் பத்துதிசையும் பதிஞ்ரு ருத்திரரும் பன்னிரண்டு சூரியரும் பட்டபாடின்னதென்று பாவாணராலும் பகர்வதற்கியலவில்லை. அத்தரவாசிகளாகிய இந்திரன் முதலாகிய தேவர்களும் வேடிக்கை பார்த்து வெருண்டு அநேகயோசனைதூரம் அகன்று

போய் நின்றார்கள். சந்திரசூரியர்களுங் கதிமாறினர்கள். அவர்க ளிருவரும் உதயமாகி யொடுக்கமாகின்ற உதயகிரியும் அஸ்தமன கிரியும் ஒடுங்கி நடுங்கின. கடலுங் கொதித்துக் கனல்பொருந்தி கனகனவென் றிறைந்தது. எட்டுத்திசை யானையும் தட்டுகெட் டயர்ந்தன. இவ்வுலகமும் எங்கித் தளர்ந்தன. இவ்வாறு பிர மாதமுண்டாகும்படியாய் அவர்களிருவரும் அமராடியகாலையில், வீஷ்டுமாசாரியர் கைவிஞ்சிப் பஞ்சபூதம்போன்ற ஐந்துகணை களைச் சாரதியான உத்தரகுமாரன்மேற் றூக்கினர். அந்தக் கணை கள் வருகின்ற நிருடியைக் கிரீடி கண்டு காலாக்கினிக் கணை யொன்றேச்சிப் பஞ்சுப்பொதியில் நெருப்புப் பற்றிய பான்மை போலெரித்து வஞ்சம் அறியா மனத்தோனை வீஷ்டுமாசாரிய ருடைய நெஞ்சந் திடுக்கிடும்படி அவர் கையிலிருந்த வில்லை யொடித்துவிட்டான். தன்பேரனை அருச்சுனனுல் ஒடிபட்ட வில்லை வீசியெறிந்து வேறு வில்கொண்டு மலைபோல்வளைத்துப் புற்றிலிருந்து புறப்படுங் கிருஷ்ணசர்ப்பம் பேரோசைகொண்டு புகுந்தவாறென்ன அஸ்திரமாரியைத் துஸ்கரமாகச் சொரிந்தார். தாஷ்டிகமாக வீஷ்டுமாசாரியர் விடுத்த துரிதக் கணைகள் யாவற் றையும் இணையில்லாத அர்ச்சுனன் திரணபரிகாரமாய்ப் போக் கிக் கரணபரியந்தங் காண்டீபநாரி யிழுத்து அருணைதயம் போற் செஞ்சரங்கள் மிஞ்சத் தாக்கி, பஞ்சுபோற் பறக்கடித்து அழியாக் கீர்த்திபடைத்து அமராடியகாலையில், எழுகடல் நீருஞ்சுண்ட மலைமுதல் யாவுங் குன்ன உலகில் யாவரும் இருந்த இடத்தை விட்டெழாமற் பதுங்க அட்டகஜமும் ரத்தங்கக்கி வாடிவருந்த அமரர்கள் முக்கியொதுங்கப் பிரமப் பிரளயத்தில் உண்டாகாநின்ற பெருநெருப்புபோல் சரங்க ளிறைத்துப் புலிங்க நிறைத்துத் தகுதியான இருவரும் தேரைச் செலுத்தி ஓரிடத்திலுந் தங்காமல் அண்டச்சுவரின் அடிவார மட்டுந் திரிந்துகொண்டிருந்தார்கள். இவர்களேறிய தேர்கள் வாயுவேகம் மனவேகத்திலுமிஞ்சி வட்டமாகச் சுழன்று ஒன் றுக்கொன்று கிட்டநெருங்கியுரும்பு ஒன்றையொன்றுவிட்டுப் பிரித்து பாய்ந்து நெடுந்தூரமோடி ஓய்ந்து வலசாரி இடசாரி, இடசாரி வலசாரியாய்த்திரிந்து சூரியன்தேருஞ் சுழலவிடுத்தன.

இதன்றியும், இந்திரன் மைந்தனை விஜயனுடைய காண் டீபமும் கங்காபுத்திரனை வீஷ்டுமாசாரியருடைய வில்லும் குலாலன் சக்கரம்போற் சுழலுகின்றன. தனஞ்சயன் தொடுத்த

கூரம்பு முதலாகிய பாணங்கள் எதிரிகளின் படையிற் பாய்ந்து முடிகளோடு முடிகளும் தலைகளோடு தலைகளும் இடிபட்டுடை படச் சாடியபடியால், தேரிற்கட்டிய குதிரைகள் பிடிபடாமற் கனைத்துக் கழுலித்துக் கலித்துப் பறிபட்டோடவும் இருவர் சாரதிகளும் எக்களிப்பிட்டு இறைந்து விரைந்து பரிகளைத் தடுக்கவும் அருச்சுனனுடைய அனுமக்கொடியும் ஆகாய மளாவி யுலாவி நீடிய வாயுதேவனுடன் போராடி யாடவும் வாள்வீரர் முதலாகிய மன்னவர்கள் தோள்கள் பூரிக்கவும் நெற்றிவியர்க்கவும் புருவம் நெறிக்கவும் மீசை துடிக்கவும் ரோமஞ் சிலிர்க்கவும் வாள்விழி சிவந்துமலர்ந்து நீப்பறக்கவும் அஸ்திரந்தொடுக்கும் விரல்கள் நெளிக்கவும் விற்பிடித்த கரங் கள் மரங்கள்போலாகவும் வீரகண்டை முழங்கவும் வெற்றிப் பட்ட மிலங்கவும் நெற்றிப்பட்டந்துலங்கவும்வேடிக்கைபார்த்த வேந்தர்கள் கலங்கவும் மேலுலகத்தோர் வெதும்பி யொதுங்க வும் நாகலோகத்தார் மிகவும் நலிந்துவிலங்கவும் சராசரம் பூமி சலித்துக் குலுங்கவும் இவ்விதமாக இருவரும்நிலைத்து ஒருவர்க் கொருவர் பின்வாங்காமல் சமராடுகையில் மதுசூதனன் மைத் துனனை அருச்சுனன் மிஞ்சிக் கொற்றமுற்றுப் பத்துக்கணை களெடுத்து வெற்றிப்பனைக்கொடி வீறிய விஷ்டுமாசாரிய ரேறிய தேரைத்தடுத்து வில்லையுமுறித்தான். அவனுல் முறிபட்ட வில் லையெறிந்து வேறே வில்லெடுக்குமுன்னமே விஜயன் முனைந்து அட்டகாசம்பண்ணி அர்த்தசந்திரபாணம் ஆயிரமாயிரமாக எய்து பாட்டனுடைய தேகத்தைக்கொய்து செல்லெரிப்பது போற் சல்லடைக்கண்ணுய்த் துளைத்துவிட்டான். இயல்பாகவே சிவந்திருந்த வீஷ்டுமருடையதிருமேனியானது இரத்தத்தினுற் பசந்து பாணந்துளைத்த வருத்தத்தினுற் களைத்து வருந்திவாடி அறிவழிந்து நெறிபுரண்டு நிலைதவறி மெய்ம்மறந்து பெரு மூச்சுவிட்டுக் கரைபுரண்ட கருங்கடல்போல் தேர்மேல் வீழ்ந்து அசைவற்றிருந்தார். அப்போது எஜமானனிளைத்த தன்மை யையறிந்த தேர்ச்சாரதியானவன் அர்ச்சுனனுடைய போர் முனைவிட்டுத் தேரைச்செலுத்தி நேர்முகமான திசையிற் கொண் டுபோய்நிறுத்திச் சீர்பெறத்தேற்றி அவுஷதாதிகளூட்டிக் களை தெளியச் செய்து அன்பு பாராட்டினன். அந்தவேளையில் பகல்விளக்கான பரிதியின் இரதமானது ஆகாயத்தினுச்சியை யடுத்தது. அதுகாலையில் வீஷ்டுமாசாரியர் மத்தியான கரு

மத்தை முடிப்பவர்போல் யுத்தமுனையை மறந்து மறைந்து போயினர்.

அவரிடைந்து சென்ற செயலேக்கண்டு திரியோதனன் தம்பிமார்களும் புத்திரர்களும் சயிந்தவனும் சகுனியும் சதுரங்கப் படைகளும் பயந்து தயங்கித் தங்களுக்குதவியாய்ப் பின் புறம் நின்று தாங்குவாரில்லாமையால் தனித்தனி யேங்கிப் பற்குணன் பாணத்தாற் பங்கப்பட்டு நிற்பதற் கிடமில்லாமலுழன்று மனமழன்று போர்முனைவிட்டுப் புறமிட்டோடினர்கள்.

அந்தவேளையில் மந்தரப்புயத்தோனுகிய அருச்சுனன் யுத்தமுகத்திற் பிரவேசித்து விசித்திர சரங்களை விதவிதமாய்த் தொடுத்துத் துன்னிய சேனைகளைத் தாக்கி மன்னவர் வேரழகப் போக்கினன்.

பற்குனன் இவ்வாறு மேன்மேலும் கோடாகோடிகணைகளை வீக்கியகாலையில் நாலுமூலையிலும் கோலாகலமாயிருந்த வணங்காமுடி திருந்திய திரியோதனமகாராஜன் படைகளானவை பின்னிட்டுப் பறிந்து இரதங்கள் முன்னிட்டு முறிந்து கொடிமரஞ்சாய்ந்து குதிரைகளுங் காலோய்ந்து தேரிற்கட்டிய சித்திரத்துகிலுங் கிழிந்து சக்கரங்களு முடைந்து அச்சுகள் பிளந்து மச்சுகள் சரிந்து குத்துக்காலுங் கொடுங்கையும் வீழ்ந்து போதிகை பீடிகை பொடியாயிடித்து சிகரமுதிர்ந்து சிதறிக் கழிந்து குடையுஞ் சுருங்கிச் சாரதி குடலுங் குலுங்கி வரிசை விட்டுக் கிரிசைகெட்டு மார்புபிளந்து வாரறுந்து பேதமாய்ப் போனதுமல்லாமல், வஞ்சமனத்தனை திரியோதனனுடைய வெற்றிபெற்ற மத்தகஜத்தின் மத்தகக் கும்பமும் பிளந்து வித்தகத் தந்தமும் முறிந்து சுளகுபோன்ற காதுகளு மறந்து பனமரத்தையொத்த துதிக்கையுந் துண்டாய் நான்குகாலும் கழுகுனைய வாலும்போய் வறண்டு உடலுங் குடலும் ஒன்முய்ப் புரண்டு வட்டக்கடலுலகில் மலையெட்டுத் தலைநட்டுப் பட்டவாறு ஒன்றெழியாமல் உயிர்கெட்டொழிந்தன.

தெய்வலோகத்தில் இந்திர சிங்காசனமேறிக் கிரீடந் தாங்கிய கிரீடியானவன் நிருடியாய்ச் சிந்தியசரோருகக் கணைகளால் துரியோதனனுடையகுதிரைக்கூட்டங்களியாவும் படைமுறிந்து பலங்குறைந்து வால்தறிந்து தலையறுந்து கழுத்துமயிருதிர்ந்து கடிவாளங் கழன்று கழித்துகலந்து அழிந்து மார்பு கிழிந்து கால் மடிந்து முதுகொடிந்து சப்பைமுறிந்து குப்புரவீழ்ந்து

சருகெனவெரிந்தன. நாகக்கொடிபடைத்த நராதிபனுடையபதாதிகளானவை சிரம் சிதைந்துடைந்தன; கரந்தறிந்து அழிந்தன; எலும்பு ஒடிந்துதிர்ந்தன; குடல் சரிந்தொழிந்தன; நரம்பறுந் துழன்றன; உதிரம் பொருந்தெழுந்தன, நெற்றியும் புருவமும் நிமிர்ந்து பிளந்தன; புயமுமார்பும் புண்ணுய்க்கிழிந்தன; குதமும்பதமுங் குறைந்து சுருங்கின; எவ்விடத்திலும் பிணக்குவியலுயர்ந்தன; இனியொருவர் இவ்வாறு போர் தொடுப்பார்களென்று கனவிலும் நினையோம். இதன்றியும், சவ்வியசாசிவிட்ட சரங்களுக்குத் தப்பிப்பிழைத்தவர்கள் இப்புவியிலில்லை.

இப்பால் யுத்தஞ்செய்தவிடத்தில் நெஞ்சுரம்பொருந்த நஞ்சுபோலிருந்த நரனென்னுங் காலாக்கினிக்கு எதிர்ப்பட்டபூளைப்பூப்போல திரியோதனன் சேனைகள் எரிந்து பொடிந்து பொரிந்து புகைந்து மறந்து புரந்து புரண்டுபோயின.

இவ்வாறு ஜயித்துச் சிரித்துப் புரமெரித்த சிவபெருமான்போல்நின்ற செஞ்சிலைவிஜயனுக் கெதிரில் திரிபுராதிகட் கொப்பாய்த் திரியோதனன் படைகள் அழிந்தன.

இன்னும் அனுமக்கொடியமைந்த அர்ச்சுனராஜன் அனுசந்தானஞ்செய்த அஸ்திரங்களினுல் ஆறுபட்டோடிய இரத்தவெள்ளமானது சேறுபட்டுச் சிதைந்து செந்தூளாக்கியது.

பின்னும் அர்ச்சுனனுடன் போர்புரிந்து மடிந்தோர்களின் வல்லுடலானவை நீறுபட்டு நெரிந்து ஊறுபட்டொழிந்தன. அசைவில்லாமலெழுந்த விஜயன் கணைகளானவை தங்களிஷ்டப்படி சண்டைசெய்து திசையின் முடிவரைப்போய் முட்டிப்பார்த்துத் திரும்பி மீண்டும் விசையடங்காமல் பூமிதுளைத்து சுழல்காற்றுடன் கலந்தும் வேகம்குறையாமற் றிரிந்தன.

மேலும் மாதவி காதலனுகிய பார்த்தன் ஏவிய வார்கணைகள் திக்கெட்டுங் கிட்டித் திசைப்பாலர் தலையிலுங்கிட்டி அஷ்டகஜங்களைத் தட்டி அண்டச்சுவரையும் முட்டி இன்னம் யாராகிலும் பகைவருண்டோவென்று ஆராய்ந்துவிட்டன.

இதன்றியும் சிற்சில நெருப்புக்கணைகளானவை பற்பலதேர்நிறைகளையும் யானைப்பெருக்கங்களையும் குதிரைநெருக்கங்களையும் காலபல வருக்கங்களையும் கசியக் கரைத்துக் கண்ணுக்கிடுமைபோ லரைத்துக் கால்வாய்கொண்டாடுகின்ற இரதத்திற் கரைத்துக் கடலிற் பெருங்காயங் கலத்தல்போற் கலக்கிவிட்டிரைந்தன.

வீபற்சுவிலேத்த வினையால் கொற்றவர்களும் மற்றவர்களும் மிகவருந்திச் செத்ததல்லாமலும், தலைமேற் குவித்த ரத்தினராய் தறிந்துவீழ்ந்த சிரத்தினராய்த் தைரியங்கெட்ட உரத்தினராய் தங்கள்தங்கள் வாய்விட்டரற்றினர். அவர்களுடைய சந்திரவட்டக் குடைகளும் வெண்சாமரைகளும் பல்லக்குகளும் பல வாகனங்களும் பேரிகை பூரி தாளமேளம் தவிலடி காளம் கொம்பு கொடி முரசு முதலிய வாத்தியக்கருவிகளும் வில்லும் பாணமும் வேலும் வாளும் வெவ்வேறுயழிந்து பூமியிற் குவிந்தன.

இவ்வாறு யுத்தம்புரிந்த இந்திரன் மைந்தன் அண்டச்சுவரை யளாவிய சமுத்திரம்போ லிரைந்தெழுந்த திரியோதனனுடைய சேனைகளை மகரமச்சம்போற் குடைந்து வாட்டினன்.

மேன்மேலுந் தெரிந்த வெங்கனற் கணைகள் மிதமறப்படர்ந்து வெளியெல்லா மடர்ந்து காடெல்லாந்திரிந்து கடையுகாக்கினிபோலெரிந்து விரோதியைத் தொடர்ந்து மேனியைப் பிளந்து சேனையைச் சிதைத்து ஊனைப் புசித்து உதிரங் குடித்து தாராகணங்களைத் தரையிலுதிர்த்து தேவர்கள் நடுங்கச் செந்தீயெரிந்து சிரித்துக் கலித்து திறம்பெற்று நின்றன.

இவ்வாறு மாடுபிடிசண்டை போடுவதற்காகப்புகுந்த வணங்காமுடியோன் முதலாகிய மன்னவர்கள்மேல் குறிப்பறிந்து நெறிப்பறிந்து கூசாமலேவிய பாசுபதன் பாணங்கள் எப்படியிருந்ததென்னில், தசரதசக்கரவர்த்திக்குகந்த மைந்தனை தாசரதியானவர் தர்ப்பாசனத்திலிருந்து வருந்தியழைத்தபோது வாராத சமுத்திரராஜன்மேல் வலுக்கொண்டுந்திய வன்னிக்கணைபோன்றிருந்தன.

ஆண்சர்ப்பக்கொடி நாட்டிய திரியோதனனுடன் பொருந்திப் போர்புரிந்த போர்வீரர்கள்மேல் புரந்தரதுரந்தரன் போக்கிய புங்கவங்களெத்தன்மையானவெனில், தீரப்பெற்ற சூரனையும் அவன் சேனைகளையுங் களைந்த சிவசுப்பிரமணியக் கடவுளின் வேலாயுதம் போன்றிருந்தன.

மேலும் கருங்கடற்போற் கவிந்த கௌரவகுல முதல்வன் சேனைகளியாவும் கண்கலங்கப் புண்துலங்கநைந்து சிதைய கேசவன்றேழன் முடுக்கிய கிளைக்கணைகளானவை எமதருமராஜன் வீசிய தண்டபாசத்திற் கிணையாயிருந்தன.

வேந்தர்கள் முடிமேற்கவிந்த வெள்ளைக்குடைகள் காம்பு மூறிந்து பூமியிற் கவிழ்ந்து காற்றினுல் நிமிர்ந்து கலந்துகிடப்

பது, சுபத்திரைநாயகன் திரியோதனனுடையபடையைவென்று கீர்த்தி அடையச்செய்யும் யாகத்தில் அவிர்ப்பாகம்பெறவேண்டி சந்திரன்வந்து தலைகவிழ்ந் திருப்பதுபோ லிருந்தது.

வெற்றிவீரமுள்ள வேந்தர்கள் கைப்பற்றிய வலம்புரிச் சங்கம் முதலிய வெல்லாவற்றையும் அர்ச்சுனன் அம்பால் முறித்தது, ஏகசக்ராதிபனுகிய திரியோதனனது கீர்த்தியை வேரறக் களைந்ததுபோ லிருந்தது.

தேர்களிலும் யானைகளிலும் பொருந்தியிருந்த பலவகைப் பட்டுக்கொடிகள் பார்த்தன்விட்ட பாணங்களால் அறுபட்டு முறிபட்டுத் தறிபட்டு மாலையாய்வீழ்ந்தது, வெகுநிற மேகங்கள் விண்டலம்விட்டு நீங்கி மண்டலத்தில் ஒரே மொத்தமாய் விழாமல் தனித்தனி வரிசையாய் விழுந்தவா றிருந்தது.

மாசற்ற தேசுற்ற வளம்பெற்ற ஜயமுற்ற தருமராஜனுக்கிள வலாகிய தனஞ்சயனவன் ஜயலக்ஷ்மியை விவாகம் புரிந்துக் கொள்வதற்குத் தனித்தனியெடுத்துத் தொடுத்த சரங்கள் தூசிப் படை சூரர்களின் வீரவில்லை வெடுக்கென்றொடித்தது, ஜனகராஜனுடைய வில்லைச் சீதாபிராட்டிக்காகச் செங்கண்மால் வளைத்தொடித்த செயல்போன் றிருந்தது.

இதன்றியும் கருமபைப் பரிந்தெடுத்துண்ணும் வாயும்பனைக்கையும் விரிந்தகாதும் பொருந்திய மெய்யுமுள்ள திடகாத்திரகும்பகரதட யானைகளின்மேல் முழங்காநின்ற முரசவாத்தியங்களை நரனுந்திய நாராசப் பகழிகளுடைத்தது, உயர்ந்த மலைமேலுற்ற பெருங் கருங்கற்களைப் பேரிடிவிழுந்து பிளந்தவா றிருந்தது.

மேலும் வெற்றிப்போரிற் புகுந்த மத்தகஜங்கள்வீரபட்டங் கட்டிய கும்பம் பிளம்புண்டு இரண்டு பக்கங்களிலும் இரத்தம் வழியத் திரிந்துகொண்டிருந்தது, சித்திரைப்புயல் அடிக்குங் காலத்தில் மெத்தவெள்ளம் புரண்டு செவந்து கறுத்தமலைமேல் கால்கொண்டு வழிந்த காக்ஷியை யொத்திருந்தது.

சுவேதவாகனன் மாடுபிடி சண்டையை வென்ற காக்ஷி, அச் சண்டைவிளைந்த காடும் குடிகொண்டு பரந்த நிலமும் வேள்விச் சாலைபோலும், வீரானெதிர்த்துப் போர்புரிந்த இடமானது ஓமகுண்டமாகவும், அவர்கள்மேற்பிரயோகம்பண்ணினபாணக்கினிகள் யாகாக்கினியாகவும், போர்மோகங்கொண்ட வீராளுடைய தேகங்கள் சமித்துக்களாகவும், அன்னோருடம்பிலிருந்து வழி

ந்த இரத்தம் நெய்யாகவும், நிணம்வசையாகவும் போர்புரிய வழைக்கும் வீரமொழிகள் வேதமந்திரங்களாகவும், யாவருடைய உயிரும் அவிர்ப்பாகமாகவும், தேர்ச்சிகரங்கள் பூரண கலசங்க ளாகவும் கொண்டு, அயமேதம் கயமேதம் புருஷமேதம் பசு மேதமென்னும் யாகத்தை ஒரேநாள் விரதத்திலுல் முடித்துத் தேவர்களுக்குப் பூரணகுதி கொடுத்ததைப்போன் றிருந்தது.

மேலும் பிரமசிருஷ்டிக் குட்பட்ட ஆத்மகோடிகளின் கண் ணுக்குள் மணிபோலுள்ள கண்ணனைப்போல் அந்த யுத்த பூமி யைச் சாரிவரும் அருச்சுனனைக்கண்ட பாரிய தேர்வீராளெல் லோரும் தங்களைநாடித் தனஞ்சயன் தேடி வருகின்றனென்று தளர்ச்சி யடைந்தார்கள்.

இவ்வாறு போர்விளைந்த யுத்தகளம், பருந்துகளிருந்து விருந்தருந்த கழுகுகள் குழுமிக் கொழுநிணங்கொள்ள, காக்கை கள் வீரர்கள் கண்ணைப்பிடுங்க ஆக்கையை ஓனாய் அடித்துத்துடி க்க, பிணந்தின்னுங் கூளிக்கணங்கள் பறக்க, ஈரலை மூளையைக் குழுநரியீர்க்கப் பிணத்தைப் பக்ஷிகள் சிறகின் நெருக்கத்திலுல் வானமும் ஓடையாகவும் கயமாகவும் காலாகவும் பெருகியோடிய உதிரங்களிலுல் கடல்விளைந்த உலகஞ் சிவந்த, பைசாசங்களும் பூதகணங்களும் பிணங்கி மறுபடியும் இணங்கி வராகியைவணங் கிக் கைகோர்த்து ஆடிப்பாடிக் களித்திருந்தன.

பாம்பாரமும் என்புமாலையும் புனைந்து சூலகபாலமும் உடுக் கை பம்பையுங் கைக்கொண்டு யாளிவாகனமேறித் திரிகின்ற காளிகூட்டமும், ஞானியிட்டமும் மணிமுடியணிந்த மயிடனைத் துணிந்த கன்னிப்படையும் குத்துவெட்டுச் சண்டையிற் றேரிய குறள் கூளி பாரிடங்களுங் கூடிக்குலாவி போர்க்கள முழுதும் பொருமித் திரிந்தன.

சண்டையிலுருண்ட தரியலர்தலைகளை அண்டையிற் கிடக் கும் யானைதலைகளைக் குவிந்துகிடந்த குதிரைத் தலைகளை மலைப் பாம்புகளில் வரிசையாய்க் கோர்த்துத் தாலியுருவு முதலிய மங் கல சூத்திரமாய்க் கழுத்திற்றரித்து, கழுத்துநிறைய உருவுகள் கோர்த்துக்கொண்டேனென்று பிரதாபம் பேசித் தன்னை மற ந்துவந்த பேய்ப்பெண்ணைநுத்தி சற்றேதவறி இரத்த ஆற்றில் விழுந்து ஆழ்ந்து சுழலிலகப்பட்டுச் செத்தேனென்று முழுகி யெழுந்து திணரிக் கூச்சலிடும்போது ஒருபூதம் ஓடிவந்து ஏற் றக்கோல்போன்ற நீண்ட கையைக்காட்ட, அக்கரத்தைப் பிடித்

துக் கரையேறுபவர்போல் எறிவந்து இன்றைக்கு ஒரு தத் தென்று சத்தோஷிக்குஞ் சந்தடிபெருக்கமும், அவ்வாறு பிழை த்த பெண்பேயானது தன்னை கரையேற்றிவிட்ட பூதத்தைப் பிடித்துக்கொண்டு எப்போது உமது கையைப் பிடித்தேனோ அப் போதே உமக்கு நான் பெண்சாதி; எனக்கு நீர் புருஷன். இனி வேறு புருஷாளை விரும்பேனென்று, பந்து ஜனங்களுக்குச் சொல்லி அவர்கள் அனுமதியில் கலியாணஞ் செய்துகொள்ளு கின்ற ஆரவாரமும், அர்ச்சுனராஜனுடைய வீரப்பிரதாபத்தைப் பாடி அவருக்கு நன்மையுண்டாகக்கடவதென்றுவாழ்த்தி விஜய காண்டீபத்தைத் தோத்திரஞ் செய்கின்ற பேரொலியும், நிண மாமிசத்தை நிரம்பத் தின்று மயங்கிவீழ்ந்து புரளுகின்ற வயிறு தாரிப் பேய்களின் வார்த்தையும், சோரிவெள்ளமானது வாரிபோ லோடவும், மடிந்த யானைகள் அவ்வாரியிற் படிந்த திமிங்கலம் போலவும், குதிரைப் பிணங்கள் திமியென்னு மீன்போலவும், வாளாயுத முதலிய மற்றையாயுதங்களெல்லாம் பலவகைமச்சங்க ளாகவும், பொருதலைக்கருதிக் குவிந்த பிறைமேடானது எண் காற்பட்சிகளிருக்கும் பெருமலையாகவும், மண்மேல் ஓடுகின்ற தேர் களும் தேர்த்தட்டுகளும் கடல்மேற் செல்லுகின்ற கப்பல் கட்டு மரம் படகுபோறி பரிசுபோல் உதிரக் கடலூடோடவும், மதயானை கள் கொம்பொடிந்து கூக்குரலிடும் ஓசையானது தீரபுருஷாள் ஒருவர்க்கொருவர் கூரிய கணையால் குத்திக்கொண் டிரையும் பேரோசையால் கேளாமல் அடங்கிப்போயிற்று.

கடையாணி கழன்று ஓடுகின்ற சக்கரங்களால் உண்டாகும் தொனியும், தலையறுந்த முண்டங்கள் ஆடும் ஆட்டங்களும் பரதநாட்டிய ஸ்திரீகளும் கண்டு வெட்க முறும்படியாய் இருந்தது.

இவ்வாறு கற்பகப்பூமாலையணிந்து பொற்பிரகாசப் பொன் னுலகிற் புகழ்பூண்ட தெவேந்திர குமாரனை பார்த்தன். தேரூர் ந்துவந்த போர்வீரர்களாகிய யாளிக்கும் சிங்கத்திற்கும் யானைக் கும் புலிக்கும் நிகராகிய வேந்தர் முதலாகிய வீரர்களைக் கூளிக் கும் ஞாளிக்கும் நரிக்கும் குழுவாகிய கழுகுக்கும் பருந்துக்கும் அவ்வூரில் வாழுங் காளிக்கும் குறைவின்றித் தன் கைவாளியால் விருந்திட்டுத் தேவர்கள் கண்டு களிக்கும்படி விஜயலக்ஷ்மியை மணந்தான். வீரப்பிரதாப தீரகாண்டீபமோக யோகவைபோக தியாக விஜயமகாராஜன் செலுத்திய வெந்தழற் கணைகள்முன்

யாவரும் பஞ்சுபோற் பறந்து அஞ்சிப் பல்லைக் காட்டிக் கெஞ்சி எஞ்சிப்போனர்கள். சிலர் சண்டையைத் துறந்தார்கள். பலர் மண்டை கிழிந்து இறந்தார்கள். சிலர் மனம்போனவாறு ஓடினர்கள். பலர் மூச்சுதிணறி வாடினர்கள். இவ்வாருன நிலையைச் சவ்வியசாசிகண்டு வெவ்விய நகையுடன் வெகுண்டு ஆபத்தினு லோடுகின்றவர்களைப் பாபத்திற்குப் பயப்படாமற் றுறத்திவிடா தேயென்று வெருட்டினன். இதுவுமன்றி திரிதராஷ்டிரகுமார னை திரியோதனன் துச்சாதனன் சித்துராஜ்மைத்தன் சௌ பாலராஜகுமாரன் குந்திதேவி முதற்பிள்ளையான சூரியதயன்முத லாகிய வெற்றிவீரர்களியாவரும் திசைமயங்கி மதியிழந்து நிலை கலங்கித் தலையிறங்கிப் போகுமாறு செந்தீக்கணைகளை முன்னும் பின்னும் முடுக்கி முரியவடித்துத் துரத்திக் கைப்பிடித்த காண் டீபத்தை நாணி தளர்த்தித் தோள்புற மாட்டிய அம்பறாத் தூணியை நீக்கி விரற்சாடு கரச்சாடு முன்கைத் தோற்கட்டு பின் கைத்தோற்கட்டு முதலிய கவசமுங் களைந்து இரதத்தின்மீது வைத்து அஸ்வசஞ்சீவி மந்திரத்தால் குதிரைகளைத் தேற்றிச் சாரதியின் சலிப்பையும் மாற்றித் தனாசிரியர்தமைப் போற்றி, இன்னமும் பகைவர் ஒன்றுகூடி வருவார்களாகில் மெத்தவும் நேர்த்தியென்று நினைத்தும் புண்பட்ட தன் சரீரவருத்தத்தை சஞ்சீவியால் தீர்த்துப் பகையாளரைப் பார்த்து நின்றான்.

அத்தருணத்தில் உத்தரகுமாரனும் தேர்விட்டிழந்து குதி ரைக் கடிவாளத்தைக் குத்துக்காலிற் கட்டிக் குதிரை நடாத்துங் கோலையும் கையில் அணியுங் கவசமாந்தோலையும் தேர்மேல் வைத்து, குதிரைகளைத் தடவி தட்டி அர்ச்சுனராஜனைக் கிட்டி மாடுபிடி சண்டை நடந்த மகத்துவத்தையும் இனிமேல் நடக்க வேண்டிய மார்க்கத்தையும் பேசிக்கொண்டிருந்தான்.

பிறகு பச்சைநிறம் படைத்த பார்த்தனுடன் கொச்சைப் போர்புரிந்து லச்சைகெட்டழிந்து அடிபட்டு ஓடியவர்களின் செயலைச் சொல்லுகின்றேன் கேளும் ஜனமேஜய மகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

இவ்விதமாக பரமனுடன் மற்போர்புரிந்து பாசுபதம்பெற்ற சவ்வியசாசி பௌவமாம் படையில் அவ்வவர்மீதில் கௌவுமம் பேவி எவ்வமாகென்று வில்நாட்டி யிழுத்துவிடுத்தான். துவ் விய பாணம் தெவ்வர்களுடைய கொவ்விய பிடரியைக் குறை தழித்தொழித்த கொடுமையைக் கௌரவ குலமகன் கண்டு செவ்

விய கண்கள் செவ்வரக்கினுஞ் சிவந்து நாப்புரண்டுலர்ந்து தீப் பொறி மலிந்து நாடாது நாடி வாடாதுவாடி கூடாத்திரத்தால் மூனைந்து தான் இந்த நரனுடன் சண்டை விளைத்து நலிந்து மெலிந்து தறிந்து முறிந்து இறந்துபோனலும் போவதேயல்லது இவனுல் என்படை கெட்டு இவ்வளவு அவமானப்பட்டுப் பின்பு அஸ்தினபுரிபோய்ச் சேரமாட்டேனென்று நெறநெறென்று பற்கடித்து மடமடவென்று விற்பிடித்து பளபளவென்று தோளடித்து நிடுநிடுவென்னைக் கர்ஜித்துத் தடதடவென்றேறித் தேரேறி கடகடவென் றுருளைகளோடப் புரவி செலுத்திப் படபடவென்று அரவக்கொடிநீடஆணவப்பேயாட அஞ்ஞானமேலாட அருவினையூடாட மராட கர்ஞடர் முதலிய மன்னர் சூழப் படாடம்பங் சாட்டிவந்தான். இப்படி வராநின்ற திரியோதனமகாராஜனைக் கர்னன் பார்த்து கடுங்கோபங்கொண்டார்த்துத் தம்பி! நானுயிருடனிருக்கும்போது நீ சண்டைக்குப் போகவேண்டுமா? நில்லு நில்லென்று தடுத்துத் தன்னுடைய தேரை முன்னேவிடுத்து மன்னவன் இரதத்தைப் பின்னுற வமைத்தான்.

அன்னகாலையில் பொன்னணிபூண்ட திரியோதனன் தம்பிமார்களும் பூபாலர் முதலியபேர்களும் மின்னெனவெழுந்து கர்னனுடன் கலந்து முனைந்தார்கள். வீஷ்டுமாசாரியர் துரோணாசாரியர் கிருபாச்சாரியர் அஸ்வத்தாமா முதலிய நால்வரும் திரியோதனனுடைய மனோபாவமறிந்து தவறுபேசாமற் றவிர்ந்து போனவருட னேர்ந்து புகுந்தார்கள். மகமேருக் கொப்பாகிய அத்தினபுரியென்னும் வெற்றியானை மேற்கொண்டு அர்ச்சுனனுடன் அமராடி அவனைப் பொடியாக்குவேன். என் சொல் தப்பாது. எப்போதும், எங்கள் பெருமைக் கொப்பேதென்றும் விண்டலமுதலாகிய மேகங்களும் எண்டிசைமுதலிய நாகங்களும் மண்டல முதலிய அண்டங்களும் விண்டுதீர்ந்துபோம் என்னும்படி இற்றைப்போரில் வெற்றிபெறுவானென்று கொற்றவர் பலரும் மற்றவரெவருங் குறித்துக்கொண் டாடும்படி விகர்னனென்னுங் காளை செண்டெனவெழுந்து திரண்ட சேனையுடன் வந்து கலந்தான்.

இதல்லாமலும் பார்த்தன் பாணத்திற்குப் பயந்து போர்க்களவிட்டுப் பிரிந்து பெண்டு பிள்ளைகள்மேற் பரிந்து நாலுபக்கங்களிலுமிருந்து நாடியோடித் திரிந்து வயிறெரிந்துபோன

மகரதர் முதலிய பேர்களுஞ்சேர்ந்து எமதர்மராஜன்மேல் எதிர்க் நின்ற உயிர்வதைக் கூட்டம்போற் றிரும்பினர்கள். கோபமீறிய குரோதமேறிய நான்கு படைகளும் அதிரதர் மகரதர் சமரதர் அர்த்தரதர் முதலிய வீராதிவீரர்களும் பொருந்தி பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் இவ்வைம்பெரும் பூதமும் கலங்கும்படியாய் ஆதிசேடனுடைய பணமகுடங் குலுங்கும்படியாய்த் துணிந்து, திடதைரிய தீரத்துடன் சண்டையை வென்று இலைப்பாறிக் கொண்டு தனித்து சாரதியுடன் பேசி நின்ற தனஞ்செயச் சிங் கத்தைத் தட்டியெழுப்பி வளைத்தார்கள்.

சற்றுநேரத்திற்கு முன்னே தனஞ்சயனுற் பட்டபாடும் கெட் டகேடும் அஸ்திரந்துளைத்த நோயும் பச்சையுதிரம் ஓடிவரும் புண்வாயும் காயுமுன்னமே ஆயும் அறிவினர் ஆயாசம்பாராமல் போர்புரியப் புகுந்து அஸ்திர சஸ்திர ஆயுதங்களை விஸ்தார மாக விடுத்து அடுத்தார்கள்.

அவ்வவர் தொடுக்கும் அம்புக்தும்புகளைக் கண்டு இரதத் தின்மேலேறி எதிர்வந்த மன்னர்கள் பிதுர்கலங்கிப் போகும்படி விஜயகாண்டீபம் வளைத்து நாணெலி விளைத்து முளைத்த முழு மதிபோல் மதர்த்து நின்றான். நாயகனை நரன் தேரேறுமுன் னமே வாரேறுதனச் சுதர்க்கணை மைந்தனை உத்தரகுமார னென்னுஞ் சாரதி களையாறிய குதிரைகளைத் தேரிற்பூட்டி கல கலவென்று ஒலிக்குஞ் சதங்கைகள் சக்கரத்தொனியுடன் கலந்து முழங்க முடுக்கினான்.

அர்ச்சுனராஜன் தேர் அசைந்தாடியோடும்பொழுது மணி முடிதரித்த மன்னவர் பலரும் காரிடி நீரடி நெருப்பிடி பேரிடி யென்ன நெடுநாணேசை காட்டி அளவுபடாத அம்புகளைச் சொரிந்தார்கள். அதுவுமன்றி அக்கினிபற்றியெரிகின்ற கொழு மழு தண்டாயுதம் சூலம் அங்குசம் பாசம் உலக்கை சக்ராயுதம் தோமரம் ஈட்டி வாங்கு முதலிய ஆயுதங்களை முக்கண்மூர்த்திக் கொப்பான பற்குனன்மேலும் சாரதிமீதும் தேரிலும் குதிரைக ளுடம்பிலும் படும்படியாய் முட்கரமாய் வீசி முடுக்கினர்கள். இதன்றியும் யானைமேலிருந்தவர்கள் தேர்மேலமர்ந்தவர்கள் வேகமான குதிரைமேற்கொண்டவர்கள் பூமிமேல் நின்றவர்கள் தங்கள் தங்களுக் கிஷ்டமானபடி முனிந்து தனிப்படைக்கொ ண்டு ஜாடினர்கள். அப்போது பூண்டிலங்குந் தேரிலிருந்து பாண்டு புத்திரனகிய பார்த்தன் எமந்தருது காலத்தில் மூடுபனி

யால் மறைக்கப்பட்ட சூரியன்போலிருந்தான். அவ்வாறு சற்று நேரம் ஒளி மழுங்கி உருத்தெரியாம லிருந்து, உடனே யோசித்து விரைந்து தன்னையெதிர்த்து வந்த தரியலர்களையுஞ் சட்டைபண்ணுதவனுய், பட்டங்கட்டிய முடித்தலையை யாட்டிச் சினந்து நெறநெறென்று பற்கடித்து உடலுயிர் பதைத்து நம் முடன் அடல் விளைத்து வந்த இத்தனை மன்னரும் படவதைத்துவிட வேண்டுமென்று பதறி நினைத்து மறுபடியும் பொறுத்து விஜயகாண்டீபத்தை யெடுத்து நிறுத்தி வளைத்து நாணேற்றிப் பூர்வகாலத்தில் தனக்கு தேவேந்திரன் கொடுத்திருந்த இந்திராஸ்திரத்தை ஏந்தி அபிமந்திரித்து வணங்கி இந்திரதிக்கிலுந்தி, யமதர்மராஜனிடம்பெற்ற ஏமாஸ்திரத்தை யெடுத்துப் பூசித்து தென்றிசையிலமைத்து, வருணாஸ்திரத்தை வணங்கி வழங்கி மேற்குதிக்கிலிருத்திக் குபேராஸ்திரத்தைக் கொண்டு கும்பிட்டுப்பணிந்து வடக்குதிக்கில் விடுத்து,இந்திரன் முதலிய ஈசான்யதேவர்களையுந் துதித்து நான்குதிக்கிலும் பாங்குடனிறுத்திக் காண்டீபத்தை நாணிதளர்த்தி அம்பரூத்தூணியுடன் இரதத்தின்மேல் வைத்துவிட்டுப் பிறகு நடக்கும்விந்தையைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இவ்விதமாகத் தருக்குடன் செருக்கிநின்ற தனஞ்சயனையும் அவனேவிய சாயகங்களையும் அவைகள்தங்களைத்தடைப்படுத்துகின்ற தந்திரங்களையும் தனுர்வேதமந்திர சுதந்தரங்களையும் தெரிந்துகொள்ளமாட்டாதவர்களாய், பண்டாட்டமாவதே கொண்டாட்ட மென்னக்குறித்து சப்தமேகமெழுந்ததுபோற் கவிந்து மின்னலிடியும் பின்னலிட்டவாறு முழங்கி விற்பிடித்துக்கல்வருஷம் பொழியுங் காட்சிபோல் அஸ்திரங்களைச் சொரிந்துவேணமட்டும் பரிந்து சலிப்பில்லாமற் பாடுபட்டார்கள்.

இவ்வாறு தம்மாற் கூடியவரையிலும் தாட்சியில்லாமல் முடுக்கிப் பிரயோகித்த சரங்களையெல்லாம் தப்பிப்போகவிடாமல் மடக்கி அருச்சுனன்மேற் போகவொட்டாம லடக்கி அவற்றின் வேகத்தையும் சுருக்கி வாயை ஆவெனத் திறந்து விழுங்கி முறுக்கி வாரியடித்து நொறுக்கி தாறுமாறு வேறு கூறு வாறு செய்யுந்தன்மையை, மந்தரமலைபோலுயர்ந்ததோளினையுடைய வீஷ்டுமாசாரியர் துரோணாசாரியர் கிருபாசாரியர் அஸ்வத்தாமா முதலிய சாந்தரும் திரியோதனராஜன் முதலாகிய வேந்தரும் மகரதர் முதலிய மாந்தரும் பார்த்து தலைகவிழ்

ந்து குனிந்து மதிமயங்கி முனிந்து மனந்தியங்கி நினைத்து, ஐயோ இந்த அருச்சுனனுல் முன்பே அடிபட்டு இடைந்தோமே அதோடு போய்விடாமல் திரும்பியெதிர்த்து அவன் கையிற் சிக்கிக்கொண்டோமே; ஓகோ! வெகுநாளைக்கு நிலைநிற்கும்படி யான அபகீர்த்தியடைந்தோமே; இதுவரையிலும் நாம் பெற் றிருந்த சுபகீர்த்தியை யிழந்தோமே; வீணுக வேசாரிநொந் தோமே; பூணரம் பெற்ற புரந்தரன் மைந்தன் செய்வனவற் றைச்செய்து போட்டு மெய்வருத்தமில்லாமல் விசாலமுற்றிருக் கின்றனே; நாம் இதற்கென்ன செய்வோமென்று வெட்கப் பட்டு வெந்து வெதும்பி யொடுங்கிப்போனர்கள்.

இவன் இப்படிநிற்க, வானத்தில் நின்று வேடிக்கை பார்த் திருந்த வானவர் மாதவர் மகிழ்ச்சிமேற்கொண்ட மாதவி கொழு நனே மகிழ்ந்து மனதாறப்புகழ்ந்து மலர்மழைபொழிந்து வாழ் த்தினர்கள். சரஸ்வதிநாயகனனை சதுர்முகப் பிரமனனவன் சாக்ஷாத்காரமான சங்காழிமுகுந்தனுடைய தனியருளென்றுசந் தோஷங் கொண்டாடினன்.

அமராபதிக்கதிபனுகிய தேவேந்திரன் காலகேயரை ஜயி த்து நமதாயுளளித்த விஜயன் நவநீத சோரநாதன் மைத்துன னென்று நாடிப் புகழ்ந்தாடினன்.

அளகாபுரிக் கிறைவனனை குபேரன் சந்திரசேகர சடாதர னருளால் இந்திராதிபரெவர்க்கு முந்தியமுதற்காரணமாகி வந் தவதரித்த மரகத நிறத்தன் அருச்சுனனுமனென் றனந்தங் கொண்டான்.

பாண்டவும் மற்றுமுள்ள பார்த்திபரும் காண்டீபன் வெரு ண்டு தூண்டிய வேகச் சுடுசரம்பொடிக்கச் செத்தழிந்தொழிந்த சேனையும் யானையும் இத்தனைகோடியென் றியம்பப்படாமையால் புத்திரப்பேறு பெற்றனமென்று மெத்தவும் பேசிமேன்மை யடைந்தனர்.

அமரர் சித்தர் அசுரர் தைத்தியர் கருடர் கின்னரர் நிருதர் கிம்புருடர் காந்தருவர் இயக்கர் விஞ்சையர் பூதர் பைசாசர் அந் தரர் முனிவர் உருவர் ஆகாயவாசிகள் போகபூமியர் ஏகாதச ருத்திரர் துவாதசாதித்தர் அஷ்டவசுக்கள் முதலினோர்கள் அச் சவ்வியசாசியின் சாதுரியத்தைக் கண்டு களித்து வெப்பத்தைத் தங்களாலுஞ் சகிக்கமாட்டாமல் ஓடி ஒங்கிய மலைக்கண் சென் றுவப்புற் றிருந்தனர்.



உத்தரகுமாரன் தங்கைக்காக துரியோதனுதியரது வஸ்திரங்களை
எடுத்துக்கொண்டு வருதல்

இவ்வாறெல்லோரும் கொண்டாடிக்கொண்டிருக்கின்ற வேளையில் வீபற்சு என்னும் பெயர்பெற்ற விஜயன் மறுபடியும் வில்லையெடுத்து நாணிதொடுத்து தான் நினைத்தகாரியம் சித்தியாகும்பொருட்டு மோகனாஸ்திரம் பிடித்து பூஜாவிதிகள் முடித்து பிரணவமந்திரம் படித்து பிரதாபராமன்போல் விடுத்துப் பெருங்குப்பில் தும்புகளெழும்பப் பெதறிவாடி ஓடி அவர்கள் படும்பாட்டை யோகபுருஷன்போல் நாடிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இங்ஙனம் றிவ்வென்றெழுந்த மோகனாஸ்திரமானது தியாகம் வாங்கச்சென்ற தெரிவைபோற் சென்று பிராணத்தியாகம் பண்ணுவதற்குப் பின்வாங்காமல் முன்னிட்டு மற்போற் விளக்கும் பற்பல வீரர்களையும் விற்பன விவேகிகளையும் சொர்ப்பனங் காண்பவர்போல் சோர்வுறச்செய்து மயக்கியபோது, சண்டை செய்யவந்த திறமும் தாங்கள் புரிந்த வீரமறமும் தேகநிறமும் துறந்து மறந்து மடிந்து மறந்து மடிந்தவர் தம்மைப்போற் பூமிமேற் படிந்தார்கள்.

இதன்றியும் தேர்மேலிருந்தவர்கள் தேரின்மேலும் யானைமேல் வந்தவர்கள் யானையின்மேலும் குதிரைவீரர்கள் குதிரைகள் மேலும் இருந்தவ ரிருந்தபடி பெருந்திகிலடைந்து இந்த லோகம் அந்தலோகம் எந்தலோகமோவென்று நிலைதவறிப் பொறிசிதறிப் புலன்பதறிச் சாய்ந்தார்கள்.

அவர்கள் படும்பாட்டைப் பார்த்த பார்த்தனனவன் மனதுக்கிசைந்த சாரதியான உத்தரகுமாரனது சித்திரமுகத்தை நோக்கிப் பரிந்து நகைத்தான். காரணமென்னவெனில், இரும்புக்கு விழுகின்ற சம்மட்டியடியானது நெருப்புக்கும் விழுவதுபோல் திரியோதனாதியர் படப்போகின்ற அவமானம் ஆசாரியர்களாகிய வீஷ்டுமர் முதலினோரும் படப்போகின்றார்களே யென்பதுதான்.

அவ்வாறு திருப்தியில்லாமல் நகைத்த தனஞ்சயனனவன் விராடகுமாரனைப் பார்த்து, அப்பா உத்தரகுமாரனே! உன்சகோதரியான உத்தரை சொல்லிய சங்கதி ஞாபகத்திலிருக்கின்றதா? மறந்துவிட்டாயே. ஐயங்கொண்டதனால் மறந்துவிட்டாயோவென்று கேட்டான். அதைக் கேட்ட உத்தரகுமாரன் கண்களிருண்டு மனமருண்டு சிந்தைகலங்கி தீரம் விலங்கி திடுக்கிட்டலமலங்கித் தியங்கி ஒன்றுந்தோன்றாமல் மயங்கி உறக்க

மூந் துன்பமும் ஒருவாறடைந்து இப்பேர்ப்பட்ட மகாபுருஷனுடைய அருமை பெருமை தெரியாமல் நமது தங்கை என்ன சொன்னளோ? ஏது காரணமோவென்று பெருமூச்செறிந்து பற்குனனைப்பணிந்து பயம்விட்டுத் துணிந்து எனக்கிஷ்டதெய்வமான ஏந்தலே! அறியாதவளான சிறியாள் குறியாமற் பேசிய கொடுமொழியை என்னைப்பற்றி மன்னிக்கவேண்டும்மகாராஜனே என்று வாய்பொத்திக் கைகட்டி மனம்தடுங்கிச் சொன்னன்.

அவனது அடக்க ஒடுக்க வணக்க முதலியதைக் குறிப்பினுணர்ந்துகொண்ட நரனைவன் உத்தரகுமாரனின் முதுகைத் தட்டி மற்றொன்றுமல்ல, நீ வாய்வறளாதே, மனந் தளராதே, மதிபுரளாதே, வல்லவனே! இப்போது நாம்பொதுளிய மோகக் கணையால் அயர்ந்துவிழுந்த யாவரும் இன்னம் ஒரு முகூர்த்த நேரத்திற்குள்ளாக மயக்கம் நீங்கி யெழுந்திருப்பார்கள். அதற்கு முன்னதாய் நீ அவர்களிடத்திற்குப்போய் அவர்கள் கிரீடத்தில் சாம்பிரதாயமாய்க்கட்டிக்கொண்டிருக்கின்ற தூய்தரவஸ்திரங்களையும் விருதிகருத்தித்தொடுத்தஇரதச்சீலைகளையும் பக்குவமர்ய்ப் பறித்து வருவையாகில் உன் தங்கை கேட்டுக்கொண்டவண்ணம் பொம்மைகட்கணிந்து விளையாடக் கொடுக்கலாமென்று புகன்ற அர்ச்சுனன் வார்த்தையை உத்தரன் கேட்டுப் பத்தரைமாற்றுப் பசும்பொன்போல் சித்தமுவந்து தேர்ந்து ஜயமென்றெழுந்து சிக்கிரஞ் செல்கின்ற உத்தரகுமாரனை பராக்ரமக் கொடிபடைத்த பார்த்தனழைத்து, ஓ விராடகுமரனே! இராஜாதிராஜனை திரியோதனன் அணிந்திருக்கும் வஸ்திரம் கறுத்தமணிகள் பொறுத்த நிறத்தையுடையது, அஸ்வத்தாமாதுச்சாதனன் முதலியோர் தரித்திருக்கும் வஸ்திரம் நீலமணிகளழுத்திய கோலமுடையது. கொடையாளனாகிய கர்ணராஜனது சிரோவஸ்திரமானது நான்குபுறமும் நவமணி பதித்து மரகதநிறத்தை மாற்றியிருப்பது. மனுவேதமறிந்த தனுர்வேதியரிருவருந் தரித்த கலைகள்சுற்றிலும் முத்துவைத்துத்தைத்த குற்றமற்ற வெண்பட்டாலாயின. இன்னமுள்ள மன்னவர் துணிகள் பன்னிறவன்னமாயிருக்கும் அன்னவைகளில் உன் கண்ணுக்கிசைந்தன வெல்லாங் கட்டிக்கொண்டுவந்துவிடு. அப்படி வரும்போது, எங்கள் ஐயாவாகிய விஷ்டுமாசாரியரிடத்திற்குப் போகாதே. அவரது தலைவேஷ்டியிடத்திற்குப் போகாதே. அவரது தலைவேஷ்டியானது மிகச்சிறந்திருக்கும் அதன்மேலாசை

வைக்காதே. அவரிந்த மோகாஸ்திர மயக்கத்தில் மூழ்கமாட்டார். நீயொருவேளை அவரைக் கிட்டிப்போவையாகில் ஒரே வெட்டாய் வெட்டியெறிவார். ஆகையாலவரை எட்டிப்பாராதே. மற்றவர்களிடத்தில் தாராளமாகச்சென்று அவர்களுடைய தலைத் துணிகளைக் கைக்கொண்டு சீக்கிரம் வந்துவிடென்று பின்னுஞ் சொல்லுகின்றான்.

ஓ உத்தரனே! நீ கால்தடையாகச் செல்லாதே. அவர்கள் படும்பாட்டைக் கண்டு ஒன்றுஞ்சொல்லாதே. கண்மூடிக் கலங்கி கசங்கி கிடப்பவரைக் கொல்லாதே. அவர்களுன்னைக்கண்டுவிட்டால் ஐயோ அதுபொல்லாதே. நீயவ்விடங்களில் தாமிசப்பட்டு நில்லாதே. நமதுதேரைச் செலுத்திக்கொண்டுபோய்ச் சீக்கிரத்தில் வரக்கடவாயென்று காண்டீபன்சொல்ல, அவ்வாறுசெய்வேனென்று இரதமூர்ந்து சென்று அவரவர்கள் காடுமாடு தலைமாடாக வீழ்ந்து உறங்கியிருக்கின்ற கலக்கத்தைக்கண்டு அவாளவாளுடைய தலைத்துணிகளை கவர்ந்துகொள்ளும்படிக்கு பாய்ந்து பாய்ந்து பறிக்கும்போது, மாய்ந்தவர் தம்மைப்போற் சாய்ந்து கிடக்கிற வேந்தர்களெல்லாம் மூடியகண் திறக்காமலிருந்தார்கள். சிலர் விழித்த பார்வையுடன் விறைத்தாற்போலிருந்தார்கள். ஆவெனத்திறந்த வாயர்கள் சிலபேர். கூவெனக்குறைந்தபெயர்கள் சிலபேர். ஊவென வோசையிட்டுளறினோர் பலபேர். நாக்கைக்குழப்பி நலிந்தோர் பலபேர். வாக்குக்குளறிவலிப்போர் சிலபேர். நழுவாமற்பிடித்த எழுவாயுதத்துடன் கால்தவறிவிழுவார் பலபேர். எழுவார் பலபேர். மண்ணைக் கவ்வுவார் சிலபேர். இதன்றியும் கைகாலசைவது குறியாமலும் சார்ந்த மெய்யில் உயிர் பிரியாமலும் வாயில் ஈபுகுவது தெரியாமலும் நோயில் தீப்படுவது தெரியாமலும் பல்லைக்காட்டி பரதவித்து வில்லைப்போட்டு பற்பலவிதமாய் தலைவிரி கோலமாய் விழுந்திருந்தார்கள்.

இப்படி யிருந்தவர்களைப் பார்த்த உத்தரகுமாரன் ஐயமடைந்து பைய நடந்து என்செய்வோமென்று அருச்சுனன் சொன்ன சைகையை மறந்து, அவனது ஆதரவையும் போதரவையும் மறுபடி நினைந்து, கையுங்காலும் மெய்யும் வாயும் கிடுகிடுவென்று குலுங்கி நடுங்கிப் படபடவென்று அலமலங்கி ஓடுங்கி பேய்போற் பதறி முடங்கி பேய்மனம் பதறி யடங்கி பின்னும் முன்னும் போகத்தொடங்கி வீஷ்டுமாசாரியரிருந்த நிலையைப்போய்ப் பார்த்தான். அந்தமெய்விரத சீலராகிய வீஷ்டும

ரானவர் கண்ணையுருட்டிக் காட்டி விழித்து வீரப்பார்வைநாட்டி-யிருந்தார். அவரைக் கண்டமாத்திரத்தில் உடல் வேர்த்து பயங் கரத்துடனுர்த்து நான்கு புறமும் பார்த்து சித்திரச்சிலை விஜய னைச் சிந்தித்துத் திடதீரத்துடன் கனைத்து வந்த காரியத்தை நினைத்து வஸ்திரம் பறிக்கத் தனித்து கிரீடி யுரைத்த உத்தர விற்கு துஸ்தரமாகிய துஷ்டத்தனஞ் செய்யப்படாதென்று மதி த்து வெற்றிவீரர்களின் பட்டுத் துணிகளை விட்டுவிடாமற்றூட் டுப்பறித்து பெருமூட்டை கட்டித் தேர்மேலேற்றிக் கார்போ லிறைந்து வாராடுங் குதிரைத் தேரோட வந்தான்.

இந்தப்படி அச்சமில்லாமற்சென்று மச்சராஜன் மைந்தன் கொண்டுவந்த துணிமூட்டையைப் பச்சைமேனிப் பற்குவன் கண்டு கொண்டாடி மகிழ்ந்து புகழ்ச்சியாய் பார்த்திருக்கும் போது அருச்சுனன் கணையால் அடிபட்டு நொந்து மேனி முழு தும் வேஷ்டையால் மெலிந்து மோகக்கணையால் முனைகெட்ட ழிந்து கைலில்லும் பிளப்புண்டு வெறுங் கையராய்த் தளர்ந்து முடிசாய்ந்துவிட்ட கெடிவீர வர்க்கமும் படியாளு மன்னரும் பார்த்திபன் படைகளும் கொஞ்சங் கொஞ்சமாய்க் கலங்கிப் பிரி ந்து நஞ்சொழிந்த நாகம்போல் தெளிந்து கிரீடியின்மோகனஸ் திரத்தினுல் தலைக்கேறிய மயக்கந் தெளிந்து தத்தித் தடுமாறிச் செறிந்து மெல்லென வெழுந்து பித்தர்போல்விழுந்து செத்த வர்போற் நிடந்து எக்காலும் நீங்காத் துக்கமுந் துயரமும்வெட் கமும் நாணமும் விசனமும்மேலிட ஏதேது இனி தலை யெடுக்கப் போகிறதில்லையென்று சொல்லும்படிக்கிருந்தார்கள்.

இவ்வாறு விசனத்தினுல் திப்பிரமைகொண் டிருந்தவர்கள் சுப்பிரதீபம்போன்ற அருச்சுனராஜனை யெண்ணி மதித்து அற் புதமடைந்து அவனுக்கெதிர் வரவொட்டாமல், சிவனெதிர் செல்ல நாணும் திரிபுராதிகளைப்போல் திறனற்றவர்களாய்த் திகி லடைந்த மனத்தினராய் அன்னேர் நெஞ்சம் நாவும் வரண்டு கருணைக்கடலாகிய கங்காபுத்திரரை நோக்கி ஓ எங்கோனே! இதற்கென்ன செய்வோமென்று வங்கிய காலையில், அவர் எப் புவனத்தும் ஒப்பில்லாத மற்புய வல்லவனை சுயோதனனுக் கெதிர்சென்று நின்று ஓ திரியோதனனே! யானியம்புவதைக் கேளென்று பேசத்தொடங்கினர். திரியோதனு! விஜயனைப் பகை த்துப் பதறிப்போ யெதிர்த்து யுத்தம் பண்ணுவதற்குத் தேவர் களாலும் தெய்வத்தன்மை பெற்ற மூவர்களாலும் ஆகாது. மற்

றவர்கட்கும் வெற்றிபெறும்விதக் காக்ஷியும் யுத்தஞ்செய்யுந் திடசூக்ஷியும் வராது. வீண்முயற்சியே. ஆகையால், இனிமேல் யுத்தகளம் நாடி போர்புரிந்து வெற்றிபெறுவோமென்று என்றைக்கும் எண்ணவேண்டாம். ஒருவேளை கிரகசாரத்தால் நீங்கள் சண்டைபோடக் கருதுவீர்களாகில் பிராணனை யிழந்தொழிவது திண்ணம். காரணமென்னெனில், அவனுந்திய மோகனாஸ்திரத்தால் நாமெல்லோரும் உயிரிழந்தவாறுபோ லயர்ந்து தலைசாய்த்துகிடந்த சமயத்தில் ஏதோ ஒரு நினைவுகொண்டு தன் சாரதியையனுப்பி அவர் தலைகளை விறைவிற் கொண்டுவா வென்றுவிட்டான். அந்தச்சொல்லுக் கிரண்டில்லாமல் இதுவரையில் நமது பிராணன் போயிருக்கும். அதற்குசாக்ஷியாதெனில், சற்று நேரத்திற்குமுன்னே செத்தவர்போல் ஒடுங்கிக்கிடந்த நம்மைச் சுற்றிப்பார்த்து வரும்படி உத்தரகுமாரனை யனுப்பித் தனக்கு வேண்டியவற்றைச் சுற்றிக்கொண்டுபோனன். அதற்குத் திருஷ்டாந்தம் உங்கள் தலைக்கலை தப்பியிருப்பதைத் தடவிப்பாருங்களென்றார்.

அப்போது தங்கள் தங்கள் தலையைத் தடவிப் பார்த்ததுமல்லாமல் ஒருவர் தலையை யொருவர் பார்த்து உன்தலைத் துணியெங்கே? என் தலைத்துணி யெங்கேயென்று பெருங்கூச்சலிட்டு, ஐயையோ! தலைத்துணியைக் கொண்டுபோன சாதுரியனுக்கு நமது தலையைத் தரித்துக்கொண்டுபோவது அருமையா? ஓகோகோ! சுலுவில் முடித்துக்கொள்ளலாமே. அந்தமட்டும் நம்மைச் சும்மாவிட்டுப்போனது நமது பெண்சாதிமார்களின் மாங்கல்ய பலமேயென்று மகிழ்ந்து வீஷ்டுமாசாரியரைப்புகழ்ந்து தேவரீர் சொன்ன வார்த்தைக்குத் திருகில்லை யென்றார்கள். அப்போது வீஷ்டுமாசாரியர் இப்படியே யென்சொல்வழி நிற்பீர்களாகில், நாமெல்லோருஞ் சௌக்கியம் பெறலாம். அதெப்படியென்னில், கடல்நிறம்பெற்ற காண்டீபனுனவன் உயிர்ப்பிச்சை கொடுத்தானென்று உரக்கக்கூவி அவனுக்கு மங்களகரமுண்டாகும்படி வாழ்த்தி நம்முடைய படைமுழக்கத்தைத் தாழ்த்தி அஸ்தினபுரத்தை நோக்கிப்போவதே நேர்த்தியென்று சொன்னர்.

இவ்வாறு மாதவத்தி லுயர்ந்த வரதன் கூற, மன்னன்முதலிய தம்பியர் பலரும் கர்ணன்முதலிய சகுனியும்மன்னரும்சத்தியமென்று திரும்பிப் பாகீரதி புத்திரன் உரைத்த புத்தியை விரும்பிப்போனர்கள். அத்தருணத்தில் அரவக்கொடிக் கதிபனை

திரியோதரனுடைய சகோதரர்களில் விகர்னராஜனென்பவன் அஸ்தினபுரியென்னும் பட்டத்து யானைமேலேறித் தன்தமை யனை முன்னடத்தி அவனை மறைத்துக்கொண்டுதான் பின் சென் றான். ரதகஜதுரகபதாதியர் முதலிய மன்ன மண்டலீகர் யாவ ரும் பெருங்காற்றிற் பறக்கின்ற இலவம்பஞ்சுபோல் திசாதிசை களிலும் பறந்து பறந்து கரத்தைச்சிரத்திற் குவித்துச்செறிந்து திரியோதனனுடன் படைகளுமுறிந்து மெய்விரதன் தம்பி யான விஜயனைப் புகழ்ந்து உயிர்ப்பிச்சை யளித்தான். உத்தம னென்று மகிழ்ந்து ஊர்முகம்நாடி யோடினர்கள். அர்ச்சுனன், தான் தொடுத்தபாணங்களினல் அழிந்தவரொழியஒடியொளித்த சேனைசனியங்களும் திரியோதனமகாராஜனுந் திரும்பிப்போவ தைப்பார்த்து அடிவயிறெரிய ஆர்ப்பரித்து வேர்த்து, ஓகௌரவ குல முதல்வனே! ஓ கீர்த்திபடைத்த மூர்த்தண்ணியனே!ஓ கெடி ஸ்தலாதிபனே! ஓ வணங்காமுடி மன்னனே! ஓ அரவக்கொடி யோனே! ஓ நந்தியாவட்டமாலைதரித்த [illegible]னே! ஓ திரி யோதனராஜனே! என்று பற்பல முறையாய்க் கூவிப்பழைத்துத் தேவர்கள் முதலினோர் திடுக்கிடும்படிப் பேரிடிபோலினைத்துசிற் சில வார்த்தைகள் பேசத்தொடங்கினன்.

அவனியையாளும் நேயனே! அபத்தம் பேசும்வாயனே! மாயச்சூதாடக்கற்ற வஞ்சகச் சகுனிமாமனிருக்க மகாபதிவிரதை கூவவஸ்திரமுரியக்கற்ற தூர்ச்சாதனத்தம்பியிருக்கவாயாடக்கற்ற தேர்ப்பாகன்வளர்ப்புப்பிள்ளையானகாணனிருக்க உனக்குப்போது மான புத்தியிருக்க சத்துருக்களை வெல்லுஞ் சமர்த்திருக்கச்சத்தி யந்தவறி வாயாடிப் படிக்குஞ்சாதுரியமிருக்க, இவ்வளவுபலமும் அபலமாம்படி என் ஓடுகிறாய்? பூர்வம்அரசர்கள்கூடிய அஸ்தினு புரத்து ராஜசபையில், இரத்தினமுடி பொறுத்த உன் தலையாட உன் காதிலணிந்த குழையாட உன் வாயிலடங்கிய நாவாட கட் டுரைபேசி நீ வாதாட சொக்கட்டானுட்டத்தில்எங்களைஜயித்துக் காட்டிலோட்டிவிடக்கற்ற நீ இப்போது சண்டை நேர்ந்த இவ் விடத்தில் விற்றிறங்காட்டி வெற்றிபெறமாட்டாமல் மிகவும்தலை கவிழ்ந்து தலைதுணியிழந்து உயிருடன் போவது பொல்லாது இதைப்பார்க்கிலும் சாவது மேன்மை. ஓ காவலனே, யுத்தத்திற் செத்துப்போவது மெத்தவும் புகழ்ச்சியல்லவோ?மானங்கெட்ட பிறகுபிராணனிருக்கவேண்டுமோ? ஆ மன்னனே! அரவக்கொடி யும் அணிமணிமுடியும் வெள்ளைக்குடையும் வேண்டியபடையும்

அரசசாத்தியமும் முரசவாத்தியமும் சங்கத்தொனியும் எங்குமு ழக்கி தெருங்க இந்த விராடபுரத்திற்குவந்து, சுத்தவீரகர்த்தனை ப்போல் பசுமந்தைகளை மடக்கினையே. நீ யோட்டிய மாட்டு மந் தையை எதிரிகளிடத்தில் விட்டுவிட்டு, நீகூட்டிவந்த சேனைகளி லும் பாதிமடியக்கொடுத்து உயிர்பெற்றெழுந்த பிணம்போல ஊரைநோக்கி போகின்றனையே. ஐயோ! அப்பா!உன்னைக்கலந்த மங்கைமார்கள் யென்னசெய்தியென்று எதிர் நின்று கேட்டால், அந்த உரியர்களுக்கு என்னசொல்லுவாய்? பெரியதனம்படைத்த பேயனே! அப்பேர்க்கொத்த பெண்களுக்கெதிரில் நாணமல் தலை கோணமல் மானம்விட்டு நடப்பாயோ? அடா பாவி! இப்போது நீயாளும் பூமியையும் உன்னுயிரையும் தீங்கில்லாமல் வாங்கு வதற்கு என்தமையன் வீமசேனமகாராஜன்காத்திருக்கின்றானென் றெண்ணி இன்று உன்னைக் கொன்றுவிடாமல் வெற்றிமாத்திரங் கொண்டேன். இல்லாவிட்டால் நீயும் உன்னைச்சார்ந்த படை மன்னரும் எனக்குலக்ஷயமென்றும் அலக்ஷயமென்றும் உனக்கு விலக்ஷணமாகத் தெரியுமே. குலக்ஷயம் பண்ணப் பிறந்தகோமா னே! என்று வெகுண்டு புகன்றான். திரியோதனன் அநச்சுனன் சொன்ன மொழியைக்கேட்டுங் கேளாத செவிடனைப்போல் இரு தோளும்வாடி பூரிப்படங்கி துன்பயிருளால் மூடப்பட்டு ஆமை போலடங்கி ஊமைபோற் போனான்.

அச்சமயத்தில் பச்சைநிறம்பெற்ற பற்குனனவன் வச்சிர கண்ட வாளியொன்றெவி விகர்ணனேறிச்சென்ற வீரபட்ட யானையைக்கொன்று வீழ்த்தித் திரியோதனன் வெட்ட வெளியா ய்த் தெரியமடக்கிப் பாரியவில்லிற் கூரியமூனைப்பகழி படக்கி அர வக்கொடிதரித்த திரியோதனனுடைய வணங்காமுடியிற் பொறு த்த கிரீடத்தையுடைத்து முடுக்கி மொட்டந்தலையுட னிருந்த துட்டனைப்பார்த்துப் பொட்டெனநகைத்தான். அப்போதுதாம ரைக் கமலம்போ லலர்ந்த திரியோதனனுடைய முகங்குவிந்து பொரிந்து செறிந்த கண்களக்கமுள்ளவனுய் ஓட்டத்தின்மேல் நாட்டம்வைத்துப் போனான்.

இவ்வாறு பொல்லாங்குக் கிருப்பிடமான வஞ்சநெஞ்சனைச் சேர்ந்த பூபாலர்களும் கோபாலர்களும் யுத்தமூனைகெட்டுப் புற முதுகிட்டுப் போராசைவிட்டுப் பேராசை கெட்டுப்போகுங் காலை யில், கற்பகக்காவைப்போற் கருணையும் பிராணதாரை வார்க்கும் ஈகையும் பிரக்யாதி பெற்ற வாகையுமுடைத்தாய தேர்மீதிருந்த

செஞ்சிலைவிஜயன் மச்சகுலாதிபன் முகத்தைப்பார்த்து சித்தசனுக்கொப்பான உத்தரகுமாரனே! நமது மச்சதேசத்திலுள்ள மாட்டைமடக்கிவெற்றிகொண்டு போகவந்தவேந்தன்முதலாகிய வீராள் யாவரும் யுத்தம்பண்ணி நம்மைஜயிக்கச் சக்தியற்றவர்களாய் இறந்தவர்கள்போக மற்றவர்கள் மெத்த நொந்து சித்தம் நைந்து உயிர்மாத்திரங் கொண்டோடுகின்றூர்கள். நாம் நாடிய காரியம் ஜயமாய்விட்டது. இந்தமட்டும் இவர்களை விட்டுவிடாமல் இன்னமும் மேல்விழுந்து தொடர்ந்து துரத்தியடிப்போமா அவர்கள் கெட்டார்கள் பஞ்சைகளென்று பெருந்தன்மையுடன் விட்டு விராடபுரம் போவோமா? இன்னஞ்சற்று நேரம் இவ்விடத்திற்றானே யிருப்போமா? உன் கருத்தென்ன?சிக்கிரந்திருத்தமாய் சொல்லென்றுகேட்கவிராடகுமாரன் பேசத்தொடங்கினன்

வீரியவிஜய வெவ்வேலவனே! சீரியமதிகுலசெஞ்சேவகனே நின்றிருவடிக் கடைக்கலம். காரியங்குறியாக்கடைச்சிறுநாயேன் பாரியயுத்தம் பண்ணியானறியேன்; ஆயினுமையா அவர்களெல்லோரும்செத்தபிணத்தோடொத்தகணம்போல்தத்துவங்கெட்டுதளர்ந்தோடினர்கள். இளைத்தோடுகின்றவர்கள்மேல்கணைதொடுப்பீராகில் தேவரீர் இதுவரையிலும் பெற்றிருந்தபுகழ்ச்சியிகழ்ச்சியாய்விடும் மேலும், இன்னம் ஆகவேண்டிய காரியம்பின்னிட்டிருப்பதால் அப்போதுபார்த்துக்கொள்ளலாம். நாமிப்போது விராடபுரம்போய்ச்சேர்வோம்பலஞ்சுரந்துபொங்குந்தோளினையுடைய பார்த்திபனே என்று சாரதி சொன்னன்.

இவ்வாறு உத்தரகுமாரனுரைத்த உத்தரத்தைப் பார்த்தனற்றுக்கேட்டு உத்தரதிசையைவிட்டுத் திரும்பிக் களித்து வில்நாணிதளர்த்திப் அம்புருத்தூணியுமவிழ்த்துத் தேர்மேலிருத்தி அபபா உத்தரகுமாரனே! இளைத்தபேர்களை தொடரப்படாதென்னும் என்னெண்ணப்படியே நீயும் புகன்றனை; நம்மிருவர் மனதும் ஒருமையானதே பெருமை. இப்பவும் யுத்தகோலங்கொண்டு புறப்படும்போது உன்னைப்பெற்ற தாயான சுதக்ஷணைதேவியானவள் மிகுந்த வியாகூலமடைந்திருந்தாள். இன்னமும் எப்படியோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். ஆகையால் நாம் இவ்விடத்தில் வந்த சத்துருக்களை ஜயித்து ஒன்பதுகோடி பசுக்கூட்டங்களைமீட்டு வனத்திலனுப்பி வைத்த சங்கதியை நாமேருசுவிற்போய்ச்சொல்லி அவள் மனக்கவலையை ஆற்றவேண்டுமென்று தேவர்கள்மதித்துக்கொடுத்திருந்த தேவதத்தத்தை எடு

த்து உலகம் மயங்கும்படி முழக்கினன். அந்தச் சங்கத்தொனியைக்கேட்டு வீஷ்டுமாசாரியர் துரோணாசாரியர் கிருபாசாரியர் அஸ்வத்தாமா முதலியபேர்களுங் பார்த்தன் பின்தொடர்ந்து ஆர்த்துவருகின்றானே என்னமோ வென்னும் பயத்தால் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள். அவ்வாறு பயந்து பார்ப்பவர்களை அர்ச்சுனனும்பார்த்து தேர்விட்டிறங்கி தகுதியுடைய பெரியோர்களை தலைவணங்கிபணிந்து மறுபடியுந்தேரேறிமிகுந்த சந்தோஷத்துடன் உத்தரகுமாரன் விடுத்த இரதத்தின்மேற்சென்றான்.

பின்பு கடல்சூழ்ந்த உலகைப்பரித்த அரவக்கொடி தரித்த திரியோதன மகாராஜன் அணிந்திருந்த அழகிய நவமணி முடியும் ஒளிவிடுமிரத்னபரணங்களும் அகில சங்கிராம ஜயவிஜயனது அஸ்திரங்களினால் அறுப்புண்டு பிளப்புண்டு கீழ்த்திசையிலுதித்த சூரிய கிரணங்களால் மேற்றிசையிற் றோன்றும் சந்திரன் ஒளிமழுங்குமாறு மழுங்கி இன்னமும் வரவரக் கண்டறிவோமென்று ஏக்கங்கொண்டு, அட்டதிக்கும் பரவிய சேனைகளுடன் பட்டப்பகலிற் பட்டினம்போக வெட்கப்பட்டு, அத்தினபுரியிலுள்ள யாவரும் நித்திரை போனபிறகு ஆட்டம்பாட்டங்களடங்கி, கோட்டைமதில் வளைந்த ராஜபாட்டையிற் புகுந்து ஓட்டமும் நடையுமாய் ஊர்போய்ச் சேர்ந்தான். பெரியோர் முதலிய உரியோர்களும் நிசிராத்திரியிற் பேய்போற்போனார்கள். இவர்களிப்படியிருக்க, மாடுபிடி சண்டையை வென்று ஆடுகொடியுடன் திரும்பிய அருச்சுனன் மேடுபடும் பாலநிலத்தில் காடுபட வளர்ந்து நீடிய வன்னிமரத்தைச் சார்ந்து அம்மரப்பொந்தில் முன்னிருந்தவண்ணம் ஆபரண வலங்காரமுடியும் அனுமக்கொடியும் தேவதத்தமும் வில்லும் அம்பறாத்தூணியும் வைத்துப் பழையபடி மான்றோலிட்டிறுக்கிப் பதனப்படுத்தி முச்சகங் கொண்டாடானின்ற முன்னழகையும் பின்னழகையும் மாற்றி, இனிமேல் நடக்கவேண்டிய முறைமைகளையுந் திறமைகளையும் யோசித்துப் பழையபடி பேடியுருவை நினைத்துவலுவில்லாத வடிவமுமமைந்து பொன்மயமான தேரில் உத்தரகுமாரனது சிங்கக்கொடியை நாட்டிக்குதிரைக்கயிறுங் கோலுந்தாங்கிச் சாரதியாகிச் சமித்தவம் உந்தினன்.

முந்திய தேர்முகத்திற் குந்திய பேடியுருவைக்கண்ட உத்தரகுமாரன் கோவென்றழுது ஓவென்றிறைந்து பொய்யாமொழிப் பொறையன் சோதரா! என்னுயிர் துறந்தாலும் தேரேறமாட்

டேன். அரைக்கணமும் நாயகனு யிருக்கமாட்டேன். தேவரீருடைய காற்புரத்திலிருக்கத் தக்கவரிற் கடைப்பட்ட நாயேன் நடுநாயகத்தட்டிற் பொருந்தி நலம் பெறுவேனே? ஆதெய்வமே! என்று சிந்தைநொந்து நைந்து தேம்பினன்.

அவ்வாறு கலங்கிய உத்தரகுமாரனைத்தேற்றி அவனது விசனத்தை மாற்றிப் பிரியவசனங்களினுற் பேடி பேசத்தொடங்கினள். ஓ விராடன் தவத்திலுதித்த நற்சுதனே! எனக்கு மூத்தவர்களும் இளையவர்களும் தங்களுடைய எதாரூபமெடுத்து வெளிப்பட்டார்களோ? இன்னம் வெளிப்பட வில்லையோ என்னையெதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்களோ? என்னமோ தெரியவில்லை. அவர்கள் மாறுருவுடனிருக்க நான்மாத்திரம் சுயரூபங்கொண்டு நடக்கலாமோ? தமையன் கருத்தைத்தள்ளி நடக்கப்போமோ? அப்படித்தப்பி நடந்தால்பாபம் பிடிக்காமல்விட்டுவிடுமோ? தருமவிருத்தனென்னுந் தாக்ஷிப்பேர் பெறுவேனல்லவோ? அப்பனே உனக்குமெனக்கும் ஒருபேதமுமில்லை. உள்ளன்பென்பதுஒன்றே போதும். என்வார்த்தையைத் தள்ளாமல் இத்தேரிலேறென்றேற்றி அவனை அதிரத ராஜனுகப்போற்றி விற்பாணங்களும் வீரகண்டையும் பூட்டிக் குதிரைக்கயறுங் கொலுத்தாங்கித் தேரைச் செலுத்திச் சற்றேனுங் குந்தமனமில்லாத உத்தரகுமாரனோடு வார்த்தையாடிக் கொண்டு விராடபுரத்துக் கோட்டைமதிற்கு வடமேற்றிசையிற் சூழ்ந்த குளிர்ச்சியும் பசுமையுங் கூடிக்குலாவிய செழித்த சிங்காரத்தோப்பில் வந்திறங்கி தேகவெப்பந்தீர்த்துக்கொள்ள அவ்விடத்திற்றங்கி தாகவிடாய்தீர்த்துஒருவர்க்கொருவர் பரிந்து பாண்டவர்கள்பன்னிரண்டு வருடத்திலனுபவித்தவனவாசந் துன்பங்களையும் ஒருவருஷம் அஞ்ஞாதவாசஞ் செய்வதற்காக வடிவமாறிய துயரங்களையும் விராடராஜனிடத்தில் தாங்கள் செய்துவந்த தொழில்களையும் வேறுவேறுகியமாறு பெயர் வைத்துக்கொண்ட மார்க்கங்களையும் அமுதரசம் பொழிவதுபோல உத்தரகுமாரனுடன்சொல்லிக்கொண்டிருக்கும்வேளையில் விராடபுரத்திலிருந்து சில தூதர்களோடிவந்துக்ஷேமவிசாரணை செய்தார்கள். அத்தத் தூதர்களிடத்தில் அருச்சுனன்சொன்னதாவது; அப்படி சாரணர்களே! பேடி தேர் செலுத்தச்சென்ற உன் புத்திரனை உத்தரகுமாரன் எதிர்த்துவந்த மன்னருடன் அதிர்த்துப் போர்புரிந்து கோடி தேராளிகளைவென்று குப்புற்றுப் புரமிடக்கண்டு நமதுமந்தையை மீட்டுவிட்டானென்று

நீங்கள் சீக்கிரத்திற்சென்று சொல்லுங்களென்று அவர்களை யனுப்பிவிட்டு விராடகுமாரனுடன் பின்னடக்கவேண்டியதைப் பேசிக்கொண்டிருந்தான்.

இவன் இவ்வாறிருக்க, இதற்கு முற்பகல் தென்றிசைக்குப் போன விராடராஜன் திரிகர்த்தனைஜெயித்து அன்றிரவுமுழுதும் தூக்கமில்லாமல் சேனைகளுடன் காவலிருந்து, மேற்படைவாரா மையால் மறுநாட் சூரியோதயமானபின்பு பந்துவர்க்கங்களும் மன்னரினங்களும் மைந்தரனைவரும் தாம்தாமெனச் சங்கீத முழங்கவிராடபுரம்சேர்ந்தார்கள். ஜயத்துடன்மச்சநாடுசேர்ந்தவிராடனை விஷங்கலந்த வேற்கண்ணாளாகிய சுதக்ஷணதேவி யிச்சை கொண்டு எதிர்சென்று கண்டு மச்சகுலாதிபனைவணங்கி, தேவரீர் தக்ஷிண நிரைமீட்சிக்குப் போயிருந்த சமயத்தில் வீஷ்டுமாசாரியர்கிருபாசாரியர் துரோணாசாரியர் அஸ்வத்தாமாகர்ணன்முதலாகியதிரியோதனாதியர்கள் நமதுவிராடபுரத்தின்வடதிசைபுகுந்து வளைந்து மாட்டுமந்தையை மடக்கினர்கள். அந்தச்செய்திகேட்டு சித்திரப் பிரதிமைபோன்ற உத்தரகுமாரத்திக்கு மத்தளவரிசையுடன் நாட்டியம் பழக்குகின்ற பேடியானவள் தேர்செலுத்தத் தங்கள் திருமகனை உத்தரகுமாரன் யுத்தகோலங்கொண்டு வெற்றி பெறப் போயிருக்கின்றானென்று விளம்பினள்.

தனது மனைவிகூறிய சங்கதியைக்கேட்ட விராடன் உயிரொழிந்த உடம்புபோலொடுங்கி உருகி வீழ்ந்தான். உடனே பக்கத்தில் இருந்தவர்கள் வாரியெடுத்து மார்போடணைத்து சீதளசந்திரகாந்தக் கிண்ணங்களிற் பொருந்திய சுண்ணங்களையும் சந்தனபாளித குங்குமக்குழம்புகளையும்பூசி பன்னீர்தெளித்துசயித்தியோபசாரஞ்செய்து சிற்றாலவட்டம்பேராலவட்டமுதலியவிசிறிகளைசைத்து விராடராஜனைத் தேற்றினர்கள். எவ்வித வுபசாரங்களினாலுந் தேறுதவனுய்ச் சொன்னதைச்சொல்லிச் சோர்வடைகின்ற தோன்றலை நித்தியவிதிசொல்லுகின்ற உத்தமரான கங்கபட்டர் பார்த்து எனிவ்வண்ணம் வருத்தப்படுகின்றீர்? மன்னர் மன்னனே! உன்மகன்தேரேறி தனப்பேடியானவள் நேரூரச் சென்றிருப்பானுகில் இன்னஞ் சற்றுநேரத்தில் பொன்னந் தேரேறிபெற்று வருவான். அவனைக்குறித்து நீர் சித்தங்கலங்க வேண்டாமென்று சொன்னர்.

இவ்வாறு சொல்லிய தருமதேவதையின் வாக்கியத்தினால் நிறைந்த பாக்கியம் பெற்றவனைப்போல் தேறித் தெளிந்துசற்று

நேரத்திலுன்னி ஓ கங்கபட்டரே! என்பாக்கிய மெப்படியாமோ? நானறியேன். ஆகிலும் நால்வகைப் படையுடன் நாம்யெதிர் சென்று நம்மாலான உதவிசெய்வோமென்று நாடுகின்றேனென்று விராடராஜன் விளம்பினன்.

அம்மொழி கேட்ட கங்கபட்டரானவர் ஐயோ! நீயப்படி துணைப்படுவையாகில் கனம்பெற்றுவரும் உன்மகனுக்கு அவமானத்தை விளைக்குமல்லது, கீர்த்தியை விளைக்கமாட்டாது. ஆகையால், நீ சற்றுநேரம் பொறுத்து வெகுமானங்களுடன் மந்திரிகளையனுப்பி உன்குமாரனை எதிர்கொண்டழைத்துவரச் சொல்லுமென்று சொல்ல, அதற்குடன் பட்டிருந்தார். அப்போது திறம் படைத்த திரியோதனன், வீஷ்டுமர் முதலாகியபேர்களும் புறங் கொடுத்தோடிப் போயினரென்றும், அவர்களால் மடக்கப்பட்ட மாட்டுமந்தை யனைத்தும் மச்சநாட்டைச் சார்ந்த காட்டுப்புறத்தில் வந்ததென்றும் தன் புத்திரசிகாமணியாகிய உத்தரகுமாரன் ஒருதேரும் ஒரு வில்லுங்கொண்டு மூலைந்து யுத்தம்புரிந்துவெற்றிபெற்று வருகின்றனென்றுந் தூதரோடிவந்துதொழுதுரைத்தார்கள்.

அவர்களுரைத்த அமுதரசத்தை செவிவாய்மடுத்துத்தெவிட்டிக் கொதிப்பாரிக் குளிர்ந்த குளத்துநீர்போலும்,குமுதநாதன் அமுதகிரணத்தையுண்ட சகோரப் புட்போலும் சோப்தாபதுயரமுமாறிச் சிந்தைகளித்துப் பந்துஜனங்களுடன்வந்த வெகுஜனங்கட்குச் சுகந்த பரிமள சந்தனந்தந்து, போஜனஞ்செய்வித்து வெகுமதியுந் தந்து, மந்திரிமார்களையும் மன்னர்களையும் நோக்கி நான் தவிர மற்றையரதகஜதுரகபதாதியர் மந்திரிதந்திரி சாமந்திரி முதலினோருடன்,விருதுடால்வகை வரிசைகளுடனும் எதிர்கொண்டு ஜயசிரேஷ்டமடைந்த என் சிறிய குமாரனைச் சீக்கிர மழைத்து வாருங்கள். வீதிகளெல்லாம் அலங்காரஞ்செய்யப் பறைசாற்றச் செய்யுங்கள். பந்தலமைத்து மகர தோரணங்கள் கட்டுங்களென்று ஆக்யாபித்தான். இந்த விராடராஜன்கொண்ட சந்தோஷமெத்தகைய தென்னில், ஒருவன்மனைவியானவள் அயலாரிடத்திற் சோரத்துவஞ்செய்து பெற்றுக்கொண்ட பிள்ளையைத்தனக்குப்பிறந்தபிள்ளையென்று உள்ளங்களித்துமூத்தமிட்டுமடிமேலுந் தோண்மேலும் வைத்துத் தாலாட்டிக்கொஞ்சிக்குலாவி ஆசைவைத் துருகுகின்ற அறிவில்லார் தன்மைபோன்று விஜயபராக்கிரமவிக்கிரமன் வெற்றிபெற்றிருக்கிற அதை விராடன்

தெரிந்துகொள்ளாமல்உத்தரகுமாரன்வெற்றிகொண்டானென்று உண்மையாய்நம்பி உடல் பூரித்திருந்தான். இவனுக்யாபித்த ஏவலைக்கொண்ட காரியஸ்தர்கள் வீதிகள் திருத்திப்புழுதிகளடக்கிச் செம்பொற்கலசங்கள் பொருந்தி வாழை மா பலா கரும்பு கமுகு முதலிய தென்னங்குலைகளும்கட்டி மாணிக்கத்தீபங்களும்வரிசையாய்வைத்துக்கொடிகுடை ஆலவட்டங்களுடன்மிகவும்உயர்ந்த மாடமாளிகை கூடகோபுரமுள்ள வீடுகளலங்கரித்து விதவிதமாய்ச் சிங்காரித்தார்கள். இஃதிப்படியிருக்க, இவ்விடத்தில் விராடராஜன் தர்மராஜனைப்பார்த்து உம்முடைய ஆசீர்வசனப்படி எனது உசிதகுமாரன் ஜெயப்பிரதானத்துடன்வருகிறவரை. யிலும்நாமிருவரும்சொக்கட்டானாடுவோமென்று அந்தஆட்டத்திற்குவேண்டிய கருவிகளமைத்து ஆடினர்கள். இவர்களிரண்டு பேரும் ஆடியகாலையில் சொக்கட்டானாட்டத்தில் மெத்தவும் நிர்வாகமுள்ள கங்கபட்டர் வென்றூர். மச்சராஜன் தோற்று தர்மநந்தனர் முகத்தைப்பார்த்து இன்னோராட்டமாடுவோம் வாருமென்று பவளம் கருமணி மரகதம் புட்பராகங்களினு லேற்பட்டிருக்கின்ற காய்களைவைத்து வயிரப் பாச்சிகைகொண்டு வீசி இந்த ஆட்டத்தில் என்மகனுகிய உத்தரகுமாரன் வெல்ல அவனுக்கிடுபட மாட்டாமல் யுத்தமுனை கெட்டோடிய வெற்றி வீரர்களைப்போல் உம்மை நான் ஓடவிட்டடிக்கின்றேன் பாரும் என்னையனேயென்று பிரதாபமாய்ப் பேசினன். அவ்வாறு உரைத்த விராடராஜனைக் கங்கபட்டர் தடுத்து, பேடியாகிய ரதசாரதியானவள் ஜெயங்கொண்டுவருகின்ற பெருமையைப்போல ஜெயங்கொள்வேனென்று பேசுவீராகில் அது எனக்குச் சம்மதியாகும். நீரப்படிச் சொல்லாமல் உத்தரன் ஜெயித்ததைப்போலென்று அப்படி செப்புவதனுல் அதற்கு நான் ஒருக்காலும் ஒப்பமாட்டேன். இப்புவிக்கிறைவனுன ஏந்தலே! அதேனென்னில், பிரகன்னளை யென்னும் பேடியைப் பேடியென் றெண்ணுதிர்; அவள் பூர்வங் காண்டவவனமழித்த காலைக்குத் தேரூர்ந்து தேவர்களுக்குப் பகையாகிய ராக்ஷசானை வென்று தேவசகாயவிஜயனென்று பேர்பூண்டு திக்குத்திகாந்தம் வரைக்கும் அதிசொற்பத்தில் ஜெயங்கொண்டு திரண்டகீர்த்தி பெற்றிருக்கின்றவள். ஆதலால் லேசாக மதிக்காதேயுமென்று கங்கபட்டர் சொல்லவும் மச்சராஜனுக்கு மிச்சமாகிய கோபம் பிறந்து மனங்கறுத்து, மதியுஞ் சிறுத்து, கண்சிவந்து கனற்பொறி பறந்து, களத்துப்

பார்த்து, ஓ பெரியவரே! கோடாகோடி குருசேனைகளை நீடாதடித்து, நிமிரக்கெடுத்து, பேடி தேர்விடச்சென்று என்பிள்ளை ஒருவனுமே வென்று பசுமந்தைகளையுங் கைக்கொண்டு திரும்பிவருகின்றானென்று தூதர் வந்து சொல்லியதைப் பிரத்தியக்ஷத்திற் கேட்டிருந்த தேவரீர் சொல்லமாட்டாத சொற்பமான ஒரு பேடியைக் கொண்டாடி ஸ்தாபித்துப் பேசுகின்றீரே? இதென்ன பிடிவாதம்? ஈதெவர்கள் சொல்லுகின்ற பக்ஷபாதம்? பிரமக்கியான முடைய பெரியவரே! பேசாதீர்! வாய் மூடுமென்றான். அந்த மொழியைக் கேட்ட தர்மராஜன் சிறுநகை செய்து, நான்சொன்னவார்த்தை பழுதல்ல. இன்னுஞ் சின்னேரத்தில் நீரறியப் போகின்றீரென்றார்.

அந்த வசனத்திற்கு மனந்தாளாத விராடராஜன் முகஞ் சுளித்து, இனியென்னத்தை யறிகிறது? கைப்புண்ணுக்குங் கண்ணாடி வேண்டுமோ? விஸ்தாரங் கற்றிருக்கும் வைதிகமுனியே! பேடிக்தும் கிரீடிக்தும் பேதமறியாத நீரேன் வீண்வாது பேசுகிறீர்? போதும் போதும். நீதில்லா மன்னரானவர் ஏதேனும் பின்னமான புன்மை புகன்றாரென்றாலும் அச்சபையிலுள்ளவர்கள் நன்மை நன்மையென்று நாலுஞ்சொல்லி ராஜனுக் கிதம்படப் பேசவேண்டுமல்லாமல் அவன் தயவுக்கு காத்திருந்து ஜீவனஞ்செய்பவர்கள் மன்னன் கருத்துக்கு மறுத்துரைப்பது முண்டோ? காலமிடமறிந்து கலந்து கொள்ளவேண்டாமோ? நான்கு வேதமும் நன்றாயோதிய ஞானவானே என்றான்.

இங்ஙனம் மமதைக்கொண்டு பேசிய மச்சராஜன் பேச்சுக்கு இடங்கொடாமற் றடுத்து ஓ விராடனே! நீர் கொஞ்சம் நிதானியும், கொடையாளியான கர்னராஜன், படையாளியான வீஷ்டுமாசாரியர், தனுர்வேத சம்பன்னரான துரோணாசாரியர் நீதிவழியோர்ந்த கிருபாசாரியர், வில் மகத்துவமுடைய அசுவத்தாமா இவர்கள் முதலிய சுத்தவீரர்களை உண்டைவிற் பிடித்துக்கொண்டிருந்த உன்பிள்ளை வெல்ல வல்லவனென்று நீசொல்ல மாட்டுவையா? நில்லு நில்லு நிருபனே! இதோ வந்துரைக்கப்போகிறார்கள். அப்பாலுன் மனந்தப்பென்று உன்மதி உனக்கே ஒப்புக்கொள்ளும். இப்போது நானுனக்கென்ன சொன்னபோதிலும் அது தப்பாகவே தோன்றும். மெய்ப்படும்போது பெருமையடைந்தவன் துப்பா திருமேனிப் பேடியென் றுணர்வா

யென்று தர்மராஜன் பேசினர். இச்சொல்லைக் கேட்ட விராட ராஜன் இருகண்ணுஞ் சிவந்து கோபச் சிரிப்பாகச் சிரித்து ஓகோகோ! மெத்த மெத்தக் கற்ற வேதியரே! வில்லாண்மையி லுயர்ந்த என் குமாரன் சொல்லாண்மையிற் சிறந்த பகைவரை யோட்டி பசுநிரைமீட்டி சாமர்த்தியமாய் வருகிற வீரப்பிரதாபத் தைப்பார்த்த துதர்வந்து சொல்லக் கேட்டறிந்திருந்தும் எவ் வளவுமெண்ணிப் பாராமல் எதிரியையுமதியாமல் என்னையடித்து ஜீவனஞ் செய்துவருகிற வியற்கையு மோராமல் பலதரமும் என் னையலட்டி வாதுசெய்கிறீர். அற்பமான பேடியைப் புகழ்ந்து பேசுகின்ற நீர் என் பிள்ளையைக் கொண்டாடிப்பேசப்படாதோ? இவ்வளவு பொறுமையும் அக்கரையும் உமக்கு வந்த காரண மென்னவென்றும் சொல்லி, விடங்கொண்டெழுந்த நல்லபாம்பு போற்சீறி தன் கையிலிருந்த பாச்சிகையை நிலத்தில் விட்டெறி ந்து கலகலவென்று நகைத்தான். அவ்வாறு அதிகோபத்தால் வீசிய பாசிகையானது பூமிமேற்பட்டு தெரித்து நேரிலிருந்த கங்கபட்டர் நெற்றியிற்பட குங்குமக் குழம்பாற் படிந்த திலகம் போல் குன்றிமணியத்தனை இரத்தங்குபீரென்று கொப்பளித்தது.

அப்போது உத்தரகுமாரனது கூடிமத்தை ராஜசபையில் என்னபேசிக்கொள்ளுகிறார்கள்? அதையறிந்துவாபோவென்று சுதக்ஷிணதேவியால் அனுப்பப்பட்ட பணிப்பெண்ணனவள் சபைகூடிய அவ்விடத்திற்கு வந்து சங்கதி விசாரிக்குஞ் சமயத் தில், தர்மராஜன் நெற்றியிலுண்டான இரத்தத் துளியைக்கண்டு நீர் வற்றிய தடாகத்துள்ள தாமரைமலர்போல் நிறங்குன்றி வெருண்டு மருண்டு நிலைகுலைந்து கைகால்நடுங்க அவரைக் கிட் டித் தன் வஸ்திரத்தின் முந்தானையால் அந்த ரத்தத்தையொத் திஞளென்று வைசம்பாயனர் புகல, அது யாதுகாரணமென்று ஜனமேஜயனனவன் கேட்டான்.

அதற்குத் தருமனுடைய உதிரம் ஒருதுளி பூமியில்விழுமா னால் விராடராஜனைத் தழைத்திருக்கின்ற கிளைகளான புத்ர பௌத்திரர்களும் மித்திரர் முதலாகிய காய்கனிகளும் புகழ்ப்பிர தாபப் பெருமணச் சிறப்பும் அழகும் வாழ்வும் அமைந்த அவ் வூரும் தாங்களாறுபேரும் அஞ்ஞாதவாசஞ் செய்பவந்தடுத்து ஒதுங்கியிருந்த நிழலும் அன்றே கெடுமென்றுதானே? அல்லது யாவரேனும் இடையூறில் உபசாரஞ் செய்வது எல்லோருக் கும் பொதுவென்பது பற்றியோ? அல்லது அருச்சுனன் முத



விராடராஜன் தருமராஜனோடு பாச்சிகையாடுதல்

லிய பேர்கட்கு உத்தரஞ் சொல்ல வேண்டுமென்பது நத்தியோ? அல்லது பெரியவரென்னும் பக்தியோ? அந்தப் புண்ணியவதியின் சுபாவப் புத்தியோ? அவள் கருத்து இன்னவிதமென்றெனக்குத் தெரியாது. கண்களில் நீர்த்தும்ப நின்று உடல் நடுங்கத் தொழுது ஐயோ! பழுதுநேரிட்டதே யென்று வெகுநேரம் வரையிலும் ஒத்தியகை யெடுக்காமல் தருமபத்தினிபோல் இருந்தாள். அப்படிக்கிருந்த வண்ணப்பெண்ணின் மரியாதையும் அவளுடல் துடிப்பையும் படபடப்பையும் பரிதாபத்தையும் விராடன் பார்த்துச் சந்தேகப்பட்டு இதென்ன வாச்சரியம்! இதுவரையிலு மில்லாமல் இப்போது நேரிட்டதென்ன வாச்சரியமென்று எண்ணமும் செயலும்வேறுகி என்செய்வோமென்று தன்னைத்தானே நொந்து பின்னுலறியப்போகிற பெருமை தெரியாதவனுய் ஐயோ! கோபம் பாவம் சண்டாளமேயென்று குன்றி வீழ்ந்தான். இவ்விராடராஜனுடைய மனைதுக்கத்தைக் கண்டு மறந்துபோனவன்போல சூரியன் அஸ்தமடைந்தான்.

இஃது இவ்வாறிருக்க, உத்தரகுமாரனைதிர்கொண்டழைக்கப்போன யானைசேனைமுதலிய மன்னவர்கள்வீரவாத்தியமேளம் முழக்கி விருதுடால் கொடி குடைகள் விதவிதமாய் சூழ்ந்துவரவும் பாலரபல்லயம் சவளக்கோல் கத்தி கட்டாரி ஈட்டி கேடயம் மின்ன சங்கத்தொனி பொங்கிப் பூரித்து பட்டத்துயானைகளும் ஆட்டக்குதிரைகளும் உன்னதத் தேர்களுந் துன்னிய காலாட்களும் இருபக்கமும் தெருங்கிவர தேவேந்திர லோகத்திலிருந்த ஜயமுளள காளமேகம் தேர்மேலேறிப் பூலோகத்தில் வருமாறுபோடி தேர்செலுத்த நீடியகீர்த்தி பொருந்த உத்தரகுமாரன் வண்டு மொய்க்கும் மலர்க்காவைவிட்டு நீங்கி வாகுமாலைதாங்கி மணிப்புயமோங்கி விராடபுர வீதியில் மேவினன்.

இந்தப்படி சத்துருஜயஞ் செய்துவருகின்ற உத்தரகுமாரனை வேதியர் முதலாகிய மாதர்களுங்கண்டு அன்புகொண்டு ஆலஞ் சுழற்றி திருஷ்டிகழித்து மங்களஞ்சொல்லி லாலிவாழ்த்தி கும்மிகள் முதலிய பாடல்கள் பாடி ஆசீர்வதிக்கப் பரதநாட்டியஸ்திரீகள் அபிநயங்காட்டி யாடித்துதிக்க கட்டியர்புகழ ஐட்டியர்மகிழ பட்டுவான்கள்போற்ற சந்திரவட்டக்குடை நிழற்ற வெண்சாமரைபோட அட்டதிக்குங் கொண்டாட இராஜ சின்னங்களுடன் மகன்வருகிற செய்தியை கேள்விப்பட்டு, வரைபகவெறிந்த வள்ளிமணுளனைச் சிலவேளைச்செற்ற சிவபெருமான்கண்டுகளிப்பது

போல வேந்தன் ஆனந்தங்கொண்டு எதிர்சென்றுகண்டுதேர்மே லிருந்த சிறுவனைத் தழுவி,பற்றியெடுத்து சித்தங்களித்து அணை த்தெடுத்து முத்தங்கொடுத்தான். உத்தரன் தந்தையைப்பணிந்து கொலுமுசத்திற் கணியாயெழுந்தருளி யிருக்கின்ற வேதவித்தா கிய கங்கபட்டரை வணங்கித் துதித்து அவருடைய திருவடிக ளைச் சிரத்திலும் கண்களிலும் பொருந்தி பற்பல ராஜகூட்டங்க ளும் பார்க்கப் பொற்புயத்தைப்புகழ்ந்து அற்புதக்கருணை முகத் தையும் நோக்கினன்.

அந்த விற்பன விவேகியானவர்மகிழ்ந்து கடாட்சத்துடன் ஆசீர்வதித்தருளினர். அப்போதவர் நெற்றியிலிருந்த வடுவைப் பார்த்து உடனே முகம்வியர்த்து அண்டரண்ட சராசரங்களும் அதிரும்படிக்கூவி, ஓ என்னுண்டவனே! விபூதிரேகை பிரகாசிக் கின்ற தமதுலலாடஸ்தானத்தில் அபூர்மான காயம்பட்டதற்குக் காரணம் யாது?யாரிந்த வடுச்செய்தானென்றுகார்முகங்கைக்கொ ண்டான். நேர்முகமாய்நின்ற விராடராஜன் நடுங்கி முன்னடந்த காரியங்களைப் பக்குவமாய்ப் பேசினன். அவ்வாறு கூறிய தந் தையை சிந்தை நைந்து வருந்தி நொந்துகைக்கொண்டவில்லை யொடித்துப் பல்லைக்கடித்து நல்லகாரியஞ் செய்தீர், போம்போ மென்று பதைத்து, நீ. இந்த மஹானுபாவருடைய சொல்லை இகழ்ச்சி செய்தே னென்றபோதே என்னுடல் பதைக்நிறதே. அதைநினைக்குந்தோறும்என்னுடலைவிட்டு உயிர்வெளியோடுதே இதனலுண்டாகிய பயமானதென் னுரத்தை ஜாடுதே. ஐயை யோ! இவர் பிரம சிருஷ்டியிலாகிய பெரும்பொறைக் கடலை ஆடையாயுடுத்த அவனியில் பாரிய மணிமகுடப் பட்டந்தரித்த வீரியவேந்தர்க்கு வேந்தே. இவருக்கொப்பானவர் எப்பாரினு மில்லையே இவரை யாரென்றுணர்ந்தாய்? என்ன நினைத்து இப் படிச் செய்தாய்? மனைக்குக் கேட்டை விளைத்த மன்னனே! அப் பாற் போமென்றதட்டிப் பூசுரனுகிய புண்ணியனைப் பணிந்து, அத்தனே! அன்புநீங்காப் பரிசுத்தனே! எங்களை யாண்டுகொள் ளுங் கர்த்தனே! சிறியோ ரறியாமற்செய்த தீமையைப் பெரி யோர் பொறுப்பது பெருந்தன்மையென்று தாங்களே அருளி யிருப்பதனல், விவேகமற்ற என்தந்தையின்மீது தேவரீர்கோபங் கொள்வது நியாயமன்று. எம்மை யாதரியுமென்று கங்கபட்டரு டைய அடியிற்றுழ்ந்து, பெரியோருள்ளம் பேதிக்கச் செய்து கேட்டை மூட்டை கட்டிக்கொண்ட விராடராஜனையும் வீழ்ந்தி

றைஞ்சச் செய்து மன்முடிக் கெஞ்சித் தாக்ஷண்யபரராகிய தரும புத்திரரென்னும் மோனவானுடைய மனோதுக்கத்தை மாற்றி விட்டான்.

அப்போது நீர்நிழியவெய்த வடுப்போலக் கடுப்பாறி சாஷ் திரங்கற்று மாட்சிமைபெற்றுப் பொறுமையுங் கருணையும்பொரு ளெனக்கொண்ட கங்கபட்டர் மகிழ்ந்து தம் வேடத்துக் குரிய வாறு வாழ்த்தி, உத்தரநிரை மீட்சியிற் புரிந்த யுத்தத்தின்பெரு மையைப் பேசிவந்தார். மச்சராஜனும் இச்சையுடன்மகிழ்ந்திரு ந்தான். மனங்கலந்த உரியோர் சிலரும் புடைநெருங்கினர்கள். இவர்களெல்லோருஞ் சூழ்ந்து வருவதை உத்தரகுமாரன்கண்டு ஒன்றுஞ்சொல்லாமல் வெட்கி அந்தப்புரம்போனன். ஐயங்கொ ண்டுவந்த மைந்தனை சுதர்க்ஷணைகண்டு, தவமிருந்துபெற்ற பிள் ளையை ஈன்றபோதிருந்த பேராசையைவிட எண்மடங்கதிகமான இன்பமடைந்து எடுத்தாள். முத்தங் கொடுத்தாள். கரஞ்சுற்றி நெரித்தாள். நமது கருப்பஞ்செய்தபுண்ணியமென்றுசிரித்தாள். இவ்விதமாக சோடசகலைகள் நிறைந்த சந்திரனெழுச்சி கண்ட சமுத்திரம்போல் தாய்தந்தை முதலியபேரும் புகழ்ந்து பூரித்து, மகிழ்ச்சி யடைந்து பேரானந்த வெள்ளத்தில்மூழ்கிப் பெருமை மையாகிய பள்ளத்திற்படிந்து ஐயமென்னுஞ் செய்தியாற் றேரி யிருந்தார்கள். அச்சமயத்தில் உத்தர நிரைமீட்சிக்குச் சென்ற உத்தரகுமாரன் கௌரவசேனைகளைக் கண்டு பயங்கொண்டு புறங் கொண்டு புறங்கொடுத் தோடியபோது, அவ்விராஜ குமாரனைத் தேற்றி அவன் திகிலை மாற்றி சாரதித்தொழிற் கிசைய வைத் துத் தேரின்மேலேறிச் சூரியன்முன்பட்டபனிபோல்தனக்கெதிர் நின்ற துரியோதனுதியரை வென்ற அருச்சுனனுனவன் இரதத் தின்மீதுவைத்திருந்த எதிரிகளின் சிரோவேஷ்டி மூட்டையைப் பேடிரூபத்துடன் தலைமேற் சுமந்துகொண்டுவந்து உத்தரகுமா ரத்தி கையிற் கொடுத்து, உத்தரகுமாரனைப்பெற்ற உத்தமியான சுதர்க்ஷணைக்குப் பின் பக்கத்திலொதுங்கி ஒடுங்கித் தலைவணங்கி நின்றான். அவன் நின்ற கோலத்தைக்கண்ட உத்தரகுமாரன் கைதெரித்து கலீரெனச் சிரித்துத் தேம்பி விம்மித் திகைத்துத் திகிலடைந்து, துக்கத்தினில் விக்கித் துயருழன்றிருந்தான்.

அவன் குறிப்பையறிந்த அன்னையுந் தந்தையும் ஆசை யுடன் தழுவி அப்பனே! ஐயனே அதிசயமென்னடா வென்று பலகால் பன்னிக் கேட்டார்கள். அப்போது உத்தரகுமாரன்

ஆயாசந்தீர்ந்து அடிவயிற்றிலிருந்து எரிந்தெழுந்த அக்கினித் தனல் குளிரும் வழியையுன்னி அவள் முகத்தை நாடிப் பேசாமல் வாய்மூடி பெருமூச்சுவிட்டு, நானென்னென்று சொல்வேனென்று தந்தைதாய் இருவரையுந் தனித்தழைத்துச் சென்று இனி நாம் பிழைக்கும் விதமெப்படி? எக்காலத்திற் புனிதராகப் போகிறோம்? இப்போது நீர் விளைத்துவிட்ட பகையானது எப்போது நீங்கும்? விராடபூபதியே! சமுத்திரம்போற் புரண்டு சதுரங்கமுந் திரண்டு நமது ஆனினங்களும் மிரண்டு போகவந்து மடக்கிய கௌரவகுலாதிபர்கள் நொந்து போகச் செய்த ஆடமும் முந்திப் போர்புரிந்த மூர்த்தண்ய திடமும் மந்தைப் பசுக்களைமீட்ட மார்க்கமும் வீண் சண்டைக்கு வந்த பேர்கள் சோர்ந்துவிழும்படி மோகனாஸ்திரம்பிரயோகஞ்செய்து அவர்களணிந்திருந்த தலைத்துணிகளைப் பிடுங்கி மூட்டை கட்டிக்கொணர்ந்த கீர்த்தியைப் படைக்க உன்னாலாகாது. என்னாலுமாகாது. இனி யொருவராலு மாகாது. சொன்னலன்றி உங்கட்கும் விளங்காது. என்னைப் பெற்றோரே! உற்றுக்கேளுங்கள். தாங்கள் தக்ஷிணநிரை மீட்சிக்குச் சென்றவேளை கண்டு சத்துருக்கள் மொய்த்து உத்தரதிசையி லொருமிக்க வந்து மெத்த வருத்தப்படுத்திப் பத்திரை மந்தைகளை மடக்கினார்க ளென்று சித்தம் நொந்து ஒற்றர்கள் வந்துரைத்தார்கள். நான் அவ்வார்த்தையைக் கேட்டு என் தாயைத் தொழுது அம்மா! எனக்கொருசாரதி கிடைப்பானுகில் பழுதுவராமல் ஜயிப்பேன் எனக்கா ரெதிரென்று இயம்பியபோது, நமது உத்தரைக்கு நாட்டியம் பழகிவருகிற பேடி சிறந்த சாரதியென்று பணிப் பெண் சொன்னாள். அவள் தேர்விடச்சென்று கடல்போற் கவிந்த சேனையைக் கண்டு கண் கலங்கி மனம்விட்டு தேர்விட்டிழிந்து ஊர்முகமாக ஓடிவந்தேன். ஊர்வசி சாபத்தால் பேடியுருக் கொண்டிருந்த தனஞ்சயனென்னும் புருஷோத்தமன் என்னைவிடாமற் றடுத்துப் பிடித்துத் தனக்குச் சாரதியாகத் தேற்றி என்பயத்தை மாற்றித் தேர்மேலேற்றி வன்னிமரத்தில் மறைத்து வைத்திருந்த விஜயகாண்டீப வெம்படை தாங்கி அனுமக்கொடி நாட்டி யாவரும் மெச்சும்படியாகிய அருச்சுனனுருவமுங் காட்டித் தேவதத்த முழக்கஞ் செய்து அரவக் கொடிக் கதிபனுடைய சேனைகளிற் புகுந்தபோது, அவ்விடத்தில் நடந்த விந்தையை நான் சொல்லத்தரமோ? நராதிபனே!

சூரியனுக்கெதிர்ப்பட்ட பனிபோலவும்சுடருக்கெதிராகியஇருள் போலவும் சிங்கத்திற் கெதிர்ப்பட்ட யானைகள்போலவும் நெருப் புக் கெதிராகிய விட்டிற்பூச்சிபோலவும் இடியோசை கேட்ட நாகம்போலவும் எமனுக்கெதிர்ப்பட்ட உயிர்கள்போலவும் சிவ னுக்கெதிர்ப்பட்ட சிலைமதன்போல தீச்சல்பட்ட பயிர்காச்சல் போலவும் அடங்கலுமழிந்து ஒழிந்தார்கள். ஐயோ! அப்போது நான் பயந்து இந்த அருச்சுனராஜனை விசாரிக்கையில் தேவர் ரிடத்தில் உற்ற நண்பனுநி உயிர்க்குயிராகி தர்மா தர்மமுதலிய நீதிகளைத் தெரிவித்துக்கொண்டு கங்கபட்ட ரென்றிருக்குந் தயாளுவானவர் சந்திரகுலத் தோன்றலான தருமராஜனென் றும், வாசமலரும் பூசுதல் முதலாகிய புனுகுஞ் சாந்துஞ் சம் பங்கித் தயிலமுஞ் தரித்த கூந்தல் விரிந்த வண்ணமகள் பாஞ் சாலராஜ கன்னிகையாகிய திரௌபதாதேவியென்றும் மல்லர் களைமாட்டிக் கீசகர்களைவாட்டி மடப்பள்ளியிற் சமையல் கூட்டி நமக்கன்ன மூட்டிவராநின்ற வல்லமையாளன் வீமசேனராஜ னென்றும், குதிரைச் சேவகத்தி லமைந்த கோமான் நகுலராச னென்றும் பசுமந்தைகட் கெஜமானனுயிருக்கும் பாக்கியன் சக தேவராசனென்றும் வேலாயுதம் பிடித்த வீரர்களை மடித்த பட் டத்து யானைபடைத்த பாண்டவரும் பாஞ்சாலி அஞ்ஞாதவாச ந்தொலைப்பதற்கு நம் மச்சநாட்டில் மறைந்து காலங்கழித்தன ரென்றும், நேற்றேரடு அவர்களுக்குண்டாகிய தவணைநாளைப்போ க்கிவிட்டு இன்றுமுதல் வெளிப்படவேண்டிய காரணமென்றுங் கேள்விப்பட்டேன். இனியதைக்குறித்து நாம் யோசிக்கவேண்டி யிருக்கின்றது. இதுவரையிலும் நம்மால் என்ன குற்றங் குறை கள் நேரிட்டிருக்கின்றனவோ தெரியவில்லை. இப்போது பிரத்தி யக்ஷமாய் வடுவில்லாத தர்மராஜன் நெற்றியில்வடுவுண்டாக்கி வைத்திருக்கின்றனை. ஐவருக்கும் அன்பாகிய பாஞ்சாலியை ஆசைப்பட்டணைக்க நேசமூறத் தொடர்ந்த கீசகன் முதலாகிய வீரர்களும் நாசமடைந்தார்கள். இதனுற் பெரியமோசம் வந்தி ருக்கின்றது. இவற்றையெல்லாம் யோசியுங்களென்று உத்தர குமாரன் சொன்னன்.

இம்மொழிகேட்ட விராடராஜனும் கதர்க்கணையும் புதைத் திருந்த பொருள் குதித்து வெளிப்பட்டதுபோல மருண்டுஆ ஆ! பாண்டவர்களா யிவர்கள். பாஞ்சாலியா பணிப்பெண். ஓ ஆண்டவனேயென்று அயர்ந்து நிலத்திற்சாய்ந்துஉயிருடன்

மாய்ந்தவாறு மூர்ச்சையானர்கள். அப்போது உத்தரகுமாரன் அவர்களை யணைத்து சோபத்தையும் மனஸ்தாபத்தையும் நிவர்த்தி, இனி துக்கப்படுவதிற் காரணமில்லை. சீக்கிரம் இதற்கு வேண்டிய பரிகாரந் தேடுங்கள். எனக்கொன்று தோன்றுகிறது. அஃதென்னவெனில், மன்மதனுக்கொப்பாகிய வடிவழகும் மயில் வாகனனுக் கொப்பாகிய வெற்றியும் மகாமந்திர சித்தியுடைய உமாமஹேசுவரரைப் பூசிக்கும் யுத்தியும் ரிஷபகுஞ்சர சிங்க விராட்டின் சத்தியும் பரந்தாமன் மைத்துனனுமாகிய பார்த்தனுக்கு எனக்கிளைய உத்தரகுமாரத்தியைக் கொடுத்து நம்முடன் கலந்து வாழச் செய்வோமாகில், தெரிந்து தெரியாமற் செய்த தீமைகளியாவுஞ் சிதறிப்போமென்றெண்ணுகின்றேனென்றான். இவ்வாறியம்பிய சுதன்வார்த்தையை மனமகிழ்ந்து கேட்டு தந்தையுந் தாயுஞ் சிந்தைகளிகூர்ந்து அருமை மைந்தனே! உன் மனதின்படியே எங்கட்குமிச்சை உன்னெண்ணப்படியேமுடிப்போமென்று அன்றிரவு விடியுமளவும் அச்சத்துடனொடுங்கி அசைவற்றிருந்தார்.

உத்தரநிரைமிட்சியில் பார்த்தன் புரிந்த சண்டையில் செந்தூள்பறக்க அதுபடிந்து மறைந்த தன்னொளியைச் சுத்தப்படக் கழுவிக்கொள்வதற்குப் போனவன்போல் மேற்குச்சமுத்திரத்திற் சூரியன்போய்க் குளித்தான்.

பிறகு பெருமையிலுயர்ந்த பாண்டவர்களும் பாஞ்சாலியும் விராடனுடைய அரண்மனைவிட்டு நீங்கி மச்சநாட்டின் புறம் போய்ச்சேர்ந்து கூடுவிட்டுக்கூடுபாய்கிறவர்களைப்போல்தாங்கள் கொண்டிருந்த வடிவத்தை மாற்றிப் பழைய ரூபங்கொண்டு எமதர்மராஜனைத் தோத்திரம்பண்ணி வணங்கி மேற்றிசையடைந்த சூரியபகவான் கீழ்த்திசைக்கு வருங்காலத்தை நோக்கிக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கோழி முதலிய பறவை எல்லாம் பாழியபுயம்படைத்த பாண்டவர்களே! நீங்கள் நீடுழிவாழிவாழி ஆழியினிலையுடன் மாநிலம் நடுங்குவதால் சூரியன் வரப்போரென்று சொல்லுவதுபோல் கூவின.

அப்போது மேற்றிசையில் மறைந்த வெய்யோன் பாண்டவர்களின் சங்கதியெல்லாந் தெரிந்துகொண்டோமே; இனித் திரியோதனாதியர்களின் கருத்தையு மறிவோமென்று மகமேருவைச்சூழ்ந்து வந்தவனைப்போல்உதயகிரியில்வந்து நிரணக்கதிர் தாமரைமலர்க் கரங்காட்டி தண்மதி முதலிய துஷ்டரையோட்டி

சத்தியநிலைபெற்ற தர்மராஜனது ஆக்ஞசக்கரத்தை நிலைநாட்டி யதுபோல் உதயகிரியினுச்சியிலுதித்தான். அப்போது பொழுது விடிந்தது. கேளும் ஜனமேஜய மஹாராஜனே! என்று வைசம் பாயனர் கூறினர்.

உத்தரநிறைமீட்சிச் சருக்கம் முற்றிற்று.

பாண்டவர் வெளிப்படு சருக்கம்

கண்ணன் துதி

எக்கடலு மெக்கிரியு மெவ்வுலகு முலகிற்
றக்கபல யோனிகள் சராசர மனைத்தும்
மிக்கவிதி யால்விதிசெய் விதியினை விதிக்குஞ்
செக்கமத நாபிமுகில் திருவடி துதிப்பாம்.

இதன்பொருள்

சத்தசாகரங்களையும் அஷ்டகுலபர்வதங்களையும் உலகமெல் லாவற்றையும், தகுதியான அவ்வுலகில் நிறைந்த பகுதியை யுடைய பல யோனிசம்பந்தமான சராசரங்கள் யாவற்றையும் மேலாகிய கட்டளையின்படி சிருஷ்டி செய்யா நின்ற பிரமதேவ னைத் தந்தருளிய செந்தாமரை மலர்போன்ற திருநாபியினை யுடைய ஜகத்ரக்ஷகனுகிய முகில்வண்ணனுகிய திருமாலின துதிரு வடிகளைத்துதித்து, ஸ்ரீவேதவியாசமூர்த்தியின் மெய்ப்பதத்தைப் போற்றி அற்புதமாகிய ஐவர் வெளிப்பட்ட சரித்திரத்தைச் சொல்லுகின்றேன் கேளும் சந்திரகுலாதிபனே! என்று வைசம் பாயன மகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளினர்.

மந்திரமூர்த்தியின் மகிமைப்பலன் சிந்தையுள் நீங்கா ஜன மேஜயனே! பாண்டவர்களைவரும் பாஞ்சாலியும் விராடபுரம் நீங்கி மாஞ்சோலைசூழ்ந்த வனத்துடமைந்தபூஞ்சோலைசேர்ந்த பொய்கையில் மூழ்கி, அருணோதயமானவுடனே ஜபதப விதிகள் முடித்துச் சூரியநமஸ்காரஞ் செய்து ஸ்ரீ வேதவியாசரையும் எம தர்மராஜனையுந் திக்குநோக்கிப் பணிந்து பாண்டவ சகாயனது பாதபத்மம் நினைந்து பரிதியினெளியினும் பழவடிவஞ் சிறந்து மகாலட்சுமிபோன்ற பாஞ்சாலியுடன் பாண்டவமுதல்வன்வீற்றி ருக்கும்பொழுது, வாயுகுமாரனும் செஞ்சிலை விஜயனும் ஆயுள் வேதியரளித்த நகுலசகாதேவரும் தங்கள் குலத்திற்குங் குணத் திற்கும் நலத்திற்கும் நன்மைக்கும் தகுதியாக மூரசுக்கொடி

படைத்த முன்னோனைத் தொழுது அன்னோனருளிய ஆசிமேற் கொண்டு பெரும்புகழ்ப் பிரகாசத்துடன் தமையனைச்சார்ந்திருந் தார்கள்.

இவ்வாறிருக்குஞ் சமயத்தில், நிகரற்ற வில்லைத் தாங்கிய தனஞ்சயன் தர்மராஜன் முகத்தைச் சந்தோஷத்துடன் பார் த்து செந்தூரத் திலகம்போற் சிவந்த புண்ணிருக்கக் கண்டு, ஆ அண்ணா! தேவரீருடைய நெற்றியில் வடுவுக்கிடமானவாறு யாதென்று திடுக்கிடக் கேட்டான். தர்மராஜன் சிறுநகைபுரிந்து யாதொன்றுஞ் சொல்லாம லிருந்தார். அப்போது மின்ன லைப் பழித்த மேனிபடைத்த பாஞ்சாலி விராடராஜனுக்கும் தர்மருக்கும் நேர்ந்த வாக்குவாதத்தினால் வந்த தீது ஈதென் றுரைத்தாள். அதைக் கேட்ட அப்போதே ஆச்சுனன் ஆக் ரமித்தெழுந்து இன்னந் தாமதமாவென்று நெருப்பென எரிந்து நெடுமூச் செறிந்து அண்ணன்மேற் பரிந்து ஐயோ! நான் பிரிந்திருந்ததின் துன்பமிதுவோ? இப்போதே என் கைப்பழிகளால் விராடபுரம் வேகக்கொளுத்தி மச்சநாடன் தலை யைவாங்கி வைக்கிறேனென்று நச்சரவம்போற் சீறி வெட்சி மாலையணிந்த ஆகமுந் தேகமும் அலற நடுங்கிப் பற்கடித்து விற்பிடித்து, அவனுக்கிச்சையான குலத்தைப் பச்சடி பண்ணு கிறேனென்று புறப்பட்டான்.

நெருப்புடன் காற்றும் நேசமானதுபோல் வீமனும் வெகு ண்டு வீறிட்டெழுந்தான். நகுலசகாதேவரிருவரும் வியாகூலத் தோடு நடுங்கி, விராடராஜனுக்கின்று வினைகாலமோ வென்று மெய்மறந்தார்கள்.

இத்தன்மை வாய்ந்த தம்பிமார்களின் கடுங் கோபத்தைக் கண்ட தர்மராஜன் ஓகோகோ! மோசம் வந்ததேயென்று தம்பி யாரைநோக்கி நேச விசுவாசிகளே! இராஜகுல சிரேஷ்டர்களே! நிஷ்டூரம்வேண்டாம். கோபத்தைத் தணித்து யோசனை செய் யுங்கள். ஒருவருடைய ஆபத்துகாலத்தில் மற்றொருவர் உதவி செய்தால் அவ்வுதவியை ஆயுள் உள்ளவரையில் மறவாமல் நன்றி குன்றுமை யென்னும் நீதியையும் தருமத்தையும் நாடி, முன்னுதவி செய்தவர்களால் என்னபிழை நேர்ந்தபோதிலும் அதைச்சகித்து மனம்பொறுத்து நன்றிமறவாமல் நன்மைசெய் பவர்கள் நாளும் பெரியவரென்று நானிலம் புகழ்வதுண்டு. சாதுக்களும் சாஸ்திரங்களிற் புகன்றிருக்கின்றார்கள். பற்பலநா

ளும் நன்மைபுரிந்தோரிடம் ஓர் நாள் சொற்ப குற்றமொன்று கண்டால், அவ்வற்பகுற்றத்திற்காக நன்றிகுன்றி மனங்கன்றி பொல்லாங்குசெய்ய நினைப்பதுபூணல்ல. புலமை கீழ்மக்கள்செய்கையாம். புண்ணியகுலத்திற் பிறந்த மேன்மக்களே! ஒரு நன்றி செய்தோர் பிழை நூறு செய்தாலும் சான்ரோராகிய பெரியோர் உள்ளத்தில் வைத்துப் பொறுப்பார்கள். கயவராகிய மூடர்களுக்கு எழுநூறு நன்றி செய்து ஒன்று தீயதாகில் முன்செய்த நன்றி எழுநூறுந் தீதாய்க் கெட்டுப்போம். ஆகையால் காடாக்கினி மூண்ட காட்டில் பன்னிரண்டு வருஷங் கஷ்டப்பட்டு, பதின்மூன்றுவது வருஷத்தை இந்த விராடனுடைய நிழலிலிருந்து இவனது உப்புந் தண்ணீருமுண்டு நாம் கழிக்கவெண்ணிய அஞ்ஞாதவாசத்தை பின்னமில்லாமற் கழித்தோம். எத்தேசத்தரசர்களிலும் இத்தேசத்தரசன் சரசன்; நாம்எங்கிருந்து அஞ்ஞாதவாசம் பண்ணலாமென்று முன்னம் வினவியபோது விராடபுரத்திற்கு மிஞ்சியபுரமில்லை. விராடனுக்கு மிஞ்சிய ராஜனுமில்லையென்று சொன்னீர்கள். உங்கள் சொல்லை நம்பி இங்குவந் தடுத்தபோது நமக்கிவன் ஊழியன்போலும் இவன தரசாட்சி நமதரசாட்சிபோலும் காலங் கடத்தினேமேயல்லது நாமிவனுக்குத் தாழ்ந்து நடுங்கி நடந்ததில்லையே. நம்மை இவன் அதிகாரஞ் செய்ததுமில்லையே; ஏதோ கோபம் பாபமென்னும் கொள்கையாலும் நமது தீவினைவசத்தாலும் குற்றம் நேரிட்டது. நாமவனுக்கொரு பொல்லாங்கும் நேரிடாமல் கக்கவேண்டிய கடமை நம்முடையதாயிருக்க நீங்களவனைக் கோபித்தெழுவது குணமல்ல. நம்மைத் தொழுது ரக்ஷித்த தோன்றலின்மீது பழுது நினைப்பது பாவம் பாவம். பார்த்தனே! பதறுதீர்களென்று தர்மராஜன் தடுத்தார். அதன்மேல் வீமரார்ச்சுனரிருவரும் நகுல சகாதேவரும் மூத்தவர்மொழித்த முறை பிறழாமல் மச்சராஜன்மேல்வைத்த கோபமாறி தர்மராஜனுத்தரவின்படி வன்னிமரத்திலேறி அவரவர் ஆயுதங்கைக்கொண்டு அந்தப் பாலைநிலத்திலமர்ந்தகோலாகலி நீலிஜடாதரிலோலாவதி சூலி கலாதரி குண்டலிகுமரி சாமுண்டியைப் பணிந்து வன்னிமரத்தை வலம்வந்து வணங்கி; தாயினது கருப்பம்போல் எங்களாயுதங்களைக் காத்தளித்த தமனியமான தருவேயென்று சந்தோஷப் பேரிட்டு சம்பிரமங்கொண்டாடி விராடராஜனுடைய கொலுமுகச் சாவடியிற் கூசாமற் புகுந்து ஐந்து தேவேந்திரர்

கள் ஒரு இந்திராணியுடன் வந்திருந்தவாறு தத்தந் தவிசேறி யிருந்தார்கள்.

அந்தவேளையில் செந்தழல் வளர்க்கும் அந்தணர் முனிவர் மந்திரி சாமந்தர் தந்திரி பிரதானியர் பந்துமித்திரர் வந்தவிருந் தினர் மாந்தர் வேந்தர்யாவருஞ் சேர்ந்துவந்து குந்திதேவியார் தந்த மைந்தரைவரும் குருகுலம் விளங்கப் பிரகாசித்த துமாகிற குமுதநண்பன்போற் சிங்காசனத்திலிருக்கக்கண்டுசந்தோஷசாக ரத்தில் மூழ்கி விராடராஜனுக்கு விரைவிற் றெரிவித்தார்கள்.

அச்செய்திகேட்ட மச்சராஜன் இச்சைமேற்கொண்டுஐயோ நாமென்ன செய்தோம்? இனியேன் செய்வோமென்றுமனவருத் தங்கொண்டு சந்தன தாம்பூல புட்பம் பன்னீர் மஞ்சள் குங்கும வாசனைத் திரவியம் தேங்காய் வாழைதிரண்மாங்கனிபலாபலபல பலகாரங்கள் பருப்புவர்க்கங்கள் தட்டு தட்டாய்எடுப்பித்துக்கொ ண்டு, பட்டு பட்டாவளிகள்கட்டுகட்டாகிய கட்டுவர்க்கங்கள்தாப் தாக்கள்முட்டுபடாதமுத்துமுதல்நவரத்தினங்கள்ஆணிப்பொன் னோடு மாணிக்கங்களும் காணிக்கைவைத்து தானும் புத்திரனுந் தருமபத்தினியும் பாண்டவர்களின்பொன்னடியில்வீழ்ந்துபுழுதி மேற் புரண்டு பிழைபொறுத்தருளும்பூரணநிதியே! பொறுமைக் கரசே! என்று துதித்துப் பூமியைவிட் டெழுந்திராமலிருந்தார் கள். அம்மூவரையும் தர்மராஜன் வாரியெடுத்து மார்போடணை த்து பக்கத்தில் வைத்து ஆதிசேடன் முடிமேற்றாங்கிய பூமியில் உம்மைப்போல் யாரிருக்கிறார்கள்? நீர் மெத்தவும் உத்தமர். புண் ணியசாலி; பொறுமைக்கு வேலியென்று புகழ்ந்து மகிழ்ந்து கொண்டாடிய குருகுலகோமானது குளிர்ந்த வாசகத்தால் மச்ச குலாதிப னெழுந்து மறுபடியும் பணிந்து வேந்தாகியசாந்தமூர் த்தியே! தோத்திரமென்பது தம்மைப்போல்பவர்க்குத் தகுமல் லது எங்கட்குத்தகாது, நாங்கள் அவ்வளவு பாத்திரமும் க்ஷத் திரமுங் கோத்திரமும் பெற்றவர்களல்ல. மேலும், அடியேன்மூர்க் கப்பேயன், விவேகமற்றசேயன், முன்கோபத்தாற் பதறிப் பேசு கின்றவாயன், அவ்வாறிருந்தபோதிலும் தங்கட்கு நான் தகுந்த நேயனெனப் பாராட்டி என்னல் நேரிட்ட குற்றங்குறைகளைமன் னித்துத் தீர்க்கவைரம் நாட்டாமல் சமயத்திற் சொல்லிக்காட்டா மல் தீனனெனவென்னை ஆண்டருளவேண்டும் பாண்டவர்களே யென்றுவேண்டிக்கொண்டான். இவ்வாறுபுகன்று அடைக்கலம் புகுந்த விராடராஜனை வேந்தர்வேத்தாகிய தர்மராஜன் பார்த்து

இரக்கமுள்ளவராய் இஷ்டபூர்த்தியாய் சொல்லத்தொடங்கினர். ஐயா. விராடபூபதியே! உமது விராடபுரத்தில் நாங்கள்வந்து சேர்ந்தபிறகு துன்பமென்பதில்லாமலும் எங்கட்குரிய சுதேசம் போலும் எங்கும்பிரக்யாதி யுண்டாகும்படியாய்வேற்றுமையின்றி வீற்றிருந்துவாழ்ந்தோம். இதல்லாமலும் நாற்றினடவால்விளையுங் கழனின் மடைவாய் நீரோட்டத்திற்சேற்கண்டைகள்நேரேறிப்பாய்ந்து விளையாடுந் தேரேறிய மச்சநாட்டரசே! உண்மையாய்ச் சொல்லுகின்றேன். மாசற்றமரபோய்! உன்னைவிடஎனக்கு வேறொரு உதவியுமில்லை. நான் இதுவரையிலும் அனுபவித்துவந்த உன் பட்டினத்தின் பதவியைவிட வேறொருபதவியுமில்லை. நீயும் உன் சகோதராளும் உன்புத்திரமித்திரபௌத்திராதியரும் நால்வகை சேனைகளும் எனக்குப் படைத்துணைவந்து உதவிபுரிவீர்களாகில், துராங்காரமாய் எங்களைவஞ்சித்தசத்துருக்களையும் ஒரு நிமிஷத்தில் யமலோகமேற்றி வைக்கிறேன். ஐயமற உட்கொள்ளுமென்று வையகம் வாழ்த்தும் மரபினன்சொல்ல, அதனால் மச்சராஜன் தேறி மகிழ்ந்து புகழ்ந்து மனத்துயராறி மாதொடு மகனுந் தீதகன்றுற்றார்கள்.

பிறகு உத்தரகுமாரன் நமக்கு உறுதி தேடிக் கொள்ளுந் தருணமிதுதானென்று தந்தை தாயாரிருவரையும் முன்னிட்டுத் தானும் தர்மராசனைப் பணிந்து வாய்பொத்தி நின்று சமுத்திரத்தை ஆடையாகத் தரித்தருளிய அகில வுலகத்தையும் வெள்ளிக்குடைநிழலி லடக்கியாளும் விதரணவேந்தே! தம்முடைய புகழ்ப்பிரதாபத்தைப் படிக்கவறியேன் சிறியேன். ஆயினும், இந்த விராடபுரமும் இதனது பூவளமுமுள்ள யாவும் தேவரீருடையதே. யாங்கள் யாவரும் தங்களுடைய ஏவற்பணிவிடைக்கேற்றவர்களே. எங்கட்குச் சுதந்திரமான அறுவகைப் படைகளும் தங்களுடையதே. இதன்றி என் தங்கையாகிய உத்தரகுமாரத்தியும் அர்ச்சுனராசற்குரியவளே. இவை ஏற்று எங்களை அடிமைகளாக ஆண்டுகொள்ளவேண்டும் ஆண்டைமாராகியபாண்டுநந்தனரே என்று வேண்டிக்கொண்டான்.

இவ்வாறு உத்தரகுமாரன் சொல்லக்கேட்ட விஜயகாண்டீபதரன் ஆஹா ஆஹா! என்றுகையமர்த்தி, கல்வியின்சாரமும் செல்வியின் அபாரமும்கைப்படைவீரமும் விற்பனவிவேகமும் கற்பனாரமும் கருணையுதாரமும் காமன் மயமும் சேமன் ஜயமும் காரியசித்தியும் கூடிய புத்தியுமுடைய காவலன் மகனே! உன் தங்கை



பாண்டவர் சுயரூபங்கொள்ள விராடராஜன் சபைக்கு
கிருஷ்ணமூர்த்தி வருதல்

யாகிய உத்தரகுமாரத்திக்கு நான் சிலகாலம் நாட்டியம் பழக்கி வைத்தபடியா லவள் எனக்குப் பெண்முறையாம். நீ இப்போது கொண்ட நினைவை நீக்கிவிடு. அல்லது உன்னிஷ்டப்படி தப்பாமல் உறவுகலக்க வேண்டுமானால் நன்னலமும் நற்குணமும் வாய்ந்த உனக்கினியவள், பொன்னிலமுதலிய மன்னவர் புகழும் என்மைத்தன் வாளபிமன்னனுக்கு உரியவளாவள் என்றான்.

இவ்வாறு அற்புதமாய் விளம்பிய பற்குணன் மொழியைக் கேட்டு அவ்விடத்திலிருந்த சாஸ்திர சம்பன்னருடன் தருமராஜன் விராடராஜன் முதலினோரும் சதாஸ்துவென்று சம்பிரமங் கொண்டாடினர்கள். உடனே விராடபூபதியானவன் கலியாண முரசவாத்திய முழக்கிவைத்து, பந்து மித்திர பார்த்திபர் தமக்கெல்லாம் பாண்டவர்கள் விராடபுரத்திலிருக்கிறார்களென்று வேவுகாரர்களா லறிக்கையிட்டான். இப்படியிருக்க விராடனுடைய முதற்குமாரன் சுவேதனென்பவன் கைலாசபதியைக்குறித்துத் தவஞ்செய்யப் போனானென்று முன்னமே சொல்லியிருக்கின்றேனல்லவா? ஓ ஜனமேஜய மகாராஜனே! அந்தச்சுவேதனனவன் மனோபக்திமாறாமல் வைராக்கியநிலைபற்றி மஹாதேவனைக்குறித்துத் தவமிழைத்துத்தாட்சியில்லாதகாட்சியும்பெற்று, எந்த ஆயுதம் பிடித்துப் போர்புரிந்தாலும் திரிபுவனத்தையுஞ் சேதிக்கும்படியாய் அருள் பெற்று மற்றெவரும் எதிரிலில்லாமலுற்று வெற்றிபெறும்படியா யிருக்கின்ற சித்தியை முத்திக்குவித்தாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி யறிந்து, இனிமேல் நம் குருகேஷேத்திரத்திற் கூட்டிவைக்கப்போகின்ற யுத்தத்தில் இவனொருவனை விட்டுவிடுவது யுக்தமல்லவே. எவ்விதத்திலு மிவனைக் கொண்டு போகவேண்டுமென்று அவனிருந்த இடத்திற்குப்போய்ப் பிரித்துபோன உன்னைப்பார்க்க இத்தனைநாட் சென்றதென்று உபசரித்துப் பரிந்து அழைத்துவந்து தன்னுடைய பகைவர்களையெல்லாம் அவனைழியச்செய்து துவாரகாபுரிக்குப்போய் அவனுக்கு விருந்து செய்வித்து வெகுமதியளித்துக் கேளிக்கை முதலாகிய சம்பிரமங்களில் காலதாமதம் பண்ணிக்கொண்டு பாண்டவர்கள வெளிப்பட்ட சமாசாரம் இன்றுவருமோ நாளைவருமோவென்று மாசற்ற தமதிருதயத்தில் எண்ணமுற்றிருக்குஞ்சமயத்தில், தூதர்கள் திருமுகம் கொண்டுவந்து கொடுத்து வணங்கினர்கள். கண்ணன் அதைப் பிரித்துப் பலபத்திரருக்கெதிரில் படித்துக்காட்டி, அண்ணா! நமதுபாண்டவர்கள் அஞ்ஞாதவாசமொழித்து வெளி

ப்பட்டார்களாம். இதன்றி உமது மருமகன் அபிமன்னனுக்குத் திருக்கலியாணம் நடக்கப்போகிறதாமென்றுசொல்லிமிகுந்தவிருப்பத்துடன் நீருண்ட கருங்கடல்போல் நிறங்கொண்ட கோபாலன், பலராமர், சாத்தகி, கிருதவன்மன், கிருதவீரியன்முதலாகிய குடும்பங்களும் வண்டுசெறிந்த மதுமாலையணிந்த சுருள்கருங் கொண்டைசிறந்த தங்கை சுபத்திராதேவியும் அபிமன்னனும் கூறிய வேற்படைகொண்ட சுவேதனும் குடிபடைகளும் சூழ்ந்துவர. அவர்களை யழைத்துக்கொண்டு விராடபுரம் வந்து சேர்ந்தார்.

இவ்வாறு மேகவண்ணனென கண்ணனும் அவரண்ணனும் வருகின்றார்களென்று தூதுவராற் கேள்விப்பட்டு, சோக நீங்கிச் சுகம்பெற்றிருந்த பாண்டவர்களும் விராடராஜனும் வேதநாயகனைக் காணவேண்டுமென்று எதிர்கொண்டு சென்று கண்டார்கள். விராடன் இருவர் தேகமும் ஒன்றென்று சொல்லும்படியாய் கண்ணனை இறுகத் தழுவியணைத்து ஆகாயமளாவிய சிகரகோபுரஞ் செறிந்த பேரவையி லழைத்துவந்து, பலராமர் சாத்தகி யாதவகுமாரர்கள் முதலியபேர்களும் அரவணைப் பள்ளி நீங்கிய ஆதிமத்தியாந்தரகிதனெனே வந்த பெரியோர் முதலிய உரியோர் யாவர்களுக்கு தகுதியாகிய சன்மானமும் ஆசனமும் வெகுமானமும் அவரவர்களுக்குத் தக்கவாறு அளித்துக் களித்திருந்தான். மற்றுமுள்ள மந்திரிபிரதானியரும் யாதவசம்பந்தர் பலரும் முறையே தருமரையும் ஏனையோரையும் வணங்கித் தத்தம் ஆசனத்திலமர்ந்தனர். சுபத்திராதேவியும் யாதவஸ்திரீகளும் ஸ்ரீகிருஷ்ணருடைய அஷ்டபாரியர்களும் தேவகிதேவியார் ரோகணிதேவியார் மற்றுமுள்ள தாய்மாரும் திரௌபதாதேவியிருந்த அந்தப்புரம் போய்ச்சேர்ந்து சகலவித மரியாதையுடன் உபசரிக்கப்பெற்றுச் சுபங்கொண்டாடியிருந்தார்கள். அபிமன்னன் நெருங்கி தந்தையர் தம்மைவணங்கி பாஞ்சாலியைப் பணிந்து மாஞ்சோலையிற் குயில் கூவும் வளமுடைய மச்சநாட்டரசனுக்கும் வந்தனந் தந்தான். அவர்களியாவரும் ஆலிங்கனம்பண்ணி ஆசீர்வதித்து ஆண்மைமிக்க பாண்டவர் பக்கத்தில் இளஞ்சிங்கம் வீற்றிருக்குந் தன்மைபோல் இருக்கச் செய்தார்கள். அப்போது அத்தப் பிள்ளையைப் பெற்றவர்கள் கண்டு மிகவும் மகிழ்ந்து வியப்புடன் புகழ்ந்து நயந்துவியந்து பூர்வஞ்செய்த புண்ணியநலமே இப்பிள்ளையாகப்பிறந்ததென்று

ஆனந்தவாரியில் அமிழ்ந்திருக்கும்போது தருமசொரூபரான தருமராஜன் விடாத கடாக்ஷ வீக்ஷண்யப் பார்வையால் வீரப் பிரதாபத்தோள்பூரித்த அபிமன்னனைநோக்கி ஸ்திரமான வார்த் தைகளைப்பேசிச் சொல்லுக்குச்சொல் சாஸ்திரயுக்தமாய்ச் சொல் லுந் துணிவைத் தேர்ந்து ஆசைமேலிடச் சிறந்து அகமகிழ்ந் திருந்தார்.

இவ்வாறு பெரியதந்தையினிடத்திற் பேசும் அபிமன்னனை மாமனுகப்போகிற விராடராஜனும் மைத்துனனுகிய உத்தரகுமா ரனும் சுவேதன்முதல் மற்றுமுள்ளோரும் சுதக்ஷணைதேவியும் நோக்கிக் களிகூர்ந்து செவிகுளிர்ந்து முகமலர்ந்து அகமகிழ்ந்து ஆனந்தங்கொண்டாடினர்கள்.

இத்ததியில், ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய திருவருட்பயனல் விராடபுரம் வந்து சேர்ந்த சுவேதனென்பவன் தன் தந்தை யான விராடனையும் சிறியதந்தையர்களையும் தருமராஜன் முத லியபேர்களையும் தாயாகிய சுதர்க்கணையையும் பணிந்தான். மச்ச ராஜனொருவனும் இச்சைமேலிட்டெழுந்து மைந்தன்மேல் விழு ந்து, விவேகக் கொழுந்தே என்று மார்போடணைத்து புஜத் துடன் புஜமொத்தி முகத்துடன் முகஞ் சேர்த்து இருகரத்தை யும் எடுத்துப் பிடித்து உச்சிமோர்ந்து உள்ளங் களித்துக் கண் ணருள் தழைத்துச் சிலமொழி புகன்றான். அப்பா என் கண் மணியே! நீ எந்தயிடத்திலிருந்தாய்? தந்தவண்ணனுக் கிளைய நந்தகுமாரன் உன்னை எங்கே கண்டார்? இவருடன்கூடி நீ எப் படி வந்தாய்? எவ்விடத்தில் நீங்களிருவருஞ் சந்தித்தீர்கள்? இது எனக்கு நல்லகாலம் என் மனங்குளிரச் சொல்லடா என் சுதனுகிய சுவேதனே என்று விராடன் கேட்க, கண்ணன் சொல் லத் தொடங்கினர். ஓ விராடபூபதியே! உமது குமாரன் தவ வேடம் பூண்டு அருந்தவமியற்றி சிவனருட்பொருந்திப் பெருந் திறற்படைகளும் பெருமையும் பெற்றான். இத்தன்மையாகச் சித்திபெற்றிருக்கிற திடத்தை யானறிந்து இந்த உத்தமனை யழைத்துக்கொண்டு துவாரகைக்கு வந்து எனக்கு அசாத்தியமா யிருந்த சத்துருக்களை யெல்லாம் இவனொழித்துவிட்டு இவ னுக்கு விருந்து முதலிய உபசாரஞ்செய்து என்னிடத்தில்வைத் துக்கொண் டிருக்கும்போது, நீங்களெழுதியனுப்பிய திருமுகங் கண்டு மச்சநாடடைந்தோம் பூபாலாவென்று கோபாலன் சொல்ல, அச்சொற் கேட்ட விராடராஜன் பக்ஷமேலிட்டு மகன்

பக்கத்திலிருந்து தவம்புரியப் போனதுமுதல் வந்ததுவரையி லும் சாங்கோபாங்கமாக க்ஷேமலாபங்களை விசாரித்து, பகைவ ரென்னும் யானைகளைக் கொல்லுகின்ற சிங்கம்போன்ற பாண்டவ ருடன் யாவரையும்பணிந்து சபாமண்டபத்திற் பொருந்தியிருந் தார்கள். விராடராஜனுடைய மற்றப்பிள்ளைகள் யாவரும் தமை யனை சுவேதனை சாஷ்டாங்கமாகத் தொழுது அவனுபசரிக் கப்பட்டு தங்கியிருந்தார்கள். அன்னையாகிய சுதக்ஷிணை தேவியும் தன்னைப் பணிந்த சுவேதனை வாழ்த்திப் பொன்னுக்கிணையாகிய புத்திரியின் கண்ணுக்கினிமையான கணவனைப் பார்த்துக் களிப் போடிருந்தாள்.

அப்போது, பாஞ்சாலதேச ராஜனும் சோமுகாளும் அவர் கட்குரிய நால்வகைச் சேனைகளும் இளம்பஞ்சபாண்டவர்களும் திருஷ்டத்யுமனன் முதலினோரும்வந்தார்கள். அவர்களை விரா டராஜனும் பாண்டவர்களும் எதிர்சென்று கண்டு ஒருவரையொ ருவர் தழுவிக்கொண்டு தகுந்த மரியாதையுடன் புகழ்ந்து சபா மண்டபம் வந்து சேர்ந்தார்கள்.

பின்பு குந்திபோஜகுல ராஜர்களும் மந்திரதேசாதிபர்களும் புத்திரவர்க்கங்களும் மித்திர வேந்தர்களும் பாண்டிநாட் டரச ரும் சோழராஜரும் சேரபூபதியும் மகா தேசாதிபர்களும் இன் னம் பற்பல தேசத்திறைவர்களும் வன்ன வன்ன வாகனமேறி வந்தார்கள். அன்னவர்க்கெல்லாம் மன்னவர் வரிசையிற் சொன் னவண்ணங் குறைவில்லாம லுபசரித்து ஆசனத்திலமர்த்தினர் கள். வந்தவேந்தர்கள் சிந்தையுவந்து பாண்டவர்களைப்பார்த்து அந்தோ! நீங்கள் பன்னிரண்டு வருடங் காட்டில் வாசம்பண் ணும்படியும் நாங்களுங்களைப் பிரிந்திருக்கவும் தேரிட்டது அல் லவா. ஆகா வினையேயென்று மனம் நொந்தார்கள். தம்மைக் குறித்து வெம்புகின்ற தராதிபர்களைத் தருமராஜன் நோக்கி சகல சாஸ்திரங்களுங் கற்ற சம்பன்னர்களே! மேல்வினை எவரையும் மீளவிடாதே. மேதினியிற் பிறந்த வேதனுக்கும் வினைக்குப் புறம்பாய் மீளப்போகாதே. ஆகையால், நடந்துபோன காரியத் தைப்பற்றி விசனப்படுவதில் லாபமொன்றுமில்லை. இனி நடக்க வேண்டிய காரியங்களை நன்காராய வேண்டியதென்று சாந்த மாகப் பேசி, ஓ தரணீசுவரர்களே! தாமரைச் சேக்கையிற்படுத்த அம்மாங்கள் அம்மலர்த்தேனுல்நனையுண்டஇறகுகளாவானத்தில் விரித்துலாச்செய்த வண்மையும், தானம்பொழியுந் தந்தாவளத் திண்மையும், நீர்வள நிலவள தன்மையுமுடையஇம்மச்சராஜன்வ சந்தகால மன்மதன்போன்றமகாராஜன். இவருடையநாட்டிற்கு நாங்களெப்போது வந்தோமோ அப்போதே, காட்டிற்றிரிந்த வருத்தமுங் எங்களை மாட்டி வருத்திய தீவினைப் பொருத்தமுங் கேட்டையடைந்து போய்விட்டது. இந்த அன்பருடைய பேரு

தவியால் துன்பமகன்றிருந்தோம். முன்பு நான் சிக்கிக்கொண்ட தெவ்வாறென்னில், சுரலயை பேதமில்லாத சரிகம பதநி என் னும் சப்தசுரதாளத்துடன் சேர்ந்த குரல் - துத்தம் - கைக்கிளை - உழை-இளி-விளரி-தாரம் இவை முதலிய ஏழிசைபாடல் விரும்பி வந்துருகிய அசுணப்பக்ஷிகள் பறையடி யோசை கேட்டுச் சிறை யடியாதயர்ந்து கைப்படுமாறு விண் ணுக்கிறைபோன்ற மண் ணுக்கொருவனென வாண்ட திரிதராட்டிர மகாராஜனென் னும் எமது பெரியதந்தையின் வார்த்தையால் மயங்கி திரியோதனன் சகுனி துர்ச்சாதனன் கர்னன் இவர்கள் கூடி யெண்ணிய வஞ் சனையிலகப்பட்டு மனமெலிந்து வருந்தினேன். இனிதான் செய் யவேண்டிய காரியமென்னே? நீங்கள் யாவரும் என்னைக் காக்கும் படி கண் ணுக்கிமைபோற் கலந்திருக்கின்றீர்கள் உங்கள் சித்தம் என்பாக்கியமென்று மெத்தவருந்தியுரைத்த உத்தமன்சொல்லைக் கேட்ட கொற்றவர் பலரும்பகைத்து இப்போதிவ்விடத்திற்சேர் ந்திருக்கின்ற நாமெல்லோரும் இதுவே பயணமாகப் புறப்பட்டு இன்றைக்கேசண்டைவிளைத்துத் திரியோதனன்மண்டையோலை யைக் கிழித்து அவனுக்குத் துணைவருபவர்களைக் கொன்று களித் து ஜயம்ஜயமென்ன வருவோம் வாருமென்று தருமநந்தனன் கருத்திற்குப் பொருத்தமாக வற்புறுத்தி சொன்னர்கள்.

இவ்வாறு மன்னர் மன்னர்கள் பின்னுருமல் முன்னிட்டு உரைத்த மூர்த்தண்ய மொழியை விராடர்கோன்கேட்டு சபையை விட்டெழுந்து சாஷ்டாங்கமாகவிழுந்து கோபாலகிருஷ்ணனைச் சிந்தித்துப் பூபாலவேந்தரைச் சந்தித்துஇருகரங்குவித்து வந் தித்துத் தான் சிந்தித்திருந்ததைத் தெரிவித்துக் கொண்டான். அதாவது, இந்நிலங் காக்கும் இறைவர்காள்! கேண்மின்; மலை மகள் மதித்துத் துதித்து வணங்கப் பூரித்தபுயமும் நீதிசாஸ்திர நெறிமுறைப்பயலும் சொற்பொருள் நயமும் விற்பன வியனும் சௌந்தரியமும் கூர்வேல் தாங்குத் தைரியமுமுடைய பாண்டவ குபுத்ரனென்னும் அபிமன்னராஜனும் என் தவக்கொழுந்தாகிய உத்தரையாட்கும் கலியாணவைபவங் கண்டருளிய பிறகு வாளை கள் பாய கமுகம் பாளைகள் சாய வனிதையருடி மகிழ்நருங்கூடி விளையாடும் வளநாடாகிய குருநாட்டைச் சண்டையிட்டுவாங்கப் புறப்படுவோம். அது வரையில் நீலிரியாவரும் மன்னிக்கவேண் டும். மேலும், மாயனுக்கு மருமகனுகவாய்த்த வாளபிமன்னன் எனக்கு மருமகனுக வாய்க்கின்றது பல தேசாதிபர்கள் ராஜாதி பர்கள் வரும்படி முற்பிறப்பிற்செய்த தவம் இப்பிறப்பிற் கைவல் லியமாயிற்றென்று சிறப்புற்றேன். மாலேதாங்கிய வண்புய மோங் கிய மன்னவர்களே! சக்கிரத்தில் முகூர்த்தம் நடக்கும்படிச்சில வுகொடுத்தருள வேண்டுமென்று சந்தனபாளித புஷ்பம்தாம்பூல பலாதிகளுந் தட்டு தட்டாய்வைத்து முட்டுப்பாடில்லாமல் கை

கட்டிக்கொண்டு விராடராஜன்கேட்டான். அதன்மேல் சகலருஞ் சம்மதித்துத் தருமராஜனது தாயார்முகத்தைநோக்கி அவ்வாறு நடத்துவதே அதிகபலமென்றார்கள்.

அப்போது அன்புக்கொருவித்தாகிய தர்மராஜன்சொல்லிய தென்பும் அவர் மொழியைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி முதலாயினோர் புஜங்கள் குவித்து சுபங்கள் மலிந்து அகமுமலர்ந்து ஆசைமேலிட்டார்கள். பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம்பண்ணப் புகுந்தகாலையிற் பிரிந்த தௌமியரும் பன்னீராயிரம் பிரமக்கியானிகளும் வந்தார்கள். அவர்களைக்கண்டு அன்புமேற்கொண்டு சுவாமிகள் எங்கள் தொண்டு அகன்றதென்றுபுகன்றசரண்மேற் பணிந்தார்கள். அவ்வாறுபசரித்துத்தொழுத ஐவர்கட்கும்ஆசீர்வதித்து திரௌபதாதேவி வேதிகை சுபத்திரை ரேணுமதி விஜயை முதலினோரும் பணிந்தார்கள். அவர்களுக்கும் மங்களாசாசனஞ்சொல்லி இளம்பஞ்சபாண்டவர்கள் வனசாதேயன்அபிமன்னன் நிர்மித்திரன் ஐயக்ஷத்திரன்முதலிய புத்திராளும்பத்தியாய்ப் பணிந்தார்கள். முத்திக்குமூலமான முனிவர்வாழ்த்தி எத்திக்கும்புகழ் கீர்த்திபெறுங்களென் றிசைந்து தருமநந்தனரைப்பார்த்து ஓ தனிகரே! எம்மைவிட்டு நீங்கி அஞ்ஞாதவாசமிழைத்த ஒருவருடம் வரையிலும் நடந்தசங்கதியாவும் உரைத்தருள வேண்டுமென்று கேட்டார்கள். இங்ஙனங்கேட்டதௌமியர் முதலிய மகானுக்களும் மகிழ்வுறும்படி நிறைவுறும் செய்திகளை குறைவறக் கூறினர். இவ்வண்ணந் தருமராஜன் சொல்லக்கேட்டு சந்தோஷித்த முனிவரர்களையும் தௌமியாசாரியரையும் பார்த்து, கைகுவித்து வேதவேதியர்களே! நமது வாளபிமன்னனுக்கும் உத்தரகுமார்த்திக்கும் பாணிக்கிரகண முகூர்த்தம்நடக்கவேண்டியபடியால், அதற்குச் சுபதினமொன்று குறிக்கவேண்டுமென்று தருமராஜனும் விராடராஜனும் விளம்பினர்கள். அவ்வாறே நன்றென்று நக்ஷத்திரம் லக்கினம் திதி ஓரை யோகம் கரணம் பொருத்தம் திருத்தமாகிய விவாகசக்கரமுதலியதுஞ்சோதித்து, தாங்கள் கற்றுணர்ந்த தருமசாத்திரத் திறன்களெல்லாங் காட்டித் தகுதியானபலன்நாட்டி முகூர்த்தநாள் நியமித்தார்கள். அச்சுபத்திற்குப் பந்தர்ப்பாடிகள்முதலிய அலங்காரங்கள்செய்ய வேண்டியிருந்ததால், பாண்டவர்களையும் அவர்கட்குவேண்டியவர்களையும் உபலாவியத்திற்கனுப்பி அவ்விடத்திற் சௌக்கியமாயிருக்கும்படிசெய்து, சகல சாமக்கிரியைகளும் உடுகறை உசிதங்களுங்கொடுத்து, ஒருநாள்போல் பலநாளுஞ் சலிப்பில்லாமல் விசாரணை செய்துவந்தான்.

இவ்வாறு தடையற நிறைவேற்றிய விராடராஜன், தனது நகரலங்காரஞ் செய்யும்படி பேரி முழக்கிவைத்து கருங்கடற்கலை

யுடுத்தகாசினியையாளுங் காவலர்களுக்கெல்லாம்திருமுகம்தூது வரால் ஒருமிக்கவிடுத்து,விராடபுரம்முழுதும் பவளக்கால்நாட்டி தவளவிட்டம்பூட்டி மரகதவோலைகணீட்டி வச்சிரப் பிரதிமை மாட்டிமாணிக்கமலர்மாலை தூக்கிமுத்துக்கொத்து வடங்கள்வீக்கி ஆணிப்பொன் ரேகையமைத்து, தொங்களிவட்டம் சுவரொளி வட்டம் நிலவொளிவட்டம் நிழலொளிவட்டமுதலிய தூங்கா விளக்குகள் பாங்குற வமைத்து, வாழை கமுகு மாங்கனி பலாக் கனி தாழை இளநீர் சரக்கொன்றை ஈந்து பாளை கரும்பு பற்பல மலர்களும் இரசித குண்டு ஜாலர்கள் சடைமாலைகள் தமனியப் படங்கள் நீலக்கண்ணாடி நிலைக்குங் கண்ணாடிகள் முத்தின் தூண் கள் ரத்தினப்பூண்கள் வேடிக்கைமான்கள் விநோத ஆண்கள் வாரணங் குதிரைகள் வஸ்திரங்கள் தோரணநிரைகள்சோடித்த வரைகள் மேல் விதானங்கள்விதவிதக் கொடிகள் பலவிதக்குடை கள் பைம்பொன்மேடைகள் வேதிகைச்சாலைகள்மென்மலர்ச்சோ லைகள் கும்ப குடங்கள் கூடமாடங்கள் விம்பவேடங்கள் வெயில் மணி சிகரங்கள் எண்டிசையண்டருள் கொண்டாடச் சமைத்து, சாந்து சந்தனத்திரளால் தரையெலாமெழுகி, முத்துச் சுண்ணத் தால் மொக்கிட்டு, கலியாணமண்டபக்கலசந்திருத்தி, மணவறை நிறைய மாலைபொருந்தி, மதுகர நிறைந்த பூமாலை மகிழ்ச்சி சிறந்த பொன்மாலை வாடாப்பவள மலர்மாலை தேடாப்படிகத் திரண்மாலை ஆணிமுத்துமாலை அழகு ரத்தினமாலை அரிமரகதப் பசுமாலை அரவின் மாணிக்கமாலை வச்சிரமாலை முதலிய பச்சிலை மாலைகளும் புகழ்மாலைகண்டு பூமியோர்கொண்டாடஜோடித்தார் கள். பின்பு கலியாணவாசலில் சாலுடன்கரகம் மூலைப்பாலிகை தழல்வளர்க்குமேடை குடவிளக்கு வாடை அரசு ஆல் முருக்கு இம்மூன்றி லொன்றுவது அல்லது இம்மூன்றுஞ்சேர்ந்தாவது நாட்டுவதற்கு அரசாணிக்காலெனப் பெயர் பெற்றதும், மாவிலை தருப்பை அறுகு மஞ்சள் குங்குமம் சந்தனம்தாம்பூலம்வாழைப் பழம் தேங்காய் புட்பம் வெல்லம் அக்ஷதை சாம்பிராணி சூடம் சமித்து நெய்யும், பாலொடு தயிரும் பயிறுடு பொரியுமமைத்து, நாளை யுதயத்தில்பத்துநாழிகைக்கு முகூர்த்தமென்றுபாண்டவர் களுக்குத் தெரிவித்துத் தன்னுடு முதலிய பன்னுட்டுக்கும் பறை சாற்றுவித்தான். இச்சங்கதியைக்கேட்ட தர்மராஜன் முதலிய பாண்டவர்கள் பந்துவர்க்கத்துடன்சிந்தைமகிழ்ந்துதேவாலயம் விஷ்ணுவாலயங்களுக்குப்பூசைகள்செய்து திங்கள்மரபிற்றோன் றியசிறுவனே மணக்கோலமாகக் கொண்டுபோகவேண்டுமென்று போங்குந் தடத்துப் புனிதநன்னீரைத் தங்கக்குடத்திலெடுத்து வந்து சங்கையில்லாத சாஸ்திரம் பாராட்டி ஓங்கிய புதல்வனை யுவந்து நீராட்டி வெண்டுகிலால் நீர்துவட்டிச்சிங்காசனத்திலே ற்றிச் சிகைசீவி முடிந்து சிலபணி பூணந்துதேமலரணிந்துதிரி



அபிமன்னனுக்கும் உத்தரைக்கும் கலியாணம்

புண்டரந் திட்டித் திலகமுங்காட்டிக் குண்டலமாட்டிப் பச்சைக் கல்முருகிட்டு முத்தாரமுதலிய பத்தாரம் வித்தார பதக்கங்களுந் திருத்தித் திருமுடி பொருத்தித் தங்கப்பூனூல் தரித்துப் பாஜி பந்து தோளணியுடன் நாககங்கணங் கடகங் கணையாழிபூட்டி அரைப்பட்டிகை அரைஞாண் வீரகண்டை முதலியவைகளும் வீக்கி, திவ்விய வேஷ்டிகளா லலங்கரித்து, உயரமுஞ் சுற்றும் உன்னதமாகிய ஏழுறுப்பும் பூமியிற்படிந்துகிம்புரிப்பூண்கொம்பு கட்கிட்டு முகபடாஞ் செறித்து கவுட்குழிக் கன்னமகரிகைபொறித்துக் கும்பகலசஞ் சொம்புடனமைத்து வெண்கவரி செங்கவரி தூக்கி ஒன்பதுவகையிரத்தின அவுதாவமைத்து அரசக்களிறுகிய பட்டத்து யானைமேல் அபிமன்னனையேற்றி முத்துக் குச்சுடன் பவளமமைந்த சந்திரவட்டக் குடைகவிக்க வெள்ளைக்கொடிக ணெருங்க ஆலவட்டஞ்சுருட்டிபீலிக்குஞ்சம்பவளச்சவளம்விருதுடால் கருடடால் மயிற்பீலி வெண்சாமரம் மேற்கட்டிதோரண முதலியவை நெருங்க இளம்பஞ்சபாண்டவரைவரும் பஞ்சவர்ணக் குதிரையேறிப் பக்கத்தில் விடுக்க மத்தகஜத்திலமர்ந்தமற்றப்பிள்ளைகள் சுற்றும்நடக்க பல்லக்கிலேறிய பார்த்திபர் முடுக்க மல்லர்கள் சிலம்பவரிசை முன்கொடுக்க மாதவர்வேதியர்வாணர்களடுக்கக் கீதநாதக் கிளரொலிதொடுக்க நரகஜபேரிநடன முன்னடிக்கத் துரகஜதுந்துமி சுரஜதியடுக்க ஐந்து கருவியும் முந்தி முன்னெங்க பதிபந்தியாய்ப் பந்துஜன வேந்தர் அந்தணர் ஆதுலர்க்குத் தானங் கொடுத்துக்கொண்டுபோக மத்தளதாள மேளத்துடன் நாட்டியமாதர்கள் நடிக்கச்சங்குசிங்கநாதக்கொம்பு பிடிக்கக்கட்டியக்காரர்மன்னர்களைச்சுட்டிக்காட்டிக்கொண்டாடப் பட்டுவான்கள் வேந்தர்களின் பிரதாப விருதுகளை யெடுத்துப் பேசக் குலமுறை வந்திப்போர் தலைமுறையடுக்கைக் கூறிப்புகழ்ந்து தொடர்ந்து அடர்ந்துவந் தொதுங்க இந்திரவாத்தியந் தும் தும் தும்மெனச்சேர்ந்த நாற்சேனை திம் திம்மென நந்த கோபாலரும் தந்தவண்ணனும் கொத்தலர் கூந்தலர் வந்தவர் பலரும் தேரின்மேலும்வண்டிகள்மேலுஞ்சென்றார். திரௌபதா தேவியும் சுபத்திராதேவியும் அஷ்டலக்ஷ்மியான பாரியர்களும் ஆயமாதரும் முத்துப்பவளமும் மாணிக்கத்தாலமைத்தசித்திரப் பல்லக்கிலேறிச்செல்ல, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுஞ்சென்றனர். இவ்வாறிருவர்கள் வருவதைப் பார்த்து ஆரியர்களும் சீரியர்களும் பூமாரி பொன்மாரி மணிமாரி நவதானியமாரி அக்ஷதையுடன் வாரிச்சொரிந்து வாழ்த்தினர்கள். மங்கலியப்பெண்டு மகிழ்ந்து மஞ்சளணிந்து மஞ்சள்குங்குமப் தாம்பூலம் தேங்காய் வாழைப் பழ முதலிய மாங்கனி தேங்கனி இவைகளை வருவார் போவாராகிய மங்கையரைப் பூசித்து விசுவாசித்து கொடுத்துப் போற்றினர்கள். தண்ணீர் வெந்நீர் ததிபெருக்கிய நீர் உண்ணீருண்ணீ

ரென்று உபசரித்து வழியிலேப்பு மாற்றினர்கள். இவ்வாறு எக்களிப்புடன் விவாகமுரசங்களும்தியாகமுரசங்களும்பூரணகலசங்களும்தோரணமாடங்களும் வாரணகூடமும்ஆரணபாடங்களும் கோபுர விசேடங்களும் பவளப்பட்டைமுத்துப்பட்டைபத்திபத்தியாய் அடித்திராநின்ற சுவர்களும் திண்ணைகளும் தெருவாசல்களும் பன்னீர்தெளித்துக் கோலமிட்டுத் தீபமேற்றிவைத்துமுத்தாலாத்திபவளாலாத்தி நீராலாத்தியெடுத்துகண்ணைச்சில்கழித்தலும்மங்களலாலி சுபசோபனவாருப்பாடல்படித்தலும்கையைச் சுற்றிமடக்கிகன்னத்தில்நெட்டையொடித்தலும் இப்பேர்ப்பட்ட மணமகன் நமக்கமையாமற் போயினனேயென்று கன்னியர்கலங்கிக் கவலைகொண்டு துடித்தலும்கட்டியிளமாதர்நடித்தலும் இவ்வாருக இன்னம் பலவித சிங்கார வலங்காரங்களையுடைய விராடபுரவீதியைக் கடந்து பவனி வருகின்ற பரந்தாமன் மருமகனைக் கண்டு மாதர்மயங்கி வழிமேற்பணிந்து மயல்கொள்ளும்படி விவாகமண்டபத்தின் முன்முகப்பிற்கு வந்தார்கள்.

இவ்வண்ணங்கோலங்கொண்டுவந்தவர்கள் அபிமன்னனைச் செவ்வண்ணமேனித் திர்ஷ்டத்தூய்மனும் திருமாலும்பெருமன்னர் சூழவுங் கைகொடுக்க, மேகம்விட்டிழியு மின்னொளிபோல் பட்டத்துயானை விட்டிழிந்து பிராமணர் முனிவர் பாவலர் பூவலர் கோவலர் முதலிய யாவரையும் பணிந்து குருசாமியார்பெண்கொடுக்கு மாமியார் இவரிருவரையும் போற்றி அவர்கள்புறவளித்த அருண்மொழியும் பெற்றுச் சம்பிரமமாகச்சதிர்ச்சாலையிலிருந்து உம்பர் கொண்டாடப் பொன்தானமளித்து ஓங்கிய தருமதானம் புரிந்து உற்றூர் பெற்றூர் பரிந்து உடனிருந்துவிருந்து அருந்தச் செறிந்து வருந்தி உபசாரவரிசையளித்துவரும்வண்மையைக்கண்டு மகிழ்வுற்ற வாளபிமன்னனை முகூர்த்தசமயமென்று தௌமியர் முதலிய முனீஸ்வரர்கள் வந்தழைத்தார்கள்.

உடனே கலியாண மாப்பிள்ளையானவர் இராஜவைபவத்துடன் கைலாகுகொடுக்குங் காரியஸ்தர் பக்கத்தில் நெருங்கி மணப்பந்தலில் வந்தார். அப்போ தங்கிருந்த வேதவேதியரியாவரு மெழுந்து வேதநான்கும் மொழிந்து மன்மதனுந் தலைசாய்க்கும் வடிவமைந்த மால் மருமகனை வாளபிமன்னனை அறுகாற் பீடத்திலேற்றி மந்திராக்ஷதையுடன் வாழ்த்தி மான்போலும் விழிபடைத்த உத்தரகுமாரத்தியைத் தேன்போலுஞ் சொல்லமைந்த சேடியர் ரதிதேவிபோற் சிங்காரித்துச் சகலவித மேளசம்பிரமத்துடன் கூட்டிவந்து நாயகனுக்கு வலப்பாகம் வைத்துத் திரையால் மறைத்து நலங்குமுதலிய சடங்குகளும் புரிந்து நாகரீக மாதர் வாழ்த்தொலிசெய்ய காலில் சிலம்பு கலிக்கப் பிரதக்ஷணம்

வந்து அந்தணர் வேதமந்திரமோத சந்திரகுலத் திந்திரர்சேரச் சுந்தரக்கனல் சோதியாய்வளர நந்தகுலாதிபர்வந்தனைசொல்லக் கந்தனை கணேசனைக் கமலனைப்பூசித்து இந்திராதிபரையேற்றி வணங்கி மாசுதீர்ப்போலுல் மறைவிதிமுடித்துப் பிரமசாரி விரதங் கலைத்து ஸ்நானஞ் செய்வித்து சாதராதரித்து வைதிக சடங்குமார்க்கங்காட்டிக்கங்கணங்கட்டி காலாழிமாட்டிகரத்தில்வாள் கொடுத்துக் கருணையாளர்க்கும் கனகமேற் கொடுத்து மேற்பட்டுடையை விரித்து மேன்முடி விதிமுறை செவியில் விதம்பட வுரைத்துத் தேங்காய் வாழைப்பழம் சிற்சில புட்பம் அக்ஷதை மஞ்சள் அடைக்காய் கண்ணுடி சந்தனம் திருமங்கிலியம் இவைகளையெல்லாம் பொற்றும்பாளத்திலிட்டு நற்றவர்முதலியகற்றவர், பலரும் உற்றூர் பெற்றூர் உறவினரெவரும் இருகரத்தாலும் பரிசித்து இஷ்ட தெய்வப் பிரார்த்தனையுடன் வாழ்த்தவும் தாய் தந்தை இருவரும் தத்தம்பண்ணவும் மாப்பிள்ளை மைதனன் குருவைத் தனதையை வாழ்த்தவும் செந்தியில் நெய்யைச் சிதருமற் கொட்டத் திரைச்சீலையை சற்றே தாழ்த்திப்பிடிக்கவும் ஜயம்ஜய மென்று தேவவுலகத்தினர் தேன்மாரிபொழியவும் மாவுலகத்தினர் பொன்மாரிபொழியவும் பங்கஜமுகமாதர் வாழ்த்தவும் அங்குசவயமள்ளர் போற்றவர் எங்கணும் பருணிதர்களேத்தவும் நரகஜதுந்துமியொலிக்கவும் சுரஜதிதாளங்கலிக்கவும்சங்குமுழக்கந் தழைக்கவும் திங்கட்குலத்தார் செழிக்கவும் தம்புருவீணையிசைக்கவும் தும்புருவாத்தியர் மதிக்கவும் புல்லாங்குழல் மரிக்கவும் யாழ் வகைகள் மற்ற கருவிகளெல்லா மிரையவும் தாரை பூரி வீரசினனம் தடாரி பம்பை காளம் முரசம் கலியாணமுழவம் சர்வ வாத்தியம் இவைகளியாவுங் கோஷிக்கவும் மறைவாணர் முதலிய சோம சூரியாக்கினியுஞ் சாக்ஷியாகத் தாக்ஷியில்லாக் காக்ஷியுடன் கலியாணங் கண்டருளினர்கள். பின்பு பெண்ணும் பிள்ளையும் வலமிடமாக பொரியிறைத்து பூரணகுதி கொடுத்து பிரதக்ஷணம் வந்து பணிந்து மாலைமாற்றி மறைவாணரைப்போற்றி மாமுனி வரையேத்தி மங்களாசனங்கொண்டு பெண்ணும்பிள்ளையும்சுண்டு விரல் பிடித்து நின்று நிறைகுடம் வெண்சாமரம் கண்ணுடியானைக்குடாரி மணிமுரசு விளக்கு விருதுக்கொடி இணைக்கயல் அம்மிமிதித்து அருந்ததியைத் தரிசித்துப் பூசித்து அரசாணிக்காலையும் ஆயிரச்சோதி விளக்கையும் தாபனஞ்செய்வித்துடன் கொழுது மற்றவர்களையும் பணிந்து திருவணைய மாதரெடுத்து வரானின்ற திருவிளக்குத் துணையுடன் சிற்றறைக்குட் போந்து வாழ்த்துதல் ஏசல் நடத்தி பெண்பக்ஷத்திலும் பிள்ளைபக்ஷத்திலும் நிந்தாஸ்துதியாகப் பிரதாபம் பேசி பிரபந்தம் படித்து பாலும் பழமுங் கொடுத்து மாப்பிள்ளையும் பெண்ணும் மருவியிருக்குஞ் சமயத்தில் அத்தை மாமி அம்மான் முதலிய பேர்

களும் மச்சான் மச்சினிமார்களும் இச்சையுடன் கொச்சைமொழி பேசி நொடித்து வெள்ளிலைச் சுருள்மடித்து குணப்பெண்பிடிக்க மணப்பிள்ளை கடிக்கக் கூசாமற் கொடுக்க கோதிவந்தெடுக்க இவ்வாறு ராஜவிவாகச்சடங்கின் வண்ணமுடித்து மஞ்சநீர் வசந்த மாடி மஹோற்சவங் கொண்டாடிச் சந்தன புட்ப தாம்பூல சுகந்த நிறைந்த பந்திச் செண்டுடன் ஆரமுமணிந்து குந்தி தேவியார் நந்தனராகிய பாண்டவர்கட்கும் மற்ற வேந்தர் தமக்கும் பிராமணஸ்திரீகள் முதலிய யாவர்க்கும் சம்பந்தத்தட்டுடன் மரியாதை தாம்பூலமும் வைத்து எம்மன்னருங் கண்டு சந்தோஷப்படும்படி சீதனங் கொடுத்தார்கள்.

சீதன விவரம்

நவரத்னகசிதம் பணிகள் கபாடம் வீரதண்டை தீரதண்டை அவுதாக்களுடன் சேர்ந்த யானைகள் துரா முதலிய முத்துக் குச்சுகள் கழுத்துக்குப்பிகள் துமிச்சிப்பில்லைகள் பாதசர வண்டயங்கள் பின்கவரி முன்கவரி கல்லணைகளுடன் கூடிய குதிரைகள் பொன் வெள்ளி பட்டுகள் முதலியவற்றுலாகிய பெரியபரதங்கள் கால்பலங்கள் தாதிகள் சேடிகள் தோழிகள் நல்ல ஆளடிமைகள் பால்பொழியு மாடுகள் இளப்பமில்லாக் காடுகள் ஜோதிப்பிரகாசம் பெற்ற ஆபரணத் தினுசுகள் பலவித வஸ்திரப்பட்டுபட்டாவளிகள் தேவேந்திரலுட்டிலும் பூவேந்தர் நாட்டிலும் அகப்படாத அருமையான வஸ்துக்கள் சித்திரப் பொம்மைகள் விசித்திரப் பஞ்சணைகள் பெட்டி பேழைகள் தங்கக்கட்டி மாடைகள் பஞ்சலோகப் பாத்திரங்கள் அவள்படித்த சாஸ்திரங்கள் இவைகள் முதலிய யாவும் விராடராஜன் தன் மகளுக்கு சீதனமாகக் கொடுத்ததைக் கண்டு ராஜராஜர்களெல்லாருஞ் சிரக்கம்பஞ்செய்தார்கள். இதன்றியும், இந்தக் கலியாணத்திற்கு வந்த காசாம்புவண்ணன் முதலிய காவலர்களுக்கும் குந்திதேவியின் புத்திரர்களான பாண்டவர்களுக்கும் விராடபுரத்திலுற்ற சகலருக்கும் வேறுவேறாய் அவர்களின் ஆசார பூசாவிதி குலமுறைக் கடுத்த தாய் விருந்து போஜனமும் வெகுமதிகளும் சந்தன தாம்பூலமும் தாட்சில்லாமற் கொடுத்து மரியாதைசெய்து பூசித்தான் நேசித்தான் விசுவாசித்தான் விராடராஜனவன். பின்பு கூடித்திரியவிதிப்பிரகாரம் ஐந்துநாளும் ஓமஞ்செய்து கங்கண வர்ச்சிதமுங் காட்டி மங்கள ஸ்நானமும் ஆட்டி நல்ல சுபமுகூர்த்தத்திற்கூட்டி கர்ப்பாதானமுஞ் செய்விக்க, நற்பயன் சேர்ந்த நலம்போற் செறித்த விற்பனவிவேகியாகிய பெண்ணும் பிள்ளையும் சொற்பழுதுருமல் சற்றேனும் ஒருவரைவிட்டொருவர் பிரியாமல் கற்பனையலங்காரம்போற் கலந்து வாழ்ந்தார்கள்.

மந்திராலோபங் கிரியாலோபம் இல்லாமல் வளர்த்திய ஓமாக்கினியாகத்தால் முப்பத்துமுக்கோடி தேவர்கள் அஷ்டவசுக்கள் திக்குப்பாலர்கள் துவாதசாதித்தர்கள்முதலிய பேர்களுந் திருப்தியடைந்து களித்தார்கள்; பூசித்து அன்புடன் அளித்த பெரும் பொருட்குவையால் வேதவேதிய சாதியரியாவரும் மிகக் களிப்படைந்தார்கள். கனிந்து நற்கவி சொலுங் கவிவாணர்களெல்லாருங் கனக்கொடையாற் கலி நீங்கிக் களித்தார்கள். காசினிக்குரிய காவல்வேந்தர்கள் கலியாண சம்பிரமங் கண்டு களித்தார்கள். பூமியிலுள்ளபேர்க ளெல்லோரும் போஜன சௌக்கியத்தாற் புகழ்ந்து களித்தார்கள். தரித்திரர் யாசகர் முதலிய சகலரும் தனத்தாற் கனத்துக் களித்தார்கள். நெறிநிலையற்றவர்கள். நீதியாற் களித்தார்கள். ஸ்ரீகிருஷ்ணதேவராகிய என் ஆண்டவனும் பாண்டவர் முதலிய மற்றியாவரும் உத்தரகுமாரத்தியின் சற்குணத்தாற் களித்தார்கள். வரைபகவெறிந்தவள்ளிமணாளனையொத்த அபிமன்னன் உத்தரையின் சரசசல்லாப வுல்லாசயிங்கிதக்கலவி யமளியாற்கலந்து களித்து வாழ்ந்திருந்தான். மற்ற அரசர்கள் யாவரும் இஷ்டப்படியிருந்து செலவுபெற்றுக் கொண்டு தங்கள்தங்கள் பட்டினம்போய்ச் சேர்ந்தார்கள். பிள்ளையும் பெண்ணும் பாண்டவர்களும் திரௌபதாதேவி சுபத்திரை முதலிய யாவரும் உபலாவியஞ் சேர்ந்து வீற்றிருந்தார்கள். கேளும் ஜனமேஜயமகாராஜனே என்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்: சுபம்.

ஸ்ரீ மகாபாரதம் விராடபர்வம் முற்றிற்று.

Printed by DAIVA MAGAL VILASAM PRESS, MADRAS.
Paper Issue Card No. Q. H. M. S. 259 6th June 1947. 1000 Copies

4A
1-1